உ

சிவமயம்.

ஏழாவது

துவிதசைவரே மாயாவாதிகள்.

VII

DVAITA SAIVAS THEMSELVES ARE MAYAVADINS.

இஃது

"ஓர் இந்து"

முதலிய பலரால் எழுதப்பட்டு,

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894

இதன்விலை அணா 6.

இதிலுள்ள விஷயங்கள்.

இலக்கம்.		பக்கம்.
க	ம-ா-ா-ஸ்ரீ சூளை. சோமசுந்தரநாயகரவர்களும், மாயாவாதமும்	க
உ	இவரே மாயாவாதி யென்பது	உ௩
௩	* மாயையை முதற்காரணமாகச் சொல்லும் சைவமே மாயாவாத மதமென்பது	உஎ
௪	† சிவனை முதற் காரணமாகச் சொல்லுஞ் சைவர் மாயாவாதி யன்றென்பது	உஅ
௫	ஸ்மார்த்தோத்கருஷ தீபிகையிலிருந்தெடுத்தது	உ௯
௬	அத்துவிதிகள் யார் ?	௩உ
எ	வைதிகர் யார் ? தாந்திரிகர் யார் ?	௩உ
அ	ஆஸ்திகர் யார் ? நாஸ்திகர் யார் ?	௩௩
௯	மாயாவாதிகள் யார் ?	௩௩
க0	மாயாவாதிகளெனப் பெயர் தந்தவர் யாவர் ?	௩௪
கக	வேதாகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளுதல்	௩௬
கஉ	எது பொது ? எது சிறப்பு ?	௩௯
க௩	பிள்ளையார் சுழி முதலியன	௪க
க௪	மாயையென்பதன் பொருள்	௪க
க௫	உமாபதி சிவாசாரியார்	௪க
க௬	பெருமானுடனிரண்டறக்கலந்த ஞானிகட்கு	௪௩
கஎ	பதியினைப்போலப் பசுபாசம் அநாதி	௪௫
கஅ	ஞானிகளுக்கு உலகந் தோன்றுதிருப் பது	௪௬
க௯	சுழுத்தி யவஸ்தையி லுலகந் தோன்றுதாயின்	௪௯
உ0	துவிதசைவரே மாயாவாதிக ளென்பதற்கு மற்றொரு முக்கிய காரணம்	௪அ
உக	மாயாவாதமும், ஞானாமிர்தமும்	௬0

(இதில் சில மகுட மில்லாமலு மிருக்கும்.)

* † இவ்விரண்டும் மாயாவாத சைவசண்டமாருதத்திலிருந்து சேர்க்கப் பட்டன.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

துவிதசைவரே மாயாவாதிகள்.

சிதம்பரம்ப்ரம்ம வித்தியாவில் ஓர் நாவலரென்பவர்: ஞானமிர்த பத்திராதிபரான ம-ள-ள-ஸ்ரீ சபாபதிநாவலரை மாயாவாத விஷயமாய் ஒரு கேள்வி கேட்டார். அவர் உத்தரஞ் சொன்னரில்லை. அதன் பேரில் ம-ள-ள-ஸ்ரீ சூளை. சோமசுந்தரநாயகர் அதைப்பற்றி 1892௵ ஜுன்மீ 20உ நாகைநீலலோசனி பத்திரிகையில் சில எழுதினர். அதை மறுத்து "ஓர் இந்து" என்பவர் எழுதியது வருமாறு:-

ம-ள-ள-ஸ்ரீ சூளை. சோமசுந்தர நாயகரவர்களும், மாயாவாதமும்.

சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திரிகை ஆருவது புத்தகம் ௮-வது பத்திரிகை ௬௨-வது ௬௩-வது பக்கங்களில் "ஞானமிர்த பத்திராதிபரை வினவும் வினக்கள்" என்னும் மகுடத்தின்கீழ் "ஓர் நாவலர்" வினவிய வினக்களில் ௧௧ வது வினவில் "உலகத்துக்கு முதற்காரணம் காலமே என்பார் காலவாதிகள் என்றும், பூதமே என்பார் பூதவாதிகள் என்றும், பிரதானமென்னு முக்குணமே யென்பார் பிரதானவாதிகளென்றும் அழைக்கப்படுதல்போல, மாயையே முதற்காரணமென்பாரன்றே மாயாவாதிகளெனப்படுவோர்? சங்கராசாரியர் பிரமமே முதற்காரணமா மென்பவரன்றே? அங்ஙனமாக அவர் தம்மைப் பிரமவாதிகளென்னது மாயாவாதிகளென்றது யாது காரணம் பற்றி? இனி, மேற்கூறிய முறைபற்றி ஆராயப்புகின், சைவர் மாயையே முதற்காரணமெனக் கூறுவோராதலின் அவரன்றே மாயாவாதிகளாகின்றார்?" என்று கேட்டிருக்கின்றார். இதற்கு ஷை ஞானமிர்த பத்திராதிபர் இதுகாறும் யாதும் பதில் கூறினரில்லை,

பிறகு சூளை. சோமசுந்தரநாயகரவர்கள் 1892௵ ஜுன்மீ 20உ நாகை நீலலோசனி பத்திரிகையில் "சைவசித்தாந்திகள் மாயையை உலகத்துக்கு "முதற்காரணமென்று ஒப்பியது சத்தியம். அம்முதற்காரணமாகிய மாயை "க்கு ஜடத்வம் பிராப்தமாகையால், அதனை ஸ்வதந்திர வஸ்துவாக அவரங்கீ "கரியார். அதனால், அவர் பரமகாரண வஸ்துவாகக்கொண்டு வழிபடும் "மெய்ப்பொருள் அம்மாயையாகாது. அவர் வழிபடும் பரம்பொருளாயுள்ளது "சிவமொன்றேயாம். வழிபடுகின்ற அதிகாரியாகிய சேதனனுக்கே மாயை "குறைந்திடுமாயின், அந்த மாயை அவனுக்கு உபாஸ்யப் பொருளாயிடுதல் "யாங்ஙனம்? அங்ஙன மாகாமையால், அம்மாயோபாஸகனாகாத சைவசித் "தாந்தி மாயாவாதியாகமாட்டான்" என்று தீட்டியிருக்கின்றார்.

இதன்பேரிலெமக்குத் தோன்றும் அபிப்பிராயத்தைச் சொல்லக்கடவோம். ப்ரம்மவித்தியா நாவலரவர்கள், மாயையை முதற்காரணமாகக் கொள்ளுவது பற்றி மாயாவாதியெனத் திருட்டாந்த பூர்வமாய்க் காட்டியதை நாயகரவர்கள் ஏதும் மறுத்தனரில்லை. நாயகரவர்கள், தம்மதத்திற்கு எவ்வளவு சிறப்புக்கூறினும் மாயையை முதற்காரணமாகக் கொண்டதுவரையில் மாயாவாதியென்பதற்குத் தடையுளதோ? உலகிற்கு முதற்காரணங்

காலமென்பாரும், பூதமென்பாரும் தங்கள் மதங்களுக்கு வேறு எவ்வகைச் சிறப்புகள் கூறினும் முதற்காரணஞ் சொல்லுகிறவனாயில் முறையே காலவாதிகளும் பூதவாதிகளுந்தானே. அவ்வாறே மற்ற வாதிகளுமாம். அங்ஙனமே மாயையை முதற்காரண மென்கிறவனாயில் மாயாவாதிகளென்று சொல்லத்தானே வேண்டும். நாயகரவர்களும் மாயையை முதற்காரணமாக வொப்பியது சத்தியமென்று சொல்லுகிறுரே. அதன்மேல் மாயைக்குச் சடத்துவம் பிராப்தமென்றும், அதை ஸ்வதந்திர வஸ்துவாக அங்கீகரிப்பதில்லையென்றும், பரமகாரணமான வஸ்துவாகக்கொண்டு வழிபடும் மெய்ப்பொருள் அம்மாயை ஆகாது என்றும் வரைகின்றுர். இது பொருத்தமில்லா வாக்கியம். இதற்கும் அதற்கும் சம்பந்தமொன்றுமில்லை. நாயகரவர்க ளிப்போது சொன்னது மாத்திரமல்ல; இன்னும் கோடி மடங்கு அதிகமாகத்தா னிருக்கட்டும். அவைக ளுள்ளன வென்ருவது இல்லனவென்ருவது பிரமவித்தியா நாவலரவர்கள் பேசவில்லையே. அங்ஙனமாக அசந்தர்ப்பமான விஷயங்களை யேனே உள்ளே கொண்டுவந்து நுழைக்கவேண்டும்? இவைகளெல்லாம் மாயாவாதியென்பதைத் தடுக்குமா? எந்தக்காரணத்தால் காலவாதியென்றும் பூதவாதியென்றும் நாமமிடப்படுகின்றதோ, அதே காரணத்தைக்கொண்டு மாயாவாதியென்று சொல்லப்படுகின்றது. தேசத்தை அரசாட்சிசெய்வது காரணமாக அரசனென்று பேர்படைத்த வொருவனுக்கு வேறு பேரிருந்தாலும் அரசனென்னும் பேர் ஒழிந்திடுமோ? அதுபோல் மாயையை முதற்காரணமாகப் பெற்ற மதஸ்தர்க்கு வேறு பேரிருந்தாலும் மாயாவாதியென்னும் பேர் ஒழிந்திடுமோ? மாயாவாதியென்னும் பேர் வேண்டாமென்பாராயின் உலகத்துக்கு முதற்காரணம் மாயையென்று சொல்வதைவிட்டு, தங்களுக்கு எது இஷ்டமோ அதை முதற்காரணமாக வைத்து அம்மதப்பேர் பெறலாமே.

இனி மேலே செல்வோம். நாயகரவர்கள் மாயையைப் பொருளென்கிருரா? குணமென்கிருரா? பொருளென்கிருரென்னில் சிவமாகிய பொருள் பரிபூரணமென் றிவர் ஒப்பியிருக்கின்றமையாலும் அச்சிவமில்லாதவிட மில்லாமையாலும் மாயையென்னும் பொருளிருக்கவிடமில்லாமற்போம். குணமென்கிருரென்னில் இக்குணத்திற்குக் குணி யெது? மாயையைப் பரிக்கிரகசத்தி யென்றும் பின்னுசத்தியென்றுங்கூறுகின்றமையாலும், சத்தியென்பது குணமாகின்றமையாலும், இதற்குக் குணி சிவமன்றி வேறு பொரு ளில்லாமையாலும் சிவத்தைக் குணியாகவும் மாயையைக் குணமாகவு மொப்பவேண்டியவராகின்றுர். இதைவிட வேறுவழி அவருக்கில்லை. அவ்வாருயின் மாயை சித்தா? சடமா? சித்தாயின் சிவத்துக்கு ஞானங் குணமாகலின் ஒத்துப்போகும். நாயகரவர்கள் மாயையைச் சடமென்ரு ராகவின் ஞானமயமான சிவத்தினிடத்திற் சடமிருத்த லெங்ஙன மமையும்? ஒன்றுக்கொன்று பகைக்குணமாகவின் இரண்டு பகைக்குணங்க ளொருபொருளினிடத்திருத்தல் கூடாதே. சிவனிடத்துச் சித்திருந்தால் சடமிராது; சடமிருந்தால் சித்திராது. சித்திருக்கிறதென்ருல் சிவஞ் சித்தாகின்றது. சடமிருக்கிறதென்ருல் சிவம் சடமாகின்றது. சிவத்துக்குச் சித்திலக்கணஞ்சொல்லி, மாயையை வேருக்கி அம்மாயைக்குக் குணம் சடமாகச்சொன்னுல்; சிவம், மாயை ஆகிய இரண்டு பொருளும் வேருயும் கண்டமாயும் இருத்தல் வேண்டும். அவ்வாருனுல் சிவம் பரிபூரணமென்றும் அது இல்லாத இடமில்லையென்றும் சொல்வதற்கு மாருகும். மாயையைக் குணமாக வொப்பிடின் மாயையாகிய குணம் சிவமாகிய குணியில் அடங்கிப்போம். அப்போது சிவமே முதலாய் உலகிற்கு சிவமே முதற்காரணமாகும். மாயை சடமாதலால் சிவத்தோடு அபேதமாய்க் கூறப்படாதெனின் வேறுபடுத்திக் கூறினுல் சிவம் கண்டப்பொருளாகுமே.

இரண்டு பக்ஷத்திலும்ஆபத்திருப்பதால் அவ்வாபத்தைத் தாம் நீக்கிக்கொண்டு பிறர்பேரில் தோஷ மேற்றப் புகுவாராக.

பின் அடுத்த 27வ பத்திரிகையில் அவரே கூறுவதாவது: "இதனையோ "ராது நமதன்பர் சைவசமயியே மாயாவாதியென்று பேசியது அவரதறி "யாமையாகவே முடிந்தது. இனி நமதன்பரது மதமே மாயாவாதமாதலை "இனிது வெளிப்படுத்துவாம். இவரது மதத்தில் பிரமமே யுலகத்துக்கு "முதற்காரணமென்று கூறுவதாக விவர் பிரஸ்தாபித்தாரன்றே? அதனை "யவ்வாறே கொள்வாம். அப்பிரமம் நிர்விகாரமாயுள்ளது. அது உலகமாக "விகாரப்படுதல் யாங்ஙனம்? அன்றியும் அப்பிரமம் ஞானவடிவமாயுள்ளது. "அது உலகமாகிய சடப்பொருளாகக் காரியப்படுதல் யாங்ஙனம்? யாம் "மாயையெனக்கொண்ட பொருளையே இவர் பிரமமெனக் கோடலால், இவர் "மாயாவாதியாயின துண்மையறிக. எமது மாயையைத்தவிர விவருக்குப் "பிரமமென்ப தொருபொருளில்லையாகையால் இவரை மாயாவாதி யெனவும், "போலிப்பிரமவாதியெனவும் பெரியோர் கூறுவரென்க. அன்றியும் இவர் "மதத்தில் எல்லாம் மிச்சையென்று கூறும் வழக்குண்மையா லிவரை மிச்சா "வாதியென்று கூறுதலுமாம். மிச்சையென்பது பொய்யென்று பொருள் "படும். இவர் மதத்தில் மாயையென்பதற்குப் பொய்யென்றே பொருள் "கூறுவதுண்மையாகையால், மிச்சாவாதி மாயாவாதி என்பன வொருபொரு "ளிலேயே நிலைபேறடையும். அதனாலும் இவர் மாயாவாதியாயிடுதல் தடை "படமாட்டாது."

வேதாந்தமதத்தில் இவர் கூறிய தோஷங்களெல்லாம் இவர் மதத்தி லிருப்பதை யறியாமலும் இவ்விரண்டினது ஒற்றுமையை யுணராமலும் தம்மதத்திலும் பிறர் மதத்திலுமுண்டாகும் தோஷங்களைப் பரிகரித்துக்கொள் ளும் வகை தெரியாமலும் எழுதுவதோடு, பிறர் மதசித்தாந்தம் இன்னதென வும் பூர்வபக்கமின்னதெனவும் உணராது, ஒன்றிருக்க வொன்றுகூறி யிடர்ப் படுகின்றமையால் அதனுண்மையை இவர்க்கும் இவர் போன்றார்க்கும் எடுத் துக்காட்டுவ தத்தியாவசியமாயிற்றென்க. இவர் பிரமத்தை முதற்காரண மாய்க் கூறுதல் கூடாதென்கிறார். கூடாதென்ற இவர்: எதை முதற்காரண மாகக் கூறுகின்றாரென்னின், மாயையை. அம்மாயை பிரமத்திற்குப் பின் னமா? அபின்னமா? பின்னமெனின் பிரமமொருபொருளும், மாயை யொரு பொருளுமா யிரண்டாகி, கண்டப்பட்டுப் போவதுமன்றி, பிரமப்பொருள் அபரிபூரணமென்று கூறவரும். இந்தத் தோஷம் வராதபடி யொன்றென்று சொல்லின் மாயையான்து பிரமத்திலடங்கி யுலகிற்குப் பிரமம் முதற்காரண மாகின்றது. இதற்கென்ன சமாதானஞ் சொல்லுகின்றார்? அதன்பின் பிரமம் நிர்விகாரமா யுள்ளதென்றும் அது விகாரப்பட்டு உலகாதல் யாங்ஙனமென் றும் கூறி, வேதாந்த வாசனையே யில்லாதவரொன்று காண்பித்துக்கொள்ளு கின்றார். கயிறு பாம்பாகிறதானால் கயிறு விகாரப்பட்டுத்தானே பாம்பாக வேண்டுவது? இப்பி வெள்ளியாகிறதானால் இப்பி விகாரப்பட்டுத்தானே வெள்ளியாகவேண்டுவது? சூரியன் பிரதிபிம்பிக்கிறதானால் சூரியன் விகாரப் படாமல் பிரதிபிம்ப மாகாதோ? கானல் வேறுதன்மை யடைந்துதானே நீராகவேண்டுவது? ஆரம்ப பக்ஷமான காரண காரியங்களிலேயே கடத்தினி டத்தில் மண் விகாரப்படுதலைக் காட்டமுடியாதபோது விவர்த்தவாத பக்ஷத் திலா விகாரமிருக்கப்போகிறது? வேதாந்திகளுக்குரியது விவர்த்தபக்ஷமென் றிவர் தெரிந்திருப்பாரானால் விகாரமில்லாத பிரமம் உலகாய் விகாரப்படு தல் யாங்ஙனம்? என்கிற கேள்வியை மறந்துங் கேட்கமாட்டார். 'பிரமம் ஞானவடிவாயுள்ளது; அது உலகமாகிய ஜடப்பொருளாகக் காரியப்படுதல்

யாங்ஙனம்?' என்பதற்குஞ் சமாதானங் கூறுவாம். அறிவாகிய மனத்தினின்றும் சொப்பனவுலக முண்டாவதும், சன்னிதோஷத்தினால் புத்தியினின்றும் பொருள் தோன்றுவதும், பித்தம் பிடித்தவனுக்கு அவன் புத்தியினின்றும் பொருள்கள் தோன்றுவதும் இன்னு மிவ்வாறு பல பிரத்தியக்ஷ அனுபவங்கள் இருப்பதால் இவரது ஆக்ஷேபம் பயன்படாமையறிக. ஞானத்திலிருந்து சடங் காரியப்படா தென்பதனால் சடத்திலிருந்தே சடங் காரியப்படுமென்பதிவர் பக்ஷம்போலும். இவர்பக்ஷத்தில் மாயை சடம்; அன்றிக் காரணமுமாகும். சடமும் காரணமுமான மாயையினின்றும் உலகமுண்டாதல் இவர்க்குத் தோஷமில்லைப்போலும். அங்ஙனமாயின் இதைத் திருஷ்டாந்தவாயிலாகப் பார்ப்போம். மண் சடம்; குடமும் சடம். மண் காரணம்; குடங் காரியம். மண்ணினின்றும் கடமுண்டாவதுபோல் மாயையினின்றும் உலகமுண்டாயிற்றென்பது இவர்பக்ஷம். மண்ணினிடத்துக் குடம் தோற்றமேயன்றி யுண்மைப்பொருளன்று. சித்திலிருந்தேனும் சடத்தி லிருந்தேனுந் தோன்றும் பொருள்கள் யாவும் போலிப்பொருள்களாம்; உண்மையன்று. இதற்குச்சாக்ஷி மனத்திலிருந்து சொப்பன வுலகுண்டாவதும் மண்ணிலிருந்து குடமுண்டாவதுமேயாம். இதனால் ஞானமயமான பிரமமானது உலகாகக்காரியப்படுதல் யாங்ஙனமென்று கேட்ட கேள்வி பயனில் கேள்வியாயிற்றென்பதாம்.

இதன்மேல் உலகத்தைப் பொய்யென்று பௌத்தர் கொள்வதுபோல் வேதாந்திகளுங் கொள்ளுகின்றமையால் வேதாந்திகளைப் பௌத்தரென்று கூறி "இவ்வெல்லாப் பெயர்களும் நாஸ்திகத்திலேயே பரிவசானமாம்" என்கின்றார். ஒருவித வொப்புமைகொண்டு வேதாந்திகளைப் பௌத்தரென்றால் உலோகாயுதரைப்போல் இச்சித்தாந்திகளும் உலகையுண்மையென்கின்றார்களாதலால் இச்சைவசித்தாந்திகளும் உலோகாயுதரென்னலாமே. அங்ஙனம் உலோகாயுதராகுங்கால் இவர் நாஸ்திகராகா தொழிவரோ? இதன்மேல் 'யாம் மாயையெனக்கொண்ட பொருளையே யிவர் பிரமமெனக் கோடலால் இவர் மாயாவாதியானதுண்மையறிக' என்கிறாரன்றா? இதனால் இவரது புத்தி கலங்கி மருண்டு எழுதுவதின்னதென்றும் இன்னாருடைய சித்தாந்தமின்னதென்றுந்தெரியாமல் மயங்குகிறதாய்த் தெரிகிறது. வேதாந்திகள் பிரமத்துக்கிலக்கணம் சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பரிபூரணமென்றும், அதற்கெதிர்மறையாக மாயைக்கு அசத்து, ஜடம், துக்கம், அநித்தியம், கண்டம் என்றுங் கூறியிருப்பதை யறியாது அவ்வாறு பேசுவது நன்றன்றே. இவர் வேதாந்திகள் மாயையை யின்னவகையாகக் கொள்ளுகின்றார்களென்றறியாமையால் ஒன்றிருக்க வொன்று பேசி ஏமாந்துபோகின்றார்! இவர் மாயையைச் சடமென்றொப்புக்கொள்வதோடு ஓர்வித சத்தியாகவும் அங்கீகரிக்கின்றார். சத்தி குணமாதலின் சிவத்துடன் அபேதமாகவேண்டும். அப்போது மாயையினது சடகுணஞ் சிவத்துக்கேறும். அப்போது சிவஞ் சடமாகவேண்டும். இவ்வளவு குற்றம் தமது மதத்தில் வைத்துக்கொண்டு இதர மதங்களில் தோஷங் கண்டுபிடிக்க வருகிறார். சிவத்தினிடத்திலுள்ள மாயைக்குச் சரியான அருத்தமிருக்க அதையுணராது வேதாந்திகள் மாயையைப் பொய்யென்கிறார்களென்றும், ஆதலால் வேதாந்திகள் மாயாவாதிகளென்றும் கூறுகின்றார். இவர் சொல்வதுபோல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்பவர்கள்தான். இச்சைவ சித்தாந்திகளோ மாயையை மெய்யென்கிறவர்களே. இப்படியானால் மாயை யென்பதொன்று இல்லவேயில்லையென்பவர்கள் மாயாவாதிகளா? அது நான்கு காலத்திலும் சத்தாயுள்ள தென்கிறவர்கள் மாயாவாதிகளா? மாயையை யில்லையென்கிறவரோ மாயாவாதிகளாகிறபோது அதைப்பல

மா யுண்டென்கிறவர் ஏன் மாயாவாதிகளாகமாட்டார்? இவர் சமபுத்தியுடன் பேசுகிறவரல்ல. இவர் தமதழுக்கைச் சலவைத்துப்பட்டியால் மூடிப் பிறர் குற்றத்தைப் பூதக்கண்ணாடியால் விரித்துக் காண்பிப்பாரைப் போன்றவ ரென்க. இவர் சொல்வதுபோல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்று சொல்லுகிறார்களோ வென்னில் அவ்வாறு சொல்வது கிடையாது. அவர்கள் மாயையை மெய்க்கும் பொய்க்கும் விலட்சணமென்றும், அதோடு இன்ன தன்மைத்தென வுரைக்கப்படாதென்று பொருள்கொள்ளும் அநிர்வசனீய மென்றுஞ்சொல்லுகிறார்கள். இவர் "எல்லசெட்டிலக்கஏகலக்க" என்கிறபடி யெல்லாவற்றையுஞ் சேர்த்துப் பொய்யென்கிறார்கள் என்கிறார். வேதாந்தி கள் அவ்வாறு சொல்வ தில்லை. பொய் நான்கு வகைப்படும். வந்தியா புத் திரனும் பொய்தான், ரச்சு சர்ப்பமும் பொய்தான், கானற்சலமும் பொய் தான், கனவுலகமும் பொய்தான். இவ்வாறு பொய்யில் பலவிதபேதங்க ளிருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன் றுபயோகமாகும். உலகம் பொய்யென்பது வரையில் வந்தியாபுத்திரன் திருட்டாந்தம். பொய்யானால் தோன்றாம லிருக்கவேண்டுமேஎன்னும்போது ரச்சுசர்ப்பதிருட்டாந்தம். சர்ப் பம் பொய்யென்றறிந்தால் தோற்றுகின்றதில்லையே யென்றும், உலகம் காரிய காரணமுதலிய விசாரணையில் பொய்யென்றறிந்தாலும் தோற்றுகின்றதே யென்றும் வினா நிகழும்போது கானற்சல திருட்டாந்தம். கானற்சலம் பொய் யென்றறிந்த பின்னரும் தோற்றிக்கொண்டிருந்தாலும் நீரருந்துகிறதற்குதவு வதில்லையே யென்னும் கேள்வியுண்டாம்போது கனவுலக திருட்டாந்தமாம். கனவுலகம் பொய்யென்று ஒருவிதத்தில் பூர்வபக்ஷமாய்ச் சொல்லப்படுகிற தே யன்றிச் சித்தாந்தமல்ல. பொய்யானால் வந்தியாபுத்திரன்போல் தோ ன்றாம லிருக்கவேண்டும். மெய்யானால் முக்காலத்து மிருக்கவேண்டும். பொய் மெய் யென்னலாமெனில் எதிர்மறையான இரு இலக்கணமுள்ள பொருள் இராது. ஆதலால் கனவுலகம் பொய்க்கும் மெய்க்கும் வேறான அநிர்வசனீ யமென்றே சொல்லத்தகும். இந்த இலக்கணத்தையே மாயைக்குச்சொல்லு கின்றார்கள் வேதாந்திகள்.

இனி மாயை இப்படிப்பட்டதென வுவமான பூர்வமாய் வரைந்து காட்டு வாம். கடத்துக்கு முதற்காரணம் மண்ணென்று சொல்லப்படுகின்றது. ஆயி னும் மண் முதற்காரணமென்று முற்றுங் கூறப்படாது. மண் முதற்காரண மாயின் கடல்மண், ஆற்றுமண், தெருமண், களர்மண் முதலிய மண்ணினால் கடஞ் செயப்படல்வேண்டும். அவ்வாறு செய்ய இயலாமையால் மண்ணே முதற்காரணமென்று கூறல் பொருந்தாது. அம்மண்ணிலுள்ள சத்திவிசே ஷமே கடத்திற்கு முதற்காரணமென்று கூறல்வேண்டும். அந்தச்சத்தி கண் ணுக்குப் புலப்படுவ தன்று. அது உண்டென்பது அனுமானமே. அனுமா னம் பிரத்தியக்ஷமின்றி நிகழாது. பிரத்தியக்ஷமான புகை யில்லாவிடில் அப் பிரத்தியக்ஷமான நெருப்புண்டெனக்கோடல் எங்ஙனம்? இதனால் அனுமா னத்திற்குப் பிரத்தியக்ஷம் இன்றிமையாதென ஏற்படுகின்றது. அந்தப்பிர த்தியக்ஷம் சத்தாயிருத்தல் வேண்டுமா? அசத்தாயிருத்தல் வேண்டுமா? என் னுங்கேள்விக்குச் சத்தாகவே யிருத்தல் வேண்டுமென்று உத்தரஞ்சொல்ல வேண்டும். அசத்து அல்லது சத்துப்போலியாயிருந்தால் அநுமானம் சித்தி யாது. சத்தான புகைக்குப்பதில் அசத்து அல்லது சத்துப்போலியாகத் தோற்றும் பனி அல்லது மேகமாசு காணப்பட்டால் நெருப்புச் சித்திக்குமா? சித்தியாதன்றோ? இதனா லென்ன தெரிகிறதென்னில் பிரத்தியக்ஷப்பொரு ளுண்மையாயிருந்தால்தான் அநுமானப்பொருள் சித்திக்குமென்றாகின்றது.

இங்ஙனமே கடமென்னும்பொருளுண்மையாயிருந்தால்தான் கடசத்தியென்பதொன்றுண்டெனத் தீர்மானமாகும். இனிக் கடமென்னும் பொருள் சத்தா அல்லவாவென்பதைப்பற்றி விசாரிக்கின் அது மண்ணைத்தவிர முக்காலத்துமில்லாமையால் கடம் அசத்தாகும். அசத்தான கடத்தைக்கொண்டு சத்தியுண்டெனக் கொள்வது கூடாது. பிரத்தியக்ஷமான சத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷமான சத்தையறிவது அனுமானம். கடமோ பிரத்தியக்ஷம்; சத்தியோ அப்பிரத்தியக்ஷம். கடமோ அசத்து. இந்தப் பிரத்தியக்ஷமான அசத்தைக்கொண்டு சத்தியுளதெனல் அமையாது. பிரத்தியக்ஷம் அசத்தானால் இதுகாரணமாகக் கொள்ளும் அப்பிரத்தியக்ஷமும் அசத்தாய்ப்போமென்பதற் கியாதும் ஆக்ஷேபமின்றென்க. இதனால் கடமும் அசத்து; அதுகாரணமாகக்கொள்ளும் கடசத்தியும் அசத்தாம். இவ்வாறே யுவமேயத்தை நோக்குவோமாயின் உலகமும் அசத்து; அது காரணமாகக்கொள்ளும் சத்தியாகிய மாயையும் அசத்து. கடசத்தியும் கடமும் அசத்தாய்ப் போனாலும் மண்ணொன்று முக்காலத்துமுள்ள சத்தாம். அவ்வாறே மாயாசத்தியும் உலகமும் அசத்தாய்ப் போனாலும் பிரமமொன்று முக்காலத்துமுள்ள சத்தாம். இனி அசத்து இப்படிப்பட்டதென ஆராயின் அது வந்தியாபுத்திரனும் அசத்து, ரச்சுசர்ப்பமும் அசத்து, கானற்சலமும் அசத்து, சொப்பனவுலகமும் அசத்து. யாவும் அசத்தாயினும் மாயை சொப்பன வுலகம்போன்ற அசத்தாம். மற்றவுவமானமெல்லாம் பூர்வபக்ஷமென்றறிந்திடுக. மாயையானது முற்றுமில்லையென்றுரைத்தல்கூடாது; இருப்பதாய்க் காணப்பட்டு விவகாரத்துக்கும் அனுபவத்துக்கும் இயைந்திருப்பதாகி வருதலாலென்க. அதுபற்றியே சொப்பனவுலக திருட்டாந்தஞ் சொல்லப்படுகின்றதென்க. சொப்பனவுலகம் முற்றும் மெய்யென்றுரைக்கப்படாமையாலும், முற்றும் பொய்யென்றுமுரைக்கப்படாமையாலும், மெய் பொய்யென்று சேர்த்துச் சொல்லலாமென்னில் நேர்விரோதமான இரண்டு தருமம் ஒருபொருளினிடத்திராமையாலும் மாயையென்பது மெய் பொய் இரண்டுக்கும் வேறானதென்றும் இன்னதன்மைத்தென்று கணிக்கப்படாதென்று பொருள்கொள்ளும் அநிர்வசனீயமென்றும் சொல்லப்படுகிறதென்பதாம். இவ்வாறு மாயைக்கு இலக்கணம் சதசத்விலக்ஷணம் என்றும், அநிர்வசனீயமென்றும் வேதாந்த நூல்கள் கோஷித்தும் அத்வைதிகள் பிரசங்கித்தும் அனேக பத்திரிகைகளி லெழுதியும் இந்தச் சோமசுந்தரநாயகரென்பார் அவைகளையெல்லாங் கவனியாமல் "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பதற்கினமாய்த் தாம் பிடித்த முரட்டுப்பிடியை விடாமல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்கிறார்களென்றும், உலகைப் பொய்யென்கிறார்களென்றும் எல்லாம் பொய்யென்கிறார்களென்றும் சொல்வதுடன் வாயில்வந்தபடி திட்டியும் வருகின்றார்.

சித்தாந்தசாஸ்திரங்களு மிதற்கு மாறாகச் சொல்லவில்லையென்பதைத் தெரிவிக்கின்றோம். சித்தாந்தநூல்களும் வேதாந்தநூல்கள் சொல்லுகிறபடி பிரமஸ்தானத்தில் சிவத்தையும் மாயைஸ்தானத்தில் மாயையையும், உலகஸ்தானத்தில் உலகத்தையும் வைத்துப்பேசுகின்றன. வேதாந்த நூல்கள் மாயையைப் பின்னாசத்தியென்கின்றன; சித்தாந்த நூல்களும் மாயையைப் பின்னாசத்தியென்றும் பரிக்கிரகசத்தி யென்றுங் கூறுகின்றன. பின்னாசத்தி யென்றாலும் பரிக்கிரகசத்தி யென்றாலும் ஒன்றுதான். வேதாந்திகள், பிரமத்திற்கு மாயை யோர்வித சத்தியாதலால் சத்தியைச் சத்தனான பிரமத்தினிடத்தில் அடக்கி ஒரு பொருளாக்கி, உலகத்திற்குப் பிரமம் முதற்காரணமென்று சொல்லுகிறார்கள். சித்தாந்திகளோ சிவத்தையும் மாயையும் வேறுபிரித்து உலகத்துக்கு மாயையே முதற்காரணமென்று சொல்லுகிறா

ர்கள். வேதாந்திகள் பிரமத்தையும் மாயையும் பிரித்து உலகிற்கு மாயை யை முதற்காரணமென்றுஞ் சொல்லுவ துண்டு. சொன்னாலும் அது பூர்வ பக்ஷந்தான். சித்தாந்தம் பிரமமே முதற்காரண மென்பதே யாம். சித் தாந்திகள் எக்காலத்தும் சிவம் முதற்காரணமென்று சொல்வதேயில்லை. இந்த இரண்டு சித்தாந்தங்களும் சொற்களில் பேதமே யன்றிப் பொருளி லில்லை. கடத்துக்கு முதற்காரணம் மண்ணென்பவர்போல வேதாந்தி கள்; கடத்துக்கு முதற்காரணம் கடசத்தி யென்பவர்போலச் சித்தாந்தி கள். ஆனாலும் மாயை யொருபொரு ளல்ல. பொருளென்று சொல்வோமா யின் சிவம் ஒருபொருளும் மாயை யொருபொருளுமாகி இரண்டுக்கும் பின் னத்துவ முண்டாய்க் கண்டப்பொருளாய் விடும். ஆதலால் அது பொருந் தாது. சிவத்தினிடத்தில் அவாந்தரமாயுள்ள ஓர்வித சத்தியென்றே சொல்ல வேண்டும். இவ்விதமான சத்தியொன் றிருப்பதில் சிவத்துக்கு யாதொரு பாதகமு மில்லை. சொப்பன வுலகத்திற்கு முதற்காரணம் மனம். அம்ம னத்தினின்றே சொப்பனவுலக முண்டாயது. மனம் காரணம்; சொப்பன வுலகங் காரியம். காரியம் உண்டாதற்குமுன் காரியம் காரணத்தில் சத்தி ரூபமா யிருந்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட சத்தி யில்லாவிடில் காரியந் தோன்றுதற் கிடமில்லை. மண்ணினிடத்துக் கடசத்தி யில்லையாயின் கடந் தோன்ரு. பழுதையின்கண் பாம்புபோல் தோற்றுஞ் சத்தியொன் றிருந் தமையானே பாம்புதோன்றுதற் கிடனாயிற்று. எந்தப்பொருளின்கண் எந் தச் சத்திக ளிருக்கின்றனவோ அவைதான் தோன்றும். அவ்வாறே மனத்தி னிடத்துச் சொப்பன வுலகந் தோன்றுதற் கேதுவான சத்தி யொன்றிருக்கி ன்றது. அந்தச்சத்தி அவாந்தரமா யிருக்கிறது. அது இருப்பதால் மனத்திற்கு யாதொரு பாதகமு மில்லை. அந்தச்சத்தி பின்ன சத்தியாகும். பின்ன சத்தி யாயினமையின் அதனா லுண்டான சொப்பன வுலகத்தில் பல ஜீவர்கள் படும் சுகதுக்கங்கள் மனத்தைத் தாக்கவில்லை. எது பின்னசத்தி அல்லது பரிக்கிரகசத்தியினது காரியமோ அதற்குவரும் நயநஷ்டங்கள் காரணத்தை யணுகா. அவ்வாறே சிவத்தினிடத்துள்ள பின்னசத்தியான பரிக்கிரகசத்தி யின் காரியமான வுலகால் அதாவது ஜீவர்களால் வரும் நயநஷ்டங்கள் சிவத் தை யணுகா. அவ்வாறே இவ்வுலகில் ஜீவர்கள் படும் சுகதுக்கங்கள் சிவத் தைச் சாருவதில்லை. சொப்பனவுலகில் பல ஜீவர்கள் அனுபவிக்கும் நயநஷ் டங்கள் ஏன் மனத்தைச் சாருவதில்லை யென்னில் சொப்பனவுலகம் பரிக் கிரகசத்தியின் காரியமாதலால் வேருகவே யிருக்கின்றது. வேரு யிருக்கிறபடி யால் அதனால் வரும் நயநஷ்டங்கள் காரணத்தைச் சாருவதில்லை. அப்ப டியே சிவத்தினிடத்துள்ள பரிக்கிரசத்தியின் காரியமான இவ்வுலகு சிவத் திற்கு வேருயிருக்கிறபடியால் இவ்வுலகிலுள்ள ஜீவர்கள் படும் சுகதுக்கங்கள் சிவத்தைச்சாரா. சிவமில்லாவிடத்தி லிவ்வுலகமிருந்தாலல்லவா உலகத்தின் நயநஷ்டங்கள் சிவத்தைச்சாராம லிருக்கலாமென்று சங்கைபண்ணக்கூடும். அது உண்மைதான். சிவத்தைப்போல் இவ்வுலகம் சத்தாயிருந்தால் அந்த ஆக்ஷேபம் மணஞ் செய்யும். இவ்வுலகம் தோற்றல் மாத்திரமா யிருப்பதால் அது ஆக்ஷேபமாகாது. கயிற்றிற் பாம்புதோன்றுவதால் கயிற்றுக்கு என்ன நஷ்டம்? காரணத்துக்கும் காரியத்துக்கும் அபேதமே. காரணத்தைத்தவிரக் காரியம் ஒரு அணுக்கூடப் பிரிந்திராது. மனத்தினிடத்துச் சந்திரத்தியான முண்டாமாயின் சந்திரன்ஆகாயத்திலிருப்பதாய்ப் புலப்படுகிறது. தியானிப்ப வன் பூமியிலும் தியானப்பொருளான சந்திரன் ஆகாயத்திலு மிருப்பதாய்த் தோன்றினாலும் உண்மையில் சந்திரன் மனத்திலேயே யிருக்கிருன். சந்தி ரன் பேதமாய்த் தோற்றினும் உண்மையில் அபேதமேயாம். அவ்வாறே

சொப்பன வுலகம் மனத்துக்குப் பேதமாய்த் தோற்றினும் அவ்வுலகிலுள்ள பல ஜீவர்களுடைய லாப நஷ்டங்கள் மனத்திற்குச் சம்பந்தமில்லாதிருப்பினும் அபேதமேயாம். அங்ஙனமே சிவத்துக்கு இவ்வுலகம் பேதமாய்த் தோற்றினும் ஜீவர்களுடைய லாபநஷ்டங்கள் சிவத்தைச் சாராதிருப்பினும் சிவத்துக்கு இவ்வுலகம் அபேதமே. இவ்வித ஆக்ஷேபத்துக்கெல்லாம் சமாதானஞ் சொல்வதற்குக் காரணம் உலகத்தைச் சத்துப்பொருளா யொப்பாமையே. சத்தாய்ச் சொல்லுவோமானால் ஆக்ஷேபங்கள் ஆக்ஷேபங்கள்தான். இனி மாயையினிடத்து உலகமுண்டாவதைப்பற்றி ஆலோசிப்பாம். மாயை யொருபொருளல்லவென்று முன்னரே கூறியுள்ளோம். சித்தாந்திகள் சொல்லுகிறபடி யொருமுதலாக வைத்துப்பார்த்தாலும் உலகம் தோற்றமேயன்றிப் பொருளல்ல. ஒருபொருளினிடத்து மற்றொருபொருள் உண்டாமென்று சொல்வது பிரயோசனமற்றதாயிருக்கிறது. மண்ணினிடத்துக் கடமென்னும் பொருளுண்டாயிற்றென்று விவகாரமாய்ச் சொல்லினும் உண்மையில் ஒரு பொருளிடத்து வேறொரு பொருளுண்டாதலில்லவேயில்லை. காரணத்தின் மாறுதலையான குணத்தையே காரியப்பொருளென்று சொல்லிக்கொள்ளுகின்றார்கள். மண்ணினிடத்துண்டான சில மாறுதலையே கடமென்று சொல்வது கண்கூடு. மண்ணின் மாறுதலையன்றிக் கடமென்னும் மொழிக்குப்பொருளில்லை. மாயையினிடத்திலிருந்து உலகமுண்டாயிற்றெனின் மாயை பால் தயிர்போல் தன் வடிவங்கெட்டு உலகாயிற்றா? தன் வடிவங்கெடாது ஆயிற்றா? இக்கேள்விக்குக் கெட்டு ஆயிற்றெனின் பின்பு மாயையே யில்லையென்று சொல்ல நேரிடும். மண் கடம்போல் கெடாமல் ஆயிற்றெனின் மண்ணைத் தவிரக் கடத்துக்குப் பொருளில்லையாகலின் மாயையைத்தவிர வுலகத்திற்குப் பொருளில்லையென்று சொல்லவரும். ரச்சு சர்ப்பம்போலென்னின் சர்ப்பம் பொய்யாம். இவ்வுவமானப்படி உலகு பொய்யென்பதி லாக்ஷேபமே யில்லை. வேதாந்தப்படி பார்த்தாலும் சித்தாந்தப்படி பார்த்தாலும் யுக்தி அநுபவங்களாகப் பார்த்தாலும் உலகம் பூர்வபக்ஷமாக அசத்தும் சித்தாந்தமாக அநிர்வசனீயமுமாம்.

(நந்தனஸூ ஆடிமீ ௧௦௨ ப்ரம்மவித்தியா.)

பிரமம் சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், பூரணமென்றும்; மாயை அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டமென்றும், அம்மாயை பிரமத்தினிடத்துப் பின்னுசத்தியென்றும் முன்னர்க்கூறினோம். இவ்வாறாக நாயகர், ‘யாம் மாயையெனக்கொண்ட பொருளையே இவர் பிரமமெனக் கோடலால்’ என்று கூறுவதென்னோ! அதன்மேல் ‘எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொரு பொருளில்லை’ யென்றுங் கூறினார். இவ்வாறு இவர் கூறிவிட்டதினாலே அவ்வாறு அத்வைதிகள் வைத்துக்கொள்ளவேண்டுமோக்கும். இவர் கூறும் மாயை சடம்; அன்றி ஓர்வித சத்தி; அன்றிக் குணமுமாம். வேதாந்திகள் கூறும் பிரமம் ஞானவடிவாயுள்ளது; அன்றிச் சத்தியை யுடையது; அன்றிக்குணியுமாம். சத்தியினிலக்கணத்தை முன்னரே திருட்டாந்தவாயிலாக விளக்கிக் காட்டினோம். அன்றி வேதாந்த சித்தாந்தத்திற்குள்ள வொற்றுமையையும் பகர்ந்தாம். இங்ஙனமாக ‘எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொருபொருளில்லை’ என்று வரைவது நியாயமாமோ! இது கலியாணகாலத்தில் எங்கள் உப்புப்பானைக்கும் உங்கள் பருப்புப்பானைக்கும் சரியென மைத்துனர்மார் சொல்வதுபோல் இருக்கின்றதே யன்றி நியாயத்தோடு பேசுகின்றதாய்த் தோன்றவில்லை. நாயகர் ‘மாயோபாஸகனாகாத சைவசித்தாந்தி மாயாவாதியாகமாட்டான்’ என்று கூறியது ஒருவித மொவ்வுமேயன்றி முற்றுமல்ல. மாயையை உபாஸியாதபோது மாயாவாதி

யாக வேண்டுவதில்லை யென்பது நியாயமேனும், மாயையை முதற்காரணமென்று கொள்ளும்போது மாயாவாதியாகவேண்டுவது நியாயமன்றோ? கொள்ளென்றால் வாயைத்திறப்பதும், கடிவாளமென்றால் வாயை மூடிக்கொள்வதும் சரியன்றே. நாயகரவர்கள், மாயாவாதம் "தோலோ தோலோ வேண்டாம் வேண்டாம்" என்று ஓடினாலும் அது அவரதுநிழல்போல அவரைப் பின்றொடர்கின்றதே; யாது செய்யலாம்! அவ்வாறு வேதாந்திகளைச் சொல்வதற்கோ இடமில்லை. அவர்கள் பிரமத்தை யுபாசிக்கின்றார்கள். நாயகர் சொல்லுகிறபடி மாயையை யில்லையென்றும் சொல்லுகின்றவர்களாகின்றார்கள்; அன்றி அவர்கள் உலகிற்கு மாயையை உபாதானகாரணமாகக் கொள்வதுமில்லை; பிரமத்தையே உபதானமாகக் கொள்ளுகிறார்கள். ஆதலால் வேதாந்திகள் மாயாவாதிகளாக நியாயமேயில்லை. அவர்கள் மாயாவாதிகளாக வேண்டுமென்று விரும்பித் தவம் புரியினும் அவர்களுக்குக் கிடைக்கமாட்டாது. குதிரைக்குக் கொம்புண்டாகவேண்டுமென்று எவ்வளவு கோறினாலும் எப்படிக்கிடைக்கமாட்டாதோ, அப்படியே வேதாந்திகளுக்கு மாயாவாதிகளென்னும் பேர் கிடைக்கவேமாட்டாது. இயல்பாகவே வேதாந்திகள் பிரமவாதிகளாயிருக்க, அவர்களை மாயாவாதிகளென்றும் போலிப்பிரமவாதிகளென்றும் பகர்ந்தது: கிறிஸ்தவர், ஆரியர்களை அஞ்ஞானிகளே யென்று கூப்பிடுவதுபோலாம். அதனோடு 'பெரியோர்கூறுவரென்ப' என்றும் எழுதினார். இவர்கொண்ட பெரியோர் அங்ஙனம் கூறியிருப்பர். சில ஆண்டுகள் சென்றால் இவரும் பெரியோராவர். அக்காலத்தில் இவரைப் பெரியோராக வைத்துப் பெரியோர் கூறினரென இவரைச்சார்ந்தார் பின்னர்க் கூறுவர். யாம்கூறுவ தியாதெனின் சுருதி யுக்தி அநுபவங்கட்கு மாறின்றிக் கூறுவோர் யாரோ அவரே பெரியோரென்பதாம். அங்ஙனமல்லாதாரை யந்தந்தக் கொள்கையினர் பெரியோர் எனக் கூறுவதைப்பற்றி எமக்கேதுமாக்ஷேபமின்று. ஒன்றுக்கொன்று நேர்மாறாகக்கூறும் சித்தாந்தத்தைக்கொண்டவொவ்வொரு மதவாதியரும், தம் தம் மதக்கிரந்தங்களெழுதினோரைப் பெரியோராகக் கொள்ளுகின்றனர். மற்றையோர் அதனை அங்கீகரியார். இது நியாயமே. அங்ஙனமாக அவரைப் பெரியோரென வாதசமயத்தில் வாதி: பிரதிவாதியிடத்திலும், பிரதிவாதி: வாதியிடத்திலும் கூறிப் பெருமைப்படுத்திக்கொள்ள வருவது பயன்படாது. பயன்படாதிருப்பதும் நியாயந்தான். ஒவ்வொருவரும் தம் தம் சித்தாந்திகளைப் பெரியோரெனக்கூறின் யாரைப் பெரியோரென அங்கீகரிப்பது? ஒருவரைக்கூறினால் மற்றவர்க்குக் கோபமுண்டாகும். ஆதலால் அவரவர் தம் தம் பெரியோரைத் தம் தம் மட்டில் வைத்துக்கொண்டு, வாதசமயத்தில் எல்லோரு மொப்புக்கொண்ட பெரியோரையே பெரியோரெனப் பேசுவது அழகும் நியாயமுமாம். இது மாத்திரமல்ல; பிரமாணமாக எடுத்துக்காட்டு நூல்களும் அங்ஙனமே. எல்லோராலும் பொதுவாகப் பிரமாணமாகக் கொள்ளப்பட்டவைகள்: வேதம் 4, வேதாங்கம் 6, நியாயநூல் 1, மீமாம்சம் 1, ஸ்மிருதிகள் 1, புராணங்கள் 1 ஆகப் பதினான்கு வித்தைகளாம். இவற்றினுடனே உபவேதங்களைச்சேர்த்து 18 வித்தைகள் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. (புராணங்கள் 18-ம் சேர்ந்து ஒன்று, ஸ்மிருதியு மங்ஙனமே.)

கூர்மபுராணம் திருக்கலியாணம்.

அங்கமாறுமறைநான்கு மீமாங்கியமென்றருள்கொழித்துத்
தங்குநீதிநூலொன்று புராணமொன்றுதவறெறிந்து
பொங்குதருமநூலொன்று புகன்றவீரேழ்விஞ்சையினை
அங்கணுலகீன்றவனளித்தா னிவற்றையுணர்ந்தோரறிவுடையோர். (43)

வாயுசங்கிதை புராணவரலாறு.

பொன்னவிர்சடையோனன்னவாகனனைப் படைத்துமுன்புனையறவகுத்த
மன்னிடுபதினெண்விஞ்சையுமறிய வழங்கினன்மற்றவன்விரித்துப்
பன்னியவகையாலெவர்க்குநன்குணர்த லரிதெனப்பால்விடையண்ணல்
கன்னவிற்ரடோண்மாயனையழைத்துச் சுருங்கநீகழறுதியென்றான். (4)

ஸ்ரீவிஷ்ணுபுராணம் மூன்றாம் அம்சம் ஆறாம் அத்தியாயம் சாமவேத அதர்வணவேத புராணங்களின் வரலாறு.

"ஆத்துமகோடிகள் அறியவேண்டிய சகலதருமங்களையும் பிரதிபாதிக்கின்ற சாஸ்திரங்களெவையென்றால் முன் சொல்லப்பட்ட இருக்குமுதலான வேதங்கள் நான்கும், அவற்றின் அங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பகம் என்கிற ஆறும், மீமாஞ்சையும், நியாயநூலும், இதிகாசபுராணங்களும், தருமசாஸ்திரங்களுமாகிய இப்பதினான்குமாம். இவைகளுக்கு வித்தியாஸ்தானங்களென்றும் பெயர். அன்றியும் ஆயுர்வேதம் என்கிற வைத்தியசாஸ்திரமும் தனுர்வேதமென்கிற ஆயுதசாஸ்திரமும், காந்தருவவேதமென்கிற சங்கீதசாஸ்திரமும், அர்த்தசாஸ்திரமென்கிற இராஜநீதிசாஸ்திரமும் உபவித்தைகளென்று சொல்லப்படும். ஆகப்பதினெட்டு வித்தைகளுண்டென்பார்கள்"

இந்த வித்தைகள் தவிர, வாதிகள் பிரதிவாதிகளுக்குரிய நூல்களையும், பிரதிவாதிகள் வாதிகளுக்குரிய நூல்களையு மெடுத்துக்காட்டுவது மிக விசேஷமாம். அது அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகளுடன் வாதஞ் செய்யும்போது, இராமாநுஜர் முதலியவர்கள் சொல்லிய நூல்களை யெடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பதும், விசிஷ்டாத்துவைதிகள், சங்கராசாரியர் முதலியவர்கள் சொல்லிய நூல்களை யெடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பதுமாமென்க,

பிரமம் உலகத்திற்கு முதற்காரண மென்பதற்கும், பிரமத்தினிடம் உலகம் கற்பிதமென்பதற்கும், மாயை பொய் அல்லது அநிர்வசனீயமென்பதற்கும் பிரமாணங்கள் வருமாறு:—

மைத்திராயண்ணியுபநிஷத்.

ஜீவாத்துமாக்கள் பிர்மத்தினுடைய தேஜஸின் பிரதி பிம்பமாக விருக்கிறார்கள். (௫)

சர்வசாரோபநிஷத்.

மாயையானவள் அநாதிமுடிவையுடையவள்...இருக்கிறவளுமல்ல, இல்லாதவளுமல்ல, அவ்விரண்டுங் கலந்தவளுமல்ல...எவள் வாஸ்தவத்திலில்லையோ அவள்தான் மாயை. அவள் சொரூபம் அஞ்ஞானம். அதேதான் மூலப்பிரகிருதி.

மித்தையெது? இல்லாத பிரப்ஞ்சத்தைப் பிர்ம்மத்தில் ஆரோபிப்பது.

நிராலம்போபநிஷத்.

பிர்ம்மம் சத்தியம்; ஜகத்பொய்.

ஆத்மபோதோபநிஷத்.

பழுதையில் பாம்புமுதலியனபோல் (பழுதையில் பாம்பு என்கிற பிரமைக்குக்காரணம் பழுதைபோல) பிரபஞ்சத்திற் காதாரரூபமாய்ப் பிர்ம்ம சத்துமாத்திரமே சூழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகையால் ஜகத்தில்லை,

பைங்களோபநிஷத் க-வது அத்தியாயம்.

அதனிடத்தில் மருபூமியில் (பாலைநிலத்தில்) ஜலம், கிளிஞ்சலில் வெள்ளி, கட்டையில் புருஷன், ஸ்படிகத்தில் வர்ண முதலியவைபோல் சிவப்பு, வெளுப்பு, கறுப்பு இந்தக்குணமயமானதும் ஏற்றக்குறைவன்றி ஒவ்வொன்றும் சமமாயிருக்கிற குணசுவரூபமானதும் வாக்குக்கெட்டாததுமாகிய மூலப்பிரகிருதியிருந்தது.

சூதசங்கிதை சமாதிவிதி.

மறைமுடியினடாவிலு மாதேவனொருவனே
யுறைதருநித்தியனுலகமவன தின்மாயாசொரூப
முறையுமிஃதவனிடத்தே யுதிக்குமொடுங்கிடுமெனவுட்
குறைவறவெண்ணுதலுடையோன் கூடுவான் முத்தியினை. (கக)

ஷை வேதார்த்தம்.

மாயை, மாற்றருஞ் சதசத்திற்குப்பின்னமாய் வயங்குமாலோ. (கூ)

ஷை முத்திநிலை.

விரியுடலூழ்துய்த்தாகாமியமுறுதொழித்தெவர்க்குந்
திரிசியமாம்பவஞ்சந் தேய்ந்துசொப்பனம்போற்றொன்ற
வுரியவெம்பால் விழித்தோனொருவனேசீவன்முத்தன்
றுரியமேல்விளங்கு நம்மைத்தோய்ந்தவனவனென்றோர்தி. (௩உ)

ஷை பஞ்சாக்கரமந்திரம்.

இத்தனையுமுயர்பரமசிவனுக் கியான்வணங்குகிறேனென்பதாகுஞ்
சித்தநிலவுறுபரமசிவசொரூப முணரவவாஞ்செய்யசீவற்
குத்தமவப்பரசிவசொரூபத்திற் கன்னியமாயுள்ளவெல்லா
மித்தையாவதினாலேயே யமுபாதேயமொன்றுமேவலில்லை. (கூ)

பிரமகீதை கேனோபவுபநிடதம்,

ஆதலால் விஞ்சையாலறிவுறுதற் காவதன்றாகிலப்பரந்தா
னேதினாலறியப்படுமேறிவுறுதற்கேவனாலாமிமையவர்காள்
காதலாற் பரத்திற் கற்பிதமாயை கழியுமேற்பரம்பரன்கண்ணே
ரேதமாமாயையில்லையுண்டாகிலிருக்குமோ விரவிமுன்பிருடான். (கச)

எப்பொருளுமாயையினா லெனச்சிலவரியம்புவர்கண்
மெய்ப்பரமன்றனையொழிய வேறொருமாயையுமில்லை
யொப்பரியபரனொழிய வொருமாயையுண்டாகி
லப்பரமன்றன்பெருமைக் கதுநேரோயழிவன்றே. (உஎ)

இதுவேமுடிந்த நில்மெல்லாத்தர்க்கங்களுக்குங்காட்சியே
முதலாம்பிரமாணங்களுக்கு மொழியும் வேதாந்தங்களுக்கும்
விதமாம்புராணமனைத்தினுக்கு மிருதிகளுக்கும் வேதத்தின்
மதமாம்விச்சையனைத்தினுக்கு மன்னுமாபாரதத்துக்கும். (உகூ)

ஐயன்சைவாகமங்கட்கு மரியாகமத்துக்குமெனது
பொய்யின்றியவாகமத்துக்கும் புத்தாகமங்கட்குமருகன்
செய்யுமாகமத்துக்குஞ் சித்தரியக்கர்கந்தருவ
ருய்யும்பரிசுமற்றுள்ளோ ருரைத்தவாகமங்கட்கும். (௩0)

கூர்மபுராணம் சாங்கியயோகம்.

ஆதலாற்பிரமமொன்றே நித்தியமலகைத்தேரிற்
பேதுறத்தோன்றுநீரிற் பிரபஞ்சமருண்டுதோன்றுந்
தீதுறுமனத்தர்தீய பிரபஞ்சம்பிரமம்வேறென்
ளேதுவரொக்கநோக்கும் யோகியரொன்ருய்க்காண்பர். (உரு)

ஷை சம்பிரதாயம்.

அவ்வியத்தந்தனிற்காலம்பிரதானம்புருடனிவையமையத்தோன்றுஞ்
செவ்விபெறுமிவைகடமிற்சிறந்தசகந்தோன்றியிடுமெதனுலந்த
வெவ்வமறுபிரமத்தினுருவாகுஞ்சகமிதனைச்சகமென்றெண்ண
ளெவ்வறுமென்சிப்பியினைவெள்ளியெனமருண்டெண்ணுநோன்மைத்தாமால்.

காசிகாண்டம்.

கானவிடைத்தெண்ணீரும் கயிற்றினில்வாளரவும்அலைகடலிற்பட்ட
கூன்முதுகிப்பியிற்றேன்றும் வெள்ளியுமம்முதலுண்மைகுறிக்கிற்றீரு
மானவைபோனினையறியிற்றேன்று சகமனைத்துநில்லாதழியுமாற்றுற்
றேனவிழ்பூங்கடுக்கையணி செல்வனதறைகழற்றுள்சென்னிசேர்ப்பாம்.

பதினுலுவித்தைக்கு மேற்பட்ட பிரமாணங்கள்.

திருவாசகம்.

மாயப்பிறப்பறுக்கும் மன்னனடிபோற்றி.
பொய்யாயினவெல்லாம் போயகலவந்தருளி.
இந்திரஞாலங் காட்டியவியல்பும்.
இந்திரஞாலம் போலவந்தருளி.
இருமுச்சமயத் தொருபேய்த்தேரினை.
பூத்தாரும்பொய்கைப் புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும் பேதைகுணமாகாமேதீர்த்தாய்.
மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணிமதித்திடாவகைநல்கினுன்.
இந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே.

சிவானுபூதிவிளக்கம்.

பார்த்தேனுலகப் பரப்பெல்லாம்பார்த்தளவில்
பேய்த்தேர்போலில்லையாப் பேரறிவேகண்டனமே.

திருவம்மானை.

மெய்யானதொன்றுமே மெய்யானதம்மானை
மெய்யன்றிமற்றெல்லா மித்தைகாணம்மானை.

சிவாநந்தமாலை.

எங்குஞ்சிவமொழிய இல்லையவன்றன்னுணை
அங்கந்திரள்கருவி ஆணவமாம் - பொங்குமிருள்
மைசெய்தமாமாயை மாயைவினைமற்றனைத்தும்
பொய்பொய்பொய்பொய் பொய்பொய்பொய்.

பாடுதுறை.

பொய்க்கனவும்பேய்த்தேரும் போலுமுடல்போமளவும்
சிக்கெனவேநாதன் றிருவடியை - நெக்குருகிப்
பூண்டுவிடாதேகிடந்து போற்றியிடுநெஞ்சேநீ
மீண்டுபிறவாதே விட.

பட்டணத்துப்பிள்ளை.

மையாடுகண்ணியும் மைந்தரும்வாழ்வு மனையும்செந்தீ
ஐயாநின்மாயை யுருவெளித்தோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப்பழங் கதையாய்க் கனவாய் மெல்லப்போனதுவே.

மாயப்பேய்த்தேர்போன்று நீப்பருமுறக்கத்துக், கனவேபோன்று நனவு பெயர்பெற்ற மாயவாழ்க்கையை மதித்து.

போதரத்நாகரம்.

காயநீர்க்குமிழியதிலுறுமின்பங் கானலிற்புனலதுதனக்கிங்
காயவத்துயரமளவிலையது நீயாய்வுறுமையினழிந்தற்றாய்
நீயினிக்கவலைமயல்களைத்தவிர்ந்து நெஞ்சமேவந்தெனக்குடன்பட்
டாயவச்சொரூபற்கன்பதே புரியிலரியதேதார்நமக்கெதிரே.

திருப்போரூர் சந்நதிமுறை.

பாம்பாகத்தோன்றிற் பழுதைசற்றுந்தோன்றாதாம்
பாம்பின்றாத்தோன்றிற் பழுதையே - மேம்பாடாய்ப்
பொய்தோன்றின்மெய்தோன்றா போரூராநின்னருளாம்
மெய்தோன்றிற் பொய்தோன்றாவீடு.

குமாரதேவர்.

இல்லாமாயைதானிருந்தென்னிறந்தென்னவைபந்தமதாகா
இல்லாமாயைதனை மெய்யாயெண்ணுமதியேபந்தமதாம்
இல்லாமாயைதனைப் பொய்யாயெண்ணுமதியேமுத்தியதாம்
இல்லாமாயையில்லையென்றே யியல்பாய்த்தோன்றுந்தன்னிலையில்.

அமிர்தசாரம்.

போதக்கண்பூதங்கள் பொய்யாமவைமெய்யாம்
பேதக்கடாதிப் பிறழ்வுகளிற் - பேதங்கள்
சுத்திகையின்வெள்ளியின் மெய்தோன்றப்படுங்கனவு
நித்திரையைப்பாரநிலை.

ஞானவாசிட்டம் சுசன்கதை.

பிரமமாஞ்சுத்தவேலை நுரைகளாம்பிறங்கலெல்லாம்
பரமவாதித்தன்முன்னர்க்கானலாம் பரவைஞாலத்
திரமதாமிதனைமுன்னே செப்பினன்வியாழன்றந்த
வரமகன்கசனும்பேரோன் மற்றதுவள்ளல்கேட்பாய். (கஅ)

சிவஞானசித்தியார் கூ-ம் சூத்திரம்.

பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரியபரம்பரனைப்பதிஞான த்தாலே, நேசமொடுமுள்ளத்தே நாடிப்பாதநீழற்கீழ்நில்லாதே நீங்கிப்போதி, ஞசைதருமுலகமெலாமலகைத்தேரா மென்றறிந்தகலவந்நிலையேயாகும் பின் னும், ஓசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலாமோட. (க)

வைராக்கிய சதகம்.

அகலுமிவ்வுடன்மினின்விரைந்தெனின் விரைந்தாற்றொழிதலதிங்கே
சகலமுஞ்செயநினைகுதறனையினித் தடப்புனலிதுவென்றே
பகலினல்விரிகானலைநெஞ்சமே கருதிநெற்பயிராதி
யிகலினூற்செயநினைபவர் நினைவையொத்திடுமெனவிடுவாயே. (கள)

சிவாகமார்த்ததரிசனம்.

சட்டெனத்தெளிந்தான் சர்ப்பமிரச்சுவிற்காணுதாற்போற்
கட்டினபாசம்விட்டாற் கண்டிலன்பெத்தம்பின்பு
சிட்டநற்சுபாவமேயாஞ் சிவன்முத்தன்றேகத்தை
விட்டபின்பரமமுத்தன் வியோமம்போற்கடநாசத்தில்.

சித்தாந்தசிகாமணி.

கயிற்றரவிப்பிவெள்ளி குற்றியிற்கள்வன்மிக்க
வெயிற்படுகானநற்றெண்ணீர் விண்ணிற்கந்தருவவூர்போல்
இயற்படுநித்தசச்சிதானந்த சிவத்தின்கண்ணே
செயப்படுபொருளாய்த்தோன்றுஞ் செப்பியவுலகமன்றே.

விருத்தாம்பிகை துதி.

பழுதையென்றுணரினதின்முனர்த்தோன்றும்பாம்புமப்பழுதையானது போன், முழுதுணர்ந்தறிவாந்தன்னையேகாணின் முரணுறுசராசரமெவையு, மெழுதருமறிவாய்விளங்குமென்றிசைத் தென்னெழுபவந்துடைத்தெனையளிந்தாள், கெழுமணிமுத்தாநதி செறிவிருத்தகிரியமர் பெரியநாயகியே.

கந்தரநுபூதி.

இல்லேயெனுமாயையிலிட்டெனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே.

சிவஞானவள்ளலார்
பதிபசுபாச விளக்கம்.

இப்பியிற்பிராந்தியாலேயிரசிதந்தோன்றுமாபோல்
மெய்ப்படுமென்னிலிந்தவியன்சகமுதித்ததென்றே
யிப்படியாவனேனுமெழின்மறைமுடிவினாலே
யற்புதவறிவுணர்ந்தோனதிவன்ஞச்சிரமியாவான். (சு)

௯ பாசசங்கை.

ஒரு வேதம் பஞ்சபாசங்களும் அநித்தியமென்று சொல்லிற்று, பின்னொருவேதம் கானற்சலம்போலத் தோற்றரவுமாத்திரமேயென்று சொல்லிற்று, பின்னொருவேதம் ககனாரவிந்தம்வந்தியாபுத்திரன்சசவிஷாணம்போல அநுபவத்திலே பஞ்சபாசமில்லையென்று சொல்லிற்று, நாலாம்வேதம் மாயையேயில்லை, இருக்கிறதெல்லாம் பிரமமே யென்று சொல்லிற்று.

தாயுமானவர்பாடல்.

இந்திரசாலங்கனவுகானனீரெனவுலகமெமக்குத்தோன்ற.
மணிமாடமாளிகைமேடைசதுரங்கசேனையுடனே
வந்ததோர்வாழ்வுமோரிந்த்ரசாலக்கோலம்.
ஐந்துபூதமொருகானனீரெனவடங்கவந்தபெருவானமே.
தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்மேவும்
நான்முகத்தேவேநின்னால்நாட்டியஅகிலமாயை
கான்முயற்கொம்பேயென்கோகானலம்புனலேயென்கோ
வான்முகமுளரியென்கோமற்றென்கோவிளம்பல்வேண்டும்.
கடத்தைமண்ணெனவுடைந்தபோதோவிந்தகருமச்
சடத்தைப்பொய்யெனவிறந்தபோதோசொலத்தருமம்.

உண்டுபோலின்றும் உலகைத்திரமெனவுட்கொண்டு நான் பெற்றபலன் கூறாய்பராபரமே.

அண்டபகிரண்டமுமாய்ச்விகாரமே யம்மாயையில்லாமையேயாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்தேவாரம்.

பொய்ம்மாயப்பெருங்கடலில்புலம்பாநின்றபுண்ணியங்காடீவினைகாடிருவேநீங்கள், இம்மாயப்பெருங்கடலையரித்துத்தின்பீர்க்கில்லை.

வேதாந்தசூடாமணித்திரிசியவிவேகம்.

விளங்குறுமான்மாவுருவுமல்லாமலான்மாவின்வேறாத்தோன்றா
துளங்கொள்வியோமாதிகாரியங்கடமைத்தோன்றுவாறெடுக்கிநின்று
துளங்கலகடிதகடனுசாமர்த்தியாகியுமேதோன்றாநின்ற
வளங்கடருகாரணமாமதுவாகுந்திரிசியமாமாயாசத்தி. (௫௬)

பின்னமொடசத்துசாவயமுமெதிர்மறையுமவைபிரிந்துதம்மின்
மன்னியவுமொழிந்தநிர்வாச்சியமாகுநவலிதமம்மாயையெய்து
முன்னலருஞ்சுருதிசம்பந்தமுத்திசம்பந்தமுலோகபந்த
மென்னவருஞானங்கண்மூறையேயம்மாயைபடுமியல்புகூறின். (௫௮)

பொய்யாகிச்சத்தாருவப்பொருளின்வேறாகியொருபொருளாய்த்தோற்ற
செய்யாமையாலுளதில்சுதந்தரஞ்சான்றாயவொருசேதனன்பா [ல்]
லுய்யாதசீவாதியாக்குதலாற்சுதந்தரமுமுளதுமாயை
மெய்யானதலதென்றல்விசும்பலர்போலில்லையெனவிளம்பலன்றே (௬௨)

புலனில்கனுக்கரியாதிபோற்றோன்றிவிசாரிக்கிற்பொன்றும்மெய்யா
நிலவுதல்செய்சுத்தசத்துவடிவமாயையோடுநிகழ்த்துகின்ற
மலினசத்துவடிவமாமவித்தைதமப்பிரதானவடிவமாகு
நலமில்பிரகிருதியெனவிருத்திமூன்றுடையதுமுன்னவின்றமாயை. (௬௫)

கைவல்யம் தத்துவவிளக்கம்.

ஆரோபமத்தியாசங்கற்பனையாவவெல்லாம்
ஓரோர்வத்துவினில்வேறேயோரோர்வத்துவினையோர்தல்
நாருடுபணியாய்த்தோன்றனாகுகித்தறியிற்றோன்றல்
நீருடுகானற்றோன்றனிறந்தலம்வெளியிற்றோன்றல். (௨௭)

கானனீர்கிளிஞ்சில்வெள்ளிகந்தர்ப்பநகர்கனூர்
வானமைகயிற்றிற்பாம்புமலடிசேய்முயலின்கோடு
பீனமாந்தறிபுமானிற்பிரபஞ்சமெல்லாம்பொய்யே
ஞானமெய்மகனேயுன்னைநம்மானைமறந்திடாதே. (௨௮)

ஷை சந்தேகந்தெளிதற்படலம்.

மாயையென்பதேதுடையராரெப்படிவந்ததுவருவானேன்
மாயையென்பதுபிரமத்தின்வேறெனின்வஸ்துவிரண்டாமே
மாயையென்பதும்பிரமமுமொன்றெனின்வஸ்துவும்பொய்யாமே
மாயையென்றமேகங்களுக்கொருசண்டமாருதகுருமூர்த்தி. (௧௪)

அதனையின்னதென்றுரைத்திடப்படாமையாலவாச்சியவடிவாகும்
இதுதனக்குளதடலியானுலகுமெய்யெனுமவருடையோர்கள்
கதையிலாதபொய்வந்ததிப்படியென்றுகண்டபேரிலைமைந்தா
விதனமாயையேன்வந்ததென்றாற்புத்திவிசாரமற்றதனாலே. (௧௫)

அருவமாகுமாயாவிவித்தைகள்விளையாடுமுன்றெரியாவே
உருவமாம்பலகந்தர்ப்பசேனையாயுதித்தபின்வெளியாகும்
பிரமசத்திகளநந்தமாமதைக்கண்டுபிடித்திடல்கூடாதே
பரவுபூதங்கள்கண்டநுமானத்தாற்பலருக்கும்வெளியாமே. (௧௬)

காரியங்களுஞ்சத்தியாதாரமுங்காணுமற்றதுமாயம்
பாரினின்றமாயாவியுஞ்சேனையும்பார்ப்பவர்கண்காணும்
வீரியந்திகழ்வித்தையாயினசத்திவெளிப்படாததுபோலே
பேரியற்பிரமத்துக்குருமுலகுக்கும்பிறிதுசத்திகளுண்டே. (௧௭)

சத்திசத்தனைத்தவிரவேறன்றுகாண்சத்தனுமாயாவி
வித்தைகாட்டியவிந்திரசாலம்பொய்வித்துவான்மெய்போலப்
புத்திமைந்தனேசத்திமானுகியபூரணவான்மாவின்
வத்துநிர்ணயஞ்சொன்னதிட்டாந்தத்தின்வழிகண்டுதெளிவாயே. (௧௮)

இல்லையாகியசத்தியையுண்டென்பதெப்படியெனக்கேட்கில்
புல்லையாதியாமசேதனப்பொருளெலாம்பூத்துக்காய்ப்பனபாராய்
நல்லையாமகனேயதிற்சிற்சத்திநடந்திடாதிருந்தக்கால்
தொல்லையாய்வருஞ்சராசரவுயிர்க்கெலாஞ்சுபாவங்கள்வேருமே. (௧௯)

மெய்ம்மொழி.

மன்னுநற்சிவத்துச்சத்திமதித்திடினிருவகைத்தாம்
பின்னமற்றிருப்பதொன்றுபின்னமாயிருப்பதொன்று
மன்னியசிவத்தபின்னமாசில்சிற்சத்தியாகும்
பின்னமாவதுசடந்தான்பேர்சொலின்மாயையென்றே (௬)

சித்துடனசித்துமாயேசிவசத்தியிருப்பதென்றும்
சித்துடனசித்திடத்தேசெகத்தினுற்பத்தியானும்
சித்துடனசித்துமாகுஞ்செகத்தினிற்சராசரங்கள்
சித்துடனசித்தாயுள்ளசிவசத்திமயஞ்செகத்தே. (௬௨)

பொதுவாய்ப் பதினன்கு வித்தைகளேவாதிப்பிரதிவாதிகள் எடுத்துப்பிரமாணமாகக்காட்டவேண்டியவைகள். அவற்றுடனே எதிரிகளுடைய பிரமாண நூல்களை எடுத்துக்காட்டுவதுந் தகுதியாம். அங்ஙனமின்றி நாம் எடுத்துக் காட்டும் மற்றப்பிரமாணங்கள் வேதாந்தத்திற்கு மாத்திரமுரிமையாம்.

(நந்தன௵ ஆவணி௴ 23௳ ப்ரம்மவித்தியா.) ஓர்இந்து.

ம-௱-௱ஸ்ரீ சூளை சோமசுந்தரநாயகரவர்களும் மாயாவாதமும் எனப் பெயரளித்து, முன் ஆடி௴ 10௳ ஆவணி௴ 23௳ ப்ரம்மவித்யாக்களில் பலவித நியாயங்களால் அவரை மறுத்திருந்தோம். அதற்கு ஒருவித நியாயத்தை மாத்திர மெடுத்துக்கொண்டு சென்ற செப்டம்பர்௴ 17௳ 24௳ மகாவிகடதூதன் பத்திரிகைகளில் சில பேசினர். அவர் பேசியவையாவும் யாம் மறுத்த விஷயங்களே. "சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை" யென்பது போல் சொன்னதையே சொல்லி இடத்தை வீணுக்கினர். அவர் வாய்மூடியிராமல் மேலேமேலே எழும்புவதில் பள்ளத்தில் கம்பத்தை நாட்டி அது நிலைப்படுமாறு அதைக் குத்திக் குத்திக் கெட்டிப்படுத்துவதுபோல் அவரது மாயாவாதத்தை இன்னும் பல நியாயங்களால் மிகவுறுதிப்படுத்த வேண்டுவது எமது கடமையாய முடிந்தது. மாயாவாதம் வேண்டாம் வேண்டாமென்று எவ்வளவு ஓடுகின்றரோ, அவ்வளவுக்கும் அது அவர்க்கு முன்னே நிற்கின்றது.

இப்போது இது விஷயமாய் வாதஞ்செய்ய எழுந்தவை ப்ரம்மவித்தியா, ஞானமிர்தம் ஆகிய இரண்டுமெதப் பத்திரிகைகள். அவ்விரண்டில் ஒரு பத்திரிகையின்கண் எழுதாமல் நாகைநீலலோசனியென்னும் சமாசாரப்பத்திரிகையிற் சென்றெழுதினர். அதைவிட்டு இப்போது விகடதூதன் பத்திரிகை

யில் எழுதினர். இவரோடு வாதிப்பவர், இவரெந்தெந்தப்பத்திரிகையி லெழுது கிருரென்று விசாரித்துப் பார்த்து அந்தந்தப் பத்திரிகைகளை வாங்கிவாசித்துப் பார்க்கவேண்டும். இது சாத்தியமாமா? ஒருவேளை எதிர்க்கக்ஷியினின்று பதி லெழுதுகிறவர் வாங்கிப்பார்த்துப் பதிலெழுதினாலும் இந்த விஷயத்தைத் தொடர்ந்து பார்த்து, "இதில் நியாயமிருக்கிறது, இதில்நியாயமில்லை" யென்று தெரிந்துகொள்ள விரும்புபவர் எப்படித் தெரிந்துகொள்ளுவார்கள்? ஒருவர் ஒருபத்திரிகை வாங்குவார், அல்லது இரண்டு பத்திரிகைகள் வாங்குவார், எல் லாப் பத்திரிகைகளும் வாங்குவாரா? இதை வாதஞ் செய்வோர் கவனிக்க வேண்டியதன்ரு? இதை ஏன் ஷை நாயகர் கவனிக்கப்படாது? இவர் எவ்வ ளவு எழுதினாலும் ப்ரம்மவித்தியாவில் அல்லது ஞானாமிர்தத்தில் எழுத லாமே. அவ்விரு பத்திரிகைகளையும் வாங்கிப்படியாவிடில் அது கடிதக்காரர் குற்றமன்று. வாங்கி வாசியாதவர் குற்றமாம். அதற்கென இருபத்திரிகை களும் ஆரம்பத்தில் தானே ஏற்பட்டு விட்டமையால் அவ்விரண்டிலும் எழுதுவது நிருபக்காரர் குற்றமன்று. அதைவிட்டுச் சமயத்துக் கொருபத் திரிகையி லோடி யோடி எழுதுவது தகுதியன்று. பத்திரிகையி லெழுது வது ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்காம். பலவற்றி லெழுதுவது அவ்வாறு தெரிவதற் கிடமில்லாது போகிறது. பல பத்திரிகையி லெழுதினல் அதது படிப்போர் அந்தந்தப் பத்திரிகையிலுள்ள விஷயங்களை மாத்திர மறிந்து கொள்வார்கள்; முன் பின் தொடர்பறியார்கள். இதிலென்னபயன்?

இந்த வாதத்தை யாரம்பித்தவர் ஓர் நாவலர் என்பவர். அவர் ப்ரம்ம வித்தியாவில் ஞானாமிர்த பத்திராதிபரைக் கேள்விகேட்டார். அவர் பதில பேசாமையால் இந்தச் சோமசுந்தரநாயர் பேசினர். அதன்பேரில் ஷை பத் திரிகையை வாங்கிப் படிப்பவரான நாம், "ஓர் இந்து" எனப் பெயர்வைத்து க்கொண்டு மறுத்தெழுதினேம். அதைப் பூர்வபக்ஷஞ்செய்து எழுதவந்தார் இவர். அப்படி யெழுதவந்த விவர், எமதுபேருக்குப் பதிலெழுதாமல் "ம-ா-ா-ஸ்ரீ சீநிவாசசாஸ்திரியாரும், அவரது மாயாவாத ஜாலமும்" எனப் பெயர்கொடுத்து, மேற்படி சீநிவாசசாஸ்திரியார்பேருக்கு எழுதுவதென்னகார ணம்? ப்ரம்மவித்தியா ஷை சாஸ்திரியார் பத்திரிகையாயிருப்பதால் அதிலு ள்ள விஷயங்களெல்லா மவரேயெழுதினரென மயங்கினரோ? அப்படி மய ங்கக் காரணமில்லையே. பத்திராதிப ரெழுதுவ திது வென்றும், கடிதக்கார ரெழுதுவதிதுவென்றும் பத்திரிகையைப்பார்க்கும்போதே தெரியுமே. அப்படி இவர்க்குத் தெரியுமென்பதற்குச் சாக்ஷி ப்ரம்மவித்தியாவில் "ஆரியன்" என்று கையொப்பமிட்டு ம-ா-ா-ஸ்ரீ சபாபதி நாவலரவர்களைக்கேள்வி கேட் டதற்கு இவர் "ஆரியன்" என்றே பெயர் கொடுத்து நாகை நீலலோசனியில் ஆபாச பதிலளித்தாரே. ஓர் இந்து மாத்திரம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியா ரான மைக்கும், ஆரியன் மாத்திரம் ஆரியன் ஆனமைக்குங் காரணமென்னே! இந்து வுக்குப்பதில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரை விளித்துப்பேசினல் ஸ்ரீநிவாஸ சாஸ் திரியார் "இதுவிஷயத்தைப்பற்றித் தாம் எழுதவில்லையே; எழுதினவர் பதில் சொல்வாரென அவர் சும்மா இருந்துவிடுவார்; ஓர் இந்துவோ, நம்மை நோக்கிப் பேசவில்லையே, நாமிதற்குப் பதில் கூறவேண்டிய அவசியமென்ன வென்று சும்மா இருந்துவிடுவார்; இருவரும் மௌனஞ்சாதித்து வாளாவிரு ந்து விடின், நாம் எழுதியதே தாபிதமாகிவிடும்" எனச் சூதானவெண்ணங் கொண்டு இங்ஙனம் வரைந்தனரோ? அல்லது இந்த விஷய மெழுதும்போது மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிபோடும் அகடிதகடனா சாமர்த் தியமுள்ள மாயையானது அவரது புத்தியை மயக்கிவிட்டதோ? மூலபல

ராக்ஷசர்க்கு எங்கும் இராமனாயிருந்ததுபோல் இவர்க்கு எங்கும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாராய்த் தோன்றிற்றோ? அந்தத்தோற்றத்தில் ஓர்இந்துவும் அடங்கி அவரும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாராய்த் தோற்றினாரோ? "இதுவரையில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரை எவ்வளவோ தூஷித்தோமே, அவர் வாயைமூடிப் பொறுமையோடிருக்கிறாரே, அப்படி ஓர் இந்து பொறுக்காமல் இராமாநுஜ நாவலரைப்போல் போலீசில் இழுத்துவிட்டால் மறுபடியுமன்றோ தண்டமிறுக்க வேண்டும்? ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரையே விளித்து எழுதிவிட்டால் எத்தனைத் திட்டுத் திட்டினாலும் போலீசு பயமில்லாமல் நிர்ப்பயமாயிருக்கலா" மென்றெண்ணினாரோ? "ஒரு பெயரைவிட்டு ஒரு பெயரை மாற்றி யெழுதுவது நமது ஜன்மசுபாவந்தானே, இப்போது புதிதன்றே" என்று கருதி யெழுதி விட்டாரோ? "நாமெழுதிய விஷயங்களைச் சிற்றுளிபோல் துளைத்துப் பலபிரகாரங்களாக ஓர் இந்து எழுதியிருக்கின்றமையால் அவருக்குப் பதிலெழுதினால் முற்று மறுப்பெழுதவேண்டும், சாஸ்திரியார் பெயரைவைத் தெழுதிவிட்டால் எல்லாவற்றுக்கு மெழுதவேண்டுவதில்லை, எல்லாம் எழுதினதுபோல் குழப்பிவிடலா" மென்றெண்ணினாரோ? "ப்ரம்மவித்தியாவைப் படிப்போர்க்கன்றோ ஓர் இந்து எழுதினாரெனத் தெரியப்போகிறது, விகடதூதனைப்படிப்போர்க்குத் தெரியப்போகிறதா, ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்தான் எழுதினாராக்கும், அவருக்குத்தான் இது பதிலாக்குமென வெண்ணிக்கொள்ளட்டும்" என்று நினைத்தாரோ? "ப்ரம்மவித்தியாவில் வெளியாகும் நிரூபக்காரரெல்லாம் தம் சொந்தப்பெயரோடு வெளிவராமையால் அவர்களைத் தூஷிப்பதில் என்னபயன்? ஸ்ரீநிவாஸசாஸ்திரியார்தான் தம் பெயரோடு வெளிப்படையாய் வந்திருக்கிறார், யாவரையும் அவராகவைத்து மொத்தமாய்த் தூஷித்து விடுவோ" மென நினைத்தாரோ? "ஓர் நாவலரோடு வாதஞ்செய்யும்போது, அவர் நாயகரை எவ்வகைப்பட்ட சைவராகவுஞ் சொல்லிக்கொள்ள இடம் வையாமல் அசைவராக்கி நியாயத்தால் கட்டுப்படுத்திவிட்டமையால், இனி, அசைவரினின்றும் தப்பிச் சைவராக யோசித்து, ஓர் இந்துவைப் பிராமணராக்கிக் கூப்பிடின், (கல்லாலெறிந்தவன் பேரில் குரங்கு விளாங்கனியால் அடிப்பதுபோல்) ஓர் இந்துவும் நம்மைப் பிராமணராக்கிப் பதில் கூப்பிடுவார், அப்போது அப்பெயரைத் தாங்கிக்கொண்டு, ஷை ஓர் நாவலரிடத்திற் சென்று, நீர் எம்மை அசைவராக்கினீரே, இப்போது என் செய்வீர்? நாம் பிராமணராய் விட்டோமே, இனி ஆதிசைவராகவாவது, மகாசைவராகவாவது ஆய்விடுகிறோ" மென்று சொல்லக்கருதி, எம்மை ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாராக வைத்துப்பேசுகின்றாரோ? ஓர் இந்துவைச் சாஸ்திரியார் என்று கூப்பிடின், அவர்: பதிலுக்குச் சாஸ்திரியார், பண்டிதர், நாவலர், வித்துவான், புலவர் முதலிய பெயர்களி லேதேனும் ஒன்றைவைத்துக் கூப்பிடுவார், பின் அப்பெயரிலொன்றைத் தம் சொந்தப் பெயராக்கிக்கொள்ளலாமென வெண்ணினாரோ? இன்னும்விரிவஞ்சி நாம் சொல்லாதவற்றுளைதை நினைத்து இங்ஙனம் வரைந்தனரோ அறிந்திலம். இனி விஷயத்தின்மேற்செல்வாம்.

சமயிகளுக்குப் பேருண்டாவது அன்னோர் ஜகத்துக்குக் கூறும் முதற்காரணத்தையே ஆதாரமாகக் கொண்டது என்று எங்கே கூறப்பட்டுள்ளது என்று கேட்டு, காலவாதிக்குக் காலத்தைத்தவிர வேறுகடவுளில்லை, பூதவாதிக்குப் பூதத்தைத் தவிர வேறு கடவுள் இல்லை யென்று கூறி, அதனால் தனது தெய்வமாகிய பூதத்தின் பெயரடியாகப் பூதவாதியும், தனது தெய்வமாகிய காலத்தின் பெயரடியாகக் காலவாதியும் பிரசித்தி பெற்றார்கள் என்கிறார். முதற்காரணத்தைச் சொன்னால், தாம் மாயாவாதியாகவேண்டுமென்

றும், தெய்வத்தைச்சொன்னால் மாயாவாதியென்னும்பேர் அடிபட்டுப்போம் என்றும் பார்க்கிறார். அவ்வாதிகளுக்குத் தெய்வமென்பது கிடையாது. அவர்களுக்கு உலகத்துக்கு முதற்காரணமான பொருள்: காலமும், பூதமுமே. அவற்றினின்றே உலகமுண்டாயிற்றென்பது அவர்கள் கருத்து. மாயையினின்றும் உலகமுண்டாயிற்றென இவர்கூறுவதுபோல் அவர்காலபூதங்களினின்றும் உல குண்டாயிற்றெனக் கூறுகின்றனர். இவர் உலகத்துக்கு முதற்பொருள் மாயையைவிட வேறே யொன்றுமில்லையென எங்ஙனம் பகர்கின்றனரோ அங்ஙனமே அவர் உலகத்துக்கு முதற்பொருள் காலமும், பூதமுந் தவிர வேறே யொன்று மில்லையெனப் பகர்கின்றனர். இவர்க்கும், அவர்க்கும் முதற்காரணப் பொருள் வரையில் ஒத்துப்போயிற்று. இவர் முதற்காரணப்பொருளான மாயையைச் சடமென்கின்றார். அவரும் முதற்காரணப் பொருளான கால பூதங்களைச் சடமென்கின்றனர். உலகத்துக்கு முதற்காரணம் காலம், பூதமென்று சொல்லுங் காரணத்தானே அவர் கால பூதவாதிகளென எல்லாமதத்தினரு மொப்பிப் பூர்வீகமாகச் சொல்லி வருகின்றனர். அதனால் அவர்க்கொரு குறைவுமில்லை. இவர் மாயையை உபதானகாரணமாகக்கொண்டு, அதன்பேரில் சிவனை நிமித்தகாரணமாகக் கொள்ளுகின்றனர். அந்தச் சிவனை வணங்குங் காரணத்தான் சைவரென்கிறார். நிமித்தகாரணனான சிவனை வணங்குங் காரணத்தான் சைவனாதல்போல் உபாதானகாரணமாக மாயையைச் சொல்லுகிறவரையில் மாயாவாதியாக ஏனாகமாட்டார்?

தெய்வத்தின் பேரடியாகவே சமயிகளுக்குப் பேருண்டாவதுண்மையாயின் பாஞ்சராத்திரமதம், பாதஞ்சலமதம், நையாயிகமதம், மீமாம்சமதம், அருகமதம், பௌத்தமதம், மகம்மதுமதம் முதலிய பலமதப்பேர் தெய்வத்தின் பேரடியாக ஏன் வரவில்லை? இதனால் சமயவான்களுக்குப் பேருண்டாவது தெய்வத்தின் பேரடியாகவேயென்பது பொய்த்துப்போகின்றதன்றோ? ஆதலால் சமயிகள் பலகாரணங்களால் பலபேர் பெறலாமென்பதே திண்ணமாமென்க. ஒருவனை நியாயத்தை வாதிப்பதால் நியாயவாதியென்றும், கணக்கெழுதுவதால் கணிதனென்றும் பெயர்பெறுவதுபோன்று சிவனை யுபாசிப்பதாற் சைவனென்றும், மாயையை முதற்காரணங்கூறுவதால் மாயாவாதியென்றும் பெயர்பெற யாதுதடை? நாம் மாயாவாதியென்றுமாத்திரம் சொன்னாலன்றோ இவர் தடுக்கவேண்டும்? மாயாவாதியென்றுஞ் சொல்லுகின்றோம்; சைவனென்றும் சொல்லுகின்றோம். இந்த விஷயத்தை முன் ப்ரம்மவித்தியா 11-வது பத்திரிகையிலேயே கூறியிருக்கின்றோம். இவர், “மாயை யொ
“ருபொருளும், சீவனொருபொருளும், சிவனொரு பொருளுமாக மூன்று
“பொருள்கள் ஒன்றி லொன்று விஜாதியாயிருப்பனவாக அங்கீகாரமாகை
“யாலும் இவற்றுள் யாம் பெரிய பொருளாக மதித்து வழிபடுவது சிவ மொ
“ன்றேயாகையாலும் சீவனாகிய எம்மையே யாம் வழிபடுவதும் எம்மிற் கீழிட்
“டமாயையை யாம் வழிபடுவதும் அநாவசியமாகையாலும் காலவாதிகள் கா
“லத்தையே பரமென்றும், பூதவாதிகள் பூதத்தையே பரமென்றும் வாதிப்ப
“துபோல், யாம் மாயையே கடவுளென்று வாதிப்பதில்லை யாகையாலும்
“யாம் வழிபடத்தக்க சிவத்தின்பேரடியாகவே சைவர் என்னும் பெயர் எமக்
“குச் சிறந்ததென்க” என்றார். இது உண்மைதான். நாமு மிதை யங்கீகரித்தமையால்தான் மாயாவாதியென்று கூறுவதோடு சைவனென்றுங் கூறுகின்றோம்; இன்னும் பலகாரணங்களால் பலபேரு முண்டென்று கூறுகின்றோம். எல்லாப்பேருமங்கீகரித்து மாயாவாதியென்னும்பேர் மாத்திரங்கூடாதென்பது தான் பிசகு. இவர் ‘சைவனென்னும் பேர் எமக்குச் சிறந்தது’ என்பதனால்

மாயாவாதியென்னும் பெயர் சிறப்பல்லாததென் றேற்படுகின்றது. நாம் சிறப்பு, சிறப்பல்ல வென்பதைப்பற்றிப் பேச வந்தாமில்லை. சந்திரனைப்போல் முகமென்னின் எந்தக்குணத்துக்காகச் சந்திர உவமானம் எடுக்கப்பட்டதோ அதுவரையில் சரியா அல்லாவென்று பார்த்துக்கொள்வதைவிட்டு, "சந்திர னாகாயத்திருக்கிறுனே, முகம் பூமியிலிருக்கிறதே, சந்திரனுக்குக் களங்கமிருக்கிறதே, முகத்துக்குக் களங்கமிருக்கிறதா, சந்திரன் வரவரத் தேய்ந்து குறைவுபடுகின்றனே, முகம் அவ்வாறு தேய்ந்து குறைவுபடுகின்றதா" வென இவ்வாறு பல பயனற்ற பிரசங்கங்கள் செய்வது நியாயமன்று. உவமானமெல்லாம் ஏகதேசமாகும். காலவாதி, பூதவாதிகள் கொள்கைக்கும், சைவர் கொள்கைக்கும் முற்றும் அதாவது இவரெழுதிய யாவும் ஒத்திருக்கவேண்டுமென்னும் அவசியமில்லை. உவமானம் ஏகதேசமென்றறிந்தும் வரைகடந்து பேசுதற்குக் காரணம் மாயாவாதி யென்னும் பேரினின்றும் விலகிக் கொள்வதற்கே போதும். காலவாதியையும், பூதவாதியையும் ஒரு புடையொப்பாகச்சமத்துவங் கூறுகின்றேமேயன்றி முற்றுமன்று. சைவருக்கும், கால பூதவாதிகளுக்கும் மற்ற விஷயத்தில் எவ்வளவுபேதமிருக்கின்றதோ, அவ்வளவு பேதம் காலவாதிக்கும் பூதவாதிக்கு மிருக்கின்றது. இருக்கினும் முதற்காரணங் கூறுகிறவரையில் இருவரும் ஒத்திருப்பதுபோல் மாயாவாதியான சைவரும், முதற்காரணங் கூறுகின்றவரையில் ஒத்திருக்கின்றனர். நிற்க, இந்தச்சைவத்தை மாயாவாதமென்று கூறுகின்றேமேயன்றி, நீலகண்ட சிவாசாரியாருடைய சைவமதத்தை அவ்வாறுகூற வொருப்படோம். அவர் உலகுக்குச் சிவனை அபின்ன நிமித்தோபாதான காரணமாகக் கூறுகின்றார். சிவனைக் கேவலம் நிமித்தகாரணமாத்திரங் கூறுவது சுருதிவிருத்தமென்கிறார். இராமாநுஜ மதஸ்தரும் அவ்வாறே. வீரசைவமத சோமநாத பாஷியக்காரரும் அங்ஙனமேயாம். ஆதலால் அவர்களெல்லாம் மாயாவாதிகளாகமாட்டார்கள்.

இனி அத்வைதிகளை மாயாவாதிகளென்று சொல்வதற்கு இவர் முன்னோர் வாக்கியங்களே பிரமாணமென்கிறார். இவர் கோர்ட்டில் ஒருநாளேனுஞ் சென்று வாதி சொல்வதையும் பிரதிவாதி சொல்வதையும் இருவருடைய வக்கீல்கள் நியாயவாதம் செய்வதையும் அதன்பேரில் ஜட்ஜி தீர்ப்பளிப்பதையும் பார்த்திருப்பாரேல் இவ்வாறு பேசமாட்டார். நமக்கு இவரும் பிரதிவாதி; இவர் முன்னோரும் பிரதிவாதி. எப்போதும் வாதிகள் தங்கள் குற்றங்களை மறைத்துப் பிரதிவாதிகள்பேரிலேயே குற்றங் கூறுவார்கள். அன்றித் தங் குற்றத்தையும் பிரதிவாதிகள் பேரில் கூறுவார்கள். பிரதிவாதிகளு மங்ஙனமேயாம். வக்கீல்களும் அவரவர்பக்ஷத்தையேயுண்மையென்று வாதிப்பார்கள். இது என்றுமுள்ள சங்கதிதான். இதை யாராய்ந்து பார்த்துத் தீர்ப்பளிக்க வேண்டியவர் ஜட்ஜி. இது சிறு பாலருக்குந் தெரிந்தவிஷயம். இதை விட்டு வாதிகள், அல்லது பிரதிவாதிகள் சொல்வதே மெய்யென்பவருளரோ? அங்ஙனமாயின் இருபாலாரும் நேர் விரோதமாகப் பேசுவார்களே. அவற்றிலெதை மெய்யென்றங்கீகரிப்பது? இவர் முன்னோர் கூறுவது இவர்க்குப் பிரமாணமாகுமே யன்றி மற்றவர்க்கன்றே. இவர் முன்னோர் கூறுவது மற்றவர்க்கும் பிரமாணமாமென்னின், மற்றவர் முன்னோர் கூறுவது இவர்க்குப் பிரமாணமாகவேண்டுமே. அங்ஙனம் மற்றவர் கூற்று இவர்க்குப் பிரமாணமாமாயின் இவரது துவித சைவமதம் நிலைபெறுத லெங்ஙனமாம்? வைணவமுன்னோர் கூறியபடி பார்க்கின் விஷ்ணு பரத்துவமேயாமன்றிச் சிவன் பரத்துவமாவரோ? அதை யிவரொப்புவரோ? ஆதலால் அவரவர் முன்னோர் வாக்கியங்களை அவரவர் மட்டில் வைத்துக்கொள்வது தகுதியாம். மற்றவரோடு வாதம்

புரியுங்கால் மற்றவர்க்கும் இவர்க்குமுரிய பிரமாணங்களை மாத்திர மெடுத்
துக் காண்பிப்பது நியாயம். அத்துவிதியான தத்துவராயர்: சைவர் மாயா
வாதியென்று கூறவில்லை யென்றார். இவர் முன்னோர் உலகிற்கு மாயை
முதற்காரண மல்லவென்றாவது மாயை அசத்தென்றாவது கூறினாரா? கூறி
யிருப்பின் தத்துவராயர் அவசியமில்லை. இவரை மாயாவாதி யன்றென நியா
யமே கூறும். அவ்வாறில்லையே. தத்துவராயர் வேதத்தைப் படித்து அதன்
பொருளை யுணர்ந்து அதன் பயனைப்பெறாதவர் மாயாவாதியென்று கூறினார்.
அதை யிவருமொப்பினார். அதனோடு மாயாவாத விவேகத்தையுங்கூறி மறுத்
திருக்கிறார். இவர் முன்னோர் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றார். அத்து
விதியான தத்துவராயர் மாயாவாதத்தை மறுத்திருக்கிறார், தாம் மாயாவாதி
யன்றெனவுங் காட்டுகின்றார். இதனால் அத்துவிதிகள் மாயாவாதிக ளல்லரெ
ன வாகின்றது. தத்துவராயர் இந்த விஷயத்தில் தம்வரையில் தாம்பார்த்துக்
கொண்டார். இதுவேபோதும். இந்தச் சைவரை மாயாவாதிகளென்று சொ
ல்ல அவருக்குச் சந்தர்ப்பம் நேரிடவில்லை. ஆனால் இவர் சித்தாந்தத்தை
மாத்திரங் கண்டித்திருக்கிறார். நிற்க; இவர் முன்னோர் அத்துவிதிகளை மாயா
வாதிகளென்று கூறியிருக்கின்றனரே யெனின், அது துவேஷத்தால் கூறி
யது. அதுவும் தங் குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றிக்கூறியது. அந்தந்த மதவா
தியர் கூறுவதைக் கவனிக்கப்படாது. நியாயமொன்றையே நோக்கவேண்டும்.
நியாயப்படி இவரே மாயாவாதியாகின்றனர். அத்துவிதிகளே பிரமவாதிகளா
கின்றனர்.

தத்துவராயர், "சைவநெறியே யுய்யுநெறியது" என்று "சைவ நலத்தை
யே பின்னர் வியந்து உபரதியடைந்தன" ரென்று கூறி, இவரது சைவத்
தைத்தா னுய்யுநெறியெனச் சொன்னாரென்றார். இவரது சைவத்தை யுய்யும்
நெறியென அவர் கூறியிருப்பின்,

"ஞானம்போலச் சில சொல்லி நாடற்கரிய முத்தியினும், தானுஞ் சிவ
மும் பாசமுமாஞ் சைவப் பேய்க்கும் வாரீரோ"

என்னும் செய்யுளையும் இது போன்ற வேறு பல செய்யுள்களையும் அவர்
கூறியிருக்கமாட்டார். ஆதலால் அவர் பகர்ந்த சைவம் அத்துவிதசைவமாம்
என்றறிக.

பின்பு "பிரமவாதியாகிய விவர், இவரது பிரமத்தை அப்படியே சுத்த
மாக வையாமல், மாயையினுங் கீழிட்ட வுலகுக்கு உபாதானமாக்கியவா றெ
ன்னை" என்று ஒரு கேள்வி கேட்கிறார். இதற்குச் சமாதானம் ஷை 11-வது
பத்திரிகையிலேயே கூறியிருக்கின்றோம். இங்கும் கூறுகின்றோம். உபா
தானமாக்கியதால் என்ன தோஷமோ அறிந்திலம்: பாம்புக்குக் கயிறும்,
வெள்ளிக்குக் கிளிஞ்சலும், கள்ளனுக்குக் கட்டையு முபாதானமானதினால்
கயிறு, கிளிஞ்சல், கட்டை இவற்றினுக்கு என்ன நஷ்டம்? பாம்பு முதலிய
வற்றிற்குக் கயிறு முதலியன விவர்த்தோபாதான காரணமானதினால் கார
ணத்திற்கு யாதொரு குறைவு மில்லை. பால் தயிராவதுபோல் சொன்னால்
தோஷமுண்டாம். பால் தயிராவதுபோலாயின் பால் கெட்டுத் தயிராக
வேண்டும். அப்படியே பிரமங்கெட்டு உலகாகவேண்டும். பால் கெட்டுத்
தயிராவதில் பின்னு மொரு தோஷமிருக்கின்றது. தயிர் பின்னும் பாலா
காது. அவ்வகையே பிரமங்கெட்டு உலகாயின் பின்னும் பிரமமாகாது. இது
பரிணாமவாதம். இது அத்துவிதிகளுடைய சித்தாந்தமன்று. விவர்த்தோபா

தான காரணமே சித்தாந்தம். மேல் பிரமம் நிர்மலத்துவங் கெட்டு ஜடவுல
குக் குபாதானமாயினதை நாம் ஒப்பியதாகக் கூறுகின்றார். பிரமம் விவர்த்
தோபாதானமாக வொப்பியதால் நிர்மலத்துக் கொருகெடுதியும் வரமாட்
டாதே. உலகு சத்துப்பொருளென்று சொல்லின் தோஷம் தோஷமே.
கயிறு, கயிறாயிருக்க அதில் அரவு தோன்றுமானால் கயிற்றினிலைமைக்கு
யாதொரு குறையுமின்றி யிருப்பது கண்கூடன்றோ? "பிரமத்தை யுலகமாக்
கிய பீடைமதம் பிரமவாதமாவ தெங்ஙனம்" என்று துடுக்காகப்பேசி, நாயக
ரது இயற்கைத் தன்மையைக் காட்டுகின்றார். பிரமம் உலகமாவது இன்ன
விதமென மேலேகாட்டிய வகையை யறிந்துகொள்ளாத குறைதான் அவரை
யப்படிப் பேச விடந்தந்தது. இவரைப்போன்ற ஆராய்ச்சியில்லாச் சிலர்
எழுதிவைத்த நூல்களை மெய்யென மருண்டு நம்பி அதுபோல் பேசுகின்றனர்.
இதன்பேரில் துன்மார்க்கவார்த்தைகள் சில பேசிமுடித்தார். துன்மார்க்கர்கள்
சண்டைபோடும்போது பலசாலி அடித்தால் அடிபட்ட பலவீனன், தான்
தோல்வி அடைந்த அவமானம் பொறுக்கமாட்டாமல் வாயில் வந்தபடி திட்
டுவதைக் காண்கின்றோம். பலமுள்ளவன் கையால் வேலை தீர்க்கிறான். பல
மில்லாதவன் கைவலியில்லாமையால் திட்டுகிறான். அவ்வாறேவிஷயங்களில்
நியாயபலமுள்ளவர் விஷயத்தின்பேரிலேயே திருஷ்டி யுள்ளவர்களா யிரு
ப்பார்கள். ஏனையோர், விஷயபலமில்லாமையால் தூஷணையிலேயே திருஷ்டி
யுள்ளவர்களாயிருப்பார்கள். இதுவரையில் பேசிவந்த விஷயங்களால் அத்
துவிதிகள் பிரவாதிகளேயாமன்றி மாயாவாதிகளன்றெனவும், இச்சோமசுந்தர
நாயகரே மாயாவாதியெனவும் நியாயத்தால் சித்தாந்தமாயினமை யறிக.

ஷை பத்திரிகையில் "மாயையைப் பொருளென்கிறாரா? குணமென்கி
"றாரா? பொருளென்கிறா ரென்னில் சிவமாகிய பொருள் பரிபூரண மென்
"றிவர் ஒப்பியிருக்கின்றமையாலும் அச்சிவமில்லாதவிட மில்லாமையாலும்
"மாயையென்னும் பொருளிருக்க விடமில்லாமற்போம். குணமென்கிறா
"ரென்னில் குணத்திற்குக்குணி யெது? மாயையைப் பரிக்கிரகசத்தியென்றும்
"பின்னாசத்தியென்றுங் கூறுகின்றமையாலுஞ் சத்தியென்பது குணமாகின்
"றமையாலும் இதற்குக் குணி சிவமன்றி வேறு பொருளில்லாமையாலும் சிவ
"த்தைக் குணியாகவும் மாயையைக் குணமாகவு மொப்பவேண்டியவராகின்
"றார். இதைவிட வேறுவழி அவருக்கில்லை. அவ்வாறாயின் மாயை சித்தா?
"சடமா? சித்தாயின் சிவத்துக்கு ஞானங் குணமாகலின் ஒத்துப்போம். நாயக
"ரவர்கள் மாயையைச் சடமென்றாராகலின் ஞானமயமான சிவனிடத்திற்
"சடமிருத்த லெங்ஙனமமையும்? ஒன்றுக்கொன்று பகைக்குணமாகலின்
"இரண்டுபகைக்குணங்க ளொருபொருளினிடத்திருத்தல் கூடாதே"

என்றும்,

"அம்மாயை பிரமத்திற்குப் பின்னமா? அபின்னமா? பின்னமெனின்
பிரமமொரு பொருளும் மாயையொரு பொருளுமா யிரண்டாகிக் கண்டப்ப
ட்டுப்போவதுமன்றிப் பிரமப்பொருள் அபரிபூரணமென்று கூறவரும்"

என்றும்

இம்மாதிரிப் பலகேள்விகள் கேட்டு அவற்றிலுள்ள பெருந்தோஷங்களை
யெல்லாங்காட்டி, பின் வேதாந்த சித்தாந்த வொற்றுமையைத் திருட்டாந்த
பூர்வமாய்க் காட்டினோம். அவைகளுக் கெல்லாம் இவர் பதி லேதும்எழுதி
னாரில்லை. எழுதாதிருந்தும் தம்மதம் அதிசிரேஷ்டமென்று வாளாகூறுவதிலும்
அத்வைத மதத்தைத் தூஷிப்பதிலு மாத்திரங் குறைவில்லை.

தொடக்கத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் "மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதம்" என்று கூறியதாகக்கூறி, அதனால் தாம் மாயாவாதியல்லாததுபோல் பேசுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் பரமாத்வைதியானதால், அவர், பரமசிவனுக்கு ஏக சக்கராதி பதித்துவஞ் சொல்லும் அத்துவிதிகளான முழு ஆஸ்திகரை மாயாவாதியென மறந்துஞ் சொல்லார்; பரமசிவனுக்கு மூன்றிலொருபங்கு இடத்தையும், ஜீவர்களுக்கு மூன்றிலொருபங்கு இடத்தையும், உலகத்துக்கு மூன்றிலொருபங்கு இடத்தையும் கூறி, உலகுக்கு மாயையை முதற்காரணமாகக்கூறும் மூன்றிலொருபங்கு ஆஸ்திகரும் இரண்டுபங்கு நாஸ்திகருமான இவர் பக்ஷத்தாரையே மாயாவாதிகளெனக் கூறியுள்ளார். மற்றப்படி அருணந்தி சிவாசாரியார், உமாபதிசிவாசாரியார் முதலானோர் எமது கக்ஷிக்கு இவரைப்போ லெதிர்க்கக்ஷியா ரானமையின் அவரை இவருடனே யொன்றாக்கிக்கொண்டோம். இவரது கொள்கையே அவரது கொள்கை, அவரது கொள்கையே இவரதுகொள்கையாகலின் இருவரையு மொருவராகவே பாவித்து மறுக்கின்றேம்.

(நந்தனஸூ புரட்டாசிமீ 22உ ப்ரம்மவித்யா.) ஓர் இந்து.

இதன்பேரில் சோமசுந்தரநாயகர் ஒன்றும் பேசாது சும்மா இருந்துவிட்டார். சும்மா விருந்துவிட்டாலும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் அத்வைதிகளை "மாயாவாதிகள், மாயாவாதிகள்" என்று சொல்வதை மாத்திரம் விடுவதில்லை. இது இப்படியிருக்க,* "அரக்கோணவாசி" என்றும் "வீரபத்திரமூர்த்தி" என்றும் பெயர் கொண்ட வொருவர், பாநுமூர்த்தி யென்பவரோடு வாதஞ்செய்யும்போது, துவித சைவர் மாயாவாதி யல்லவென்றும், அத்வைதிகளே மாயாவாதிகளென்றும் நியாயத்தால் நாட்டிக்கொள்ளாமல் மீண்டும் அத்வைதிகளை வீணாய் மாயாவாதிகளென்று தூஷித்தார். அப்படித்தூஷிப்பது நியாயமல்லவென ஷை "ஓர் இந்து" என்பவர், ஷை அரக்கோண வீரபத்திரமூர்த்தியார் கூறிய வாக்கியத்தையே யெடுத்துக்காட்டி மறுக்கின்றார். அதுவருமாறு காண்க:—

இவரே மாயாவாதியென்பது.

பின் "ஏகான்மவாதமே மாயாவாதமென்று சோம. நாய்க்கர் கூறியதாக "வும் அதைத்திருப்பிச் சைவமே மாயாவாதமென நாம் கூறியதாகவும் பாநு "மூர்த்தி யெழுதியதாகச் சொல்லியது உன்தலைமேல் காக்கை மலமென்றால் "அதை மாய்க்கவறியாது திருப்பி உன் தலைமேல் காக்கைமலம் என்றுளறு "முன்மத்தன்செய்கையோடு தானேசேர்ந்ததறிக" என்றுகூறினார். ஏகான்மவாதிகள் என்பது: அத்துவிதிகள் மாத்திரமன்று, சித்தாந்திகளும் என்ற பொருள் விளங்க "சித்தாந்திகளும் ஏகாத்துமவாதிகளே" என வொருவிஷ

---

* அரக்கோணவாசி வீரபத்திரமூர்த்தி யென்பவரும் சோமசுந்தரநாயகர்தானெனக் கோயமுத்தூர்ப் புளியோரைக்கண்ட ரென்பவர், விஜயஸூ கார்த்திகைமீ 18உயிற் பிரசுரமான காரைக்கால் திராவிடமந்திரி பத்திரிகையின் 187-வது இலக்கத்தில் முதல்காலத்தில் எழுதியிருக்கின்றனர்.

யம் நந்தனஹு தைமீ 7உ ப்ரம்மவித்தியாவில் சுருதி முதலிய பிரமாணங்களோடு "வேதாந்தி" என்பவர் எழுதியிருக்கிறார். அதைத்தடுக்க எவரானுமாகாது; எவரும் தடுக்கவுமில்லை. அதனால் சித்தாந்தமும் ஏகாத்துமவாதமேயாக, அங்ஙன மல்லாததுபோல் அதை வைத்து அத்துவிதிகளை யேகாத்துமவாதிகளெனக் கூறுவது இவர்க்குப் பெரியதோர் அவமானமாம்! அன்றி இவரது மாயாவாதசைவமே மாயாவாதமெனச் சுருதி யுக்தி அனுபவங்களுடன் குளை, சோமசுந்தர நாய்க்கரை நந்தனஹு ஆடிமீ 10உ நந்தன ஆவணிமீ 8உ ப்ரம்ம வித்யாவில் மறுத்ததற்கு, சோம. நாய்க்கர் அவாவர்மதத்திற்குப் பேர் வருவது அவரவர் கடவுள் காரணமாக என்று 1893ஹு செப்டம்பர்மீ 17உ விகடதூதனில் கூறிட, அங்ஙனமாயின் பூதவாதி காலவாதி பூர்வமீமாம்ஸவாதி சாங்கியவாதிமுதலானவர்களுக்குப் பேர்வந்தது கடவுள் காரணமாகவா, அவர்கள் கடவுளே யில்லையென்கிறார்களே யென நந்தனஹு புரட்டாசிமீ 22உ ப்ரம்மவித்தையில் அனேக நியாயங்களுடன் பேசி, மாயோபாதானரான சித்தாந்த துவிதசைவரோ மாயவாதிகளெனவும் சிவோபாதானரான அத்துவிதசைவர் மாயாவாதிகளாகாரெனவும் வச்சிரத்தம்பமாய் நாட்டினோம். பின்சோ. நாய்க்கர், அதுவிஷயமாகப்பேசநாவின்றி அடங்கிப்போனதுமன்றி இனி இவ்விஷயத்திற் றலையிடுவதில்லையெனத் தந்திரமாய் முடிவுரையுங்கூறியொளிந்துகொண்டார். இது அந்தரங்கசங்கதியன்று; பகிரங்கமாய்ப் பத்திரிகைகளின் வாயிலாக எவரும் அறிவார்கள். இங்ஙனமாக அதற்கு மாறிப் பேசுவது கற்றார்க்கழகாமோ! நாம் பூர்வபக்ஷம் பண்ணினதை மறுத்தெழுதாமலும் தாம் மாயாவாதி யல்லரெனச் சுருதி யுக்தி அனுபவங்களினால் தாபித்துக் கொள்ளாமலும் அக்கிரமமாய் அத்வைதிகளை மாயாவாதிகளென வீண் வெற்றுரை புகல்வது நியாயம் வழுவினர்க்கே யுரியதாம். இது விஷயமாகச் சுந்தரன் பட்டபாடு இவரறிந்திலரோ? 'உன்தலைமேல் காக்கைமலம்' என யாரை யார் சொல்ல வேண்டுவது? எவர் தலையில் காக்கைமல மில்லையோ அவர் காக்கைமல முள்ளவரைப் பார்த்து 'உன் தலையில் காக்கைமலம்' எனச் சொல்லவேண்டுவது நியாயம். காக்கைமலம் தலையிலுடையவன், அதிலும் முற்று முடையவன் அங்ஙனம் இறையும் உடையனல்லானை நோக்கி 'உன் தலையில் காக்கைமலம்' எனலாமோ? உடையானுரைப்ப வேண்டுமே யன்றி மற்றவன் ஒப்புவனோ? மற்றவன் தலையில் மலமில்லாமையினால் ஒப்புக்கொள்கின்றானில்லை. உடையவன் மற்றவனை அங்ஙனங் கூறுவது நியாயமன்று; மற்றவன் உடையவனைக்கூறினால் அங்ஙனம் ஒப்ப மாட்டேனென்று கூறுவதும் நியாயமன்று. இவரும் இவர் நண்பரான சோம. நாய்க்கரும் பிறரும் நியாயத்தாலும் சுருதி யுக்தி யனுபவங்களாலும் தங்கள் பக்ஷத்தை நாட்டிக்கொள்ளுகின்றார்களில்லை. வீண் தூஷணங்களாலும் வைதல் செய்வதனாலுமே நாட்டிக்கொள்ளப் பார்க்கின்றார்கள். மலத்தைப் பெறாதவன் பெற்றவனை நோக்கி உன் தலையில் காக்கைமலம் எனச்சொல்வதுபோல உலகிற்கு மாயை முதற்காரணமன்று, சிவனே முதற்காரணமெனச்சொல்லும் அத்துவித சித்தாந்திகள் மாயையை முதற்காரணமாகச் சொல்லும் துவிதசித்தாந்திகளை மாயாவாதிகள் என்கிறார்கள். தலையில் மலத்தைப்பெற்றவன் பெறாதவனைநோக்கி உன் தலையிற் காக்கைமலம் எனப்பகர்வதுபோல் மாயாவாதிகளான துவித சித்தாந்திகள் மாயாரகிதரும் சிவவாதிகளுமான அத்வைத சித்தாந்திகளை மாயாவாதிகள் என்கிறார்கள். பொருளைப்பெறாத தரித்திரன் பொருளுடையவனைப் பொறாமையால் இகழ்வதுபோல் துவிதசித்தாந்திகள் தாங்கள் மாயாவாதிகளாய்ப்போன வயிற்றெரிச்சலினால் அங்ஙனமல்லாதாரை அங்ஙனமுடையாராக வைத்துத் தூஷிக்கின்

றார்கள். அதைத்திருப்பி அத்துவிதிகள் சொன்னால் 'உன்தலையில்' காக்கை மலம்' என ஈனச்சொல்லைச் சொல்லி யிகழ்கிறார்கள்.

(அத்துவித) மதத்தை மாயாவாதம் என்று எங்கள் முன்னோர்கள் கூறியவாறு எங்களது சைவசித்தாந்தத்தைப் பூர்வ பக்ஷியினது முன்னோர்கள் மாயாவாதமென்று கூறியிருக்கிறார்களா? என்றொரு கேள்விகேட்கிறார். இந்தக்கேள்வி சோம. நாய்க்கர் கேட்டதற்கு நாமே பதில் சொல்லியிருக்கிறோம். மாயாவாத திமிரபாஸ்கரன் என்பவரும் சுந்தரன் என்பவர்க்குப் பலவித நியாயங்களோடு மாயாவாத விஷயமாய்ப் பேசி துவிதசித்தாந்திகளே மாயாவாதிகளெனத் தாபித்திருக்கிறார். அவைகளை யெல்லாம் பூர்வபட்சஞ்செய்து மேல் தமது கட்சியைத் தாபித்துக்கொள்ளாமல் இவர் பெறும் அவமானத்தை யிவர் முன்னோர் தலையிலும் ஏற்றப்பார்க்கிறார். இவர் முன்னோர் பொறாமையினாலும் துவேஷத்தாலும் பகைமையினாலும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றுசொல்ல, சுய ஆராய்ச்சியும் சுய மதியுமில்லாமல்அவர்கள் சொன்னதை மெய்யென நம்பி இப்போதுள்ளவர்களுஞ் சொல்லுகிறார்கள். அவர்கள் அத்துவிதிகளை மாயாவாதிகளென்று சொன்னதற்குக் காரணம் என்ன? காரணத்தோடு சொன்னார்களா? பொறாமை முதலியவற்றால் சொன்னார்களா? காரணத்தோடு சொன்னார்களென்னில் அந்தக் காரணம் யாது? அதை யிதுவரையி லெவரும் எடுத்துக் காட்டினார்க ளில்லையே. பொறாமை முதலிய துர்க்குணத்தால் சொன்னார்களென்னில் அது வாதசபையில் தலைகாட்டா தழியும். அத்துவிதிகளை மாயாவாதிகளென்பதற்கு யாதொரு நியாயமுமில்லாமையினாலும் இப்போதுள்ள சித்தாந்தசைவர்களும் அதற்குத்தக்க நியாயஞ்சொல்லாமல் ஆந்தைபோல விழிக்கின்றமையாலும் தாங்கள் மாயாவாதிகள் அல்லரென்பதற்கு நியாயங்காட்டாமையாலும் இவர்களே மாயாவாதிகளென்பதற்கு வேண்டிய நியாயங்கள் நாம் காட்டினமையாலும் இத்துவிதிகளே மாயாவாதிகளும் அத்துவிதிகளே சிவ வாதிகள் அல்லது பிரமவாதிகளுமாம்.

மோசஞ்செய்த குற்றத்திற்காகப் போலீசில் தண்டனைபெற்ற எ. என்னும் ஒருவகுப்பாரைப் பார்த்து "நீங்கள் மோசக்காரர்" என்று அங்ஙனம் மோசஞ்செய்யாத பி. என்னும் மற்றொரு வகுப்பார் சொன்னால், அது பொறாமல் எ. வகுப்பார், பி. வகுப்பாரை நோக்கி, நீங்கள் தான் மோசக்காரர்; நீங்கள் மோசக்காரரென நியாயங்காட்டி நாங்களாவது எங்கள் முன்னோராவது சொல்லாவிடினும் எங்கள் முன்னோர் வாளா வாயினாலேனும் உங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு உங்கள் முன்னோர் எங்கள் வகுப்பினரைச் சொல்லியிருக்கிறார்களா? சொல்லாமையால் நீங்கள்தான் மோசக்காரர், நாங்கள் அல்லவென்றால் ஒப்பப்படுமா? மோசக்காரரென்பதற்கு நியாயம் பலமேயன்றி நியாயமில்லா வாய்ச்சொல் பலமல்லவே. அதுபோல் இவர் முன்னோர் நியாயமில்லாமல் தூவேஷத்தாலும் பொறாமையினாலும் பகைமையினாலும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றார்கள். அவர்கள் அத்துவிதிகளுக்கு விரோதிகளானதால் அவர்கள் வார்த்தையைக் கேட்கப்படாது. விரோதிகள் வார்த்தையை அதிலும் வாதிகள் வார்த்தையைக்கேட்டுச் சரியென்று கொண்டு நியாய ஸ்தலத்தில் வாதிகள் பக்ஷம் தீர்ப்புக்கொடுக்க மாட்டார்கள். வாதிப்பிரதிவாதிகள் தங்கள் தங்கள் பக்ஷத்துக்குச் சார்பாய்ப் பேசுவார்களென்ற சங்கதி நியாயாதிபதிகளுக்குத் தெரியும். இருபக்ஷத்தார்க்கும் சம்பந்தமற்ற பிறர் சாக்ஷியின்றி வாதிகள் பேச்சைக்கொண்டே தீர்மானங் கொடுக்கும் தேசத்தில் இச்சித்தாந்த சைவர்கள் கொண்டுவரும் வழக்கு

ஜெயிக்குமேயன்றி இவ்விடத்தில் ஜெயிக்கமாட்டாது. மேலும் இவர்கள் முன்னோர் வாக்கு வேதமா? ஸ்மிருதியா? புராணமா? இதிகாசமா? இப்படிப்பட்ட பதினனகு வித்தை பொன்றிலும் சேராது யாரோ சிலர் ஷை வித்தைகளுக்கு மாறாகவும் தாங்கள் ஏற்படுத்திக்கொண்ட நவீன சித்தாந்தங்களுக்குச் சாரபாகவும் எழுதிவைத்துக்கொண்டால் அதை யொரு பிரமாணமாக எதிர்ப்பக்ஷததாரிடத்தில் சொல்லலாமோ? அப்படிப்பட்ட வேதசாஸ்திர விரோதிகள் சொன்னசொல் இவர் இனத்தார்க்குப் பிரமாணமா யிருப்பதைப்பற்றி நமக்கேது மாட்சேப மில்லையேனும் அதை அத்துவிதிகளிடத்திற் பிரமாணமாகக் கொண்டுவந்து காண்பிப்பது மாத்திரந்தான் தப்பென்கிறோம்.

(விஜயஸ்ரீ ஆவணிமீ ௨௭௨ ப்ரம்மவித்யா.) ஓர் இந்து.

நிற்க, கிறிஸ்துமதந் துர்ப்பலமுள்ளதென்றும் அது உண்மையான மதமல்லவென்றும் இந்து சமய பண்டித ருணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிறிஸ்து சமயத்தார் இந்துக்களை அஞ்ஞானிகளென்று சொல்வதை நாம் அறிவோம். அவர்வீட்டிற்குச் சமயபத்தியுள்ள இந்துப்பிரபு ஒருவர் செல்லின் அவ்வீட்டுக் கிறிஸ்தவப்பணியாளர், தன் எஜமானிடஞ் சென்று "யாரோ ஒரு அஞ்ஞானி வந்திருக்கின்றனர்" எனச் சொல்லுகின்றனர். இவ்வாறு இந்துக்கள் அஞ்ஞானிகளெனவும் கிறிஸ்தவர்கள் ஞானிகளெனவுங் கிறிஸ்து பாதிரிகள் சில நூறுவருஷங்களாகச் சொல்லிப் பழக்கி வருவது பிரத்தியக்ஷம். இப்போது அவர்கள் மதத்திலுள்ள குற்றங்களைக்காட்டி அது அஞ்ஞானமதமெனவும் ஆதலால் அதை அநுசரிப்பவர் அஞ்ஞானிகளெனவும் இந்து மதசித்தாந்தங்களின் குணத்தைக்காட்டி அது ஞானமதமெனவும ஆதலால் அதை அனுசரிப்பவர் ஞானிகளெனவும் சொன்னதாய் வைததுக்கொள்வோம. இதைக் கிறிஸ்தவர் அங்கீகரிப்பார்களா? எங்கள் முன்னோர் உங்களை அஞ்ஞானிகளென்று சொன்னதுபோல் உங்கள் முன்னோர் எங்களை அஞ்ஞானிகளென்று சொன்னார்களா? இல்லையே. ஆதலால் நீங்கள்தான் அஞ்ஞானிகள், நாங்கள்தான் ஞானிகள் என்றால் நாம் ஒப்புவோமா? மதத்தின உண்மை விளங்கவேண்டுவது நியாயத்தாலேயன்றி வேறு விதத்தாலல்ல. அப்படியே இவர்கள் முன்னோர் சொல் நியாயத்திற் கிணங்காமையினால் பயன்படாதென்க. கிறிஸ்தவர் சொல்லுகிறபடி இந்துக்கள் அஞ்ஞானிகளாகிறபோது அத்வைத விரோதிகளான துவித சித்தாந்திகள் சொல்லுகிறபடி அத்வைதிகள் மாயாவாதிகளாகலாம். கிறிஸ்தவர் சொல்லுகிறபடி இந்துக்கள் அஞ்ஞானிகளாகாதபோது, துவிதிகள் சொல்லுகிறபடி அத்துவிதிகள் மாயாவாதிகளாகார்கள். சொல்லைப் பொருளாகக்கொள்ளாமல் நியாயத்தையே பொருளாகக் கொள்வோமாயின் பூதத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் பூதவாதியும், காலத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் காலவாதியும், சூனியத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் சூனியவாதியும் ஆதல்போல, மாயையை முதற்காரணமாகக்கொள்ளுங்காரணத்தால் துவித சைவசித்தாந்திகள் மாயாவாதிகளாகின்றார்கள். இந்த நியாயப்பிரகாரம் சிவனை அல்லது பிரமத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் அத்துவிதிகள் சிவவாதிகள் அல்லது பிரமவாதிகளாகின்றார்கள். இவர் முன்னோர் மாயையை முதற்காரணமென்று கூறுங் கட்சியினின்று விலகியிருந்து அவர் கட்சியில் இவருஞ்சேர்ந்தால் இவர் முன்னோராவது இவராவது மாயாவாதியாக வேண்டுவ தின்று. அங்ஙன மின்மையின் இவரு மிவர் முன்னோரும் மாயாவாதி

ளாக யாதொரு ஆக்ஷேபமு மில்லை. இவர் முன்னோர் சொல் இவருக்குப் பிரமாணம்; நமக்குப் பிரமாணமன்று. ஏனெனில் அது வேதசாஸ்திரங் களுக்குச் சம்மதமா யிராமைமாத்திரமே யன்றி மாறாயிருப்பதாலும் அன்றி யுத்தி அனுபவங்கட்குப் பொருத்தமில்லாதிருப்பதாலு மெனக. இப்படிப் பட்ட அப்பிரமாண கிரந்தகர்த்தர் சொல்லை யொரு பொருளாகக்கொண்டு, அவர்கள், அத்துவிதிகளை மாயாவாதிகள் என்று சொல்லிவிட்டார்க ளென் றும், ஆதலால் அத்துவிதிகள் அவ்வாறு சம்மதிக்கவேண்டுமென்றுஞ் சொ ல்வது "கிழக்கு மேற்கு அறியார், வழக்குப் பேசப் புகுந்தார்" க்கினமாம் என்க. இவ்வாறு ஒவ்வொரு மதஸ்தரும் தங்களுக்குப் புறம்பான விரோத மதஸ்தர் இட்ட பேரை வைத்துக்கொள்ளவேண்டு மென்றால் எந்த மதஸ் தரும் பெருமை யடையாமற் போவார்; சிறுமையே யடைவர். ஆதலால் விரோதிகள் சொல்வதை விட்டு, யார் யார்க்கு எந்தெந்தப் பெயர் நியாயமோ, அதுவதை அவரவர் தரிப்பதே நியாயமுங் கிரமமுமாம். இந்த நியாயப்பிர காரமும் கிரமப்பிரகாரமும் மாயையை முதற்காரணமாகக் கொண்ட துவித சைவசித்தாந்திகள் மாயாவாதிகளும், சிவன் அல்லது பிரமத்தை முதற்கார ணமாகக் கொண்ட அத்துவிதிகள் சிவவாதிகள் அல்லது பிரமவாதிகளுமாம். இதனால் அவரவர்க்கு வேறு பேர் இருக்கப்படாதென நாம் கூறினமில்லை; ஷை மாயாவாதிக ளல்லரெனச் சொல்வது மாத்திரங் கூடாதெனச் சொல்லு கின்றோம்.

(விஜயஹ புரட்டாசிமீ கசவ ப்ரம்மவித்யா) ஓர் இந்து.

மாயையை முதற்காரணமாகச்சொல்லும் சைவமே மாயாவாதமதமென்பது.

"சைவம் மாயாவாதமானால் சைவப் பெயர் தாங்கினரெல்லாம் மாயா வாதிகளாவரன்றோ?" என ஒரு கேள்வி கேட்டு, எதிரிகளினுடைய சித் தாந்தத்தை யுணராதவரானார். இவர் "வெளுத்ததெல்லாம் பால், கறுத்த தெல்லாம் நீர்" என்பாரைப்போன்றவர். நாமாவது மற்றவராவது சைவத் தை மாயாவாதமெனச் சொல்லவில்லையே. எவ்விடத்திலாவது சைவமென் றாவது சிவனென்றாவது சொல்லி யிருந்துவிட்டால் அதைத் தமது மதமெ ன்று சொல்லப் பேராவல் கொள்ளுகின்றார். சைவத்தில அத்துவித சைவம், விசிஷ்டாத்துவித சைவம், துவித சைவம், அபேத சைவம், வீரசைவம், தாந் திரிகசைவ முதலியபல சைவங்க ளிருக்கின்றன. அவற்றில் மாயையை முதற் காரணமெனச் சொல்லும் சைவத்தையே நாம் மாயாவாதம் என்கின்றோம். மற்ற அத்துவித சைவத்தை அதாவது சிவாத்துவித மதத்தை மாயாவாத மென யாம் சொன்னோ மில்லை. ஸ்ரீமாணிக்கவாசகர், ஸ்ரீஞானசம்பந்தர் முத லியவர்கள் அனுசரித்த சைவத்தை நாம் மாயாவாதமெனச் சொல்லுகின்றோ மா? அவர்களெல்லாம் சிவனை முதற்காரணமாகச்சொல்லும் அத்துவித சை வர்களாயிருப்பதால் அவர்களை யொருபோது மெவரும் மாயாவாதிகளெனச் சொல்லார். அன்றி அவர்களெல்லாம் வேதசாஸ்திரங்களையும் வைதிக கர்ம மங்களையும் அத்துவிதத்தையும் பூஷிப்பவர்கள்; இவரினத்தாரைப்போலத் தூ ஷிப்பவர்க ளல்லர்.

"ஸ்ரீநிவாசசாஸ்திரியார் சில சமயம் யாம் அசைவரென்றோதுகின்றாலும் சில சமயம் யாம் சைவர் என்று மூந்துகிறார்" எனக் கூறித் தமதியற்கைக் கு ணத்தைக் காண்பிக்கிறார். இவ்வாறு சொல்லிவிட்டதால் இவர் சைவராய்

விட்டதாக மனப்பால் குடிக்கிருர் போலும்! இவரின் ஞானெ வெளிப்பட்டாரில்லை. இவர் குலம், கோத்திரம், ஜாதி, இருப்பிடம், அந்தஸ்து, பேர் முதலியவைக ளின்னவென்றும், இன்ன சைவனென்றும், இவ்வளவு காலத்துச் சைவனென்றும், நவீன சைவனென்றும், பரம்பரைச் சைவனென்றும் காட்டாமலே ஷை. சாஸ்திரியாரவர்களை யொதுக்கினதாய்ச் சொல்லுகின்ருர். இவருடைய வாக்கே யிவரது நிலைமையைக் காட்டுகின்றது. ஆதலால் இப்படிப்பட்டவரினின்றும் அவர் முன்னமேயே யொதுங்கித்தா னிருக்கின்ருர். இவர் ஒதுக்கவேண்டாம்.

கொம்புளதற்கைந்துகுதிரைக்குப்பத்துமுழம்
வெம்புகரிக்காயிரந்தான்வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங்கண்ணிற்றெரியாததூரத்தே
நீங்குவதேநல்லநெறி.

தீயாரைக்காண்பதுவுந்தீதேதிருவற்ற
தீயார்சொற்கேட்பதுவுந்தீதே—தீயார்
குணங்களுரைப்பதுவுந்தீதேயவரோ
டிணங்கியிருப்பதுவுந்தீது.

மருவுகமாசற்ருர்கேண்மையொன்றீத்தும்
ஒருவுகவொப்பிலார்கேண்மை.

இவை முதலிய நீதி வாக்கியங்களின் பொருளைச் சிந்தித்தே அவர் ஒதுங்கியிருக்கின்ருர். வேதாகம இதிகாச புராணங்கள் இவரையும் இவர் கொள்கையையும் ஒதுக்காமல் அங்கீகரித்தபிறகு இவர் பிறரையொதுக்கவருவாராக.

சிவனை முதற்காரணமாகச் சொல்லுஞ் சைவர் மாயாவாதியன்றென்பது.

"அவர் சைவராக முந்துகிறபோது மாயாவாத மருள் அவர் தலைமேலேறி வியாபியாமற்போகாது" எனக்கூறி, தமது மாயாவாதத்தைப் பிறர் தலைமேலும் ஏற்றப்பார்க்கின்ருர். "நாம்தான் மாயாவாதியாய் விட்டோமே; பிறரை அதினின்றும் தப்பவிடுகிறதா?" என்கிற வெண்ணத்தோடு பிறர்மேல் சொல்லப்பார்க்கிருர். இது பொருமைக்குணம். தமக்குவந்த தரித்திரத்தை யொழிக்க வகைதேடாமல் செல்வரை யெல்லாம் தரித்திரராக்கப் பார்க்கிருர். இந்த அழுக்காறு இவரைக் கெடுத்துவிடும். இவரைக்கெடுப்பா ரொருவரு மிருக்கத் தேவையில்லை. அது பற்றியே திருவள்ளுவநாயனர்,

அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னர்
வழுக்கியுங்கேடீன்பது.

எனக்கூறினர். அவர் மாயாவாதசைவ ரன்றென முன்னரே கூறிவிட்டமையால் மாயாவாத மருள் அவர் தலைமேலேருது. அதுமாத்திரமா? அவர் காலையும் பற்ருது. அவர் சன்னிதானத்திலேயே மாயை தலைகாட்டாதென்ருல் அவர் தலைமேலா போய் ஏறப்போகிறது? மாயை எவர்தலையில் ஏறுமென்ருல் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்வோரிடத்திலும் பொருளைப் பொருளாகக் கொள்ளாதவரிடத்திலுமே யேறும் என்பதாம். அத்துவிதிகள் பொருளைப் பொருளாகக் கொள்பவராதலாலும் தோற்றத்தைத் தோற்றமென்று சொல்லி அது பொருளல்லவெனக் கழிக்கின்றவராதலாலும் அவரிடத்தில் மாயாவாதமருள் நெருங்க அஞ்சும். அதுபற்றியே பொரு

ளல்லவற்றைப் பொருளென்றுணர்தலே மருள் என்றார் நாயனார். இந்தத் துவித சித்தாந்திகள், பொருளல்லாத் தோற்றவுலகைப் பொருளாகக் கொள்ளு நீரராகலின் அவர் தலைமேல் மருள் குடிகொண்டு, இந்தவிடந்தான் நமக்குச் சொந்தமெனக் கருதி யிறங்காது. இவரினத்தார் பொருளல்லவற்றைப் பொருளென வுணர்பவரெனப் பலவருஷங்களாக யாங் காட்டியே வருகின்றோம்; அத்துடன் பொருளல்லவற்றைப் பொருளல்லவெனக் கழித்து பொருளைப் பொருளாகக் கொள்பவர் அத்துவிதிகளெனவும் காட்டிவருகின்றோம்.

"யாம் மாயாவாதமென்றது ஆகமசைவமேயன்றி வேத சைவம் ஆகாதெனின்" என்கிறார். பிரமகீதையில் கேனோபநிடதத்தில் அத்துவித சித்தாந்தத்தைச்சொல்லி, ஐயன் சைவாகமத்துக்கும் இதுவே பொருளெனச்சொல்லியிருப்பதாலும், சூதசங்கிதை வேதாவிரோத முரைத்த அத்தியாயத்தில் "மிருதி புராணம் சைவாகமந் தருக்கம் பாரதமுன் விளம்பு நூல்கள் கருதுறும் அத்துவித பரமே யுரைக்கு" மென்று கூறியிருப்பது பற்றிச் சைவாகமமும் அத்துவிதமே யென ஏற்படுவதாலும், சிவாகம முடிவான சிவஞானபோதமும் அத்துவிதமே கூறுவதாலும், அச்சிவஞான போதத்துக்கு (வேதமுழுமைக்கும் பாஷியஞ்செய்த) வித்தியாரணிய சுவாமிகள் அத்துவித பரமாகவே பாஷியஞ்செய்திருப்பதாலும், "பாசபத்ஸ்ததா ஜீவப்பாசமுத்தச் சதாசிவா" "ஜீவச்சிவச்சிவோ ஜீவச்சற்ஜீவக்கேவலச்சிவா" "சர்வசாக்ஷிசிவோகம்" "பிரத்யகாத்மாசிவோகம்" என இவ்வாறு ஆகமமுடிவும் அத்துவிதத்தையே சொல்வதாலும் யாம் ஆகமசைவத்தை மாயாவாத சைவமென வொருபோதுஞ் சொல்லோம். பின்னை இவருடைய துவிதசைவத்தையே மாயாவாதமெனச் சொல்லுகின்றோமென்றறிக.

(விஜயஹூ புரட்டாசிமீ ககவ ப்ரம்மவித்யா.) ஓர் இந்து.

சேதுராம பாரதியாரென்பவர் சோமசுந்தர நாயகரை மறுத்து "ஸ்மார்த்தோத்சர்ஷதீபிகை" என்னும் விஷயம் எழுதும்போது இது விஷயமாக எழுதிய வற்றுள் சில வருமாறு:—

மாயையை முதற்காரணமாகக் கொண்டு வாதாடுஞ் சைவர்களை மாயாவாதிகளென்று என் கூற வொண்ணாது? அதனை நியாயவாயிலாகப் பரிகரிக்க முயலாமல் எம்பெரியோர் கூறினரென்றது கனம்பெறாது. அப்பெரியோரும் நேற்று முந்தாநாள் தோன்றினவர்க ளாதலால் அவரது வாக்குக்கும், இன்று காலையி லுருவங்கொண்டு பிறந்த நமதன்பரது திருவாக்குக்கும் மகிமை யுண்டாகும்போது, பிரம்மஸ்ரீ சீநிவாசசாஸ்திரியார் வாக்கும் பிரம வித்தியா நாவலர் வாக்கும் பயன்பெறா தென்பது என்ன பேதைமை? அத்வைத மதாநுசாரியராயுள்ள பூர்வப் பெரியோர் அவ்வாறு கூறவில்லையே யென்னின் நமதன்பரையும் அவரது இனத்தாரையும் போலன்று, பிறரை யிகழ்வதே பெருந்தவமெனக் கொள்ளாமையால் அவர்கள் கூறாமைகொண்டு எம்பெரியோரை யிகழ்வது நமதன்பருக்கே பெருமையாவதன்றிச் சன்மார்க்கமுடையார் அங்ஙனங் கூறப் பெரிதும் நாணுவரென்க.

"அவர்கள் பிரம்மவாதிகளே யாவார்களென்று கூறியதை மறுக்க வகையறியாது, காலத்தைப் பிரமமென்று வாதிப்பவர் காலப் பிரம்மவாதிகளும், கர்மத்தைப் பிரமமென்று வாதிப்பவர் கர்மப் பிரமவாதிகளுமே யாயிடுவர். அவர்களெல்லாந் தங்களைப் பிரமவாதிக ளென்று சொல்லிக்

கொண்டு வெளி வந்ததில்லை'' என்று கூறினார். கர்மப் பிரமவாதிகள் முதலாயினார் தங்களைப் பிரமவாதிகளென்று கூறிக் கொள்ளாமையால், அத்துவிதிகளும் தங்களைப் பிரமவாதிகளென்று கூறுதல் சாலாதென்பது எந்தச்சுருதியாதாரங்கொண்டோ! பிரமத்தைத் தவிர வேறு பதார்த்த மில்லையென்று நிச்சயமாகக் கூறுபவர் பிரமவாதி யாகாரென்பது என்ன பேதைமை? மாயையென் றொருபொருளில்லை யென்பவரை மாயாவாதிகளென்பது என்ன கண்மூடித்தனம்? காலத்தையும், கர்மத்தையும் சத்தியப் பொருளாகக் கொண்டு வாதிப்பவரைக் காலப் பிரமவாதிகள் கர்மப் பிரம வாதிகளென்று நமது அன்பர் கூறியவாறே, மாயையைச் சத்தியப்பொருளாகக் கொண்டாலன்றோ யாம் மாயாவாதி யாகவேண்டும்? அங்ஙன மில்லாதபோது எம்மை மாயாவாதி யென்றது என்னமதி! காலத்தைப் பிரமமாகக்கொண்டு வாதிப்பவரைக் காலப் பிரமவாதியென்று கொண்டதுபோலப் பிரமத்தைப்பிரமமாகக் கொண்டு வாதிப்பவரைப் பிரமவாதிகளென்று கூறுவதி லென்ன தடை? காலத்துக்கும், கர்மத்துக்கும் பிரமமென்று பெயர் கூறுவதில்லை. அவற்றுக்குப் பிரமமென்பது பரியாயப்பெயரு மன்று. ஒன்றோடொன்று பொருத்தமில்லாத இருசொற்களை யொன்றுசேர்த்து ஒரு சொன்னீர்மைத்தாகக் கொள்வது பொருத்தமின்று. காலத்துக்குப் பிரமமென்னும் பெயருரித்தாயின் அவர்கள் பிரமவாதிகள் என்னப்படுவதில் யாதுந் தடையில்லை. அங்ஙனங் கூடாமையினன்றோ பிரமமென்னும் பெயருக்குக் காலமென்றதை அடையாகக்கொடுத்துக் காலப் பிரமவாதிகளென் றழைக்க நேரிட்டது? அங்ஙனமின்றி வேதத்திற் பிரசித்திபெற்றதாகிய சத்தியப்பொருளுக்குரிய பெயராகிய பிரமமென்னும் பெயரைக் கொண்டே யப்பொருளைப் பிரதிபாதிக்கின்ற அத்துவிதிகளைப் பிரமவாதிகளென்பது சத்ஜனசம்மதமாதல் கண்டுதெளிக. அது நமதன்பர் கருத்துக்கு விரோதமாயிருப்பதினாலே சுருதிமுதலானவற்றிற்குஞ் சம்மதமின்றென்பது நியாயமின்றாம். அன்றியும் மாயையை மெய்ப்பொருளாகக் கொண்டு வாதிக்கும் நமதன்பர் மாயாவாதி யாவதி லென்ன தடை? மாயையை மெய்ப்பொருளாகக்கொண்டாலும் அதனை யுபாஸ்யப் பொருளாகக் கொண்டாமில்லை யெனின், பிரளயாகலருக்குக் காட்சிதரும் ஸ்வரூபத்துக்குச் சுத்தமாயையே உபாதானமாகப் பெறுதலாலும், சிவதத்துவங்கட்குச் சுத்தமாயையே காரணமாகப் பெறப்பட்டமையாலும், அதனைத் தனுவாகப் பெற்ற சிவத்துக்கும் மாயைக்கும் சம்பந்தமுண்மையாலும், சைவர்க்கு மாயை உபாஸ்யப் பொருளாவதிலும் தட்டில்லை. ஆதலாற் சைவரை மாயாவாதியென்று கூறுதல் நியாயமேயாம். அவ்வாறின்மையின் வேதாந்திகளை மாயாவாதிகளென்பது பொருத்தமின்று. ஏகான்மவாதிகளை யெம்ம பெரியோர் மாயாவாதிகளென்று அநாதியே கூறினாரென்றார். அநாதியென்பதின்பொருளின்னதென் றறியார்போலும்! அருணந்திசிவாசாரியர் தோன்றியகாலமே யிவருக் கநாதியென்றதாயிற்றுப்போலும்! அவரியற்றிய சிவஞானசித்தியாரே யிவருக்கு அநாதிநூலாயிற்றுப்போலும்! ஆயினிவரை யாமதித்து எழுதுவதும் அநாவசியமேயாம். அநாதிநூல்களாயவேதம் ஆகமமுதலியவற்றைப் பிரமாணங் கொள்ளாமல் இருநூறு முன்னூறு வருஷங்களுக்கு முன் தோன்றிய அருணந்திசிவாசாரியார் முதலாயினாரை யநாதிப் பிர்மமாகவும், அவர்களியற்றிய நூல்களை யநாதிநூல்களாகவும் கொண்டதனால் இவர் நியாயவாதத்துக் கேலாதவரெனத் துலங்குகின்றது. நூதன நூல்களாகிய சித்தாந்த சாஸ்திரம் பதினான்கும், அதை அநுசரித்த வேறுநூல்களும் தவிரப் பழையநூல்களிற் பிரமாணங்காட்டினால் நாமொருவாறு சமாதானங் கூறவேண்டுவ தவசியம். அங்ஙனமின்மையால் பதில்கூறுவ தெமக்கநாவசியமென்று

தெளிவாராக. "எந்தமாயாவாதநூலில் சைவரைமாயாவாதிகளென்று கூறியிருக்கின்றது" என்ருர். நாங்கள் மாயாவாதிக ளன்மையால் அதற்குப் பதில் கூறுவது எமக் கவசியமின்று. மாயாவாதிகளைக் கண்டு கேட்டால் அவர்கள் கூறுவார்கள். யாம் பிர்மவாதி என்பதில் அநாதி நூல்கள் பின்வாங்கியதில்லை. எம்மை மாயாவாதியென்று எந்தநூலிலுங் கூறியதில்லை. நமதன்பர் அநாதி நூல்களை யாராயும் புண்ணியம் பெருமையால் அதனுண்மை தெரிந்துகொண்டாரில்லை. உண்மையுணர்ந்து வெளிப்படின் பின்னர்ப் பேசுவோம். "இவர்கள் பிர்மத்தை உபாஸ்யப்பொருளாகக் கொண்டால இவர்களைப் பிரமவாதிக ளென்னலாம். பிரமம் உபாஸ்யப்பொருளானுல் உபாஸகப் பொருள் வேருென்று வேண்டும். அது யாது?" என்று வினவினுர். ஆடுவானும், ஆடுகின்றவனும், ஆடல் காண்பவனும் நீயேயென்று சைவநூலிற் பிரமலட்சணங் கூறிப் புகழ்ந்திருப்பதற் கிவர் என்ன சமாதானங் தேடினுர்? அதன் பொருளைக் கற்ருேர்பாற்கேட்டுத் தெளியப்பெற்ருல் நமதன்பரிவ்வித விபரீதக்கேள்வி கேளார். அதனைத் தேர்ந்தபின் பேசுவாராக. அநாதிநூல்களிற் கேட்கப்படாத மாயாவாதியென்னும் பெயரை எங்களுக்குக் கூறுவது சரியன்ருதலாலும் அது சைவர்க்கே பொருத்தமுடைத்தா யிருத்தலாலும் அவ்வுண்மையை ப்ரம்மவித்தியா பத்திராதிபர் வெளியிட்டிருக்கலாம். அதனைத் தேர்ந்து குணப்படுவதே நமதன்பருக்குத் தகுதியாவதன்றி, நூதன சைவர் தங்கள் சுவடிகளி லெழுதிவைத்திருப்பதை நம்பி மோசம்போகுதல் அழகல்ல. அதைவிடுத்து, "ஒருவன் தலையின்மேற் காக மெச்சமிட்டிருக்கக் கண்ட மற்ருெருவன் அவனைப்பார்த்து, அப்பா! உன்றலைமேற் காக்கைமல மிருக்கிறது, அதனை எடுத்துவிடென்று கூறினுன். அதற்கு அவன் அம்மலத்தைக் களைந்து பரிசுத்தப்படுவதொழிந்துசொன்னவனையே திருப்பிக்கொண்டு என்றலைமேற் காக்கைமலமில்லை. உன்றலைமேற்ருன் காக்கைமல மிருக்கிறது என்ருன். இவ்வழக்கையே மாயாவாதியாகிய நமதன்பரிடம் ஸமர்த்திக்கத்தக்கது" என்று அவல திருஷ்டாந்தங்காட்டியது சரியன்று. ஏனெனில் ஒருவன் தன்றலையில் மணங்கமழும் நறுமலர் சூடிச் சென்ருன். மற்ருெருவனஃதின்றித் தன்றலையிற் காக்கைமலம் துர்க்கந்தங் கமழச் சென்ருன். காக்கைமல மிருக்கப்பெற்றவன் மலர்சூடி வந்தானை நோக்கி, அவனணிந்திருப்பது மலரென்றுணராமல் மயங்கி உன்றலைமேற் காக்கையெச்ச மிருக்கின்றது. அதனை யெடுத்துவிடென்று கூறினுன். மலர்ச்சிகையான் மற்றவனது பேதைமைக் கிரங்கி, அப்பா! என்றலைமேலுள்ளது காக்கை மலமன்று; மலரொன்றும், உன்றலைமே லுள்ளதுதான் காக்கைமலமென்றும் பல நியாயங்களால் விளக்கிக் காட்டினுன். அதனை யப்பேதை ஒப்பாமல் அன்றன்று, உன்றலைமேலுள்ளதே மலம், என்றலைமேலுள்ளதே மலரென்று கூறி மகிழ்ந்து சென்ருன். அதுகண்டு மலரணிந்தோன், அவனது அறிவின்மைக்கு வருந்திச் சென்ருன். அதுபோல நமது அன்பர் தாம் மாயாவாதியாவதை யுணராமல் பிர்மவாதியாகிய பிர்மஸ்ரீ சாஸ்திரியாரவர்களை மாயாவாதியென்று தூஷித்தார். சாஸ்திரியாரவர்கள் நமது அன்பரது புத்தி மோசத்துக்கிரங்கி, யாம் மாயாவாதியல்ல, இவரோ மாயாவாதியாவார் என்று விளக்கியிருக்கவும் அதனைக் கவனியாமல் தமக்குத் தோன்றியவாறே எழுதிக் களிப்பது அறிஞர்க் கழகன்றென் றுணர்க.

(விஜயஸ்ரீ புரட்டாசிமீ ௧௧௨ ப்ரம்மவித்யா.)

சேதுராமபாரதி.

இதைப்பற்றிச் சுந்தரன் என்பவருக்கு "மாயாவாத திமிர பாஸ்கரன்" என்பவர் கொடுத்த பதில் வருமாறு:—

நாகைநிலலோனிப் பத்திரிகையும், மாயாவாதத் திமிரபாஸ்கரமும்.

(சுந்தரார்க்கு மறுமொழி யுரைத்தல்.)

சுந்தரன் என்பவருக்கும், பானுமூர்த்தி யென்பவருக்கும் வைதிக சைவ விஷயமாயும், மாயாவாத விஷயமாயும் நாகைநீலலோசனி, சென்னை மகா விகடதூதன் ஆகிய இவ்விரு பத்திரிகைகளிலும் வாதம் நடந்து வருகின்றது. அதுபற்றி ஷை சுந்தரன் என்பவர், நிகழும் நந்தனவருஷ ஆவணிமீ கடுவ நீல லோசனியில் "மாயாவாதிகள்" எனப் பெயரளித்துச் சில சங்கதிகள் தீட்டி யிருக்கின்றார். அதிலுள்ள தோஷங்களைக்காட்டி மறுத்து, அதனுண்மையை யெடுத்துச்சொல்வாம்,

அத்துவிதிகள் யார்?

அவர், தம்மைச் சுத்தாத்வைதியென்கிறார். அத்துவிதமென்னுஞ் சொல் மாத்திரம் வேதமுதலிய கலைகளில் இருக்கிறதேயன்றிச் சுத்தாத்வைதம் என்னுஞ் சொல் இல்லை. அப்படிப்பட்ட அத்துவிதிகள் புராதனமாயிருக்கிறார்கள். அவ்வத்துவிதம் என்னும்பெயரை விரும்பிய ஓர்வித சைவர், அப்பெயர் ஒரு பாலாருக் குரிமையாயிருப்பதால் அதை வைத்துக்கொள்ளின் அவர்க்கும், தமக்கும் பேதந் தோன்றாதென்றெண்ணி, சுத்தாத்வைதம் என்று பெயர் வைத்துக்கொண்டனர். தேவாரம் என்று ஒரு நூலுக்குப் பொதுவாய்ப் பெயரிருக்கவும் அதற்கடை கொடுத்துத் திருப்போரூர் தேவாரமென்று மற்றொரு நூலுக்குப் பெயர் வைத்துக்கொண்டார்கள். அதனால் பொதுவான தேவாரத்துக்கு ஏதுங் குறைவில்லை அப்படியே சுத்தாத்துவிதிகள் என்னும் பெயரை ஒருவித சைவர் வைத்துக்கொண்டதனால் அத்துவிதிகளுக்கு ஒரு குறைவு மில்லை. அத்துவிதிக ளென்போர் வேதாந்திகளே; மற்றைய த்துவிதிகள் அடைபெற்ற அத்துவிதிகளாம்.

வைதிகர் யார்? தாந்திரிகர் யார்?

சுந்தரர், தாம் ஷை இருவரும் என்கிறார். வைதிக சமஸ்காரம் பெற்று, வைதிக அநுஷ்டானஞ்செய்து, வேதப்பொருளான பரமசிவனை வணங்குபவர் வைதிகர். ஆகம தீக்ஷைபெற்று ஆகமாநுஷ்டானத்தை யநுசரிப்பவர் தாந்திரிகர். தாந்திரீகரில் அந்தணராயுள்ளார், வைதிக சமஸ்காரம்பெற்று வைதிக அநுஷ்டானமுங்கொண்டு ஆகமதீக்ஷைபெற்று ஆகமாநுஷ்டானமுங்கொண்டிருப்பர். இவர்க்கு வைதிக அநுஷ்டானஞ் சுருக்கம், ஆகமாநுஷ்டானம் பெருக்கம். வைதிக சமஸ்காரம் பெறாத ஏனையோர் ஆகமதீக்ஷமாத்திரம் பெற்று ஆகமாநுஷ்டானத்தைக் கொண்டிருப்பர். சுந்தரர் எந்த அனுஷ்டானத்தைப்பெற்றிருப்பவரோ அறியேம்.வேதத்தைப்பசுநூலென்றும், மயக்க நூலென்றும், உலகநூலென்றும், சாமானிய நூலென்றும் சொல்பவர் ஒரு போதும் வைதிகராகார்; தாந்திரீகரோ யாவர். இவர் பின்கூறும் பக்கத்தவராயிருப்பதால் வைதிகராகார்; பின்னைத் தாந்திரிகரோயாவர், தாந்திரீகரா யிருந்துகொண்டு வைதிகரும், தாந்திரீகருமென்று கூறுதல் வீண்மொழியேயாம்,

ஆஸ்திகர் யார் ? நாஸ்திகர் யார் ?

சுந்தரர் அத்துவிதிகளை நாஸ்திகரென்கிறார். இப்படி வாயால் சொல்லி விடுவதினாலும் எழுதிவிடுவதினாலும் தாம் ஆஸ்திகராய்விடுவதாக மனப்பால் அருந்துகிறாராக்கும். சிலவாரங்களின்முன்னர் ப்ரம்மவித்தியாவின்கண்ணும், மகாவிகடதூதன்கண்ணும் "ஆஸ்திகம் நாஸ்திகம்" என்னும் விஷயமாய்ச் சுதேசியென்பவர் எழுதியவிஷயத்தை இச்சுந்தரர்பார்த்திருக்கலாம். அப்படியிருந்தும் பின்னும் அத்துவிதிகளை நாஸ்திகரென்றுகூறுவது முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலாம். அப்பத்திரிகைகளில் முற்றுங் கடவுளே பரிபூரணரா யுள்ளவரென்பவர் ஆஸ்திகரெனவும், அப்படிப்பட்ட கடவு ளில்லையென்பவர் நாஸ்திகரெனவும், கடவுள் ஒரு இடத்திலும், ஜீவர்கள் ஒருஇடத்திலும், உலகம் ஒருஇடத்திலும் இருத்தலாகச்சொல்பவர் மூன்றிலொருபங்கு ஆஸ்திகரும், இருபங்கு நாஸ்திகருமாமெனவும் ஆஸ்திகர் நாஸ்திகர் என்னும் பேர் கடவுள் உண்டு, கடவு ளில்லை யென்றதின்பேரில் வந்ததெனவும், அப்படிப்பட்ட கடவுளுக்கு முழுஇடத்தைக்கொடுத்தவர் முழு ஆஸ்திகரெனவும், மூன்றிலொருபங்கு இடத்தைக்கொடுத்தவர் மூன்றிலொருபங்கு ஆஸ்திகரெனவும், மற்ற இரண்டுபங்கு இடத்தைச் சீவர்களுக்கும் உலகத்துக்கு மெடுத்துக்கொண்டமையால் அவரே யிரண்டுபங்கு நாஸ்திகரெனவும் கூறியிருக்கின்றார். இதன்படியே அத்துவிதிகள் முழுஆஸ்திகராவர்; இந்தச் சுந்தரர் மூன்றிலொருபங்கு ஆஷ்திகரும் இருபங்கு நாஸ்திகரு மாவர். ஷை சுதேசி, பிரபல நியாயங்காட்டிச் சொல்லுகிறார். சுந்தரர்போல் வாய்மொழியாய்ப் பேசவில்லை. மற்றக் குடிகளைநோக்க ஒரு மாகாணத்தை ஆளுபவர் அரசராயினும் உலகமுற்றும் ஆளும் ஏகச் சக்கராதிபதியைநோக்க மாகாண அரசர் அரசராகார். இவ்வாறே கடவுளில்லை யென்பாரை நோக்க இச்சுந்தரர் ஆஸ்திகராயினும் அத்துவிதிகளை நோக்க நாஸ்திகரேயாவர்.

மாயாவாதிகள் யார் ?

நந்தன௵ சித்திரை௴ 1௳ ப்ரம்மவித்தியாவில் ஓர் நாவலர், உலகிற்குக் காலமே முதற்காரணமென்பார் காலவாதிகளென்றும், பூதமேயென்பார் பூதவாதிகளென்றும் ஆதல்போல் மாயையை முதற்காரணமென்பார் மாயாவாதிகளாகவேண்டுமென்று கூறியதற்கு ம-ா-ா-ஸ்ரீ சூளை. சோமசுந்தர நாயகரென்னுமொருவர், அதை யங்கீகரித்தும் அதன்மேல் அதற்குச் சமாதானங் கூறுவார்போன்று வெளிப்பட்டு, ஆனி௴ ௮௳ சடு௳ நீலலோசனிகளில்பொருத்தமில்லாப்பயனற்றசொற்பவரிகள் வரைந்தனர். அதன்பேரில் ஓர் இந்து என்பார் ஆடி௴ ௰௳ ஆவணி௴ ௨௯௳ ப்ரம்மவித்தியாக்களில் அவ ரெழுதியவற்றிலுள்ள பெருந்தோஷங்களையெல்லாங் காட்டி, அவர் சாராரே மாயாவாதிகளென வரைந்திருக்கின்றார். சுந்தரர், அதைப் பாராதுபோல் காட்டிக்கொண்டு, பின்னும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்று வாளா வரைகின்றார். ஏதும் நியாயங்காட்டினாரில்லை. சுந்தரர் நியாயமின்றி வாளா சொல்லிவிடுகின்றாரேயன்றி, "இவ்விஷயம் பத்திரிகையி லெப்படி வந்தது? முன்னடந்த விஷயமென்ன? பின்னடந்த விஷயமென்ன? இதுவரையில் பூர்வபக்ஷமாயிருப்பது எது? எது சித்தாந்தமாயிற்று? இனிச்செய்ய வேண்டுவதென்ன? நம்முடைய கக்ஷியைத் தாபித்துக்கொள்ளவேண்டுமாயின் இதற்குமுன் சித்தாந்தஞ் செய்ததைப் பூர்வபக்ஷஞ் செய்யவேண்டுமே; அது செய்யாவழிக் கக்ஷி தாபிதமாகாதே" என இப்படிப்பட்ட பரியாலோசனை ஏதுஞ்செய்தாரில்லை. பின்னைப் பூர்வபக்ஷத்தையே தமது சித்தாந்தமாகக்கூறி விருது பேசுகின்றார். கீழேவிழுந்தவன் "பார் என் மீசையில் மண்

பட்டதா?'' வென்றுகாட்டி ஐயங்கூறுவதுபோல் சுந்தரர் கூறும் ஐயமானல் அது நமக்குச் சம்மதந்தான். அதற்கு மறுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. இதில் சுந்தரர் கருத்து ஒன்றிருக்கலாம். அது இது: ''ப்ரம்மவித்தியாவைப் பாராத சிலர் நீலலோசனியைப் பார்க்கக்கூடும். அப்படிப்பட்டவர்க்குப் பிரமவித்தியாவில் நடந்த விஷயங்கள் தெரியாமையால் அதுவரையில் தாம் எழுதுவதை மெய்யென நம்பிக்கொள்ளட்டும்'' என்பதாம். இப்படிப்பட்ட நம்பிக்கையில் சுந்தரர்க்குச் சிறிது ஆதாயமுண்டாமாயின் அதை யாம் மறுக்கோம். அதையவரே யடையட்டும். தாந்திரீகசைவரை மாயாவாதிகளென்று விகடதூதனில் பானுமூர்த்தி யெழுதியதற்குச் சுந்தரர்: பறையர் உவமான மொன்று கூறி, அது தமக்கே வருமென்றறியாது அகமகிழ்ந்து, பின் பானுமூர்த்திகொண்ட அர்த்தம் அனர்த்தமேயென்று உவமானவாயிலாகக் காட்டினம் என்கிருர். இந்தவுவமானம் மேற்காட்டிய நியாயங்களால் சுந்தரர்க்கே சித்தித்துவிட்டது. பறையன், தான் பறையனன்றென்று சொல்வது தகுதியன்று. அப்படியே மாயாவாதி, தான் மாயாவாதி அன்றெனக் கூறுவது தகுதியன்று. இப்போது மாயாவாதி யார்? மாயையை யுபாதான காரணமாகக்கொள்பவர். அவர்யார்? இவரேயாம். இதற்கு யாதும் ஐயமின்றென்க.

மாயாவாதிகளெனப் பெயர்தந்தவர் யாவர்?

அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப் பெயர்கொடுத்தவர் திருவருட் பெருஞ் செல்வராகிய மெய்கண்டதேவராதியர் என்கிருர். இது விந்தையினும் விந்தை! மெய்கண்டராதியோர் வாக்கு வேதமா? ஸ்மிருதியா? புராணமா? இன்னும் பதினன்குவித்தைகளில் எந்தப்பிரமாணத்தைச்சார்ந்தது? இப்படிப்பட்ட பிரமாணங்களி லொன்றேனுஞ் சேராத (இவர் பக்ஷத்தாரான) அம்மெய்கண்டராதியர் வாக்கை இவரும், அவர் சித்தாந்தத்தை மெய்யெனக் கொண்டு அவர் வழி நிற்போருமான இவர் நண்பரும் பிரமாணமாகக்கொள்வதி லாக்ஷேப மில்லையேனும் அச்சித்தாந்தத்துக்குத் தோஷங்கற்பிக்கும் பிரதிவாதிகள் ஒப்புவரோ? மெய்கண்டராதியோரும், இவரும், இவரினத்தாரும் சித்தாந்தசைவர். ஷ சித்தாந்தசைவர்க்குள் விவாதம் நேரிடின் அவர் வாக்கைப் பிரமாணமாகக்கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு ஒழுகவேண்டியது கடமைதான், மற்றவர்க்கு ஆகவேண்டுவதென்ன? வைணவர்க்குள் ஒருவரான மணவாளமகாமுனிகள் வாக்கை அவர்கள் பிரமாணமாகக் கொண்டொழுகுவாரேயன்றி இச்சித்தாந்த சைவர் பிரமாணமாகக்கொள்வரோ? மெய்கண்டராதியோர் வாக்கை வைணவர் பிரமாணமாகக் கொள்வரோ? கொள்வதானல் அந்தந்த மதஸ்தர் வாக்குகளையெல்லாம் வேதமுதலிய பதினன்கு வித்தைகளைப்போல் கொள்ளவேண்டுமே. அப்படிக்கொள்வதானல் வாதிப்பிரதிவாதிகள் சொல்லும் பிரமாணங்களையெல்லாம் சரியென்றங்கீகரிக்கவேண்டுமே. அப்படி யங்கீகரித்தால் கக்ஷியேது? வாதமேது? வாதியேது? பிரதிவாதியேது? பூர்வபக்ஷமேது? சித்தாந்தமேது? நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி வாதிப்பிரதிவாதிகளை விசாரிக்கும்போது வாதிகளாவது பிரதிவாதிகளாவது அன்னியரைக்கொண்டு சாக்ஷிகொடுக்கவேண்டுமேயன்றித் தம்மிற் சிலரைச் சாக்ஷிசொல்விக்கலாமோ? இந்தச்சாக்ஷிகளை நியாயாதிபதியொப்புவரோ? தம்மவரில் சாக்ஷிகொடுப்பது மிகப் பலவீனமன்றே? எதிர்க்கக்ஷியாளை ஜயிக்கப் பிரியாது கொண்டுவருபவர் தாமே சாக்ஷிசொல்வாரானல் எதிர்க்கட்சி தோல்வியடையவே சொல்வார் என்பதற்குச் சந்தேகமா? ஆதலால் சுந்தரர் சொல்லும் மெய்கண்டராதியோர் வாக்கு இவர்க்கும், இவர் இனத்தார்க்குஞ் செல்லுமேயன்றி எதிர்ப்பக்ஷத்தார்க்குச் செல்லாதென்றறியக்கடவர். சுந்தரர் தம்பக்ஷத்தாரான மெய்கண்டராதியோரைச் சாக்ஷியாகக்

கோருவதும், அவர் பிரமாணத்தை எதிர்க்கக்ஷியாரும் மெய்யெனக்கொள்ள வேண்டுமென்று விரும்புவதும், அவர் அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளென ப்பெயரிட்டார்களென்று சொல்வதும்,அதைக்கொண்டு அத்துவிதிகளை மாயா வாதிகளென்று இவரும் இவரினத்தாரும் அழைப்பதும் "கிழக்குமேற்கு அறியார், வழக்குப்பேசப்புகுந்தார்" என்பதற்கினமாமென்க. ஒரு பக்ஷத்தார் தங்கள் கக்ஷிக்குப்பலமாகத் தங்கள் குற்றத்தை மறைத்து எதிர்ப்பக்ஷத்தார் பேரில் இல்லாத குற்றத்தையுங் கற்பித்துச்சொல்வதுமுண்டே. அங்ஙனமே மெய்கண்டராதியோர் தம்கக்ஷிக்குப் பலமாகத் தம்குற்றத்தை மறைத்து இல் லாதகுற்றத்தைப் பிறர்பேரில் ஏற்றவுங் கூடுமே. அதை யொருபிரமாண மாகக்கொண்டு பிரதிவாதிகளை வெல்லப்பார்ப்பது நியாயஸ்தலத்தில், வாதி கள், தங்களைச் சார்ந்தவரையே சாக்ஷியாக எடுத்துக்கொண்டு நியாயாதிபதி தமபக்ஷமே தீர்ப்பளிப்பாரென நம்பி மோசம்போவது போலாம். சுந்தரர், தம்மவரைச்சார்ந்த மெய்கண்டராதியோர் கூற்றைப் பிரமாணமாகக்கொண்டு, தம்கட்சியைத் தாபித்துக்கொள்ளப் பார்ப்பாராயின், எதிர்க்கட்சியார், தம் பக்ஷத்தார் கூற்றைக்கொண்டு தம்சட்சியைத் தாபித்துக்கொள்ளப் பார்ப்பார் களே. அப்படித் தாபித்துக்கொள்ளப்பார்க்கின் சுந்தரர்கட்சிமாத்திரம் நிலைபெறுவ தெங்ஙனம்? அவ்வாறு எதிர்க்கட்சிக்காரர் இவர் கொள்கையை மறுக்கும் பிரமாணங்களாவன:—

தத்துவராயர்சூழ்வார்ப்பு.

வேதாகமங்கள்சொன்னபொருள்மெய்யேயறிவார்போன்றிருந்து
பேதாபேதஞ்சாதிக்கும்பெரும்பேய்தனக்கும்வாரீரே.

ஞானம்போலப்பலசொல்லிநாடற்கரியமுத்தியினும்
தானுஞ்சிவமும்பாசமுமாஞ்சைவப்பேய்க்கும்வாரீரே.

சிவஞானவள்ளலார் துவிதசைவனை மறுத்தல்.

ஒன்றாயுலகனைத்துமானுரென்றப்பமுனி
பொன்றாமொழியாற்புகன்றிருக்கக்—குன்றாத
முத்தியினும்முதலுமுண்டென்றுரைத்தலெவன்
பித்தமுறுஞ்சைவாநீபேசு.

ஓசையொலியெல்லாமானாய்நீயென்றபினர்ப்
பேசவிரண்டுண்டோபேய்ச்சைவா—ஆசையெல்லாம்
அற்றவிடமுத்திநிலையோவஃதெல்லாம்
உற்றவிடமுத்திநிலையோ.

ஷை அத்துவிதக் கலிவெண்பா.

ஈசன்வேறியான்வேறென்றெண்ணுகின்றபாதகரை
நீசரைக்கண்டுகினையென்று—ஞசையொடும்
வேதமுடிவறிந்தவேதியரைக்கூடென்றான்
பேதநிலையெல்லாம்பிரியென்றான்.

இந்தப் பிரமாணங்களை இவரங்கீகரிப்பாரா? அங்கீகரிக்கமாட்டாரெ னின், இவர் பக்ஷத்தார் கூறிய பிரமாணங்களைமாத்திரம் அத்துவிதிகள் எவ் வாறங்கீகரிப்பர்? அங்கீகரித்தால் இரண்டையும் அங்கீகரிக்கவேண்டும்; இல் லாவிடில் இரண்டையுந் தள்ளல்வேண்டும்.இவ்வளவு தெரியாத சுந்தரர், தாம் ஒரு கக்ஷியாராக வாதஞ்செய்ய வெளிப்பட்டு வந்தது அவர் பெருந்தகை மைக் கடாதென்க. நிற்க; அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப் பெயர் கொடுத்தவர் மெய்கண்டராதியோர் என்கிருரே; அதுதான் உண்மையோ?

உண்மையாயின், மெய்கண்டார் திருவாய்மலர்ந்தருளிய நூல்களில் எந்தவிடத்தில் அத்துவிதிகளுக்கு மாயாவாதிகளெனப் பெயரிட்டனர்? அதைச் சற்றுக் காட்டுவாராக. பிறகு, மெய்கண்டராதியோரைத் திருவருட் பெருஞ்செல்வர் என்கிறார். இவ்வாறே பிரதிவாதிகளும் தம் கக்ஷியாரை அவ்வாறே கூறுவார்களேயெனச் சற்றும் யோசித்தாரில்லை. பிரதிவாதிகள், அவ்வாறல்லரென்பாராயின் மெய்கண்டராதியோரையும் அவ்வாறல்லரென்பார்களே. இதனால் மெய்கண்டராதியோரை நாம் ஒன்றுங் குற்றங்கூறவில்லை. ஆனால் அவரது பெருமையைப் பிரதிவாதிகளிடத்தில் சொல்வதிற் பயனில்லையென்று மாத்திரஞ் சொல்லுகிறோம்.

வேதாகமங்களைப் பிரமாணமாகக்கோள்ளுதல்.

இச்சுந்தரர், "வேதாகமங்களைச் சத்பிரமாணமாகக் கொண்டவரன்றோ வைதிகசைவர். வேதத்தைமாத்திரம் உடன்பாடாகக்கொண்டு ஆகமத்தை நிந்திக்கும் அத்யாசவாதிகள் எங்ஙனம் வைதிகசைவ ராவார்?" என்கிறார். வேதாகமங்களைச்சத்பிரமாணமாகக்கொள்பவர் வேதாகமசைவ ராவரேயன்றி வைதிகசைவராவ தெங்ஙனம்? வைதிகசைவர், வைதிகசம்ஸ்காரம் பெற்று வைதிக அநுஷ்டானமுள்ளவராய் வேதப்பொருளான சிவனை வணங்குபவராம். இவரே வேதத்தைச் சத்பிரமாணமாகக்கொள்பவர். இவர் வேதத்துக்கு விரோதமில்வழி ஆகமம் பிரமாணமென்றும், அதுவும் வேதத்தைச் சார்ந்தே பிரமாணமென்றும், வேதாதிகாரமில்லாதவர் பொருட்டே ஆகமம் ஏற்பட்டதென்றும், வேதப்பிரமாணத்துக்கு ஆகமப்பிரமாணங் குறைந்ததென்றும், வேதமார்க்கத்தாலேயே முத்தியுண்டாமென்றுங் கூறுவர். இது ஆகமதூஷணை யன்று. வேதத்தைவிட ஆகமம் மேலென்று சொல்லிக் கொள்பவர், அவ்வாறல்லவென்பாரை ஆகமதூஷணைக்காரர் என்று சொல்வர். இதற்குத் தூரபிமானமும் அசூயையுமே காரணம், மற்றப்படியன்று.

வேதப்பிரமாணமே சிறந்ததென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

சூதசங்கிதை மோசகனை யுரைத்தது.

எல்லாப்பிரமாணங்களுக்குமியைமுக்கியமாம்பிரமாணம்
வல்லாருரைக்கும்வேதமேமற்றையதற்குத்தன்னாலும்
புல்லாநிற்கும்பிறவாலும்பொருந்துவாதைசற்றுமிலை
யல்லாப்பிரத்தியக்கமுதலானபிரமாணங்களுக்கு. (அ)

ஒழியாமாயையால்வாதையுண்டுமறைக்குவிரோதமுறா
மொழியார்தருநற்புராணங்கண்முற்றும்பிரமாணங்களே
கழியாமறைமூலமாகாக்கசட்டுநூல்கள்யாவுமிகு
பழியார்நூல்கள்பிரமாணப்படாதுபடிமுற்றளந்தோயே. (க)

பிரமகீதை சாந்தோக்கியவுபநிடதத்தி ஞறமத்தியாயம்.

சத்தியமாகிவேதமொன்றுமேயளவையாகும்
இத்தன்மைப்பொருளையெல்லாவுலகருமறியும்வண்ண
நித்தராமன்பரேத்துநிறைந்தமெய்க்கருணையீசன்
மெய்த்தருபொருளீதென்றேவிளம்பிடல்செய்யலுற்றான். (கக0)

திருவிளையாடற்புராணம்.

மறையேநமதுபீடிகையாமறையேநமதுபாதுகையா
மறையேநமதுவாகனமாமறையேநமதுநூபுரமா
மறையேநமதுகோவணமாமறையேநமதுவிழியாகு
மறையேநமதுமொழியாகுமறையேநமதுவடிவாகும்.

வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்விதிவிலக்காய்ப்
போதங்கொளுத்திநிலைநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்க்கும்
பேதஞ்செய்யும்பிணியவிழ்த்தெம்பிரியாவீடுதருவதுதே
ஞதஞ்செய்யுந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும்.

வைதிகத்தின் சிறப்பு.
திருவிளையாடல்புராணம்.

மறைவழிமதங்கட்கெல்லாமறைபிரமாணம்பின்சென்
றறைதருமிருதியெல்லாமவைக்கனுகுணமாமின்ன
முறையினுன்மார்த்தமென்றுமொழிவதம்மார்த்தஞ்சேர்ந்த
துறைகள்வைதிகமாமேலாச்சொல்வதிச்சுத்தமார்க்கம்.

தெருட்பெறுபோகவீடுகாரணமாய்ச்சிவமயமாமறைப்பொருளை
யிருட்கெடவுரைத்தேமிப்பொருட்கதிகமில்லையிப்பொருளெலாமுமக்கு
மருட்கெடத்தெளிவதாகெனவினையவழிவழாமாதவர்புறத்தை
யருட்கையாற்றடவியிலிங்கத்துட்புகுந்தானருள்பழுத்தன்னதேசிகனே.

ஆகமதருமத்தைவிட வைதிகதருமம் விசேடமேன்பதற்குப் பிரமாணம்:—
சூதசங்கிதை விசிட்டதருமவிசாரம்.

மற்றதிற்பிரமாகமமுனாதருமம்விசேடமாமாயனுகமஞ்சொ
னற்றருமந்தானதனினும்விசேடமதனினுநயச்சைவாகமஞ்சொல்
பொற்றருமந்தான்விசேடமாம்புகலீததசுரோதோபவமென்றும்
பற்றறுசீர்சாலூர்த்துவசுரோதோபவமென்றுமிருவகைப்படமோல். ()

முன்னதுகாபாலாதிபேதத்தான்மொழிபலவிதப்படமேதனிற்
பின்னதுகாமிகாதிபேதத்தாற்பேசிமிருபத்தெண்வகையாய்
மன்னிடுமீதுவிசேடமாமிதனின்வைதிகதருமமுத்தமமா
மன்னதிற்சாந்திதாந்திமுன்னுனவறைதருதருமமுத்தமமே. (கச)

வைதிகமார்க்கப் பிரவர்த்தியில்லாருக்கு ஆகமம்சோல்லப்பட்ட
தேன்பதற்குப்பிரமாணம்:—
சூதசங்கிதை சருவவேதாந்த சங்கிரகம்.

இத்தகுவைதிகமார்க்கப்பிரவர்த்தியில்லாருக்
கத்தனுரணத்தில்வன்னந்தருமமாச்சிரமநல
மொத்தபூசாதியெல்லாமுனாத்தபடியேபற்பல
சித்தநிலவாகமத்துஞ்செப்பியிருக்கின்றனனுல். (கஉ)

ஆகமவிதியை வைதிகர்தழுவவேண்டுவ தின்றேன்பதற்குப் பிரமாணம்:—

வேதவிதியாகமநல்விதியுடையோரனுசரிப்பா
ரோதமிலாகமவிதிவைதிகர்தழுவவேண்டுவதின்
ருதரவினிவையனைத்துமறிமினேவென்றுரைத்துச்
சூதமுனிவணங்குபுதன்றூயகுரவனைநினைத்தான். (உ௫)

வைதிகனுடைய பேருமையும் வைதிகன் சிவன்போல்
போற்றத்தக்கானேன்பதும்.

திங்களணிமாதேவற்கொப்பானதேவனுஞ்சீர்
பொங்குசிவஞானத்திற்கொத்தபொலிஞானமும்வண்
கங்கைநதிக்கொப்பானநதிசிலாமாநதியும்
பங்கமறுமைந்தெழுத்திற்கொப்பாகப்பகர்மனுவும். (உஉ)

வாரணவாசிக்குநிகர்மாநகருமினிதாய
சீரணவுமன்னத்திற்கொப்பாகச்செறியுணவு
மேரணவுதவத்திரெப்படியிலையோவப்படியே
பேரணவுவைதிகருக்கொப்பாவார்பேசினிலை. (௨௫)

உலகினுக்குவைதிகன்செங்கதிரோனையொத்தொளிர்வா
னலர்புகழ்மற்றவன்சிவன்போல்யாவரும்போற்றத்தக்கான்
மலமிலவன்மான்மியம்யான்சொல்லுதற்குவல்லேனோ
பலமறைகண்மிருதிபுராணாதிகளேபகருமால். (௨௪)

வேதமார்க்கத்தினிற்போநக்சேழத்தியுண்டேன்பதற்தப் பிரமாணம்:—

சூதசங்கிதை பிரமாணிய விசாரம்.

பொலியும் வேதங்கள் தருமசாத்திரங்கள் புராணங்கள் மறையினங்கங்கள்
மலிதரும்உபவேதங்கள் ஆகமங்கள் மற்றும் காபாலம் வாங்குலமே
நலிவுறு இவற்றின் பேதங்களினின்னு நாடு பாசுபதமே சோமம்
ஒலிபுகழ்மிக்கபயிரவமிவற்றினுடைச்சகத்திராதிபேதங்கள். (௨)

கருகிருணிறத்து மாயனாகமமே கமலம்வாழ்பிரமனாகமமே
அருகனாகமமே புத்தனாகமமே யறையுலோகாயுதநூலே
மருவுசாங்கியமே தருக்கசாத்திர மீமாம்சமேயிவைகளுமின்னு
மிருநிலத்துளபன்னூல்களுஞ்சுயமேயெம்பிரான் படைத்தனன்மாதோ.

அன்னவனருளால் மாலயனாதியமரரும் இயக்கர்சித்தர்களும்
நன்னயமருவுவித்யாதாரும் நாடிராக்கதமுனிவரரும் பன்னலநரரும்
தத்தம் ஞானத்தின் பண்பினுக்கநுகுணமாவம் முன்னவன்
வகுத்தநூல்களைவிரித்துஞ் சுருக்கியுமொழிந்தனர் பின்னர். (௪)

கறைகொள் புத்தாதிமார்க்கங்களும் தாங்கண்டிக்கப்படுவெனவல்ல
வறைதருக்கத்தாலொருவனோர்மார்க்கமனுட்டிக்கினவனம்மார்க்கத்திற்
குறையனுகுணமாவதிற்றிடமாகவுரைத்திடப்பட்ட நம்பரமன்
மறைவருமருளால்முறைமுறையுயர்ந்துமறைநலமார்க்கம்நன்கடைவான்

வேதமார்க்கத்தின் முக்கியமாக விளங்கிடப்பட்ட நஞ்சிவனே
தீதகன்முத்திகொடுப்பவன் கருமகாண்டத்திற் செப்பிடப்பட்ட
நாதனுஞ்சிவனன்ஞானத்திற்பத்திநல்குவான் ஞானகாண்டத்தி
லோதிடப்பட்டசிவன் ஞானமூலமாகவொண்முத்திகொடுப்பான். (௫)

மூத்திதானேகமாயிருப்பதனால் மூயல்பலமார்க்கங்களாலும்
சித்தியாதுயர்வேதாந்தநன்மார்க்கந்திகழ்நிராகாரமாயபேதம்
ஒத்தியல்சிவனையே சொலுமதனாலுரைத்த விம்மார்க்கத்தினாலுற்
பத்தியாஞானம் வித்தையாமென்பர் பத்திநூல்வழிச்செலீஇயுயர்ந்தோர்.

வேறுமார்க்கங்களா லெழுஞானம் வினைதவாவவித்தையே யென்று
கூறுவரறிந்தோர்மாதவப்பெரியீர்குறைந்த விம்மார்க்கங்களுக்குத்
தேறுபிரமாணிய மெனப்படுதல் திகழ்முத்திவிடயத்திலில்லை
மாறுறுவதனால் மறையந்தமார்க்கம் மற்றிம்மார்க்கஞ்செலல்பழுதே.(௬)

ஆரணமார்க்கமொன்றினாலேயுண்டாகிடும்புத்திமுத்திகளும்
பூரணசிவசொரூபத்தும் பந்தசொரூபத்தும் புகல்பிரபஞ்சகாரணத்துஞ்
சீர்க்கதிச்சொரூபத்துங்களா ஞானசொரூபத்தும் வேதச்
சீரணவந்தத்தினுக்கு மாறுகச்செப்பியதென்னெனிற் கேண்மின். (௭)

மந்தமார்புத்தியுடையராய் வல்லமாயையால் மூடிடப்பட்ட
பந்தராயினருக்கனுகுணமாகப் பகர்ந்ததல்லால் மறந்தேனும்
சந்தமார்ந்துயர்ந்த பரமார்த்தமாகச் சாற்றினதில்லையாலுணர்வீர்
கந்தநாண்மலர்ப்பூங்கருங்குழல்பாகக்கடவுடாள்கருதுமுள்ளகத்தீர் (டுக)

கூர்மபுராணம் திருக்கலியாணம்.

அருமாமறைகண் முழுவதுமென் சத்தியாகுமாங்கவைகள்
திருமாலுந்தித்தடம்பூத்த செல்வன்முன்னைப்படைப்பதனில்
ஒருநான்மறையாம் பெயரோடு டைக்குமன்னூல்வழியொழுகார்
மருவார்முத்திவீடதனின் மம்மருறுநால்வலைப்பட்டே. (கூகூ)

வேதவொழுக்கமிகழ்ந்து புல்லர்விரகின்றம்போற்றனிபுனையுந்
தீதுநூலின் வழிசென்றோர்செல்வர்நரகர்க்கதிதிகளாய்
ஆதறன்னுற்புன்சமயங்கற்றோர்முகத்தினருமறைகள்
ஓதியுணர்ந்தமுதுக்குறைவினுரவோர்சிறிதுநோக்காரால். (சுய)

சாறுவாங்கம்காபாலஞ்சாற்றும்பாஞ்சராத்திரநூல்
மாறுசெய்யும்வாமமுளமயக்கச்செய்தநூலாகும்
தேறியிந்நூற்படிநின்றோரிவற்றையுலகிற்செப்புவோர்
பாறுதுடருநரகத்தினளப்பில்காலம்படிந்திடுவார். (சுக)

வேதநூல்களவற்றின்வழிவிராட்டாஞ்சுவாயம்பூமனுமன்
ஓதுநூல்கள்வியாதமுனியுரைத்தநூல்களவற்றின்வழி
தீதிலருமாமறைக்கிழவர்செப்புநூல்களனைத்துமே
நீதிநூல்களிவற்றின்வழிநின்றோர்நெறியினின்றோரே. (சுஉ)

இதனுல் இதரமார்க்கத்தில் முத்தியில்லையென்றும் வேதாந்தமார்க்கத்தினுலேயே முத்தியுண்டாமென்றும் அறிகின்றோம். இதரநூல்கள் முத்திவிஷயத்தில் பிரமாணமாகா; வேதாந்தத்துக்குச் சாதனமான விஷயங்களில் பிரமாணமாம். இந்தப்படி அத்துவிதிகள் பேசுகின்றூர்கள். அவர்கள் பேரில் குற்றமில்லை.

எதுபோது? எதுசிறப்பு?

இவர் வேதத்தைப்பொது என்கிருர். வேதத்தைப் பொது என்றும் ஆகமத்தைச் சிறப்பென்றுஞ் சொல்வது இவரது கொள்கையும் இவரது இனத்தார் கொள்கையுமாம். இதைச் சிறிதாராய்வாம். எது பொதுவோ அது பொதுவாகவே யிருக்கவேண்டும்; சிறப்பாகப்படாது. எது சிறப்போ அது சிறப்பாகவே யிருக்கவேண்டும், பொதுவாகப்படாது. வேதம் பொதுவென்பதுண்மையாயின் பொதுவில் யாவருமே பிரமாணமாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்வதில்லை. பௌத்தர், சமணர், பாரஸீகர், மகம்மதியர், கிறிஸ்தவர், யூதர் முதலியவர் வேதத்தைப் பிரமாணமாகக் கொள்வதில்லை. உலகிலுள்ள 150 கோடிஜனங்களில் வேதப்பிரமாணத்தார் 17 கோடிஜனங்கள்தான். இவர்கள் தவிர மற்றவர் அங்கீகரியாமை மாத்திரமல்ல; வெறுத்திகழ்தலுஞ் செய்கின்றூர்கள். ஆதலால் வேதம் ஆரியர்களுக்குமாத்திரஞ் சிறப்பாயிருக்கின்றது. அந்த ஆரியர்களுக்கு மாத்திரமாவது சிறப்பா யிருக்கின்றதாவென்று பார்க்கின் அப்படியுமில்லை. அவருள்ளும் அந்தணர்க்குமாத்திரஞ் சிறப்பாயிருக்கின்றது. அந்த அந்தணர்க்குமாத்திரஞ் சிறப்பாயிருப்பதால் சிறப்பென்றே சொல்லலாமெனின், அவ்வாறுஞ் சொல்லக்கூடவில்லை. ஏனெனில் அதுவே பொதுவுஞ் சிறப்புமாயிருக்கின்றது. பூர்வகாண்டம் உத்தரகாண்ட

மென வேதமிருபகுதியாகி, அவற்றில் உத்தரகாண்டஞ் சிறப்பாயிருக்கின்றது. அவ்வுத்தரகாண்டத்திலும் பொது சிறப் பிருக்கின்றன. அதாவது சிரவண மனன நிதித்தியாசன சமாதி சாக்ஷாத்காரமாம். அவற்றுள் சாக்ஷாத்காரமே சிறப்பானது. அந்தச் சாக்ஷாத்காரத்திலும் வித்து, வரன், வரியான், வரிட்டன் என நான்குநிலைமை யிருக்கின்றது. அந்நான்கு ஞானநிலைமையிலும் வரிட்டநிலைமையே சிறப்பானது. இவ்வகையாகமாத்திரமன்று; இன்னும் வேறு பலவகையாகவும் பொது சிறப்புச் சொல்லலாம். ஆதலால் வேதம் பொதுவென்றுரைத்தல் தகுதியன்று.

இனி ஆகமம் சிறப்பென்பதைப்பற்றிப் பேசுவோம். ஆகமத்தில் சைவாகமம், வைஷ்ணவாகமம், சாத்தேயஆகமம், இரணியகருப்பஆகமமுதலிய பல ஆகமங்க ளுள்ளன. அவற்றுள் யாவுஞ் சிறப்பாமா? ஒவ்வொரு ஆகமத்தினரும் மற்ற ஆகமங்கள் பொதுவென்றும் தமதாகமமாத்திரஞ் சிறப்பென்றுங் கூறுகின்றார்கள். அவற்றுள் பொதுஎது? சிறப்பெது? சைவாகமஸ்தர் சொல்லுகிறபடி சிவாகமமே சிறப்பென்று வைத்துக்கொள்வோம். அதிலும் பொதுச் சிறப்பில்லாமற் போகவில்லை. சைவாகமத்தில் வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவ மென அறுவித பேதமுண்டு. அவற்றில் சைவமே சிறப்புடையதென ஆறுசைவருளொருவரான சைவர் கூறுகின்றனர். இந்தச் சைவர்க்குரிய ஆகமங்கள் காமிகாதி 28 ஆகமங்களாம். அவற்றுள் வீரசைவாகமு முள்ளது. அதை இந்தச்சைவர்கள் சாமானியமென்று கொள்ளுகின்றார்கள். அதுபோக மற்றைய ஆகமங்களைச் சிறப்பாகக் கொள்வோம் எனின், அந்த ஆகமங்களிலும் சரியை, கிரியை, யோகம், ஞானமென நான்கு பாதங்களுள்ளன. அவைகளில் ஞானமே சிறப்புடையது. அந்த ஞானமும் பரஞானம் அபரஞானமென இருவகைத்தாம். அவைகளில் பரஞானமே சிறப்புடையது. மற்றொருவகையாகச் சிரவணாதிகளுங் கூறலாம். இவ்வாறு ஆகமங்களிலும் பொதுவும் சிறப்பும் இருக்கின்றன. எது பொதுவோ அது மற்றொன்றினுக்குச் சிறப்பாகவிருக்கின்றது. எது சிறப்போ அது மற்றொன்றினுக்குப் பொதுவாயிருக்கின்றது. இந்த நியாயப்படி வேதத்திலும் பொது சிறப்பிருக்கின்றன; ஆகமத்திலும் பொது சிறப்பிருக்கின்றன.

சில நூல்களில் ஆகமம் சிறப்பென்று கூறுகின்றதேயெனின், அதில் பற்றுண்டாவதற் கவ்வாறுகூறும். ஒவ்வொரு தலபுராணமும் தான்தானே சிறப்பென்று கூறுவதுபோலாம். அந்தத் தலத்தில் பக்தி சிரத்தை யுண்டாவதற்கு அததுவே சிறப்பென்றுகூறினும் எல்லாவற்றையுமாராய்ந்து பார்த்து, உத்தமமான தலம் இன்னதென்று கணிக்கின்றார்கள், அத்துடனே தாரதம்மியமுஞ் செய்கின்றார்கள். சிறப்பல்லாததைச் சிறப்பென்றுசொல்வது பொய்யல்ல; அருத்தவாதமாம். ஒவ்வொரு தலபுராணமும் தான்தானே சிறப்பென்று கூறினும் அவை யாவும் சிறப்பாகாமல் அவற்றுள் சிறப்பாயிருக்கு மொன்று மாத்திரம் எப்படிச் சிறப்பாமோ அப்படியே வேதமும் பற்பல ஆகமங்களும் அதது சிறப்பென்றுகூறினும் அதது சிறப்பாகாமல் வேதமொன்றே சிறப்புடையதாம். அவரவர் தம்தம் ஆகமங்களைச் சிறப்பாகக்கொண்டு நம்பி வழிபடலாம். அதனால்பயனுண்டு. ஆனால் அதைக்கொண்டு வேதத்தோடு எதிர்த்துப் போர்செய்யப்போவது தகுதியன்று. இது தீட்டினமரத்தில் கூர்பார்ப்பதுபோலாம். வேதம், தானே சுதந்தரப்பிரமாணம்; ஆகமங்கள் வேதத்தைச் சார்ந்தே பிரமாணங்களாம்; தாமே சுதந்தரப் பிரமாணங்களல்ல. எங்கே யெங்கேவேதவிரோதங் காணப்படுகின்றதோ அங்கே அங்கே அப்பிரமாணமாம். அப்பிரமாணமாயினும் அது வேறோ ரதிகாரிகளுக் குபகாரமாம். அவ்வாறு ஆகமத்துக்கு வேதம் விரோதப்படின் வேதம் அப்பிரமாணமென்றல் பொருந்

தாது. பல ஆகமஸ்தர்க்குள் விவாதம் நேரிட்டு முரண்பட்டவிடத்து வேதத்தைக்கொண்டே தங்கள் முரணைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒருவர் ஆகமத்தை மற்றொருவர் தமக்குப் பிரமாணமாகக் கொள்ளார். அவ்வாறு வேதத்தைச் சொல்லமாட்டார்கள். சொல்வார்களேல் பௌத்தர் பாரஸீகர் கிறிஸ்தவர் மகம்மதீயர் முதலியவரைப்போல் வேதபாஹியராய்ப்போவார்கள். ஆகமத்தை யொத்துக்கொள்ளாமையால் ஆகமபாஹியராய்ப் போவாரேயெனின் அதற்காக எவருஞ்சிந்தைகொள்ளார். இதனால் ஆகமஞ் சிறப்பல்லவென்றேற்படுகின்றது. பின்னர் வேதத்தை விபசாரநூலெனத் தாம்கொள்ளவில்லையென்கிறார். ம-ா-ா-ஸ்ரீ சோமசுந்தரநாயகர் முதலியோர் கட்சியினின்றும் இவ்விஷயத்தில் இவர் வேறுபட்டிருப்பது சந்தோஷிக்கத்தக்கதே. இது விஷயமாக அவர்களைவிடச் சுந்தரர் புத்திமான்தான்.

பிள்ளையார்சுழிமுதலியன.

பிள்ளையார்சுழி, சிவமயம், திருச்சிற்றம்பல முதலியவைகளைப்பற்றி நந்தன ௵ புரட்டாசி ௴ சுவ வெளியான கடு-வது ப்ரம்மவித்தியாவின் அநுபந்தத்திற்கண்டு, அதன் பொருளையுணர்ந்து, அவை அத்துவிதிகளுக்கே யுரிமையாமென்றதைத் தெரிந்துகொள்வாராக.

மாயையென்பதன்பொருள்.

மாயையென்பதற்கு மாணிக்கவாசக சுவாமிகள் கொண்டபொருள் அத்துவிதிகள் கொண்டதுபோலன்று; சுந்தரரது பக்ஷத்தார் கொண்டதுபோலென்றுகூறி, ஞானாமிர்தத்தில் காணும்படி சொல்லுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் கொண்டபொருளிவர் சித்தாந்தப்படி யென்பதற்கு ஆதாரங்காண்பிப்பாரானால் அவ்வாறல்ல வென்பதற்கும் அத்துவிதிகள் கொண்ட பொருளே யென்பதற்கும் அம்மாணிக்கவாசக சுவாமிகள் வாக்கைக்கொண்டே ருசுப்படுத்துகிறோம்.

முடிவில் நாயகர் பலசமாதானம் எழுதியிருக்கின்றனரெனக்கூறி, அவற்றைத் திரும்ப எழுதிப் பத்திரிகையை நிரப்புவது அநாவசியகமென்கிறார். அந்நாயகர்க் கவ்வப்போது மறுப்பு இப்பத்திரிகையிலேயே பிரபலமாய் வந்துகொண்டே யிருப்பதால் அதுவிஷயமாகப் பின்னும் பின்னும் நாம் எழுதிப் பத்திரிகையை நிரப்புவது அநாவசியகத்தினும் அநாவசியகமெனக் கருதி நிறுத்துகின்றோம்.

(நந்தன ௵ ஐப்பசி ௴ சுவ ப்ரம்மவித்யா.)

மாயாவாதத்திமிரபாஸ்கரன்.

உமாபதி சிவாசாரியார், தாமியற்றிய சங்கற்ப நிராகரணத்தில் ஏகான்மவாதத்தை (அத்துவிதத்தை) மறுத்து அவற்றிற்கு மாயாவாத சங்கற்ப நிராகரணப் பெயர் சூட்டியிருக்க, அத்துவிதிகள், தாங்கள் மாயாவாதிகளன்றெனச் சொல்லி ஜாடையாய் நழுவுவது அடாது அடாது என்று சுந்தரர் கூறியிருப்பதை நோக்கின், சுந்தரர், உண்மையில் 'கிழக்கு மேற்கு அறியார், வழக்குப்பேசப்புகுந்தார்' என்பார்க்கினமாம் என்பதற்கு யாதும் ஐயமின்றெனக. இதுவிஷயமாகப் பதினேழாவது பத்திரிகையிலேயே சமாதானங் கூறினேம். இதிலும் சிலகூறுவாம். உமாபதி சிவாசாரியார் வைதிகசிவாத்துவிதிகளான தில்லைதீக்ஷதரி லொருவராயிருந்து தமது பூர்வகர்மபலத்தால் மாயாவாத தாந்திரீக சைவ துவிதிகளுடைய போதனையால் அம்மதத்திற் சென்று,

அதுகாரணமாகத் தில்லை தீக்ஷதரினின்றும் வேறுபட்டு, பிறகு கொற்றங்குடி
யே தமக்கிடமாகப்பெற்று, துவிதமதமே தமது சித்தாந்தமாகக் கொண்டிருந்
தார். அவர் பாடியதாகச் சொல்லுங் கொடிக்கவியே இதற்குச் சான்றாம்.
அவரை நீக்கித் தில்லைவாழந்தணர் செய்த துவஜாரோகணம் நிறைவேறாதது
பற்றி யல்லவோ தாம் கொடிக்கவி பாடும்படி நேர்ந்தது? இந்தச் சரித்திரம்
பூர்வபக்ஷிகள் சொல்வது. இயல்பான மதத்தவரினும் நவீனமதம் புகுந்தவர்
க்கு முன்னிருந்த மதத்தில் துவேஷம் அதிகரித்திருப்பது வழக்கம். அப்படி
யே உமாபதிசிவாசாரியர்க்குத் தில்லைதீக்ஷதரிடத்தும் அவர்மதத்தினிடத்தும்
துவேஷம் அதிகமாய், அதை நிறைவேற்றக் கண்டகண்டவாறு தூஷித்து
நூல் எழுதிவிட்டார். அவரது நூலினாலேயே அவர் அத்துவித சித்தாந்தத்
தை யுணராதவரென்று காட்டுகின்றது. அப்படிப்பட்ட நூலைக்கொண்டே
இப்போதுள்ள சித்தாந்த சைவரும் சுய ஆராய்ச்சியின்றி அத்துவிதிகளை யிக
ழ்ந்து வருகின்றார்கள். சுந்தரர், தம்மினத்தார் கூறுவதைச் சொன்னால், அத்
துவிதிகள், தம்மினத்தார் கூறியதைச் சொல்லுகிறார்கள். இதிற் பயனெ
ன்ன? உமாபதி சிவாசாரியார்வாக்கு இவருக்கும், இவர்போன்றாருக்கும் குரு
வாக்கியமா யிருக்கலாம். மற்றவர்க்குக் குருவாக்கியமா யிருக்கவேண்டிய
அவசியமின்றே. நமக்கு உமாபதிசிவமும், இவரும் பூர்வபக்ஷ கட்சியிற்
சேர்ந்தவர். நமது மறுப்பு அவர்க்கும் இவர்க்குமேயாம். அங்ஙனமாக வுமா
பதி சிவாசாரியார் சொல்லிவிட்டாரென்றும், அவர் மாயாவாதிகளென அத்து
விதிகளுக்குப் பெயரிட்டாரென்றும், அத்துவிதிகள் அதைமறுத்து ஜாடை
யாய் நழுவுகின்றார்களென்றும் சுந்தரர் கூறுவது எவ்வளவு தெரியாமையைக்
காட்டுகின்றது பாருங்கள் ! இப்படிப்பட்டவரெல்லாம் வாதஞ் செய்யவரின்
வாதமுறைப்படி யெப்படி வாதஞ் செய்யக்கூடும் ? ஒருமதவாதி சொல்வதை
மற்றொரு மதவாதி ஒத்துக்கொள்ளாவிடில் ஜாடையாய் நழுவுவதாய்ச் சொ
ல்லலாமோ ? சொல்லலாமென்னின் அத்துவிதிகள் சொல்லுவதை இச்சித்
தாந்த சைவர் ஒத்துக்கொள்ளவில்லையே. அதனால் சித்தாந்த சைவர் ஜாடை
யாய் நழுவுவதாய்க் கூறலாமோ? ஒருவர் சொல்வதை மற்றொருவர் அங்கீகரி
யாமலிருப்பது எல்லாமதத்தவருக்கும் பொதுவாயிருக்க, இதில் தமது பக்ஷ
த்துக்குமாத்திரம் ஏதோ நியாயமிருப்பதுபோலவும் பிறருக்கு மாத்திரம் அப்
படிப்பட்ட நியாய மில்லாததுபோலவும் காட்டி யெழுதுவது சுந்தரர்க்கு எம்
மாத்திரமும் சுந்தரமன்று. தாம் சொல்லக்கருதிய சொல்லை மற்றொருசொல்
வெல்லாமையை முன்னறிந்து சொல்லல்வேண்டும். அதுபற்றியே “சொல்
லுகசொல்லைப் பிறிதோர்சொலச்சொல்லை வெல்லுஞ் சொலின்மையறிந்து”
எனச் செந்நாப்போதாருங் கூறியுள்ளார். பிரதிவாதிகளுக்குமுரித்தானதைத்
தமக்குமாத்திர முரித்தாகக்காட்டியது பற்றியே “கிழக்கு மேற்கு அறியார்,
வழக்குப்பேசப் புகுந்தார்” என்னும் பழமொழியை அடிக்கடி இவர்க்குப்
பிரயோகிக்கின்றாம்.

இதன்மேல் மற்றொன்று எழுதுகிறார். அது வருமாறு:—‘‘உமாபதிசிவம்
“அருளிய சிவப்பிரகாசத்தில் உலகுக்கு உபாதானம் இறைவனென்றெழுந்த
‘‘மாயாவாதியை (அத்வைதியை) மறுத்த அவசரத்தில் எழுந்த திருச்செய்யு
‘‘ளின் கருத்தைக் காவைத்தம்பிரான் கூறியபோது “உலகம் பிரமத்தொடுங்
‘‘கிடு மென்னுங் கலதி தன்மொழியைக் கட்டுரைத்தது” என்றனர். இந்தச்
‘‘சந்தர்ப்பத்தை விசாரிக்கின் பாநுமூர்த்தி யெடுத்துக்காட்டிய சூதசம்மிதைச்
‘‘செய்யுளுக்கு உரை நன்கு விளங்கும்.” என்பதேயாம். சுந்தரர்க்கும் இவரி
னத்தார்க்கும் அகப்படும் பிரமாணங்களெல்லாம் இவரினத்தார் சொன்ன
வையேயன்றி, வாதிப்பிரதிவாதிகள் அங்கீகரிக்கத்தக்க பதினான்கு வித்தை

களில் ஏதுமல்ல. அந்த வித்தைகளில் இவர் கொள்கைக்கு ஏதும் பிரமாணம் அகப்படாதுபோலும். தம் கொள்கையைச் சாதிப்பார் பேசுவது இப்படித்தானோ! அந்தச்சந்தர்ப்பத்தை விசாரித்தால் சூதஸம்மிதைக்கு உரை நன்குவிளங்கும் என்றாரேயன்றி, நன்கு விளங்குகின்றதை யெடுத்துச் சொன்னாரில்லை. அதைச்சொன்னால் ஜனப்பன்வீட்டுக்கோழி தானே அகப்பட்டுக்கொண்டதுபோல் அகப்பட்டுக்கொள்வாரென்பதற் கையமில்லை. 'நன்குவிளங்கும்' என்று சொல்லிவிட்டதினால் தம் சித்தாந்தம் உறுதிப்பட்டுப்போமா? பானுமூர்த்தியு மிங்ஙனஞ்சொன்னாரென வைத்துக்கொள்வோம். இருபாலாரு மிவ்வாறு சொல்லிவிட்டால் ஆவதென்ன? இதில் தோல்வித்தானமெது? வெற்றித்தானமெது? இப்போது ஜாடையாய் நழுவுவது யார்? இவர் ஜாடையாய் நழுவாதவராயின் அதனுரையை யெடுத்துச்சொல்லலாமே. சொல்லாமல் நழுவவிட்டவர் இவராயிருக்க அவ்வாறு நழுவாத பிறரை நழுவினதாகச் சொல்வதென்னையோ? இவர் சூதசம்மிதைக்கு உரை நன்கு விளக்குவாராயின் இவர்பக்ஷத்துக்கு அணுத்துணையும் அநுகூலமின்று; முற்றும் பிரதிகூலமேயாம். சூதசம்மிதைக்கு இவர் ஒரு உரை நாம் ஒரு உரைசெய்ய அது இடந்தருவதன்று. அது சொல்வதெல்லாம் அத்வைதமே. அதிலும் இவரது துவித சித்தாந்தத்தை யாங்காங்குப் பலவிடங்களிலும் மறுத்து அத்வைதசித்தாந்தஞ்செய்கின்றது. ஆதலால்தான் அதனுரையை எடுத்துச்சொல்லாமல் 'நன்கு விளங்கும்' எனச் சொல்லிச் சாடையாய் நழுவவிட்டார். இந்நழுவுதல் இவர்க்குப் பொருத்தமாமேயன்றி மற்றவர்க்காகாதென்றறிக.

"பெருமானுட னிரண்டறக் கலந்த ஞானிகட்கு உலகந் தோன்றாதிருப்பது உண்மைதான். அங்ஙனந் தோன்றாதது கொண்டு உலகம் இல்லாமற் போய்விடுமோ" என்றுகூறி, தமக்குமாத்திரம் மிகப் பெரிய ஆதாரம்போலத் திருமந்திரநூலையெண்ணி, அதனுண்மையை யுணராமலும் முன்பின் அறியாமலும் அத்வைதசித்தாந்தத்தின் பொருளை யுணராமலும் "பதியினைப்போலப் பசுபாசமநாதி என்ற திருமந்திரத்தின் பொருள் என்னை?" எனத் தமக்குத் தாமே ஒரு கேள்வி கேட்டு, அதைவிசாரித்ததில் தமது பக்ஷத்துக்குத்தான் பல மிருப்பது போலவும் அத்துவிதிகளுக்குப் பல மில்லாதது போலவுங் கருதி, இத்துடனே அத்துவிதிகளைச் செயித்து விட்டதாக விஸ்ராந்தி யடைந்து "விசாரித்தடங்குவாராக" என்றுங் கூறிவிட்டார். இதில் பெருமானுடன் ஞானிகளிரண்டறக் கலத்தலென்பதொன்று வரைந்தனரன்றோ? கலத்தலென்பது எப்படி? பொருளும் பொருளும் கூடியிருப்பதுபோலா? பொருளும் குணமும் அல்லது தொழிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதுபோலா? பொருளும் பொருளும் கூடியிருப்பதுபோலென்னின் இரண்டு பொருள் கூடியிருக்குமானால் இரண்டு இரண்டாக விருக்குமேயன்றி யிரண்டறாது. இரண்டு கல்லை யொன்றாகச்சேர்த்தால் இரண்டு இரண்டாக விருக்குமேயன்றி யிரண்டறாது. அவ்வாறே சிவமும் ஆன்மாவுங் கூடுமானால் இரண்டுஇரண்டாகவிருக்குமேயன்றி யிரண்டறாது. இரண்டற்றதென்றே வைத்துக்கொள்வோம். இரண்டற்றதென்றால் அதன்பேரி லெத்தனையாகிறது? ஒன்றாகின்றதா? மூன்று நான்குமுதலியன வாகின்றனவா? ஒன்றானாலும் சரி, மூன்று நான்கு முதலியனவாகின்றன வென்றாலும்சரி, இரண்டுகெட்டே யாகவேண்டும். இரண்டில் சிவம் ஒரு பொருள்; ஆன்மா ஒரு பொருள். சிவமும் ஆன்மாவுங் கெட்டு ஒன்று அல்லது மூன்று நான்கு முதலிய பொருள்களாகவேண்டும். ஆன்மா கெட்டாலுங் கெடட்டும். சிவத்துக்குக் கெடுதி சொல்லலாமா? சிவம் கெட்டுப்போனதாக வைத்துக்கொண்டால் அதுகெட்டு எப்படியாயிற்று? அப்போ ததன்பேரென்ன? அரும்புகெட்டுப் பூவாய், பூக்கெட்டுப் பிஞ்

சாய், பிஞ்சுகெட்டுக் காயாய், காய்கெட்டுப் பழமாய், பழங்கெட்டுப் பல விகாரமாய், அதுவுங்கெட்டு வேறுபலதன்மையாய் ஆவதுபோல் சிவங்கெட்டு எதுவாயிற்று? அதுகெட்டு எதுவாயிற்று? அதுவுங்கெட்டு எதுவாயிற்று? இதுவரையில் எண்ணிக்கையிலடங்கா அத்தனைகோடி பிரமகற்பங்களானமையின் ஒரு பிரமகற்பத்துக்கு ஒருவிகாரமடைந்தாலும் எத்தனைகோடி விகாரமடைந் திருக்கவேண்டியது? சிவம் இப்போது எந்தவிதமான விகாரத்தோடிருக்கிறது ? இனிக் காலாந்தரத்தில் எப்படிப்பட்ட விகாரங்களையடையுட? இரண்டு பொருள்கள் கெடுதலடைந்து ஒன்று அல்லது மூன்று நான்கு முதலிய பொருள்களாங்கால் அவை கண்டப்பொருள்களாகவே யிருக்கவேண்டும். ஏனெனின் இரண்டு என்கிற வரம்பு ஏற்படும்போது இரண்டில்லாத இடமிருந்தாலன்றி வரம்பு ஏற்படாது. இரண்டில்லாத இட மேற்படும்போது ஷை சிவம் ஆன்மாவாகிய இருபொருள்களும் கண்டப்பொருள்களாய் விடும். ஒருபொருள் பரிபூரணமானால் மற்றொரு பொருளிருக்க விடமின்மையான் அகண்டமான சிவத்தினிடத்து அகண்டமான ஆன்மா இருத்தலும், அவைகளெல்லாங் கெடுதலடைந்து ஒன்று அல்லது மூன்று நான்கு முதலியனவாதலும் கூடா. கூடுமென்று வைத்துக்கொள்ளினும பின்னும் பெரும் அனர்த்தத்திற் கிடமாகின்றது. அதைக்கூறுவாம். இன்று ஒரு ஆன்மாவானது சிவத்தோடு இரண்டறக்கலந்து ஒன்றாகவோ மூன்று நான்கு முதலியனவாகவோ ஆயிற்றென வைத்துக்கொள்வோம். இரண்டறக் கலக்கும்போது இரண்டென்னும் தன்மைகெட்டுவிட்டது. ஷை இரண்டில் சிவமு மொருளானமையின் அது தனதியற்கைத்தன்மை கெட்டது. நாளை மற்றொரு ஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்தது. அப்போதும் ஒரு முறை சிவத்துக்கு அப்போதுள்ள தன்மைகெடும், நாளைமறுநாள் ஒரு ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்தது. அப்போதும் சிவத்துக்கு அப்போதுள்ள தன்மைகெடும். இவ்வாறு ஆன்மாக்கள் முத்தியடையும்போதெல்லாம் சிவத்துக்குச் சிவத்தன்மை கெட்டுக்கொண்டேவரும். ஆன்மாக்க ளித்தனை கோடியென அளவிட முடியாது. சமுத்திரத்தின் மணலை யெண்ணினாலும் எண்ணலாம்; சமுத்திரமுதலிய ஜலம் இத்தனைத் துளியெனறெண ணினாலும் யெண்ணலாம். ஆன்மாக்க ளித்தனையென்றெண்ண எவரானுமாகாது. அவ்வளவு ஆன்மாக்களும் முத்தியடைந்தே தீரும். முத்தியடையும் அந்தக்காலம் வரையில் சிவமானது காத்திருநது கெடுதலடைந்து இரண்டறக் கலக்கவேணடும் இரண்டறக் கலத்தலென்பதில் இரண்டற்றால் ஒன்றேயாமன்றி மூன்று நான்கு முதலியனவாதல் தமது சித்தாந்த மன்றென்பாராயின் ஷை ஆக்ஷேபத்தில் ஒன்றுதலும் குற்றமென்று காண்பித்திருப்பதால் ஒன்றுதலென்பதற்கேனும் சமாதானஞ் சொல்லவேண்டியது அவர்பாரமேயாம்.

இனி "இரண்டறுதலென்பதும், ஒன்றுதலென்பதும் உபசாரம், இரண்டுபொருளிருத்தல்தானுண்மை" என்பாராயின் அப்போது சிவம் ஒருபொருள், ஆன்மா வொருபொருள் ஆக விருபொருள்கள் இருக்க நேர்ந்து, ஒன்றிருந்த விடத்தில் மற்றொன் றில்லையென்றதற் கிடனாகி, சிவமும் கண்டப்பொருள், ஆன்மாவு கண்டப்பொரு ளாதல்வேண்டும். இனி மற்றொருவிதமாய்ப் பார்ப்போம். அகண்டபரிபூரணமான சிவம் கண்டப்பட்டு, தானென்றும் ஆன்மத்தொகுதியொன்றுமாய் இரண்டுபட்டு முத்தியிலேகமாகின்றதென்னின் இங்ஙனங் கூறுவதனால் வேறு பல குற்றங்கள் நிகழும். சிவம் பல பொருள்களானால் சிவமும் கண்டப்பொருளாகும்; ஆன்மாவுங் கண்டப்பொருளாகும். ஒரு பொருள் பலபொருள்களாகிறதானால அது கண்டப்பொருளாகுமேயன்றி அகண்டபரிபூரணப்பொருளாகாது. கண்டமான கழி யொன்

றையெடுத்துப் பலவாகச்செய்யலாமேயன்றி அகண்டபரிபூரணமான ஆகாய த்தைப் பலவாய்க் கண்டப்படுத்தக்கூடுமோ? மேல் மூடியிட்டதும் நீர் நிறைந்ததுமான ஓர் புட்டியிலிருக்கும் நீர் அந்தப்புட்டிக்குள்ளாகப் பலவாய்ப் பிரியுமா? பிரிகிறதற்குத் தானில்லா இடம்வேண்டுமே. பிரிகிறதற்கே யிடமில்லாதபோது பிரிந்து கூடுமென்று கூறுத லெங்ஙனம்பொருந்தும்? ஆதலால் சிவம், ஆன்மாக்களாகப் பிரியுமென்பதும் பெயர்த்தும் ஒன்ருகுமென்பதும், யுக்தி அநுபவவிரோதமாம். பிரிந்து கூடுமென்பதில் இன்னும் ஒரு குற்றமுளது. சிவமானதுஆன்மாக்களாகுமானுல் ஆன்மாக்களெல்லாமசிவமேயாமென்று சொல்லுதற்கிடனுகி, ஆன்மாக்கள், சஞ்சித ஆகாமிய பிராரத்த வசப்பட்டு எழுவகைத்தோற்றத்திற் பிறந்து இறந்து அநுபவிக்கும் சுகம் துக்கம் சுவர்க்கம் நரகமாதிகளெல்லாம் சிவம் அநுபவிப்பதாகவே சொல்லவரும். இப்படிப்பட்ட கருமங்களை அநுபவித்தற்குப் பூர்வம், சிவத்துக்குக் கர்மம் இருந்திருக்கவேண்டும். சிவம் ஆன்மாக்களாவதற்குமுன் கருமமிருந்ததாய்க் கூறவொண்ணுது. சிவமோ நிர்க்குண, நிரவயவ, நிர்ச்சல, நிர்மல, நிஷ்கிரிய, நிராகார, நிராமய, நிராதார, நிர்விசேஷ, நிர்த்தொந்த, நித்தியமுக்த, நிர்விகார, நிரஞ்சன, நிஷ்கள, நிராலம்ப, நிஷ்பிரபஞ்சப் பொருள். அப்படிப்பட்ட பொருள், காம வெகுளி மயக்க வசப்பட்டுச்சர அசரங்களாகப் பிறந்து, புண்ணிய பாவங்கள் செய்து, சுவர்க்க நரகங்களையடைவது நியாயமாகுமா? பொருளும் பொருளுமென்று கூறுவதில் இவ்வளவு ஆக்ஷேபங்களிருக்கின்றமையால் பொருளும் குணமுமென்று சொல்லலாமெனின் பொருளுங் குணமு மிரண்டறக் கலந்ததென்பது மிகையாம். நாம்கூறினுலும் கூருவிட்டாலும் பொருளுங் குணமும் இயற்கையாகவே யிரண்டற்றிருக்கின்றன. குணகுணிகளை யிரண்டற்றதென்று சொல்ல அவசியமில்லை. இப்படியே சிவத்தையும் ஆன்மாவையும் முறையே குணியாகவும் குணமாகவும் கூறுவோமானுல் இவ்விரண்டும் இயற்கையாகவே யிரண்டற்றே யிருக்கும். அங்ஙனமாக அவை முன் இரண்டாயிருந்தனவாக வைத்து, பின் இரண்டற்றனவெனச்சொல்வது கூடாது. சிவத்தையும் ஆன்மாவையும் குணிகுணங்களாகச் சொல்லின் அவ்விரண்டும் அபின்னமாகும். அபின்னமாயின் ஆன்மாக்கள் அனுபவிக்கும் சுக, துக்க, சுவர்க்க, நரகங்களெல்லாம் சிவம் அநுபவித்ததாகவேயாகும். இனிச் சிவத்தினிடத்து ஆன்மாவைத் தொழிலாகச் சொல்வோமானுல் ஷை தோஷங்களெல்லாமுண்டாகும். அன்றி நிஷ்கிரியைப் பொருளான சிவத்துக்குக் கிரியை சொல்வது குற்றமாம். இன்னும்அநேக தோஷங்களுண்டாம். ஆதலால் சிவத்தினிடத்தில் ஆன்மாவைத் தொழிலாகவுங் கூறப்படாது.

'பதியினைப்போலப் பசுபாசமனுதி' என்ற திருமந்திரத்தின் பொருள் என்னை? என்று ஒரு வினுப்போட்டு, அதற்கு விடை அத்துவிதிகளுக்கு அகப்படாததுபோல் களித்து, 'விசாரித்து அடங்குவாராக' என்றும் கூறி விசிராந்தி யடைந்து விட்டாரன்ருே? இதற்குப்பதில் அத்துவிதிகளுக்கும் பதி பசு பாசம் அனுதியென்றே இனி யறிந்துகொள்வாராக. அத்வைதிகளுக்குப் பதி சத்தாக அநாதி, பசு பாசங்கள் அநிர்வசனீயமாக அனுதியாம். பதியை யீசுவரனுகவைத்தால் அப்போது பதிபசுபாசங்களான மூன்றும் அநிர்வசனீயமாக அனுதியாம்.

கைவல்லியம்.

அதுதானெப்படி யென்றக்கா லநாதியாஞ்சீவரெல்லாம்
பொதுவானசுழுத்திபோலப் பொருந்து மவ்வியத்தந்தன்னில்

இதுகாலதத்துவப்பேரீசனுட்பார்வையாலே
முதுமூலசுபாவம்விட்டு முக்குணம்வியத்தமாமே.

தானன்றிவேறென்றுமில்லாமை பூரண சச்சிதானந்த குணமாய்
ஊனின்றவுயிர்தாறு மொன்றாகும்மன்றாலஃதொக்கின்றபடி கண்டிலேன்
நானென்ற சீவர்கள் சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்டதால்
ஆனந்தமிதுபோல வெளியாக வுதியாதவடைவேது குருநாதனே.

வேதாந்தசூடாமணி.

இந்து வினையநாதியடைந்ததை முழுதுமறையாமவிந்து தன்னு
லந்திறனையொளிர்வித்துக் கொள்களங்கமெனவெனையானறியேனென்னு
முந்துலகவிவகாரந்தனிலுயிரை யடைந்ததனை மூடாதென்று
மந்தவுயிரால‌றியப்பட்டுமெனறம்பிக்கு மந்திரம்போல்.

சீவசேதனமறைத்துத்தமம் மயலாகிய வுலகத்திறத்திற்கெல்லாம்
மேவுகாரணமாகிமாயை விபரிதஞானம் விளைத்து மோக
மோவவுணர் வழித்தவித்தை சத்தின் வேறாகிப் பொய்யுருவியாகும்
வீவிலாமாயை யிதற்கிருதருமம் சங்கோசவிகாசமென்றாம்.

பொய்யாகிச் சத்துருவப் பொருளின்வேறாகி யொருபொருளாய்த்தோற்றல்
செய்யாமையாலுளதில்சுதந்திரஞ் சான்றாயவொருசேதனன்பால்
உய்யாத சீவாதியாக்குதலால் சுதந்திரமுமுளது மாயை
மெய்யானதல தென்றல் விசும்பலர்போ லில்லையென விளம்பலன்றே.

முதலிய பலபாடல்களால் பதிபசுபாசங்கள் மூன்றும் அநாதி யென்றறிந்துகொள்வாராக. இது வரையில் இரண்டறக்கலந்த ஞானிகள் சங்கதி தான் வெளியாயிற்றே.

இதன்பேரில் "ஞானிகளுக்கு உலகந் தோன்றா திருப்பதுண்மைதான். அங்ஙனந் தோன்றாததுகொண்டு உலகம் இல்லாமற்போய்விடுமோ?" என்று ஒரு கேள்வி கேட்கிறார். இது நல்ல கேள்விதான். நாம் கண்ணை மூடிக்கொண்டால் உருவங்கள் தோன்றவில்லை. தோன்றாவிடில் உருவங்களில்லாமற் போயினவா? இருக்கின்றனவென்றே சொல்லவேண்டும். அப்படியே ஞானிகளுக்கு உலகந்தோன்றாவிடினும் இருக்கின்றதென்றே சொல்ல வேண்டும். இதுதான் அவர் கருத்தென விளங்குகின்றது. ஞானிகளுக்கு உலகந்தோன்றவில்லை. ஏன் தோன்றவில்லை? கரணங்களில்லாமையால் தோன்றவில்லை. எங்கே எங்கே கரணங்களுளவோ, அங்கே அங்கே எல்லாம் உலகந்தோன்றும். எங்கே எங்கே கரணங்களிலவோ அங்கே யங்கே யெல்லாம் உலகந் தோன்றாது. கரணமில்லாக்காலத்து உலகு தோன்றாவிடில் உலகு இருந்து தோன்றவில்லையா? இல்லாமலே தோன்றவில்லையா? இருந்தே தோன்றவில்லை யென்னின் கரணமில்லாக்காலம் சுழுத்தி, மூர்ச்சை, சமாதிகளாம். இக்காலங்களில்தான் உலகந்தோன்றாமலிருப்பது. சுந்தரர், தோன்றாததுகொண்டு உலகமில்லாமற் போய்விடுமோ என்றதனால் தோன்றினால் உலகமுள்ளதென்றே அவசியஞ் சொல்லவேண்டும்போலும். அங்ஙனமாயின் கயிற்றின்கண் தோன்றும் அரவும், இப்பியின்கண் தோன்றும் வெள்ளியு முள்ளனவாமா? "அவை தோற்றமன்றி யுண்மையல்ல; உலகமவ்வாறல்ல; உண்மையாம்" என்னில் உலகங் காரியமென்று சுந்தர ரொத்துக்கொள்வார். அந்தக்காரியத்துக்கு முதற்காரணம் மாயையென்றும் ஒத்துக்கொள்வார். காரணமான மாயையின்கண் உலகு உள்ளதா? (சத்தா) இல்லதா? (அசத்தா) உள்ளதில்லதா?(சதசத்தா) இக்கேள்விக்குச் சமாதானமெப்படி? காரணமான மண்ணின்

கண் காரியமான குடமெப்படியோ, அப்படியே காரணமான மாயையின் கண் காரியமான வுலகமாகும். மண்ணின்கண் குடம் சத்தா? அசத்தா? சதசத்தா? சத்தெனின் எது சத்தோ, அது முக்காலத்து மிருத்தல் வேண்டும். குடம் முக்காலத்துமுள்ளதா? குடம் வனைதற்கு முன்னும் அழிதலுக்குப் பின்னு மில்லையென்பது திண்ணம். மத்தியகாலத்திலேனு முள்ளதே யென்னின் மத்தியகாலத்திலும் மண்ணின்கண் வனைதலாதித் தொழில்மாத்திரமுளதே யன்றிப் பொருளில்லை. தொழில்தானு முள்ளதோ வென்னின் அதுவும் அபாவம்தான். ஏனெனின் எந்த மண் வனைந்ததெனத் தனித்தனி யுற்று நோக்குமிடத்து ஒருமண்ணேனும் வனைந்ததாய்க் காணப்படவில்லை. ஆதலால் கடமென்பது தோற்றமேயன்றிப் பொருளன்று. "வனைதற்கு முன்னரும் அழிதலுக்குப் பின்னரும் குடமில்லதென்று கூறப்படாது, உள்ளதென்றே சொல்லவேண்டும். அதாவது காரியமானது காரணத்தில் அடங்கியிருக்கின்றதாகக் கொள்ளவேண்டும்" என்னின், காரணத்தி லடங்கி யிருக்கின்றதென்பது பிரத்தியக்ஷமா? அநுமானமா? "கண்ணுக்குப் புலப்படாமையால் பிரத்தியக்ஷ மன்று; அநுமானமென்பா" மெனின் அநுமானத்திற்குப் பிரத்தியக்ஷம் வேண்டும். பிரத்தியக்ஷம் கடந்தான். "மத்தியகாலத்தில் பிரத்தியக்ஷமாகக் கடமிருக்கிறபடியால் "உள்ளதுபோகாது" என்னும் நியாயத்தால் வனைதற்கு முன்னும் அழிவுக்குப்பின்னும் தோற்றாவிடினும் காரணத்தில் காரியஞ் சத்திரூபமாய் அடங்கிஇருக்கின்றதென்றே அநுமானிக்கவேண்டும்; காரணத்தி லில்லையென்னின் வனைந்தபின் குடம் வர நியாயமில்லை. "இல்லது வாராது" என்னும் நியாயப்படி குடமில்லதாயின் வரமாட்டாது; வந்திருக்கையால் இருந்தே வந்திருக்கவேண்டும்" என்னின், வனைந்தபின்னரும் அழிதலுக்கு முன்னரும் குடமிருந்தாலன்றோ அந்தப் பிரத்தியக்ஷத்தைக்கொண்டு வனைதற்கு முன்னரும் அழிதலுக்குப் பின்னருங் காரணத்தில் சத்திரூபமாய் அடங்கியிருக்கிறதென்று சொல்லி அநுமானிக்கத்தகும்? பிரத்தியக்ஷமென்று சொல்லும் மத்தியகாலத்திலேயே குடத்துக்குப்பொருளில்லையென்றும் வனைதலாதித்தொழிலும் தோற்றந்தானென்றும் நியாயத்தால் காட்டி முடித்தோமாதலால், காரணமான மண்ணின்கண் குடம் சத்திரூபமாய் அடங்கி யிருக்கிறதென்றும், அது அநுமானமென்றுங் கூறுதற்கு அணுத்துணையும் நியாயமின்று. பிரத்தியக்ஷம் சத்தாயிருந்தாலன்றி அநுமானஞ் சத்தாகாது; புகை சத்தாயிருந்தாலன்றி நெருப்புச் சத்தாகாமைபோலென்க. ஆதலால் குடம் முக்காலத்தும் அசத்தாம். பிரத்தியக்ஷமான குடமே அசத்தானபோது, அது மண்ணினிடத்துச் சத்திரூபமாய் அடங்கித் தோன்றாம லிருக்கின்றதென்று சொல்லி அநுமானிப்பது எங்ஙனம்கூடும்? இதனால் காரியம் அசத்தென்றும் வெறுந்தோற்றமென்றும் அப்படியே குடமும் அசத்தென்றும் வெறுந் தோற்றமேயென்றும் இதன்படியே யுவமேயமானவுலகும் அசத்தென்றும் தோற்றமேயென்றும் சித்தாந்தமாயினவா றறிக.

இனித் தோற்றமானவுலகமும் கரணமிருந்தாலன்றிக் காணப்படுவதில்லை. கரணமில்லாக்காலத்து உலகம் உள்ளதா? இல்லதா? சாக்கிர சொப்பனங்கள் கடந்த சுழுத்தியவஸ்தையில் கரணமில்லை. கரணமில்லாமையால் உலகந்தோற்றவில்லை. அப்போது உலகம் இருந்து தோற்றவில்லையா? இல்லாமற் றோற்றவில்லையா? சுந்தரர், "சுழுத்தி யவஸ்தையில் உலகந்தோன்றாதாயின் சாக்கிரத்திலிருப்பவர்கட்கு உலகந்தோன்றாமற் போய்விடுமோ" என்று கேட்டிருப்பதால் கரணங்களில்லாக்காலத்தும் உலகமுள்ளதென்று சொல்லவேண்டுமென்பதே யவர்சம்மதமெனத் தெரிகிறது. சுழுத்தியவஸ்தையில் உலகமுளதென்பது பிரத்தியக்ஷமா? அநுமானமா? பிரத்தியக்ஷமென்

னின் இந்திரியக்காட்சியே பிரத்தியக்ஷமானதாலும் சுழுத்தியில் இந்திரியமில்லாததாலும் பிரத்தியக்ஷமென்றுரைத்தல் கூடாது. அநுமானமென்பாமென்னின் பிரத்தியக்ஷமின்றி அநுமானம் நிகழாது. ஆதலால் சுழுத்தியவத்தையில் உலகமுண்டென்பது பிரத்தியக்ஷமுமன்று; அநுமானமுமன்று. சாஸ்திரப்பிரமாணமென்று உரைப்பாமென்னின் சாஸ்திரங்கள் சாக்கிரத்திலேயே உலகம்பொய்யென்றும் கானனீர் என்றும் கயிற்றரவென்றும் சொப்பனக்காட்சியென்றும் இந்திரசாலமென்றும் கூறுகின்றமையால் அதுவும் பொருந்தாது. சாக்கிரத்தி லுலகமிருப்பதால் அதுகொண்டு சுழுத்தியிலு மிருக்கிறதென்று சொல்வா மெனனின் சாக்கிரத்தில் உலகம் தோன்றுகின்றமைக்கும், சுழுத்தியில் தோன்றாமைக்கும் காரணமேற்பட்டால் இந்சச்சங்கையொழியும். இது விஷயமாகப் பானுமூர்த்தி அவர்கள் மகாவிகடதூதனில வரைந்த விஷயத்தையே யிதனடியில் எழுதுகின்றோம். அதைப் பார்த்தால் யாவும்விளங்கும்.

மகாவிகடதூதன் 92-௵த்து நவம்பர்௴ 5௳ பத்திரிகை.

“சுழுத்தியவஸ்தையில் உலகந்தோன்றாதாயின் சாக்கிரத்திலிருப்பவர்க்கு உலகந்தோன்றாமற்போய்விடுமோ” என்றார். சுழுத்தியவஸ்தையி லிவ்வுலகு காணப்படாதிருப்பது யாவருக்குமனுபவம். அப்படிப்பட்ட வுலகு சுழுத்தியிலிருந்து காணப்படவில்லையா? இல்லாமற் காணப்படவில்லையா? இந்தக்கேள்விக்குப் பதில் கூறுவாம். சுழுத்தியி லுலகு உளதென்பவர்பக்ஷம்:—நீரிலிருக்கும் அதி நுட்பமான பூச்சி நம் கண்ணுக்குக் காணப்படுவதில்லை. சிறிய உருவைப் பெரியவுருவாகக்காட்டும் பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்க்குமளவில் அந்தப்பூச்சி தெரிகின்றது. ஷை கண்ணாடி இல்லாக்காலத்து ஷை பூச்சி காணப்படாமற்போயினும், அப்பூச்சி இல்லையென்று சொல்லுவதற்கு அமையாது. உள்ளதென்றே கூறத்தகுமென்க. அதுபோல மனமில்லாமலிருக்குஞ் சுழுத்தியவஸ்தையின்கண் உலகங் காணப்படாதேனும் உள்ளதென்றே சாதிக்கப்படுமென்க. இவ்விடத்தில் கண்ணாடிஸ்தானத்தில் மனமும் பூச்சிஸ்தானத்தில் உலகுமாம். கண்ணாடி இல்லாக்காலத்துப் பூச்சி தோன்றாவிடினும், அது உள்ளதாகக் கொள்வதுபோன்று மனமில்லாச் சுழுத்திகாலத்து உலகு தோன்றாவிடினும் உலகு உளதென்றே கூறத்தகுமென்க. சுழுத்தியில் உலகு இலதென்பவர் பக்ஷம்:—ஒருமனிதனுக்குப் பைத்தியம் வந்த விடத்து அதற்கு முன் இல்லாத வஸ்துக்களெல்லாம் உள்ளனபோற் காணப்படுகின்றன. அந்தப்பைத்தியம் போனவிடத்து அந்தப்பொருள்கள் காணப்படவில்லை. இவ்விடத்தில் பைத்திய ஸ்தானத்தில் மனமும், பொருள்கள் ஸ்தானத்தில் உலகுமாம். பைத்தியமில்லாவிடத்துப் பொருள்கள் உளவாகிக் காணப்படுவதில்லையா? இலவாகிக் காணப்படுவதில்லையா? இக்கேள்விக்கு இலவாகிக் காணப்படுவதின்றென்றே கூறத்தகும். இது போன்று சுழுத்தியின்கண் இலவாகிக் காணப்படுவதின்றென்றே கூறத்தகுமென்க. இவ்விரண்டு பக்ஷத்தாருங்கூறிய உவமானங்களால் நீரின்கண்ணுள்ள பூச்சிக்குக்கண்ணாடி துணைக்காரணமாயும், பைத்தியக்காரனுக்குக்காணப்படும் வஸ்துவுக்குப் பைத்தியம் முதற்காரணமுந் துணைக்காரணமுமா யிருக்கின்றன. அவ்வாறே உலகிற்கு மனம் துணைக்காரணமென்று சொல்லப்படுமா? முதற்காரணமுந் துணைக்காரணமுமென்று சொல்லப்படுமா? துணைக்காரணமென்று சொல்லத்தகுமெனின், முதற்காரணமுந் துணைக்காரணமுமென்று ஏன்சொல்லப்படாது?

கண்ணாடியில்லாக்காலத்துப் பூச்சியுளதென்று கூறுவது பிரத்தியட்சமன்று; அனுமானமே. அனுமானம் பிரத்தியட்சமின்றி நிகழாது. அதற்

குப் பிரத்தியட்சம் யாது? சாதாரணமாய் நம்முடைய கண்ணுக்குப் பிரத்தியட்சமாய்ப் புலப்படுஞ் சிறியவுருவை மேற்படி கண்ணாடி பெரியவுருவமாய்த் தோற்றுவிக்கின்றமையால் இந்தக்கண்ணாடி சிறியவுருவைப் பெரிதாகக்காட்டும் பூதக்கண்ணாடியென்று நாம் பிரத்தியட்சமா யறிகிறோம். அதுபற்றியே நீரினிடத்துள்ள பூச்சி கண்ணுக்குத் தோற்றாக்காலத்தும் அது கண்ணால் கிரகிக்கப்படாத அதிநுட்பமான பூச்சியாயிருக்கவேண்டுமென்று அனுமானிக்கின்றோம். கண்ணால் பிரத்தியட்சமாய்க் காணப்பட்ட சிறியவுருவை ஷை கண்ணாடி பெரியவுருவாகக் காட்டாவிடில் கண்ணுக்குப் புலப்படாப் பூச்சி கண்ணாடி யில்லாக்காலத்து நீரின்கண் உளதாமென அனுமானிக்க இடமிராது. கண்ணாடியில்லாக் காலத்துக் கண்ணுக்குச் சிறியவுருவு பிரத்தியட்சப்படாவிடில் கண்ணாடி யில்லாக்காலத்து நீரின்கண் பூச்சியுளதென அனுமானம் நிகழாது. அவ்வாறே மனமில்லாச் சுழுத்தியவத்தையின்கண் உலகு உண்டாமென்பதற்கு என்ன ஆதாரம்?"

(நந்தன௵ கார்த்திகை௴ ௯௨ ௨௰௨ ப்ரம்மவித்யா.)

மாயாவாதத் திமிரபாஸ்கரன்.

துவிதசைவரே மாயாவாதிகளென்பதற்கு மற்றொருமுக்கியகாரணம்.

இதைப்பற்றி ஓர் இந்து என்பவர் அடியில்வருமாறு எழுதுகிறார்:—

உலகிற்குப் பூதத்தை முதற்காரணமாகக் கூறுபவர் பூதவாதிகளும், காலத்தை முதற்காரணமாகக் கூறுபவர்காலவாதிகளும், சூனியத்தை முதற்காரணமாகக் கூறுபவர் சூனியவாதிகளும், பிரமம் அல்லது சிவனை முதற்காரணமாகக் கூறுபவர் பிரம அல்லது சிவவாதிகளுமாதல்போல, மாயையை முதற்காரணமாகக் கூறுபவர் மாயாவாதிகளென யாரும் பிறரும் நடுவுநிலை தவறாது நியாயநெறியே நின்று எழுதிவர, பூர்வபக்ஷிகள் அதற்குச்சமாதானம் ஏதுஞ் சொல்லாமல் நடுநிலைகோணி, தங்களினத்தவர் சொல்லிவிட்டார்களெனகிறவொரு காரணத்தையே பெரிய ஆதரவாகக்கொண்டு, பிரமவாதிகள் அல்லது சிவவாதிகளான அத்வைதிகளை "மாயாவாதிகள் மாயாவாதிகள்" என வீணே யிகழ்ந்து வருகின்றார்க ளன்றோ? நியாய நெறி பிறழ்ந்து அவ்வாறு இகழ்ந்து வருபவரில் ஞானசோமசுந்தரநாயகரும் ஒருவராம். தற்காலத்தில் இவரே யவரிற் றலைமை பெற்றவர். மற்றவரெல்லாம் வாய்பேசாது மௌனமுற்றிருக்கின்றனர். இந்தச் சோமசுந்தரநாய்க்கருக்கு இந்தப்பித்து என்று ஒழியுமோ அறியோம். இவர்க்கு இவ்வொருவித பித்தல்ல; பலவித பித்துகள் பிடித்திருக்கின்றன. அவற்றில் அத்வைதிகளை மாயாவாதிகளென இகழ்வதொன்றாம். இந்தப்பித்து இன்று நேற்றுப் பிடித்ததன்று; வெகுவருஷகாலமாய்ப் பிடித்திருக்கின்றது. அன்றி அது இவரையே மாத்திரமன்று, இவர் முன்னோரையும் பிடித்திருக்கின்றது. அந்தப் பரம்பரையில் நுழைந்தவராகலின் இவரையும் அது பிடித்துக்கொண்டது. அது மிகுபலமாய்ப் பிடித்துக்கொண்டமையால் எந்த அவுடதத்துக்கும் வசப்படுகின்றதில்லை. அது ஒழியும்படி நாம் எவ்வளவோ அவுடதங்கள் ஈந்தோம். அவைகளுக்கெல்லாம் அது

நிவர்த்தியாகவில்லை. அந்தப்பித்து யாது செய்கின்ற தென்னின் இல்ச்சைமானம் இவைகளைத் தலைகாட்டவொட்டாமல் அடித்துத்தள்ளுகின்றது. எத்தனைமுறை எவ்வளவு நியாயங்காட்டி, துவிதசைவரே மாயாவாதிகள் என்றும், அத்வைதிகள் மாயாவாதிகள் அல்லவென்றும், அவர்கள் மாயாரகிதவாதிகள் என்றும் எழுதினாலும் பின்னும் வெட்கமின்றி யாதொரு நியாயமுங் காட்டாமல் அத்வைதிகள் மாயாவாதிகள் என எழுதவும் பேசவும் பண்ணுகின்றது.

இதுநிற்க; இனித் துவிதசைவர்களே மாயாவாதிகள் என்பதற்கு மற்றொரு முக்கிய காரணங் கூறுவாம். அவர்கள் முத்தியில் சிவம் உயிர் ஆகிய இருபொருளும் சத்தாய் உள்ளனவெனக் கூறுகின்றார்கள். அவர்கள் கூறினாலும் உண்மையில் அது முத்தியாகாது. முத்தியெனச்சொல்லின் அது பின் அழிதற்கேதுவானதுஞ் சரீரசம்பந்தமுள்ளதுந் துவிதபேதமுள்ளதுமான பதவி முத்தியேயன்றி, அழிவற்றதும் அசரீர சம்பந்தமுள்ளதும் துவிதமற்றதுமான பரமுத்தியாகாது. எங்கே சரீரமுண்டோ அங்கே அழிவுண்டு. எங்கே பரஜீவபேதமுண்டோ அங்கே துவிதமுண்டு. எங்கே துவிதமுண்டோ அங்கே பந்தமுண்டு. எங்கே பந்தமுண்டோ அங்கே ஞாதுரு ஞான ஞேயங்களுள்ளன. எங்கே ஞாதுரு ஞான ஞேயங்களுளவோ அங்கே சங்கற்ப விகற்பங்களுள்ளன. எங்கே சங்கற்ப விகற்பங்களுளவோ அங்கே மாயையுண்டு. எங்கே சரீரமில்லையோ அங்கே அழிவென்பதுமில்லை. எங்கே பரஜீவபேதமில்லையோ அங்கே துவிதமில்லை. எங்கே துவிதமில்லையோ அங்கே பந்தமில்லை. எங்கேபந்தமில்லையோ அங்கேஞாதுருஞானஞேயங்கள் இல்லை. எங்கே ஞாதுரு ஞான ஞேயங்களில்லையோ அங்கே சங்கற்ப விகற்பங்களில்லை. எங்கே சங்கற்ப விகற்பங்களில்லையோ அங்கே மாயையில்லை. இந்தத் துவிதிகள் முத்தியில் பரமாத்மா ஜீவாத்மாவாகிய இரண்டு பொருளும் சத்தாயுள்ளனவென வொப்புக்கொள்ளுகின்றமையின் ஷை தோஷங்களெல்லாம் முத்தியில் உள்ளனவாய்க்கொண்டு முடிவில் ஷை தோஷங்களுக்கெல்லாம் இடமான மாயையும் இருக்கின்றதாய் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாகின்றார்கள்.

இதற்குச் சுருதியாதிப் பிரமாணங்கள்:—

ருக்வேதம் ஆத்ம போதோபநிஷத்.

நான் ஜகத் ஈசுவர ஜீவபேத மற்றவன். நான் பிரமத்தைவிட வேறல்லாத உத்தமன்...... நான் ஞானசுவரூபி. நான் முத்தன்.

எசுர்வேதம் வராகோபநிஷத் உவது அத்தியாயம்.

என்னுடைய பூர்ணத்துமாவைத்தவிர ஜகத் ஜீவன் ஈசுவரன் மாயை முதலியவை யில்லை. நான் அவர்களுக்கு விலக்ஷணன்......மாயையும் அதன் காரியமும் நசித்துப்போனால் ஈசுவரத்துவமுமில்லை, ஜீவத்துவமுமில்லை. ஆகையினாலே நிருபாதிகமான ஆகாசம்போல் நான் சுத்தனாகவும் சித்தாகவுமிருக்கிறேன்.

யசுர்வேதம் ஸ்கந்தோபநிஷத்.

உமியினால் கட்டுப்பட்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது. உமியற்றதானால் அரிசியாயிருக்கிறது. அப்படித்தான் ஜீவனும் கட்டுப்பட்டிருக்கிறான். கருமம் நாசமானால் எப்போதும் மங்களசுவரூபியாகிய சிவனாயிருக்கிறான். (கரும) பாசத்தினால் கட்டுப்பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிருக்கிறான். பாசத்திலிருந்து விடுபட்டால் அப்போது சிவனாயிருக்கிறான்.

வாயுசங்கிதை ஞானநிலைமை.

ஆன்மாவை முறையிலந்தமாயைதான்மூடும்மலமாயைகெட
வுறைவதுவேசிவமென்னவுரைப்பராலெனவுரைத்தான். (கo)

மலமாயும்வீந்ததற்பின், ஓவலில்
அப்புருடனேசிவனென்னவுறைவனென. (கஅ)

பிரமகீதை கேனோபநிடதம்.

பேதமாஞ்சிவபரங்களும் அவர்கள் பேதமும் பேதிக்குமதுவும், போதமில் சடசத்தியும் அதன் பிதையும் போதசத்தியும் அதன் பிதையும், ஓதுமுண்டில்லையென வெழுமுரையிலுள்ளதாம் பொருள்களுமிலாதும், யாதுமவ்விறைவனருளினூற் றன்ன தேகமாமுருவமா யெறிக்கும். (சக)

ஷை சாந்தோக்கிய வுபநிடதம்.

தற்பதப்பொருளாயுள்ள அறிவோடேகூடுதற்கு
நிற்பதொன்றிலையாய்ச்சொல்லப்பட்டகாயாதிவிட்டு
மெய்ப்படத்துரியத்தோடேயேகனுய்வேறிலாத
சிற்பொருடனையேதத்தொமசியெனச்செப்புமன்றே. (ருசு)

தத்துவமென்றவார்த்தையிரண்டுக்கும்பொருளதாகிச்
சித்துமெய்யாகிநின்றதிகழ்பரமொன்றூந்தன்மை
தற்பரந்தன்னினுலேசித்திக்குமென்பதேயிங்
கப்படிவாக்கியத்தினருத்தமேயாகுமன்றே. (ருஅ)

ஆனதாகாத்தெய்வமதேயடையும்வீடையமிந்தியமாய்த்
தானுமாகித்தனைத்தன்னூற்றூனேநுகருந்தன்மையது
ஊனமாகுஞாதாதியொழிந்தேயுள்ள அறிவதனூற்
றூனேயாகக்கண்டிடுதல்சத்தாயுள்ளபூசையதே. (கூo)

ஷை முண்டகோபநிஷத்.

பரசிவர்பின்னரொனில்போதத்தொருபேதம்பிறவாதே. (உஎ)

அந்தமாமறையானுடியபொருளையழகுறஅறுதியிட்டல்லல்
பந்தமாமயல்பற்றறுத்தமாதவரிப்பரமயோகத்தினுலெல்லாம்
வந்துமாய்விடமாயனைத்திலும்பரமாய் மதிக்கொணுமாயையினுடைய
வந்தகாலத்தேபந்தமற்றிந்தஅமுதினுலரியவீடடைவர். (சுஉ)

சூதசங்கிதை வேதாவிரோதம்.

அவ்வேதம்துவிதத்தை அநுவாதமுன்செய்து
அத்துவிதமேசொல்லும் ஈற்றில். (எ)

புளிமுதலியவைகளாற்றூம்பிரத்தினுற்றமலம்போதல்போலத்
தெளியுமொருசாதனத்தாற்றுக்காதிநிவர்த்தியாஞ்சீவர்க்கென்பர்
ஒளியறத்தாம்பிரத்துமலமீட்டுமுறுமாதலினுலொழிந்தாற்போன்று
களியறத்துக்காதிபினுமுறுமதனுலிவ்வாறுகரைதல்வீணே. (ம)

அயமிரத்தால்பொன்னுவதுபோலோர்சாதனத்தினுலேசீவன்,நயமருவுசிவனுவனென்பர்பாலோடுறுநீர்நற்பாலென்றும், உயர்பொன்னோடுவெண்பொன் பொன்னென்றுஞ்சொலத்தோன்றலொப்பவம்ம,வயரிரதவீரியத்தால்அக்கினி சையோகத்தால்அயந்தான்மன்னோ. (கக)

பொன்னீறமமன்றியுயர்பொன்னுகாதநித்தியமாய்ப்போதலாலே
பன்னியகற்பிதமிரதவீரியந்தீர்பொழுதந்தநிறமும்பாறும் [ள்
மன்னுபிராந்தியினிரும்பைப் பொன்னுகத்தெரிந்துகொள்வார்வையத்தோர்க
உன்னியசுக்குமஅறிவிலார்க்கியல்பில்பிராந்தியென்பதுண்டுமோதோ. (௰௨)

சுடரழற்சம்பந்தத்தால்தண்ணியநீர்வெப்பமாய்த்தோன்றினுலும்
படர்அழலாகாததுபோற்சீவனுயர்பரசிவன்போற்றோன்றினுலும்
அடருணரப்படாப்பெருமையச்சிவனுகான்உமதுமதியிற்கொள்மின்
இடர்புரியைம்பொறியவித்துநாளுளுந்தவமீட்டியேற்றம்பூண்டீர். (௰௩)

சீவன்முத்திகாலத்திற்சிவனேடுசமமென்றுசிலர்சொல்வார்கள்
மேவதுகூடாதுஏகதேசத்திற்சமமென்னின்மிக்கபாசத்
தாவடையாதவனுமுத்தனுமெல்லாவிடயத்துஞ்சமமேயென்னிற்
பாவுசிவனேயெனலாஞ்சிவசமமென்றுரைப்பதென்னேபளகிலீரே. ௧௪

மருவுமுத்திகாலத்தில்வந்தசமத்தன்மைமறுவலும்போமாற்ருல்
ஒருவின்முத்தியநித்தியமாமாதலினந்தக்கரணவுபாதியாலே
வருசீவபாவமாய்த்தோன்றியஆன்மாபரமாஞானத்தாலே
அருமாயைநிவர்த்தியுற்றுப்பூரணமெய்ச்சிவரூபமாயிருப்பான். (௰௫)

ஷை ஞானயாகம்.

மல்லலான்மாபலவாய்த்தோன்றுவதுஞ் சீவான்மாபரான்மாவெனும்பேதந்தோன்றுமதுவுஞ், சொல்லலுறின்உபாதியாலன்றிமாமுனிவீர் சுபாவத்தினின்றஃதெப்படியென்னிற்கேண்மின், வல்லகடமுதலாய வுபாதிசம்பந்தத்தால்வான்பேதமாய்த்தோன்றுமதுபோலுமுணர்வீர், செல்லலில்வேதாந்தவாக்கியங்களெல்லாம்பரமசிவனொருவனேயென்னத்தெரிவிக்குநாளும். (௨௪)

ஷை சூதகீதை பரமவிஞ்ஞானம்.

கருளொளியாற்கழிவதுபோற்கதிர்ந்தசிவஞானத்தான்
மருளுறுஞானங்கழியுமற்றந்தஅஞ்ஞானம்
இருளவித்தைமாயையெனாருருவமாயிருக்குந்
தெருள்படைத்துமேலாயதிறத்துறநின்றீரவற்றுள். (௫)

முன்னும்அவித்தையாற்பசுபேதமும்மொய்வலியமாயையால்
பன்னுபரதத்துவபேதமும்கற்பிக்கப்பட்டதுவான்
மன்னுதேகேந்திரியாதிவாசனுபேதத்தாலே
பின்னுபேதமாமவித்தைபேசுபசுபேதத்திற்கும். (௬)

குணங்களுடையவாசனுபேதத்தாற்கொள்பேதமாய்
இணங்கவிருக்குமாயையியைபரதத்துவபேதத்திற்கும்
உணங்கலறுகாரணமாகுமொழியாய்ப்பவஞ்சமயக்கொழியப்
பிணங்கலறுநன்னெறிநின்றபெரியீர்காண்மும்மூர்த்திகளுள். (௭)

பாரதம் பகவற்கீதை ௬-வது யோக அத்தியாயம்.

யாதொன்றிந்தப்புலனறியாவளவிலின்பமாயிருக்கும்
யாதொன்றினைச்சென்றடைந்தோர்கள்பின்னையதனிலிரண்டாகார். ()

பாரதம் உத்தரகீதை ௨-வது அத்தியாயம்.

எவனுலென்ன ? வேதசாஸ்திரங்கள்
நன்ருய்ப் படித்திருந்தும் நானே

பிரமமென்று அறியாதே போனல்
அவனுக்குப் படித்த பிரயாஸைமாத்திரமே பலன். (சுக)

ஆரியப்புலவர் பாகவதம் வசுதேவர்க்கு நாரதர்
தத்துவமுரைத்த அத்தியாயம்.

கருமத்தையியற்றுகருத்தருளத்
தருண்முற்றவழுக்கறுமற்றவுடன்
உரமுற்றறிவுற்றிடுமுற்றிடினேர்
பிரமத்தொடுமொன்றுவர்பின்னமரார். (கரு)

திருவிளையாடல்புராணம் நாரைக்கு முத்திகொடுத்தபடலம்.

சித்தமாசுகழீ இச்சிவமாயினர். (சு)

ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலமிசம் பிரகலாதர் ஸ்தோத்திரஞ் செய்தது.

நானும் அவனுகவேயிருக்கிறேன்.

ஞானவாசிட்டம் சிகித்துவசன் கதை.

தேற்றுகின்ற விவ்வகையாலறிந்தே நன்ருய்ச்சிவமானேன். (கருக)

மஹேதிகாசமாகிய சிவரகசியம் சு-ம் அம்சம் ரிபுகீதை

உரு-வது சுத்தப்பிரமவாதனையால் பரமுத்தியுரைக்கும் அத்தியாயம்.

சித்தமிலை புத்தியிலை சீவரில்லை செகத்துமிலை செகதீசன்ருனுமிலை, இத்துவிதமெள்ளள்வு மிலவேயில்லை யிருப்பதென விசைப்பதுவும் மிசைத்தலேயாம், புத்திரனேயாதலினுனீ யெப்போதும் பூரணமாம் பரப்பிரம நிச்சயத்தோ, டத்துவித பாவனையே யிடைவிடாம லாதரவாய்ப் புரிந்ததனுல் முத்தனுவாய். (கரு)

ஷ ஷ ஷ உஅ-வது நான்கு மகாவாக்கியார்த்த
முரைக்கும் அத்தியாயம்.

மாயையெனு முபாதியுறு மீசன்ருனே மருவியதற்பதமுனைசெய்வாச்சியார்த்தம், ஆயதனதவித்தையுறுஞ் சீவன்ருனே யறைகின்றதுவம்பதமோர் வாச்சியார்த்தம், ஏயமதாம் உபாதியெலாம் இழந்தபின்னர் ஏகவிலக்கணமானவத்துத்தானே, தூயபதமிரண்டுக்கும் இலட்சியார்த்தந் தொடர்பற்ற ஐக்கியமே அசிபதார்த்தம். (உசு)

ஷ கசு-வது அகண்ட சொருபாநுசந்தான முரைக்கும் அத்தியாயம்.

அகமணுவும் சங்கற்பவிகற்பமின்றி யறவுமுபசாந்தபரசொருபமானேன், அகமிரவு பகலொன்றுமென்றுமின்றி யகண்டவொளியான பரசொருபமானேன், அகமென்றும் அகந்தைமுதலணுவுமின்றி யகண்டபரமானந்த சொருபமானேன், அகமென்றும் பரப்பிரமசொருபனென்றே யநவரதமதி திடமாயநுசந்திப்பாய். (உஎ)

ஷ உரு-வது அத்துவித வுண்மையுரைக்கு மத்தியாயம்.

பாசமிலை பசுவுமிலை பதியுமில்லை
யேகபரி பூரணமாயிகழாச்சித்தா
யெப்போதுமுளது பரப்பிரமமொன்றே. (எ)

ஞாதரு ஞானதிகளோரணுவுமில்லை
யீனமிலாச் சன்மயமாயிலங்குஞ்சித்தாய்
இன்புருவாயுளதுபரப்பிரமமொன்றே. (கக)

ஞாபிக்குந்திரிபுடியேதொன்றுமில்லை. (உரு)

இலிங்கபுராணம் தியானவிதி.

விரிந்தபூதங்களினோடுவிளம்பிந்தியங்கள் தத்துவங்கள்
திருந்தா அகங்காரத்தினொடுசெறிமுக்குணங்கள்மாத்திரைகள்
பொருந்துமாயைசிவனிவைபொய்யாம்யாமேபொய்யின்றி
யிருந்தெவ்விடத்துநிலைபெறுவோம் அதனால்தானுவென இசைப்பார். ()

இச்சிறந்த பிரமாணங்களினால் முத்தியில் துவைதம், பரஜீவபேதம், மாயை, அவித்தை, திரிபுடி, சங்கற்பவிகற்பம் முதலியதோஷங்கள் ஒன்றுமில்லையென் றறிகின்றோம்; அவைகளெல்லாம் உள்ளவிடத்தில் முத்தியில்லையென்றும் பந்தமுள்ளதென்றும் அறிகின்றோம். எங்கே யிரண்டு பொருளுளவோ அங்கே மாயை யுண்டென்று சுருதியாதிகள் கூறுவதால் இவர்களுடைய முத்தி மாயாசகிதமுத்தியேயன்றி மாயாரகித முத்தியன்று. இவர்கள் எங்குப்போனாலும் அதாவது முத்திஸ்தானத்திலுங்கூட மாயையை விடாதவர்களாயிருப்பதால் இவர்கள் அதாவது இத்துவிதசைவசித்தாந்திகள் மாயாவாதிகள் என்பதில் ஆக்ஷேபமில்லை. "முத்தியில் துரிய சிவப்பொருளையே உயிர் அடைகின்றதாதலால் அவ்விடத்தில் மாயையில்லை, துரியப்பொருள் மாயாரகிதப் பொருளாம்" என்னின் துரியப்பொருள் மாயரகிதப்பொருளென்ப துண்மையேயாயினும் உயிராகிய ஜீவான்மப்பொருள் மாயாரகிதப் பொருளென்பதற்குப் பிரமாணமில்லாமையானும், மாயாசகிதப்பொருளென்பதற்கே பல பிரமாணங்கள் காட்டியிருக்கின்றமையானும், துரிய சிவப்பொருளினிடத்தில் இதரபொருளிருக்குமென்பதற்குப்பிரமாணமில்லாமையானும், யுக்தி அநுபவங்கட்கும் விரோதமாகின்றமையானும் இவர்களுடைய முத்தியில் மாயை யுண்டென்பதே யுண்மை யென்க. மாயை இருள்போன்றதாகலின் ஞானவொளிவடிவான துரியசிவத்தினிடத்தில் மாயாசம்பந்தமுள்ள உயிர், தலை காட்டாதழியும். சூரியனிடத்தில் இருள் தலைகாட்டுமென்னின் துரிய சிவனிடத்தில் உயிர் தலைகாட்டும். சிவசந்நிதானத்தில் உயிர் இருந்து அவரருள்பெற்று முத்தியடைகின்றதென்று நூல்கள் கூறுகின்றனவே யெனின் அந்தமுத்தி, பின் அழிவுபாட்டினையுடைய பதவிமுத்தியேயன்றிப் பரமுத்தியன்று. அந்தப்பதவிமுத்தியை யளிப்பவர் சாக்ஷாத் துரிய சிவனன்று. சுத்த சத்துவ மாயாதத்துவத்தோடுங்கூடிய ஈசுவரனும். ஈசுவரன் மாயையோடு கூடியவரென்பதற்குப் பிரமாணங்கள்:—

வாயுசங்கிதை யுருத்திரன் வெளிப்படுதல்.

உறையுமாயையுடன்கூடியுறைவோய்
நின்னைத்தொழுதிடுவோம். (சு)

ஷை தேவர்கட்குச் சிவாகமமளித்தது.

மன்னும்அவ்வியத்தந்தன்னில்
நம்சிவன்முன்முன்னைநாள்வந்தனன், (உ)

சூதசங்கிதை பரசிவ சொரூபவிசாரம்.

மறைமுதல்தனக்குநாமரூபங்கள்மருவுதலில்லையேயெனினுங்
கறையறவிளங்குமாயையினாலேகற்பிக்கப்பட்டனவாகும். (கசு)

ஷை பஞ்சப்பிரமவிசாரம்.

பரசிவன்மாயையினாலே யைம்பிரமவுருவானான். (கஉ)

மாயாசம்பந்தம் ஜீவனுக்குச்சொல்லலாமேயன்றி ஈசுவரனுக்குச் சொல்லலாமோ என்னின் சொல்லலாம். ஆனல் ஈசுவரனது மாயைக்கும் ஜீவனது மாயைக்கும் வெகு வித்தியாசமிருக்கின்றது. ஈசுவரனது மாயை சுத்தம்; ஜீவனது மாயை அசுத்தம். இதற்குப் பிரமாணம் வருமாறு:—

சூதசங்கிதை ஞானயாகம்.

மாயையால் மாயைகாரியங்களால் மற்றுமுள
வாயபேதங்களாலனேகவிதமாமுணர்வீர்
தாயனையபரசிவத்தின்சத்திவிசுத்தசத்துவமே
மாய்வரியபிரதானமாயாசொரூபமாய். (௫)

பரிணமித்திடுபோதவ்வுபாதியோடெண்புறக்கலந்துறைகின்ற
தெரிதருமீசனெனப்பகர்ஞானந்திகழ்சருவக்கியமாயு
மருவியகருத்தாவாயுநன்கிருக்கு லினசத்துவப்பிரதான
வொருவருமவித்தையெனப்பகர்மாயையொடுகலந்துறைதருஞானம். ()

அறைதருசீவஞானமற்றதுதானருத்தத்தாற்பிரதீதியதனுற்
குறைவில்முக்கியமென்றிருவகையாகும்குறைவுறும்அவித்தையிற்கலப்பு
நிறைதருசீவசைதன்னியந்தானிகழ்பரமார்த்தத்தினுலே
முறைகொள்முக்கியமென்றுரைத்திடப்படுமோல்முதுக்குறைவுடையநல்லீரே.

இதன்படியே இவரது நூல்களான சிவஞானசித்தியாருஞ் சிவப்பிரகாசமும் கூறியிருக்கின்றன. அவை வருமாறு:—

சிவஞானசித்தியார் முதற்சூத்திரம்.

வித்தைகள்வித்தையீசர்சதாசிவரொன்றிவர்க்கு
வைத்துறும்பதங்கள்வன்னம்புவனங்கள் மந்திரங்கள்
தத்துவஞ்சரீரம்போகங்கரணங்கடாமெலாமும்
உய்த்திடும்வைந்தவந்தானுபாதானமாகிநின்றே. (உ௫)

சிவப்பிரகாசம்.

உன்னலரும்பரசிவன்றனருளாலேநாத
முதிக்குமிருங்குடிலைதனில்விந்துவருநாதந்
தன்னிலதினொளிவளருஞ்சதாசிவராமவரிற்
றயங்கவருமீசர்வித்தைதனையளிப்பரதனுன்
மன்னுவரிவ்வகையைவர்வாய்மையினுன்முன்னே
வந்திடுமென்றுரைசெய்தவிந்துவழாவகையே
மூன்னுதவுசூக்குமாதியொருநான்குமென்று
மொழிந்திடுவரருங்கலைகண்முதிர்ந்துளோரே. (௬)

ஈசுவரனது சுத்தமாயை ஈசுவரனைப் பந்தப்படுத்தாது; மயக்கத்தையுஞ் செய்யாது. ஜீவனது அசுத்தமாயையே ஜீவனைப் பந்தப்படுத்தி மயக்கத்தைச் செய்வது. இதற்குப் பிரமாணம்:—

சூதசங்கிதை கடவல்லியுபநிஷத்.

சாதன சம்பத்தியாலவ்வீச்சுரனைத் தெரிந்துசார்வான்முத்தி
யாதரவானுலகிரச்சீவேசரொப்போதுமபேதமுள்ளார்
காதலுறுமாயைதான் சீவனுக்குப்போககாரணமாங்கண்டீர்
ஏதமிலீச்சுரன்மாயாகாரியங்கடொடப்படமாட்டானெலென்றும். (௧௬)

இதற்குச்சரியாகச் சிவப்பிரகாசசுவாமிகளாலியற்றப்பட்ட வேதாந்த சூடாமணியும் கூறுகின்றது. அதுவருமாறு:—

அப்பரற்குபாதியாகியமோக காரணியா மாயை.

ஜீவர்களுக்கு அநுக்கிரகார்த்தமாய் வருபவன் ஈசனேயன்றித் துரியசிவனன்று. அவ்வீசன் மாயையோடு கூடியே வரவேண்டும். மாயையில்லாவிடில் ஈசுவரனுக்கு வடிவமேயில்லை. அன்றி ஈசுவரனும் இல்லை. பலமுறை அடியார்களுக்கு வந்து அநுக்கிரகம் புரிந்ததும், தக்ஷணாமூர்த்தியாய் எழுந்தருளிவந்து ஸநகாதிகளுக்கு அத்வைத உபதேசஞ்செய்ததும், உமாமகேசவடிவம் நடராஜவடிவம் காபாலிவடிவம் முதலியவடிவங்களெடுத்ததும் ஷை சுத்த சத்துவ மாயாவடிவமேயாம். இந்தமாயா ஈசவடிவங்களே ஜீவர்களால் வணங்கப்படும் வடிவங்கள். கைலாயாதிகளிலிருக்கும் வடிவங்களும் இந்தச் சுத்த சத்துவ மாயா ஈசவடிவங்களாம். இப்படிப்பட்ட வடிவங்களையே ஜீவர்கள் வணங்கி அவ்வீசனது திருவருள்பெற்று, வைராக்கியவுபரதி சீலராய் முமூட்சுவத்தையடைந்து சிரவணாதிகள் செய்து ஞானநிலையைப் பெற்றுச் சுத்த துரிய சிவவடிவாய் விளங்குகின்றார்கள். சீவர்கள் சிவவடிவாய் விளங்குகின்றார்க ளென்பதற்குப் பிரமாணங்களாவன:—

மைத்திரேயோபநிஷத் உ-வது அத்தியாயம்.

ஜீவனானவன் சிவனே.

ஷை ௩-வது அத்தியாயம்.

நாசமற்றபிரமமாயிருக்கிறேன்.

கூர்மபுராணம் சாங்கியயோகம்.

பிரமம்யானேயெனமறைவிளம்புமன்றே. (௨௫)

வாயுசங்கிதை பரசிவப் பிரபாவம்.

சிவனே, மருளின்றாகியேயுணரின் மன்னுபசுத்வமொடுபாசம்
ஒருவமழுவாளேந்து சிவனுருவாய்ப் பொருந்துமென்றுரைத்தான். (௧௫)

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

திருக்கழுமலம் திருத்தாளச்சத்தி பண் வியாழக்குறிஞ்சி.

திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்சேர்வார்தாமே
தானாகச்செயுமவன் உறையுமிடம். (எ)

திருவாசகம்.

சித்தமலமறுவித்துச்சிவமாக்கி.

திருமந்திரம் அணைந்தோர்தன்மை.

சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ்செற்றவர்
சுத்தசிவமாவர் தோயார்மலபந்தம். (௧௩)

இவ்வாறே சுருதியுக்தமான சகல நூல்களுங் கூறுகின்றன. இதனால் முத்திநிலையில் துரிய சிவப்பொருளேயன்றி வேறுபொரு ளில்லை யென்றும், சீவர்கள் சிவசொரூபமாய் விளங்குகின்றார்களென்றும் சித்தாந்தமாயினமை காண்க. ஆதலால் முத்தியில் துரியசிவப்பொருளினிடத்து ஜீவான்மா வுண்டெனக்கூறிப் பின் அங்கு மாயை யின்றெனக் கூறுதல் பொருந்தாது. சுருதி விரோதமாக அங்ஙனங்கூறினும் யுக்தி அனுபவங்களுக்கு விரோதப்படுகின்றமையின் பொருந்தாது. துரியசிவப்பொருள் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கின்றமையின் அதனிடத்தில் மற்றொருபொருளிருக்குமென் றெங்ஙனம்

கூறத்தகும்? இதுவிஷயமாக ஒருமுறை யிருமுறை யன்று; பன்முறையுங் கூறி மறுத்திருக்கின்றோம். அதனோடு அப்படி யிருக்கமாட்டாதெனப் பல வுபமானங்களுங் கூறி மறுத்திருக்கின்றோம்.

இனி யிப்பூர்வபக்ஷிகள் பிரமாணமாகக்கொண்ட சிவஞானபோதமும் இவர்களுக்குச் சாதகமா யில்லையென்றும், பாதகமாகவே யிருக்கின்றதென்றும், அன்றி அது அத்வைதிகளுக்கே சாதகமா யிருக்கின்றதென்றும் அவர்களுக்குப் பாதகமா யிருக்கவேயில்லையென்றும் காட்டுவோம்.

சிவஞானபோதம்.

யாவையுஞ்சூனியஞ்சத்தெதிராகலின்
சத்தேயறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா. (எ)

இதில் சிவன் சத்தென்றும், உலகு அசத்தென்றும், உயிர் சதசத்தென்றும் ஏற்படுகின்றன. இவற்றில் உயிரைச் சத்தில்வைத்துச் சத்தெனச் சொல்லலாமா? அசத்தில்வைத்து அசத்தெனச் சொல்லலாமா? அசத்தில் வைத்து அசத்தென்றே சொல்லவேண்டும். ஏனெனின் எது சதசத்தோ அது உண்மையில் அசத்தேயாகும். திருட்டாந்தமாகக் கானனீரை மயக்கத்தான் உண்மையான நீரெனஅறிந்து அதுகாரணமாக அதுவரையில் சத்தெனவும், அம்மயக்கவுணர்வுபோய்த் தெளிந்தவுணர்வு வந்தஞான்றுபொய்யெனவறிந்து அதுகாரணமாக அசத்தெனவும் சொல்லப்பட்டு, அவ்விரண்டின் உணர்வு ஏதுவாக அவ்விரண்டையுஞ் சேர்த்துக் கானனீர் சதசத்தெனச் சொல்லப்படினும் உண்மையில் கானல்நீர் சத்தா? (மெய்யா?) அசத்தா? (பொய்யா?) என விசாரிப்புழி அசத்தேயாமென்க. அதுபோலச் சதசத்தெனச்சொல்லப்படும் ஜீவான்மாவும் அசத்தேயாமென்பதற்கு ஏதும் ஆக்ஷேபமின்றென்பதாம். கானனீரைப்போன்று யதார்த்தத்தில் அசத்தாய்ப்போகும் சதசத்தாகிய வுயிர்: ஒருகாலத்தும் அசத்தாதலின்றி யென்றும் ஒருபடித்தாய்ச் சத்தாகவே விளங்கும் (பரிபூரணத்துக்குப் பங்கம்வரும் வண்ணம் வேறொரு பொருளுக்கு மிடங்கொடாத) துரிய பரசிவப்பிரமப்பொருளின்கண் சத்தாய் இருத்தல் எங்ஙனமோ அறியேம். சதசத்தென்பது சத்துப்போலியாதலால் சத்தாகிய சிவத்தினிடத்துச் சதசத்தான வுயிரிருத்தல் கயிற்றின்கண் அரவிருத்தல்போலாம். கயிறு வெளிப்படாதவரையில் அரவு உண்மைபோல் காணப்படும். கயிறு வெளிப்பட்டாலோ அரவு இல்லாமற்போம். அதுபோலத் துரியசிவன் வெளிப்படாதவரையில் உயிர்காணப்படும். துரியசிவன் வெளிப்பட்டாலோ உயிர் அரவுபோல் இல்லாமற்போம். கயிறென்பதொருபொருள், அரவென்பதொருபொருள், ஆகப் பொருள் இரண்டாயினும் கயிறு வெளிப்படுங்கால் இரண்டென்பதின்றி யொருபொருளாகவே மிஞ்சும். அதுபோலச் சிவமென்பதொருபொருள்,உயிரென்பதொருபொருள், ஆகப்பொருளிரண்டாயினும் சிவம்வெளிப்படுங்கால் இரண்டென்பதின்றி யொருபொருளே மிஞ்சும். அவற்றி லெதுமிஞ்சுமெனின் கயிறு அரவு ஆகிய இரண்டு பொருளில் அரவுபோய்க் கயிறு எப்படி மிஞ்சுகிறதோ, அப்படியே சிவம் உயிராகிய இரண்டுபொருளில் உயிர்போய்ச் சிவம் மிஞ்சுகின்றது. அதுபற்றியே அதே சிவஞானபோதத்தில்

"அவனேதானேயாகிய அந்நெறி
யேகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே" (கo)

என்றார். 'அவனேதானேயாகி' என்பதனோடு நில்லாமல் 'அந்நெறியேகனாகி' என்றதால் ஒருபொருளே அதாவது சிவனே மிஞ்சுகின்றானென்பதாயிற்று. முத்தியில் ஏகனாகி யென்றதனால் பந்தத்தில் இரண்டா யிருந்ததெனப் பொருள் படுகின்றது. சிவம் உயிர் ஆகிய இருபொருளும் சத்தாயிருக்குமாயின் அவையென்றும் இருபொருளாகுமேயன்றி ஒருபொருளாகமாட்டாது. இரண்டில் ஒன்றுசத்தும் ஒன்றுசத்துபபோலியுமானால் போலிஉண்மையில் அடங்கவொன்றே மிஞ்சும்; இதன்படியே போலியானவுயிர் உண்மையான சிவத்தில் அடங்க ஒன்றான சிவம் நிற்கின்றதென்பதாம்.

ஷ 'அவனே தானே யாகிய' என்னுஞ்சூத்திரத்தில் 'ஏகனாகி யிறைபணி நிற்க, மலமாயைதன்னோடு வல்வினையின்றே' என்றதனால் அவனே தானாயாவதோடு ஏகனாகி விளங்காவிடில் மலமாயை யுளதாம். மலமாயை யுளதாகும்போது அவனே தானாகுதலும் ஏகனாகுதலுமில்லையாம். அவனே தானாகுதலும் ஏகனாகுதலும் இல்லாதபோது துவிதமாகவேயிருக்குமென்றாகின்றது. எங்கேதுவிதமோ அதாவது சிவம் உயிர் ஆகிய இருபொருள் எங்கேயுளவோ, அங்கே மலமாயை யுள்ளது. எங்கே அத்துவிதமோ அதாவது சிவமொன்றேயுளதோ அங்கே மலமாயை இலது. எங்கே மலமாயையுளதோ அங்கு முத்தியின்றாம். முத்தி யின்றாமாகவே பந்தமுளதென்பது திண்ணம். இத்துவித சைவசித்தாந்திகள் முத்தியில் சிவம்உயிராகிய இருபொருளும் சத்தாயொப்புகின்றமையான் இவர்களுக்கு மலமாயை யொழிய வகையில்லை. மலமாயை யொழியாதபோது முத்தியுமில்லை. முத்தியும் சொல்லவேண்டும்; துவிதமுஞ் சாதிக்கவேண்டும்; மலமாயையும் ஒழியவேண்டுமென்றால் ஷ சூத்திர மிடந்தராது. மற்றப் புராணாதிகளும் உபநிடதங்களும் சம்மதப்படவில்லை யென்பதைப் பன்முறையு மெடுத்துகாட்டி யிருக்கின்றோம். வேதாதிகருத்துக்கும் மாறுபட்டு ஆகமமுடிவுக்குப் விரோதமாய்த் துவைதஞ்சாதித்துஅதுவேமுத்தியென்றமையின் இவர்களுடையமுத்தி வாய்முத்தியேயன்றி யுண்மைமுத்தியன்று. இந்தச் சித்தாந்திகளுடைய முத்தியில் துவைத மிருக்கின்றமையானும், அத்வைதத்தைச் சதா இவர்கள் தூஷிக்கின்றமையானும், ஷ சூத்திரப்படி, இவர்களுடையமுத்தியில் மலமாயைகழியவகையில்லாமையானும், இவர்களுக்கு மலமாயையே முத்தியன்றி மலமாயைகழன்ற ஏகத்துவம் அதாவது உயிர் கழன்ற சிவநிலை முத்தியன்றாகலானும் இவர்கள் அதாவது மெய்கண்டாரபரம்பரையைச் சார்ந்த துவித தாந்திரீக சைவசித்தாந்திகள் மாயாவாதிகளென்பதில் யாதொரு ஆக்ஷேபமு மின்றென் றறிக.

முத்தியில் இரண்டுபொருள் அதாவது சிவஉயிர்பேதம் ஒப்புவதில்லையென்றாலோ, இரண்டுபொருள் ஒப்பாவிடில் எத்தனை பொருளிருக்கின்றன? ஒன்றெனில் அவ்வொன்று சிவமா? உயிரா? சிவமென்னில் அது அத்வைதபக்ஷமாயிற்று. உயிரென்னில் அப்போதங்கிருந்த சிவ மெங்குப்போயிற்று? சிவமில்லையென்ப திவர்கள் மதமன்று. ஒன்று மல்ல, இரண்டு மல்லவென்னின் பின்னை யெத்தனை? மூன்று நான்குமுதலியன சொல்லலாமா? சொல்லப்படாது; பந்தத்தில் இரண்டே யிருந்தமையா னென்க.

சிவஞான சித்தியார் ஆறாம்சூத்திரம் ஒன்பதாவதுசெய்யுளின் சிவஞான சுவாமிகளுரையில் "சிவமுமுயிரும் ஒன்றென்பாரைநோக்கி அங்ஙனம்அறிவதொருபொருள் உண்டென்பது பற்றி வேறாய் நிற்றல்பெற்றாம் வேறென்பாரைநோக்கி அறிவுக்கறிவு பிரிந்து தோன்றாமைபற்றி வேறென்னும் அறிவுக்கெட்டாது உடனாதல் பெற்றாம். அவ்வளவே கூறுவாரைநோக்கி, அவ்வறிவினுள்ளாக நீர்நிழல்போ லொற்றித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி

ஒன்றாதல் பெற்றாம். ஆகலான் அப்பெற்றித்தாய அத்துவிதநிலையை யருளினாலே யநந்நியமாகக் காண்டலே தக்கதென்பதாம்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் சிவஞானசுவாமிகள் ஒன்றென்பாரையும்வேறென்பாரையும் மறுத்துத் தம்சித்தாந்தம் நீர்நிழல்போல் ஒன்றாதலெனச்சொல்லுகின்றார். இதுமிக ஆபாசம். சூரியனுக்கெதிர் பொருளிருந்தால் அப்பொருளின் நிழல் பூமியில் அல்லது பக்கத்தில் படும். சூரியன் உச்சியில் வந்து பொருளும் பூமியல் படும்படி யிருந்தால் அப்போது அப்பொருளின் கீழ் நிழலிருக்குமென்பது அநுமானமாம். இசன்படியே சூரியனுச்சியிலிருக்கும்போது பூமியிலிருக்கும் நீரினது நிழலும் நீரின்கீழிருக்குமென்பதநுமானமாம். இந்தவுவமானத்தையே யுயிருக்கும் சிவனுக்கும் சிவஞானசுவாமிகள் உவமானமாய்ச்சொல்லி ஒற்றுமைப்படுத்தி ஒன்றென்றும் அநந்நியமென்றும் சொல்லுகின்றார். நீரும் நிழலுமாகிய இரண்டும் சத்துப் (மெய்) பொருளாயிருந்து ஒன்றா? அசத்துப் (பொய்) பொருளாயிருந்து ஒன்றா? சதசத்துப் (மெய்பொய்) பொருளாயிருந்து ஒன்றா? இவ்வினாவுக்குச் சத்துப்பொருளாயிருந்து ஒன்றென்னின் இரண்டுசத்துப் பொருள் இரண்டு சத்துப் பொருளாயிருக்குமே யன்றி ஒரு சத்துப்பொருளாகாது. கடம் ஒருசத்துப்பொருள், படம் ஒருசத்துப் பொருள். இவ்விரண்டு பொருள் ஒருபொருளாமா? ஆகாது. இரண்டு அசத்துப் பொருள் ஒன்றாகுமென்னின் அசத்தென்பது பொய்யாதலால் இல்லாத இரண்டு பொருள்கள் ஒன்றாத லென்பது வெற்றுரையாம். இது ஆகாய தாமரையும் மலடி மைந்தனும் ஒன்றாதல் போலாம். சதசத்துப் பொருளாயிருந்து ஒன்றாகுமென்னின் ஷை இருவகைக் குற்றங்களும் வந்து பொருந்தும். இது கானனீரும் கயிற்றரவும் ஒன்றாதல்போலாம். சத்து, அசத்து, சதசத்துகள் ஒன்றாதலென்பதில் இவ்வளவு தோஷமிருக்கின்றமையின் இது பொருத்தமில்லா வாதமென்றறிக.

மேற்கூறிய நீர் நிழலாகிய இரண்டில் நிழலென்பது இருள். அது சூரியன் இல்லாதிருக்கும்போதே யுளது. சூரியன் வந்தபோது எதிரிலுள்ளபொருள் சூரியனை மறைக்கின்றமையால் அந்தப்பொருளளவுவரையில் முன்னிருந்த இருள் அப்படியேயிருக்கின்றது. பொருள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சூரியன் ஒளி படுகிற வரையில் அந்த இருள் போகாது. ஆதலால் நிழலென்று சொல்லப்படும் இருளுக்கும் பொருளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சம்பந்தமற்றதைச் சம்பந்தமுள்ளதாகவைத்து இயற்கையாயுள்ள இருளைப் பொருளின் நிழலெனச்சொல்வது கூடாது. இருளென்பது தேயுவின் குணமான ஒளியின் குறைவு ஒளியின்குறைவென்பதனால் இருளும் தேயுவின் குணமென்றே யாயிற்று. தேயுவின் குணத்துக்கும் மற்றப்பொருளுக்கும் என்ன சம்பந்தம்? ஒரு பொருளுக்குங் அதன் குணத்துக்கும் ஒற்றுமை சொல்லலாம். ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளின் குணத்துக்கும் ஒற்றுமை சொல்லலாமா? இது கடத்துக்கும் வாழைப்பழத்தின் ருசிக்கும் ஒற்றுமை சொல்வதுபோ லிருக்கின்றது. இதைப்போலவே நீருக்கும் நிழலுக்கும் ஒற்றுமை சொல்வதென்க. இந்தவுபமானம் எவ்வளவு ஆபாசமோ அவ்வளவுஆபாசம் உயிருக்கும் சிவத்துக்கும் ஒற்றுமை சொல்வதி லிருக்கிறது. நீர் எப்படிப் பொருளோ அப்படியே உயிர் பொருளாகும்; நிழலென்பது எப்படி மற்றொரு பொருளாகிய தேயுவின் குணமோ, அப்படியே சிவமென்பது உயிரல்லாத வேறொருபொருளின் குணமாகவேண்டும். ஆதலால் உயிருக்கும் சிவத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. கடமாகிய பொருளுக்கும் வாழைப்பழத்தின் ருசியாகிய குணத்துக்கும் எப்படி யொற்றுமை சொல்லப்படாதோ, அப்ப

டியே உயிராகிய பொருளுக்கும், மற்றொரு பொருளின் குணமாகிய சிவத்துக்கும் ஒற்றுமை சொல்லப்படாது. சிவமென்பது குணமாகிறபோது அதற்குக் குணியொன்றிருக்க வேண்டுமன்றோ? அக்குணிப்பொருள் யாது? நிழலாகிய இருளென்னுங் குணத்துக்குத் தேயு என்னும் பொருள் எப்படிக் குணியோ, அப்படியே சிவமாகிய குணத்துக்குக் குணிப்பொருள் யாது? குணமும் குணியும் அபேதமாகலின் சிவமும் அதன் குணியும் அபேதமாகவேண்டும். குணங்களைக் கற்பனைப்படுத்திச் சிவத்தைக் குணாதீதமென வேதாகம இதிகாச புராணாதிகள் கோஷிக்க, அவைகளுக்கு மாறாகப் பொருளான சிவத்தைக் (கழிக்கத்தகும்) கற்பனைக் குணமாக்கிக் கூறுவது பொருத்தமாமோ?

இதுகாறும் வேதாகம புராணேதிகாசாதிகளையும், யுக்தி அநுபவங்களையும் ஆதரவாய்க்கொண்டு அத்வைதிகள் செய்துவந்த வாதத்தால், உலகுக்கு மாயையை முதற்காரணஞ் சொல்வதாலும், மாயாசம்பந்தமுள்ள சிவனை வணங்குவதாலும் முத்தியில் மாயாசம்பந்தமுள்ள சிவ வுயிர் பேதஞ் சொல்வதாலும் இத்துவித சிவாகமிகள் மாயாவாதிகளென நாட்டப்பட்டனவென்றறிக. ஓர் இந்து.

மாயாவாதமும் ஞானாமிர்தமும்.

1. ஆரியமதாபிமானிகளே! சென்ற புதிய ஞானாமிர்தம் ஏழாமிலக்கத்தில் "மாயாவாதிகள்" என மகுடமிட்டு வெளிவந்த ஓர் உபந்நியாஸத்தை யாவரும் அறிந்திருக்கலாம். அதேவிஷயம் மூன்றொருமுறை நாகை நீலலோசனியில் வெளிவந்திருக்கிறது. அது வேறிடத்தில் எவரும் எடுத்துக்காட்டாத ஓர் அற்புத யுக்தி யடங்கிய விஷயமாகச் சிலர் பிரஸ்தாபித்தார்கள். அதுவிஷயத்தில் ஆசைகொண்டு யாமும் வாங்கிப்படித்து அதன் பெருமையை அன்றே மற்றவர் கூறியபடி உள்ளதுதான்என்று நம்பினேம். பிறகு அவ்விஷயம், பிராமணநிந்தை, வேதநிந்தை, ஆசாரியநிந்தை, அத்துவிதநிந்தைகள் நிறைந்த பலவிஷயங்களை வெளியிடுவதும், இந்நிந்தாவாக்கியங்கள் அகப்படாவிடத்துத் "திராவிடப்பிரகாசிகை" "தத்துவபோதம்" என்று முகவுரையிட்டு முன்னோர் சிலர் ஆராய்ச்சியின்றி எழுதிய சிலவிஷயங்களைப் பார்த்தெழுதி எவ்விதத்தும் வைதிக வேத அத்துவிதத்தையும், வடமொழியையும் ஆங்காங்குச் சிறிது சிறிதாய்த் தூஷித்து எழுதிவருவதுமே தமதிலாய்க்கொண்ட புதிய "ஞானாமிர்தத்தும்" எடுத்து விடுத்திருக்கக்கண்டோம். தென்மொழிப் புலமைத்தலைமைபூண்ட நாவலரும் அவ்விஷயம் சிறந்ததெனத் தமது பத்திரிகையில் வேறு பத்திரிகையினின்றும் எடுத்தமைத்தமையின்,அவைகளை நோக்கியே அதில் எமக்குத்தோன்றும் ஆசங்கைகட்கு விடை எதிர்பார்ப்ப துசிதமாம் என்று எண்ணுகின்றோம். ஆனல் முன் ப்ரம்மவித்தியாவில் தோன்றிய வினாக்களுக்கு இதுவரையில் ஏதும் நியாயத்துக்கியைய விடை யளியாத இவர்: இனி எதளிப்பார் எனக் கருதவேண்டாம். அவைகளுக்குப் பிரமாணங்களுடன் விடையளிப்பதே வித்துவான்களுக் கழகாகலின், அவ்விதப் பிரமாணங்கள் அகப்படாமையாலோ, அகப்பட்டும் அதை வெளியிட்டால் மறுக்கப்பட்டுப்போம் என்னும் கருத்தாலோ, அவை வடமொழியில் உள்ளனவாகவே அம்மணம் வீசப்பெறாத தமது பத்திரிகையில் அதைவெளியிடக்கூடாது என்கின்ற எண்ணத்தாலோ, மற்றெவ்விதத்தாலோ அவர் அவைகட்கு விடைபகர்ந்தாரில்லை. தம்முட்டாமே பண்டிதர்பட்டம் கட்டிக்களிக்கும் நாயகர் ஒருவர் ஓர் பத்திரிகையில் இவ்வினாக்களைச் சிறுவரும் விடையளித்தடக்கிடுவார் என்றனர். இதனால் அவர் இவற்றிற்கு விடையளிக்க வெளிவருங்கால் எக்காரணத்தாலாதல்

அவர்க்குச் சிறுமைவருமென அவர் அறிந்தார்போலும்! நிற்க; தற்காலவிஷயத்துக்கு விடையளிக்காது அவர் ஒதுங்கிடினும் எமக்காக்ஷேபமில்லை. கடுஞ்சொற்களால் பத்திரிகையை நிரப்பிட ப்ரம்மவித்தியா அதிபர் இடங்கொடார். ஆனமையின் அவர் எழுதிய விஷயத்துள்ள மோசம் முதலிய சொற்களுக்கு ஏதும் விடையளிக்காது அவசியம் எடுத்துக் கேட்கவேண்டிய விஷயங்களை மாத்திரம் கேட்போம்.

2. அவர் ஏதோ மாயாவாதிகள் (அத்துவிதிகள்) "பிள்ளையார் சுழி" "சிவமயம்" "திருச்சிற்றம்பலம்" முதலிய சைவர்க்குரிய குறிகளைத் தமது நிருபங்களில் எழுதிவைத்துச் சைவர்களை வஞ்சிப்பதாகச் சொல்லுகிறார். அதுவிஷயத்தை முறையே முதலில் எடுத்துவிசாரிப்பாம்.

3. பிள்ளையார்சுழி முதலியவை சைவர்க்குரிய குறி என்றனரே. இது எந் நன்னூலாதாரம் பற்றியோ அறிகிலேம். சித்தாந்த சாஸ்திரங்கள் என இச்சைவர் வழங்கும் சாஸ்திரங்களிலாவது, அல்லது சிவாகமங்களிலாவது, அல்லது பிற்காலத்துச் சைவநூல்களிலாவது சைவர் நிருபம் எழுதிடின் பிள்ளையார்சுழி, சிவமயம், திருச்சிற்றம்பலம் இவைகளைஎழுதி மேலே நிருபம் வரையவேண்டும் எனும் விதியுண்டா?

4. அங்ஙனமில்லை. வழக்கமே அதற்குப் பிரமாணமெனில் அத்துவிதிகளிலும் தமிழ்நாட்டில் அவ்வழக்கம் வெகுநீண்டகாலமாய் இருத்தலால் அதையுணராது சைவர்க்குரியதென உரிமை பாராட்டியது எதுபற்றியோ?

5. இனிப் பிள்ளையார், சிவன், சிதம்பரம் இவர் சைவர்க்குரியவராதலின் அங்ஙனம் கொண்டாம் எனின் இவ்வுரிமை மற்றவர் கொண்டாடக் கூடாது என எந்த ராஜாஞ்ஞையுமில்லை; வேதாஞ்ஞையு மில்லையே! ஆகவே பொருள் பொருந்தியே கொண்டோம் எனல்வேண்டும். ஆயின் இம்முக்குறிகளின் பொருள் இன்னதென விசாரித்திடின் அது சைவர்க்குரிமை பெறுவது கடினமாகின்றது. மற்று இவர் தம்மிடத்துள்ள மாயாவாதத்தன்மையை ஏற்றித் தூற்றப்படும் வேதாந்திகளுக்கே உரியதாகின்றது. அது வருமாறு காண்க.

6. இம்முக்குறிகட்கும் இதுகாறும் பெருவழக்கின்றி ஓர் உரையாசிரியரேனுந்தோன்றி உரைசெய்திலர். இது வேதாகமங்களில் கண்டதுமன்றாகவே லௌகிக யுக்தியைக் கொண்டே பொருள் கூறவேண்டியிருக்கிறது. அங்ஙனமே யாம் கூறிடுவாம். முதற்குறி "உ" இது. இதைப் பிள்ளையார்சுழி என்பர். இதனால் பிள்ளையாருக்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம்வேண்டும். அது வேறுசம்பந்தம் ஏதும் பொருந்தாமையின் எழுத்துக்கும் பொருளுக்கும் அமையக்கூடிய "ஆற்றல்" எனும் சம்பந்தமே இருத்தல்வேண்டும். அங்ஙனமாயின் இவ்வெழுத்துப் பிள்ளையாரைக்குறித்துத் துவக்கத்தில் இடையூறு நீக்கு மிறைவன்றிருவடி நினைவைப் புகட்டுவதாகவே மதிக்கப்படும். அவ்விறைவனே முகத்தில் யானை வடிவமும், உடலில் மானிடவடிவமும், நான்கு கைகள்முதலிய விசேடாவயவங்களில் தேவவடிவமும் பெற்று; தேவர், மக்கள், விலங்கு எனும் மூவகை ஜந்துக்களுக்கும் ஆன்மா ஒருவனே எனவும், அவனை அறிவது தமது துதிக்கை வடிவமான பிரணவத்தால் எனவும் குறிக்கு மற்புதத் திருமேனி தாங்கியவர். அவரது துதிக்கையின் அமைப்பை யநுசரித்து எழுதப்பட்ட வடிவெழுத்தாகிய பிள்ளையார்சுழி "உ" இவ்வித அமைப்பைப் பெற்றமையின் இதிலும் அவரருட் டிருமேனியால் அமைந்த பொரு ளமைந்திருக்கவேண்டும். அஃது வருமாறு:—உலகம் பலவகைப்படினும் ஒவ்வொரு சித்தாந்திகள் ஒவ்வொருவழியாய்ப் பிரித்து இலக்கணங்

கூறுவதுண்டு. சடசேதனங்களை ஒருங்குசேர்த்துப் பிரித்திடச் சேதனுசேதனங்கள் என இருபிரிவு நிச்சயமாயுள்ளன. அவைகளை யோகநூலார் பிந்து எனவும், நாதம்எனவும், விக்ஷேபம்எனவும், ஆவரணம்எனவும் கூறுகிற்பர். அவர் கூறுவது மற்றவர்க்கு விரோதமன்று. ஆயின் விந்து என்பது முதல், பிறகு நாதம் என்னும் அவஸ்தை. இவ்விருபொருட்களில் விந்துவென்பது சேதனமான ஆன்மதத்துவம். நாதம் என்பது ஜடமான பிரகிருதிதத்துவம். இவைகளையே சிவன் சத்தி எனவும், ப்ரம்மம் மாயை எனவும் மற்றும் பல சித்தாந்திகள் கூறுவர். அங்ஙனமாக விந்துவைக்குறிக்கும்பாகம் "o" இது, நாதத்தைக்குறிக்கும் பாகம் "—" இது. ஆகவிரண்டிலும் முன் விந்துவும் பின் நாதமும் அமைக்கப்பட்டன. விந்துவில் நாதம் கற்பிதம் எனத்தோன்றவே விந்துநாதங்களை வேறு இருவடிவெழுத்துக்களால் "ஓ" என்றும் "ம்" என்றும் முறை பிறழக் குறித்தது பிரணவம். அது ஒடுங்கும் முறையைக் காட்டும். இதுதோன்றும முறையைக் காட்டும். இது ஓம் வடிவத்தில் இருதன்மையும் அடக்கிக் குறிக்கும். அதனுல் விந்து நாதங்கள் உண்மையில் ஒன்றெனவும் அதற்குத் தனிபொலிவின்மையால் அவ்விந்துநாத ஐக்யம் சொலலுக் கெட்டாததுமானதால் மட்டில் காணக்கூடிநின்று "மனஸை வேதமாப்தவ்யம் நேஹநா நாஸ்தி கிஞ்சந" என்றும், "யதோவாசோநிவர்த் தந்தே" என்றும் வேதங்கள் மொழிந்த நிலையைக் குறிக்குங் குறி. ஆகவே இதை அத்துவிதிகள் குறியெனலாமா? அல்லது சேதனுசேதனங்களைத் தனி முதல்கள் என்போர் (சைவர்) குறி எனலாம? அறிஞர்காள்! நாம் இவ்விதம் கேட்டால் வேண்டியபடி வீண் வம்புச்சொற்களை எடுத்துப் பத்திரிகையை நிரப்புவார் பலர். அதனுல் பயனென்னை? ஆலோசித்து உண்மை கடைப்பிடித்து இனி எழுதும்பொழுது தமது மதக்குறியாய் நாட்டிக்கொள்ள இஷ்டமும் பிரமாணவலியுமிருந்தால் லௌகிகப் பிரமாணமாயினும் யாம் இவ்விஷயத்தி லறியாத வேதப் பிரமாணமாயினும் காட்டித் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டிக் கொள்ளாது வெறுந்தூஷணுஸ்திரப் பிரயோகமே செய்தால் அவற்றை நாம் லக்ஷியஞ்செய்யவேண்டியதில்லை. எழுத வேண்டி முன்வருபவர் இதற்கு ஏன் பிள்ளையார்சுழி எனப்பெயர் வந்தது? இதற்கு அமைந்தவடிவின் கருத்தென்னை? பிள்ளையாருக்கும் இதற்கும் பொருத்த மெவ்விதம்? இது சைவர்க்கே உரியதா? மற்றவர் ஏன் இடக்கூடாது? என்று பிறர்கேட்கும் கேள்விகளுக்கு உத்திரஞ்சொல்லாது வீணில் காலம் கழித்திட்டால் அதன் பிரமாணபலத்தை அறிஞர்தாமே அறிவார். நிற்க; இதொன்றொழிய மற்ற எல்லா வெழுத்துக்களும்ஓர் ஒலிகொண்டுச்சரிக்கப்படுகின்றன. இதற் குச்சாரண மின்மையால் இது சொல் என்னும் நாமத்தும், இதன் வடிவமும் இத்தன்மைத்து இப்பொருளுடையது இக்கணக்கில் அடங்கியது எனக் குறிக்கப்படாமையின் இருந்தும் இராததுபோல் கணக்கிடக் கூடியரூபத்தும் வேருகி நாதவிந்து ஐக்கியத்தைக்காட்டி எக்கிரியைகளினும் முதலில் அர்ச்சிக்கப்படும். தேவ, திர்யக், மனுஷ்ய, ஆன்மைக்கியம் குறிக்கும் திருமேனி தாங்கிய இடையூறு நீக்குமிறைவனைக்குறித்து எவ்வாசகத்துக்கும் முதலில் சங்கிரகமாக அமைக்கப்பட்டு "ஒன்றேயுள்ளது" என்னும் வேதப்பொருளுடையதாகின்றது. ஆதலால் இது அத்துவிதிகள் குறியேயன்றிச் சைவர் குறியாகாது. ஆகுமேல் அவ்வழிகாட்டவேண்டிய பாரம் அவரதேயாம்.

7. இனிச் 'சிவமயம்' என்பது வெளிப்படையாய் அத்துவிதத்தையே காட்டுகின்றது. உலகத்துக்குப் பிரமமே முதற்காரணமென்பது அத்துவிதிகளுக்கும், மற்றுமுள்ள உபயகாரணவாதிகளான பிரம்மவாதிகளுக்குஞ் சம்ம

தம். ஆகமவாதிகள் கேவல நிமித்தம் பரமபதி என்பார். ஆதலின் 'சிவமயம்' என்னும் சொல் சைவருக்குப் பொருந்தாது. "மண் மயக் குடம், பொன்மயக்குண்டலம்" "நூன்மயம்படம்" "பிரமமயம் உலகம்" என்பதாதி. வழக்கங்களில் "மயம்" காரியம் என்பதைக் குறிக்கும். அதுபோல் "சிவமயம்" என்னும்சொல் மண் குடத்துக்குக் காரணமாதல்போல் சிவன் உலகத்துக்குக்காரணம் எனவே புலப்படுத்தும் இது உலகத்துக்கு நிமித்தங் கடவுள் என்போர்க்குமட்டும்பொருந்தாது. உலகில்மண்மயம்குடமெனவும்பொன்மயம் குண்டலமெனவும் வழங்குவரேயன்றி "குயவன்மயம் குடம்" என்றும் "கம்மியன்மயம்குண்டலம்" என்றும் எவரும் வழங்கார். ஆகையால் 'சிவமயம்' என்பது வேதாந்திகட்கே பொருத்தமுடைத்து. இனி ஓர் நாயகர் அத்துவிதச்சொல்லுக்குப் பொருளுரைப்பதாகப் பீடிகையிட்டுப் பத்திராதிபர் எழுதிய வடவிலக்கணங்களின் இயலறியாது "ஒன்றுமல்ல, இரண்டுமல்ல, ஒன்றுமிரண்டுமல்ல" என்று பொருள் உரைத்து, அத்துவிகள் மாயையை அநிர்வசனீயம் என்பதுபோலும் முத்திநிலையை அநிர்வசனமாக்கி மாயாவாதியானது போலும் 'சிவமயம்' என்னும் சொல்லுக்குச் "சிவனாற்றோற்றுவிக்கப்பட்டு அவ்வியாத்தியால் அவனினும் வேறாகாது "அவன் மயம்" என உபசாரப் பொருள் கூறினார். இங்ஙனங் கூறினிதனுரிமையு முபசாரமாகவே முடியும். இனிச் "சிவ" என்னும்சொல்லும் "மய" என்னும் விகுதியும் எமது வடமொழிச்சொற்களே யாதலால் அதற்கு ஏதோ புது விதிகூறி உமது 'உண்மையை நாட்டிக்கொள்ள இயலாது. இச்சொல்லின்கண் அமைந்த 'மய' வென்னும் விதிக்குக் காரியம் பொருளோ, மற்றேதோ வெனச் சம்சயமுண்டானால் ஸ்ரீ சைவபாடியத்தில் ஸ்ரீகண்டமுனிவர் ஆனந்தமய ப்ரம்மமய சத்தங்களுக்குப் பொருளுரைத்த வுண்மையை அவர்பாடியும் முதலத்தியாயத்துள்கண்டு தெளியக்கடவர். நிற்க; அவரே சிவமயம் உலகம் என ஓரிடங் கூறினார். அன்றி உலகுக்குச் சிவன் உபாதான காரணம் என்றும் நாட்டினார். இனி உலகத்திற்கு மாயை முதற்காரணம் சிவன் நிமித்தகாரணம் என வாதிக்கும் மாயாவாதிகளுக்கும் சிவமயம் என்னும்சொல்லுக்கு மேது சம்பந்தம் இருக்கிறது? உலகத்தில் குயவன் மயம் குடமென்றால் இவர் உலகம் சிவமயம் எனலாம். சிவனே உலகமெனும் பிரமவாதிகள், உலகத்தைச் சிவமயம் எனத்தடை எதுமில்லை. மாயாவாதிகள் கொள்கையில் உலகம் மாயாமயம் அன்றிச் சிவமயமாவதில்லை. சிவப்பொருள் எப்பொருட்டன்மையும் பெறாது பற்றி அதன் காரியம் ஏதுமில்லை. இல்லையாகவே மாயாவாதிகட்கும் சிவமயத்திற்கும் சம்பந்தம் சிறிதுமில்லை யென்றறிக. தம்மிடத்துள்ள மாயாகாரணவாதத்தால் தம்மிடம் அமைந்த மாயாவாதத்தன்மையை மற்றவரிடம் துவேஷத்தால் ஏற்றி இவர் வழங்குவதால் எமக்கு வந்தகுறை ஏதுமில்லை.

8. மேல் திருச்சிற்றம்பலம் என்பதும் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் எழுதிய சிதம்பர ரகசியத்தும் அதன் மூலமான பாதஞ்சலசாஸ்திரத்திலும்கண்டபடி போக மோக்ஷங்களைக்கொடுக்கும் சகுண நிர்க்குண நிலைகளைக்காட்டும் சொல்லாகவே இதுவும் அத்துவிதிகளின் சொந்தப்பொருளேயாமென்க.

9. திருநீறு திருக்கண்மணிமாலை முதலியகுறிகளும் சிவபூஜைகளும் வேதங்களில் விதிக்கப்பட்டபடி அநுஷ்டிக்கவேண்டியது வைதிகர்க்கின்றியமையாதாகவே, அதில்கண்டபடி அநுஷ்டிக்கும் அத்துவிதிகளை ஆகமங்களில்கண்ட சைவர்க்குரியவற்றைத் திருடினார் எனப் பழிசுமத்தல் ஆரியர் இயலாகாது.

10. மேற்கூறிய நியாயங்களால் அத்துவிதிகளுக்கின்றியமையாத பிள்ளையார்சுழி, சிவமயம், திருச்சிற்றம்பலம், திருநீறு, திருக்கண்மணிமாலை, சிவ

பூஜை முதலியவற்றைத் தமதாகக் கொண்டுபோனதும் போதாது "குதிரை தூக்கிப்போட்டதுமன்றிக் குழியும் பறித்ததாம்" என்பதுபோல் மற்றவருக்குரியதைத் திருடினர் எனச் சொல்வது பொருந்துமோவென வறிஞர்தாமே யறிந்திடுவர். விஷயமின்றிக் கேவல தூஷணங்களாகவே யிருத்தலால் இவ்விஷயங்களில் அவர்கள் பெருநாவலர் ஆகவே நாம் அவரை இவ்விஷயத்தில் வெல்வது மிகக்கடினம். இவர்க்கு ஒன்பதாம் அஷ்டகம் காப்பேடுமுதல் கடையேடுவரை வரும்.

(நந்தனஹூ புரட்டாசிமீ 6வ ப்ரம்மவித்தியா.) சிவாத்துவிதி.



பதி பசு பாசவாதம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	34	ரூபமுடைய	ரூபமுமுடைய
4	3	நல்லாசிரியாரை	நல்லாசிரியரை
8	8	நிராகரிப்பவராகவும	நிராகரிப்பவராகவும்
,,	14	யிகழந்து	யிகழ்ந்து
9	18	மாவது	வாவது
10	19	பிரகாசத்யையுங்	பிரகாசத்தையுங்
,,	27	இரு	இருண்
12	10	விடை,	விடை,சிதம்பரத்திலிருந்து
13	18	சாமஞ்சமே	சாமஞ்சஸமே
15	26	வேறென்றுவது	வேறென்றுவது
,,	33	உற்பற்தி	உற்பத்தி
17	29	ஏது	எது
20	12	வூனுடற்ப்ன்றி	வூனுடற்பன்றி
21	25	தெரியாமையாயின்	தெரியாமையின்
23	7	தன்து	தனது
,,	26	சரீரத்துனுள்	சரீரத்தினுள்
24	6	சரீரத்துனுள்	சரீரத்தினுள்
,,	42	சொல்லாது	சொல்லாதது
26	37	ஆயிரமர?	ஆயிரமா?
30	19	குகற்கே	குதற்சே
32	5	அநித்திமயல்லாது	அநித்தியமல்லாது
34	4	அதுபோல்ப்	அதுபோலப்
,,	42	நரஸ்தி	நாஸ்தி
35	22	பூவில் வாசனை	பூ வாசனையில்
36	31	தோற்றமாகவும்.	தோற்றமாகவும்
,,	32	ஆகின்றன	ஆகின்றன.
37	20	மண்ஙின்	மண்ணின்
38	36	யை ஆகாயத்தின்	ஆகாயத்தின்
40	3	வெண்பதுதே	வெண்பதே
,,	5	மினிமினி	மின்மினி
,,	33	சூரியனிடத்துநின்றும்	சூரியனிடத்தினின்றும்
,,	42	பிரபலன	பிரதிபலன
45	12	இரிவைஷ	ஈரிவைஷ
46	15	யோகங்கள் ஞான	யோகஞானங்கள்
,,	27	ப்தி:	பதி:
53	39	ஸ்வாமிளே	ஸ்வாமிகளே
56	20	கூறுகின்மையின்	கூறுகின்றமையின்
57	42	பிரதிநிஷேதிருக்க	பிரதிநிஷேதித்திருக்க
59	35	அரூ	அரூப
65	32	ப்ாசுபத	பாசுபத
68	4	பூர்வபக்ஷமென	பூர்வபக்ஷமெனக்
,,	,,	சித்தாந்தமெ	சித்தாந்தமென
69	6	போல்ாம்	போலாம்

துவிதசைவரே மாயாவாதிகள்,

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
5	18	காற்னசலம்	கானற்சலம்
,,	38	இன்றிமையா	இன்றியமையா
7	26	பரிக்கிர	பரிக்கிரக
,,	34	பரிக்கிர	பரிக்கிரக
10	11	கற்பகம்	கற்பம்
,,	25	கர்ரண	காரண
,,	36	பிர்ப்ஞ்ச	பிரபஞ்ச
11	16	ரொன்ற	ரேன்ற
,,	24	வுபநிடதம்,	நிடதம்.
,,	28	யுண்டரகி	யுண்டாகி
,,	37	ஜயன்	ஐயன்
14	4	சிவன்	சீவன்
,,	15	ந்தாள்	த்தாள்
,,	40	விந்த	விந்தக்
16	26	ஆவனி	ஆவணி
17	22	நாயர்	நாயகர்
20	4	அல்லா	அல்லவா
,,	34	யாராந்து	யாராய்ந்து
22	7,8	நாயகரது	நாயகர் தமது
,,	20	பிரவாதி	பிரமவாதி
24	2	என்பவா	என்பவர்
25	1	தலையில்'	தலையில்
26	1	ஜெயிக்குமெ	ஜெயிக்குமே
27	26	நிர்	நீர்
29	36	போலன்று	போன்று
30	8	கர்ம்மப்பிரமவாதி	கர்ம்மப்பிரமவாதிக
,,	34	ஏகான்மா	ஏகான்ம
32	3	நீலலோனி	நீலலோசனி
,,	25	மற்றையத்து	மற்றைய அத்து
35	35	நீசரை	நீசரென
38	20	வரரும்	வரரும்,
38	21	குணமாவம்	குணமாவம்,
44	20	மொருளானமை	மொருபொருளானமை
48	40	மாயிருக்கின்றன	மாயுமிருக்கின்றன
51	6	கேனோபநிடதம்	ஐதிரேயோபநிடதசே
,,	37	மிரத்தால்	மிரதத்தால் [டம்
60	30	தமதிலாய்க்	தமதியலாய்க்
63	3	நுன்மயம்	நூன்மயம்
68	13	அத்துவிகள்	அத்துவிதிகள்
,,	23	பாடியும்	பாடியம்
,,	30	எதுமில்லை	ஏதுமில்லை

உ

சிவமயம்.

மாயாவாதசைவசண்டமாருதம்.

முதற்பாகம்.

நாம் ப்ரம்மவித்யாவாயிலாக அடிக்கடி ம-ா-ா-ஸ்ரீ சோமசுந்தரநாயகரை மாயாவாத விஷயமாகவும் ஸ்ரீசங்கராசாரியார் விஷயமாகவும் இன்னும் வேறுவிஷயமாகவும் மறுத்து வருகின்றோமென்பது யாவரும் அறிந்தவிஷயமே. அவைகளுக்கெல்லாம் பதில் கூறாது அவர் ஒளிந்திருக்கும் சங்கதியும், இனி இவ்விஷயத்தில் பிரவேசிப்பதில்லையெனத் தந்திரமாய் முடிவுரை கூறிய சங்கதியும் யாவரும் பின்னும் நன்றாய் அறிந்த விஷயமே. பின்னர் அரக்கோணவாசியென்றும் வீரபத்திரமூர்த்தியென்றும் பெயர் தரித்த சோம. நாயகர்க்கு அபின்ன தோழர் ஒருவர், "பானுமூர்த்தி" யென்பவரோடு "நாகைநீலலோசனி" "விகடதூதன்" பத்திரிகைகளிற் சில பேசி வருகிறார். அது முற்றும் ஆபாசத்தினும் ஆபாசமாயிருப்பதால் அதை மறுத்து உண்மையைத் தாபிக்கவேண்டுவது நமது கடமையாயிற்றென்பதாம்.

பயனற்றமனஸ்தாபம்.

"சோமசுந்தரநாயகர் இந்துவுக்குத்தோற்று ஒளித்தார்எனப் பானுமூர்த்தி புகன்றதாக அரக்கோண வீரபத்திரமூர்த்தி மனஸ்தாபப்படுகிறார். ஏன் மனஸ்தாபப்படவேண்டும்? "உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோம்" என்றாற்போல மனஸ்தாப முண்டாகிறது போலும்! அவருக்குத் தோல்விவராமல் பாதுகாக்க இவர் வந்தாரோ; அவைகளுக்கு ஏதேனுஞ் சமாதானஞ் சொன்னரா? இல்லையே. இப்படிப்பட்டவர்க்கு வாயேன்? கையேன்? பதில்வந்த சங்கதிகளையெல்லாம் வராததுபோலப் பகடித்தனம் பண்ணி எழுதுகின்றாரோ; வந்த பதிலுக்குமேல் பூர்வபக்ஷம் செய்து எழுதவில்லையே. ஆதலாலிவரது மனஸ்தாபம் பயனற்ற மனஸ்தாபமாம். அவர், வீணாகக்கோணல் வழியிற் புகுந்து பயனற்ற வீண் விஷயங்களில் தலைகொடுத்து அவமானப்படுகிறார். நேர்வழியிற் புகாமல் கோணல்வழியிற் புகுகின்றமையான் அவரைத் திருப்புகிறது வெகு பிரயாசையாயிருக்கிறது, அவரது கோணல்வழியை யெடுத்துக்காட்டி அதை மறுத்து அவரது பேதைமையைப் பகிரங்கமா யெடுத்து விளக்குவாம்.

பேயரைக்காட்டாதெழுதுவது குற்றமன்றென்பது.

"ஓர் இந்து அநாமதேயராய்த் தனது பேர் காட்டாமல் ஒளிந்திருப்பது தெளிந்திடுவாராக" என்கிறார். இவருக்கு விஷயத்தில்

புகுந்து வாதஞ்செய்து வெற்றி பெறவேண்டுமென்பது கருத்தல்ல. "நாம் ஏதோ சிலபேசிவிட்டோம்; பதிற்சொல்லிவிட்டோம்; மறுத்துவிட்டோம்" என விசாரணையற்ற பேதையரை மயக்கற்கே முன் வருகிறாரென்பது ஷ விஷயத்தினாலேயே அறியலாம். "ஓர் இந்து" வாகிய நாம் நமதுபேரைக் காட்டாமையினாலே ஒளிந்ததாகப் பத்திரிகை வழக்கபழக்கங்களை யறிந்தவர் சொல்வாரா? அப்படியானால் சுதேசமித்திரன், விகடதூதன், வெற்றிக்கொடியோன், தஞ்சை ஜனமித்திரன், திராவிடமந்திரி, ஞானபாஸ்கரன், கலாநிதி, சுகஜீவனி, சேலம் சுதேசாபிமானி, ப்ரம்மக்கியானபோதனி, வித்தியாபாநுமுதலிய தற்காலத்தமிழ்ப்பத்திரிகைகளிலும், தினவர்த்தமானி, யதார்த்தவசனி, சுதேசாபிமானி, ஐம்பதாமாண்டான், குடந்தைமித்திரன், சுகுணசுந்தரம், கோமாளி, பாண்டியநேசன், தத்துவவிவேசினி, தத்துவபோதினி, கலாவர்த்தனிமுதலிய முற்காலத் தமிழ்ப்பத்திரிகைகளிலும், மற்றத் தெலுங்கு முதலிய சுதேச பாஷா பத்திரிகைகளிலும், இங்கிலீஷ் முதலிய அன்னியதேச பாஷா பத்திரிகைகளிலும் கடிதக்காரர் தங்கள் பேரைக்காட்டாமல் எழுதுவது சகஜந்தானே. உலகிலுள்ள எத்தேசத்தாரும் எம்மதத்தாரும் எப்பாஷையாரும் எக்காலத்தாரும் பேரைக்காட்டாமல் எழுதுவதைப்பற்றிக் குற்றமாகச்சொல்லவில்லையே; அவர்களையெல்லாம் திருடர்கள் போல் ஒளிந்ததாக எவரும் சொல்லவில்லையே; பத்திரிகைகளை நடத்தும் அதிபர்களும் குற்றமாகக் கொள்ளவில்லையே. திருடர்கள்போல் அவர்கள் ஒளிந்தவர்களானால் கவர்ன்மெண்டார் திருடர்களுக்குரிய தண்டனையை அவர்களுக்கும் சட்டத்தில் விதித்திருப்பார்களே, பத்திரிகைகளை வாசிப்போரும் இதைக் குற்றமாகக்கொள்ளவில்லையே. தங்களையின்னாரென வெளியில்காட்டிக்கொள்ள இஷ்டமில்லாதவர்களும் இருப்பார்கள். பெயரைக்காட்டிக்கொள்ளாமைக்குக் கற்ற அறிஞர் ஒப்புக்கொள்ளத்தக்க காரணம் பல இருக்கலாம். புகழை யிச்சிப்பவர்களு முண்டு; இச்சியாதவர்களு முண்டு. இப்படிப்பட்டவர்களெல்லாம் கள்ளர்கள்போல ஒளிந்தவர்களென்று பேசுவது புத்திமான்களுக் கழகாமா? இது படித்தவர் நகைத்தற்கிடமாயிருக்கிறதேயன்றி, நியாயமொன்றுமில்லையே. இப்படி எழுதிவிட்டால் அரக்கோணத்தார்க்குச் ஜயம் வந்துவிடுமா? நியாயம் ஜயமாமேயன்றி வீண் வார்த்தைகள் ஜெயமாமா? இவர் எந்தப்பத்திரிகையில் இந்த விஷயத்தைப்பற்றி எழுதினாரோ, அதே நாகைநீலலோசனிப்பத்திரிகையில் "நாரதன்" என்றும், "கடிதர்" என்றும், "நன்னாள்வேண்டுவோன்" என்றும், "சேற்றூர்வாசி" யென்றும், "சாமக்குளத்தான்" என்றும் பல கடிதக்காரர் தங்கள் பேரைக்காட்டாமல் எழுதியிருக்கிறார்களே. அவர்க ளெல்லாம் அநாமதேயர்களா? ஒளிந்தவர்களா? அப்படியானால் அவர்கள் கள்ளர்க ளாகவேண்டுமே. கள்ளர்களாகிறபோது போலீசாரால் பிடியுண்டு சிக்ஷையும் அடையவேண்டுமே. அவர்

களையெல்லாம் கள்ளர்களென்று சொல்லிவிட்டுப் பின் அதனிமித்தம் இவர் கோர்ட்டில் சிக்ஷையடையாமல் தப்புவாரா? இவர் உலகிலுள்ள லட்சக்கணக்கான பத்திரிகைகளுக்குப் பெயரைக்காட்டாமல் எழுதும் லட்சக்கணக்கான நிருபநேயர்களையெல்லாம் அநாமதேயரென்றும் (திருடர்களைப்போல்) ஒளிந்தார்களென்றும் சொல்லவந்த இந்தப்புத்திசாலி, தமது பேரைக்காட்டாமல் அநாமதேயராய் நின்று அரக்கோணவாசியெனக் கள்ளத்தனமாய் ஒளிந்ததேனோ? வீரபத்திரமூர்த்தியென மறைந்ததேனோ? எம்மையொளிந்தவர் என்ற இவர் மாத்திரம் ஒளியாமல் வெளிப்பட்டாரா? இது "அவன் கெட்டான் குடியன், எனக்கு இரண்டுமொந்தை கள்ளு வாரு" என்றும், "ஆத்துமஸ்துதி, பொருளாசை, பரநிந்தையற்ற எனக்கும் ஒரு பணம், அந்தமுட்டாள் கழுதைக்கும் ஒரு பணமா?" என்றுங் கூறும் பழமொழிபோலல்லவா இருக்கின்றது? "ஊருக்கெல்லாம் புத்திசொல்லுமாம், காடிப்பானையில் விழுமாம் பல்லி" என்பதுபோல ஊருக்கெல்லாம் அதிலும் உலகிலுள்ள சகலபாஷாபத்திரிகைகளின் பல இலட்சக்கணக்கான கடிதக்காரர்களுக்கெல்லாம் புத்திசொல்லும் இந்த அரக்கோணவாசி: தாமாத்திரம் காடிப்பானையில் விழுவானேன்? சோம. நாய்க்கர் எழுதும் விஷயங்கட்கெல்லாம் தமது பேரைப்போடுகிறாரா? இல்லையே. தம்பெயரைக்காட்டாமல் இந்து என்றும், சேற்றூர்வாசியென்றும், சாமக்குளத்தான் என்றும் போடுவது குற்றமல்ல; நியாயந்தான். ஏனெனில் இந்துதேசத்தில் வசிக்குங்காரணத்தால் இந்துவென்றும், சேற்றூரில் வசிப்பதால் சேற்றூர்வாசியென்றும், சாமக்குளத்தில் வசிப்பதால் சாமக்குளத்தான் என்றும் போடுவதற்குக் காரணமிருக்கின்றது. தாம் ஒரு நூலியற்றி அதற்குத் தமது பேரைக்காட்டாமல் மறைத்துக் குறிப்புப்பெயருமின்றி, யதார்த்தமான வேறு ஒருவர் பேரைப்போடுவதும் அதிலும் ஜாதிவித்தியாசமும் பேதப்படும்படி வேறுபெயர் இடுவதும் நியாயமாமா? இது ஒளிதல்லவா? அதிலு முண்மையானவொளிதலல்லவா? அதிலும் மறுக்க முடியாத வொளிதலல்லவா? அதிலும் (தப்பமுடியாமையால்) அவரே சரியென் றொப்புக்கொள்ளத்தக்க வொளித லல்லவா? இந்த ஒளிதல் அரக்கோணத்தார் சொல்லுகிறபடி கள்ளத்தன மாகிறதல்லவா? இப்படிப்பட்ட வொளிதல் சோம. நாய்க்கரிடத்திற் காட்சிப்பிரமாணத்தோடு வெட்டவெளியாயிருக்க, அந்தக்குற்றத்தை வெள்ளைச் சலவைத்துப்பட்டியால் மூடிவிட்டு, இவ்வரக்கோணவாசியாரெழுதும் பத்திரிகைகளிலும் இவர் எழுதாப்பத்திரிகைகளிலும் இதர பாஷா பத்திரிகைகளிலும் இதரதேச இதர கண்டபத்திரிகைகளிலும் நெடுங்காலமாய் எழுதும் வழக்கப்படி, இந்து தேசத்தில் வசிக்குங்காரணத்தால் இந்து என எழுதிய எம்மை யொளிதலெனச்சொல்லித் தூற்றுவ தென்கொண்டோ? இவர் தமது பக்ஷங் குற்றமாக, அதிலும் பெருங்குற்றமாக

அதைமுற்றும் மறைத்தார்;எமது பக்ஷம் குணமாக அதிலும் பெருங் குணமாக அவ்வளவையும் மறைத்து அதற்குப்பதிலாக அது எவ்வளவு குணமோ அவ்வளவையுங் குற்றமாகப் பரிணமப்படுத்தித் தூற்றினர்! என் செய்வார் பாவம்! பதில் சொல்வதற்கோ இடமில்லை! வயிறோ பக்பக் என்றெரிகிறது! கோபமோ மேகமண்டலத்தை அளாவுகிறது! தாம் புகுந்த மதமோ சுருதி யுக்தி அனுபவங்கட்கு மாறானது! அதைக்கொண்டு அத்வைதத்தை வெல்லப்பார்க்கிறார்! முக்கி முக்கிப் பார்க்கிறார்! எக்கியெக்கிப் பார்க்கிறார்!! முடியவில்லை. எண்சாண் ஆழமுள்ள கிணற்றுக்கு ஒருசாண் கயிறு போதுமா? போதவில்லை யென்றும் எட்டவில்லை யென்றுஞ் சொல்ல வெட்கமாயிருக்கிறது! இனிச்செய்வதென்னே! இப்படித்தான் ஒன்றைக்கொடுத்து ஒன்பதை வாங்கிக்கொள்ளுகிறது. இப்படிப்பட்ட தோல்விக்காலத்து இதுவும் பேசுவார்! இன்னும் அதிகமும் பேசுவார்!! ஒருசொல் சொன்னால் அதை வேறொருவர் வெல்லத்தகாததாய்ச் சொல்லவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். வெல்லத்தக்க சொல்லைச் சொல்லிவிட்டுப் பின்பு ஆந்தைபோல் விழிப்பது புத்திசாலித்தனமல்ல. அதுபற்றியே நாயனாரும் சொல்வன்மையதிகாரத்தில்,

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொலச்சொல்லை
> வெல்லுஞ்சொலின்மையறிந்து"

எனத் திருவாய்மலர்ந்தருளினர். இதுமாத்திரமல்ல, இன்னும் பலவிடங்களிற் சொல்வன்மையை யிழந்து சோர்வுபடுகின்றார். அவைகளெல்லாம் பின்னர் நன்கு வெளியாம்; ஆங்காங்குக் கண்டுதெளிக.

இவர் நம்மை முதலில் 'அநாமதேயராய்' எனப் பன்மையிலெடுத்து, 'தனது பேரைக்காட்டாமல்' எனப் பின் ஒருமையில் பேசினர். அவருக்கு எவ்வளவு கோபமிருந்தாலும் நாம் கூறும் விஷயத்தின்பேரில் அதை வைக்கலாமே யன்றி, அவ்விஷயத்தைப்பற்றிப் பேசும் எமது பேரில் வைப்பது நியாயமன்றே. இது கைதவறென்று சொல்லவு மிடமில்லை. மற்றொரு இடத்திலும் இவ்வாறு பேசுகிறார். ஆதலால் இவர் எதிர் வாதியை யிகழவேண்டுமென்றே எழுதியதாமெனக.

தம் குற்றத்தைப் பிறர்பேரில் ஏற்றுவதென்பது.

"இந்துவைத் தனது பந்துவாகப்பெற்று வாழுமிவர், அவரையொரு முடக்குச்சந்திற் பதுங்கவைத்து அவரது மானத்தைக்காக்கத் தலைப்பட்டார்போலும்" என்று பேசுகிறார். இந்த வாக்கியத்தின் அக்கிரமத்தை யிதை வாசிப்போர்க்கு எச்சரிக்கை செய்வதன்றி, மற்றி யாது செய்யவல்லேம்! இப்படிப்பட்டவர்க்குப் புத்தியுண்டாம் பொருட்டே நாயனார்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

என்றார். அதையும் மறந்து அளவுக்கு மிஞ்சிச் சொல்லி விட்டால் காயனார் யாதுசெய்வார்! இந்த வாக்கியத்தில் பாநுமூர்த்தி யென்பவர் எம்மைப் பந்துவாகக்கொண்டது ஒரு குற்றம்; எம்மை முடக்குச்சந்திற் பதுங்கவைத்தது ஒரு குற்றம்; எமது மானத்தைப் பாநுமூர்த்தி காக்கத் தலைப்பட்டது ஒரு குற்றம். ஆக விம்மூன்று குற்றங்களையும் சுமத்தினர். இப்படிக் குற்றஞ்சுமத்தின இந்த அரக்கோணவாசியார், தாம் இந்தக் குற்றத்தினின்றும் மீண்டனரா? என ஆராயின், இல்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். எமது கட்சியிற் சேர்ந்தவராயிருப்பதால் பாநுமூர்த்தியை எமது பந்து என்கிறார். அதுபோலச் சோம. நாய்க்கர் கட்சியைச் சேர்ந்தவராயிருப்பதால் அரக்கோணவாசி அவர்க்குப் பயந்து. சோம. நாய்க்கர் பேச்சைத் தாம் பேசுவதாலும் அவர் பேசாதிருத்தலாலும் அவரை முடக்குச் சந்திற் பதுங்க வைத்தவர்; அவர் கூறவேண்டியபதிலை யிவர் கூறி அவர் மானத்தைக் காக்கவந்ததால் அவர் மானத்தைக்காக்க இவர் தலைப்பட்டவர் என்பதாம். பிறர்பேரில்கூறுங் குற்றத்துக்கு அரக்கோணத்தார் சற்றும் விலகினரில்லை. 'ஆத்துமஸ்துதி, பொருளாசை, பரநிந்தையற்ற எனக்கும் ஒருபணம், அந்த முட்டாள் கழுதைக்கும் ஒருபணமா' என்றதில் எனக்கும் என்பதில் ஆத்துமஸ்துதியும், ஒருபணம் என்பதில் பொருளாசையும், அந்த முட்டாள் கழுதைக்கும் என்பதில் பரநிந்தையும் விளங்க நின்றதுபோல, அரக்கோணத்தார் கூறிய ஷை மூன்று குற்றங்களும் அரக்கோணத்தார் உள்ளக் குகையிலேயே நிறைந்திருக்கின்றன வென்பதே யுள்ளங்கை நெல்லிக்கனி யென்பது. இனி ஷை மூன்று குற்றங்களு மிவரிடத்திலிருக்கின்றனவேயன்றி யெம்மிடத்திலில்லை யென்பதைத் தெள்ளத் தெளிய விளக்குதும்.

உலகிற்கு மாயையை முதற்காரணமாகக்கொள்ளும் துவித சைவரை மாயாவாதியென, ஞானமிர்த பத்திராதிபரை நோக்கிக்கூறி, பதில் விடுக்கும்படி பிரமவித்தியாநாவலர் கேட்டார். அதற்கு ஞானமிர்தக்காரர் பதில் பேசாது மௌனமுற்றனர். அவர்க்காகச் சோம. நாயகர் ஏதோசிலபேசினர். அதன் போலித்தனத்தை விளக்கியாம்காட்டினேம். பிறகு கொஞ்சம் விகடதூதனிற் றலையெடுத்தார். அதையும் மறுத்துவிட்டோம். பின் முடிவுரை கூறி மறைந்துவிட்டார். அதுவரையில் அவரை யோக்கியரென்றே சொல்லவேண்டும். இப்போது அவர்க்காக இவர் வந்தார். வந்தமையால் அவர்க்கிவர் பந்துவென்றே சொல்லவேண்டும். அவர் வெளியில் வராமல் இவர் வந்தமையால் அவரை முடக்குச்சந்திற் பதுங்கவைத்தவராகவேண்டும். அவர் தோல்விப்பட்டு அவமான மடைந்தமையாலும் அவர்க்

காக விவர் வந்தமையாலும் அதிலும் அத்தோல்வியை நிவர்த்திகக வந்தமையாலும் அவர் மானத்தைக்காக்க இவர் தலைப்பட்டவராம். இந்த மூன்றுவித தோஷங்களும் நம்மிடத்தில் இல்லை; இருப்பது தோஷரகிதமே. ஏனெனில் முதலாவது நமக்குச் சோம. நாய்க்கர் பதில்கூறவேண்டுவதேயன்றி, அவர்க்கு யாம் கூறவேண்டியதொன்று மில்லை. அதிலும் அவர் கூறவேண்டியது மலையளவு. நாம் கூறவேண்டுவது அணுவுமில்லை. இரண்டாவது நாம் பதுங்கவேயில்லை. நமக்குப் பதிலெழுதும்படி சோம. நாய்க்கர் (அந்தந்த மதவாதிகளுக்குப்பேர் வருவது அவரவரது கடவுள்காரணமாகவென்றுசொல்லி) இடையில் கொஞ்சம்வேலை கொடுத்தார். அதனைத் தூரீகரணஞ்செய்துவிட்டோம். அரக்கோணவாசியார், பாநுமூர்த்தியாருடனே செய்யும் வாதத்தில் நாம் கவனிக்கவேண்டியவைகளுளவாதலால் அதுபற்றி யிப்போது வந்தோம். இப்படிப்பட்டஎம்மைப் பதுங்கினதாகக்கூறுங் குற்றம் அவரதேயாம். மூன்றாவது நமக்கு அவமானம் வந்தாலன்றோ அதை நிவர்த்திக்கப் பாநுமூர்த்தி வரவேண்டும். அவமானம் வரவுமில்லை. அதை யொழிக்க வருவாருமில்லை.

சண்டிமாட்டுத்தன்மையென்பது.

இதன்மேல் சண்டிமாட்டுத்தன்மையாக வொன்று பேசுகிறார். சண்டிமாடு எப்போதாயினும் திரும்பிக் குணப்படும். இவர்க்குள்ள சண்டிமாட்டுத்தன்மை யென்றும் நீங்காது. அந்தச் சண்டிமாட்டுத் தன்மையென்பதியாதெனின் "அவர் ஸ்ரீசிவாச சாஸ்திரியாரென்பது யாவரும் அறிவார்கள்" எனச் சொல்லியிருப்பதுதான். இந்தச்சண்டிமாட்டுத்தன்மையான நோய், சோம. நாய்க்கருக்குப்பிடித்து ஐந்து வருஷங்களுக்கு மேலாயிற்று. நாமும் பிறரும் தக்க அவிழ்தங்கொடுத்தோம். எத்தனைமுறையெப்படிப்பட்ட அவிழ்தங்கொடுத்தும் மேலும் மேலும் கிளர்ந்துகொண்டே வந்தது. கடைசியில் நந்தன ௵ புரட்டாசிமீ உ௨ வெளியான ப்ரம்மவித்தையில் "சோமசுந்தரநாய்க்கரது மாயாவாதமயக்கம்" என்றெழுதிய விஷயத்தில் தக்க அவிழ்தங்கொடுத்தோம். பிறகு அந்நோய் அவரிடங் கிளம்பாவிடினும் அது உண்மையில் தீர்ந்ததும் தீராததும்தெரியவில்லை, தீரவில்லையென்றால் மறுபடியும் கொடுக்க நல்ல அவிழ்தம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இது இவ்வாறிருக்க, இந்த அரக்கோணத்தார்க்கும் 1893௵ ஜனவரிமீ உ௨ விகடதூதனில் அவ்வியாதியே பிடித்தது. அது கொஞ்சத்திற்றீராதென ஆலோசித்ததில் "நல்லமாட்டிற்கு ஒருசூடு, நல்ல மனிதர்க்கு ஒருசொல்லு" என்னுஞ் சிறந்த அவிழ்தம் புத்தியிற்றோன்றிற்று. அதுவே தக்க அவிழ்தமெனத் தந்தோம். அதிலுந் தீராமல் அவ்வியாதிமீண்டும்முறைத்துக்கொண்டது. முன்பு அரக்கோணவாசி யென வொருபேரோடு வந்தார்; இப்போது வீரபத்திரமூர்த்தி யென வுக்கிரப்பெயர் தாங்கிக்கிளம்பினார். அதனால் அந்த அவிழ்தம் தக்கவில்லைபோலும்! யாதுசெய்வது! வைத்தியன் கடமை எத்தனை

முறையானாலும் அவிழ்தத்துக்குப்பால்மாறுமல் கொடுத்தேதீரவேண்டும். இதுவரையில் வஞ்சகமாய்ப் பரிகாரஞ் செய்யவில்லை. வியாதி மேலுமேலுங் கிளம்பக் கிளம்ப அவிழ்தமும் அதற்குத் தக்கவாறு பலமாய்த்தான் கொடுத்துவருகிறோம். கடைசியில் கொடுத்த "நல்ல மாட்டிற்கு ஒருசூடு, நல்லமனிதர்க்கு ஒருசொல்லு" என்னும் அவிழ்தம் இலேசானதா? இந்த அவிழ்தம் அகஸ்தியர் தந்வந்திரி தேரையர் முதலிய பெரும் வைத்தியர்களாலும் செய்துமுடிக்கத்தகாத தொன்றல்லவோ? இப்படிப்பட்ட அவிழ்தங்கொடுத்துந் தீராவிடில் யாதுசெய்யலாம்! ஷேவியாதிசாத்தியமோ? அசாத்தியமோ? தெரியவில்லை. இன்னுஞ் சாத்திய மென்றே வைத்துப்பார்க்கலா மெனத் தோன்றுகின்றது. ஆதலால் இன்னும் சற்றுப்பார்ப்போம்.

இவர்நம்மைப் பிரமவித்தியாபத்திராதிபரென்கிறார், நாம் அல்லவென்கிறோம். மறுபடியும் நம்மை ப்ரம்மவித்தியா பத்திராதிபரென்கிறார். மறுபடியும் நாம் அல்ல வென்கிறோம். மறுபடியும் அவ்வாறு சொல்லுகிறார். மறுபடியும் அல்லவென்கிறோம். இப்படிநம்மைமாத்திரஞ் சொல்லுகிறாரோ வெனின், இல்லை இல்லை. பிறரையும்தான் அவ்வாறுசொல்லுகிறார். இவ்விதப் பித்து ஏறித் தலைமண்டை கொண்டுவிட்டதுபோல் தோன்றுகின்றது. இவர்க்கு நல்ல நித்திரை வருவதுங் கஷ்டமாயிருக்கும். யானை சிங்கசொப்பனங்கண்டு திடுக்திடுக் என்று எழுந்திருப்பதுபோல இவரும் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் என்கிற சிங்கசொப்பனங்கண்டு திடுக்திடுக் என எழுந்திருப்பார்.

இப்படிப்பட்ட சண்டிமாட்டுத்தன்மைக்கு ஏதோ வொரு காரணம் இருக்கவேண்டும். அந்த வொன்றுதான் வெளிப்படவேண்டும். யானையின் முன்பாக நின்று எதிர்த்து அதனால் ஒருவன் கொல்லப்படினும் அது அவனுக்குப்புகழ். அதுபோலப் பிரபல வித்துவசிரோமணியான ப்ரம்மவித்தியாபத்திராதிபரான யானைமுன் நின்று வாதப்போர் செய்து தோல்வி பெற்றேன் என்றால் அதுவே யானை முன்னின்று போர்செய்து கொல்லப்படுவதுபோலப் புகழ் என நினைத்து, அப்படிப்பட்ட பித்துப் பிடித்துப்போயிருக்கிறதாக்கும்! நாமோ ப்ரம்மவித்தியாபத்திராதிபரான யானைமுன் முயல்போன்ற நிலைமையினைப் பெற்றிருக்கின்றோம். நம்மிடத்தில் தோல்வியடைந்தோமென்றால் முயல்முன தோல்வியடைந்ததுபோலாம். முயல்முன்னின்று வென்றாலும் புகழ்ச்சியில்லை; இகழ்ச்சிதான். அதுபற்றியே இந்துவாகிய நம்மை ப்ரம்மவித்தியா பத்திராதிபரென்கிறார். இந்துவாகிய நாம் வேறுயென்றும், ப்ரம்மவித்தியா பத்திராதிபர் வேறு என்றும் அநேகர் அறிவார்களானதாலும், சோம, நாய்க்கர் தோற்றார் தோற்றாரெனத் தம்பட்டம் அடிக்கின்றார்களானதாலும் இந்த அவமானம் பொறுக்கமாட்டாது பேசினதையே பேசிக்கொண்டும் எழுதினதையே எழுதிக்கொண்டும் தோற்றதையே ஜயம்போல் காட்டிக்

கொண்டும் புதியஜனங்கள் மருளும்படி ஏமாற்றும் வித்தையில் இறங்குகிறார்.

'யாவரும் அறிவார்கள்' என்றுஞ் சொல்வதால் இதிலேதோ கொஞ்சம் பொடியிருக்கிறது. நம்மை ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் எனச் சொல்வார் ஒருவருமில்லை. அங்ஙனமாகவும் அவ்வாறு சொல்வதற்குக் காரணம் இவருக்கு ஏதோ குட்டிச்சாத்தான் வந்து சொல்லியிருக்க வேண்டும். அந்தக்குட்டிச்சாத்தான் இந்துவென்பவர் ஸ்ரீநிவாசசாஸ்திரியாரெனப்புளுகினதுமன்றியாவரும் அறிவார்களென்றுஞ்சொல்லி விட்டதுபோலும்! இதனால் அந்தக்குட்டிச்சாத்தானுக்குச் சரியான பூசைபோடுகிறதில்லையென விளங்குகின்றது. காசுக்குப்பால்மாறாமல் காலாகாலத்திற் சரியானபூசைபோட்டிருந்தால் பொய்யை மெய்யாக வும்மெய்யைப்பொய்யாகவும்சொல்லியிராது. யானைக்குத்தினந்தினம் சரியான தீனிபோட்டும் இரண்டொருநாள் போடாவிடில் அது அவனையே கொல்லும். அதுபோல் இவர் அதற்குநல்லபூசைபோட்டு மிருப்பார். ஆனால் இடையில் தவறிப்போயிருக்கலாம். அதுபற்றியே அது நடுச்சபையில் அதிலும்கற்றவர் சபையில் மானங்கெட இழுத்து விட்டது. இனிமேலாயினும் அதற்குத் தவறாது நல்ல பூசைபோட்டுக் கேட்டால் அது உண்மையைச் சொல்லிவிடும்; அத்துடனே முன்புசொன்னது பொய்யென்றும் சொல்லிவிடும். அதன் பிறகு இவர் வழிக்குவருவார். வந்து நான் குட்டிச்சாத்தான் பேச்சை மெய் யென நம்பிச் சொல்லிவிட்டேன், மன்னிக்கவேண்டும்! என்றிரங்கி மன்னிப்புக்கேட்டுக்கொள்வார்.

ப்ரம்மவித்தியா பத்திராதிபர் நடைக்கும் எமது நடைக்கும் ஆனைக்கும் பூனைக்கும் போல் அவ்வளவு வித்தியாசமிருக்கிற தென்பதைக் கற்ற புத்திமான்களெல்லாரும் அறிந்திருக்க, இந்தப்புத்திமானுக்கு மாத்திரம் தெரியாமற்போனமைக்குக் காரணம் யாதோ, அதை ஷைபுத்திமான்களே அறிந்துகொள்வார்கள்.

இவரே மாயாவாதியென்பது.

பின் "ஏகான்மவாதமே மாயாவாதமென்று சோம. நாய்க்கர் "கூறியதாகவும் அதைத்திருப்பிச் சைவமே மாயாவாதமென நாம் "கூறியதாகவும் பானுமூர்த்தியெழுதியதாகச்சொல்லியது உன் தலை "மேல் காக்கைமலமென்றால் அதை மாய்க்கவறியாது திருப்பி உன் "தலைமேல் காக்கை மலம் என் றுளறு மூன்மதத்தன் செய்கையோடு "தானே சேர்ந்ததறிக" என்று கூறினார். ஏகான்மவாதிகள் என்பது அத்துவிதிகள் மாத்திரமன்று சித்தாந்திகளும் என்றபொருள்விளங்க, "சித்தாந்திகளும் ஏகாத்துமவாதிகளே" என்ற வொருவிஷயம் நந்தனவருஷ தைமீ ஏ ப்ரம்மவித்தியாவில் சுருதிமுதலியபிரமாணங்களோடு "வேதாந்தி" என்பவர் எழுதியிருக்கிறார். அதைத்தடுக்க எவ

ரானுமாகாது.எவரும் தடுக்கவுமில்லை.அதனுல் இவாது சித்தாந்தமும் ஏகாத்தும வாதமேயாக, அங்ஙனமல்லாததுபோல் அதை வைத்து அத்துவிதிகளை யேகாத்துமவாதிகளெனக்கூறுவது இவர்க்குப்பெரியதோர் அவமானமாம்! அன்றி இவரது மாயாவாதசைவமே மாயாவாதமெனச் சுருதி யுக்தி அனுபவங்களுடன் சோம. நாய்க்கரை நந்தன௵ ஆடிமீ ௰௨ நந்தன௵ ஆவணிமீ ௨௨ ப்ரம்மவித்தியாவில் மறுத்ததற்கு, சோ. நாய்க்கர் "அவரவர்மதத்திற்குப் பேர்வருவது அவரவர் கடவுள் காரணமாக" என்று 1892௵ செப்டம்பர்மீ ௩௨ விகடதூதனில் கூறிட, அங்ஙனமாயின் "பூதவாதி காலவாதி பூர்வமீமாம்ஸவாதி சாங்கியவாதி முதலானவர்களுக்குப் பேர் வந்தது கடவுள் காரணமாகவா, அவர்கள் கடவுளே யில்லையென்கிறுர்களே" யென நந்தன௵ புரட்டாசிமீ ௨௨ ப்ரம்மவித்தையில் அனேக நியாயங்களுடன் பேசி, மாயோபாதானரான சித்தாந்த துவித சைவரே மாயாவாதிகளெனவும் சிவோபாதானரான அத்துவிதசைவர் மாயாவாதிகளாகாரெனவும் வச்சிரத்தம்பமாய் நாட்டினேம். பின் சோ. நாயகர் அதுவிஷயமாகப் பேச நாவின்றி அடங்கிப்போனதுமன்றி இனி இவ்விஷயத்திற் றலையிடுவதில்லையெனத் தந்திரமாய் முடிவுரையுங் கூறி யொளிந்துகொண்டார். இது அந்தரங்க சங்கதியன்று. பகிரங்கமாய்ப் பத்திரிகைகளின் வாயிலாக எவரும் அறிவார்கள். இங்ஙனமாக அதற்கு மாறிப்பேசுவது கற்றுர்க்கழகாமோ! நாம் பூர்வபக்ஷம் பண்ணினதை மறுத்தெழுதாமலும் தாம் மாயாவாதியல்லரெனச் சுருதியுக்தி அனுபவங்களினுல் தாபித்துக்கொள்ளாமலும் அக்கிரமமாய் அத்வைதிகளை மாயாவாதிகளென வெற்றுரை புகல்வது நியாயம் வழுவினர்க்கே யுரியதாம். இதுவிஷயமாகச் சுந்தரன் பட்டபாடு இவரறிந்திலரோ? 'உன்தலைமேல் காக்கைமலம்' என யாரை யார் சொல்லவேண்டுவது? எவர் தலையில் காக்கைமல மில்லையோ அவர், காக்கைமல முள்ளவனைப்பார்த்து 'உன்தலையில் காக்கைமலம்' எனச் சொல்லவேண்டுவது நியாயம். காக்கைமலம் தலையிலுடையவன், அதிலும் முற்றுமுடையவன் அங்ஙனம் இறையும் உடையனல்லானை நோக்கி 'உன்தலையில் காக்கைமலம்' என்னலாமோ? உடையானெப்பவேண்டுமேயன்றி மற்றவன் ஒப்புவனே? மற்றவன் தலையில் மலமில்லாமையினுல் ஒப்புக்கொள்ளுகின்றுனில்லை.உடையவன் மற்றவனை அங்ஙனங் கூறுவதும் நியாயமன்று; மற்றவன் உடையவனைக் கூறினுல் அங்ஙனம் ஒப்பமாட்டேனென்று கூறுவதும் நியாயமன்று. இவரும் இவர் நண்பரான சோம. நாய்க்கரும் பிறரும் நியாயத்தாலும் சுருதி யுக்தி யனுபவங்களாலும் தங்கள் பக்ஷத்தை நாட்டிக்கொள்ளுகின்றுர்க ளில்லை. வீண் தூஷணங்களாலும் வைதல் செய்வதனுலுமே நாட்டிக்கொள்ளப் பார்க்கின்றுர்கள். மலத்தைப் பெறுதவன் பெற்றவனை நோக்கி 'உன்தலையில் காக்கைமலம்' எனச்சொல்வதுபோல "உலகிற்கு மாயை முதற்காரணமன்று, சிவனே முதற்கார

ண” மெனச்சொல்லும் அத்துவித சித்தாந்திகள், மாயையை முதற் காரணமாகச் சொல்லும் துவிதசித்தாந்திகளை மாயாவாதிகள் என்கிறார்கள். தலையில் மலத்தைப்பெற்றவன் பெறுதவனை நோக்கி உன் தலையிற் காக்கைமலம் எனப்பகர்வதுபோல் மாயாவாதிகளான துவித சித்தாந்திகள் மாயாரகிதரும் சிவவாதிகளுமான அத்வைதசித்தாந்திகளை மாயாவாதிகள் என்கிறார்கள். பொருளைப்பெறாத தரித்திரன் பொருளுடையவனைப் பொறாமையால் இகழ்வதுபோல் துவிதசித்தாந்திகள் தாங்கள் மாயாவாதிகளாய்ப்போன வயிற்றெரிச்சலினால் அங்ஙன மல்லாதாரை அங்ஙனமுடையராக வைத்துத் தூஷிக்கின்றார்கள். அதைத்திருப்பி அத்துவிதிகள் சொன்னால் ‘உன்தலையில் காக்கைமலம்’ என ஈனச்சொல்லைச் சொல்லித் தூஷிக்கிறார்கள்.

அத்துவித மதத்தை மாயாவாதம் என்று எங்கள் முன்னோர்கள் கூறியவாறு எங்களது சைவசித்தாந்தத்தைப் பூர்வபக்ஷியினது முன்னோர்கள் மாயாவாதமென்று கூறியிருக்கிறார்களா? என்றொரு கேள்விகேட்கிறார். இந்தக்கேள்வி சோம. நாய்க்கர் கேட்டதற்கு நாமே பதில் சொல்லியிருக்கிறோம். மாயாவாத திமிரபாஸ்கரன் என்பவரும் சுந்தரன் என்பவர்க்குப் பலவித நியாயங்களோடு மாயாவாத விஷயமாய்ப்பேசித் துவிதசித்தாந்திகளே மாயாவாதிகளெனத் தாபித்திருக்கிறார். அவைகளை யெல்லாம் பூர்வபட்சஞ்செய்து மேல் தமது கட்சியைத் தாபித்துக்கொள்ளாமல் இவர் பெறும் அவமானத்தை யிவர் முன்னோர் தலையிலு மேற்றப் பார்க்கின்றார். இவர் முன்னோர் பொறாமையினாலும் துவேஷத்தாலும் பகைமையினாலும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றுசொல்ல,சுய ஆராய்ச்சியும் சுய மதியுமில்லாமல் அவர்கள் சொன்னதை மெய்யென நம்பி இப்போதுள்ளவர்களுஞ் சொல்லுகிறார்கள். அவர்கள் அத்துவிதிகளை மாயாவாதிகளென்று சொன்னதற்குக் காரணம் என்ன? காரணத்தோடு சொன்னார்களா? பொறாமை முதலியவற்றால் சொன்னார்களா? காரணத்தோடு சொன்னார்களென்னில் அந்தக்காரணம் யாது? அதை யிதுவரையி லெவரும் எடுத்துக்காட்டினார்க ளில்லையே. பொறாமை முதலிய துர்க்குணத்தால் சொன்னார்களென்னில் அது வாதசபையில் தலைகாட்டா தழியும். அத்துவிதிகளை மாயாவாதிகளென்பதற்கு யாதொரு நியாயமுமில்லாமையினாலும் இப்போதுள்ள சித்தாந்த சைவர்களும் அதற்குத் தக்க நியாயஞ்சொல்லாமல் ஆந்தைபோல விழிக்கின்றமையாலும் இவர்களே மாயாவாதிகளென்பதற்கு வேண்டிய நியாயங்கள் நாம் காட்டினமையாலும் இத்துவிதிகளே மாயாவாதிகளும் அத்வைதிகளே சிவவாதிகள் அல்லது பிரமவாதிகளுமாம்.

மோசஞ்செய்த குற்றத்திற்காகப் போலீசில் தண்டனைபெற்ற எ. என்னும் ஒருவகுப்பாரைப் பார்த்து “நீங்கள் மோசக்காரர்”

என்று அங்ஙனம் மோசஞ்செய்யாத பி. என்னும் மற்றொரு வகுப்பார் சொன்னால், அது பொறாமல் எ. வகுப்பார், பி. வகுப்பாரை நோக்கி, நீங்கள் தான் மோசக்காரர்; நீங்கள் மோசக்காரரென நியாயங்காட்டி நாங்களாவது எங்கள் முன்னோராவது சொல்லாவிடினும் எங்கள் முன்னோர் வாளா வாயினாலேனும் உங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு உங்கள் முன்னோர் எங்கள் மதஸ்தரைச் சொல்லியிருக்கிறார்களா? சொல்லாமையால் நீங்கள்தான் மோசக்காரர், நாங்கள் அல்லவென்றால்ஒப்பப்படுமோ? மோசக்காரரென்பதற்கு நியாயம் பலமேயன்றி நியாயமில்லா வாய்ச்சொல் பலமல்லவே. அதுபோல் இவர் முன்னோர் நியாயமில்லாமல் துவேஷத்தாலும் பொறாமையினாலும் பகைமையினாலும் அத்துவிதிகளை மாயாவாதிகளென்றார்கள். அவர்கள் ஆத்துவிதிகளுக்கு விரோதிகளானதால் அவர்கள் வார்த்தையைக் கேட்கப்படாது. விரோதிகள் வார்த்தையை அதிலும் வாதிகள் வார்த்தையைக்கேட்டுச் சரியென்று கொண்டு நியாயஸ்தலத்தில் வாதிகள் பக்ஷம் தீர்ப்புக்கொடுக்கமாட்டார்கள். வாதிப்பிரதிவாதிகள் தங்கள்தங்கள் பக்ஷத்துக்குச்சார்பாய்ப் பேசுவார்களென்ற சங்கதி நியாயாதிபதிகளுக்குத் தெரியும். இருபக்ஷத்தார்க்கும் சம்பந்தமற்ற பிறர் சாக்ஷியின்றி வாதிகள் பேச்சைக்கொண்டே தீர்மானங்கொடுக்கும் தேசத்தில் இச்சிந்தாந்தசைவர்கள் கொண்டுவரும் வழக்கு ஜெயிக்குமேயன்றி இவ்விடத்தில் ஜெயிக்கமாட்டாது. மேலும் இவர்கள் முன்னோர் வாக்கு வேதமா? ஸ்மிருதியா? புராணமா? இதிகாசமா? இப்படிப்பட்ட பதினான்கு வித்தை யொன்றிலும் சேராது யாரோ சிலர் ஷை வித்தைகளுக்குமாறாகவும் தாங்கள் ஏற்படுத்திக்கொண்ட நவீன சித்தாந்தங்களுக்குச் சார்பாகவும் எழுதிவைத்துக்கொண்டால் அதையொரு பிரமாணமாக எதிர்ப்பக்ஷத்தாரிடத்தில் சொல்லலாமோ? அப்படிப்பட்ட வேதசாஸ்திர விரோதிகள் சொன்னசொல் இவர் இனத்தார்க்குப் பிரமாணமா யிருப்பதைப்பற்றி நமக்கேதுமாட்சேப மில்லையேனும் அதை அத்துவிதிகளிடத்திற் பிரமாணமாகக் கொண்டுவந்து காண்பிப்பதுமாத்திரந்தான் தப்பென்கிறோம்.

நிற்க, கிறிஸ்துமதந் துர்ப்பலமுள்ளதென்றும் அது உண்மையான மதமல்லவென்றும் இந்து சமய பண்டித ருணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிறிஸ்து சமயத்தார் இந்துக்களை அஞ்ஞானிகளென்று சொல்வதை நாம் அறிவோம். அவர்வீட்டிற்குச் சமயபத்தியுள்ள இந்துப்பிரபு ஒருவர் செல்லின் அவ்வீட்டுக் கிறிஸ்தவப்பணியாளர், தன் எஜமானிடஞ் சென்று "யாரோ ஒரு அஞ்ஞானி வந்திருக்கின்றனர்" எனச்சொல்லுகின்றனர். இவ்வாறு இந்துக்கள் அஞ்ஞானிகளெனவும் கிறிஸ்தவர்கள் ஞானிகளெனவுஞ் சொல்லப் பாதிரிகள் சில நூறுவருஷங்களாகச் சொல்லிப் பழக்கி வருவது பிரத்தியக்ஷம். இப்

போது அவர்கள் மதத்திலுள்ள குற்றங்களைக்காட்டி அது அஞ்ஞான மதமெனவும் ஆதலால் அதை அனுசரிப்பவர் அஞ்ஞானிகளெனவும் இந்து மதசித்தாந்தங்களின் குணத்தைக்காட்டி அது ஞானமதமெனவும் ஆதலால் அதை அனுசரிப்பவர் ஞானிகளெனவும் சொன்னதாய் வைத்துக்கொள்வோம். இதைக் கிறிஸ்தவர் அங்கீகரிப்பார்களா? எங்கள் முன்னோர் உங்களை அஞ்ஞானிகளென்று சொன்னதுபோல் உங்கள் முன்னோர் எங்களை அஞ்ஞானிகளென்று சொன்னார்களா? இல்லையே. ஆதலால் நீங்கள்தான் அஞ்ஞானிகள், நாங்கள்தான் ஞானிகள் என்றால் நாம் ஒப்புவோமா? மதத்தின் உண்மை விளங்கவேண்டுவது நியாயத்தாலேயன்றி வேறுவிதத்தாலல்ல. அப்படியே இவர்கள் முன்னோர்சொல் நியாயத்திற் கிணங்காமையினால் பயன்படாதென்க. கிறிஸ்தவர் சொல்லுகிறபடி இந்துக்கள் அஞ்ஞானிகளாகிறபோது அத்வைதவிரோதிகளான துவிதசித்தாந்திகள் சொல்லுகிறபடி அத்வைதிகள் மாயாவாதிகளாகலாம். கிறிஸ்தவர் சொல்லுகிறபடி இந்துக்கள் அஞ்ஞானிகளாகாதபோது, துவிதிகள் சொல்லுகிறபடி அத்துவிதிகள் மாயாவாதிகளாகார்கள். சொல்லைப் பொருளாகக்கொள்ளாமல் நியாயத்தையே பொருளாகக்கொள்வோமாயின் பூதத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் பூதவாதியும், காலத்தை முதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் காலவாதியும், சூனியத்தைமுதற்காரணமாகக்கொள்ளுங் காரணத்தால் சூனியவாதியும் ஆதல்போல, மாயையைமுதற்காரணமாகக்கொள்ளுங்காரணத்தால் துவித சைவசித்தாந்திகள் மாயாவாதிகளாகின்றார்கள். இந்த நியாயப்பிரகாரம் சிவனை அல்லது பிரமத்தை முதற்காரணமாகக்கொள்ளுங்காரணத்தால் அத்துவிதிகள் சிவவாதிகள் அல்லது பிரமவாதிகளாகின்றார்கள். இவர் முன்னோர் மாயையை முதற்காரணமென்று கூறுங் கட்சியினின்று விலகியிருந்து அவர் கட்சியில் இவருஞ்சேர்ந்தால் இவர் முன்னோராவது இவராவது மாயாவாதியாக வேண்டுவ தின்று. அங்ஙன மின்மையின் இவரு மிவர் முன்னோரும் மாயாவாதிகளாக யாதொரு ஆக்ஷேபமு மில்லை. இவர் முன்னோர் சொல் இவருக்குப்பிரமாணம்; நமக்குப் பிரமாணமன்று. ஏனெனில் அது வேதசாஸ்திரங்களுக்குச் சம்மதமா யிராமை மாத்திரமேயன்றி மாறாயிருப்பதாலும் அன்றி யுத்தி அனுபவங்கட்குப் பொருத்தமில்லாதிருப்பதாலு மென்க. இப்படிப்பட்ட அப்பிரமாண கிரந்தகர்த்தர் சொல்லை யொரு பொருளாகக்கொண்டு, அவர்கள், அத்துவிதிகளை மாயாவாதிகள் என்று சொல்லிவிட்டார்களென்றும், ஆதலால் அத்துவிதிகள் அவ்வாறு சம்மதிக்கவேண்டுமென்றுஞ் சொல்வது "கிழக்கு மேற்கு அறியார், வழக்குப் பேசப் புகுந்தார்"க்கினமாம் என்க. இவ்வாறு ஒவ்வொரு மதஸ்தரும் தங்களுக்குப் புறம்பான விரோத மதஸ்தர் இட்ட பேரை வைத்துக்கொள்ளவேண்டுமென்றால் எந்த மதஸ்தரும் பெருமையடையாமற்போவார்; சிறுமையே யடைவர். ஆத

லால் விரோதிகள் சொல்வதை விட்டு யார் யார்க்கு எந்தெந்தப் பெயர் நியாயமோ, அதுவதை அவரவர் தரிப்பதே நியாயமுங் கிரமமுமாம். இந்த நியாயப்பிரகாரமும் கிரமப்பிரகாரமும் மாயையை முதற்காரணமாகக்கொண்ட துவித சைவசித்தாந்திகள் மாயாவாதிகளும், சிவன் அல்லது பிரமத்தை முதற்காரணமாகக்கொண்ட அத்துவிதிகள் சிவவாதிகள் அல்லது பிரமவாதிகளுமாம். இதனால் அவரவர்க்கு வேறு பேர் இருக்கப்படாதென நாம் கூறினோமில்லை; ஷை மாயாவாதிக ளல்லரெனச் சொல்வது மாத்திரங் கூடாதெனச் சொல்லுகின்றோம்.

அகம் பிரமவாதம் வேதசம்மதமேன்பது.

இதன் பேரில் செய்யும் இன்னொரு ஆக்ஷேபம்: "அகம் பிரமவாதமாகிய இம்மாயாவாதத்தைப் பிரசந்நபௌத்தமெனவுமன்றோ பூர்வநூல்கள் கூறுகின்றன" என்பதாம். அகம் பிரமவாதத்தை மாயாவாதமென ஒரு நூலும் சொல்லவில்லை யென்பது திண்ணம். அகம பிரமவாதமானது சுருதிமுதலிய பதினான்கு கலைகளுடைய சித்தாந்தமானதாலும், அது யுக்தி யனுபவங்கட்குப் பொருந்தியதொரு சத்தியவாதமானதாலும், அகம் பிரமவாதமல்லாத இவரது மதத்தை ஷை சுருதி முதலியன தும்சஞ் செய்கின்றமையாலும், இப்படிப்பட்ட அகம் பிரமவாதமாகிய பிரமாணங்களைக்கொண்டே ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் ஸ்ரீசம்பந்தசுவாமிகள் முதலானோர் பௌத்தமதத்தை நிராகரணஞ் செய்திருக்கின்றமையாலும "அகம் பிரமாஸ்மி" என்பது வேதாந்த மகாவாக்கியங்களின் இரண்டாவது வாக்கியமானதாலும், அகம் பிரமமென்றும் சிவோகமென்றும் கொண்டு பெரியோர்கள் பிரம அல்லது சிவபதத்தை யடைந்து முத்தியடைந்தார்க ளானதாலும், அகம் பிரமவாதத்தைப் பௌத்தநூலென எந்த வைதிகநூல்களும் சொல்லாமையாலும் இவரது பொய்வாக்கியத்தை நீரிலெழுத்தென விலக்குவதே நியாயமாம். பூர்வநூல்களென்பது வேதாதி பதினான்கு கலைகளுக்கும் விரோதமாக இவரினத்தார் எழுதிய நூல்களாயிருக்கலாம். அதைத்தான் பூர்வநூல்களெனச் சொல்லுகின்றார் போலும்! அதனாலேதான் அதன் பேரைச் சொல்லாமல் வாளா பூர்வநூல்களென்கிறார். அதன் பேரைச்சொன்னால் அப்பிரமாண நூல்களென வெளிப்பட்டுவிடும். அதுபற்றிப் பேரைச் சொல்லாமல் மறைக்கிறார். அந்த நூல்களை யிவர் வீட்டில் கட்டி வைத்துக்கொள்ளலாம். அது பொதுவான வாதசபையில் செல்லாக்காசு போல்வதாமென அறியக்கடவர். அகம் பிரமவாதமென்பது வைதிக சம்பந்தமாகவும் சகல வேதசாஸ்திர சம்மதமாகவுமிருக்க, அதைப் புறமதங்களிலொன்றான பௌத்தமதமென்று சொல்வதனால் இவரும் இவர் மதஸ்தரும் அவைதிக சம்பந்தமானவரும் சகல வேதசாஸ்திரங்களுக்குப் புறம்பான மதஸ்தரி லொருவகுப்பினருமென விளங்குகின்றது. அகம் பிரமவாதம் வேதசாஸ்திர சம்

மதமெனவும் அதை வெறுப்பவர் வேதபாஹியரெனவும் ஷ வேத சாஸ்திரப் பிரமாணங்களைக்கொண்டே காட்டுவாம்.

கைவலியோபநிஷத்.

சூட்சுமத்திலும் அதிசூட்சுமமாயும் நித்தியமாயும் இருக்கிற பரப்ரம்மம் எதுவோ, அதுநீ; நீயே யது......சாட்சியாயும் சின்மாத்திரமாயுமிருக்கிற சதா சிவன் நான்.

அமிர்தபிந்தூபநிஷத்.

அந்தப்பிரமமே நானெனன்றறிந்தால் ப்ரம்மமே யாகிறான், நிச்சயம்.

ஸ்கந்தோபநிஷத்.

அவனே ப்ரம்மம்; அந்தப்ரம்மம் நான்தான். சமுசயமில்லை. ஜீவனே சிவன்; சிவனே ஜீவன். அந்த ஜீவன் சிவனேதான்.

சூதசங்கிதை காலஅளவை அத்தியாயம்.

மன்னிய ஆன்மாக்களெங்குஞ்சிவசொரூப மென்றேமதித்திடார்மாயை யால்மறைப்புண்டோன்நீயென்னமிகுபேதமேகுறித்துழல்வர். (கரு)

கூர்மபுராணம்

இந்திரத்துய்ம்மன் முத்திபெற்ற அத்தியாயம்.

சீவான்மாவினைப்பரமான்மாத்தன்னோடெம்பிறிதறவொடுக்கி. (சஉ)

வாயுசங்கிதை

ஞானநிலைமையுரைத்த அத்தியாயம்.

ஆன்மாவை, முறையிலந்தமாயைதான்மூடுமலமாயைகெட
வுறைவதுவேசிவமென்னவுரைப்பரால். (கo)

அப்புருடனேசிவனென்னவுறைவன். (கஅ)

பிரமகீதை முண்டகோபநிடதம்.

ஜீவன்தன்னுருவானசிவத்தை. (ருச)

ஈசுவரகீதை சாங்கியயோக அத்தியாயம்.

அந்தமில்பிரமத்துருவாயினோர். (ரு)

பரவொளியாம்பரம்பரனை, ஞானந்தன்னால்
வேறறவேநானென்றறிந்தநல்லோன். (கக)

சிவரகசியம் ரிபுகீதை க-ம் அத்தியாயம்.

அச்சிவமேநாமேயென்றும். (அரு)

பாரதம் உத்தரகீதை உ-வது அத்தியாயம்.

நானேபிரமமென்றுஏகாக்கிரமனத்துடனேகூடி. (ருக)

திருமந்திரம் முப்பதம்.

தொம்பதந்தற்பதந்தோன்றும்அசிபதம்
நம்பியசீவன்பரஞ்சிவனுய்நிற்கும். (ரு)

ஷ முச்சூனியம்தொந்தத்தசி.

சீவன்பரசிவனுமே. (சு)

கூர்மபுராணம் திருக்கலியாண அத்தியாயம்.

அருமாமறைகள்முழுவதுமென்சத்தியாகுமாங்கவைகள்
திருமாலுந்தித்தடம்பூத்தசெல்வன்முன்னைப்படைப்பதனில்
ஒருநான்மறையாம்பெயரோடுநடக்குமன்னூல்வழியொழுகார்
மருவார்முத்திவீடதனின்மம்மருறுநூல்வலைப்பட்டே. (௫௯)

வேதவொழுக்கமிகழ்ந்துபுல்லர்விரகின்றம்போற்றணிபுனையுந்
தீதுநூலின்வழிசென்றோர்செல்வர்நரகர்க்கதிதிகளா
யாதரன்னாற்புன்சமயங்கற்றோர்முகத்தினருமறைகள்
ஓதியுணர்ந்தமுதுக்குறைவினுரவோர்சிறிதுநோக்காரால். (௪௦)

அங்கமாறுமறைநான்குமீமாங்கியமென்றருள்கொழித்துத்
தங்குநீதிநூலொன்றுபுராணமொன்றுதவறெறிந்து
பொங்குதருமநூலொன்றுபுகன்றவீரேழ்விஞ்சையினை
யங்கணுலகீன்றவனளித்தானிவற்றையுணர்ந்தோரறிவுடையோர். (௪௫)

பிரமகீதை ஐதரேய உபநிடதம்.

தருமமதறிவில் பாசண்டர் தங்களை
மருவலால் வேதமாவாக்கியப்பொருள்
கருதிடார் அது கரமணியிற் காட்டிடும்
குருவையும் வழிபடார் குதர்க்கமேவலார். (௧௯)

ஷை பிரகதாரணிய உபநிடதம்.

வேதநூல்மிருதிபுராணம் அத்துவித மெய்ம்மையேவிளம்பமெய்த்தர்க்கம்,சாதியாநிற்கத்தத்துவஞானத்தவருமிப்பொருளையேசார,வாதியாஞ்சிவனாராயண னிங்கறைந்ததும் அபேதமாயிருக்க,வாதியாமொருவர்க்கிதையனுதரித்தல் மாயையினுடையவல்லபமே. (௧௪)

(இந்தஐந்து செய்யுள்களினால் வேதமுதலிய நூல்களை இகழ்கின்றவர்கள் இன்னாரென விளங்குகின்றது.)

தாயுமானவர்பாடல்.

என்னையேஎனக்களித்த.
அதுதானாகநிற்க.
நீதானாகநிற்க.
சச்சிதானந்தசிவந்தானென்பதெந்நாளோ.
தானவனாந்தன்மையெய்தி.
நீயேநானென்றுநினைப்புமறப்புமறத்
தாயேயனையவருடந்தாய்.
தன்மயமாய்நின்றநிலைதானேதானாகிநின்று
னின்மயமாயெல்லாம்நிகழும்.
நீநானாகிநிற்பதெந்நாளோ.
அத்துவிதமானஐக்யஅனுபவமே.
மறையென்னையுநீதானாகச்சொல்லாதோ.
நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே
யின்றெனக்குவெளியானால்.

நானவனுய்நிற்பதென்நாள்.

நீயெனநானெனவேறில்லை.

தன்னையறிந்தவர்தம்மைத்தானுகச்செய்தருளுஞ்சமத்தை.

ஒன்றிரண்டாய்விவரிக்கும் விவகாரங்கடந் தேழாம்யோகபூமிநின்று தெளிந்தவர்.

யானெனலகாணேன்பூரணநிறைவில்யாதினுமிருந்தபேரொளிநீ
தானெனநிற்குஞ்சமத்துறஎன்னைத்தன்னவனுக்கவுந்தருங்காண்
வானெனவயங்கியொன்றிரண்டென்னுமார்க்கமாம்நெறிதந்துமாறுத்
தேனெனருசித்துளன்பனைக்கலந்தசெல்வமேசிற்பரசிவமே.

அங்கிருநீயெங்கிருந்தும்அதுவாவைகண்டாய்.

தானுனதன்மயமேயல்லாலொன்றைத்தலையெடுக்கவொட்டாது.

அதுவானுல்அதுவாவர்அதுவேசொல்லும்.

தன்னிலேதானுய்அயர்ந்துவிடுவோமென.

இந்தப் பிரமாணங்களினுல் அகம் பிரமவாதம் வேதசாஸ்திரங்களுக்குச் சம்மதமா மெனவும் பௌத்த மல்லவெனவும் மாயாவாத மலலவெனவும் ஏற்பட்டன.

மாயையை முதற்காரணமாகச்சொல்லும் சைவமே மாயாவாதமதமேன்பது.

"சைவம் மாயாவாதமானுல் சைவப் பெயர் தாங்கினுரெல்லாம் மாயாவாதிகளாவரன்றே?" என ஒருகேள்வி கேட்டு, எதிரிகளினுடைய சித்தாந்தத்தை யுணராதவரானுர். இவர் "வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர்" என்பாரைப்போன்றவர். நாமாவது மற்றவராவது சைவத்தை மாயாவாதமெனச் சொல்லவில்லையே. எவ்விடத்திலாவது சைவமென்ருவது சிவனென்ருவது சொல்லியிருந்துவிட்டால் அதை யெனது மதமென்றுசொலலப் பேராவல் கொள்ளுகின்ருர். சைவத்தில் அத்துவித சைவம், விசிஷ்டாத்துவித சைவம், துவிதசைவம், அபேதசைவம், வீரசைவம், தாந்திரிக சைவ முதலிய பலசைவங்க ளிருக்கின்றன. அவற்றில் மாயையை முதற்காரணமெனச் சொல்லும் சைவத்தையே நாம் மாயாவாதம் என்கின்றேம். மற்ற அத்துவித சைவத்தை அதாவது சிவாத்துவித மதத்தை மாயாவாதமென யாம் சொன்னே மில்லை. ஸ்ரீமாணிக்க வாசகர், ஸ்ரீஞானசம்பந்தர் முதலியவர்கள் அனுசரித்த சைவத்தை நாம் மாயாவாதமெனச் சொல்லுகின்றேமா? அவர்களெல்லாம் சிவனை முதற்காரணமாகச் சொல்லும் அத்துவித சைவர்களாயிருப்பதால் அவர்களை யொருபோது மெவரும் மாயாவாதிகளெனச் சொல்லார். அன்றி அவர்களெல்லாம வேதசாஸ்திரங்களையும் வைதிக கர்ம்மங்களையும் அத்துவிதத்தையும் பூஷிப்பவர்கள்; இவரினத்தாரைப் போலத் தூஷிப்பவர்க ளல்லர்.

"சீநிவாசசாஸ்திரியார் சில சமயம் யாம் அசைவனென்றெழுதுகினும் சில சமயம் யாம் சைவர் என்று முந்துகிறார்" எனக்கூறித் தம தியற்கைக் குணத்தைக் காண்பிக்கிறார். இவ்வாறு சொல்லிவிட்டதால் இவர் சைவராய்விட்டதாக மனப்பால் குடிக்கிறார் போலும்! இவ ரின்னானென வெளிப்பட்டா ரில்லை. இவர் குலம், கோத்திரம், ஜாதி, இருப்பிடம், அந்தஸ்து, பேர் முதலியவைகளின்னவென்றும், இன்ன சைவனென்றும், இவ்வளவுகாலத்துச் சைவனென்றும், நவீன சைவனென்றும், பரம்பரைச் சைவனென்றும் காட்டாமலே ஷை சாஸ்திரியாரவர்களை யொதுக்கினதாய்ச் சொல்லுகின்றார். இவருடைய வாக்கே யிவரது நிலைமையைக் காட்டுகின்றது. ஆதலால் இப்படிப்பட்டவரினின்றும் அவர் முன்னமேயே யொதுங்கித்தா னிருக்கின்றார். இவர் ஒதுக்கவேண்டாம்.

கொம்புள தற்கைந் துகுதிரைக்குப்பத் துமுழம்
வெம்புகரிக்காயிரந்தான்வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற்றெரியாத தூரத்தே
நீங்குவதேநல்லநெறி.

தீயாரைக்காண்ப துவுந்தீதேதிருவற்ற
தீயார்சொற்கேட்பதுவுந்தீதே—தீயார்
குணங்களுரைப்ப துவுந்தீதேயவரோ
டிணங்கியிருப்பதுவுந்தீது.

மருவுகமாசற்றார்கேண்மையொன்றீத்தும்
ஒருவுகவொப்பிலார்கேண்மை.

இவை முதலிய நீதி வாக்கியங்களின் பொருளைச் சிந்தித்தே அவர் ஒதுங்கியிருக்கின்றார். வேதாகம இதிகாச புராணங்கள் இவரையும் இவர் கொள்கையையும் ஒதுக்காமல் அங்கீகரித்த பிறகு இவர் பிறரை யொதுக்க வருவாராக.

சிவனை முதற்காரணமாகச் சொல்லுஞ்சைவர் மாயாவாதியன்றென்பது.

"அவர் சைவராக முந்துகிறபோது மாயாவாதமருள் அவர் தலைமேலேறி வியாபியாமற்போகாது" எனக்கூறி, தமது மாயாவாதத்தைப் பிறர் தலைமேலும் ஏற்றப்பார்க்கின்றார். "நாம்தான் மாயாவாதியாய் விட்டோமே; பிறரை அதினின்றும் தப்பவிடுகிறதா?" என்கிற வெண்ணத்தோடு பிறர்மேல் சொல்லப்பார்க்கிறார். இது பொறாமைக்குணம். தமக்குவந்த தரித்திரத்தை யொழிக்க வகைதேடாமல் செல்வரை யெல்லாம் தரித்திரராக்கப் பார்க்கிறார். இந்த அழுக்காறு இவரைக்கெடுத்துவிடும். இவரைக்கெடுப்பா ரொருவரு மிருக்கத் தேவையில்லை. அழுக்காறே கெடுத்துவிடும். அதுபற்றியே திருவள்ளுவநாயனார்

அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னார்
வழுக்கியுங்கேடீன்பது.

எனக்கூறினர். அவர் மாயாவாதசைவ ரன்றென முன்னரே கூறி விட்டமையால் மாயாவாத மருள் அவர்தலைமே லேறாது. அதுமாத் திரமா? அவர் காலையும் பற்றாது. அவர் சன்னிதானத்திலேயே மா யை தலைகாட்டாதென்றால் அவர் தலைமேலா போய் ஏறப்போகிறது? மாயை எவர்தலையில் ஏறுமென்றால் பொருளல்லவற்றைப் பொருளா கக் கொள்வோரிடத்திலும் பொருளைப் பொருளாகக் கொள்ளாதவ ரிடத்திலுமே யேறும் என்பதாம். அத்துவிதிகள் பொருளைப் பொரு ளாகக் கொள்பவராதலாலும் தோற்றத்தைத் தோற்றமென்று சொ ல்லி அது பொருளல்லவெனக் கழிக்கின்றவராதலாலும் அவரிடத்தில் மாயாவாதமருள் நெருங்க அஞ்சும். அதுபற்றியே பொருளல்லவற் றைப் பொருளென்றுணர்தலை மருள் என்றார் நாயனார். இந்தத் துவித சித்தாந்திகள், பொருளல்லாத் தோற்றவுலகைப் பொருளாக் கொள்ளு நீரராகலின் அவர் தலைமேல் மருள் குடிகொண்டு, இந்தவிடந்தான் நமக்குச் சொந்தமெனக் கருதி யிறங்காது. இவரினத்தார் பொருளல்ல வற்றைப் பொருளென வுணர்பவரெனப் பலவருஷங்களாக யாம் காட்டியே வருகின்றோம்; அத்துடன் பொருளல்லவற்றைப் பொரு ளல்லவெனக் கழித்து, பொருளைப் பொருளாகக் கொள்பவர் அத்து விதிகளெனவும் காட்டிவருகின்றோம்.

"யாம் மாயாவாதமென்றது ஆகமசைவமேயன்றி வேதசைவம் ஆகாதெனின்" என்கிறார். பிரமகீதையில் கேனோபநிடதத்தில் அத் துவித சித்தாந்தத்தைச்சொல்லி, ஐயன் சைவாகமத்துக்கும் இதுவே பொருளெனச் சொல்லி யிருப்பதாலும், சூதசங்கிதை வேதாவிரோத முரைத்த அத்தியாயத்தில் "மிருதி புராணம் சைவாகமந் தருக்கம் பாரதமுன் விளம்பு நூல்கள் கருதுறும் அத்துவித பரமே யுரைக்கு" மென்று கூறியிருப்பது பற்றிச் சைவாகமமும் அத்துவிதமே யென ஏற்படுவதாலும், சிவாகம முடிவான சிவஞானபோதமும் அத்து விதமே கூறுவதாலும், அச்சிவஞானபோதத்துக்கு (வேதமுழுமை க்கும் பாஷ்யஞ்செய்த) வித்தியாரணியசுவாமிகள் அத்துவித பரமா கவே பாஷியஞ்செய்திருப்பதாலும், "பாசபத்ஸ்ததாஜீவப்பாசமுத்த ச்சதாசிவா' 'ஜீவச்சிவச்சிவோஜீவச்சற்ஜீவக்கேவலச்சிவா" "சர்வசா க்ஷிசிவோகம்" "பிரத்யகாத்மாசிவோகம்" என இவ்வாறு ஆகமமுடி வும் அத்துவிதத்தையே சொல்லுவதாலும் யாம் ஆகமசைவத்தை மாயாவாத சைவமென வொருபோதுஞ் சொல்லோம். பின்னை இவ ருடைய துவிதசைவத்தையே மாயாவாதமெனச் சொல்லுகின்றோ மென்றறிக.

வைதிகத்தில் சைவம் அடங்குமென்பது.

"இவரது (சீநிவாசசாஸ்திரிகளது) வாதாரம்பத்தில் வைதிகம் வேறு, சைவம்வேறு என்று தத்துவ விசாரஞ் செய்தாராகையால் இவர் சைவபேதங்கூறித் தப்பமுடியாது" என்கிறார். வைதிகம் என்

பதில் சைவம் அடங்கிவிட்டமையால் வேறு பிரிப்பது ஆவசியகமன்றாயினும் சைவமென்று பேர்வைத்துக்கொண்டு வேத தூஷணஞ்செய்கின்றாராகையால் அவரினின்றும் வேறுபிரிந்துகொள்வதற்கே ஸ்ரீசிவாசசாஸ்திரியாரவர்கள் வைதிகசைவம்எனச் சொல்கின்றார். இது நூதனவழக்கே. இது நூதனவழக்கென்றும் வைதிகமென்பதில் சைவம் அடங்கி யிருக்கின்ற தென்றும் இவர்க் கபின்ன சிநேகரான சோமசுந்தரநாயகர் சொல்லியிருப்பதைக் காண்க. இக்காலத்தில் சோமசுந்தரநாய்க்கர் என்பவரும் இன்னும் சிலரும் தம்மைச் சைவரென்று சொல்லிக்கொண்டு, வேதம் சாமானிய நூலெனவும், பசுநூலெனவும், மோகநூலெனவும், விபசரிக்கும் நூலெனவுஞ் சொல்லுகின்றார்களல்லவா? அவர்களினின்றும் தாம் வேறுபடும் பொருட்டும் ஸ்ரீசம்பந்தசுவாமிகள் முதலானோரை இவர்களினின்றும் வேறுபடுத்துவதற்கும் வைதிகசைவரென்று சொன்னாரேயன்றி, மற்றப்படி வைதிகசைவமென்பது நவீனவழக்குத்தான். இது விஷயமாகப் பத்திரிகாபிமானி ஒருவர் நந்தனஹு ஆவணிமீ அ-உ ப்ரம்ம வித்தியாவில் நீளமாய்ப்பேசி, சோம-நாயகரது அநேகமுரண்களையும் ஆபாசத்தையும் காட்டியிருக்கிறார். சைவரென்னில் வேததூஷகரெனப் பொருள்படா திருக்குமாறு வேததூஷகரல்லாத வைதிகர், வைதிகசைவரெனச் சொல்லிக்கொள்ளவேண்டுவ திக்காலத்துக்கு ஆவசியகமாம். மேல் "வேத சைவமும் இவரைத்தீண்டவஞ்சும்" என்று சொல்லி, இப்படிச் சொல்லிவிட்டதினால் வேததூஷணஞ் செய்த அதிபாதகம் மறைந்துபோமென நினைக்கின்றாராக்கும்! வேதம் சர்வோத்கிருஷ்டமான நூலென்றும், முதனூலென்றும், மோக்ஷநூலென்றும், சுதந்தரநூலென்றும், மற்றவைகள் அதைச் சார்ந்தே பிரமாணங்களென்றும் சொல்லும் வைதிகசைவோத்கிருஷ்டரைத் தீண்ட வஞ்சுமானால் அவைகளுக்கு மாறாக அதைச் சதா தூஷித்துக்கொண்டே திரியும் அதிபாதகர்களையா வைதிகசைவம் அஞ்சாமல் தொட்டுக்கொள்ளும்! ஆ! ஆ!! விந்தை! விந்தை!! வெகு விந்தை!!! இவர் வைதிகசைவத்துக்கும் வேதத்துக்கும் ஆசைகொள்ளுவது ஏழை ராஜனாக ஆசைகொள்ளுவதுபோலாம்.

"சிவாசசாஸ்திரியார் அல்லது அவரது அபிமானிகள் சைவமே மாயாவாதமென்று நாயகரவர்களது வாதத்தை மறுத்ததுண்டெனில் அதனையெடுத்து அது அனுவாதமுகத்தால் நமது பானுமூர்த்தி விளக்கி மகிழ்வாராக" என ஒன்றுமறியாது போலச் சொல்லி நடித்து, இந்தப்பூனையும் பால்குடிக்குமாவென வேஷம்போடுகிறார். நாம் ப்ரம்ம வித்தியா சு-வது புத்தகம் கக-வது கச-வது பத்திரிகைகளில் இது விஷயமாய் விரித்தெழுதியிருக்கவும் அதன்மேல் விகடதூதனில்வந்த அற்ப கண்டனைக்கும் பலமாக ஷைபுத்தகம் கசு-வது பத்திரிகையில் தும்சஞ்செய்திருக்கவும் ஒன்றுமறியார்போ லிங்ஙனம்பேசுதல் ஆண்மையாமா? இப்படி யெழுதிவிட்டால் கண்டனைசெய்த விஷயம் ஒருவ

ரும் அறியாரென நினைக்கின்றாராக்கும்! சோம. நாய்க்கரை மாயா
வாதியென்று சொன்னதோடு விடவில்லையே. அவரது சுருதி யுக்தியனு
பவமில்லாப் போலிச் சைவத்தின் தோஷங்களெல்லாவற்றையு மல்ல
வோ காட்டியிருக்கின்றது? இந்தத்தோஷங்களை நிவர்த்திசெய்யத் தம்
மாலாகாதென்றல்லவோ முடிவுரையென்னும்வேஷம்போட்டுக்கொண்
டார்? அன்றிச் சங்கராசாரியரை ஷை சோம. நாய்க்கர் தூஷித்து
எழுதிய விஷயத்துக்கு நாம் எழுதிய மறுப்பு மிகப் பெரிய விஷயமா
யிற்றே. அதற்கெல்லாம் பதிலெழுதாமல் ஓடியொளிந்த சங்கதி
பிரத்தியக்ஷமாக, மகாமேருமலையைச் சாண் வஸ்திரத்தால் மூட
நினைத்ததுபோல இவர் அவற்றை மறைக்கப்பார்ப்பது கூடுமோ? "அத
னைப் பின்னர் விசாரிப்பாம்" என்று ஒருவீரியம் சொல்லுகிறார். ஒரு
வீரன், தன் பகைவனது தேகத்தை அஸ்திரத்தால் சல்லடைக் கண்
களாகத் துளைக்க, பகைவன் வீரனைநோக்கி, "பின்னா லுன்னை விசா
ரித்துக்கொள்ளுகிறே" னென்று சொல்வதுபோலப் பதில்சொல்லா
மல் ஓடி யொளித்துக்கொண்ட அவமானத்தை நிவர்த்தித்துக் கொள்
ளச் சத்தியின்றி, 'பின்னர் விசாரிப்பாம்' எனக் கம்பீரமாய் ஆம் விகுதி
கொடுத்துச் சொல்வதென்ன பேதைமை! அத்வைதிகள் மாயா
வாதிகள் அல்லவென்பதற்கும் இவர் மதத்தினரே மாயாவாதிகளென்
பதற்கும் ஏற்ற நியாயங்களை ப்ரம்மவித்தியா ௯-ம் புத்தகம் ௧௧-வது
௧௪-வது ௧௬-வது பத்திரிகைகளில் அநுவாதித்துத் தீர்மானித்திருக்
கின்றோமாகலின் அவற்றை ஆண்டுக் கண்டு தெளிந்திடுக.

சிவஞானபோதம் அத்துவிதசித்தாந்தமென்பது.

"சிவஞானபோதம் சைவநூலென்பது இவருக்கு மொத்த
துணிபு" என்கிறார். இவருக்கு மென்பதால் அரக்கோணத்தாருக்கு
மொத்தத்துணிபுஎன விளங்குகின்றது. இவர் அதை ஒத்துக்கொண்டதி
னாலென்னபயன்? அது அத்துவித சித்தாந்தமானமையின் அதை யிவ
ரொத்துக்கொண்டதினால் பயனொன்றுமில்லை. சிவஞானபோதத்தை
யிவரொத்துக்கொண்டதாய்ச் சொல்வதினும் பார்க்க இவரினத்தார்
செய்த அதனுரையை யொத்துக்கொண்டோ மென்பது உசிதம். "சட
கோபன் பாட்டை நம்பிச் சபைக்கேறாதே" என வைணவர்க்குள் பழ
மொழியொன் றுண்டு. அது அத்துவிதமா யிருப்பதால் அங்ஙனங்
கூறற் கிடனாயிற்று. அதுபோலச் சிவஞானபோத மூலத்தை நம்பி
வாதத்திலிறங்கினால் அது இவரினத்தாரை நட்டாற்றில் விட்டுவிடும்;
அது அத்வைதமாயும் துவிதசண்டமாருதமாயு மிருக்கின்றமையா
னென்க.

தாயுமானவர் அத்துவிதத்தை அநுசரித்தே யுலகம் பொய்யென்றாரென்பது.

"அதில் பேய்த்தேர் என்று கூறியிருக்கின்றது" என்றார். இந்தச்
சிவஞானபோதம் வேதமுதலிய கலைகளை யொத்துச் சிவனொன்றே

மூக்கால சத்துப் பொருளென்றும், பரிபூரணப் பொருளென்றும், மற்றப் பசுபாசப்பொருள்கள் அசத்து அல்லதுசத்துப்போலி அல்லது அநிர்வசனீயப் பொருளென்றும் கூறுவதால் பேய்த்தேர் எனச்சொல் வது நியாயமே யாம். பேய்த்தேரெனக் கூறுகின்ற தென்பதற்கு வேதமுதலிய பிரமாணங்களையெல்லாம் விசேஷமாக நாமும் அத் வைத சித்தாந்தியும் காண்பித்திருக்கின்றோம். அவ்விடத்தில் காண லாம். ஆகமமுடிவான சிவஞானபோதமும், வேதமுடிவான வுப நிஷத்துகளும் உலகு பொய்யென்று கூறுவதனாலும் இவ்விரண்டு நூல்களுக்குமொத்து மற்றப் புராணாதிகளும் பேசுவதனாலும் வைதி கர்களும் ஆகமஸ்தரும் அத்வைத சித்தாந்திகளும், த்வைத விரோதி களு மானார்கள். இவர் வேதாகமங்களுக்கு மாறாகப் பேதவாதஞ் செய்வதால், இவர் வேதாகம பாஹியரென்றே தள்ளத்தக்கவரானு ரென்க. இதற்குப் பின்னர் "அவ்வாறே தாயுமானவரும் கூறினர். சங்கராசாரியாரும் உலகத்தைப் பேய்த்தேர் என்று கூறினர். தாயு மானவர் சிவஞானபோத முரைத்த மெய்கண்ட தேவனைப் பின்றொ டர்ந்து உலகம் பேய்த்தேரென்றனரா? சங்கராசாரியரைப் பின்றொ டர்ந்து உலகம் பேய்த்தேரென்றனரா? என்று யோசிக்கின் அவர் மெய்கண்ட தேவனைப் பின்றொடர்ந்து கூறினரென்பது அவரது ஏனைய வாக்கியங்கள் ருசுப்படுதலும். அவர் 'மெய்கண்டான் பொன் னடியை மேவுநாளெந்நாளோ' என்று கூறியதனோடு 'யாங்களே கட வுளென்றிடும் பாதகத்தவரும் என்று சங்கராசாரியரையும் அவரி னத்தவராகிய அகம்பிரமவாதிகளையுந் தூஷித்து ஒதுக்கியிருக் கின்றனர். இதனை யறியாது தாயுமானவர் கூறியது பௌத்தர்களை யென்று பாநுமூர்த்தி பரக்கத் தீட்டினர்" என்று சொல்லியதி லுள்ள அனுசிதங்கள் அம்மட்டிம்மட்டல்ல. உலகம் பொய்யென்று சுருதியினாலும் யுக்தி யனுபவங்களினாலும் சோம. நாய்க்கரோடும் பிறரோடும் வாதஞ்செய்து நாமும் பிறரும் வெற்றி பெற்றிருக்க, அதன்பேரில் கட்சிசெய்து தம் நியாயத்தைச் சொல்வதை விட்டு 'அவனைப் பின்றொடர்ந்து சொன்னரா?' இவரைப் பின்றொடர்ந்து சொன்னரா? என ஆண்மையின்றிப் பேசுவ திவர்க்கே தகும்.

"உலகம் சத்தா? அசத்தா?" என்னும் விஷயத்திலும் அதைச் சார்ந்த மற்ற விஷயங்களிலும் உலகம் பொய்யென்று ஸ்தாபித்திருப்ப தால் அதை மறுத்துப் பேசமுடியாமல் வேறு வழியினுழைந்து தெரி யாத ஜனங்களைப் பசப்பி யேமாற்றப் பார்க்கின்றார். 'மெய்கண் டான் பொன்னடியை மேவுநாளெந்நாளோ' என்று சொன்னதினால் வேதாகம புராணேதிகாசங்களுக்கு மாறாகப் பொய்யான வுலகத்தை மெய்யென்று சொல்லவேண்டுமோ? கானலை மெய்யென்று சொன் னால் எல்லாரும் பரிகசிப்பார்களென்றெண்ணி, மெய்யென்றும் பொய் யென்றும் வாயினாற் சொல்லாமல் 'அவர் சொன்னபடி சொன்னரா

இவர் சொன்னபடி சொன்னூரா?' என்று போக்குக்காட்டிப் பேசுகின்ருர். கானல்நீர் பொய்யா? மெய்யா? பொய்யென எவரும் ஒத்துக் கொள்வார்கள். இவர் உலகை மெய்யென்கிருர், மெய்யான வுலகிற்குப் பொய்யான கானல்நீர் திருட்டாந்தம் சொல்வார்களா? பொய்யான கானல்நீர் திருட்டாந்தஞ் சொன்னதினுல் தாயுமானவர் உலகம் பொய்யென்று ஒத்துக்கொண்டவராகின்ருர். அதுமாத்திரமா? "அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே" என்று சொல்லி, அதனேடு "அம்மாயை யில்லாமையே யாம்" என்கிருர். தாயுமானவர் மாயையை யில்லதென்கிருர். மாயை யில்லதாகிறபோது அதன் காரியமான வுலகுமாத்திரம் உள்ளதாய்விடுமா? காரணமே யில்லதாகிறபோது காரியம் உள்ளதாய் விடுமா? மற்ருெரு இடத்தில் "அகிலம் மாயை" என்று சொல்லி, அதற்குத் திருட்டாந்தமாக முயற்கொம்பு, கானல்நீர், ஆகாயதாமனா இவைகளை உபமானமாகச் சொல்லுகிருர். இவற்றில் முயற்கொம்பு, ஆகாயதாமனா இவ்விரண்டு திருட்டாந்தங்களும் இவர்க்கு விரோதம். இவர்க்கு விரோதமான அவைகள் அத்துவிதிகளுக்குச் சாதகம். மற்ருெரு இடத்தில் "கடத்தை மண்ணெனல் உடைந்தபோதோ, இந்தக்கருமச் சடத்தைப் பொய்யெனல் இறந்தபோதோ சொலத்தருமம்" என்கிருர். கடத்துக்குப் பொருள் மண்ணைத்தவிர முக்காலத்து மில்லாமையால் கடமாயிருக்குங் காலத்திலேயே மண்ணென்றே சொல்லவேண்டு மென்பதவர் கருத்து. இன்னும் பல விடங்களில்,

"முற்றுமில்லாமாயை. பொய்யான வுலகத்தை மெய்யாநிறுத்தி யென் புந்திக்கு ளிந்திரசாலம் சாதிக்குதே. ஜகம்பொய்யெனத் தம்பட்டம் அடியே. அகிலவாழ்வத்தனையும் சொப்பனங்கண்டாய். ஜகமனைத்தினையும் பொய்பொய்யென்று. பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுலகும் பொய்யெனவே."

என இவ்வாறு பல விடங்களிற் சொல்லியிருக்கின்ருர். உலகை இவ்வாறு பலவிதவாய்ப் பொய்யென்று சொல்லியிருக்க, மெய்யென்று சொல்லியிருப்பதுபோல் காட்டுவது நியாயமாமோ? சிவஞான போதம் "யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலின் சத்தேயறியாது அசத்திலது அறியாது" என்றும், "உணருரு அசத்" தென்றும் சொல்லுகிறதே யன்றி, கானலநீர்போல் உலகு உண்மை என்று பேதைமைத்தனமாய்ச் சொல்லவில்லை. கானல்நீர்போ லென்றதில் கானல்நீர் பொய்யாதலால் உலகும் பொய்யாம். 'மெய்கண்டான் பொன்னடியை மேவுநாளெந்நாளோ' என்றதற்குக் காரணம் அவர் ஓர் அடியராதல் பற்றி யென்க. திரு ஒற்றியூரிலுள்ள காவனங்களெல்லாம் பட்டினத்தடிகள் கூறியபடி கணநாதரானபோது பரமசிவனை வணங்கும் மெய்கண்டானை யோர் அடியராகக் கொள்வதிற் குற்றமென்னை? சேரமான் பெருமாணுயனுர் ஏகாலியின் திருநீற்றுப் போலியைக்கண்டு அவ்வேசாலியை அடியராய் வணங்கினுரொன்னின்,

உண்மையாகத் திருநீறு உருத்திராக்க மணிந்து பரமசிவனைப்பணியும் மெய்கண்டாரை அடியாராகக்கொள்வதிற் குற்றமில்லையே. சேரமான் பெருமாள் நாயனார் ஏகாலியை வணங்கினதினால் அவனது சித்தாந்தத்தையும் அவர் கொண்டவராகவேண்டுமோ?

"கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே
விண்டசிவவாக்கியர்தாள்மேவுநாள்எந்நாளோ"

என்றதால் அவர் கொள்கையையு மிவர் கொள்ளவேண்டுமே. ஜனகர், சுகர், ஸனகாதிகள் முதலானவர்களை யெல்லாம் வியந்து பேசியிருப்பதால் அவர்கள் கொள்கைகளை யெல்லாம் தாயுமானவர் கொள்ளவேண்டுமே. அவர்களெல்லாம் உலகைப் பொய்யென்று சொல்லும் அத்துவிதிகளாயிற்றே. அதுவெல்லா மிருக்கட்டும். தாயுமானவரால் கடவுளென வணங்கப்படும் பரமசிவன் சொன்ன ஈசுவரகீதை அத்துவிதமா யிருக்கின்றதே. அன்றிப் பிரமன் தேவர்களுக்கு அத்துவித உபதேசஞ் செய்தானெனவும், பிறகு பரமசிவனும் வந்து அதையே யுபதேசித்து, "நான்முகனு முரைத்த துங்கட்குண்மையிதே" எனச் சொன்னானெனவும் பிரமகீதை சாந்தோக்கிய உபநிடதத்திற் கூறுகின்றதே. அப்போது பரமசிவன் சொன்ன அத்துவித சித்தாந்தத்தை அனுசரித்துக் கானல்நீர் பொய்யென்று கொண்டதாய்ச் சொல்லவேண்டுமே. எந்த விடங்களிலும் உலகம் பொய்யென்று சொல்லி, அதற்கிணையாக வான்மலர், முயற்கோடு, கயிற்றரவு, கானனீர், மலடிமைந்தன், சொப்பனவுலகு, இந்திரசாலமாகிய இந்தத் திருட்டாந்தங்களெல்லாம் சொல்ல, அவைகளுக்கு மாறாகவுலகு மெய்யென்று சொல்லுவதும் அத்துவித சித்தாந்தத்தின்படி கானனீரை அவர் சொல்லவில்லை யென்று சொல்வதும் நகைப்பிற்கிடமாம் என்க. கானனீர் பொய்யல்ல, மெய்யென்று கூறும் பிரத்தியக்ஷவிரோத புத்திசாலிகளுக்கு நாம் யாது கூறப்போகின்றோம்! அத்துவிதத்திற்குத் துவிதம் சாதகமாயிருப்பதாலும் துவித சித்தாந்தத்தையாவது கூறி முத்தியில் பேதமில்லை சொல்வதும் அரிதாதலாலும் அதுவரையில் மெய்கண்டாரைக் கனஞ்செய்து துதித்தது நியாயமானதேயாம். அதனால் அவர் சித்தாந்தத்தையே முற்றும் அனுசரிக்கவேண்டு மென்பது சட்டமா?

'யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்' எனத் தாயுமானவர்சொன்னாரேயன்றி அவர் இன்னாரெனப் பெயரிட்டுச் சொன்னாரில்லை. "நானே பிரமம், நானே சிவன், அகம்பிரமாஸ்மி, சிவோகம்" முதலிய வாக்கியங்கள் வேதசம்மதமும் அவ்வேதாதாரத்தின் பேரில் பிரவர்த்தித்த ஸ்மிருதி புராண இதிகாசாதிகள் சம்மதமும் பெற்றனவாதலாலும் அப்பிரமாணங்களை முன்னரே விளக்கியிருக்கின்றோமாகையாலும் தாயுமானவர் ஷை பிரமாணங்களை அங்கீகரித்து அதற்

குக் கட்டுப்பட்டவராதலாலும் நானே பிரமம், நானே சிவன், சிவோகம் முதலிய வாக்கியங்களைப்போலத்

"தன்னையறிந்தவர் தம்மைத்தானாகச்செய்தருளும்சமத்தை.

அத்துவிதமானஐக்கியஅனுபவமே.

தன்மயமாய் நின்ற நிலை தானே தானாகிநின்றால் நின்மயமா எல்லாம் நிகழும் பராபரமே.

என்னைத்தானாக்கிக்கொண்டசமர்த்தைப்பார்தோழி.
அதுவானாலதுவாவர்அதுவேசொல்லும்.
யானெனல்காணேன்பூரணநிறைவில்.
என்னைத்தன்னவனாக்கவுந்தகுங்காண்.
நீயெனநானெனவேறில்லை.
நானவனாய்நிற்பதெந்நாள்.
மறைஎன்னைநீதானாகச்சொல்லாதோ.
சித்தந்தெளிந்துசிவமானோரெல்லோர்க்கும்.
நீயேநானென்றுநினைப்புமறப்புமற.
தானவனாந்தன்மையெய்தி.
சச்சிதானந்தசிவந்தானென்பதெந்நாளோ.
அதுதானாகநிற்கவுண்மைசெப்பியதுமல்லால்.
என்னையுந்தன்னையும்வேறு—வுள்ளத்
தெண்ணாதவண்ணமிரண்டறநிற்க."

முதலிய செய்யுள்கள் கூறியிருப்பதாலும் அவர் தம்மையே தாம் நிந்தித்துக்கொள்ள மாட்டாராதலாலும் அவர் அங்ஙனங் கூறியது பௌத்த சித்தாந்திகளையே யென்பது திண்ணமென்க. இனிப் பௌத்த சித்தாந்திகளை மறுத்தாரென்பதைப் பற்றிப் பின்னர்க் கூறுவாம்.

சூதசங்கிதை அத்துவித சித்தாந்தமென்பதும், வேதத்தில் சிவனே பரத்துவமென்பதும்.

"சூதசங்கிதையில் அகம் பிரமவாதங் கூறியது என்னை யெனின் வேதமுதலிய கலைகளில் நாராயணன் இந்திரன் முதலானோரைப் பரம் என்று கூறியதுபோலாம்" என்றதிலுள்ள ஆபாசங்களையு மெடுத்துக் கூறுவாம். வேதத்தை யாராய்ச்சி செய்தோர்: பரமசிவனே பரமெனக் கூறியதோடு, இதரதேவதைகள் பரமன்றென நியாயவாயிலாக எவ்வளவோ காட்டியிருக்கவும் பெயர்த்தும் அங்ஙனங் கூறுவது விசாரணையின்மையே யாம்.

அப்பயதீக்ஷிதசுவாமிகள் இயற்றிய சிவதத்துவவிவேகம். (சிவஞானசுவாமிகள் மொழிபெயர்ப்பு)

விச்சுவாதிகனும் விசுவசேவியனும் விமலனீயேயெனமறைக, ணிச்சயமாக முழக்கவுமறியா நீசர்தாம் பிணங்குவரந்தோ, மச்சரத்தனக்கே நீங்கிழைத்தவர் தம்வாழ்க்கையும் பயன்படாதாலத், துச்சர்சொற் கேட்டோர்க் கிறுதலே தண்டஞ்சொற்றிடு நூலெலாமன்றே, (உ)

மூளரியோன்முதலாஞ்சுரரெலாம்பூதமுதலவற்றோடுதித்துள்ளோ
ரளவிடுந்தலைமையாளரொன்றவரையகற்றிமால்விடையவனினையே
வளமுறுமெல்லாத்தலைமையுமுடையோன்வருமுதற்காரணனல்லோ
ருளமுறுதியானப்பொருளெனச்சிகைதேர்ந்துரைப்பவுமயங்குவர்சிலரோ. (கஉ)

இச்செய்யுள்கள் இனி அவரை யிவ்வாறு பேசவொட்டாது நாவை யுள்ளடக்கும்படி செய்யுமெனக் கருதுகின்றோம், எந்தமத வாதிகளும் வேதம் பலபொருள்கொண்டு முடிவதாகச் சொல்லுகின்றனரில்லை. வேதத்திற்கூறிய பொருளொன்றே யென்றும், அப்பொருளே தாம் கொண்ட கடவுளென்றுஞ் சொல்லுகின்றனர். யார்யார் என்னென்னபேர் சொல்லிக்கொண்டாலும் அவரவர்க்கும் பரமசிவனொருவரே அந்தந்த வடிவமாய் நின்று அனுக்கிரகஞ் செய்கின்றமையால பரமசிவன் பரம்பொருளாவதற்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை. சில ரூபத்தை வணங்குவார்க்கும் சிவன் வந்து அருள்செய்கின்றாரென்னின் பரமவியூகத்திற் சேர்ந்த திரிமூர்த்திகளு ளொருவரான நாராயணன் முதலினோரைத் தியானிப்பவர்க்கு அவரிடத்தில் அந்தரியாமியாய் இருக்கும் பரமசிவன் அனுக்கிரகஞ் செய்யக் கேட்பானேன்? பரமேசுவரன் பெருங்கருணைக் கடலும் வள்ளலுமானதால் தம்மை வணங்குபவர்க்கு மாத்திரம் அருள் செய்வாரென்று சொல்லப்படாது. தம்மை யார் எந்தெந்த வடிவமாகப் பாவித்தும் பொருள் செய்தும் வணங்கினாலும் அவரவர்களுக்கு அவ்வவ்வடிவமாய் நின்று அருள்செய்வது பரமசிவன் கருணைக்கு அழகும் இயற்கையுமாம். வேதப்பொருளான பரமசிவனே வேறுவேறு வடிவமாக அவரவர்கள் கொள்வதினால் வேதத்துக்கு யாதொரு பாதகமுமுண்டாகாது; எல்லாமாய் நிற்பதும் அவராதலின் என்க. "என்னைத்தான் வணங்க வேண்டும், எனது வடிவத்தைத்தான் தியானிக்கவேண்டும். அவர்களுக்குத்தான் அருள்செய்வேன், மற்றவர்களுக்கு மருள்செய்வே"னென்பது அருட்கடலான பரமசிவன் சுபாவத்துக் கொவ்வாமையின் அஃது பொருந்தாமை காண்க. தம்மைவிட்டு வேறு கடவுளை வணங்குபவர்களைக் கல்லாலடித்துக் கொல்வேமெனவும் இம்மாதிப் பிறவும சொல்லும் கடவுள்: பைபில் கடவுள் முதலிய கடவுளுக் கிலக்கிணமாம். வேதப்பிரமாண வாதிகளில் யார் யார் எந்தெந்த மூர்த்தியைச் சொன்னாலும் அவைகளெல்லாம் வேதாந்தப் பொருளான பரமசிவனிடத்திலேயே நிலைபெறுமென்று, சைவவிசிஷ்டாத்துவித பாஷியக்காரரான நீலகண்ட சிவாசாரியாரவர்கள் உரைத்திருக்கின்றனர். பரமசிவன் தம்மைவிட வேறு தேவதைகளை வணங்குவோர்க்கும் பொதுவாய் அனுக்கிரகஞ் செய்கின்றாராகலின், தம்மை நேரே வணங்குவோர்க்குச் சிறப்பா யனுக்கிரகம் செய்யமாட்டாரென்று எந்த மூடர்க்கேனும் சொல்ல நாவெழுமா? பொதுவாய் எல்லா மதத்து ஏழைகட்கும் தருமஞ் செய்யும் ஓர் வள்ளல்: சிறப்பாய்த் தனது மதத்து ஏழைகட்குத் தருமஞ் செய்யானோ? எல்லோருக்கும்

பொதுவாய்த் தருமஞ் செய்தது கொண்டு அவ்வள்ளலை யிகழலாமா? அங்ஙனமே யிதரதேவதா பத்தர்களுக்குப் பொதுவாய் அனுக்கிரகஞ் செய்தல் காரணமாகப் பரமசிவனை வெறுக்கலாமா? சிறப்பாய் நேரான தமது பத்தர்க்கு அனுக்கிரகஞ் செய்யமாட்டாரென்று நினைக்கலாமா? செய்யமாட்டாரென நாமே நினைத்துக்கொண்டு அவர் பேரில் குற்றங் கூறலாமா? பரமசிவன், தம்மை வணங்கும் சிவபத்தர்களுக்கு மாத்திரம் அருள் புரியவேண்டு மென்றும், இதர தேவதாபத்தர்களுக்கு அருள் புரியப்படாதென்றும், மருள்புரிய வேண்டுமென்றும் நாம் சொல்லலாமா? அப்படிச் சொல்வோமானால் நம்மைப் பொறாமைக்குண முள்ளவர்களென்றன்றோ சொல்வார்கள்? நமது பொறாமைக் குணத்தால் அவரையும் பொறாமைக் குணத்தராக்கப் பார்ப்பது நியாயமா? அப்படியாக்க நாம் பார்த்தாலும் சகல குணமேருவான அவர் அங்ஙனமாவாரா? அங்ஙனமாவாரென்னின் அவரைக் கடவுளென்று யார் நினைப்பார்கள்? அப்படிப்பட்டவர் கடவுள்தானவாரா? அளவு கடந்த அருளுடைய பரமசிவனை அளவுக் குட்படுத்தலாமா? நாமுட்படுத்தினாலும் அவருட்படுவாரா? உட்படுவாரானால் அவரைக் கடவுளென நாமெப்படி நினைப்போம்? எப்படி வணங்குவோம்? இப்படிப்பட்ட ஆக்ஷேபங்கள் வெகுவாயுண்டாவதால் நாராயணன் முதலானவரைப் பரமென்று வேதங் கூறுவதாய்ச் சொல்லிக் குற்றப்படுத்துங் கூற்று, பயனில் கூற்றாய்ப்போனமை காண்க. ஆதலால் நாராயணன் முதலானோரைப் பரமென்று கூறுவதாயிருந்தாலும் அதனால் அவ்வேதத்திற்கும் வேதப்பொருளான பரமசிவனுக்கும் பெருமையே யொழியச் சிறுமையில்லை. பொறாமைக் குணத்தாலும் அவைதிகத் தன்மையாலும் இவர் போன்றார் சிலர்: இப்படிப்பட்ட குற்றங்கூறி வேதத்தையும் வேதாந்தப் பொருளான பரமசிவனையு மிகழ்ந்து அதிபாதகத்தை யடைகின்றார்கள்.

வேதம் பல கடவுளைச் சொல்வது உண்மையானால் வேதப்பிரமாணத்தால் சிவனே பரமென்று ஸ்தாபித்த லில்லையாம்; இல்லாதபோது இதரப் பிரமாணங்களைக்கொண்டு ஸ்தாபித்தலினால் கௌரவமில்லையாம். அப்போது வேதப்பிரமாணப்படி சிவனுக்கே பரத்துவமென்றுசொல்ல இடமில்லாமற் போகின்றது. இது சிவோத்கிருஷ்டவாதிகளுக்கு அவமானமும் வெட்கமுமாம்! இவ்வாறு வேதத்தில் பல கடவுள் சொல்லுகிறதென்று சொல்லுவோர் மருளுடையோரேயன்றித் தெருளுடையோரன்று. வேதத்தில் பலகடவுளுபாசனைக்காகச் சொல்லிருக்கின்றதைப்பற்றி இவர் மருளுகின்றாராக்கும்! உபாசனையினிமித்தம் பல மூர்த்திகள் சொல்லியிருந்தாலும் அம்மூர்த்திகளினிடத்து அந்தரியாமியாய் நின்று அருள்புரிபவர் பலரென்று சொல்லவில்லையே!

ஒருவரென்றுதானே சொல்லுகின்றது. அந்தவொருவர்தான் பரமசிவன். வேதத்தில் பலமூர்த்திகள் சொல்லியிருந்தாலும் சச்சி

தானந்த நித்திய பரிபூரணப்பொருள் பலவென்று சொல்லவில்லையே. ஒன்றென்றுதானே சொல்லுகின்றது. மணிகள் பலவாயிருந்தாலும் அவற்றினுள் ஊடுருவிநிற்கும் நூலொன்றுதானே. அதுபோலப் பிரமவிஷ்ணுவாதி தேவதைகளை அவரவர் கருமத்துக்கும் பக்குவத்துக்கு மீடாகப் பரம்போலக் கூறியிருந்தாலும் அவர்களுள் சச்சிதானந்த நித்திய நிர்ம்மல நிர்ச்சல நிர்க்குண நிரஞ்சன நிஷ்களப்பொருளான துரியசிவ னொருவரே பரமன்றிப் பலரன்றே. இவர் நூலவிசாரணை புரிபவராகலின் இவருடைய புத்தியும் அவ்வாறுதானிருக்கின்றது. பரமசிவன் ராஜனைப்போன்றவர்; இதரதேவதைகள் மந்திரிப்பிரதானிகளைப் போன்றவர். மந்திரிப்பிரதானிகளிடத்தில் ராஜபுத்தி வைத்தாலும் வைக்கலாம். ராஜனிடத்தில் மந்திரிப்பிரதானிகளது புத்தி வைக்கப்படாது. அங்ஙனமே பிரமாதி தேவதைகளிடத்தில் சாக்ஷாத் பரமசிவபுத்தி வைக்கலாம். பரமசிவனிடத்தில் பிரமாதிகள் புத்தி வைக்கலாகாது. மந்திரியாதியர்களிடத்தில் ராஜபுத்தி பண்ணுவதுபோல் விஷ்ணுவாதி தேவதைகளிடத்தில் சிவபுத்தி, அதாவது பரத்துவபுத்தி வைக்கச்சொல்வதைக்கண்டு, இதரதேவதைகளைப் பரத்துவமாகச் சொல்வதுபோல் மருண்டனரோ? அல்லது வேதத்தினிடத்துள்ள துவேஷ புத்தியால் அங்ஙனங் கூறுகின்றனரோ அறியேம்! எங்ஙனமாயினு மாகுக. இவர்க்கு நாம் சொல்ல வேண்டிய சமாதானங்களைக் கூறிவிட்டோம். இன்னு மிதுவிஷயமாக அறியவேண்டுவோர் அப்பயதீக்ஷதர் இயற்றிய சிவதத்துவ விவேகம் அரதத்தாசாரியரியற்றிய சதுர்வேததாற்பரிய சங்கிரக முதலிய நூற்களைக்கண்டு மருளையொழித்துத் தெளிவுறுவாராக.

சூதசங்கிதை அத்துவித சித்தாந்த மென்பது.

சூதசங்கிதையில் அகம்பிரமவாதம் சித்தாந்தமல்லவென்பதற்கு ஒரு சுலோகமிருக்கிறதென்று சொல்லுகிறார். சூதசங்கிதை ஆறாயிரம் சுலோகங்களையுடையது. அந்த ஆறாயிரத்தில் ருகூகூகூ சுலோகங்கள் அகம்பிரமவாதங் கூறுகின்றனபோலவும், அந்த ருகூகூகூ சுலோகங்களும் பூர்வபக்ஷம்போலவும், ஒரு சுலோகஞ் சித்தாந்தம்போலவும் நடித்து அந்தச்சித்தாந்த சுலோகத்தைத்தான் இவரெடுத்துக் காட்டவருகிறார். அது வெகு ரகசியமாய் ஆறாயிரத்தில் மறைந்திருக்கின்றது; அது ஒருவர் கையிலும் அகப்படாது. பூர்வபுண்ணிய விசேஷத்தினால் இவர் கையில் அகப்பட்டது. பூர்வபக்ஷமாயுள்ளவை யார்க்கும் கிடைக்கும். சித்தாந்தசுலோகம் அப்படிக் கிடைக்கத் தக்கதல்ல. அந்தச்சுலோகம் இதுவரையில் அத்வைதிகள் பார்த்திருந்தாலும் அவர்கள் கையிலகப்பட்டிருந்தாலும் அன்றே அத்துவித மதத்தை ஆற்றில் புளியைக்கரைத்து விடுவதுபோல் கரைத்து விட்டுத் தலைமுழுகி, இவரது துவைத சித்தாந்தத்தை அனுசரித்திருப்பார்கள். பாவம் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமற்போயிற்று! ஆறு

யிரம் சுலோகத்தில் பின்னும் நான்கு சுலோகம் அத்துவிதமதவிரோதமாகவும் துவைதமத சாதகமாகவும எழுதியிருந்தால் ஒன்றில்லாவிட்டாலும் ஒன்று தெரியும். வேதவியாச மகாமுனிவர் ஒரு சுலோகத்தையே எழுதிவைத்தாரே. அவரும் வெகு கபடஸ்தர்தான். பின்னும் நான்கு சுலோகம் எழுதிவைக்கின் அதைப்பார்த்துப் பேதமுத்தியை யடைந்து விடப்போகிறுர்கள் என்ற பொருமையினுல் அங்ஙனம் எழுதிவைத்தாராக்கும்! அப்படித்தானெழுதி வைத்தாரே; பார்க்கிறவர்கள் கண்களுக்கெல்லாம் விளக்கமாய்த் தெரியும்படியாவது எழுதிவைத்தனரா? அதுவுமில்லையே. மர்ம்மமா யல்லவோ ஒரு மூலையிலொடுக்கி யெழுதிவைத்தார்? அது இருக்கட்டும். இந்த அரக்கோணவாசியார்தான் பூர்வபுண்ணிய விசேஷத்தால் அதைக்கண்டு பிடித்தாரே. கண்டுபிடித்தவர், அது இன்னபாகத்தில் இன்னகாண்டத்தில் இன்ன அத்தியாயத்தில் இருக்கிறதென்றும் இத்தனையாவது சுலோகமென்றும் சொன்னுரா? வியாசமகாமுனிவர் எவ்வளவு மர்ம்மமாய் வைத்தாரோ அவ்வளவு மர்ம்மமாயன்றே இவரும் வைத்தார்? வைத்தாலும் வைக்கட்டும். அதனுரையையாவது நாலுபேர் அறிய வெளிப்படுத்தினுரா? நாம்தான் எப்படியோ பார்த்துக்கொள்ளுகிறேம்; பார்த்துக்கொள்ளவேண்டிய கடமை நமக்கிருக்கின்றது. மற்றவர்கள் எப்படித் தெரிந்துகொள்வார்கள்? தமிழ் வாசித்தவர்கள் சமஸ்கிருத சுலோகத்தின் பொருளை எப்படி யுணர்ந்துகொள்வார்கள்? சமஸ்கிருதந் தெரிந்தவர்களிடத்திற் சென்று தெரிந்து கொள்ளலாமென்றுலும் சமஸ்கிருதந் தெரியாதவ ரிருக்குமூர் எத்தனையிருக்கின்றன? அவ்வூரிலுள்ளவர்கள் தெரிந்துகொள்வ தெங்ஙனம்? சமஸ்கிருதந் தெரிந்தவர்களிருக்கும் ஊரி லிருந்தால்தா னென்ன? அவர்கள் சும்மா சொல்வார்களா? அதனுரையை யெழுதுவ திவர்க்கு மிகச் சுலபம். மற்றவர் சமஸ்கிருதந் தெரிந்தவர்களைத் தேடிப்பிடித்து அதனுண்மையான வுரையை யுள்ளபடி யுணர்ந்து கொள்வது மிகக்கடினமென யாங்கூறவேண்டுவ தில்லையே. தமிழ்ச் சூதசங்கிதையில் அத்துவிதத்திற்கு விரோதமாக ஒரு செய்யுளையாவது யாம் பார்த்திலேம். எமது நண்பர்களும் அவ்வாறே யுரைத்தார்கள். சமஸ்கிருதந் தெரிந்த பல பண்டிதர்களையும் அத்துவித விரோதமாகச் சமஸ்கிருத சூதசங்கிதையில் ஏதேனுஞ் சுலோக முண்டாவென விசாரித்தோம. அவ்வாறில்லையெனச் சொன்னதோடு, அவ்வாறிருக்கவுமாட்டாதெனச் சொன்னுர்கள். அங்ஙனமாக அரக்கோணத்தார்க்கு மாத்திரம் அது அகப்பட்டது அதிசயத்தினும் அதிசயம்!

இந்த அதிசயத்தைப்பார்க்க நெடுநாள் முன்னர் நமது நண்பர் ஒருவர் சொன்ன ஒரு அதிசயமான சிறுகதை ஞாபகத்தில் வந்தது. அதைச்சொன்னுல் நண்பர்கள் சந்தோஷப்படுவார்கள் என்று சொல்லுகிறேம்.

மகாதந்திரமும் கபடமுள்ள ஒரு ஏழைச்சேணியன், தன் தேசத்து அரசனிடம் சென்று, "மகாராஜாவே! நான் நெய்தற்றொழிலில மகாசமர்த்தன், வெகு நாணயமான வஸ்திரம் நெய்கிறவன், நான் நெய்கிற வஸ்திரத்தை யுடுத்திக்கொள்ளும் பாக்கியமுடையவர்கள் மகாராஜாவே யன்றி வேறே யொருவருமிலர்" என்றான். அரசன் அவன் சொல்லை நிஜமென்று நம்பி, "அதன் விலை யென்ன ஆகு?" மென்றான். சேணியன், "ஆயிரம் விராகன் ஆகும்" என்றான். அப்படியே அரசன் ஆயிரம் விராகன் கொடுத்தான். சேணியன் உள்மகிழ்ந்து அதை வாங்கிக்கொண்டு, "அரசனே! அந்த வஸ்திரம் நெய்ய ஒருவருஷமாகு" மென்று சொல்லிவிட்டுப்போய் அந்தப்பணத்தைக்கொண்டு சொஸ்தமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அரசனது ஏவலாளன் ஆறுமாசம் பொறுத்து ராஜாவினுடைய உத்தரவின் பேரில் சேணியனிடத்தில் சென்று "வஸ்திரம் எவ்வளவு நெய்தாயிற்று" என்றான். சேணியன் "நூல் நூற்றுப் பதஞ்செய்து வைத்திருக்கிறேன், இனி நல்லநாள் பார்த்துத் தறியில் பூட்டுவேன்" என்றான். ஏவலாளன் பின்னும் ஒருமாசம பொறுத்துச் சென்றான். அவன் வருவதை முன்னுணர்ந்து சேணியன் தறியிலுட்கார்ந்து கொண்டு நெய்வதுபோல் இரண்டு கையையும் சும்மா வீசிக்கொண்டிருந்து, ஏவலாளன் வந்தவுடனே, வெகு பிரயாசைப்பட்டு நெய்கிறதுபோல் பாசாங்கு பண்ணிக் கையை வீசிக்கொண்டிருந்தான். ஏவலாளன் பார்த்து, "இது என்ன அதிசயம், தறியில் நூலையுங் காணோம், நெய்தலையுங் காணோம், இவனென்னமோ நெய்கிறதாகச் சொல்லுகிறானே" யென்று அந்தச் சேணியனைக் கேட்க, சேணியன், "அட பைத்தியக்காரா! ஊரிலுள்ள வஸ்திரத்தைப்போ லிதை நினைத்துக் கொண்டாயா, இந்த வஸ்திரம் வெகு நாணயமாயுள்ளதாக்கும், யாவருடைய கண்களுக்கும புலப்படுவதொன்றன்றெனினே, யார் தனது தகப்பனுக்குப் பிறந்தார்களோ அவர்களுக்கு மாத்திரந்தான் இந்த வஸ்திரம் புலப்படும், மற்றவர் கண்களுக்குப் புலப்படமாட்டாது" என்றனன். ஏவலாளி இதைக்கேட்டு, "ஓ ஓ இதென்ன விந்தையா யிருக்கிறது! நாம் நமது தந்தைக்குப் பிறக்கவில்லை போலிருக்கிறது, அதனாற்றான் நமது கண்ணுக்குப் புலப்படவில்லை, நமது கண்ணுக்குப் புலப்படவில்லை யென்றால் நமது தாய் விபசாரி யென்றேற்பட்டுவிடும்" என்று அதன்மேல் ஒன்றும் பேசாது "சேணியரே! சீக்கிரமாய் நெய்துகொண்டுவாரும்" என்று சொல்லிவிட்டு, அரசனிடம் உண்மையைச் சொன்னால் நமது தாய் விபசாரியென்று சொல்வாரெனக் கருதி, "செட்டியார் நெய்துகொண்டேதா னிருக்கிறார், ஆறுமாசத்தில் நெய்து கொண்டுவருவார்" என்றான். சேணியன் பிறகு ஆறுமாசமும் சொஸ்தமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். மறு ஆறுமாசம் பொறுத்து ராஜாவினுத்தரவின் பேரில் ஷை ஏவலாளி சேணியனிடம் வந்து "நெய்தாயிற்றா?" என்றான். சேணியன்

"ஆயிற்று, நல்லநாள் பார்த்து ஊர்க்கோலத்துடன் வருகிறே"னென்றான். அப்படியே அவன் ராஜனிடம் சொல்லி விட்டான். கடைசியில் சேணியன் வெறுந்துணியைப் பத்துவளையில் எடுத்து, உள்ளே கண்ணுக்குப் புலப்படாப் பொய் வஸ்திரத்தை வைத்து அதன்பேரில் ஒன்றன்பின்னொன்றாக வுண்மையான வஸ்திரத்தைச் சுற்றி, பல்லக்கில் வைத்து, மேளவாத்தியத்துடன் ஊர்வலம் வந்து ராஜன் கோட்டைக்குட் புகுந்து ராஜசபையிற்போய் உட்கார்ந்து, மேல் வஸ்திரங்களையெல்லாம் பிரித்துக் கடைசியில் வெறுங்கையை யேந்தி, அதிலேதோ வஸ்திரமிருப்பதுபோல் காட்டி, அதையெடுத்து, ஆசீர்வாதஞ்செய்து வெறும் வெளியை அரசனிடங் கொடுத்து, "இது தமது தந்தைக்குப் பிறந்தவர்கள் கண்களுக்கு மாத்திரந்தான் தெரியும், மற்றவர் கண்களுக்குத் தெரியாது, அவ்வளவு நாணயமுள்ளது, இதற்காக ஒருவருஷங் கஷ்டப்பட்டேன், மகாராஜாவே! எனது கஷ்டத்தை யறிந்து தக்க பரிசுதரவேண்டு"மென்றான். அரசன் "இதென்ன வெறும் வெளியைக் கொடுத்துவிட்டு, வஸ்திரமென்கிறானே, இதன் உளவு புலப்படவில்லையே, சேணியன் சொல்லுகிறபடி நமது தாய் பரபுருஷனோடு விபசரித்துத்தான் நம்மைப் பெற்றனளோ, இது நமது கண்ணுக்குப் புலப்படவில்லையே, வெறும் வெளியைக் கொடுத்தாயே யென்றால் நமது தாய் விபசரித்து நம்மைப் பெற்றாளெனச் சபையார் நகைப்பார்களே" யென யோசித்து, வஸ்திரமிருப்பது போலவும் அதை வாங்கிக்கொள்வது போலவுங் காட்டிச் சேணியனிடம் வாங்கிக்கொண்டு, அதை மந்திரியினிடங் கொடுத்தான். அவன் பிரதானியிடங் கொடுத்தான். இப்படியே யொருவன் கொடுக்க யொருவன் வாங்கி, வாங்கின முறைப்படி கடையில் ராஜனிடம் வந்துவிட்டது. அதை மறுபடியுஞ் சேணியன் வாங்கிப் பழையபடி துணிக்குள் வைத்துக்கட்டி ராசனிடங் கொடுத்தான். ஷை ஒன்றுமில்லா வஸ்திரம் ஒருவர்க்கும் புலப்படா திருந்தும் புலப்படவில்லையென்று சொன்னால் தங்கள் தாய் விபசாரியென்று சொல்வது மாத்திரமன்றி, தாங்கள் தங்கள் தகப்பன்மார்க்குப் பிறக்கவில்லையென்றும் வேறு புருஷர்க்குப் பிறந்ததாக ஏற்பட்டுப்போமென்றும் எண்ணி யாவரும் வஸ்திர மிருப்பது போலவே வாங்கிக் கொடுத்து விட்டார்கள். பிறகு உண்மை வெளிப்பட்டுச் சேணியன் சிட்சையடைந்தான்.

சேணியன் வஸ்திர முள்ளதுபோலக் காட்டி இராஜன் முதலியவர்களை யேமாற்றினதுபோல அரக்கோணத்தார் முற்றும் அத்துவிதபரமாயுள்ளதும் ஆறாயிரம் சுலோகங்களையுடையதுமான சூதசங்கிதையில் அத்துவித விரோதமாகவும் துவிதமதச் சார்பாகவும் உள்ளது ஒரு சுலோகமென்று சொல்லி யேமாற்றப்பார்க்கின்றார். ௫௯௯௯ சுலோகம் அத்துவிதமாகவும் ஒரு சுலோகம் துவைதமாகவும் இருந்

தால் பெரும்பான்மையைப்பற்றி அத்துவிதமே சித்தாந்தமாய் விடப் போகிறதென வொரு சூட்சி கண்டு பிடித்தார். அந்தச் சூட்சியாதெனின் ருகூகூ சுலோகம் பூர்பக்ஷமும் ஒரு சுலோகம சித்தாந்தமுமாம் என்பதாம். இங்ஙனம் ருகூகூ சுலோகம் பூர்வபக்ஷமென்றும ஒரு சுலோகஞ் சித்தாந்தமென்றும் சொல்வதற்கும் ஒரு சுலோகம் வேறே வேண்டுமே. அது எங்கே யிருக்கிறது? அதை யெந்த மூலையில் வியாசர் ஒளித்து வைத்தாரோ? அவர் ஒளித்து வைத்தாலும் அரக்கோணத்தார் விடுகிறாரா? ஆறுயிரத்தில் ஒன்றை யரித்துத்தேடிக் கண்டு பிடித்த கோணத்தார்க்கு இஃதொன்றைக் கண்டு பிடிப்பதசாத்தியமா? கண்டு பிடித்திருந்தால் சொல்லவேண்டுமே. பின்னிட்டுச் சொல்லலாமென வைத்திருக்கின்றனரோ? சோமநாய்க்கனைப்போல உமக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்கின்றனரோ? அவருடைய விஷ்டம், நமது பாக்கியம். அத்துவித விரோதமாகவும் துவிதசாதகமாகவுமான அருஞ் சுலோகத்தைக் கண்டு பிடித்துச் சொல்லிய கோணத்தார்க்குப் பூர்வபக்ஷ சித்தாந்தஞ் செய்த சுலோகமொன்றனைச் சொல்லாவிடில் அவரது கருணைக்குப் பயனேது மில்லாமற்போகும். நாம் விசாரித்தமட்டில் அத்துவித விரோதமும் துவிதசாதகமுமான சுலோகமில்லா திருப்பதோடு, கோணத்தார் கூறியபடி அத்துவிதத்தைப் பூர்வபக்ஷப்படுத்தித் துவைதத்தைச் சித்தாந்தப்படுத்திய சுலோகமு மொன்று கூட வில்லையெனத் தெரிகிறது. அன்றி அந்தச் சூதசங்கிதையில் எங்கும் துவித சித்தாந்தத்தைப் பூர்வபக்ஷம் பண்ணி அனேக தருக்க நியாயங்களோடு கண்டித்து அத்துவிதமே சரியானதென்று கூறுகின்றது. அத்துடனே அத்துவிதத்தை அனுசரியாதவர்கள் பாவஞ்செய்தவர்களென்றும், மாயாமயக்கில் அகப்பட்டவர்களென்றும், பாஷாண்டிகளென்றும், குதர்க்கிகளென்றும் ததீசி, கௌதமர் சாபத்துக்குட்பட்டவர்களென்றும் இன்னும் பலவிதமாக அவர்களை யிகழ்ந்து கூறுகின்றது. இப்படிக் கெல்லாம் இருக்கச் சேணியன் வஸ்திரம்போன்றதொரு அத்துவித விரோதமான சுலோகமுண்டென்று சொல்ல வருவதும் அப்படிப்பட்ட சுலோகம் சித்தாந்தமென்று வாயினாற்சொல்ல வருவதும் வெகு வியப்பாயிருக்கின்றது! இனி அவர் காட்டுஞ் சுலோகத்தைப் பரீக்ஷித்துப் பார்ப்போம். கோணவாசியார் எப்படியோ மனமிரங்கி அத்துவித விரோதமும் துவிதசாதகமுமான அந்தச் சுலோகத்தை ஆன்மாக்க ளுய்யும்படி வாய்விட்டுச் சொல்லிவிட்டார். அது இது:—

கேசிதத்வைதமாச்ரித்ய
பிடாலப்ரதிமாநரா:
ருத்ரோணசாம்யமங்யேஷாம்
வதந்திப்ரவிமோஹிதா:

இதைச் சொல்லிவிட்டு இதில் தமது சித்தாந்தத்துக்கு ஏதோ வெகு பலமிருப்பதாய் மனப்பால் குடித்துக் களிப்பேறி அந்தக் களிப்பின் வெறியினால் தானென்பது மீறி அகங்கொண்டு, "அவ்வகம் பிரமவாதமாகிய அத்துவிதத்தை அது காலைவாரி அப்புறம் விசிடச் சம்மதியாது" எனப்பேசித் தமது சுபாவ குணத்தை மறவாது காட்டினார். நாம் இச்சுலோக மெங்குளதெனத் தேடிப்பார்த்ததில் சமஸ்கிருத சூதசங்கிதை யெக்கிய வைபவகாண்டத்தில் சூதகீதையில் இரண்டாவதத்தியாயத்தில் "ஆத்மநாசிருஷ்டி" என்னும் பிரகரணத்தில் கூஉ-வது சுலோகமாக விருக்கக்கண்டோம். ஆனால் தெலுங்கு எழுத்து அச்சுப்பிரதிக்கும் இவரெழுதியதற்கும் சிறிது வித்தியாசமிருக்கிறது. இருந்தாலும் தாற்பரிய பேதமில்லை. இவரெழுதிக் காண்பித்த சுலோகம் எத்தனையோ கைமாறி வந்திருக்கலாம். அது பற்றிப் பிழையாயிருந்தாலு மிருக்கக்கூடும். சிதம்பரத்தில் ப்ரம்ம வித்தியா பத்திராதிபர் கிரந்த எழுத்தில் அச்சிட்டிருக்கிறார். அது நம்மிடத்திலில்லை. அது எப்படியிருக்கிறதோ தெரியவில்லை. நாம் தெலுங்கு எழுத்துப் பிரதியைப்போலத் தமிழ் எழுத்தில் எழுதி அதனுரையைத் தெரிவிப்போம்.

தமிழெழுத்துப் பிரகாரம்.

கேசிதத்வைதமாச்ரித்யபைடாலவ்ரதிகாநராஃ
ஸாம்யம்ருத்ரேணஸர்வேஷாம்வாஞ்சந்திசவிமோஹிதாஃ

இதன்பொருள்.

பைடாலவ்ரதிகாஃ (எலிபிடிக்குஞ் சமயத்தில் நிர்ச்சலமான ஸ்திதியை யுடைய) பூனையினுடைய விரதம்போன்ற விரதங்கொண்டவர்களாயும்

விமோஹிதாஃ= விசேஷமான அஞ்ஞானத்தை யுடையவர்களாயுமிராநின்ற

கேசித்=சில
நரா=மனிதர்கள்
அத்வைதம்=அத்வைதத்தை
ஆச்ரித்ய=ஆசரயித்து
ருத்ரேண=உருத்திரனோடு
சர்வேஷாம்ச=மற்றவர்களுக்கும்
சாம்யம்=சமானத்வத்தை
வாஞ்சந்தி=(சொல்ல) இச்சிக்கிறார்கள்.

இதில் அத்துவிதத்திற்கு விரோதமும் துவிதத்திற்குச் சாதகமுமிருக்கின்றனவாம். எலி பிடிக்கும் சமயத்தில் பூனையானது சலனமற்றிருப்பதுபோன்ற சீலத்தவர்களும், அஞ்ஞானத்தை யுடையவர்களுமான சில மனிதர்கள், அத்வைதத்தை ஆதரவாகக்கொண்டு, உருத்திரனுக்கும் இதர தேவதைகளுக்கும் சமானத்துவத்தைச்சொல்லுகிறாகள் என்பது ஷிசுலோகத்தின் அபிப்பிராயம். இப்படிச் சொல்வதினால் பூனையைப்போன்ற கபடில்லாதவர்களும் அஞ்ஞானத்தை யொழித்தவர்களும் அத்வைதத்தை யாதரவாகக்கொண்டு,

உருத்திரனோடு இதரதேவதைகளைச் சமானமாய்ச் சொல்லார்கள்; பின்னைப் பேதமே சொல்வார்கள் என்றாகின்றது. இதில் அத்துவிதிகளுக்கு என்னவிரோதம்? துவிதிகளுக்கு என்ன சாதகம்? அந்தந்தக் கிரந்தங்களை அந்தந்தப் பரம்பரையாரிடம் சம்பிரதாயமாய்க் கேட்கவேண்டும். தாமே விபரீதமாய்ப் பொருள் கொள்ளப்படாது. அப்படி ஒன்றிருக்கப் பிறிதொன்றாய் விபரீதப் பொருள்கொண்டு அத்துடனே அஞ்ஞானமும் கபடமும் சேர்ந்தொழுகும் அறிவிலிகளுடைய தப்பர்த்தத்தைக் கண்டித்தால் மற்ற வுண்மையான அத்துவிதிகளுக் காகவேண்டுவ தென்ன? உண்மையான அத்துவிதிகள் பாரமார்த்திகத்தில் அத்துவிதஞ் சொன்னால் பொய்ம்மையான அத்துவிதிகளில் சிலர் வியாவகாரிகத்தில் சொல்லப்பார்க்கிறார்கள். பயிர் வளர்ந்து வரும்போது அதற்கு விரோதமான களைப்புற்களை யெப்படிப் பிடுங்கி யெறிகின்றார்களோ, அதுபோல வுண்மையான அத்துவித சித்தாந்தத்தைச் சொல்லும்போது இடையில் வரும் போலி அத்துவிதத்தை நிராகரணஞ் செய்கின்றார்கள். இதில் உண்மையான அத்துவித மதத்திற்காவது உண்மையான அத்துவிதிகளுக்காவது வந்த நஷ்டமென்ன? அது பற்றியே அத்துவித நூல்கள் முமுட்சுகளுக்கே போதிக்கவேண்டுமெனவும் அமுமுட்சுகளுக்குப் போதிக்கப்படாதெனவும் கூறுகின்றன. களைப்புற்களைப் பிடுங்கப் பிடுங்கப் பயிருக்கு எப்படிப் பலமோ, அப்படியே போலி அத்துவிதத்தைக் கண்டிக்கக் கண்டிக்க வுண்மையான அத்துவித சித்தாந்திற்குப் பலமாகிறது. சூதசங்கிதை அத்துவித சித்தாந்தத்திற்குப் பலந்தேடிக் கொண்டால் இந்தத் துவித சித்தாந்திக்கு வந்த லாபமென்ன? நஷ்டந் தானே. அதிலும் அத்துவிதத்திற்குப் பலம் ஏற ஏறத் துவிதத்திற்குப் பலங் குறைவுதானே.

“கல்லிலுஞ் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே” என்றும், “உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப் புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்” என்றும், “எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்” என்றும், “ஆரூரருகிருக்க அவ்வூர்த் திருநாளென் றாரூர்கடோறுமுழலுவீர்” என்றும் இன்னுமிவ்வாறு பலசெய்யுள்கள் பட்டினத்தடிகள் முதலாயினோர் கூறியிருக்கின்றனரன்றோ? அந்தச் செய்யுட்களி னுட்பொருள்களைத் தக்கார்பால் விசாரியாது தாமே விபரீதப் பொருள்கொண்டு, விக்கிரகத்தை வணங்குவதிற் பயனில்லை யென்றும், மந்திரங்களைச் செபிப்பதில் யாது பயனென்றும் சொல்லி அவற்றை யிகழ்ந்து வருபவர் சிலருளரென நாம் அறிவோம். இப்படிப்பட்டவர்க்கு அதனுண்மையை யுணர்ந்தோர் அவ்வுண்மைப்பொருளை யெடுத்துச் சொல்வதையும் அறிவோம். அதுபோல உருத்திரனோடு இதரதேவதைகளைச் சமமெனக்கூறும் அஞ்ஞான கபடிகளுக்கு அதன் பொருளை யெடுத்துச் சொல்லி, பார

மார்த்திகத்திலன்றி வியாவகாரிகத்தில் அத்துவிதஞ் சொல்லப்படா தெனச் சற்புத்தி கூறுகின்றது. நாம் சோம. நாயக்கனைக் கண்டித்து, 'சங்கராசாரியார் அவதாரமகிமை' யெழுதும்போது, சூதசங்கிதை யின்படி "பிரம விட்டுணுவினும் உருத்திரனே அதிகரென்றும், பரமான்மாவினது வியூகமாயிருப்பது பிரம விட்டுணு. உருத்திரர்க்குச் சரியானாலும் அதிலுருத்திரரொருவரேசிரேஷ்டர்" என்றும் சொல்லியிருக்கின்றோம். பொன்னாலான கிரீடத்தையும் சிலம்பையும் ஒன்றென்று சொல்லவொண்ணாது. கிரீடத்தின் விலைக்கும் சிலம்பின் விலைக்கும் வித்தியாசமுண்டு; அவைகளைச் செய்வதற்குக் கொடுக்கும் கூலியும் வித்தியாசந்தான். இங்ஙனமாக வொன்றெனப் பகர்தல்கூடுமோ? ஒரு இரும்பை யெடுத்துக் கத்தியும் செய்கின்றோம்; அதே யிரும்பை யெடுத்துக் கடியாரத்துக்கு ஸ்பிரிங் (Spring) என்னும் கருவியுஞ் செய்கின்றோம். கத்தியும் ஸ்பிரிங்கு மொன்றெனச் சொல்லப்படுமோ? அதுபோல உருத்திரனையும் இதரதேவதைகளையுமொன்றெனச் சொல்லக்கூடுமோ? இப்படிச் சொல்லுகிறவர்கள் அஞ்ஞானிகள் தானே. ஆதலால் சூதசங்கிதை கூறியது யதார்த்தந்தான். இதனால் அத்துவிதிகளுக்குப் பாதகம் யாது? இவரது துவித சித்தாந்தத்திற்குச் சாதகம் யாது? உருத்திரனுக்கும் இதரதேவதைகட்கும் பேதங்கூறுவது மாத்திரத்தானே அத்துவித விரோதமும் துவித சாதகமுமாமென்று கொண்டனராக்கும்! இதுவெகு விந்தைதான்! இவரது சித்தாந்தமும் வெகு சிரேஷ்டந்தான்! எவராவது எங்கேயாவது இன்ன பொருளுக்கும் இன்ன பொருளுக்கும் பேதமென்று சொல்வார்களானால் இவரது சித்தாந்தத்துக்குப் பலிதமாயிற்றென் றகமகிழ்வாராக்கும்! மனிதனுக்கு மிருகம்வேறு, மிருகத்துக்குப் பறவைவேறு, பறவைக்கு மச்சம்வேறு, மச்சத்துக்கு ஊர்வதுவேறு, ஊர்வதற்குத் தாபரம்வேறு, மனிதரிலும் மற்ற மிருகாதிகளிலும் ஒன்றுக்கொன்று வேறு எனவும் மற்றச் சடப்பொருள்களும் ஒன்றுக்கொன்று வேறு எனவும் காண்பாரானால் இவரது மனமும் உடலும் புளகாங்கிதப்பட்டு, தமது துவிதமத சித்தாந்தம் பலித்து ஜபித்து விட்டதென இறுமாப் படைவர்போலும்! அதிலும் சென்னை ஓக்ஸ் கம்பெனி, ரென்பனெட் கம்பெனிகளிலும் மற்றும் பல சில்லறைக்கடைகளிலும் நுழைந்து பார்க்கின் ஒன்றுக்கொன்று பேதமாகப் பல்லாயிரம் பொருள்களிருக்கின்றன. அவற்றை யிந்தக் கோணத்தார் பார்ப்பாரானால் தமது இரட்டைச் சித்தாந்தம் சித்தாந்தமாய் விட்டதென எப்படிப்பட்ட சந்தோஷத்தை யடைவாரோ வறியேம்! இவரது சூட்சுமபுத்திக் கிணையாக யாருடைய சூட்சுமபுத்தியைச் சொல்லுகிறது? இவருடைய சூட்சுமபுத்திக்கு இவரது சூட்சும புத்தியைத் தான் ஒப்புச் சொல்லவேண்டும். அத்துவிதஞ் சொல்லவேண்டுவ திந்தவிடத்தில், துவைதஞ் சொல்லவேண்டுவ திந்தவிடத்திலென வறியாது "எல்லசட்டிலக்கஎகலக்க" எனக் குழ

ப்பிவிட்டு, தமக்கு அத்துவிதமத மேதோதெரிந்ததாகக் கருதி, அத்துவிதிகளோடு வாதஞ்செய்ய வருவது பரிகாசத்திற் கிடமாமென்க. ஒருவாதியினுடன் வாதஞ்செய்யப் புறப்பட்டால் அந்த வாதியினது முழுக்கொள்கையினையும் பூர்வபக்ஷ சித்தாந்தங்களையு முண்மையாயுணர்ந்து வாதஞ்செய்ய வெளிவரவேண்டும். குருடர் யானையினது ஓரவயவத்தை யறிந்து இதுதான் யானையெனச் சொல்வதுபோல் வேதாந்தத்தில் ஓர் பாகத்தைப் பார்த்துவிட்டு இதுதான் அத்வைத சித்தாந்தமெனக்கொண்டு எதிரியோடு வாதஞ்செய்பவரின் இப்படித்தான் அவமானப்பட்டுப் போகநேரிடும். உருத்திரனோடு இதரதேவதைகளைச் சமமென்பவர் உண்மையான அத்துவிதிகளெனச் சூதசங்கிதை சொல்லவில்லை. அவர்களை அஞ்ஞானத்தினால் மோகிக்கப்பட்டுப் பூனையைப்போல் கபடுள்ளவர்கள் என்கிறது. அவரும் சிலரென்கிறது. இதனால் அஞ்ஞானமோகமும் பூனையைப்போன்ற கபடமில்லாத மற்றப் பல அத்துவிதிகளுக்கு வந்த தாழ்வென்னை? கபட்டுத்தன்மையால் உண்மைப் பொருளைக் கிரகிக்காமல் பொய்ப்பொருளைக் கிரகித்தால் அவர்களை நாமே கண்டிக்கின்றோம். ராஜாங்கத்தார், துஷ்டர்களைச் சிட்சிக்கச் சரியான சட்டஞ் செய்திருக்கின்றார்கள். யாரோ சில துஷ்டர்கள் தங்களுக்கனுகூலமாக ஷை சட்டத்திற்கு மாறுபாடாய் உரைசெய்து துன்மார்க்கமாய் நடந்தால் உண்மையான சட்டத்திற் கியாது குறைவு? நியாயாதிபதி அவர்களைத் தண்டிக்காமல் விடுவாரோ? அங்ஙனமே யுருத்திரர்க்கும் ஏனைய தேவர்க்கும் சாஸ்திர விரோதமாக அபேதஞ் சொல்வாரானால் அதன் நஷ்டத்தை யவர்கள் அடையாமற்போகார்கள். இதுவரையில் பேசிவந்ததில் சூதசங்கிதை ஆறாயிரஞ் சுலோகத்திலும் அத்துவிதிகளுக்கு விரோதமும் துவிதிகளுக்குச் சாதகமு மில்லையென்று சொன்னோம். இனி அத்துவிதிகளுக்கே சாதகமென்றும் துவிதிகளுக்கு விரோதமேயென்றுங் காட்டுவோம். அரக்கோணத்தார் காட்டிய சுலோகத்தில் உருத்திரனுக்கும் இதரதேவதைகளுக்கும் சமத்துவங் கூறப்படாதெனச் சொல்லுகிறதேயன்றி, உருத்திரனுக்கும் துரிய சிவன் அல்லது பிரமத்துக்கும் ஏகத்துவங் கூறப்படாதெனச் சொல்லவில்லையே. கிரீடம், சிலம்பு இவைகளுக்குச் சமத்துவங் கூறப்படாதேயன்றி, அவைகளுக்குக் காரணமான பொன்னுக்கும் கிரீடத்துக்குமாவது, பொன்னுக்கும் சிலம்புக்குமாவது ஒற்றுமைசொல்லத் தடையென்ன? கத்திக்கும் ஸ்பிரிங்குக்குஞ் சமத்துவஞ் சொல்லப்படாதேயன்றி, கத்திக்கும் இரும்புக்கும், ஸ்பிரிங்குக்கும் இரும்புக்கும் ஒற்றுமைசொல்ல யாதொரு தடையுமில்லையே. இவ்விரண்டு உவமானங்களைப்போல உருத்திரனுக்கும் விஷ்ணுமுதலிய தேவர்க்கும் சமத்துவஞ் சொல்லப்படாதேயன்றி, உருத்திரனுக்கும் துரிய சிவன் அல்லது பிரமத்துக்கும், விஷ்ணுமுதலிய தேவருக்கும் துரிய சிவன் அல்லது பிரமத்திற்கும் ஒற்றுமை சொல்ல ஆக்ஷேப

மென்னே? காரியப்பொருளுக்குள் ஒன்றுக்கொன்று சமத்துவமாவது ஒற்றுமையாவது சொல்லப்படாதேயன்றி, காரியங்களுக்கும் காரணத்திற்கும் ஒற்றுமை சொல்லத் தடையென்ன? இவர் சாதாரண ஜனங்கள் மயங்கும்படி அஞ்ஞானத்தனமாயும் கபட்டுத்தனமாயும் காரியப்பொருளில் பேதஞ் சொல்லப்படாதென்கிற வொரு சுலோகத்தை அதிலும் கிரந்த சுலோகத்தை அதிலும் அதனுரையைக் காட்டாமல் சொல்லவந்தாரேயன்றி, காரியத்திற்குங் காரணத்திற்கும் அதாவது துரியசிவன் அல்லது பிரமத்திற்கும், பிரம விஷ்ணு உருத்திரர்களுக்கும் அபேதஞ்சொல்லும் நூற்றுக்கணக்கான சுலோகங்களைச் சொல்லவில்லையே. சொல்லாமல் மறைத்தனரே. அஞ்ஞானத்தினாலும் பூனையைப்போன்ற கபட்டுத்தனத்தினாலும் எப்படி உருத்திரனுக்கும் இதரதேவதைகளுக்கும் அத்துவிதஞ் சொல்லுகின்றார்களோ, அப்படியே துரியசிவனுக்கும் பிரம விஷ்ணு உருத்திரர்க்கும் ஒற்றுமை சொல்வதைப் பூனையைப்போன்ற கபட்டுத்தனத்தினாலும் அஞ்ஞானத்தனத்தினாலும் அரக்கோணத்தார் சொல்லாமல மறைத்தார். அவர்களுக்கு இவர் குறைந்தவரல்லர். அவர்கள் காரியங்கள் பலவற்றிற்கும் சமத்துவஞ் சொல்லிக் குற்றப்பட்டார்கள்; இவர் காரிய காரணங்களுக்கு அபேதஞ் சொல்வதை மறைத்துக் குற்றப்பட்டார். இருவரும் குற்றவாளிகளாகலின் இருவரும் ஈசுவரனால் தண்டிக்கப்படுபவர்களே. "அவன் கெட்டான் குடியன் எனக்கு இரண்டுமொந்தை கள்ளுவாரு" என்பதற்கினமாய்த் தாம் யோக்கியர் போலவும் பிறர் அயோக்கியர் போலவும் காட்டவந்து, பிறர் அயோக்கியதையைவிடத் தாம் அதிக அயோக்கியரெனக் காட்டிக்கொண்டார். ஆருபிரஞ் சுலோகத்தில் இவரது சித்தாந்தத்துக்காக அரித்தெடுக்கப்பட்ட வொரு சுலோகமும் இவரை நட்டாற்றிற் கைவிட்டதோடு, அது இவரது சித்தாந்தத்துக்கே பங்கமுஞ்செய்துவிட்டதென்க.

சூதசங்கிதை சருவசாத்திர சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

மூவர்விபூதிசொரூபமாகியவானவருமுனிவீர்காள்
தேவர்தொழும்அப்பரசிவத்தைத்தியானஞ்செய்வாரெப்போதும்
பாவநினைப்பார்க்கறவகற்றும்பளகிலாவம்மூர்த்திகளும்
தாவில்சிவசொரூபமேயென்றுநவில்வார்தக்கோரே. (ரு)

திரிமூர்த்திகளும்அவருடையதிகழும் அவதாரங்களும்நன்
கரியசிவத்தியானஞ்செய்தாலும்அவிரும்பரமான்ம
வுரியதாயவிபாகத்தினுறச்சேர்ந்தவரேயல்லாமல்
விரியுஞ்சிவவிபாகத்திற்சேர்ந்தோரல்லர்மெய்த்தவத்தீர். (சு)

ஷை சருவவேதாந்த சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

ளர்தருசிவாதிநாமங்களேகீர்த்தனஞ்செயத்தக்கனவென்று
முளரளிவனசத்தவிசினன்மாயனுருத்திரதேவனென்றிவர்கள்

வளரொளிபரதத்துவவிபூதிகளேயாயிருந்தாலுமற்றிவருள்
தளர்விலாமதுகையுருத்திரப்பிரானேதலைமையோனென்றுளங்கொள்மின் (௩)

இந்தச் செய்யுள்களினால் பிரம விஷ்ணு உருத்திரர்களில் உருத்திரனே மேற்பட்டவனென்றும் இம்மூவரும் பரமான்மாவான துரிய சிவனுக்கு அபேதமென்றும் விளங்குகின்றன வென்பதை யறிந்து இவ்வாதத்தை யறவே விட்டொழியக் கடவர்.

இன்னும் சாட்சாத் பரமசிவனே அடியில் வருமாறு கூறுகின்றார்,

ஈசுரகீதை யோக அத்தியாயம்.

ஏதமுறநாரணனை யென்னிலயல்காணும்
பேதவிழியாளர் பிறவிப்பிணியறுரோ
மாதவனையானென மனத்தினினைகிற்கும்
போதவிழியாளர்பரி பூரணமடைந்தார். (எ௨)

ஆதலிலருச்சிமினிவ்வாதியரியானுய்க்
காதலொடுகொண்மின்மயலாகியயல்காண்பார்
தீதுதருமாநரகு சேர்வுறுவர்தீதா
நீதியுறுநீசரிடையானும் வெளிநில்லென். (எ௩)

நான்மறையந்தணர்நாய்வதைசெய்துஅதன்
ஊன்மிசைகின்றவரோதினர்மூடப்
பான்மையருமரியைப்பழியாதம்
மேன்மைசெய் பத்தரைவீடுறுவிப்பன். (எ௪

மருவற்கென்னைமனம்வைத்தோன் மாலாமிவனென்வடிவென்றே
பரவிப்பணிவானென்றேசெம்பவளத்திருவாய்மலர்ந்தருளி
யரவிற்றுயிலச்சுதனுக மழுந்தத்தழுவஅவ்விடத்தே
கரவுற்றருளவதிசயமாய்க் கண்டார்மேனிகண்டிலரால். (எ௫)

இச்செய்யுள்களினால் பரசிவனைவிட நாராயணனைப் பேதமாகக் காண்போர் பிறவிப்பிணியறுரொன்றும் நரகத்திற் சேர்வாரொன்றும் ஏற்படுகின்றமையால் பேதங்கூறிய அவசரமின்னதெனவும் அபேதங் கூறிய அவசரமின்னதெனவும் உணராது மயங்குதல் சாஸ்திர ஆராய்ச்சிக் குறைவென்பதாம்.

ஷை சூதசங்கிதை ஷை பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயம்.

உருத்திரபிராற்கு அரியைஅயனையொப்பதிகமென்றுரைப்போர்
பாற்றரிதாயகொடுநிரயத்துப்பற்பனுள்மூழ்குவருண்மை. (உ௫)

இச்செய்யுளில் உருத்திரர்க்கு நாராயணன் பிரமன் இவர்களைச் சமமாகச்சொன்னாலும் அதிகமாகச்சொன்னாலும் நரகமுண்டாமென்று சொல்லுகிறார். ஷை ஈசுரகீதையில் பரமசிவனுக்கு நாராயணனை அயலாகச் சொல்லுவார்களேயானால் நரகமடைவார்களென்றும் பிறவிப்பிணி நீங்காரொன்றும் சொல்லுகிறார். இதனாலென்ன விளங்குகின்றதென்னின் உருத்திரனுக்கு நாராயணனாதியோரை வேறுபடுத்தி

யே சொல்லவேண்டுமென்றும் துரியசிவனுக்கு உருத்திரன் நாராயணனாதியோரை வேறுபடுத்திச்சொல்லப்படாதென்றுமாம். இதுவரையிலெழுதிவந்த விஷயத்தினால் சிவனே பரத்துவமுள்ளானென்று ஏற்படுவதோடு இதரதேவதைகளுக்குப் பேதங்கூறும் இடம் இதுவென்றும் அபேதங்கூறு மிட மிதுவென்றும் ஏற்படுகின்றன.

நிற்க, வேதமுதலிய கலைகளில் நாராயணன் இந்திரன் முதலினோரைப் பரமென்று கூறியதுபோலச் சூதசங்கிதையில் அகம் பிரமவாதங் கூறியதென்று சொல்லியதோடு, சூதசங்கிதை ஆறாயிரம் சுலோகத்தில் ஒருசுலோகம் துவிதசித்தாந்தமெனக்காட்டினாரன்றோ? இதில் ௫௯௯௯ சுலோக வரையில் அத்துவித பக்ஷமாகவும் ஒன்றுமாத்திரம் துவித பக்ஷமாகவும் எப்படி அருமையா யிருக்கின்றதோ, அப்படியே வேதமுதலிய கலைகளில் மிகப்பெரும்பாலும் நாராயணன் முதலிய தேவதைகள் பரத்துவமெனவும் ஏகதேசமாய் ஏதோ ஒரு இடத்தில் சிவன் பரத்துவ மெனவும் அருமையாய்ச் சொல்லுகிறது போலும்! ஷை திருட்டாந்தத்தால் அவ்வொரு இடத்துக்கும் உலோபம் வந்துவிட்டது. யாங்ஙனமெனின் ஷை ஒருசுலோகமும் எப்படித் துவிதசித்தாந்தத்திற் கிடமில்லாது அத்துவித சாதகமாகவே முடிந்துவிட்டதோ, அப்படியே வேத முதலிய கலைகளி லேகதேசமாகச் சிவனுக்குப் பரத்துவங்கூறியதும் பறந்துபோய் முற்றும் நாராயணன் முதலினோரே பரமென்று கூறுவதாய் முடிந்துவிட்ட தென்பதாம். இவர் சிவனுக்குப் பரத்துவங்கூறுவது போலக் காட்டி விஷ்ணுமுதலானோர்க்குப் பரத்துவங்கூறாமற் கூறுவதால் இவர் உண்மையாகச் சைவரோ, அல்லது சைவவேடத்தவரோ எனச் சந்தேகமா யிருக்கின்றது.

பொன்னொன்றே சத்து எனச்சொன்னால் அதைவிட்டு அதைப் போலச் சத்து அல்லாததும் சத்துப்போலியுமான கிரீடம் சிலம்புகள் வேறுவேறுதான், ஒன்றல்ல என்று சொல்வதுபோன்று அத்துவிதிகள் பிரமசொரூபமான சிவனொன்றுதான் சத்தெனச்சொன்னால் இத்துவிதசித்தாந்தி, சிவமென்பதை விட்டுவிட்டு, சிவனைப்போல் சத்தல்லாததும் சத்துப்போலியுமான உருத்திரனும் இதர தேவதைகளும் ஒன்றல்ல, வேறு வேறு என்றுசொல்லி அதற்கிணங்கச் சுலோகத்தையுங் காண்பிக்கிறார். தும்பைவிட்டு வாலைப்பிடிப்பதுபோல் சிவனைவிட்டு உருத்திராதிகளைப் பிடிக்கிறார். உலகத்துக்குச் சக்கிரவர்த்தி யொருவன் என்றால், அது உண்மையா அல்லவாவென்று பார்ப்பதைவிட்டு, மந்திரிப்பிரதானிகள் வேறு வேறுதான், ஒருவரல்லவென்பதுபோலவும், சூரியனொருவன் தானென்றால், நக்ஷத்திரங்கள் ஒன்றல்ல, வேறு வேறுதான் என்பதுபோலவும் இந்தக்கோணவாசி பேசுகின்றார். இந்தக்கோணல்புத்தி ஒழிய எந்நாள் பிடிக்குமோ அறியேம். அத்துவிதிகள் காரணத்திலும் சத்திலும் ஒன்றெனச் சொன்னால் இவர் காரியத்திலும் சத்துப்போலியிலும் பலவென்கிறார். அத்

துவிதிகள் காரியத்தில் ஒன்றெனச் சொல்லவில்லையே; பலவெனத் தானே சொல்லுகின்றார்கள். அத்துவிதிகளும் பிரம விஷ்ணு உருத்திரர்களை வேறு வேறென்று சொல்ல, இவரும் அவ்வாறு சொல்வதில் அத்துவிதிகளை மறுத்ததாமோ?

"சூதசங்கிதை மந்தாதிகாரிகள் பொருட்டுப் பூர்வபக்ஷமாகப் பிரவர்த்தித்து முடிவில்,சிவசித்தாந்தத்தை நிறுத்தியதுணர்க" எனத் தீட்டியதை யோசிக்கின், இவர் முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கும் சமர்த்தர் எனச்சொல்லலாம். இவர்: படித்த புத்திமான்கள் எவருஞ் சதா தூங்குகிறார்களென்று நினைத்தாரோ? அல்லது இவர்செய்யுஞ் சாலத்தால் மயங்கிப்போவரென நினைத்தாரோ? இன்னும் யாது கருதி யிங்ஙனம் வரைந்தனரோ? இவர் சொல்லுகிறபடி பார்த்தால் சூதசங்கிதை ௱௯௯௯ சுலோகம் மந்தாதிகாரியின் பொருட்டுப் பூர்வபட்சமாகவும் ஒருசுலோகம் தீவிரதர அதிகாரியின் பொருட்டுச் சித்தாந்தமாகவும் சொல்லியிருக்கிறதாய்த் தெரிகிறது. இவ்வாறு அந்தச்சூதசங்கிதை சொல்லுகிறதா? சொல்லுகிறதானு லெந்த விடத்திற் சொல்லுகிறது? எத்தனைமுறை புரட்டிப்புரட்டிப் பார்த்தாலும் அது அகப்படவில்லையே. வியாசமகாமுனிவர் இவர்க்காகச் சித்தாந்த சுலோகமொன்றெழுதிவைத்து, அதை யிவரிடத்தில் நேரே வந்து கொடுத்துப்போயினரோ? அவ்வாறில்லாவிடில் வேறேன்ன விதமாய் அந்தச்சுலோகம் இவரிடத்தில் அகப்பட்டதோ தெரியவில்லை. ௱௯௯௯ சுலோகம் பூர்வபக்ஷமெனவும், ஒருசுலோகஞ் சித்தாந்தமெனவும் சூதசங்கிதையி லில்லாவிட்டாலும் வேறு புராணாதிகளிலாவது வேதாதிகளாவது எழுதியிருக்கின்றதா? ஒருவேளை இவ்வாறு சொப்பனங்கண்டாரோ? அந்தச்சொப்பனத்தில் வியாசமகாமுனிவராவது துரியசிவமூர்த்தியாவது வந்து அநுக்கிரகஞ் செய்துவிட்டுப் போயினரோ யாதோ, அது அரக்கோணத்தார்க்குத்தான் தெரியும். அந்தச் சொப்பனக்காட்சியை மெய்யென்றுநம்பி எதிர்வாதிகளிடத்தில் சொல்லுகின்றார்போலும்! வியாசமகாமுனிவராவது துரிய சிவனாவது சுருதிமுதலிய கலைகளுக்குமாறாக இப்படிச்சொல்வார்களா? ஒருபோதும் சொல்லமாட்டார்கள். "சூதசங்கிதை முற்றும் அத்துவிதமா யிருக்கிறதே, அதிலும் பூர்வபக்ஷசித்தாந்தஞ்செய்து துவித வாசனையைத் தலையெடுக்கவொட்டாமல் தும்சஞ்செய்கின்றதே, அது புராணத்திலு மொன்றாயிருக்கின்றதே, அதிலும் சிவபுராணத்திலும் ஒன்றாயிருப்பதோடு மகாபுராணதிலு மொன்றாயிருக்கின்றதே, அதிலுஞ் சிவோத்கிருஷ்டமாகவு மிருக்கின்றதே, அதை யெப்படி அப்பிரமாணமாகச் சொல்லுகின்றது? அப்பிரமாண மெனச் சொல்லிவிட்டால் நம்மைத் துலுக்கன், கிறிஸ்தவன், பௌத்தன், சமணன் முதலியவரைப்போல் வேத பாஹியராகவும் அநாரியராகவும் சொல்லித் தள்ளிவிடுவார்களே, இதற்கென்னசெய்கிற" தென அதுவே சிந்

தையாய் அன்ன ஆகாரமின்றிப் படுத்து நித்திரை செய்திருக்கலாம் அன்ன ஆகாரமின்மையால் பித்தம் அதிகரித்துமிருக்கலாம்; அப்போது ஏதேதோ விபரீத கனவுங் கண்டிருக்கலாம். அந்தக் கனவில் இவருடைய மனந்தடித்துச் சொப்பனவுலகாகி அதிலேதேதோ வுருக்கள்தோன்றி இவரது எண்ணத்துக்கொத்தபடி ஏதேதோ சொன்னதாயும் கண்டு மருண்டு மிருக்கலாம். அந்த வுருக்களை வியாசராகவும் துரியசிவமூர்த்தியாகவும் பிரமித்து ஏமாந்துபோயுமிருக்கலாம். அதை வைத்துக்கொண்டுதான் இவ்வாறு தைரியத்தோடு எழுதினுராக்கும்! என்செய்வார் பாவம்! இவர் தோற்றப் பொருளை யதார்த்தமாகக் கொள்ளும் புத்திசாலியானதால் அதை நம்பிவிட்டார்போலும். இவர்தபின்ன நண்பரான சோம. நாய்க்கர் சொப்பனத்தைச் சத்தியமென்பவராகலின் அவர்வழிச் செல்லு மிவரும் தாம் கண்ட சொப்பனத்தை யுண்மையென நம்பி யேமாந்து போனுர்போலும்!

இவர் சூதசங்கிதையை அப்பிரமாணமென்று சொல்லிவிடுவார்; சொல்லிவிடுவாரேல் இலட்சம் கிரந்த சங்கியையுள்ள மகா ஸ்காந்தமே பொய்யாய்ப்போம்; அது பொய்யாய்ப்போனுல் மற்றப்பதினேழு புராணங்களும் அவற்றை யாதாரமாகக்கொண்டு உஜ்ஜீவிக்கும் உப புராணங்களும் இதிகாசங்களும் ஆகமங்களும் அப்பிரமாணமாம். இவைகளெல்லாம் போனுலும் வேதமாவது பிரமாணமாமேயெனின் அதைப்பசுநூலெனவும் உலகநூலெனவும் விபசாரநூலெனவும் மோகநூலெனவும் இவ்வாறு பல பலவாய் இகழு நீரரான சோம. நாய்க்கரது அபின்னதோழராகலின் அவர் கொள்கைப்படி வேதமும் அப்பிரமாணமாம். வேதத்தின் பொருளே ஸ்மிருதியாகலின் அதுவும் அப்பிரமாணமாம். இவைகளெல்லாம் அப்பிரமாணமாமாயின் இவர் ஆரியனொன்று வெளிப்படுவதே கஷ்டசாத்தியம். அது பற்றிச் சூதசங்கிதை அப்பிரமாண நூலென்றுசொல்ல அஞ்சுகின்றுர்போலும். சூதசங்கிதை இவருக்கு எமனுகவுமிருக்கிறது; அதைத்தள்ளவும் முடியவில்லை. என்செய்வார்பாவம்! யோசித்துயோசித்துப்பார்த்தார்; கடன் வாங்கியும்பார்த்தார்; முடியவில்லை. கடைசியில் ஏதேனுமொன்று சொல்லித் தொலைக்கவேணடுமே; அதுபற்றி ருகூகூகூ சுலோகம் பூர்வபக்ஷம் என்றும், ஒரு சுலோகஞ் சித்தாந்தமென்றுஞ் சொல்லித் தொலைத்தார். அந்த வொரு சுலோகமும் இவரைக் கிட்ட நெருங்கவொட்டாமல் துரத்திவிட்டது; அதனுடனே அத்துவிதபக்ஷத்திற்கு அனுகூலமாயும் நின்றுவிட்டது. இனிச் செயவதென்ன விருக்கின்றது? ஆதாரமின்றி அந்தரத்தி னிற்கவேண்டியதேயாம்.

ஷை சூதசங்கிதையானது சொல்வதெல்லாம் அத்துவிதந்தான். துவிதத்தை அனேகவித நியாயங்களால் பூர்வ பக்ஷஞ் செய்து தூஷஞ் செய்கின்றது. அத்துடனே துவிதத்தைப் பன்னிப்பன்னிப் பேசி, அதோகதியாக்கியும் விடுகின்றது. துவிதமானது சூதசங்கிதையின்

முன் சூரியனெதிர் இருள்போலத்தான். மிற்க; சூதசங்கிதையின் பிற்பாகத்திலுள்ள பிரமகீதையின் தசோபநிஷத்துகளைப் பிரம தேவன் தேவர்களுக் குபதேசிக்கும்போது:

பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதம்.

ஆதரமுடையீர்கேண்மி னருமறைப்பொருளீதென்றே
ஓதலாலுவமையில்லாப் பொருளிதிலையமுண்டேல்
தீதறமழுவைக்காய்ச்சிச் செங்கையினிடுவேனென்றான்
நாதனுயுலகமெல்லாம் படைக்குநான்முகனுயுள்ளோன். (கசு)

பத்தராயுள்ளீர்கேண்மின்பகர்ந்தவேதத்தினர்த்தம்
இத்தகைத்தாகும்வேறென்றில்லையாமிதனிலுங்கள்
சித்தம்நம்புதலுண்டாகச்செப்பினேமாணைமூன்றே
டத்தனர்பாதந்தொட்டேயென்றனனலரின்மேலோன். (கஎ)

அன்பராயுள்ளீர்கேண்மினறிவித்தபொருள்மெய்யன்றேல்
என்சிரமிற்றுவீழ்வதென்றனனீதுவுமன்றி
யின்பமேயளிக்குமீசனிவ்விடந்தன்னின்வந்து
தன்பெருங்கருணையாலுந்தளர்வறப்பண்ணுகின்றான் (கஅ)

வேதார்த்தம் இதுதானென்றும சந்தேகமுண்டானல் மழுவைக் காய்ச்சிச் செங்கையி லிடுவே னென்றும் பரமசிவன் பாததகைதத் தொட்டு மும்முறை யாணைசெய்து, அதன் பேரில் "நான்சொன்ன பொருள் உண்மையல்லாமற்போமாயின் என் சிரமிற்று வீழக்கடவது" என்று முரைத்தார். உடனே பரமசிவனும் எழுந்தருளிவந்து,

நானேமுழுதுமெனேயொழியகாடிற்சிறிதும்வேறில்லை
யானபொருளேயருமறைதானறையும்படியானசனுனும்
யானுமிசைத்தபடியாலுமிதுவேதிடமாயுளபொருடான்
ஊனமின்றிநான்முகனுமுரைத்ததுங்கட்குண்மையிதே. (கஉ௯)

என்று கூறினர். மற்றவிஷயங்களை யெல்லாம் அந்நூலிற் காண்க. இதனாலே யெல்லாம் சூதசங்கத அத்துவித சித்தாந்த மென்றும் துவித சித்தாந்த மன்றென்றும் துவித வாசனையே அதற்காகா தென்றும் நிலைப்பட்டமை காண்க. இங்ஙனமாக அது துவிதசித்தா ந்தமெனச் சொன்னது என்னமோசம்! ஆ! ஆ!! இப்படிப்பட்ட இவர் வேறு என்ன மோசந்தான் செய்யத்துணியார்? இப்படிப்பட்ட மோச க்காரரிடத்திற் பேசுவது கொடிது! கொடிது!! மிகக்கொடிது!!! அரக்கோணத்தார்க்கு ஒருவகையாய்த் தீர்மான மிருக்கலாம். எங்கெங்கே அத்துவிதமாயிருக்கின்றதோ அவைகளெல்லாம் பூர்வ பக்ஷம்; வேதாதி கலைகளெல்லாம் அத்துவிதமா யிருப்பதால் அவைக ளெல்லாம் பூர்வபக்ஷமாம். அப்படியானல துவைதத்திற் கிடமெங்கே யென்னில் ஷை சுலோகம்போன்ற சுலோகம் ஒன்றுண்டாயிருக்கு மானல் அதுதான் துவைத சித்தாந்தத்திற்குப் பலம். இவர்க்குக் கபட்டுத்தனமும் கள்ளத்தனமும் இருக்கிறவரையில் இவரது சித்தா ந்தத்திக்குச் சற்றுப் பிழைப்புண்டாம்.

சிவசித்தாந்தத்தை நிறுத்த அத்துவிதிகளாலேதான் ஆகுமென்பது.

"முடிவில் சிவசித்தாந்தத்தை நிறுத்தியதுணர்க" என வொரு பசப்புப் பசப்புகிறார். இந்தப் பசப்பு குல்லாப் போடும் பசப்புத் தான். சிவசித்தாந்தம் நிறுத்தப்பட்டால் இவருக்கு வந்த லாபமென்ன? இரட்டைச் சித்தாந்தம் பலித்தால்தானே இவரது சித்தாந்தத்துக்குப் பலிதமுண்டாம். சூதசங்கிதையானது சிவனொன்றே அழியாத சத்திய நித்திய பரிபூரணப் பொருளென்றும் இதர பொருள்களெல்லாம் மித்தைப்பொருளென்றும் சாதித்தமையாலும் அதைப் பரமசிவனும் சாதித்தமையாலும் அத்துவித சிவசித்தாந்தம் நிறுத்தப்பட்டமை காண்க. சக்கிரவர்த்தி யெங்கும் அரசாக்ஷி செய்வது போலச் சிவனெங்கும் பரிபூரணரென அத்துவிதம் சித்தாந்தம் செய்வதால் சிவசித்தாந்தத்தை நிறுத்த அத்துவிதிகளுக்கே யோக்கியதை. துவிதிகளோ அங்ஙனம் பரிபூரணஞ் சொல்லமுடியாமல் இதர பொருள்களுக்கும் இடங்கொடுத்து ஏகதேசப்பொருளாய்ச் சொல்லிச் சிவனைச் சிற்றரசனைப்போலச் சொல்ல நேருகின்றமையால் சிவசித்தாந்தத்தை நிறுத்த இந்தத் துவிதசித்தாந்திகளா லாகாது. ஒருவேளை நிறுத்தினாலும் சிவனை யேகதேச கண்டப்பொருளாய் நிறுத்தினால் நிறுத்தக்கூடுமே யல்லாமல் அத்துவிதிகளைப்போல் பரிபூரணமாய்ச் சிவசித்தாந்தத்தை நிறுத்த அவர்களால் ஆகாது! ஆகாது!! இப்படிப்பட்ட துவிதிகள் அத்துவிதிகளைப் பார்த்துச் சிவசித்தாந்தம் நிறுத்துகின்றோமென்று சொல்வது புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொள்வதுபோலாம். சிவனுக்கும் பூரணத்துவஞ் சொல்லவேண்டும்; பலகோடி ஜீவான்மாக்களுக்கும் தனித்தனிப் பூரணத்துவஞ் சொல்லவேண்டும்; கூடப் பாசத்துக்கும் பூரணத்துவஞ் சொல்லவேண்டும். இது எப்படியாகும்? கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையா? இப்படிப்பட்ட போலிச் சித்தாந்தத்தைப் போலிச் சித்தாந்தமாய்க் கொள்ளாமல் அதை யொருசித்தாந்தமாய்க் கொண்டு, தீட்டினமரத்திலேயே கூர்பார்ப்பதுபோல அத்துவிதிகளிடத்திலேயே வாதஞ்செய்ய வருவது அடாது! அடாது!! இப்படிப்பட்ட அவமானக் கடித மெழுதிப் பத்திரிகையை நிரப்புவதைவிட எந்த ஜோலிக்கும் வாராமல சோம. நாய்க்கரைப்போல பயந்து நடுங்கி யொடுங்கி ஒதுங்கி யொளிந்து பதுங்கித் தலைகாட்டாது தந்திரமாய் முடிவுரை கூறி மௌனஞ் சாதிப்பது அறிஞர்க் கழகாமென்க. இனி அரக்கோணத்தார் அத்துவிதிகளின் முன்னர், சிவசித்தாந்தத்தை நிறுத்துவேமெனக்கூறுவதை மறந்தொழிவாராக.

இவர் சூதசங்கிதையை யிகழ்கின்றாரென்பது.

"தாயுமானவரோ சூதசங்கிதையைத் தூஷிக்கமாட்டார்" எனச் சொல்லுகிறார். இதை நோக்கினால் தாயுமானவர் மனிதரை மாடென்று சொலலமாட்டார் என்று சொல்வதுபோ லிருக்கின்றது. ஆனால்

அப்படிச் சொல்லுகிறவரு முளரோவெனின், உளர்; அவர் யாரென்னின், இவரேயாம். தாயுமானவர் சூதசங்கிதைக்கு ஒரு அனுக்கூடமாருகப் பேசினரில்லை. இவரோ அதற்கு முற்றும் மாருகப் பேசுகின்ருர். சூதசங்கிதை முற்றும் அத்துவிதம். இவரோடு வாதம் செய்யும் நாம் சூதசங்கிதையைப் பிரமாணமாகக் கொண்டே பேசுகின்ருேம். அதில் சிவனென்றே சத்துப் பொருளென்ருல் அதையிவர் மறுக்கின்ருர். அதில் உலகு அசத்தென்ருல் இவர் சத்தென்கிருர். அதில் வேதமே மோக்ஷ நூலென்ருல் இவர் அது பசுநூல் உலக நூல் மயக்க நூல் விபசார நூலென்னுங் கக்ஷியிற் சேர்ந்தவரா யிருக்கின்ருர். இவ்வாறு இன்னும் அனேகவிதமாய்ச் சூதசங்கிதைக்கு மாருய்ப் பேசுகின்றவராகலின் அதற்கிவர் விரோதி; அதிலும் முழுவிரோதி. இப்படிப்பட்ட முழுவிரோதி, வெகு அவிரோதி போல் பசப்புகிருர். இப்படிப்பட்ட முழுவிரோதி "அவர் திருவடியை யாச்சிரயிக்கும் யாமும் சூதசங்கிதையைத் தூஷிக்கமாட்டோம்" என நாணமின்றிப் பேசுவ தென்ன பேதைமை! இப்படிப்பட்ட பொய்யர் காக்கை வெள்ளை நிறமெனச் சொல்ல அஞ்சுவரோ!

இந்த ஆபாசத்தின்பின் "வேதத்திருற் பெறப்பட்டமை மாத்திரத்தானே நாராயணன் முதலினேர் பரமாகாதவாறுபோலச் சூதசங்கிதையிற் பெறப்பட்ட மாத்திரத்தானே அகம் பிரமவாதம் சித்தாந்தமாகமாட்டாது" என ஓர் ஆபாசம் வரைந்தார். வேதத்திற் சிவனே பரமென்று கூற, அதை அரதத்தாசாரியர் அப்பயதீக்ஷிதர் முதலியவர், நியாயத்தால் ஸ்தாபித்திருக்க, பெயர்த்தும் நாராயணன் முதலினேர் பரம்போல் கூறியது இவர் மருளறிவின் பயனும் வேத தூஷணையின் வினையுமாம். இவர் கூறுவதுபோன்று நாராயணன் முதலினேர் பரமென்று வைத்துக்கொண்டாலும் சூதசங்கிதையில் துவித ஸ்தாபனை கூறுகின்றதா? துவைதத்தைத் தூரீகரணஞ்செய்து அத்துவித ஸ்தாபனமன்ருே செய்கின்றது? இது ஒன்றுதானு? மற்றப் புராணேதிகாசங்களும் சுருதி ஸ்மிருதிகளும் அத்துவிதந்தானே கூறுகின்றன. அவை மாத்திரமா? தேவாரந் திருவாசகம் திருமந்திரம் சிவஞானபோத முதலியவைகளும் அத்துவித சித்தாந்தந்தானே பேசுகின்றன. புராணுதிகளில் எந்த விடத்திலாவது சிவனென்று வந்துவிட்டால் அது இவரது துவிதசித்தாந்தமெனச் சொல்லப் பார்க்கின்ருர். அவ்வாறு எந்தப் புராணுதிகளும் துவிதசித்தாந்தத்தைச் சொல்லவில்லை; அத்துவிதமே சொல்லுகின்றன. அதுமாத்திரமா? துவித சித்தாந்தம் தலையெடுக்க வொட்டாமல் தூரீகரணமுஞ் செய்கின்றன.

அத்துவிதிகள் பிரமம் அல்லது சிவனையே பொருளாக மதித்தவர்களேன்பது.

"இனிப் பௌத்தன் புத்தியைப் பொருளாகக் கொண்டவன்" என்கிருர். உண்மைதான். இது யாவரும் அறிந்தசங்கதிதான். இதன்

பேரில் "சங்கரமதத்தவர் ஆன்மா அல்லது பசுவைப் பொருளாக மதித்தவர்கள்" என்று சொல்லித் தம் மருட்சியைக் காண்பிக்கின்றார். சங்கரமதத்தவர் எனறதனுல் அததுவிதிக ளென்றுகின்றது. இவர் அவரவர் மதசித்தாந்தங்களை அறிந்து சொல்வதிற் புலி. நமது கவர்ன்மெண்டார் இந்துக்களுடைய மதசித்தாந்தங்களைப்பற்றி யெழுதும்படி அடிக்கடிப் பலரை நியமிப்பதுண்டு. அப்படி நியமிக்கும் போது இந்த அரக்கோணவாசியை நியமிப்பது உசிதம். இவரைப் போல மதசித்தாந்தங்களை யறிந்தவர் உலகி லெவருமிரார். அதிலும் அறிந்தபடி யொளியாமலும் பாரபக்ஷமில்லாமலும் சொல்லத்தக்க சத்தியவாதி திரிவித உலகத்திலும் ஒருவரிருப்பாரெனச் சொல்ல வொண்ணுது. அமெரிக்கா கண்டத்துச் சிக்காகோவுக்கு இந்துமத சித்தாந்தங்களை விளக்கிக் காட்ட வொருவர் வேண்டும். இந்தக் கோணவாசியை அனுப்பினுல் கறந்தது கறந்தபடி சொல்லிவிடுவார். அதிலு மொளியாமல் சொல்லிவிடுவார். தவிர அவ்விடத்தில் அத்துவிதசாஸ்திரம் படித்தவர் பலரிருக்கின்றுர்கள். அவர்களும் இவரைச் சபாஸ் சபாஸ் என்று மெச்சி விலையுயர்ந்த நல்ல பரிசளிப்பதோடு நல்ல யோக்கியதா பத்திரமும் அளிப்பார்கள். அத்துடனே இவருடைய மதசித்தாந்தத்தையும் ஒளியாம லுள்ள துள்ளபிரகாரம் சொல்லிவிடுவார். இவர் மகா சத்தியவாதி. இவர் அன்று பிறந்திருந்தால் திருவள்ளுவ நாயனுர் திருக்குறளில் இப்படியா வாய்மை யதிகாரஞ் சொல்லியிருப்பார்? இப்படிப்பட்டவர் அன்று இலக்கியமாய் அகப்படாமையால் அப்போது நேர்ந்தபடி யெழுதினுர். ஜனங்களுக்கெல்லாம் நல்லகாலமில்லாமையினுல் இக்கோணத்தார் அன்று பிறக்காமற்போனுர். இனி யாது செய்வது? மிஞ்சிப் போய்விட்டது.

நிற்க, இவர் ஆன்மாவைப் பசு என்றதனுல் ஆன்மா என்றுலும் பசு என்றுலும் ஒருபொருளென்று கொள்ளுகிறதாய்த் தெரிகிறது. பசுவுக்குப் பெயர் ஜீவனென்றும் நூல்களிற் சொல்லப் படுகின்றமையால் ஆன்மாவென்றுலும் பசுவென்றுலும் ஜீவனென்றுலும் ஒரு பொருளையே குறிப்பதாய் ஏற்படுன்றது. இப்படிப்பட்ட பொருளைத் தான் அத்துவிதிகள் பொருளாகக் கொள்ளுகின்றனராம். ஆகவே இதற்குமேல் பொருளேதும சொல்லுகின்றன ரில்லையென்பது குறிப்பாய்க் காட்டுகின்றது. இப்படிச் சொல்வது முற்றும் அறியாமை! இவ்வாறு சொல்லும் அத்துவிதிகளையாவது அத்துவித நூல்களை யாவது யாம் இதுவரையில் கண்டோமில்லை; கேட்டோ மில்லை. இவர் தமது மத இரட்டைச் சித்தாந்தத்துக்கு மோசம் வந்துவிட்டதே; எந்தக்கேள்விக்கும் பதில் சொல்ல வழியின்றி மூடிவுரை கூறி யொளித்துக் கொண்டிருக்க நேரிட்டுவிட்டதே; இனி யாது செய்வதென அதுவே சிந்தையாயிருப்பாராதலால் அது முதிர்ந்து பித்தந் தலைக்கேறி யிருக்கும். இப்படிப்பட்டவருடைய நித்தி

ரையில் சொப்பனமுங் கூடிவிட்டால் புத்தி கலக்கத்திற்குச் சொல்ல வேண்டுவ தில்லை. மற்றப்பேர் சொப்பனத்துக்கும், இவர் சொப்ப னத்துக்கும் வெகுவித்தியாசமுண்டு. அந்தச் சொப்பனததில் ஜீவனை அல்லது பசுவை அத்துவிதிகள் பொருளாகக் கொள்ளுகின்றன ரெனப் படித்திருப்பார்; அல்லது கேட்டிருப்பார்; அல்லது உமாபதி சிவன் முதலானோர் வந்து உபதேசித் திருப்பார்கள். அதைக் கெட் டியாய்ப் பிடித்துக்கொண்டு, அத்துவிதிகளை வெல்வதற்குத் தக்க பிர மாணம் அகப்பட்டதென் றகமகிழ்ந்து அதைப்பத்திரமாய்ச் சொப்ப னத்திலேயே யிரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துக்கொண்டிருந்து, ஜாக்கிரத்தில் வந்து அதை எடுத்துப் பார்த்து இனி ஒற்றைச்சித்தாந் தம் தோற்றது, இரட்டைச் சித்தாந்தம் வென்றது எனச்செருக்கி, அங்ஙனம் எழுதிவிட்டார்போலும்! அங்ஙனமன்றி இச்சாக்கிரத்தி லுள்ள அத்துவித நூலகளி லொன்றிலேனும் ஜீவனை அல்லது பசு வைப் பொருளாகக் கொள்ளவில்லையென்பது துணிவு. இதை யாவ ரும் அறிவர். கோணத்தார் சொல்லுவதுபோலச் சொப்பனத்திற் கூட நமக்கு அப்படிப்பட்ட நூல் கிடைக்கவில்லை. "மனம்போ லிரு க்கும் மாங்கலியம்" என்பதுபோல இவரது மனோ விஷ்டம்போல் நூல்கள் கிடைத்தனவாக்கும். சொப்பன நூற்பிரமாணத்தைக் கொண்டுதான் ஜாக்கிராவஸ்தையில் வந்து அத்துவிதிகள் ஜீவனை அல்லது பசுவைப் பொருளாகக் கொள்ளுகின்றனர் என வாதஞ் செ ய்ய வருகின்றார்போலும்! இவருக்கு எவராவது சாக்கிரத்தில் கடன் கொடுத்திருந்து, அப்பணத்தைச் சொப்பனத்தில் திருப்பிக் கொடு த்துவிட்டதாகக் காண்பாராளுல், அவர் சாக்கிரத்தில் வந்து பணங் கொடுத்துவிட்டேனென்பார்; கொடுத்துவிட்டதாகச் சத்தியமுஞ் செய்வார்; கோர்ட்டிற்சென்று உறுதி மொழியுங் கூறுவார்; நெய்யி லுங் கை தோய்ப்பார். அரக்கோணத்தார்பேரில் குற்றமில்லை. அவர் பொய்யரல்லர். சொப்பனம் மெய்யென்பது அவர் முனனோரா லெழுதப்பட்டிருக்கும் மதப்புத்தகத்தின் நம்பிக்கை. அந்த நம்பிக்கை யின்பேரில்தான் அவருக்குச் சொப்பனம் மெய்யென்று கொள்ளும் நம்பிக்கை யுண்டாயிற்று. ஆதலால் அவர்க்கு யாருங் கடன் கொடு க்கப்படாது. கொடுத்தாலும் பாதகமில்லை, அந்தக்கடனை அவர் சொப்பனத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டதாகக் காணக்கூடாது. கண்டாலோ கொடுத்தபண மெள்ளுதான். ஆதலால் அரக்கோண வீரபத்திர மூர்த்திக்காவது அவரதபின்னதோழரான சோம. நாய்க் கருக்காவது கடன் கொடுக்கும் விஷயத்தில் சற்று யோசிக்கவேண் டும். மிஞ்சிக் கொடுக்கிறதாயிருந்தால் "நான் சொப்பனத்தில் திரு ம்பிப் பணங் கொடுத்துவிட்டதாகக் காணுவேனாயின் சொப்பனம பொய்யாதலால் அது திருப்பிக்கொடுத்துவிட்டதாய் ஆகமாட்டாது" என இவ்வாறு ஸ்டாம்புக்காகிதத்தில் எழுதி ரிஜிஸ்தரும் பண்ணிக் கொடுக்கச்சொல்லி வாங்கிக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் கொ

டுத்த பணத்தை வாங்குவதற்குச் சொப்பனம் பொய்யெனக் கோர்ட்டில் வக்கீலை வைத்து வாதாடவேண்டும், அதற்கு அனேக தத்துவ சாஸ்திரிகளையும் டாக்டர்களையுங் கொண்டுவந்து சாக்ஷி சொல்விக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் விசேஷமாய்ப் பணம்பிடிக்கும், இதன்செலவு கொடுத்த பணத்திற்கு அதிக மானாலு மாகும். இதை விட முதற்போனாலும் போகட்டுமென்று விட்டுவிட வேண்டியதாய் நேரிடும். ஆதலால் இவ்வளவையும் யோசித்தே கடன் கொடுக்க வேண்டும்.

நிற்க, அத்துவிதிகள் ஜீவனைப் பொருளாகக் கொள்ளுகின்றார்களென்பதற்குப் பிரமாணமென்ன? எந்த அத்துவித நூலில் ஜீவன் தான் பொருளென்றும் அதற்குமேல் பொருளில்லையென்றுங் கூறுகின்றன?

சூதசங்கிதை பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயம்.

சச்சிதானந்தரூபனாயும்தாமரையோன்செய்து
வைச்சபல்லுலகங்கட்கும்வயங்குறுகருத்தாவாயும்
நச்சியபசுபாசங்கடமக்குவேறாயுநாளும்
உச்சமேயடைந்துநிற்போன்பரசிவனொருவனோர்மின். (உ)

வான்முதற்பூதங்களைந்தும்மற்றவற்றின்குணமைந்தும்
ஞானவிந்திரியமைந்தும்நவில்கன்மேந்திரியமைந்தும்
பான்மையுறுவாயுவொருபத்தும்மனாதிகளுன்கும்
ஆனவிவைகட்குக்காரணமானஅவித்தையொன்றும். (௩)

ஆனவிம்முப்பானைந்தற்கப்பாற்பட்டவன்பசுவே
யீனமிலாப்பரசிவனிப்பசுவினுக்குவேறானோன்
மானமிலாப்பசுக்களுக்குமருவியுளதனாதியே
தானமெனவஞ்ஞானஞ்சமுசாரபீசமதே. (௪)

கைவலியம் சந்தேகந்தெளிதற்படலம்.

திகழ்ந்தாசனார்சிருட்டியும்சீவனார்சிருட்டியும்வெவ்வேறே
சகந்தனிற்பொதுஈசனார்சிருட்டிகள்சராசரப்பொருளெல்லாம்
அகந்தையாம்அபிமானங்கள்கோபங்கள்ஆசைகளிவையெல்லாம்
இகழ்ந்தசீவனார்சிருட்டிகளாகும்காண்ஈசனார்செயலன்றே. (டுடு)

இந்தச்சீவனால்வரும்அறுபகையெலாம்இவன்செயலல்லாமல்
அந்தத்தேவனால்வருமென்றமூடர்கள்அதோகதியடைவார்கள்
இந்தச்சீவனால்வரும்அறுபகையெலாம்இவன்செயலல்லாமல்
அந்தத்தேவனால்அன்றெனும்விவேகிகள்அமலவீடடைவாரே. (டுக)

ஷை தத்துவவிளக்கம் சீவேசுரபேதம்.

பேதமானதுவுங்கேளாய்பெயராலும்இடங்களாலும்
ஓதருமுபாதியாலும்உடலாலும்உணர்வினாலும்
பாதலம்விசும்புபோலப்பலதூரம்அகன்றுநிற்பர்
ஆதலால்இவர்க்கு (சீவேசுரர்க்கு) எந்நாளும்ஐக்கியமென்பதுகூடாதே. (எஎ)

இக்குணங்களிலேவிண்போன்றிருக்கும்சிற்சாயைதோன்றும்
முக்குணங்களினுந்தூய்தாம்முதற்குணமாயையாகும்

அக்குணப்பிரமச்சாயையந்தரியாமிமாயை
எக்குணங்களும்பற்றுதோணிமித்தகாரணனுமீசன். (௯௨)

இந்தப் பிரமாணங்களினால் பிரமமான சிவனொன்றே உண்மைப் பொருளெனவும் மற்றப்படி ஈசுவரன் மாயாப் பிரதிபிம்பப்பொருளெனவும ஜீவர்களான பசுக்கள் அவித்தியாப் பிரதிபிம்பப் பொருள்களெனவும் விளங்குகின்றமையினாலும் பிரதிபிமபப் பொருள்கள் பிம்பப் பொருள்களைப்போலச் சததாகாமையினாலும் பிமபப்பொருளே சத்தானமையினாலும் ஜீவர்களான பசுக்களைப் பொருளாக அத்வைதிகள் சொல்லுகின்றார்களென்று கூறுவது பேதைமையிற் பேதைமையாம் என்றறிக. பிரமமான சிவனொன்றே முக்காலத்துமுள்ள சத்துப்பொருளெனவும ஈசுவரனும் ஜீவாகளான பசுக்களும் சிவனைப்போலப் பொருள்களல்ல, அதாவது சத்துப் பொருள்களல்ல, பின்னைச் சத்துப்போலிப் பொருள்கள் எனவும் லட்சாதிலட்சங் கிரந்தங்களுடனே சுருதி ஸ்மிருதி புராணாதிகளும் ஆகமங்களும் தமபட்டம அடிக்கவும் அதையே தங்கள் சித்தாந்தமாக அத்துவிதிகள் கூறவும் இவர்க்கு மாத்திரம் அது விளங்காமற்போனது என்ன தீவினையோ அறியேம்! இது விஷயமாக இப்பிரமவித்தையிற்றானே சோம.நாய்க்கரை மறுத்து, 'சங்கராசாரியர் அவதாரமகிமை' யெழுதும்போது, வெகுவாய் எழுதியிருக்கின்றோம்; இன்னு மிதைச் சார்ந்த பற்பல விஷயங்களுமெழுதி, இனி அவர் தலைகாட்டவொட்டாதபடியுஞ் செய்திருக்கின்றோம். இன்னும் அவரது ஆக்ஷேபங்கட்கெல்லாம சமாதானமுஞ் சொல்லி யிருக்கின்றோம். அங்ஙனமாக, ஒன்றுந்தெரியாதுபோல "இந்தப்பூனையும் பாலகுடிக்குமா?" என எழுதவந்தது ஆண்மையாமா? நாம் அடிக்கடி எழுதினதையே யெழுதுவது பிரதிவாதிகளுக்கு அவமானமல்லவா?

பேதவாதகண்டனம்.

இதன்மேல் கழுதையுவமானங்கூறிக் கழுதைத் தன்மையாகவே முடித்துக் கொள்ளுகின்றார். அது வருமாறு:—"தானல்லாத
"பாசத்தை அகமென்று கொண்டவனைப்போலத் தானல்லாத பதி
"யை அகமென்று கொண்டவனும் கிர்மூடனாயினும் முன்னவனிற்
"பின்னவன் அதிக கேவலப்பட்டழிவனென்க. ஏனெனின், பாசத்
"தைப் பசு யாளுபவன். பசுவைப் பதி யாளுபவர். தன்னாலாளப்படும்
"பாசத்தைத் தானென்பதால், அப்பாசந் தன்னைத் தண்டியாது. தன்
"னையாளும் பதியைத் தானென்றால் அந்தப்பதிப்பொருள் தன்னைத்
"தண்டியாமற்போகாது. ஒருநான் தன்னைக் கழுதையாக எண்ணு
"வதுபோல் தான் பாசமென்பதும் ஒரு அடிமை தன்னை யரசனென்
"போல் தான் பதியென்பதுமாம. ஒருவன் தன்னைத் தான் கழுதை
"யென்றதனால் அவனை யந்தக் கழுதையெழுந்து தண்டிக்கமாட்டாது.
"நானுகாமும் ஒன்றாய்விட்டோமென்று அந்தக்கழுதை சந்தோஷத்
"தையே யடையும். ஒரு அடிமை தன்னைத் தான் அரசனென்று

"வெளிவந்தால் அரசன் சந்தோஷிக்கமாட்டான். அப்போதே யவ "னைப்பிடித்துத் தண்டித்துவிடுவான்." என்பதாம்.

இவருக்கு ஆத்திரமும் கோபமும் துவேஷமும் பொங்கிப் பொங்கி யெழுகின்றன. நியாயத்தால் பிறர்மதத்தை வெல்ல விடமின்மையான் கழுதையுவமானங்கூறி யிழிவுபடுத்தி அதனால் வென்றதாய்ச் சிறிது சந்தோஷிக்கப் பார்க்கின்றார். "உண்டதைக் கக்குவான்" என்றபடி யிவருக்குள்ள புத்தி வெளிப்படுகின்றது. கழுதை யெவ்வளவு சந்தோஷப்பட்டதா யெழுதுகின்றாரோ அவ்வளவு சந்தோஷமிவருக்கு முண்டானதாய்த் தெரிகின்றது. நாமும் பிறரும் சோமசுந்தரநாயகரையும் சுந்தரனையும் ம-௱-௱-ஸ்ரீ கோவை சபாபதி நாவலரையும் கண்டனைசெய்து எழுதிய விஷயங்களைப்பார்த்த இந்த அரக்கோணத்தார்க்கு இவ்வித வுவமானங்கள் கூறுவது குற்றமென ஏன் புலப்படவில்லை? இதற்குக் கண்டனை முன்பே வந்திருக்கின்றமையால் இப்போதும் வந்துவிடுமென்று கோணத்தார்க்குத்தெரியும். வந்தால் வரட்டும் ; வருகிறமட்டும் ஜெயமாயிருக்கட்டுமென்பதே யவர் கருத்தென்க. அல்லாமல் எத்தனையோபேர் இதைப்படித்தவரெல்லாம் அதைப் படிக்கப்போகிற தில்லை; அதைப்படித்தவரெல்லாம் இதைப் படிக்கப்போகிற தில்லை. இதற்கிடையில் இப்படிப்பட்ட விஷயங்களைத்தெரிந்துகொள்ளச் சத்தியற்றவர் வெகுபேர் இருக்கவுங்கூடும். இப்படிப்பட்டவர்கள் வரையில் ஷை அவமானம் வெளிப்படாமலிருக்குமன்றோ? அதுவரையில் இலாபந்தானே யென்று கருதி யெழுதுகின்றார்போலும்.

இவரதுவாக்கியத்தில் பதியென்பதொன்று, பசு என்பதொன்று, பாசம் என்பதொன்று ஆக மூப்பொருள்க ளேற்பட்டன. இவ்வாறு அத்துவிதிகளும் மூன்று பொருள்களெனவே அங்கீகரிக்கின்றனர். இதற்குப்பிரமாணம்:—

கைவலியம் தந்துவவிளக்கம்.

ஏமமாயாவினோதவீசனாருளினாலே
பூமலியுயிர்கட்கெல்லாம்போகசாதனமுண்டாகத்
தாமதகுணமிரண்டுசெத்தியாய்ப்பிரிந்துதோன்றும்
வீமமாமூடலென்றும்விவிதமாந்தோற்றமென்றும். (௬௫)

இவ்வுடல்மருவுஞ்சீவன்இலங்குதைசதனென்றுவன்
இவ்வுடல்மருவுமீசன்இரணியகர்ப்பனாவன்
இவ்வுடலிரண்டுபேர்க்குமிலிங்கசூக்குமசரீரம்
இவ்வுடல்கோசமூன்றாம்இதுகனவவத்தையாமே. (௬௬)

சீரியஈசனார்க்கும்சீவர்க்கும்உபாதியொன்றேல்
ஆரியகுருவேபேதம்அறிவதெப்படியென்றக்கால்
காரியவுபாதிசீவன்காரணவுபாதியீசன்
வீரியமிகுசமட்டிவியட்டியாற்பேதமாமே. (௪௫)

ஷை சந்தேகந்தெளிதற்படலம்.

அச்சுவத்தமென்னொருமரமதிலிரண்டரும்பறவைகள்வாழும்
நச்சுமங்கொருபறவையம்மரக்கனிநன்றுநன்றெனத்தின்னும்
மெச்சுமங்கொருபறவை தின்னாதெனவியங்கியப்பொருளாக
வைச்சுமாமறைசீவனையீசனைவகுத்தவாறறிவாயே. (௫௮)

இச்செய்யுள்களாலும் இதற்குமுன் காண்பித்த செய்யுள்களாலும் ஜீவர்கள் வேறெனவும், ஈசுவரன் வேறெனவும்,ஜீவர்கள் சிருஷ்டி வேறெனவும், ஈசுவரன்சிருஷ்டி வேறெனவும், ஜீவர்களுடைய போக சாதனத்துக்காக வுலகு சிருஷ்டிக்கப்பட்டதெனவும், ஈசுரன் சிருஷ்டி சராசரவுலகெனவும், ஜீவசிருட்டி அகந்தை, அபிமானம், கோபம், ஆசைகளெனவும், ஈசுவரனுக்கும் ஜீவர்கட்கும் ஐக்கியம் அதாவது ஏகத்துவங்கூடாதெனவும் இவ்வாறு பல பல விதமாய்ப் பேதங் கூறுகின்றன வேதாந்தநூல்கள் என அறியலாம், அன்றி ஜீவன் கிஞ்சிக்கியன்; ஈசுவரன் சர்வக்கியன் எனவும் அறியலாம. இவ்வளவு பேதமிருப்பதால் ஜீவனான பசு, ஈசுவரனான பதியைத் தானெனவும் இரண்டும் ஒன்றெனவும் சொல்வதாக அத்துவிதிகள் ஒருபோதும் கூறமாட்டார்கள். அங்ஙனங் கூறவில்லையென்பதற்கு ஷை பிரமாண மாத்திரமன்று; எந்த நூல்களும் பிரமாணமாம். ஷை லட்சணமுள்ள ஜீவர்களான பசுக்கள்ஃ உபாசனைக்கும் கிரியைக்குந் தக்கபடி கைலாசாதி பதவிகளைப் பெறுகின்றன. சாதாரணமான குடித்தனக்காரன் தன்னை ராஜனென்று சொல்வானேல் ராஜனால் தண்டிக்கப்படுவான். அதுபோலக் கிஞ்சிக்கியனான ஜீவன், தன்னை ஈசுவரனென்று சொல்வானேல் ஈசுவரனால் தண்டிக்கப்படுவான். ஈசுவரன் ஆண்டான்; ஜீவன் அடிமை, ஆண்டான் அடிமையாகமாட்டான்; அடிமை ஆண்டானாகமாட்டான். இதுவரையில் வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஒப்புக்கொண்டார்கள். இது வேதத்தின் க்ர்மோபாசனை காண்டவிஷயம். பாசத்தைத் தானென்பது உலோகாயுதர் விஷயம். அதைப் பின் கவனிப்பாம். கர்மோபாசனா காண்டவிஷயம் நம்பிக்கை; விசாரணையல்ல. ஞானகாண்டத்திலோ தருக்க நியாயத்தைக்கொண்டு எவ்வளவு தூரமானாலும் விசாரிக்கலாம். வேதத்தின் பூர்வகாண்டம் கர்ம்ம பத்திகள்; அவைகளுக்கு விசாரணைகூடாது; விசாரணைக்கு நிற்கவுமாட்டாது. கர்ம்மகாண்ட பத்திகர்ண்டப்படி யொழுகினவர்க்குச் சொற்காதி பதவிகளும் கைலாசாதிபதவிகளும் உண்டாம். நிஷ்காமியமாய் ஒழுகினவர்க்கு மனத்தூய்மையும் முமூட்சுத்துவமுமுண்டாகும். முன் சொன்ன ஞானகாண்டமோ எவ்வளவு விசாரணை செய்தாலும் அதற்கெல்லாம் தளராது இடங்கொடுக்கும். துவிதசித்தாந்திகள் கர்ம்ம பத்திவரையில் நின்றுபோனார்கள். அவர்களுக்குத் துவிதம் பாலும் பழமும்போ லினிமையாயிருக்கும். அவர்கள் ஞானமென்று வாயினால் சொன்னாலும் அங்கும் பேதஞானத்தை விடமாட்டார்கள். அத்துவிதமென்று வாயினால் சொன்னாலும் அங்

கும் துவிதப்பொருளே சாதிப்பார்கள். அவர்களுக்கு அத்துவிதம் எட்டிக்காயாகும். வேதாகம புராணுதிகளில் அத்துவிதமென்னுஞ் சொல் எங்கும் விசேஷமாய் வழங்குவதால் அது தங்களுக்குரியது போலக்காட்டி அத்துடனே சுத்தம் என வொருசொல் சேர்த்துச் சுத்தாத்வைதமென வைத்துக்கொண்டார்கள். வைத்துக்கொண் டாலும் காரியத்தில் துவிதத்திற்கு உலோபஞ்செய்வதில்லை. இந்தத் துவிதசித்தாந்திகள் கர்ம்மோபாசனையில் ஜீவனையும் ஈசுவரனையும் பேதமாய்ச்சொல்வதுபோல முத்தியிலும் சொல்ல ஆசைப்படுகின் ருர்கள். இது கர்ம்மோபாசனைவரையில் பயன்படுமே யன்றி ஞான காண்டத்தில் பயன்படாது. அத்துவிதிகள் கர்ம்மோபாசனைவரை யில் பதி பசு பேதத்தை யொப்புக்கொள்ளுகின்ருர்கள். அதன்மேல் பேதத்தை யொப்பவில்லை. அப்படி யொப்பினுல் வேதம், ஸ்மிருதி, புராணம், உபபுராணம், இதிகாசம், பலவிதகீதைகள், ஆகமங்கள், இவைகளுக்கு மாறில்லாமல் பல பெரியோர்களியற்றிய நூல்கள் இவ ற்றினுக்கும் யுக்தி அனுபவங்கட்கும் மாரும். சித்தாந்திகள் எது வரையில் ஆண்டானடிமை பேதத்தையொப்பினுர்களோ, அதுவரை யில அத்துவிதிகளு மொப்பிவிட்டமையால் சாதாரண மனிதன் தன்னை ராஜன் என்று சொல்வதால் அடையுந் தண்டனையைப்போல் அத்துவிதிகள் அடையவேண்டியதில்லை. ஞானகாண்டத்திலும் பே தஞ் சொல்லவேண்டும் என்பாராயின் அதைப்பற்றிச் சுருதி யுக்தி அனுபவங்கட்கொத்து விசாரணைசெய்வாம். இதைப்பற்றி, 'சங்கரா சாரியார் அவதாரமகிமை' என்னும் விஷயத்திலும் சித்தாந்திகள் தான் மாயாவாதிகள் என்றெழுதிய விஷயத்திலும் அனேகமாய்ப் பேசியிருக்கின்ருேம். ஆயினும் இங்கும்வேண்டியமட்டும் பேசுவாம். அடிமையானவன், தன்னை அரசன் என்று சொல்லும் விஷயத்தில் எம்மாதிரிக்குற்றம் நிகழ்கின்றதோ, அம்மாதிரிக்குற்றம், ஜீவன், தன் னை யீசுவரன் என்று கூறும் விஷயத்திலுமுண்டென்கிருன்றே? இது உண்மைதான். ஆனல் வெகு பிரயாசைப்பட்டு இச்சிறு குற்றத்தை த்தேடிக் கண்டுபிடித்தவர், ஆய்ந்துதேடாமல் பெருங்குற்றத்தைக் கைசோர நழுவவிட்டாரே யென்றுதான் விசனமுறுகின்றேம். சாதா ரண மனிதனை அடிமையும் எண்சாண் மனிதன்தான்; ராஜனும் எண்சாண் மனிதன்தான். இருவரும் வேறு வேறு ஸ்தானத்திலிருக் கும் பேதப்பொருள்கள்; அன்றி இருவரும் சத்துப்பொருள்களுமாம். அவ்வாறு ஜீவனை பசுவும் ஈசுவரனை பதியும் அவ்வாறு பேதப் பொருள்களும் சத்துப்பொருள்களுமா? இரண்டும் பேதப்பொருள் களும் சத்துப்பொருள்களுமாக விருந்தால் யாது குற்றமென்னின், பதி, பூரணப்பொருளென்று சொல்லும் வேதாகமாதிகளுக்கு விரோ தப்படுமே. அடிமை அரசன் விஷயத்தில் இருவரும் கண்டப்பொரு ளாயிடுதல் சித்தம். அங்ஙனமே பதியும் பசுவும் கண்டப்பொரு ளென் றிவரொத்துக்கொள்ளுகின்றனரா? பதியாகிய சிவனும் பரிபூர

ணப்பொருள் ; பசுவாகிய ஜீவான்மாவும் பரிபூரணப்பொருள் எனக் கொள்ளும் இவரது சித்தாந்தத்திற்கு எண்சாணுடம்புள்ள கண்ட அடிமை, எண்சாணுடம்புள்ள கண்ட அரசன் ஆகிய விவர்களுடைய உவமானம் எங்ஙனம் பொருத்தமாகும்? உபமான உபமேய விலக்கணந் தெரியா விவர்: அந்த ஜோஸிக்கு ஏன் வரவேண்டும்? கழுதையுபமானஞ்சொல்லித் தூஷிக்கவந்த விவர்: அவ்வுபமானத்தைக் கழுதைத்தன்மையாகவே முடித்துக்கொண்டது பெரியதோர் அவமானமென்க. இவராவது, சோம. நாய்க்கராவது எவ்வளவு பேசினாலும் எழுதினாலும் பரிபூரணக்கடவுளிடத்து மற்றப் பசு பாசப்பொருள்கள் எங்ஙனமிருக்கும் என்கிற கேள்வி வந்துவிட்டால் பாதாளத்திற் போய் ஒளித்துக்கொள்ளுகின்றார்கள். அத்துவிதிகள் சிவனொன்றே முக்காலத்து முள்ள சத்துப்பொருளென்றும், ஈசுவரனாகிய பதியும் ஜீவனாகிய பசுவும் மாயையாகிய பாசமும் சிருட்டிகாலத்திற்றோன்றி, லயகாலம் வரையில் இருந்து, லயகாயத்தி லொடுங்கிவிடுகின்றனவென்றும், அவைகள் ஓர் காலச் சத்துப்போலி அநிர்வசனீயப்பொருள்களென்றும், பதி பசு பாசங்கள் தனித் தனிப்பொருளென்றும், பசு தன்னைப் பாசமென்றாவது பதியென்றாவது சொல்லுதல் கூடாதென்றும், அவ்வாறு கூறுவது அத்துவிதசித்தாந்த மல்லவென்றும், அவ்வாறு அத்துவிதிகள் சொல்லுகிறார்களென்பது பிதற்றலேயன்றி யுண்மையல்லவென்றும், பதிபசுபாசங்களுக்கு மூலமாயும் விலக்ஷணமாயும் சத்தாயுமுள்ள துரியசிவனிடத்திலே சத்துப்போலி அநிர்வசனீயப் பொருளான பசு: முத்தித்தசையில் சிவமாய் விளங்குமென்று சொல்வதையுணராது, சத்துப்போலியும் அநிர்வசனீயமுமப சிவத்தினின்றுந் தோன்றியதும் காரியமுமான பதியைப் பசுவாக அத்துவிதிகள் சொல்லுகிறார்களென்று சித்தாந்திகள் சொல்வது வெறும்பொய்வார்த்தையென்றும்,பதிபசு பாசங்கள் ஒன்றாகிற்றென்று அத்துவைதிகள் சொல்லவில்லையென்றும் இதை வாசிப்போர் அறிந்து தெளிந்திடுவாராக.

துரியசிவன் காரணப்பொருள் ; அந்தச் சிவனிடத்தி னின்றுந் தோன்றிய பதியும் பசுவும் பாசமும் காரியப்பொருள்கள். மனம் காரணப்பொருள்; மனத்தினின்றும் தோற்றிய சேதன சேதனவுலகம் காரியப்பொருள். ஷ்சொப்பன உலகத்திலுள்ள பற்பல பொருள்களும் ஒன்றுக்கொன்று பேதப்பொருள்களென்றே சொல்லவேண்டும். அங்ஙனமே சிவத்தினின்றுந்தோன்றிய பதிபசுபாசப்பொருள்கள் ஒன்றுக்கொன்று பேதப்பொருள்களாம். சொப்பனப்பொருள்கள் முடிவில் மனமாதல்போல் பதி பசு பாசப் பொருள்கள் முடிவில் சிவமாய் நிற்கத்தக்கனவேயாம். ஒவ்வொரு சிருட்டியிலும் இவ்வாறே தோன்றித் தோன்றி யொடுங்குகின்றன. வித்தினின்றும் விருக்ஷமுண்டாவது சகஜமானாலும் வித்தை வறுத்துவிட்டால் பிறகு எப்படி முளையாதோ அப்படியே பசுக்களைச் சிவஞானத்தீயால் வறுத்துவிட்டால் பின்பு அவைகள் பிறப்பதில்லை. அதன்பொருட்டுப் பசுக்

கள், பதியை யுபாசித்துச் சித்தசுத்தியடைந்து முமுட்சுத்துவம் பெற்று, கேட்டல் சிந்தித்தல் நிட்டை கூடுதல்களால் அபரோக்ஷ சாக்ஷாத்காரம் பெற்றுச் சிவசொருபமாய்விடுகின்றன. இப்படிப்பட்ட அதீத நிலையில் சங்கற்ப விகற்பமில்லை; காண்பான் காட்சி காணும்பொருளில்லை; இரவு பகலில்லை; நன்மை தீமைகளில்லை; மேல் கீழில்லை; பெரியார் சிறியாரில்லை; சினேகிதர் பகைவரில்லை; நான் நீ அவன் அவள் அது என்பதில்லை; மூன்று சரீரமும் மூன்று அவத்தைகளும் முக்குணங்களும் மூவுலகங்களுமில்லை. இப்படிப்பட்ட நிலைமையில்தான் ஜீவனாகிய பசு சிவமாய் விளங்குவது. இங்ஙனமாக, மேற்கூறியவைகளெல்லாமிருக்கும் பந்தநிலையில், பசு, தன்னைப் பதியென்று சொல்வதாக அபவாதஞ்சொல்வது நன்றாகாது. மேற்சொன்ன அதீத நிலையில் நான் அது, அது நான் என அபேதஞ்சாதித்தால், முற்றும் பேத நிலையில் அதாவது பந்தநிலையில் அபேதஞ் சாதிப்பதாகச்சொல்லி, ஞானநூல் பழக்கமில்லாதவர்களுக்கு வேதாந்தநூல்களில் வெறுப்பு வரச்செய்வது துன்மார்க்கச்செயலாம். இப்படிப்பட்ட முத்தியில் அகம் பிரமம் அதாவது நான் பிரமமெனச்சொல்வது வேதாகம புராணாதி சாஸ்திரங்களுக்கும் யுக்தி அனுபவங்கட்கும் சம்மதமாயிருப்பதால் அதற்குத் தோஷங்கூறுவோர் வேதாகமாதி நூல்களுக்கு அப்புறப்பட்ட புறச்சமயத்தவரென்றே சொல்லற்பாலதென்பதாம்.

முத்திநிலையில் ஜீவனே சிவனாய் விளங்குகின்றானென்றதற்குப் பிரமாணங்கள் விசேஷமாய் 'வேதாந்தசங்கை நிவாரண' த்தில் கூறியிருக்கின்றமையால் ஆங்குக் கண்டுகொள்க. இதுகாறும் ஏதோ வெகு நுட்பங்களைச் சொல்லிவிட்டதாய்க்கருதி, "இந்த நுட்பங்களை விவேகிகள் யோசிக்கக்கடவர்" என்று கூறுகின்றார். ஆ! ஆ!! வெகு நுட்பம்! வெகுநுட்பம்!! இந்த நுட்பம் ஸனகாதி யோகியர்க்கும் விளங்கமாட்டாது! இந்த நுட்பத்தை வெகு பிரயாசைப்பட்டு அறிய வேண்டும்போலும்!

யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவருமென்று
தாயுமானவர் கூறியது பௌத்தசித்தாந்திகளையே என்பது.

"யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும் என்று தாயுமானவர் கூறியது பௌத்தசித்தாந்திகளையென்று இவர் போக்குக்காட்டியதை யெங்ஙனே யொப்புவார்கள்" எனவும் ஒன்று கூறினார். இவர் கூறுவதைமாத்திர மொப்புக்கொண்டு எவரோஇவர்க்கு யோக்கியதாபத்திரங் கொடுத்தார்கள்போலும்! அகம்பிரமாஸ்மி, சிவோகம் முதலிய வேதாகம வாக்கியங்களெல்லாம் நானே பிரமம், நானே சிவன், பிரமமே நான், சிவனே நானெனப் பறையடிக்கின்றமையாலும், தாயுமானவரும் ஷை வாக்கியங்களை யுதகரித்துக்கூறுவதாலும், அங்ஙனங் கூறாது துவிதசித்தாந்தங் கூறுவதில் வேதசாஸ்திர விரோதம் வருவதோடு யுக்தி அனுபவவிரோதமும் சிவனுக்கு அபரிபூரணதோஷமும்

வருவதாலும், இவரைப்போலத் தாயுமானுரை வேதாகமசாஸ்திர பாஹியரெனச் சொல்லக்கூடாதானதாலும் 'யாங்களே கடவுளென் றிடும் பாதகத்தவரும்' என்று கூறியது பௌத்தசித்தாந்திகளையே யாம் என்றறிந்திடுக. பௌத்தர்கள் ஜீவனையே புத்தியென்று சொல்லி, அது க்ஷணிக விஞ்ஞானமென்றும் அதன் பிரதிபிம்பம் வெளிப் பொருள்களென்றும் அந்தப்புத்திப்பொருளே கடந்தபொருளென்றுங் கூறுகின்றார்கள். அந்தப் புத்திப்பொருளான ஜீவனை அத்துவிதிகள் பிரதிபிம்பமாகவும் சத்துப்போலியாகவும் அநிர்வசனீயமாகவும் சொல்லிக்கழித்து, இதற்குஆதாரமாகவும்அதிஷ்டானமாகவும்காரணமாக வும் காரணகாரிய ரகிதமாகவும் அகண்டபரிபூரண சச்சிதானந்த நித்தியபரிபூரணமாகவுமுள்ள சிவனென்னும் துரியப்பொருளுண்டெனச் சாதித்து, பௌத்தர்களைக் கண்டித்திருக்கின்றார்கள். போலிப்பொருளை யதார்த்தமாகவும் முக்கியப்பொருளாகவும் கடந்தபொருளாகவும் சொல்லுகின்றமையால் பௌத்தர்களைத் தாயுமானர் 'யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்' எனக்கூறி மறுத்தார்.

"பௌத்தன் தனக்குக் கீழிட்டபாசத்தைத் தானென்றவன். தனக்குமேலிட்ட பதியை அல்லது கடவுளைத் தானென்றுகூறினவன் அல்லன்" என்கிறார். அவனவன் சொல்வதைக்கொண்டு அவனவன் சித்தாந்தத்தை யறியவேண்டுமேயன்றி, தம் சித்தாந்தத்தைக் கொண்டுபோய் அவன் மதத்திலேற்றி, அதன்பேரில் தமக்கிஷ்டமான சித்தாந்தஞ் செய்துகொள்வது புத்தியன்று. தனக்குக் கீழ்ப்பட்டது பாசமென்றும் மேற்பட்டது பதியென்றும் கூறுவது அவன் சித்தாந்தமன்று. அவனுக்கு ஜீவன்தான் பொருள். உலகம் அதனது பிரதிபிம்பம். பௌத்தர்கள் வேதாந்திகள் சொல்வதுபோல ஈசுவரனைச் சொல்லாமையாலும் ஜீவன் ஈசுவரன் இவ்விரண்டின்பேரில் அகண்டபரிபூரண பிரமத்தை யொப்பாமையாலும் வேதாந்திகளால் போலிச் சத்து என்றும் அநிர்வசனீயமென்றும் சொல்லி நீக்கப்பட்ட ஜீவனுன புத்தியையே பொருளாகக் கொள்ளுகின்றமையாலும் ஜீவனை விட வேறே ஈசுவரனை யொப்பாமையாலும் ஒப்பாமை காரணமாக அவ்வீசுவரனை யுபாசித்தல், வழிபடுதல், பூசித்தல், தியானித்தல் முதலிய சற்காரியங்கள் ஏதும் புரியாமையாலும் அவர்களைக் கண்டித்தலும் பாதகத்தவரும்எனக் கூறலும் நியாயமேயாம். ஈசுவரனை யொப்பாமைபற்றி அத்துவிதிகளும் பௌத்தர்களைக் கண்டித்திருக்கின்றார்கள். ஜீவனென்கிறபேர் எப்போது வந்ததோ அப்போதே ஈசுவரனென்கிறபேரும் அத்துடன் றொடர்ந்தே யிருக்கின்றது; அங்ஙனமே பசு என்கிற பேர் எப்போது வந்ததோ அப்போதே பதியென்கிற பேரும் தொடர்ந்தேயிருக்கின்றது. ஒன்றைவிட்டு ஒன்றிராது. அண்ணன் என்கிறசொல் தம்பியையும் தம்பியென்கிறசொல அண்ணனையும் எப்படித் தொடர்ந்திருக்கிறதோ, அப்படியே ஜீவன், பசு என்கிற சொற்கள் ஈசுவரன் பதியென்கிற சொற்களைத் தொடர்ந்தேயிருக்

கின்றன. இது வேதாகம சாஸ்திர சித்தாந்தமாகலின் இதை அத்து விதிகள் கௌரவஞ்செயது அங்கீகரித்து அவைகளுக்குக் கட்டுப்பட்டுப் பேசுகின்றார்கள். ஆத்திரத்தையும், பதைபதைப்பையும், வெகுளியையும், அடங்காமையையும், துவேஷத்தையும் சற்றுப்போது ஓரிடத்தில் கட்டிவைத்துவிட்டு, கோணவாசி ஆலோசித்துப் பார்த்தால் நாம் கூறியவைகளெல்லாம் உண்மையென விளங்கும். தனக்கு மேவிட்ட பதியை அல்லது கடவுளைத் தானென்று கூறினவனல்லன் என்கிறாரே. இதைவிடக் கைலாசத்தில் காளகண்ட திரிநேத்திர சதுர்ப்புஜ சந்திரசூட உமைபாக பரமசிவனைத் தானென்று கூறினவனல்லன் என்று கூறுகிறதுதானே. ஜீவனுக்கு மேற்பட்ட பொருளில்லை என்றுதான் அவன்சொல்லுகிறானே. அவனிடத்திற் போய்த் தனக்கு மேற்பட்ட பதியைத் தானென்று கூறினவனல்லன் என்று சொல்லுவானேன்? முடிவில் தானென்றும் அதுவென்றும் பேதமில்லையெனச் சாதிக்கும் தாயுமானார் முன்னேயே, இவர் பேதம் பழுத்துப்போகின்றதென்றறியாது இந்தச் சித்தாந்தத்தையே யங்கீகரியாத பௌத்தரிடம்போய் இவரது பேதஞானத்தைப் பழக்கப்பார்ப்பதென்னமதி? நாம் மேலே காட்டிய காரணங்களால் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர் என்பது ஜீவனென புத்தியைவிட மேலே பொருளில்லையென்கிற பௌத்த சித்தாந்தியை யாதலாலும் தாயுமானவர் அத்துவித சித்தாந்தியாதலாலும் அரக்கோணத்தார் கோணலெல்லாம் கோணலாகவே முடிந்தமை காண்க. ஆதலால் பானுமூர்த்தி சொன்னது சத்தியமான வாக்கியம்; போக்குக்காட்டியதன்று. அத்துவிதிகளைத் தூஷிப்பதற்கு வைத்துக்கொண்டிருக்கும் பல குறுக்குவழிகளி லிஃதொன்று தப்பிப்போகிறதே யென்கிற துக்கத்தால் கோணவாசி வாதஞ்செய்கின்றாரேயன்றி மற்றப்படியன்று.

வேதத்தின்நெறிநின்று சிவனைவழிபடுபவர் வைதிகசைவரென்பது.

"வைதிகசைவ சித்தாந்தசிகாமணியாகிய ஸ்ரீ தாயுமானவர் மெய்கண்டான் பொன்னடியையே மேவினவராகையால்" என்கிறார். வேதவேதாந்த நெறிநின்று சிவனைவழிபட்டுச் சிவ சொரூபமாய் விளங்குபவர் யாவராயினும் வைதிகசைவரேயாம். வேதவேதாந்தங்களையிகழ்ந்து அந்நெறியில்லார் யாவராயினும் அவைதிகரும் பாஷாண்டிகளுமாம்.

முன்பின்விரோதம்.

"பேய்த்தேர் அல்லது கானனீர்தோற்றமாயிருந்தும் அனுபவிக்க "முடியாதாற்போல ஞானிகளுக்குச் சிவாநுபவமுண்டாயகாலத்தில் "உலகமிருந்தும் அனுபவவேத்யமாகாமையால் அதனைப்பொய்யென்று கூறுவர் சைவசித்தாந்திகள்" என்று கூறியதிலுள்ள ஆக்ஷேபமும் முன்பின் முரணும் விளங்க எடுத்துரைப்பாம். கானனீர் தோற்றமாயிருக்கிறதென்று சொல்வதினால் பொருளில்லை யென்றாகின்றது.

பொருளில்லாதபோது அதை யெவ்வண்ணம் அனுபவிக்கிறது? அதை யனுபவிக்க முடியாதாற்போல என்றால் அதை அனுபவிக்கவும் கூடும்போலிருக்கின்றது. இதற்கு உவமேயஞ்சொல்லுகிற விவேகத்தைப்பாருங்கள்! ஞானிகளுக்குச் சிவாநுபவ முண்டாயகாலத்தில் உலகமிருந்தும் அனுபவவேத்ய மாகாமையால் அதனைப் பொய்யென்று கூறுவர் சைவசித்தாந்திகள் என்பதுதான் விவேகமென்பது. இதில் ஞானிகளுக்கு உலகம் இருந்தும் அனுபவவேத்ய மாகவில்லையாம்; உவமானத்திலோ கானனீர் தோற்றல் மாத்திரமாம். இந்த ஆபாச வுவமானங்கூற எங்கே கற்றாரோ? உவமானத்தில் கானனீர் தோற்றம்; உவமேயத்தில் உலகு உள்ளது. உள்ள உலகுக்கு இல்லாத கானனீர் எப்படி யுவமானமாகும்? இந்தக் கானனீருவமானமிவர் சொல்லு முவமான மன்று, வேதசாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வுவமானமேயாம். இந்த வுவமானப்படி கானனீர் தோற்றமென்றும் இதன்படி உலகுக்தோற்றமென்றும் நிதர்சனமாய் விளங்க அதைமறைத்து உவமானத்திற்கு மாறாக வுவமேயத்தைச் சொல்வது பரிகாசத்திற் கிடமாம். உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் பொருத்தமாக அத்துவிதிகள் சொல்ல, துவித தோஷபுத்தியால் அதைக் கண்டிக்கப் புகுந்தால் வருமா? ஞானிகளுக்கு உலகமிருந்தும் அனுபவிக்க முடியவில்லை யென்கிறார். இதன்படியே கானனீர் இருந்தும் அனுபவிக்கமுடியவில்லை யென்றாகின்றது. இவர் சொப்பனத்தைச் சத்தியமென்கிற சோம. நாய்க்கரைச் சேர்ந்தவராகவின் கானனீரையும் சத்தியமென்று சொல்லப்பார்க்கிறார். கவர்ன்மெண்டார் கானனீரை யுள்ளதாகக்கொண்டு நீர்வரி விதித்தால் இவரும் அவ்வரியைச் செலுத்திக் கானனீரைப் பாய்ச்சிப் பயிரை வளர்த்து ஜீவிப்பார்போலும்! கானனீர் உண்மையெனக்கொள்ளும் இவர், கயிற்றரவு, இப்பிவெள்ளி, கட்டையிற்கள்ளன் இவற்றையு முண்மையென்று கொள்வார்போலும்! இவற்றை யுண்மையென்று கொள்ளும் இந்தச் சித்தாந்தி, முயற்கொம்பு, ஆகாயமலர் இவற்றையு முண்மையென்றுகொள்ளத் தடையென்ன? ஞானிகளுக்கு உலகமிருந்தும் அனுபவப்படாமையால் உலகைப் பொய்யென்று கூறுவர் என்பதோடு சைவசித்தாந்திகள் என்றுசொல்லி அவர்களைப் புகழ்வது போலிகழ்கின்றார். ஞானிகளுக்கு உலகிருந் தனுபவப் படவில்லையா? இல்லாதிருந் தனுபவப்படவில்லையா? இதுவிஷயமாக மாயாவாத திமிரபாஸ்கரன் சுந்தரனுக்குக் கொடுத்தபதிலில் விரிவாய்க்காணலாம். ஞானிகளுக்கு உலகமிருந்தும் அனுபவப்படாமையால் பொய்யென்று கூறுவார் என்பதினுபாசம் பின்னும் வருமாறு:—

சென்னையில் பி. ஆர். அண்டு சன்ஸ் கம்பெனியில் விற்கும் பற்பல ரத்னாபரணங்கள் ஏழைகளால் வாங்கி அனுபவிக்கமுடியவில்லை. அதனால் அவ்வாபரணங்கள் பொய்யென்று சொல்லலாமா? இப்போ திங்கிருந்து காசி கங்காஸ்நாநஞ்செய்யக் கூடவில்லை. அத

னுல் கங்காநதி பொய்யென்று சொல்லலாமோ? இவ்வுலகிலிருந்து நரகதுக்கத்தையாவது சொர்க்கபோகத்தையாவது அனுபவிக்க முடியவில்லை. அதனுல் நரக சொர்க்கங்கள் பொய்யெனச்சொல்லலாமா? பூலோகத்திலிருப்பவர் கைலாச வைகுந்த சத்தியலோக பதவிகளை அனுபவிக்க முடியவில்லை. அதனுல் கைலாச வைகுந்த சத்தியலோகங்களைப் பொய்யென்று சொல்லலாமா? அஞ்ஞானிகள் கடவுளையறியவில்லை. அதனுல் கடவுளைப் பொய்யென்று சொல்லலாமா? சிவஞானிகள் சிவானந்தத்தை அனுபவிக்கும்போது உலகு அனுபவப்படாமையால் உலகு பொய்; அஞ்ஞானிகளுக்குச் சிவானுபவம் இல்லாமையால் சிவன் பொய். ஆகச்சிவனும் உலகும் பொய். இவர் மகாபுத்திசாலி. இவர் புத்தி யுலக்கைக்கொழுந்துதான். நாம் ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருக்குபோது புத்தகவுருவங் கண்ணுக்குப் புலப்படுகின்றது. அப்பொழுது எதிரிலுள்ள மனிதனது உருவங் கண்ணுக்குப் புலப்படவில்லை. மனிதன் புலப்படும்போது புத்தகமும், புத்தகம் புலப்படும்போது மனிதனும் புலப்படாமையால் புத்தகமும் மனிதனும் பொய். நாம் காசியின் காட்சியை அறியும்போது இராமேசுவரக்காட்சியையறிய வகையில்லை. அதனுல் இராமேசுவரம் பொய். இராமேசுவரக்காட்சியை யறியும்போது காசியை யறியவகையில்லை. அதனுல் காசி பொய். இந்த அரக்கோண வீரபத்திரமூர்த்தியாருக்கு எ. பி. என இரண்டு பிள்ளைகளிருப்பதாய் வைத்துக்கொள்வோம். (அனேக பிள்ளைகளு மிருக்கக்கூடும். திருட்டாந்தத்துக்கு இரண்டு பிள்ளையெனக் காட்டுகின்றேம்.) அவ்விரண்டு பிள்ளைகளில் எ. என்னும் பிள்ளையைப்பார்க்கும்போது பி. என்னும் பிள்ளை புலப்படாது. அதனுல் பி. என்னும்பிள்ளை பொய்யா? பி. என்னும் பிள்ளையைப் பார்க்கும்போது எ. என்னும்பிள்ளை புலப்படாது. அதனுல் எ. என்னும் பிள்ளை பொய்யா? இவ்வளவுதூரம் அன்னியப் பொருளில் போவானேன்? இந்த அரக்கோண வீரபத்திர மூர்த்தியாருடைய வடிவத்திலேயே இந்த ஆராய்ச்சியைச் செய்துபார்ப்போம். இவருடைய கையை இவர் பார்க்கும்போது இவரது கால் புலப்படவில்லை. அதனுல் இவரதுகால் பொய்யோ? இவரது காலைப்பார்க்கும்போது இவரது கை புலப்படவில்லை. அதனுல் இவரது கை பொய்யோ? கையை நோக்கக் காலும் காலை நோக்கக் கையும் பொய்யாய் மொத்தத்தில் கையும் காலும் பொய்யாம். இப்படியே இவரது அவயங்களெல்லாம் பொய்யாய்ப் போகின்றன. அவயவங்களையன்றி அவயவிக்குப் பொருளில்லாமையால் இவரது உடலே பொய்யாய்ப் போகின்றது. தலைமுதலிய அவயவங்களின் விசாரணை இன்னுங்கொஞ்சம் விநோதமாயிருக்கும். கை கால் முதலிய அவயவங்கள் ஒன்று புலப்பட்டபோது ஒன்று புலப்படாமைபற்றி அது அது பொய்யாய் மொத்தத்தில் யாவும் பொய்யாய்ப் போகின்றன. இவரது கண், நாசி, வாய், செவி, தலைகளான அவயவங்களை இவரெக்காலத்தும் பார்த்திராமையால்

அவைகள் பொய்யென்று சொல்ல அஞ்சார்போலும்! ஒருகாலத்தில் பார்த்ததைப் பிறிதொருகாலத்தில் பாராமை காரணமாக அதைப் பொய்யென்று சொல்லத்துணிந்தவர், எக்காலத்தும் பாராத கண் முதலிய அவயவங்களைப் பொய்யென்றுசொல்ல இவர் பின்னிடவே மாட்டார். இது இப்படியிருக்க, இவர் இவரது ஜீவாத்துமாவைப் பார்த்தாரா? இல்லை. அதனால் இவரது ஜீவாத்துமாவும் பொய்யாம். இவரது பரமாத்துமாவான பரமசிவனைப் பார்த்தாரா? இல்லை. ஆதலால் பரமசிவனும் பொய்யாம். இவர் சிவஞானியாயிருந்து சிவனைப் பார்த்ததாகவே வைத்துக்கொள்வோம். அங்ஙனமாயின் எது பார்க்கப்படும் பொருளோ, அது சடமாய்ப்போம். எது சடமோ அது அசத்தாய்ப்போம். உணருரு அசத்தென இவரது சிவஞானபோதமே கூறுவதுகொண்டு சிவன் அறிபடும் பொருளாதலால் அசத்தாம். மனோ வாக்குக் காயங்களினால் எட்டப்படாதவன் சிவனெனச் சுருதியாதிகள் கோஷிப்பதால் அதை யறிந்தேனென்பது நகைப்புக் கிடமாம். இதுவரையில் பேசிவந்த விஷயங்களினால் காணப்படும் பொருள்கள், இவரது பிள்ளைகள், கைகால் முதலிய அவயவங்கள், அவயவியான சரீரம் இவைகள் பொய்யாவதோடு இவரது ஆன்மாவும் இவரது பரமசிவனும் பொய்யாம். ஆதலால் இவர் பரம நாஸ்திகராம். உலோகாயுத நாஸ்திகருக்கு உலகு மெய், கடவுள் பொய். இந்தப் பரம நாஸ்திகருக்கு உலகும் பொய், கடவுளாகிய சிவனும் பொய். இப்படிப்பட்ட பரம நாஸ்திகருடைய சம்பந்திகளும் பரமநாஸ்திகராய்ப் போவார்கள். இவர் சொல்லைக் கொண்டே இவ்வளவுதூரம் பேசினோமேயன்றி, நாம் ஒன்றும் புதிதாய்ப் பேசவில்லை.

உருவத்தைப்பற்றி இதுகாறும் பேசினோம். இனி சத்த பரிச ரூப ரச கந்தங்க ளெல்லாவற்றையு மிவ்வாறு ஆராய்ந்திடின் அவையும் அந்தக்கதியாம் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. கண்ணுக்கு ரூபம் அனுபவம்; சத்த பரிச ரச கந்தங்கள் அனுபவ மில்லை; அதனால் சத்த பரிச ரச கந்தங்கள் பொய்யாம். செவிக்குச் சத்தம் அனுபவம்; பரிச ரூப ரச கந்தங்கள் அனுபவமில்லை; அதனால் பரிச ரூப ரச கந்தங்கள் பொய்யாம். நாசிக்குக் கந்தம்அனுபவம்; சத்த பரிச ரூப ரசங்கள் அனுபவமில்லை; அதனால் அவைகள் பொய்யாம். நாவிற்கு ரசம் அனுபவம்; சத்த பரிச ரூப கந்தங்கள் அனுபவமில்லை; அதனால் அவைகள் பொய்யாம். தேகத்துக்குப் பரிசம் அனுபவம்; சத்த ரூப ரச கந்தங்கள் அனுபவ மில்லை, அதனால் அவைகள் பொய்யாம். இப்படிச் சத்த பரிச ரூப ரச கந்தங்கள் பொய்யானபோது அவைகளைக் குணங்களாக வுடைய ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி இவைகள் பொய்யாம். இவைகள் பொய்யானபோது இவைகளையே பொருளாகக்கொண்ட வுலகும் பொய்யாம்.

உலகுபொய்யென்னும் பக்ஷத்துக்கே கானனீர் உவமானமென்பது.

“பேய்த்தேரை யங்கீகரித்த இருதிறத்தவரும் ஒரே யபிப்பிராயத்தைக் கொள்ளாமையால் ஒருகருத்தே அதற்குள்ளதாக மயங்கித் தமது கருத்தையே தாயுமானவர் தழுவியதாகப் பிதற்றியது நிஸ்புருஹமாயதென்க” என்று கூறி, தாயுமானவர் இவரது கருத்தை யனுசரித்ததாக வீண் பிரமை கொள்ளுகின்றார். அவர்கருத்து இவர் கருத்து எனத் தந்திரமாய்ப் பேசித் தப்பப் பார்க்கின்றனரே யன்றி, உலகு அசத்து என்று பலவருஷகாலங்களாகக் கூறியதைத் தடுத்துச் சத்துத்தானெனத் தாபித்தன ரில்லை. உலகு சத்தென்னுங் கொள்கையை மறுத்து ஐந்துவருஷகாலங்களாக இப்பிரமவித்தையில் எழுதப்பட்டுவருகின்றதென்ப தியாவரு மறிந்தவிஷயம். அதை நிராகரணஞ்செய்து சத்து எனத் தாபிக்க வகையில்லாது, தாயுமானவர் அவரை யனுசரித்துப் போயினரா? இவரை யனுசரித்துப் போயினராவென்று போக்குக் காட்டி. அதை மறக்கச் செய்யப் பார்க்கின்றார். இனித் தாயுமானவர் இவரது சித்தாந்தத்தை அனுசரித்து உலகைச் சத்தியமென்றாரென்பது அவல வார்த்தையினும் அவல வார்த்தையாய்ப் போனமையான் இவரெழுதிய ‘பிதற்றல்’ இவரையே காணியாட்சியாகக் கொண்டுவிட்டதென்க.

“இனிப் பாலைநிலத்திற்றாக்கிய சூரியப்பிரகாசம் நேத்திர காந்தியோடு சம்பந்தப் பட்டபோது பேய்த்தே ருண்டாகிறது. இதனோடுவமித்துப் பூர்வ பக்ஷிகள் கூறும் உலகம் எதனோடு சம்பந்தப்பட்டபோ துண்டாகிறது? பிரமத்தைத்தவிர இரண்டாவது வஸ்துவை அங்கீகரியாத பானுமூர்த்திக்கு அப்பிரமத்தோடு மற்றொன்றின் சம்பந்தங்காட்டி யுலக முதித்தவிதத்தை நிரூபித்தல் கஷ்டசாத்தியமென்க” எனக்கூறி யிவரது மருட்டன்மையையும் அத்துவிதசித்தாந்தம் அறியாத்தன்மையையும்பரக்கக்காட்டினார். இவ்வாறுகஷ்டசாத்தியம், கஷ்டசாத்தியமென்று சொன்னவைகளை யெல்லாம் துகள் துகளாகக் காற்றிற் பறக்கவிட்ட அத்துவிதிகளுக்குத் துகளினுந் துகளான இவ்வொரு துகள் வரவா? செலவா? இதில் கோணத்தாருடைய தெரியாமையே மிஞ்சியிருக்கின்றமையால் அந்தத் தெரியாமையைத் தெரியாமையெனக் காட்டப் போகின்றோமேயன்றி மற்றப்படி அதில் விஷயம் ஏதுமில்லை. கயிற்றை யரவென அறிபவனுக்கு அச்சம் நடுக்க முதலியன வுண்டாமேயன்றி அதனுண்மையை யுணர்ந்தவனுக்கு அவையுண்டாகவேண்டிய அவசியமில்லை. அதுபோல வேதாந்த சாஸ்திர விசாரணை யில்லாதவர்க்கு விஷயந்தெரியாமையால் அதி லேதோ ஆட்சேப மிருக்கிறதாய்ப் புலப்படுமேயன்றி மற்றவர்க்கு அங்ஙனம் புலப்படாது. ‘பாலைநிலத்திற்றாக்கிய சூரியப்பிரகாசம் நேத்திரகாந்தியோடு சம்பந்தப்பட்டபோது பேய்த்தேருண்டாகிறது’ என்ப துண்மையானால் தெளிவுண்டாய்க் கான

னீர் பொய்யெனத் தேர்ந்தபோது சூரியப்பிரகாசமும் நேத்திரகாந்தியும் இல்லையோ? தூரமாயிருக்கிறபோது கானனீர் தோன்றுகின்றது. நெருங்கினுற் றேன்றவில்லை. நெருங்கியபோது சூரியப்பிரகாசமும் நேத்திர காந்தியும் இல்லாமற் போய்விட்டனவோ? அப்போது இருள் வந்து மூடிக்கொண்டதோ? சூரியப்பிரகாசமும் நேத்திரகாந்தியும் சம்பந்தப் பட்டபோது கானனீர் உண்டாவது நிஜமானுல் அது உண்டான போதெல்லாம் கானனீர் உண்டாமென்று சொல்லநேரிடும். இதில் 'நேத்திர காந்தியோடு' என அடிப்பட்டு ஆழக்குழியில் புதைந்து போனசொல்லொன்றை மறுபடியும் எடுத்துச் சொல்லுகின்றுர். நேத்திரத்துக்கு ஒளியுண்டென்கிறசொல் இவருக்குப் பித்துச்சொல்லாய் முடிந்து விட்டது. சோம. நாய்க்கரும் கோயமுத்தூராரும் பிறரும் இவ்வாறு சொல்லிவிட்டுப் பட்டபாடு இவரறிந்திலரோ? அதற்கு மறுமொழி கூருது மீண்டும் நேத்திரத்துக்கு ஒளியுண்டெனும் பித்துமொழியைப் பித்துத்தனமாய்ப் பேசுவது பித்துத்தன்மையேயாம். இந்தப் பித்துத்தன்மையொழிய எத்தனைபேர் மருந்து கொடுத்துந் திரவில்லை. இந்தப் பித்துவியாதி இடையில்பிடித்ததன்று; ஜன்மத்திலேயே யுண்டு. அதுவு மிவர் பரம்பரைக்கே யுண்டு. ஆதலால் அது கொஞ்சத்தில் திராது. நிற்க, இந்தவுவமானம் வெகு சரியானதுபோல வைத்து, 'உலகம் எதனேடு சம்பந்தப்பட்டபோதுண்டாகின்றது?' என்கிறுர். இதனுல் உவமான உவமேயப் பொருத்த மிவர்க்குத் தெரியாதெனத் தெரிகின்றது. சிவனிடத்தில் உலகு தோன்றுகின்றது என்கிற வுவமேயத்துக்குக் கானலினிடத்தில் நீர்தோன்றுகின்றது என்னும் உவமானங் கூறப்படுகின்றது. அந்த வுவமான வுவமேயம் வரையில் தோஷமுண்டா? ஒருவஸ்துவினிடத்தில் மற்றெருவஸ்து தோற்றும் என்பதுமட்டில் உவமானம். முத்தைப்போல் பல்லென்றுல் வெண்மைக்கும் பிரகாசத்துக்கும் உவமானமேயன்றி மற்றப்படியன்று. அதுபோல வுண்மைப் பொருளினின்றும் உண்மைப்போலிப்பொருளுண்டாம் என்பது மட்டில் உவமானம். இதன்படியே கானலினிடத்தினின்றும் நீர் தோன்றுகின்றது. இந்த வுவமானத்தின்படி பிரமத்தினின்றும் உலகு தோன்றுகின்றது. இம்மாதிரிக் கேள்வி சோம.நாய்க்கர் 1888 ஹு ஜுன்மீ 9௳ இந்துஜனபூஷணியில் கேட்டதற்கு இந்தப் பிரமவித்தையிற்றுனே "ஓர் நண்பர்" என்பவர் அதேவருஷம் ஆகஸ்டுமீ 31௳ பதில் விடுத்திருக்கிறுர். அந்தப்பதில் வருமாறு:—"பரவஸ்துவின்கண் உலகம் தோற்றல் மாத்திரம் என்பதற்குக் கயிற்றினிடத்து அரவு உவமானமுனைத்தாம். இது சத்துப்பொருளில் அசத்துப்பொருள் தோற்றல் மாத்திரம் "என்பதுவரையில் உவமானம். கயிறுஸ்தானத்தில் பரவஸ்துவும், அர "வுஸ்தானத்தில் சேதனசேதன வுலகமுமாக வைத்துக்கொண்டால் "சங்கைதோன்றுது. சத்தான பரவஸ்துவின்கண் அசத்தான அல் "லது சத்துப்போலியான சேதனசேதனவுலகம்தோற்றுகின்றதென்ப

"தற்கே கயிறு அரவு திருட்டாந்தம். உவமான மேகதேச மென்ப தியாரு மறிந்தவிஷயமே" யாம். இன்னும் அனேகமுறை இதுவிஷய மாகப் பலர் கூறியிருக்கின்றார்கள். இதுமாத்திரமா? சபாபதிநாவல ரான பரசமயகோளரியார் "கயிற்றுக்கும் அரவிற்குங் கோணி நீண்டு கிடத்தல் முதலிய இலக்கண வொப்புமையால், ஆண்டு ஒன்றை யொன்றாகத் திரிபக்காண்டல் பொருந்தும். அதுபோல, சித்தாகிய பிரமத்தை ஜக ஜீவ பரங்களாக அங்ஙனந் திரியக்காண்டற்குத் தம்முள் ஒப்புமை யின்மையின், அதனையும் அவ்வாறு திரிபுக்காட்சி யென்றல் பொருந்தாமை யறிக" என்று கூறியதற்காக இப்பிரமவித்தியாவில் வந்துகொண்டிருக்கும் *"வேதாந்தசங்கை நிவாரணம்" என்னும் பதி லிலும் அதற்குச் சமாதானம் வரைந்திருக்கின்றது. கிறிஸ்தவர் மாதிரி இவரும் இவர் மதஸ்தரும் பதிலைக் கவனிப்பதில்லை. எழுதியதை யே யெழுதிக்கொண்டிருப்பார்கள். மனத்திலிருந்து தோற்றும் சொப் பனவுலகு வேறு எந்தப்பொருளோடு சம்பந்தப்பட்டுத் தோன்றிற்று? வேறு ஒரு சம்பந்தமுமில்லாது தோன்றியதுபோலப் பிரமத்தி னின்றுந் தோன்றிய வுலகும் வேறொரு சம்பந்தமு மில்லாது தோன்றிற்றென வறிந் தடங்கக் கடவர். எது எதனிடத்து அடங்கி யிருக்கின்றதோ அது அதனிடத்தினின்றும் தோன்றும். கயிற்றின் கண் அரவு அடங்கியிருக்கின்றமையால் அது தோன்றுகின்றது. எது எதன்கண் சத்திருபமாய் அடங்கி யிருக்கின்றதோ, அது அதன் கணின்றுந் தோன்றும். ஒவ்வொரு பொருளின்கண்ணும் நியமசத்தி யுள்ளது; அது வெளிப்படும்போது காரியமெனச் சொல்லப்படுகின்றது. நியமசத்தி யிருப்பதினாற்றான் எந்தக் காரியஞ்செய்ய விரும்புகின் றார்களோ, அந்தக் காரியம் சத்திருபமா யடங்கியிருக்கும் காரணப் பொருளையே தேடுகின்றார்கள். இதற்குச் சாக்ஷி வஸ்திரம் செய் வோர் பஞ்சையும் கடம் வனைவோர் மண்ணையும் தேடுவதே போது மானது. அதுபோல ஜக ஜீவ பரங்கள் சத்திருபமாய்ச் சிருட்டிக்கு முன் பிரமமான சிவனிடத்தி லடங்கிச் சிருட்டிகாலத்தில் வெளிப் படுகின்றன. இதற்கு வேறு சம்பந்தம் வேண்டாம். இந்த வுளவு தெரியாமல் வீண் துவேஷபுத்தியால் (சமாதானமுள்ள) வீண் கேள் வியைக் கேட்டுச் சமாதானம் வந்தகாலத்தில் தலை குனிகின்றார். இனி வரும் ஆட்சேபம் இன்னும் வெகு விநோதமானது. "பேய்த் தேர் ஒருவராலும் அனுபவிக்கமுடியாது. இவ்வுபமானத்தாற் சாதிக்க இவர் தேடிய வுபமேயமாகிய வுலகம் யாவருக்கும் அநுபவ வேத்ய மானது" என்றதிலுள்ள குற்றம் இவர்க்குப் புலப்படாமையால் கப டில்லாமல் கேட்டுவிட்டார். "உள்ளபடியே வேதாந்திகள் இதற் குச் சமாதானஞ் சொல்லமாட்டார்கள், மாட்டாராகவே இரட்டைக் கோடி போட்டுவிடலாம்" என்று இரட்டைக்கொடி தைத்தும் வைத்

* வேதாந்தசங்கை நிவாரணம் இப்போது புத்தகமாய் வெளியாயிருக் கின்றது.

திருப்பார். அது வீணுய்ப் போமே யென்றுதான் அனுதாபப்படுகின்ேறும்! இவர் கேட்டகேள்வி வேதாந்தம் படித்தவர் கேட்கும்கேள்வியல்ல; வேதாந்தம் படித்ததுபோலவும் அதிலுள்ள விஷயங்களெல்லாம் தெரிந்தது போலவும் மனப்பா லருந்தி வேதாந்தங் குற்றமுள்ளதாய்க் காட்டி யெழுதி வைத்திருக்குஞ் சுவடியைப் படித்து, அதை மெய்யென்று நம்பியவர் கேட்குங் கேள்வியாம். இவர்மாத்திரமன்று; இவரைச் சார்ந்தவ ரெவருடைய வியற்கையும் இதுவேயாமென்க. சுயஞான மின்றியும் சுய ஆராய்ச்சியின்றியும் அத்துவித ஆக்ஷேபஞ் செய்யவருகின்றமையால் இவருடைய ஆக்ஷேபங்களுக்குச் சமாதானஞ்சொல்வது அத்வைதிகளுக்கு மிகச்சுலபமாம். இது விஷயமாகப் பழைய பிரமவித்தியாவில் 'உலகம் சத்தா? அசத்தா?' என்னும் விஷயத்திலும், 'சங்கராசாரியார் அவதார மகிமை'யிலும் 'வேதாந்தசங்கை நிவாரண'த்திலும் நன்ருய் யெழுதப்பட்டிருக்கின்றது. ஆயினும் இவ்விடத்திலும் சிறிது எழுதுகின்ேறும். பேய்த்தேர் அதாவது கானனீர் உபமானம்; உலகு உபமேயம். கானலினிடத்து நீர் தோன்றுவதுபோல் சிவனிடத்து உலகு தோற்றுகின்றது. சிவன் திருக்கு; உலகு திருசியம். திருக்கான சிவனிடத்துத் திருசியமான வுலகு தோற்றுகின்றது. இடையிலனுபவ வேத்தியமென வொன்று கூறுகின்ருர். அனுபவ வேத்தியம் யாருக்கு? ஜீவனுக்கு. ஜீவன் உலகப்பொருளில் சேர்ந்துவிட்டமையால் ஜீவன் திருசியமாய்விட்டான். உலகம் என்பது சேதனம் அசேதனம் ஆகிய இருபொருளும் சேர்ந்ததென்பதற்கு, "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு"என்னுந் திருக்குறளே போதுமான சாட்சியாம். இதில் உலகு என்பதற்குப்பொருள் சடபூதங்களுடனே யுயிரும் அடங்கிவிட்டமையால் பஞ்சபூத சடமும் அதையுணரும் உயிரும் ஆக விருபொருளுஞ் சேர்ந்து உலகாகி, சிவத்தினிடத்தே (கானலின்கண்நீர்போல்) தோற்றுகின்றது. சேதனுசேதனம் சிவனிடத்துப் போலிச்சத்தாய் நிகழ்கின்றனவென அத்வைதிகள் கூறின் சேதனமானவுயிர் அசேதனத்தை யறிகின்றமையால் அசேதனம் உண்மையென்கிருர். இது எப்படியிருக்கின்றதெனின் கானலினிடத்து நீர் பொய்யென்ருல் நீரிலுள்ள வொரு அலை மற்ருெரு அலையுடனே மோதுவதால் நீர் உண்டென்று சொல்வதுபோலவும் சொப்பனவுலகு பொய்யென்ருல் அச்சொப்பனவுலகில் ஒரு மனிதன் ஆகாரம் புசித்தாஞயின் புசித்ததுகொண்டு சொப்பனவுலகு மெய்யென்று சொல்வதுபோலவும் இருக்கின்றன. சிவனிடத்துச் சேதனுசேதனவுலகு பாரமார்த்திக சத்தியமன்று; வியாவகாரிக சத்தியமாம். எது அசத்தோ அதனுள் ஒன்றுக்கொன்று அனுபவேத்தியமானது கொண்டு அதைச் சத்தியமென்று சொல்லப்படாது. அப்படிச்சொல்லுங்கால் சொப்பனவுலகும் சத்தியமெனச் சொல்ல நேரிடும். ஆகாயமலர் மலடிமகன் ஆகிய இருபொருள்களும் வியாவகாரிக

அசத்தியம். இச்சாக்கிர வுலகும் அதன் வியாபாரமும் வியாவகாரிக சத்தியம். இதைப்போல ப்ரம்மசொரூபமான துரியசிவன் பாரமார்த்திக சத்தியம். இச்சாக்கிரவுலகு பாரமார்த்திக அசத்தியம். இச்சாக்கிரவுலகை நோக்க ஆகாயதாமரை முதலிய பொருள்கள் எங்ஙனம் வியாவகாரிக அசத்தியமோ, அங்ஙனமே, சிவனைநோக்க இச்சாக்கிரவுலகு பாரமார்த்திக அசத்தியமாம். அங்கங்கு அததில் மாறிப் பேசப்படாது. சொப்பன ப்ரபஞ்சத்தில் அனுபவிக்கும் சத்த பரிச ரூப ரச கந்தங்கள் அதுவனாயி லுண்மையென்றே சொல்லவேண்டும், சொப்பனத்தில் நெருப்புச் சுடுமேயொழியக் குளிராது. நீர் குளிருமேயொழியச் சுடாது. இவற்றில் ஒன்றை யொன்று மாற்றிச்சொல்லப்படாது. மாற்றவும் இசையாது. அங்ஙனமே சொப்பனத்தில் சத்த பரிச ரூப ரச கந்தங்கள் அனுபவிக்கப் படினும் அனுபவிப்பவர்களும் அவர்களுடைய அந்தக்கரண புறக்கரணங்களுமுள்ள சகல ஜீவர்களும் அவர்களாலனுபவிக்கப்பட்ட சத்த பரிச ரூப ரச கந்தங்களான வுலகமும் எங்ஙனம் இச்சாக்கிரத்தைப் நோக்கப் பொய்யென்று சொல்லப்படுகின்றனவோ, அங்ஙனமே இச்சாக்கிரவுலகத்தை அனுபவிப்பார்களும் அவர்களுடைய அந்தக்கரண புறக்கரணங்களுமான சகல ஜீவர்களும் அவர்களால் அனுபவிக்கப் பட்ட சத்த பரிச ரூப ரச கந்தங்களான வுலகும் துரியசிவனை நோக்கப் பொய்யாம். இச்சாக்கிரத்தை நோக்கச் சொப்பனவுலகு பொய்யும், சொப்பனவுலகை நோக்கச் சாக்கிரவுலகு மெய்யுமானாலும் துரிய சிவனை நோக்க யாவும் பொய்யாம். கயிற்றரவுங் கானனீரும் சொப்பனவுலகும் அவ்வக்காலத்து உண்மையாயிருந்தாலும் அனுபவமானாலும் உண்மையாயிருந்த காலத்திலும் அனுபவமாயிருந்த காலத்திலுங் கூட அவைகள் எப்படிப்பொய்யோ, அப்படியே உண்மையாயிருந்த காலத்திலும் உண்மையாய் அனுபவப்பட்ட காலத்திலும் இச்சாக்கிரவுலகு பொய்யாம். இப்போது உண்மையாயிருக்கின்றதே; அனுபவமாயு மிருக்கின்றதே ஆதலால் இச்சாக்கிரவுலகை மெய்யென்று சொல்லுகின்றோமெனச் சொல்லப்படாது. துவிதிகள் விசாரணையில்லாமையாலும் உலக அவாவினாலும் அப்படிச்சொன்னாலும் அத்துவிதிகள் அங்ஙனஞ் சொல்லமாட்டார்கள். அனுபவவேத்திய மென்பதொன்றைக்கொண்டே யுலகு உள்ளதெனச்சாதிக்கப்படாது. உலகு உள்ளதென்பதற்கு 'அனுபவவேத்தியம்' என்பது ஒருபெரிய காரணமாகமாட்டாது. அனுபவேத்யமாவதே உண்மைக்குக் காரணமாயின் கஞ்சா அபின் முதலிய லாகிரிவஸ்துக்களைத் தின்பவர்க்கும் சன்னிதோஷங்கொண்டவர்க்கும் காணப்பட்ட வுலகும் உண்மையென்றங்கீகரிக்கவேண்டும். வேதசாஸ்திரங்க ளெல்லாவற்றிற்கும் ஷை நூல்களில் சொல்லப்பட்ட மகாரிஷிகளுடைய வாக்குகளுக்கும் யுக்தி அனுபவங்கட்கும் விரோதமாக வுலகு உண்மையென்று கூறவந்தமையால், இந்த அரக்கோணவாசியை நாம் ஒரு சிறு துரும்பாய் நினைத்து

விடை பகர்ந்தோம். இவர் செய்யும் எந்த ஆக்ஷேபமும் நமக்குச் சிறு துரும்புதான்.

உலகு அநிர்வசனீயமென்றே சாதிக்கப்படுகிறதென்பது.

"பாநுமூர்த்தியாகிய நமதன்பர் காணப்படும் இவ்வுலகத்தை "வெறும் பொய்யென்று சாதிக்குங்கால், தேகேந்திரியாதிகளைத் தாங் "கியிருந்தே சாதிக்கிறார். இவருக்குத் தேகாதிகளில்லாதபோது என் "செய்வார்? ஒருவிஷயத்தைப் பேசுவாரா? எழுதுவாரா? தநுகரண "புவனபோகங்களாகிய காரியங்களே யுலகமாகையால், இதனை யில் "லாததாய்ச் சாதிக்கும் இவரது வார்த்தையும் இல்லாததாகிய பேய் "த்தேராயழியும்" என அபாண்டம் சொல்லி, பொய்பேசுவதில் முத ற்றும்பூலம் வாங்குவேமென முந்துகின்றார். வெறும்பொய்யென்று பாநுமூர்த்தி சொல்லாதிருக்கவும், வேதாந்திகள் உலகை வெறும் பொய்யென்று சொல்லுகிறார்களென அபத்தம் பேசிய சோமநாய்க் கரை நாம் ஒவ்வொரு முறையிலுங் கண்டித்திருக்கவும் வேதாந்த நூல்களெல்லாம் பொய்யுமல்ல, மெய்யுமல்ல, இரண்டுஞ்சேர்ந்த பொய் மெய்யுமல்ல, இவைகளுக்கு விலக்ஷணமென்றும் அநிர்வசனீய மென்றும்கோஷிக்கவும்பொய்யென்று சாதிப்பதாய்ச்சொல்வது புத்தி மான்களுக்கழகாமா? நாம் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் பன் னிப்பன்னிப் பன்முறையும் எழுதித்தொலைத்திருக்க, பின்னும் வெட்க மின்றி வெறும்பொய்யென்று சொல்வதாய் அதிலும் சாதிப்பதாய் வரைவது தோல்விக்கு இலட்சணமாம். இவர், அத்துவிதசாஸ்தி ரார்த்தங்களை மாறுபாடாக ஜனங்களுக்குச்சொல்லி அதில் துவேஷ புத்தியை யுண்டாக்குவேமென்னும் விரதம் பூண்டிருப்பதாய்த் தெரி கின்றது. இல்லாவிடில் ஒவ்வொரு விஷயங்களிலு மிவ்வாறு பேசு வாரா? "தான் கெட்டதுமன்றிச் சந்திரபுஷ்கரணியையுங் கெடுத் தான்" என்பதற்கிணங்க, இவர் கெட்டுப்போவதுமன்றி, மற்றவரை யுங் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பது விசனிக்கத்தக்க தாம்! ஒருவன் மூக்கறுப்புண்டு அதனால் அவமானப்படுவது சகியாது பிறரையும் மூக்கை யறுத்துக்கொள்ளச் செய்யுமவரைப்போல, ஜந் மாந்தர பாபவிசேஷத்தால் இவர்தான் அத்துவித விரோதியாய்த் துவேஷித்தாலும் பிறரையும் அவ்வாறு அத்துவிதத் துவேஷிகளாக் குவது நியாயமன்று. ஆதலால் கோணத்தார் சகவாசம் ஒருபோதும் ஒழுங்குபடுத்தாது. கோணலாகவே செய்யும். உலகை மலடிமகன் வான்மலரைப்போல வெறும் பொய்யெனச்சொல்லாமல் அநிர்வச னீயமென்று சொல்வதாலும் அவ்வுலகத்தின் அம்சமான தேகேந் திரியாதிகளைத் தாங்கலாம்; பேசலாம்; எழுதலாம். இவைகளை இல்லாததாய்ச் சாதித்தா ரொருவருமில்லை. ஆதலால் பாநுமூர்த்தி யாருடைய வார்த்தை யில்லாததாய்ப் போகாது; உள்ளதாகவே யாகும். இவருடைய வாக்கியத்தில் 'இல்லாததாகிய பேய்த்தேரா

யழியும்' என்பது ஒன்று. இல்லாத பேய்த்தேர் எப்படி அழியுமோ அது நமக்குத் தெரியாது. கானனீரை அழிக்கவல்ல சாமர்த்தியர் இவரென இனி யாவரும் அறிவார்கள். கானனீர் என வொன்றிருப்பதனால் அநேக ஜனங்கள் உண்மையான நீரென நம்பி, அதை யருந்த வோடுகின்றார்கள். இன்னும் மான் முதலிய மிருகங்களும் ஓடியலைகின்றன. இவர் கொஞ்சம் புண்ணியங் கட்டிக்கொள்வாரானால் கானனீரையெல்லாம் அழித்துவிடுவார். அது இவருக்கு வெகு உபகாரமாயிருக்கும். அது மாத்திரமா? கயிற்றரவைக் கண்டும் அநேகர் பயந்து நடுங்கி யவஸ்தைப்படுகின்றார்கள். கோணத்தார் அதையும் அழித்துவிடுவாரானால் உபகாரத்தின்மே லுபகாரமாயிருக்கும். இந்த வேலை முடிந்தபிறகு முயற்கொம்பு மலடிபுத்திரன் ஆகாய தாமரை யிவைகளையும் அழிக்க இவரை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

பிரம உருத்திராதியர் பொய்யன்று, அநிர்வசநீயமேன்பது.

"தாயுமானவர் 'நான்முகத்தேவே பின்னுனட்டிய அகிலமாயை "கான்முயற்கொம்பே யென்கோ கானலம் புயலேயென்கோ, வான் "முகமுளரியென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்' என்று கூறி "யருளினர். இதில் உலகம் பிரமதேவனால் உண்டு பண்ணப்பட்டது. "இதனை யில்பொருளென்றிடல் யாங்ஙனம்? இஃது இல்பொருளாயி "டின் இதனைப் பிரமன் படைத்தது பொய்யாம்.'' எனக்கூறி, அத்து "வித நூல் அறியாதவரில் முதல் பட்டம் பெற்றவரெனக் காட்டிக் கொண்டார். உலகு இல்பொருளெனச் சொல்லப்படாதென் றிவ்விடத்திற் சொன்னார். மற்றொரு இடத்தில் உலகுக்கு உவமானமாகக் கானனீர் எனச்சொல்லி, அந்தக்கானனீர் தோற்றமென்றும் அதை யனுபவிக்க முடியாதென்றும் சொன்னார். உவமானமாய்ச்சொல்லும் கானனீர் தோற்றம் என்றும் அது அனுபவத்துக்கு வாராதென்றுஞ் சொன்னதில் அது இல்பொருளென விளங்கவில்லையா? அங்ஙனமாக அதை யுவமேயமாகப் பெற்ற வுலகுமாத்திர மெங்ஙன முள்பொருளாகும்? தாயுமானர் உலகத்தை மாயையென்று இக்கவியில் கூறினர். அவரே "அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே, அம்மாயை யில்லாமையேயாம்" என்னுங் கவியில் மாயையை யில்லாமை யென்கிறார். அன்றி, ஷை கவியில் உலகுக்கு முயற்கொம்பு கானனீர் ஆகாயதாமரை இவைகளை யுவமானமாகக் கூறுகின்றார். முயற்கொம்பு கானனீர் ஆகாயதாமரை இவைகளை யுள்பொருளென எந்த விவேகியுஞ் சொல்லமாட்டானே. அவைகளில் முயற்கொம்பு ஆகாய தாமரைகள் இவருக்கும் இவர் மதத்தவர்க்கு முடன்பாடா? இல்லையே. உடன்பாடற்றதும் உலகில்லதென்று சொல்லும் வேதாந்திகள்சொல்வதுமான ஷை முயற்கொம்பு ஆகாயதாமரை திருட்டாந்தங்களைச் சொல்வதினாலும் "முற்றும்மாயமாய், பொய்யார் உலகம், சகமனைத்தும் பொய்யெனவே, ஜகம் அனைத்தினையும் பொய் பொய், ஞாலத்தை மெய்யெ

னவே நம்பி நம்பி, பொய்யுலகவாழ்க்கை, பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த பொய்யுடலை மெய்யென்றால் மெய்யாய்விடுமோ, உண்டுபோ லின்றாம்உலகை, பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே" என இவ்வாறு பல செய்யுள்கள் கூறியிருப்பதால், தாயுமானவர்க்கு உல கின்றென்பதே அபிப்பிராயமாம். இல் பொருளானால் உலகத்தைப் பிரமன் படைத்ததும் பொய்யென்றும் படைத்தது பொய்யானபோது பிரமனும் பொய்யாமென்றுங் கூறுகின்றார். படைத்தலையும் பிரமனையும் இல்லையென்று சொல்லப்படாதென்றுதான அத்துவிதிகள் உலகைச் சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்று சொல்லுகிறார்கள். உலகு பொய்யென்றும் பொய்யென்பதற்குப் பொருள் அநிர்வசனீயமேயன்றி மலடி புத்திரன்போ லல்லவென்றும், மலடிமகன், கயிற்றரவு, கானனீர், சொப்பனவுலகு முதலிய பல வுவமானங்கள் சொல்வது அவசர பேதமென்றும் பலபத்திரிகைகளில் சோ. நாய்க்கருக் கிடித்திடித்து எத்தனையோ நாளாகப் புத்தி புகன்றும், பின்னும் மலடி புத்திரனைப்போல் பொய்யென்று சொல்வதாய்ப் பிரமித்து, பிரமன் படைத்தது பொய்யென்றும் பிரமனும் பொய்யென்றும் அத்துவிதிகள் சொல்வதுபோலக் கூறியகூற்றுக் கூற்றாகவே முடிந்தது. சொப்பனவுலகில் ஒருவன் வீடுகட்டினனென்னில அந்த வுலகத்தில் அவ்வீட்டையும் அவ்வீட்டைக் கட்டினவனையும உண்மையல்லவெனச் சொல்லக் கூடாதாயினும், உண்மையென்றே சொல்லவேண்டுமாயினும் மனத்தைநோக்க எப்படிப் பொய்யென்று சொல்லப்படுமோ, அதுபோலச் சிவனை நோக்க இவ்வுலகத்தையும் இவ்வுலகைச் சிருட்டித்த பிரமனையும் பொய்யென்றே சொல்லவேணடும். இவ்வுலகும் பிரமனும் ஒருகாலத்திலிருந்து ஒரு காலத்தில் இல்லாமற் போதலாலும் மலடிபுத்திரனைப்போல முற்றுமில்லாமற் போகவில்லை யாதலாலும் அநிர்வசனீயமென்று சொல்லுகிறார்கள் அத்துவிதிகள். எது வியாவகாரிக சத்தியமோ அதுதான் அனிர்வசனீயம். சிவனையுஞ் சத்தாகச் சொல்லி அத்துடனே பிரமனையும் உலகையுஞ் சத்தாகச்சொல்லின் வரும் இழுக்கு யாதென்னின் அங்ஙனங் கூறுமிடத்துச் சிவன் அபரிபூரணப்பொருளாய் விடுவாரோ. இதற்கு யாதுசெய்வது? சிவனுக்குப் பரிபூரணஞ் சொல்லுமிடத்து அதில் மற்றப் பொருள்களிருப்பதெங்ஙனம் அமையும்? சிவனைச் சத்துப்பொருளாய்ச் சொல்லிப் பிரமனையும் உலகையும் சத்துபோலியாய்ச் சொன்னால் பொருந்தும். அப்படிச் சொல்லுமிடத்து பிரமனையும் உலகத்தையும் உள்பொருளாகக் கூறுதல் அமையுமா? இந்த விஷயங்களைப் பலமுறை பன்னிப் பன்னி யெழுதியிருக்கின்றோம். அங்ஙனமாகப் பின்னும் பின்னும் ஆக்ஷேபிப்பதும் அதற்கு நாம பதில் கூறுவதும் பூர்வபட்சிகளுக்கு அவமானமும் தலைகுனிவுமாம். "அவமானம் வந்தாலும் வரட்டும், தலைகுனிவு வந்தாலும்வரட்டும், புதிய ஜனங்கள் அத்துவிதக்கிரந்தங்கள் தோஷமுள்ள

தாக அறிந்து கொண்டாற்போதும்" எனக்கருதி ஆக்ஷேபிக்கின்றாமென்னின் இப்படிப்பட்ட அவமானமுள்ளவர்களிடத்தில் நாம் எவ்வளவு நியாயங்காட்டி யெழுதியும் பயனில்லையாயினும் பொதுவாயுள்ள அறிஞர் உண்மையுணர்ந்து கொள்ளுவார்களாதலால் அவர்கள் நிமித்தமே நாம் எழுதுகின்றோம். அதுவே நமக்குப் போதும். இந்தப பூர்வபக்ஷியைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டுவதில்லை. தாயுமானவர் உலகும பிரமனும் துரியசிவனைப்போலப் பாரமார்த்திக சத்துப்பொருளல்லவென்று காணபிப்பதற்கே 'மற்றென் கோவிளம்பல் வேணடும' எனக் கூறினானெனக. இவ்வாறு இஃது உண்மையேயாக இதற்குக் கோணல்கட்டுக் கட்டப்பார்க்கிறார் இந்தக்கோணவாசி. அது ஆகாது! ஆகாது!! இவர் உலகு சத்தெனச் சுருதி யுக்தி அனுபவங்களால் ஸ்தாபிக்கும் ஆண்மையைப் பெற்றுப் பிறகு ஷை செய்யுளைக் காட்ட வருவது உசிதமாகும்.

"வெண்டலைவிழிகைகாலில் விளங்கிட நின்றான் யாவன்" எனவும் "விளங்க வெண்ணீறு பூசி விரிசடைக் கங்கைதாங்கி" எனவும் கூறியிருப்பதோடு "அச்சிவனாரது அடையாளங்களை இனிது பிரகாசப் படுததியிருக்கின்றனர்" எனவும கூறியிருக்கின்றார். இப்படிச் சொல்லி விட்டதினால் இவருக்கு வந்த லாபமென்னை? அத்துவிதிகளுக்கு வந்த நஷ்டமென்னை? நான்குமுகங்களைப் பெற்ற பிரமதேவன் அநிர்வசனீயமாதல்போல வெண்டலைவிழிகைகாலில் விளங்கிடநின்றவரும் வெண்ணீறுபூசிக் கங்கையைத் தாங்கினவருமான வுருத்திரன் அல்லது உருச்திரபேதத்தைக் கொண்டவரும் அநிர்வசனீயமாகின்றனர். இதனால் உருத்திரர் அல்லது உருத்திரபேதத்தைக் கொண்டவர் துரியசிவனைப்போல முக்கால சத்துப்பொருளாவரோ? துரியசிவன் முக்காலத்துமுள்ள சத்துப்பொருள். உருத்திரர் உருத்திரபேதப் பொருள்கள் அவ்வக்காலத்துத் துரியசிவனிடத்தினின்றுந்தோன்றிப்பின் அதிலேயே லயமாகின்றன. தோன்றிய பொருள்கள் காரியம்; தோன்றிய பொருள்களுக்கு இடமாயிருந்த பொருள் காரணம். காரியப் பொருள்களெல்லாம் அநிர்வசனீயமென்று சொல்லப்படுதலாலும், அவ்வாறு உருத்திரனும் அநிர்வசனீயமாயிருப்பதாலும், காரணமான துரியசிவனுக்கு வெண்டலை விழி கை கால்களும் வெணணீறு சடை கங்கைகளுமான அடையாளங்கள் இல்லாமையாலும் பிரமன் எவ்வித நிலைமையைப் பெற்றிருக்கின்றனரோ உருத்திரனும் அவ்வித நிலைமையினையே பெற்றிருக்கின்றனரெனக. பிரம விட்டுணு உருத்திரர்களில் உருத்திரர் மற்ற இருவரையும் பார்க்க மேற்பட்டவராயினும் மொத்தத்தில்மூவரும் மாயாப்பிரதிபிம்பரென்றறிக. நாமரூபங்களெல்லாம் மாயாசகிதம். உருத்திரனும்உருத்திரபேதப்பொருள்களும் மாயாசகிதம். துரியப்பொருள் மாயாரகிதப்பொருள். அதுபற்றியே

சூதசங்கிதை எக்கியவைபவ காண்டம்
பாசிவசோருப விசாரமுரைத்த அத்தியாயத்தில்
கசா-வது செய்யுளில்

மறைமுதல்தனக்குநாமரூபங்கள்மருவுதலில்லையெனினும்
கறைபறவிளங்குமாயையினுலேகற்பிக்கப்பட்டனவாகும்
முறைநயச்சிவன்மாதேவன்முற்பெயர்களுருத்திரனுமங்களாகும்
மறைபரப்பிரமமுதற்பெயர்பரதத்துவவவிர்வாசகமாமால்

என்றும்,

ஷை பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயத்தில் சு-வது செய்யுளில்

முன்னும்அவித்தையாற்பசுபேதமும்மொய்வலியமாயையாற்
பன்னுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டது

என்றும்,

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில்

ஒருநாமம் ஒருருவம்ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம்பாடிநாம்தெள் ளேணங்கொட்டாமோ

என்றும்,

தமக்கு வந்து அநுக்கிரகஞ்செய்த ஈசுவரனுடைய திருமேனிகளை யெல்லாம்

அந்தமில்பெருமைஅழலுருக்கரந்து
சுந்தரவேடத்தொருமுதலுருவுகொண்
டிந்திரஞாலம்போலவந்தருளி

என்றுங் கூறினரென்க.

இதனல் துரியப்பொருளைநோக்கப் பிரம விட்டுணு உருத்திரரும் உருத்திரபேதங்களும் மாயாகற்பிதமென்றும் இந்திரஜாலப் பொருளென்றும் விளங்குகின்றன. சொப்பனமானலும் அதில் இராசனுக்கும் மந்திரிக்கும் பேதமில்லை யெனச் சொல்லப்படாது. அதுபோல மாயாசகிதரானலும் பிரமனுக்கும் உருத்திரனுக்கும் பேதமில்லையெனச் சொல்லப்படாது. பேதமிருந்ததுகொண்டே துரியசிவனைப்போல் உருத்திராதியரைச் சத்தென்று சொல்லப்படாது. உருத்திராதியரிடத்திற் சொல்வதுபோல் மாயாரகிதமான துரியப்பொருளினிடத்தில் பேதஞ்சொல்லப்படாது. அந்தவிடத்தில் ஆண்டானென்றும் அடிமையென்றும் மேலென்றுங் கீழென்றும் பெரிதென்றுஞ் சிறிதென்றும் நல்லதென்றுங் கெட்டதென்றும் இன்னும் எந்தவித வித்தியாசமுஞ் சொல்லப்படாது. அது அகண்டபரிபூரணப் பொருளாகலின் இன்னெரு பொருள் அங்கிருக்க இடமேயில்லை. இருக்குமென்றால் அந்தவிடம் வரையில் ஷை துரியப்பொருளில்லையென்று சொல்ல நேரிடும். நேரிடும்போது மகத்தான தோஷங்கள் வந்துவிடும். ஆதலால் அவ்வாறு சொல்லவேபடாது. பேதஞ் சொல்லவேண்டிய இடமெல்லாம் மாயைக்குக் கீழ்ப்பட்ட விடத்திலே தான். அதுபற்றித்தான் சூதசங்கிதையில்

"மூன்றும் அவித்தையாற் பசுபேதமும் மொய்வலியமாயையால், பன்னுபரதத்துவ பேதமுங் கற்பிக்கப்பட்டது"

எனக்கூறப்பட்டிருக்கின்றது. எங்கு ஆண்டான் அடிமை பேதமுளதோ அங்கு மாயை யுண்டு. எங்கு மாயை யில்லையோ அங்கு ஆண்டான் அடிமை பேதமில்லை. தாயுமானவர் பிரமனை அடிமையாகவும் நாம ரூப சகிதமான உருத்திரசிவனை ஆண்டானாகவும் கூறியது மாயாசகிதத்தில். மாயாரகிதத்தில் இந்தப் பேதந் தலை யெடுக்காதென்பது உறுதியாம்.

வேதசாஸ்திர சம்மதம் நாமரூப மெல்லாம் பேய்த்தேரென்பது.

அதன்பின்னர் "இவைகளைப் பேய்த்தேரென்று பேசி யொழித்தாரில்லை" என்கிறார். இதுவரையில் பேசியவற்றால் அவைகள் பேய்த்தேராகவே முடிந்தமையான் அல்லவையென்றதே பேய்த்தேராயிற்றென்க. "சமதன்பருக்கு நாம ரூபங்களெல்லாம் பேய்த்தேராகையால்" என்கிறார். நாம ரூபங்களெல்லாம் பானுமூர்த்திக்கு மாத்திரம் பேய்த்தேரன்று. வேதசாஸ்திரங்களெல்லாவற்றிற்குமே பேய்த்தேராம்.

பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதம்.

> உண்மையிற்பேதமின்றியிருந்தேயும்பேதமென்னல்
> வெண்மையேசெய்தரூபவியாபாரந்தோற்றங்கேடு
> பண்வயினிவற்றாற்கொள்ளும்பயனுமரூபம்வேறு
> மூண்மையிலெல்லாம்பொய்யாலுண்டாகுமனைத்துமன்றே (எக)

இந்தப் பிரமாணத்தினால் நாமரூபம் பொய்யென ஏற்பட்டது. இனி யுக்தி அனுபவங்களைக்கொண்டு ஆராய்வாம்:—

கடமானது ஒருருவாயும் கடமென்னும் நாமம் பெற்றதாயுமிருக்கின்றது. அதை விசாரிக்குமிடத்து மண்ணையன்றிப் பொருளில்லை. (இதைப்பற்றிப் பலமுறை சோம. நாய்க்கரை மறுத்து இதுவரையில் அவர் வாய் திறவாவண்ணம் எழுதியிருக்கின்றோம். அதன் விரிவை ஆங்காங்குக்காண்க.) இதில் காரணமுண்மை; காரியம் பொய். காரியம் பொய்யானபோது கடமும் பொய்யாகின்றது. கடம் பொய்யாகின்றபோது கடம் என்னும் நாமமும் அதனுருவும் பொய்யாகாமல் நிற்குமோ? இங்ஙனமே ஒவ்வொரு பொருளையும் விசாரிப்புழிக் காரியமெல்லாம் பொய்யாம். இந்தப் பூர்வபக்ஷியின் கொள்கைப்படி மாயை காரணம்; உலகு காரியம். மண்ணையன்றி யெப்படிக் கடத்துக்குப் பொருளின்றோ, அப்படியே மாயையன்றி உலகுக்குப் பொருளில்லை. பொருளிலலாதபோது அதன் ரூபமும் பேரும் பொய்யாய்ப் போகமாட்டோமென நின்று வழக்குச் செய்யுமோ? இங்ஙனமே துரியப் பொருள் காரணம்; பிரம விட்டுணு உருத்திரர் காரியம். காரணத்தை யன்றிக் காரியத்துக்குப் பொருளில்லையென்றபடி துரியப் பொருளையன்றிப் பிரம விட்டுணு உருத்திரர்க்குப் பொருளில்லை. பொருளில்லாதபோது அவர்களுடைய வுருவங்களும் நாமங்களும் பொய்

ப்ரகாமற் போகுமோ? துரியப்பொருள் நாமரூப ரகிதமென மாணிக்க வாசக சுவாமிகளும் 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு' எனத் திருவாய்மலர்ந்தமை காண்க. எது பொய்யோ அதுதான் பேய்த் தேர். இவரைப்போலன்றித் தாயுமானவர் சூதசங்கிதையையும் மற்ற வேத சாஸ்திரங்களையும் அப்பிரமாணமாகக்கொண்டு அவைதிக சித் தாந்தியானவ ரன்று. அவர் ஷை பிரமாணங்களையெல்லாம் பிர மாணமாகக்கொண்ட சிவஞானியேயாம். முடிவாக "இவரதெண் ணத்தை யிடித்துத்தகைத்து அப்புறஞ்செல்லும் தாயுமானாரது பேய்த்தே ருபமானத்தை யிவராதரித்தது இவரது வெள்ளறிவின் பயனே யாயதென்க" என்றார். பேய்த்தே ருபமானத்தை யிவர் ஆதரித்தது அவ ரநாதரித்தது என்று போக்குக்காட்டிப் பேசுகின்றாரேயன்றி பேய்த்தேர் அதாவது கானனீர் பொய்யா? மெய்யா? என விசாரிக்க வரமாட்டேனென்று பதுங்குகிறார். இப்படிப் பதுங்குவதற்குக் கார ணம்: "கானனீர் பொய்யென்பதைச் சிறுவரும் உணர்வாரே, அதை மெய்யென்று சொன்னால் எல்லோருங்குலுங்கக்குலுங்கச் சிரித்து இக ழ்வார்களே, அதனால் பவிஷ்போமே, இதை யுபமானமாகக்கொண்ட வுலகமும்பொய்யாய்ப்போமே, அப்போதுஉலகத்தைச்சத்தியமென்று கொண்டசித்தாந்தத்தின்வாயில் மண்விழுமே, இதுவரையிலவேதாகம புராணாதி நூல்களுக்கு விரோதமாய்ப் ப்ரபஞ்சத்தை மெய்யென்று சொலலியும எழுதியும் பேசியும் வந்ததற்கெல்லாம் மோசம் வருமே, இனி நமதாயுள்நாள் முற்றும் 'தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்பதற்கொக்கப் பேசிக் காலத்தைக் கழித்துவிடுவோம" என்பதே யாமன்றி வேறொன்றுமில்லை. பாநுமூர்த்தியினது அத்துவிதக்கொள் கைக்குத் தாயுமானார்மாறுபடுவாரானால் வேதாகம இதிகாசபுராணாதி நூல்களை யிடித்துத் தகைத்துத் அப்புறஞ்சென்று வாழும் பேதசித் தாந்தியாவார். ஆகலால் அவரை அவ்வாறு சொல்ல நாம் துணிய மாட்டோம். சுருதியாதிகளில் உலகம் பொய்யென்று சொல்லி, சிறுபிள்ளைகளு மங்கீகரிக்கத்தக்க பொய்ம்மையான கானனீரை யுப மானஞ்சொலவுதுபோல, தாயுமானவரும் உலகைப் பொய்யென்று சொலலி, அதற்குச் சரியாகப் பொய்யான கானனீரை யுபமான மாகச் சொல்லியிருக்கின்றமையின் தாயுமானாரது உபமானத்தைப் பாநுமூர்த்தி ஆதரித்துப் பேசியது வெள்ளறிவின் பயனன்று; ஒள்ளறிவினும் ஒள்ளறிவின் பயனும். இந்த அரக்கோணவாசியாரது அறிவோ இவ்வொருவிஷயத்தில் மாத்திரமன்று; இவரெழுதிய எல் லாவிஷயத்திலும வெள்ளறிவினும் வெள்ளறிவேயாமென்க.

பரமோபகாரிகளான அந்தவைதிகளைத் தூஷித்தல் நியாயமன்றென்பது.

மனிதன், தன்னைக் கழுதை யென்பதுபோல, பசுவாகிய ஜீவன், தன்னைப் பாசமாகக் கொள்வதுங் குற்றமென முன்னர்க் கூறி நாஸ்தி

கனை மறுத்தனரன்றோ? மனிதனும் கழுதையும் பின்னப்பொருளானமையின் இவ்வுபமானம் பொருந்தும். அவ்வாறு ஜீவான்மாவான பசுவும், பாசமும் பின்னப் பொருளன்றே. இவர் மதப்படி ஒவ்வொரு ஜீவாத்துமாவும் தனித்தனிப் பரிபூரணசத்துப்பொருள்; பாசமும் பரிபூரணப்பொருள். ஒரு ஆன்ம பரிபூரணப்பொருளில் மற்றொரு ஆன்ம பரிபூரணப் பொருளை யிருப்ப தசங்கதமாக, அனேககோடி ஆன்ம பரிபூரணப்பொருள் ஒரு இடத்தில் இருக்குமென்பதும் அதேயிடத்தில் பரிபூரணக்கடவு ளிருக்குமென்பதும அதேயிடத்தில் பரிபூரண பாசப்பொரு ளிருக்குமென்பதும் எப்படிப் பொருந்துமெனக்கேட்டு, அத்துடனே தனித்தனிப் பரிபூரண ஆனம பாசவுபமேயத்துக்குத் தனித்தனி அபரிபூரண கண்ட ஏகதேச மனித கழுதை யுபமான மெங்ஙனம் பொருந்துமென நாஸ்திகன் கேட்பானே யாயின், அவனுக்குப் பதில் சொல்ல வழியேது? ஆந்தை போல் விழிக்க வேண்டியதுதானே. அப்போது அபயம்! அபயம்!! என அத்துவிதிகளுடைய திருவடிகளில் சரணாகதி! சரணாகதி!! யெனவந்து விழுந்து, அவர்கள் சொல்லும் யுக்தியை அதாவது கடவுளொருவரே பரிபூரண சத்துப்பொருள், மற்றப் பசு பாசப்பொருள்கள் சத்துப்போலிப் பொருள்களென்று சொல்லும் யுக்தியைக்கேட்டுக்கொண்டுபோய்த்தானே சமாதானஞ் சொல்லவேண்டும். இங்ஙனமாக, தமக்குச் சகாயஞ்செய்யும் பரமோபகாரிகளான அத்துவிதிகளைத் தூஷித்தல் நியாயமாமோ? நன்றிமறத்தலன்று?



உ

சிவமயம்.

மாயாவாத சைவ சண்டமாருதம்.

இரண்டாம் பாகம்.

இனி மகாவிகடதூதன் 8 வது புத்தகம் 29 வது பத்திரிகையி லெழுதிய விஷயத்தைக் கவனிப்பாம்:—

தாயுமானவர் பாடலும் மடத்தாரும்.

பானுமூர்த்தி அவர்கள் தாயுமானவர் பாடலைத் திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களில் வாசிப்பதில்லையென்று கூறியதற்கு இவ்வரக்கோண வீரபத்ரமூர்த்தி "அன்னோர் தழுவாமைகொண்டே தாயுமானவர் பாடல் சைவநூலாகாதெனல் அறியாமையாம்" என்றார். அன்னோர் தழுவாமையால் அது இவரது துவைத சைவநூலாகாதெனல் மாத்திரமேயன்றி, மற்றப்படி தாயுமானார் பாடல் அத்வைத சைவநூலென்பதற்கு யாதும் ஆக்ஷேபமின்றெனக. இதன்பேரில் "தருமபுர ஆதீனத்துநூலைத் திருவாவடுதுறையாரும், திருவாவடுதுறை யாதீனத்துநூலைத் தருமபுரத்தாரும தழுவுவதில்லை. இப்படியே திருவண்ணாமலை ஆதீனத்து நூல்களை யேனைய ஆதீனத்தாரும், ஏனைய ஆதீனத்துநூலகளை யவ்வாதீனத்தாரும தழுவுவதில்லை" என்று கூறி, "இதனை யுணர்ந்தவர்கள் தாயுமானவர் பாடலை மடத்தார் அங்கீகரிக்க வில்லையென்று பானுமூர்த்தி குறைகூறியது அவரது மதியின் குறையென்றே வருந்துவர்" என்றார். இவரெடுத்துக் காட்டிய வுவமானம் இவருக்கே விரோதத்தை யுண்டாக்குகின்ற தென்பதைக் காட்டுகின்றோம். ஒரு மடத்தார்நூலை மற்றொரு மடத்தார் தழுவுவதில்லை யென்பது உபமானம். எந்த மடத்தாரும் தாயுமானவர் பாடலைத் தழுவுவதில்லை யென்பது உபமேயம். ஒரு மடத்தார் நூல் மற்றொரு மடத்தார்க்கு எப்படி விரோதமோ, எப்படி அனுசரிக்கப்படவில்லையோ, அப்படியே தாயுமானவர் பாடல் எல்லா மடத்தார்க்கும் விரோதம்; அதனால் அது எம்மடத்தாராலும் அனுசரிக்கப்படவில்லை யென்பதாம். இதனால் இவர் காட்டிய வுபமானம் எதிர்ப்பக்ஷத்தார்க்குச் சாதகத்தை யுண்டாக்கியது மாத்திரமேயன்றி, இவர்க்குப் பாதகத்தையு முண்டாக்கி விட்டதெனக. "இனி யுண்மையாக விசாரிக்குமிடத்து எந்தச் சைவாதீனத்தாரும் தாயுமானவர் பாடலை அநாதரவு செய்ததில்லையென அறிக" என்கிறார். இவரது விசாரிப்பு இருவகைப்படும். ஒன்று உண்மை, ஒன்று பொய்யாம். இவ்விரண்டு விசாரிப்பில் மடத்தார் தாயுமானவர் பாடலை அநாதரவு செய்ததில்லை. யென்பதை யுண்மை விசாரிப்பில் வைத்துக்கொண்டார்.

அதனாலேதான் தாயுமானவர் பாடலை அநாதரவு செய்ததில்லை யெனச் சொல்ல நேர்ந்ததுபோலும். அப்படிச் சொல்ல வந்ததிலும் ஒரு பொடியிருக்கின்றது. அந்தப்பொடியாதென்னின் தாயுமானர்பாடலை ஆதரவு செய்கின்றார்களென்று சொல்லாமல் அநாதரவு செய்ததில்லை யெனச் சொன்னமையேயாம். இவ்வாறு சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலியநூல்களை அநாதரவுசெய்ததில்லை யென்றுவது உண்மையாக விசாரித்ததில் அநாதரவு செய்ததில்லை யென்றுவது சொல்லுவாரா? இதனாலேயே மடத்தார் தாயுமானவர் பாடலை அநுசரிக்கும் விதம் நன்றாய் வெளிப்பட்டமை காண்க.

இவர் உண்மையாக விசாரித்ததில் தாயுமானவர் பாடலை அநாதரவு செய்ததில்லை யென்பதுபோல, ஒரு மடத்தார்க்குரிய நூலை மற்றமடத்தார் ஆதரவு செய்கின்றார்களா? அநாதரவு செய்கின்றார்களா? என்பதை விசாரித்துப் பார்த்தாரா? அதிலும் உண்மையாய் விசாரித்துப் பார்த்தாரா? திருவண்ணாமலை மடத்தார்க்குரிய சிவசமவாதநூலைத் திருவாவடுதுறை மடத்தார் அநாதரவுசெய்யாமல் அங்கீகரிக்கின்றனரா? அப்படியே திருவாவடுதுறை மடத்தார் நூலை அதாவது சிவஞான சுவாமிகளியற்றிய நூலைத் திருவண்ணாமலை மடத்தார் அநாதரவு செய்யாமல் அங்கீகரிக்கின்றனரா? ஒருவர் நூலை மற்றொருவர் தழுவுவதில்லை யென்பதனால் அங்கீகரிக்க வில்லையென்றே யேற்படுகின்றது. தாயுமானவர் பாடலையோ எந்த மடத்தாரும் அநாதரவு செய்வதில்லை. திருவாவடுதுறை முதலிய மடத்தார் நூல்கள் அவ்வவ் மடத்தாராலே மாத்திரம் ஆதரவு செய்யப்படுகின்றன. இதரமடத்தாரால் ஆதரவு செய்யப்படுவதில்லை. ஒரு மடத்தார் நூல் மற்றொரு மடத்தாரால் அநாதரவு செய்யப்பட்டிப்பதைக் கப் படுகின்றமையான் அவ்வவ் மடத்து நூல்கள் அவ்வவ் மடங்களுக்கேயுரியன. உரியனவாயிருப்பதால் அவ்வம்மடங்களை அனுசரிப்பவரும் பலவகைப்படுகின்றனர். அவரிலிவரு மொருவகைப்பட்டவரே யாம். தாயுமானவர் யாவர்க்கும் பொதுவாயிருப்பதால் அவர்பாடல் இவரினத்தவர்க்கே யுரிமையுடையதன்றென்க. திருவாவடுதுறைமடத்தார்க்கும் திருவண்ணாமலை மடத்தார்க்குந் தத்துவவிஷயத்தில் பேதமிருக்கின்றது. திருவண்ணாமலை மடத்தார் சிவசமவாதிகள்; திருவாவடுதுறை மடத்தார் சிவசமத்தை யொப்பாமல் பேசஞ்சொல்லுகிறவர்கள். இப்படி யேனைய மடத்தாரும் பேதப்படுகின்றனர். பேதப்படுகின்றமையால் ஒருவர் சொல்லுந் தத்துவத்தை மற்றொருவர் ஒப்பாமல் ஒருவரை மற்றொருவர் மறுத்து நூல்களுஞ் செய்திருக்கின்றனர். அம்மடத்தார் யாவருமே அநாதரவு செய்ததில்லை யென்பதனால் எந்த மடத்தாரும் தாயுமானவர் பாடலைத் தமக்குரிய சொந்த நூலாகத் தழுவுவதில்லை யென் றேற்படுகின்றது. எந்தநூல் தமக்குரிய சொந்தநூலோ, அதை மற்ற மடத்தார் தமக்குரிய சொந்தநூ

லாகத் தழுவுவ தில்லை. தாயுமானவர் பாடலை யெல்லாமடத்தாரும் அநுசரிப்பதால் அது எல்லாமடத்தார்க்கும் பொதுநூலாகின்றது. திருவள்ளுவர்குறள்போலத் தாயுமானவர்பாடல் ஷெமடங்களெல்லா வற்றிற்கும் பொதுநூலா யிருப்பதால் அந்தந்த மடத்தார் தாயுமானவர் பாடலைத் தமக்குச் சார்பாகப் பொருள்செய்து கொள்வார் போலும். இவ்வாறு அத்வைதிகள்மாத்திரம் தமக்குச் சார்பாகப் பொருள்செய்துகொள்ள இடந்தராதுபோலும். அதுபற்றியே எந்தச் சைவாதீன மடத்தாரும் தாயுமானவர்பாடலைத் தம்சொந்தநூலெனச் சொல்லுகிறார்களென்று சொல்லாமல் 'எந்தச்சைவாதீன மடத்தாரும் தாயுமானவர் பாடலை அநாதரவு செய்ததில்லை' என இழுப்பாய்ச் சொல்லி விட்டார்போலும். இதனால் இவருக்கும் இவரினத்தார்க்கும் சிவஞானசுவாமிகளுடை யெப்படிச் சொந்தமோ, அப்படியே தாயுமானசுவாமிகள் பாடல் சொந்த மல்லவென ஏற்படுகின்றது, சொந்தமென்று சொல்லின் அது திருவண்ணாமலை மடத்தார் முதலியவர்கள் அனுசரிக்கமாட்டார்கள். அனுசரியாராகவே பலபிரிவினருள் திருவாவடுதுறை மடத்தைச்சார்ந்த பிரிவினர்க்கு மாத்திரம் தாயுமானவர்பாடல் சொந்தமாய்ப்போம்.

தாயுமானவர்பாடல் எல்லாமடத்தாராலும் அனுசரிக்கப்படுகின்றமையின் அது பொதுநூலாகும். பொதுநூலாகுங்கால் அது திருவண்ணாமலை மடத்தாருடைய சிவசமவாதநூலுமல்ல; அதை மறுக்கும் திருவாவடுதுறை மடத்தாருடைய்நூலுமல்ல: இரண்டு மல்லாத போது ஷெ எல்லா மடத்தார்க்கும் பொதுவாகும்படி எந்தவித சித்தாந்தமாய்த் தமதுபாடலைத் தாயுமானவர் செய்திருக்கின்றனரோ அறியேம். பொதுவாகச் சொந்தமென்று சொல்வதிலுஞ் சற்று யோசனை யிருக்கின்றது. ஏனெனின் பொதுவாகவேனுஞ் சொந்தமென்று சொல்லாமல் 'அநாதரவு செய்ததில்லையெனவறிக' வெனமேனோக்காகக் கூறினமையா னென்க. பூர்வபக்ஷியார் வாக்கியத்தில் பின்னு மொருஆக்ஷேபமு மிருக்கின்றது. அது யாதெனின் பாநுமூர்த்தியார் "தாயுமானவர் பாடலைச் சித்தாந்த மடங்களில் வாசியாமையும், தாயுமானவர் மடத்தில் வேதாந்தநூல் வாசிக்கின்றமையும் இவர் அறிந்திலரோ!" என்றதற்கு "வாசிக்கின்றார்கள் அல்லது வாசிக்கின்றதில்லை" என்று சொல்வதைவிட்டு 'அநாதரவு செய்ததில்லை என்று மாறுபாடாகச் சொன்னமையேயாம். 'அநாதரவு செய்ததில்லை' என்பதனாலேயே அது தமது சொந்தநூலாகக் கொள்வதில்லை யென்றும் சொந்தநூலாகக் கொள்ளாவிட்டாலும் முற்றுந்தள்ளப்பட்டது மில்லை யென்றும் விளக்கமாகின்றன். அவர்கள் தமது நூலென்றே யுரிமையாகக் கொள்ளும் பக்ஷத்தில் 'உண்மையாக விசாரிக்குமிடத்து' என இவர் சொல்லவேண்டுவதில்லை. இவர்க்குமுன்பே அவ்விஷயம் தெரிந்திருக்கலாம். இப்போது புதிதாய் விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. இப்போதுவிசாரித்தமைக்குக்காரணம் அடியிற்

சொல்லுவது போலிருக்கலாம். தாயுமானவரைத் தமதுமதஸ்தரென முன்பு தெரியாமற் சொல்லிவிட்டார். பிறகு அதைத் தாபித்துக் கொள்ளவேண்டுவது தமது கடமையாய் விட்டது. அதன்பேரில் உண்மை யாதென மடத்தில் விசாரித்திருப்பார். அம்மடத்தார் "தாயு மானவர்பாடலை நாங்கள் பிரமாணமாகக் கொள்வதில்லை" யென்று சொல்லியிருப்பார்கள். அதன்பேரில் "யாது செய்வது? தெரியாமற் சொல்லிவிட்டேனே" என்று கேட்டிருப்பார். அதற்கு அவர்கள் இரண்டுக்கும் படாமல் தந்திரமாய் "அநாதரவு செய்வதில்லை" என் றால் அது முற்று முடன்பாடாகக் கொள்ளாமற்போயினும் சிலபாக மாவது கொள்ளப்படும் (அதற்குக்காரணம் பரமசிவனையே பரமாகச் சொல்வதாலும் சந்தானுசாரியாரைத் துதித்திருப்பதாலும் இன் னும் தங்களுக்குச் சாதகமாகச் சில புகன்றிருப்பதாலு மென்க.) எனச் சொல்லியிருக்கவேண்டும். அதைப் பத்திரப்படுத்திக்கொண்டு "இவ்வளவு கிருபையேனுஞ் செய்தார்களே போதும்" என மகிழ்ந்து அதைச்சொல்லிவிட்டார்போலும். மடத்தார் தழுவுகிறார்களென்றே சொல்லிவிடுவார். அப்படிச் சொல்வதற்கு அவர்கள் இடங்கொடுக்க வில்லைபோ லிருக்கின்றது. அதுபற்றியே ஜாடையாய் 'அநாதரவு செய்ததில்லை' யென மழுப்பிவிட்டார். இல்லாவிட்டால் தங்களுக் குரிமையான நூல்களைப்போலவே தாயுமானவர் பாடலையும் வாசிக் கின்றார்களென்றாவது பிரமாணமாகக் கொள்ளுகின்றார்க ளென்றா வது சொல்வாரன்றோ? இவரே சொல்லவேண்டாம். பாநுமூர்த்தி யார் கேட்டதற்குப் பதிலாகச் சொல்லலாமே. பாநுமூர்த்தியார் மடத்தார் வாசிக்கவில்லையென்றுதானே சொன்னார். அதற்குப் பதி லாக வாசிக்கின்றார்களென்று சொல்லலாமே. அதை விட்டு 'அநா ரவு செய்ததில்லை' யென்று சொன்னது சமாதானமாகுமா? வாசிக் கின்றார்கள் என்று சொல்லிவிட்டால் முழுப்பூசணிக்காயைச் சோற் றில் மறைப்பதுபோ லாகுமென அங்ஙனங் கூறினார்போலும்! இவர் சொல்லினாலேயே ஷை மடத்தார் தாயுமானவர்பாடலைப் பிரமாண நூலாக வாசிப்பதில்லையென்றும் பிரமாணமாக அனுசரிப்பதில்லை யென்றும் விளங்குவதால் பூர்வபக்ஷியார்வாதம் துர்வாதமாய்க் கழி ந்து போயிற்றென்க. உண்மையிலும் ஷை மடத்தார் தாயுமானவர் பாடலைப் படிப்பதில்லை. அது "மாயாவாதநூல்" என்றும் ஆதலால் அதைப்படிக்கப் படாதென்றும் கட்டுப்பாடுசெய்து வைத்துக்கொண் டிருக்கின்றார்கள். மடத்தாரில் யாரேனுஞ் சிலர் படிப்பதுண்டு. அப் போது ஒருவர்க்குந் தெரியாமல் இரகசியமாய்ப் படிப்பார்கள். வே தாந்த நூல்களைப் படிக்கவேண்டுமானால் எப்படி ரகசியமாய்ப் படிக் கிறார்களோ அப்படியே தாயுமானவர் பாடலையும் படிப்பார்கள்.

மடத்தார் சங்கதிதான் இப்படியாயிற்றே. இனித் தாயுமானவர் மடத்தார் சங்கதியைப் பார்ப்போம். பாநுமூர்த்தியார் 'தாயுமான வர் மடத்தில் வேதாந்தநூல் வாசிக்கின்றமையும்' எனத் தாயுமான

வர் மடத்தார் வேதாந்தநூல் வாசிக்கின்ருர்கள் என்ருரே. இதற்கேன் பதிற்சொல்லவில்லை? சோமசுந்தரநாயகர் கொண்ட மௌன விரதம் இதற்குந் தக்கதென அவ்விரதத்தை மேற்கொண்டனரோ? அந்த மடத்துக்குச் சொன்ன வழுவழுப்புக்கூட இதற்குச் சொல்ல முடியாமல் எப்போது மௌன விரதத்தை மேற்கொண்டனரோ, அப்போதே தாயுமானவர் மடத்தார் வேதாந்தநூல்கள் வாசிக்கின்ருர்களென் றேற்பட்டுவிட்டது. திருவாவடுதுறை முதலிய மடத்தார் வேதாந்த நூல்களை வாசிக்கப்படாதென்கிற விரதமுடையவர்கள் என்பது திண்ணம்; தாயுமானவர் மடத்தாரோ வேதாந்த நூல்கள் வாசிக்கின்ருர்க ளென்பதுந் திண்ணம். ஆதலால் இவ்விருமடத்தாரும் விரோதககூஷியிற் சேர்ந்தவர்களாம். விரோதககூஷியார் இயற்றிய நூலும்விரோதமாகத்தானிருக்கும். அங்ஙனமாக விரோதககூஷியாரில் தலைமைபெற்ற தாயுமானவர் இயற்றிய நூல் திருவாவடுதுறை முதலான மடத்தவர்க்கு விரோதமாக விராதென நாம் எங்ஙனங் கூறத் துணியலாம்? பூர்வபகூஷியார், தாயுமானவர் மடத்துக்கும் போயிருப்பார். போய் "நீங்கள் வேதாந்த நூல்களை வாசிக்கின்றீர்களா?" என்றுங் கேட்டிருப்பார். அவர்கள் "ஆம், வாசிக்கின்றேம்" என்றுஞ் சொல்லியிருப்பார்கள். அதன்பேரில் "இனிச் செய்வதென்ன?" என நெடுநேரம் யோசித்திருக்கவுங் கூடும்.யோசனையி லேதுந் தோன்ரும லிருக்கவுங்கூடும். பிறகு சபாபதி நாவலர் சோமசுந்தரநாயகர் கொண்ட மகாமௌன விரதமே சரியானது, இதைவிட வேறு வழியில்லை, மேலும் "மோனமென்பது ஞானவரம்பு" என ஞானத்தாயான ஔவையாரும் திருவாய் மலர்ந்தமையின் ஞானத்துக்கும் சாதனமாகு மென ஷை மகாமௌனவிரதத்தைக் கைக்கொண்டார் போலும்! இவருக்கும் இவர் பக்கத்தாருக்கு முற்றுமே விரோதமான வேதாந்த நூல்களைத் தாயுமானவர் மடத்தாரே வாசிக்கிறபோது, ஷை மடத்தின் றலைவரான தாயுமானவரையும் அவர் பாடலையும் இவர் பகூஷத் துவிதசித்தாந்தமென வெங்ஙனங் கூறலாம்? ஆதலால் தாயுமானவர்பாடலும் அவர் கொள்கையும் அத்வைத சித்தாந்தமென்பதற்கு யாது மையமின்றென்க.

வீண்தூஷணைகளிற் பயனில்லை.

இவர் மதவாதிகளே மாயாவாதிகளென்பதற்கு வேண்டிய (மறுக்கக்கூடா, இதுவரையிலுமெவரானும் மறுக்கவுமில்லா)நியாயமழைகளிதுவரையிலும் சொரிந்தமைக் களவில்லை யென்ப நியாவருமறிந்த விஷயமன்ருே? அத்துடனே இவராவது இவர் அபின்னதோழரான சூளைவாசியாராவது இதுவரையில் மறுத்துத் தாம் மாயாவாதிகளல்லவென நிலைநாட்டிக்கொள்ளவகையில்லாமற் போனர்களென்பதுமியாவரு மறிந்தவிஷயமேயன்ருே? இதன்பேரில் பானுமூர்த்தியார் இவரை "மாயாவாதி"யென்ருர். அது இப்பூர்வபகூஷியாருக்குப்பொறு

க்கவில்லை. கோபமூண்டுவிட்டது. அந்தக் கோபத்தால் ஷை 31-வது பத்திரிகையில் "எம்மை மாயாவாதியென்றூர். அதன்வாயில் மண் விழச் செய்தோம்" என்றூர். எப்போது மண் விழச்செய்தார்? தாம் மாயாவாதி யன்றென்பதற் கிதுகாறும் ஏதும் நியாயம் பேசாமல் இருந்து விட்டு இப்போது வாளா 'மண்விழச்செய்தோம்' என்றால் ஒவ்வுமா? இவரது துர்வசனம் யாரையாவது ஏதாவது செய்யுமா? யாரையும் ஏதும் செய்யாது. ஆதலால் இனி யேனும் (சுருதியுக்தி அநுபவசம்மதமான நியாயம் ஜெயிக்குமேயன்றித்) துர்வார்த்தைகள் ஜெயிக்கமாட்டா வென்றறிந்து பொறுமையுடன்வெகுளியை அடக்கிக்கொண்டு நியாயத்தைக் காட்டித்தமது சித்தாந்தத்தை நிலைநாட்டிக்கொள்வாராக. நியாயத்தை விட்டு வீண்வார்த்தைகள் பேசுவதிற் பயனில்லை. மாயாவாதி யென்னும்பேர் தமக்கு வேண்டாதபக்ஷத்தில் அம்மதத்தை விட்டொழிவதே தமக்குக் குணமாம். அம்மதத்திலு மிருக்கவேண்டும்; அப்பேரும் தமக் கிருக்கக்கூடாதென்றூலாகுமா? இவர் மாயாவாத மதஸ்தர் என்பதற்கு வேண்டிய நியாயங்கள் பன்முறை சொல்லிவிட்டமையானும், இதுவரையிலும் இவர் மதஸ்தரில் எவரும் அதைத் தூஷணச் சொற்களாலேயன்றி நியாயத்தால் மறுக்கவில்லை யாதலானும் இனிச்சீறுதலை யொழித்துப் பெட்டியினுள் பாம்பைப்போ லடங்கிக் குணப்படுவாராக. இனியு மெழுவாராயின் நியாயதண்டத்தால் புடைக்கப்படுவ ரென்பதுசத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! நாம் சுருதி யுக்தி அநுபவ சண்டை செய்கின்றேமே யன்றி அவைகள்ஒழிந்த வாய்ச்சண்டை கைச்சண்டை செய்யவில்லை. இச்சண்டைசெய்ய நமக்கு வலியுமில்லை; அச்சண்டைசெய்து போலீசுக்கும் போகமாட்டோம்.

பயந்து ஒளிதல்.

இனிப் பாநுமூர்த்தியார், சிவ ஜீவ ஐக்கியவிஷயத்தைப்பற்றிப் பொருளும் பொருளும் போலவா? பொருளுந் தொழிலும் போலவா? பொருளுங் குணமும் போலவா? என விவ்வாறு பற்பல கேள்வி கேட்டதற்கு ஏதும் விடைதராமல், இப்பூர்வபக்ஷியாரான அரக்கோண வீரபத்திர மூர்த்தியார், "இனி இவர் சைவசித்தாந்திகள் கூறுமுபமானத்தை நீரே யெடுத்துக் காட்டிச் சாதிக்கலாகாதா வென்று எம்மைக் கடாவலாம். அவ்வா றெடுத்துக் காட்டி யுபகரித்தல் சிவனடியார்களாகிய சாதுக்களுக்கு மாத்திரமே பயன்படும். சிவத்துரோகிகளுக்குப் பயன்படாது." என்று சொல்லிவிட்டார். இந்த வுத்தரவுக்குத்தான் இதுவரையில் எதிர்பார்த்திருந்தோம். "அங்கே தப்பி இங்கேதப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மடிப்பட்டன்" என்பதுபோல அத்வைதிகளிடத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டார்; அதினும் பலமாய் வந்து அக்ப்பட்டுக்கொண்டார்; அதிலும் மீளாதபடி அகப்பட்டுக்கொண்டார்; அதிலும் தாமே வலிபவர் தகப்பட்டுக்

கொண்டார். எவ்வகையினும் மீளமுடியாமைபற்றியும் பேச நாவில்லாமை பற்றியும் காட்டச் சற்பிரமாணங்க ளில்லாமைபற்றியும் அத்துடனே யுக்தி அநுபவங்க ளில்லாமைபற்றியும் உண்மையை யொளியாமற் சொல்லிவிட்டார். இச்சமயத்தில் உண்மையை யொளியாமல் சொல்லாவிட்டால் தீராது. என்செய்வார் பாவம்! எத்தனையோ நாளாய்எத்தனையோகள்ளவழிகளிலெல்லாம் ஓடிஓடி நுழைந்துநுழைந்துபார்த்தார். அத்வைதிகள் இவர் நுழையுங் கள்ளவழிகளெல்லாவற்றிலுங் கூடநுழைந்து இறுகப் பிடித்துக் கொண்டார்கள். அதனால் இனி நுழைந்தும் பயனில்லையென வொரே முழுக்காய் முழுகிவிட்டார். இந்த முழுக்கை வெகு வருஷங்கட்கு முன்னரேயே முழுகி யிருக்கலாம். முழுகி யிருப்பாரேயாயின் இவ்வளவு அநர்த்தங்களும் அவமானமும் அபகீர்த்தியு முண்டாகமாட்டா. இந்தப் பூர்வபக்ஷியார் இவ்வாறு தமது மதம் பலவீனம்என மனம்வந்து வாயினாற் சொல்ல மாட்டார். அப்படிச் சொல்லி விட்டமையால் அதற்கு ஏதோ காரணமிருக்கவேண்டும். "ஒன்றுநினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும்" என்பதுபோல இவர் ஒன்று நினைக்கப் பிறிதொன்றாகவாவது இவரது கை யெழுதியிருக்கவேண்டும். அல்லது இவரதுள்ளத்தில் வீரபத்திரமூர்த்தி ஆவேசமாவது புகுந்து உண்மையை வெளிப்படுத்தி யிருக்க வேண்டும். இவர் பாநுமூர்த்தியாருடைய பல்லை யுடைக்கும் பொருட்டு வீரபத்திரமூர்த்தி வேஷத்தைப் பூண்டாராதலால் இந்த அக்கிரமம் வீரபத்திரமூர்த்தி சுவாமிகளுக்குப் பொறுக்காமல் இவரை மானபங்கம் பண்ணக்கருதி இவரதுள்ளத்தில் புகுந்து இவரது எண்ணத்துக்கு மாறாக எழுதப்பண்ணுவித்ததுபோலும்!

இவரது மதத்தின் நியாயம் சிவனடியாரான சாதுக்களுக்கு மாத்திரம் பயன்படு மென்பதனால் மற்றவர்க்குப் பயன்படாதெனத் தெரிகின்றது. இஃதுண்மைதான். ஆனால் இவர் மதத்தில் நியாயமிருந்து (அதை அன்னியர்க்குச் சொல்லப்படாதென்பதா? நியாயமில்லாதிருந்து அந்த நியாயமில்லாமையை அன்னியர்க் கெடுத்துச்சொல்லின், அதன்பேரில் அன்னியர் ஆக்ஷேபிப்பார்கள், அதற்குச் சமாதானஞ் சொல்லாவிடில் அவமானமும் மதத்திற் கிழிவு முண்டாகும், ஆதலால்) சொல்லப்படா தென்பதா? இதனுண்மை நமக்கு விளங்கவில்லை. அன்னியர்க்குச் சொல்லப்படாதென இப்போது சொன்னதுபோல் இதற்கு முன்பே சொல்லியிருப்பாராயின் இப்படிப்பட்ட பயமுள்ள மதஸ்தர் ஜோலிக்கு அத்வைதிகள் ஏன் வருகிறார்கள்? இதற்குமுன் இவ்வாறான சற்புத்தி யேனிவர்க் கில்லாமற்போயிற்று?

அன்னியர்க்கு உபமானத்தை யெடுத்துச் சொல்வதில்லை யென்பதே யுண்மையானால் 1892௵ ஜூலை௴ 4௳ காகைநீலலோசனியில் சோமசுந்தரநாயகர்

"புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் கனவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பிலதாயிருள் வெளிபோல் பேதமும்

சொற்பொருள் போல்பேதாபேதமு மின்றிப் பெருநூல்சொன்ன, அறத்திஞல் விளைவதா யுடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோல் பிரிவரும் அத்துவித மாகும்''

என்றசெய்யுளையும்,

"யாவரது கண்ணெளிகளும் இடைவெளியில் ஒன்ருெடொன்று கலந்து வியாபித்தலும், அத்தனையும் அந்தச்சந்திரனை முற்றும் பரிசித்து இன்புறுத லும் கூடுமாகையால் எமது வியாபகம் சாமஞ்சஸமேயாயிற்று.''

"கண்ணெளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்.''

"கண்ணெளியையே பூதவிருள் மறைப்பதன்றிக் கதிரொளியை மறைக்க முடியாதாற்போல ஆன்மவொளியையே அஞ்ஞானவிருள் மறைக்குமன்றிச் சிவவொளியை மறைக்க முடியாதென்க''

"சிலந்திபூச்சியினிடம் நூல் உண்டாகியதுபோல் பிரமத்தினிடத்தில் உலகம் உண்டாகியது.''

"நிலங்குளிர்ந்தவழி வித்தினின்றும் அங்குரமுண்டாயது என்பதும்.''

என்ற வாக்கியங்களையும் ஏன் எடுத்துக்காட்டினர்?

இதற்குமுன் இவ்வாறு பலமுறை பல்வுபமானங்கள் கூறிவிட்டு, இச்சமயத்தில் இவ்வாருன தோல்விச் சொல்லைச் சொல்வதால் இப்போது பாநுமூர்த்தியாரிடந் தப்பித்துக்கொள்ள வழிபார்க்கிறதாகத் தெரிகிறது. உபமானத்தைச் சொல்லுகிற வரையில் சொல்லி, மேலே சொல்ல முடியாத போது, அன்னியருக்குச் சொல்வதில்லை யெனச் சொல்வது "குடுமி அகப்பட்டாற் பார்க்கிறது, இல்லாவிட்டால் காலைப்பிடித்துக்கொள்ளுகிறது" என்பதுபோல விருக்கின்றது. இவ்வளவே யன்றி யிவர்சொல்வதற்கு வேறு அணுத்துணையும் நியாயமென்பதில்லை. நியாயத்தைப் பாராம லிவர்சொல்வதுபோல மற்றவர்க்குச் சொல்லப் படாதென்றே வைத்துக் கொள்வோம். இந்த நியாயம் இவர்க்கு மாத்திரமா? மற்றவர்க்குமா? இவர்க்கு மாத்திரமென்று சொல்லப்படாது; நியாயமென்பது யாவர்க்கும் பொதுவானதாலென்க. அங்ஙனமாக மற்றவர் சித்தாந்தத்தை யிவர்க்கு எப்படிச் சொல்வார்கள்? சொல்ல மாட்டார்களல்லவா? இந்த நியாயப்பிரகாரம் எவரும் தம்தம் சித்தாந்தத்தைப் பிறர்க்குச் சொல்லார். சொல்லாராகவே பிறர் மதத்திற் ருேஷங்கூறி யிவ ரேன் மறுக்கப்போகின்ருர்? ஒருவர்க்குப் பிறிதொருவர் சொல்லப்படா தென்ப திவர்க்கு நியாயமாயிருக்க, இவர் பிறரைக் கண்டிக்கப்போவது இவரது நியாயப்பிரகாரம் மதியின்மையே யன்ருே? இவர் பிறரை மறுக்க எழும்போது, பிறர் இவரை மறுக்க எழார்களா? அப்படி யெழும்பி யிவர் மதத்தைப் பிறர் கண்டிருக்கும் போது நாம் பிறருக்குச் சொல்ல மாட்டோமென்று சொல்லலாமா? கொள்ளென்ருல் வாயைத் திறப்பதும் கடிவாளமென்ருல் வாயைமூடுவதும் மனிதர் செய்கையாமா? மிருகசாதியி லொன்ருன குதிரையின் செய்கையன்ருே? நாம் விடைசொல்வதாயிருந்தால் பிறரை ஆக்ஷேபிக்க வேண்டும்; இல்லாவிடில் மௌனவிரதங் கொள்ளவேண்டும்.

சும்மாபோகிற எ. என்னும் ஒருவனை, பி. என்பவன் சண்டைக்குக் கூப்பிட்டுச் சண்டைசெய்து அவனையடித்தானென்றும், பிறகு எ. என்பவன் சண்டைக்காயத்தமாகிச் சண்டைசெய்து பி. என்பவனை அடிக்கும்போது, பி. என்பவன், நான் அன்னியனுடன் சண்டைபோடமாட்டேன், எனதினத்தானுடன்றான் சண்டைபோடுவேனென்று சொன்னானென்றும் வைத்துக்கொள்வோம். இது நியாயமாமா? பி. என்பவன், எ. என்பவனுடன் சண்டைபோட விஷ்டமில்லாதபக்ஷத்தில் அவனைச் சண்டைக்குக் கூப்பிடுவானேன்? அவனையடிப்பானேன்? சண்டைக்குங் கூப்பிட்டு அடிக்கவும்அடித்து, பிறகு அவன் சண்டைக் காயத்தமாகி அடிக்கும்போது அவனது பலத்தையும் அடியினதுரப்பையுங்கண்டு தாங்கமுடியாமல் பயந்து இனியும் அடிப்பானேல் உயிர்போய்விடுமெனவெண்ணித் தந்திரமாய் "நான் அன்னியனுடன் சண்டை செய்வதில்லை, எனதினத்தானுடன்றான் செய்வேன்." எனச் சொல்லலாமோ? சொன்னால் அவன் விடுவானா? அதுபோலப் பிறர்மதத்திற் குற்றமுள்ள தென ஆக்ஷேபித்துத்தம்மதம் அங்ஙனமின்றென்று கூறினால் பிற மதஸ்தர் சும்மா விடுவார்களா? அவர் தம்மதம் குற்றமற்றதெனவும் இவர் மதமே குற்றமுள்ளதெனவுங் கூறி வாதப்போர் செய்யமாட்டார்களா? பயந்தொளிகிறதானால் முன்னாலோசனையோடு ஆரம்பத்திலேயேயன்றோ வொளியவேண்டும்? இப்போது தப்பி யொளியப்பார்த்தால் பகைவர்கள் விடுவார்களா? இவர், தமது சித்தாந்தத்தை மற்றவர்க்குப் பயன்படாமை காரணமாகச் சொல்லமாட்டாரேயன்றி மற்றப்படி சொல்ல ஆக்ஷேபமில்லை யென்னின் அங்ஙனமே மற்றவரும் இவர்க்குப் பயன்படாமை காரணமாகச் சொல்லமாட்டோ மென்கிறாரே யன்றி மற்றப்படிச் சொல்ல ஆக்ஷேபமில்லையென்று சொன்னால் அதற்குமேல் இவர் யாது சமாதானங்கூறுவார்?எப்படிப்பார்த்தாலும் சொல்லமாட்டோமென்கிறதற்கு அணுத்துணையும் நியாயமில்லை. இதுநிற்க; இவர் வாக்கியத்தினால் இவர் மதஸ்தரானால் சொல்வா ரென்பதற்கியாதும் ஆக்ஷேபமில்லையல்லவா? இவர்மதத்திற்கு ஒருவர்செல்வதானால் நியாயமிருக்கக்கண்டு செல்கிறதா? நம்பிக்கையினால் செல்கிறதா? நியாயமிருக்கக்கண்டு செல்கிறதெனின் அந்த நியாயத்தை முன்பு சொல்லவேண்டுமே. நம்பிக்கையின்பேரில் செல்லுகிற தென்னின் நம்பிக்கையின்பேரில் செல்கிறதானால் எந்த மதத்திற்சென்றாற்றானென்ன? இவர் மதத்திற்கே செல்லவேண்டுமென்கிற ஆவசியகமென்ன? "எல்லாமதங்களும் பொய், எம்மதமே மெய்" எனின் மெய்யென்பது நியாயத்தாலா? நம்பிக்கையினாலா? நம்பிக்கையினா லென்னின் மெய்யென்று நம்புவது எந்தமதமானாற்றா னென்ன? இவர் மதத்தையே மெய்யென்று நம்பவேண்டு மென்பதென்ன? நியாயமில்லாமல் ஒருமதத்தை மெய்யென்று நம்பிச்செல்லும் விஷயத்தைப் பற்றி ஓர் கிறிஸ்து பாதிரியாருக்கும், அவருக்குக் கல்விகற்பிக்கும் ஓர் உபாத்தி

யாயருக்கும் நடந்த விநோத சம்பாஷணை இச்சமயத்திற்குப் பொருத்தமாயிருக்குமெனக் "கிறிஸ்துமதக் குருட்டுநம்பிக்கை" யென்னும் சிறு புத்தகத்திலிருந்தெடுத்து இதனடியிற் பிரசுரிக்கின்றோம். அது வருமாறு:—

"ஓர் தமிழ் முனிஷி, பாதிரியார் ஒருவருக்குத் தமிழ் கற்பிக்கும்போது அந்தப்பாதிரி தமிழ் முனிஷியை நோக்கி: "அனேகம்பேர் கிறிஸ்துமதத்தை நம்பிக் கிறிஸ்தவர்களானார்களே; நீர்மாத்திரம் ஏன் ஆகவில்லை? இப்போது கிறிஸ்தவராய்விடும்" என்றனர். ஐயா துரையே! உம்மைப்போல் சைவனும் தம்மதத்திற்கு அழைக்கிறான், வைஷ்ணவனும் அழைக்கிறான், மகம்மதியனும் அழைக்கிறான், சமணனும் அழைக்கிறான், பௌத்தனும் அழைக்கிறான், இன்னும் மற்றமதஸ்தர்களும் அழைக்கின்றார்கள், எந்த மதத்திற்குச் செல்வது என்றார் முனிஷியார். அதற்குமேல் நடந்த விஷயம் வருமாறு:—

பாதிரி: அந்த மதங்களெல்லாம்பொய்; அதுகளை நம்பாதேயும்.

முனிஷி: அந்தந்தமதஸ்தரும் அப்படியேதான் சொல்லுகின்றார்கள்; நீங்கள் சொல்வதில் என்ன விசேஷம்?

பா: அந்த மூடர்கள்பேச்சைக் கேட்கவேண்டாம்.

மு: அந்தந்த மதஸ்தரும் அவ்வாறுதான் உரைக்கின்றார்கள்.

பா: கிறிஸ்துவேதம் ஒன்றுமாத்திரந்தான் சத்தியம்.

மு: தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் ஒவ்வொருவரும் தங்கள் வேதம் ஒன்றுமாத்திரந்தான் சத்தியமென்று உரைக்கின்றார்கள்.

பா: கிறிஸ்து வேதத்தை நம்பினால் மோக்ஷமுண்டு; மற்ற வேதங்களை நம்பினால் நரகந்தான் கிடைக்கும்.

மு: பாதிரியாரே! இவ்வாறு மற்ற மதஸ்தரும் சொல்லுகிறார்கள்.

பா: அவற்றை நீர் கொள்ளற்க; என்பேச்சை நம்பும்.

மு: அவரவரும் இவ்வாறுதான் பேசுகின்றார்கள். யான் யாவர் சொல்லைக் கேட்பது? ஒருவர்க்கு இணங்கினால் மற்றவர்க்கு மனஸ்தாப முண்டாகின்றது. என்செய்வேன்!

பா: முனிஷியே! உமக்கு மோக்ஷத்தில் நித்திய சுகத்தை அநுபவிக்க இஷ்டமா? நரகத்தில் நித்திய துக்கத்தை அநுபவிக்க இஷ்டமா?

மு: கனவானே! நீர் வினவியதுபோலவே மற்றவரும் வினவுகின்றார்கள்.

பா: கிறிஸ்து சத்திய வேதம் மெய்யான பராபரனால் இயற்றப்பட்டது; மற்றவை மனிதரால் இயற்றப்பட்டன.

மு: ஒவ்வொரு மதஸ்தரும் தாங்களுரைத்தபடியே தங்கள் வேதம் சத்தியமென்றும், கடவுளால் தரப்பட்டதென்றும், மற்றவர் வேதம் கடவுளால் கொடுக்கப்பட்டதல்ல, மனிதரால் எழுதப்பட்டதென்றும் உரைக்கிறார்கள்.

பா: யான் உரைத்தவாறு மற்றவர் உரைக்கினும் அது உண்மையல்ல.

மு: மற்ற மதஸ்தரும் இப்படியேதான் கூறுகின்றார்கள்.

பா: கிறிஸ்துவேதம் நியாயம் நிரம்பி உள்ளது; மற்றவேதங்களில் நியாயமில்லை.

மு: அவரவரும் இப்படியேதான் சொல்லுகின்றார்கள்.

பா: முனிஷி! என்சொல்லைத் தடுக்கவேண்டாம்.

மு: இவ்வாறு நான்பேசினுல் மற்ற மதஸ்தரும் தடுக்கவேண்டாமென்று வாயை அடக்குகின்றூர்கள்.

பா: கிறிஸ்து பைபிலைக் காண்பித்து, பாரும் எவ்வளவு நீதி சொல்லியிருக்கிறது!

மு: இதரமதஸ்தர்களும் தங்கள்தங்கள் வேதத்தை என்முன் கொண்டுவந்து போட்டு, எவ்வளவு நீதிசொல்லுகின்றது பாரும் என்றுரைக்கின்றூர்களே; யாது செய்வேன்!

பா: கனியைவிட்டுக் காயைத் தின்னப் பார்க்கிறீரோ!

மு: ஒவ்வொருவரும் தத்தம்மதமே கனியெனவும், ஏனைய மதங்கள் காயெனவும் சொல்லுகின்றூர்களே!

பா: நீரென்ன வம்பராயிருக்கின்றீரே!

மு: ஐரோப்பிய பாதிரியே! பதிலுக்குப் பதில்பேசினுல் வம்பு பேசுகிறதாக மற்றவர்களும் சொல்லுகின்றூர்கள்.

பா: நீரென்ன வாயாடியா யிருக்கிறீரே!

மு: இதரமதஸ்தரும் இப்படித்தான் சொல்லுகின்றூர்கள்.

பா: முனிஷி! நீர் என்ன சண்டித்தனம் பேசுகின்றீர்?

மு: தாங்கள் கூறுவதுபோல் மற்றவரும் ஜண்டித்தனமாய்ப் பேசுகின்றூய் என்கிறூர்கள்.

பா: நீர் எங்கள் கிறிஸ்துமதத்திற்கு வரமாட்டீரோ!

மு: மற்றவரும் இப்படித்தான் அழைக்கிறூர்கள்.

பா: முகங் கடுகடுத்துக் கோபத்தோடு முனிஷியைநோக்கி: "அஞ்ஞானிகளிடத்தில் பேசப்படாது" என்றூர்.

மு: அந்தந்த மதஸ்தரும் தமது மதத்திற்கு வராவிட்டாலும், நியாயம் பேசினுலும், பதிலுரைத்தாலும் அவர்களை அஞ்ஞானிகளென்றும், தங்களை ஞானிகளென்றும் சொல்லுவதோடு, கடுகடுத்துக் கோபிக்கின்றூர்கள். ஒவ்வொரு மதஸ்தருடைய கோபத்தையும் எவ்வாறு ஆற்றுவேன்! எந்தமதத்திற்குச் செல்லினும் மற்றவரால் அஞ்ஞானியென்னும் பட்டமே பெறவேண்டி வருகிறது.

பா: முனிஷி! இனி உமதிஷ்டம்.

மு: கடைசியில் உமதிஷ்டம்என்று மற்றவரும் சொல்லி விடுகின்றூர்கள்.

பா: மௌனவிரதங் கொண்டார்.

மு: மற்றவரும் இப்படியேதான் மௌனஞ் சாதிக்கின்றூர்கள்.

பா: எழுந்து போய்விட்டார்.

மு: பேச இடமும், நியாயமுமில்லாதபோது, மற்றமதஸ்தரும் இவ்வாறுதான் எழுந்து போய்விடுகின்றூர்கள்.

இதுவரையில் சம்பாஷணை முடிந்தது. பாதிரியார் மிக வெட்கமடைந்து, என் இந்தமுனிஷியாரிடத்தில் வாய்கொடுத்தோமென தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டு, அன்றுமுதல் முனிஷியாரிடத்தில் டை விஷயத்தைப் பற்றிப் பேசுவதை யொழித்தார். முனிஷியார், பாதிரியாரிடத்தில் ஜீவிப்ப

வராகலின் ஜீவனத்திற்குப் பங்கமின்றித் தந்திரமாய்ப்பேசி, பாதிரியார் அவ்விஷயத்தைப்பற்றி நினையாதவகை செய்துகொண்டார்.''

மதத்திற்கு நியாயபல மில்லாதவர்கள் ஷை பாதிரியாரைப்போற்ருன் நம்பு நம்பு என்று சொல்லுவார்கள். கேட்டகேள்விக்கு உத்தரஞ் சொல்லமாட்டார்கள். எம்மதத்திற்கு வந்தால் சொல்லுவோமென்றும், அன்னிய மதஸ்தர்க்குச் சொல்லமாட்டோ மென்றுஞ் சொல்வார்கள். இது மூக்கறையன் மதத்திற்குத்தான் பொருந்தும். யாராலுஞ்சரி, ஒருமதத்திலிருந்து மற்ருெரு மதத்திற்குச் செல்லவேண்டின் அம்மதத்தின் சொரூபத்தை அம்மதநூல், யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றினுலும் அறிந்து, சரியாயிருந்தால் செல்லவேண்டும்; அங்ஙனமின்றி ஆரம்ப சூரத்துவமாயேனும் வேறு காட்சிப் பொருள்களுக்காகவேனும் செல்வாரேல், அது தோஷமானதெனக் கண்டபின்னர் "என்செய்தோம்! என்செய்தோம்!!" எனத் தம்மைத் தாமே நொந்துவருந்துவர். இதற்கு வேறே சான்று எங்கும் போகவேண்டுவதில்லை. இவர்க்கு அபின்னதோழரான சோமசுந்தரநாயகரிடத்திலேயே பார்த்துக்கொள்ளலாம். அவர் மூக்கறையன் கதையாய் மாயாவாத துவிதமதத்தில் பரியாலோசனை யின்றிப் பிரவேசித்து, இப்போது அத்வைதிகளுடைய வலையிலகப்பட்டுத் தப்ப வழியின்றி ஆந்தைபோல் விழிப்பதும், மகாமவுனவிரதத்தைக் கொள்வதும், முடிவுரைகூறிப் பதுங்குவதும் பலரறிந்த விஷயமேயன்ருே?

நிற்க; ஷை சோமசுந்தரநாயகர், துவித சைவசித்தாந்த மதத்திற் சென்றனரே. அம்மதத்தை முன்பு ஆராய்ந்துபார்த்துச் சென்றனரா? ஆராயாமற் சென்றனரா? ஆராய்ந்து பார்த்துச் சென்றனரென்னின், அன்னியர்: அசாதுக்களும் சிவத்துரோகிகளு மாதலால் அவர்களுக்கு இவர் இனத்தார் கேட்டகேள்விக்குச் சமாதானஞ் சொல்லமாட்டார்களே. அப்போது இச்சோமசுந்தர நாய்க்கர் அத்வைதியாயிருந்தமையால் அசாதுவும் சிவத்துரோகியு மாகவேண்டுமே. அசாதுவும் சிவத்துரோகியுமான சோமசுந்தரநாயகருக்கு இவர் மதஸ்தர் அப்போது உபமேயத்துக்குப் பொருத்தமாக வுபமானஞ் சொல்லியிருக்கமாட்டார்களே. உபமேயத்துக்குப் பொருத்தமாக வுபமானஞ் சொல்வதுசுயமதஸ்தர்க்கேயன்றியன்னியமதஸ்தர்க்கன்றே. அன்னியமதஸ்தரெல்லாம் அசாதுக்களென்றும் சிவத்துரோகிகளென்றும் இவர் சொல்லியிருத்தலாலும் சோமசுந்தரநாயகர் அன்னியமதஸ்தராயிருந்தபோது அசாதுவும் சிவத்துரோகியுமா யிருந்திருக்கவேண்டுமானதாலும் அவர்க்கு இவரினத்தார் உபமேயத்திற்கிணங்க வுபமானத்தைச் சொல்லியிருக்கமாட்டார்க ளாதலாலும் இவர் மதத்தில் தோன்றும் ஆக்ஷேபங்களை யாராய்ச்சி செய்தே அவர் இவர் மதத்திற் சென்ருரென்று சொல்லவொண்ணுது. பின்னை யாராய்ச்சி செய்யாமல் சென்ருரென்பதே திண்ணமாமெண்க. அவ்வாறு ஆராய்ச்சி செய்யாமலே சென்ருரென்றபோது குருட்டு நம்பிக்கையினுலே சென்ரு

ரென்றுவது சொல்லவேண்டும்; அல்லது பிரத்தியக்ஷ லாபத்தை யுத்தேசித்தே சென்றுரென்றுவது சொல்லவேண்டும். குருட்டு நம்பிக்கையினுற் சென்றுரென்று சொல்லும்பக்ஷத்தில் அப்போ திருந்த அத்வைதமத சித்தாந்தத்தினது உண்மையும், நூதனமாய்ப் பிரவேசித்த துவைதமத சித்தாந்தத்தினது பொய்ம்மையும் அவ ரறிந்திலரென்றே விளங்குகின்றது. அறிந்திருந்திருந்தால் கிறிஸ்து மதக் குருட்டுநம்பிக்கையின்படி குருட்டுநம்பிக்கை யவரிடத்தினின் றும் விலகிப்போயிருக்கும். விலகிப்போயிருக்கும்பக்ஷத்தில் இப்போது சென்றிருக்கும் துவைத மதத்தில் அப்போது சென்றிருக்கவே மாட்டார். மாட்டாராகவே யிப்போது அத்வைதிகளிடத்தில் அகப் பட்டுக்கொண்டு ஆந்தைபோல் விழித்துத் தப்ப வழியின்றி முடிவுரை கூறி ஒடுங்கிப் பயந்து பதுங்கி ஒளிந்து தலைமறைதலில்லாமற்போம். ஆராய்ச்சி செய்யாமல் குருட்டுநம்பிக்கையினுல் செல்லும் பக்ஷத்தில் புதிய மதமொன்றில் செல்லவேண்டிய ஆவசியமென்ன? இருந்த மத த்திலேயே குருட்டு நம்பிக்கையோ டிருக்கலாமே. குருட்டு நம்பிக் கையினுலேயே சோமசுந்தரநாயகர் துவைதமதத்திற் சென்றிருப்பா ரேல் அவர் வாதமெல்லாம் குருட்டுவாதமாகவே யிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. குருட்டுநம்பிக்கையினுல் அம்மதத்தில் அப்போது சென்றுலும் இப்போது அத்வைதிகளிடத்தில் வாதஞ்செய்யச் செய் யத் துவைத மதத்தின் ஊழல்களெல்லாம் வெளிப்பட்டிருக்கு மாத லாலிப்போதேனும் அந்தத் துவைத மதத்தைவிட்டுப் பழையபடியே அத்வைத மதத்திற் பிரவேசிக்கலாமே யென்னின், பிரவேசிப்பார்; பிரவேசித்தால் பலரும் பரிகசிப்பார்கள். அவர் சற்று மானியாத லால் அதைவிட்டு வெளிப்பட யோசிப்பார். அவர் துவைத மதத் திற்சென்று அந்த அநுஷ்டானத்தில் மாத்திர மிருந்தவரன்று. சற்றுத் தலையை நீட்டிக்கொண்டு துவைத மதந்தா னுண்மையென்றும் அத் வைத மதம் பொய்யென்றும் சொன்னதோடு அத்வைத நூல்களை யும் அத்வைதப் பெரியோர்களையும் வேத வேதாந்தங்களையும் வை திக சிரேஷ்டர்களையும் ஓயாது தூஷித்தவர். வேதம் தமக்கு வேண் டியதில்லையென்றும் சொன்னவர். இப்படிக்கெல்லாஞ் சொல்லி விட்டுப் பிறகு அதற்கு மாருகப்பேசி அத்வைதமதமே உண்மை யென்று சொல்ல எப்படித் துணிவார்? அவர் துணிந்தாலும் அவரது நாத் துணியுமா? அவரது நாத் துணிந்தாலும் எழுத அவரது கை வரு மா? ஆதலால் இந்த ஜன்மத்தை அவர் துவைதத்திற்கே தத்தஞ் செய்ய வேண்டியதேயாம். சோமசுந்தரநாயகர் துவைத மதத்தின் ஊழல்களை யறிந்திருந்தும் அவமானத்துக்குப் பயந்து அம்மதத்தை விடாமலிருந்தாலும் ஊழலில்லா அத்வைத மதத்தைத் தூஷித்துத் தமது துவிதமே சிறந்ததென்று சொல்வது நியாயமாவென்னின், மூக்கையறுத்துக் கொண்டால் கடவுளைக் காணலாமென ஆராய்ச்சி யின்றிக் குருட்டு நம்பிக்கை கொண்டு மூக்கை யறுத்துக்கொண்டு

பிறகு கடவுளைக் காணுமற்போயும் அதைச் சொன்னால் பலரும் பரிகசிப்பார்களே யென அதனுண்மையை வெளியிற் சொல்லாமல் யாவரையும் மூக்கறுத்தவன் கதையை ஷை சோமசுந்தரநாயகர் நன்றாய்ப் பன்முறையும் வாசித்திருப்பா ரானதால் வாசித்த பாடத்தை மறவாமல் ஒப்புவிக்கின்றார். அவர் ஒப்புவித்தாலும் புத்திமான்கள் அவரது கள்ளக்கருத்தை யறிந்துகொண்டு துவைத மதத்திற் பிரவேசியாம லிருக்கவேண்டும். இனிப் பிரத்தியக்ஷ லாபத்தை யுத்தேசித்துச்சென்றாரென்னின் தற்காலத்திற் கிறிஸ்துமதத்திற் பிரத்தியக்ஷ லாபத்தைக் கருதிச் செல்வதுபோலாம். அப்போது அவர் துவைதமதம் மேலென்று புகழ்வதும், அத்வைத மதம் கீழென்றிகழ்வதும் அந்தப் பிரத்தியக்ஷ லாபத்தைக் கருதியே யாம். பூர்வபக்ஷியார் உபமேயத்துக்குப் பொருத்தமாக வுபமானஞ் சொல்வதில்லையென்று சொல்வதில் இவ்வளவு ஆக்ஷேபங்களிருப்பதால், இனி அரக்கோண வீரபத்திரமூர்த்தியார் இப்படிச் சொல்லித் தோல்வித்தானத்தைப் பெறுவதினுஞ் சபாபதிநாவலர் சோமசுந்தர நாயகரைப்போல மகா மௌன விரதங் கொள்வதே கௌரவமாமென்க.

தோல்வியடைந்தவர் தூஷிப்பது சகஜமேன்பது.

இவ்வாறு சொல்லிவிட்டபிறகு சற்று மானந் தோன்றிற்றுப்போலும். அந்தமானத்தால் "சிவத்துரோகிகள் அதனைத் தேடி யெடுத்துத் தோஷங்கூற வருவாரென்னின், சிவனடியார்களாகிய சாதுக்கள் அதில் மயங்காவண்ணம் எதிரிகள் மனோரதத்தைச் சிதைத்து நிர்மூலப்படுத்துவா மென்க." என்று கூறித் தம்மானத்தைச் சற்றுக்காத்துக்கொள்ளப் பார்க்கின்றார். ஐந்து வருஷங்களாக இவரது மதத்திலுள்ள தோஷங்களையும் சுருதி யுக்தி அநுபவங்கட்குப் பொருத்தமில்லாமையையும பட்டப்பகலா யெடுத்துக்காட்டி யிருக்கவும் அவைகளுக்குப் பதில் பேசாது தலைமறைந்து முடிவுறா கூறி ஒளிந்த சங்கதி யெங்கும் பிரசித்தியா யிருக்கவும் "தூக்கி நிறுத்தடா, பிணக்காடாய் வெட்டுவேன்" எனக் கூறும் மொண்டியின் வீரவாக்கியம் போல வீண் வீரமொழி கூறுவதிற் பயனென்னை? தம்மவர்க்கு யாத்திரம் உபமேயத்திற்குப் பொருத்தமாக வுபமானங்களைச் சொல்வதாய்ச் சொன்னாரே. அப்படி யானாலுஞ் சொன்னாரா? இல்லையே. சொல்லாதவர்க்கு வீண் வீரமேன்? வீண்வார்த்தையேன்? தமது மதத்தின் நியாயத்தை விஷயங்களிற் காட்டவேண்டுமேயன்றி, வீண்மொழியிற் காட்டுவதில் ஆதாயமென்னை? இதன்பேரில் பாநுமூர்த்தியின் பல்லையுடைப்பதற்காகப் பேர் வைத்துக்கொண்ட இவ்வீரபத்திர மூர்த்திக்குக் குரூர குணமேலிட்டு, "சைவமுடிவு தெரியாத இவர் சைவத்தை மறுக்க வெழுந்தது பகடேர்தியின் பாதசேவைக்கே யிவர் பரிபாகியாயின பண்பு கொண்டென்க" என்று துடுக்காய்ப்பேசினார். அவர் பகடேர்தியின் பாதசேவைக்குச் செல்லின் அவ

ராலுண்டாகும் ஆக்ஷேபங்களும் பகடூர்தியின் பாதசேவைக்கே செல்லும். இப்படி யிவரை மறுப்பவர்களெல்லாம் பகடூர்தியின் பாதசேவைக்குச் சென்று மரித்துப்போவார்க ளானல் அவர்களு டைய ஆக்ஷேபங்களும் மரித்துப்போகும். பிறகு வேததூஷணை, வேதாந்ததூஷணை, பெரியோர்தூஷணை முதலிய தூஷணைகளெல் லாந் தலையெடுத் தோங்கி, இவரது அபத்த அவைதிகமதஞ் செழிக் கும். குருட்டு நம்பகம் கண்டிக்கப்படாமல் உலகில் ஸ்திரப்பட்டு ப்போம். இவருக்கு யமதருமராஜவேலை கொடுத்தால் அத்வைத மதம் உலகில் தலைகாட்டாதிருக்கும்படி அத்வைதிகளை யெல்லாம் அன்றே கொன்று படுசூரணப்படுத்திவிடுவார். அத்துடனே இவ்வுல கில் ஏகசக்கிராதிபதியா யிருக்கவுங் கிடைத்துவிட்டாலோ சொல்ல வேண்டுவதில்லை. அன்றே "வேதம்பசுநூல், உலகநூல், மயக்கநூல், விபசரிக்கும்நூல், பதிநூலல்ல, மோக்ஷநூலல்ல, தெளிவுநூலல்ல, சிவனையே பரத்துவமென்று கூறும்நூலல்ல, ஆதலால் அதைப்படிக் கப்படாது, அதைக் கொளுத்திவிடவேண்டும், அதைச்சார்ந்த ஸ்மிருதிபுராண இதிகாச ஆகமங்களையும் படிக்கப்படாது, அவைகளை யுங் கொளுத்திவிடவேண்டும், இன்னும் துவிதவிரோதமாக எந்தப் பாஷையிலும் எந்தநூல்களையும் வைத்திருக்கப்படாது, கொளுத்தி விடவேண்டும், அத்வைதத்தைப் பேசவும்படாது, கேட்கவும்படாது, இந்த உத்தரவுக்கு மீறி நடப்பார்களானல் கழுவி லேற்றப்படும்" எனக் கெஜட்டில் பிரசுரஞ்செய்வதோடு மகம்மதியமத வரசர்மாதிரி ஒருகையில வாளும், ஒருகையி லிவரது சிவஞானபோதவுரை, சிவ ஞானசித்தியார் முதலிய பதினன்கு துவிதசித்தாந்த புத்தகங்களுங் கொண்டு திக்குவிஜயஞ்செய்து, "ஷை புத்தகங்களை நம்பித் துவைதம தஸ்தராகின்றீர்களா, அல்லது இவ்வாளுக் கிரையாகின்றீர்களா" எனக் கேட்டு, இவர் மதஸ்தரானவர்களைவிட்டு மற்றவர்களை யெல்லாங் கொன்று துவிதக்கொடிபோட்டு ஜயமுரசடிப்பார். இப்படிச்செய்த பின்புதான் வீரபத்திரமூர்த்தியினது உக்கிரந் தணியும். அதுவரை யில் உக்கிரந் தணியாது. இவர் மனதுபோல் நடக்க இந்த இங்கிலீஷ் கவர்ன்மெண்டில் ஆகாதே. அதற்காகத்தான் நாம் வருந்துகின்றோம். ஷை எமபட்டமும் இவ்வுலக சக்கிரவர்த்தி பட்டமும் ஒருவேளை இவர்க்குக் கிடைத்தாலும் கிடைக்கும். இவர் வீரபத்திரமூர்த்தி யல்லவா? இவர் தகப்பனர் பரமசிவனல்லவா? பிள்ளை,வேண்டிய வர த்தைத் தகப்பன் கொடுக்கமாட்டாரா? "நாம் வீரபத்திரமூர்த்தியாய் விட்டமையால் நாம்கேட்ட வரத்தையெல்லாம் கொடுத்துவிடு வார், அப்போது யமன் உத்தியோகத்தையு மிவ்வுலக சக்கிரவாத்தி பட்டத்தையும் பெற்று, அத்வைதிகளையெல்லாம் வேலைதீர்த்துவிட லா" மென வெண்ணங்கொண்டிருப்பார். இல்லாவிட்டால் அதி யுக்ரமான வீரபத்திரமூர்த்திப் பேரைத் தரித்துக்கொள்ளுவாரா? வீரபத்திரமூர்த்தியென்கிற பேரைக்கேட்கிறபோதே நமக்கெல்லாம்

பயமாயிருக்கிறதே. இவர் கிஞ்சித்தும் பயப்படாமல் அப்பேரைத் தரித்துக்கொண்டாரே. "தக்ஷயாகத்து வீரபத்திரமூர்த்தி வேத விரோதமாக நடந்தவனையன்றோ அன்று சிட்சித்தது? நாம் வேத விரோதமாக அணுத்துணையும் பேசவில்லையே; பூர்வபக்ஷியாரன்றோ வேத வேதாந்தங்களையும் வேதாவிரோதமான அத்வைதத்தையுந் தூஷிக்கின்றார்? உண்மையாய் நடப்பவரை வீரபத்திரமூர்த்தி தண்டியாரே" என அசைவைதிகள் சொலலக்கூடும். அது உண்மைதான். வீரபத்திரமூர்த்திகளில் இரண்டு வீரபத்திரமூர்த்திகளுண்டு. ஒன்று பரமசிவ வீரபத்திரமூர்த்தி; ஒன்று அதற்கு விரோதமான மாயா வீரபத்திரமூர்த்தியாம். பிரதிவாதி வீரபத்திரமூர்த்தி மாயா வீரபத்திரமூர்த்தி யாகலின் இந்த வீரபத்திரமூர்த்தி வேதசாஸ்திரங்கட்கு விரோதமாகத்தான்பேசும். அந்த வீரபத்திரமூர்த்தி வேத வரம்பு கடந்தவனைத் தண்டிக்கும்; இந்த வீரபத்திரமூர்த்தியோ வேதவரம்பு கடவாதவரைத் தண்டிக்கும். இது வேதவிரோதமாயா வீரபத்திரமூர்த்தியாயிருப்பதால் வேதமொழி கடவாதுபேசும் பாநுமூர்த்தியாரைப் 'பகநேர்த்தியின் பாதசேவைக்கேயிவர் பரிபாகியாயின பண்புகொண்டென்க' என்று அடாமொழி பேசியது.

நிற்க; இவர் பேசவேண்டிய விஷயத்தை இதமாகவும் குளிர்ச்சியாகவும் அடக்கமாகவும் சாந்தமாகவும் ஆத்திரமில்லாமலும் இனிய சொல்கொண்டு பேசப்படாதா? இனிய கனி தம்மிடமிருக்க இன்னாத கனியைத்தேடித்தின்பதுபோலப் பலநன்மையைத்தாராநின்ற இனிய சொல் தம்மிடஞ் சித்தமாயிருக்கப் பல தீமையைத் தாராநின்ற இனிமையல்லாத சொல்லை வருந்தித் தேடிச் சொல்வானேன்? இவரது வாதம் நியாயத்தால் வெற்றிபெறுமேயன்றிக் கடுஞ்சொல்லாலன்றே. நாம் இது விஷயமாக எத்தனைமுறை சற்புத்தி கூறினும் பூர்வபக்ஷிகள் தமது இயற்கைக்குணத்தை விடாராயின் யாம் செய்வதென்னவிருக்கின்றது! எட்டி விருக்ஷத்துக்குத் தேனும் பாலும் வார்த்து வளர்க்கினும் அது தனது கைமைக் குணத்தை விடமாட்டாது. அதுபோலப் பூர்வபக்ஷியாருக்கு நாமேனும் பிறரேனும் எவ்வளவு நீதிமொழி யெடுத்துப் புகன்றிடினும் அவர் கவனிக்கின்றாரில்லை. இன்னும் அவர்க்கு நன்மொழியே கூறுகின்றோம். நாம் கூறுவதைக் கவனியாவிடினும் நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவரியற்றிய திருக்குறளையேனும் நன்றாய் வாசித்துப்பார்த்து, அதன்படியொழுகி அறவழியைநின்று பேசுவாராக. வீரபத்திரமூர்த்தியின் பேரை வைத்துக்கொண்டிருப்பதால் பிறரது பல்லையுகிர்த்தாலும் பகநேர்த்தியின் பாதசேவையினிமித்தம் கொன்றாலும் குற்றமில்லையென்று நினைத்து உக்கிரமமாய்ப் பேசுகின்றார் போலும். நாம் சொல்லும் சற்புத்தியைக் கவனியாமல் பின்னும் இயற்கைக் குணத்தையே காண்பித்து வைவாரானால் ஷை வைதலை ஆபரணமாகக்கொள்வேமேயன்றி அதனிமித்தம் மனஸ்தாபப்படமாட்டோம்.

அத்வைதிகளே சிவனடியார்களும் சாதுக்களுமென்பது.

பாநுமூர்த்தியின் பல்லை யுதிர்க்கும்பொருட்டு வீரபத்திரமூர்த்தி யென்னும் உக்கிரப்பேர்தாங்கிய பூர்வபக்ஷியார் 'சிவனடியார்களாகிய சாதுக்களுக்கு மாத்திரமே பயன்படு' மென்றும், 'சிவத்துரோகிகளுக் குப் பயன்படாது' என்றும்சொலலிவிட்டதினால இவர் மதஸ்தர்தவிர மற்றவர் சிவனடியாரல்ல ரென்றும், அசாதுக்களென்றும், சிவத் துரோகிகளென்றும் ஏற்படுகின்றனர். மற்றவரில அத்வைதிகளும் ஒருவராயிருப்பதால் அவரும் சிவனடியாரல்லரும் அசாதுக்களும் சிவத்துரோகிகளுமாம். இது மிகுவிந்தை! இவரும் இவர் பக்கத்தி னரும் சிவனடியார் முதலியவரான பிறரன்றி பிறரை அங்ஙனமல் லாதவரென்று சொல்லவேண்டும்? இனிச் சிவனடியார் முதலியவர் இவர் மதத்தினரா? அத்வைதிகளா? என்றதை வேதமுதலிய நூல் களைக்கொண்டும் யுக்தி அநுபவங்களைக்கொண்டும் பார்ப்போம். நாமா வது அவராவது பேசவேண்டுவது நூலாதாரங்கொண்டேயாம். நமது குயுத்தியைக்கொண் டன்று. அதுபற்றியே நாம் எந்த விஷயம் பேசி னாலும் நூற்பிரமாணங்களைக் கொண்டே பேசுகின்றோம். அதிலும் பொதுநூல்களைப் பிரமாணமாகக்கொண்டு அதாவது சுருதி முதலிய பதினான்கு வித்தைகளைக்கொண்டு பேசுகின்றோம். அத்துடனே எமக்குரியதாயினும் பிரதிவாதிகள் தங்கட்கு முக்கிய பிரமாணமாகக் கொண்ட நூல்களைக் கொண்டும் பேசுகின்றோம. அவ்வளவேயன்றிப் பொது நூல்களல்லாதவையும் எமக்குமாத்திரம் பிரமாணமாயுள்ள வையுமான நூல்களை நாம் என்றும் பிரமாணமாக எடுத்துக் காட்டு வதேயில்லை. பிரதிவாதிகளோ. வேதமுதலிய பொது நூல்களையும் அவர்களும் நாமும் பிரமாணமாகக்கொண்ட நூல்களையும் எடுக்கின் றார்களில்லை. பின்னைத் தங்களவர்கள் இயற்றிய நூல்களையே பிர மாணமாக எடுத்துக்காண்பிக்கிறார்கள். அது தப்பெனப் பலமுறை நாம் எடுத்துக் காண்பித்திருக்கின்றோம். அப்படிக் காண்பிப்பதற்குக் காரணம் தமது சித்தாந்தத்திற்கு வேதமுதலிய நூல்களிலும் எம்மா லும் அவர்களாலும் கொள்ளபபட்ட நூல்களிலும் பிரமாணமில்லா மையேயாம். திருட்டாந்தமாகச் சைவசமயியும் வைணவசமயியும் சிவன் பரத்துவமா? விஷ்ணு பரத்துவமா? என்று வாதஞ்செய்யின் இரு பகுதியாரும் ஒப்புக்கொள்ளப்பட்ட வேதமுதலிய பதினான்கு வித்தைகட்குங் கட்டுப்பட்டு, அவைகளைப் பிரமாணமாகக் காட்டி வாதஞ்செய்யவேண்டுமேயன்றி, தேவார திருவாசகங்களைச் சைவ ரும், திருவாய்மொழியை வைணவரும் பிரமாணமாகக்காட்டி வாதஞ் செய்யலாமோ? தேவார திருவாசகங்களை வைணவரும், திருவாய் மொழியைச் சைவரும் பிரமாணமாக அங்கீகரிப்பார்களா? அங்கீ கரிக்கவேண்டுமென்பது நியாயந்தானா? இந்த நியமத்தை யனுசரித்தே பூர்விக மதாசாரியர்களான சங்கராசாரியார் நீலகண்டாசாரியார் இராமாநுஜாசாரியார் மாத்துவாசாரியார் முதலிய வுரையாசிரியர்கள்

வாதஞ்செய்தார்கள். அவ்வாறு இந்தப் பூர்வபக்ஷிகள் வாதஞ்செய்கின்றனர்களில்லை. தங்களுக்குமாத்திரஞ் சொந்தமான நூல்களையே பெரும் பிரமாணமாகக்கொண்டு வாதிக்க வருகின்றார்கள். அதை விட்டால் அவர்களுக்கு வேறுவழியுமில்லை. அதாவது தங்கள் கட்சிக்கு வேதாதாரமாவது பதினான்கு வித்தைக்குட்பட்ட வேறு எந்த நூலாதாரமாவ தில்லை. அப்படியெடுத்துக் காண்பிப்பது பலவீனமென்றும் அவர்களுக்குத் தெரிவ தில்லை. அத்துடனே எம் சைவப் பெரியோர் சொன்னார்கள் என்றும் வெட்கமில்லாமல் சொல்லுகிறார்கள். நாம் அப்படிப்பட்ட பிரமாணங்களை யெடுத்துக்காண்பிப்பதேயில்லை. சிலசமயம் பதினான்கு வித்தைகளிலுள்ள பிரமாணங்களை யெடுத்துக்காட்டிவிட்டுப் பின்னர் அவைகளுக்கு விரோதமில்லாத படி அத்வைதிகள் சொல்லியிருக்கிறார்களென்று காட்டுவதுண்டு. அன்றி அத்வைதிகள் சொல்லாதவற்றைச் சொல்லுகிறதாய்ச்சொன்னால் அப்போதும் எடுத்துக் காண்பிப்போம். அப்படிக் காண்பிக்கிற போதும் எம்பெரியோர் சொன்னார், அவர் அப்படிப்பட்டவர், இப்படிப்பட்டவர், மானத்தை வில்லாக வளைப்பவர், மண்ணைக்கயிறாகத் திரிப்பவரெனப்பிரதிவாதிகளிடத்தில் பிரதிவாதிகளைப்போல் வெட்கமின்றிச் சொல்வதில்லை. இனிச் செய்யும் வாதத்திலும் மேற்காட்டிய வொழுங்குக்கு மாறாகப் பேசமாட்டோம்.

வேதமுதலிய கலைகளில் முதன்மையாகச் சிறப்பித்துச் சொல்லப்படுவது எவரையெனப் பார்க்குமிடத்து அத்வைதிகளையே. ஷை கலைகளில் முடிவாகச் சொல்லப்படும் விஷயமும் யாதெனின் அத்வைதமேயாமென்பதற்கு இதுவரையில் நடந்த வாதமும், மேற்கோளாகக்காட்டிய வேதமுதலிய சிறந்த பிரமாணமும் சாக்ஷிபகரும். அப்படிப்பட்ட அத்வைதத்திற்குச் சாதனமாக ஷை வேதமுதலிய நூல்களில் விதிக்கப்பட்டவை நித்திய நைமித்திய கருமங்கள் செய்தல், யக்கிய யாகங்கள் செய்தல், விபூதிருத்திராக்ஷந் தரித்தல், சிவ பூசை செய்தல், சிவத்தலத்தில் வசித்தல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவபுராணங் கேட்டல், சிவபணி யியற்றல், சிவனடியாரைப் பேணல், சிவநாமசங்கீர்த்தனஞ் செய்யல், காயத்திரி பிரணவம் பஞ்சாக்ஷரமுதலிய ஜபஞ்செய்தல, இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதிகளான எண்வகை யோகஞ் செல்தல், வைராக்கியவுபரதிகளை அநுசரித்தல், வேதசாஸ்திரப் பிரமாணங்கட்குக் கட்டுப்பட்டுப் பேசுதல, ஆஸ்திக புத்தி, அன்பு, இனியவைகூறவ், பொறுமை, அடக்கம், டம்பமின்மை, பொறாமையின்மை, புறங்கூறாமை, உபகாரம், அருள், கொல்லாமை, இன்னாசெய்யாமை, வெகுளாமை, சத்தியமுதலிய சிறந்த சற்குணங்களைப் பெறுதல், நித்தியாநித்யவஸ்து விவேகம் இகமுத்திரார்த்த பல போகவிராகம் சமம் தமம் திதிக்ஷை உபரதி சிரத்தை சமாதிகளான சட்குணம் முமூட்சுத்துவம் இவைகளைப் பெற்று, பிரமஞா

ஞானுபூதியினைச் சகஜமாய்ப்பெற்ற சற்குரு சந்நிதானத்தில் சிரவண மனன நிதித்தியாசன சமாதி சாட்சாத்கார மெய்ந்நிலை பெறுதல் முதலியவைகளாம். விஷ்ணு விநாயகர் சுப்பிரமணியர் முதலிய தேவதா பத்தி முதலியவைகளுஞ் சாதனமாம். இப்படிப்பட்ட சாதனங்களை வேதோக்தமாகவாவது வேதத்திற்கு விரோதமில்லாதபடி ஆகமோக்தமாகவாவது செய்யலாம். சூதசங்கிதை வேதாவிரோதமுரைத்த அத்தியாயத்தில் எ - வது செய்யுளில்

''துவிதமறையளவையிச்சியாதுதொகுகாட்சிமுதலளவைகட்குத்
தவிர்தலில்கோசரமாய்முக்கியபயனிலாததாய்த்தங்கலாலே
யவிர்மறைமுக்கியவளவையன்று துவிதத்திற்காயினும்அவ்வேதம்
துவிதத்தையனுவாதமுன்செய்துஅத்துவிதமேசொல்லுமீற்றில்''

என்று வேதத்தின் சித்தாந்தமான அத்வைதத்தைச்சொல்லி, அ-வது செய்யுளில்

''மிருதிபுராணஞ்சைவாகமந்தருக்கம்பாரதம்முன்விளம்புநூல்கள்
கருதுறும்அத்துவிதபரமேயுரைக்கும்சிலசுருதிகடியஞ்ஞானப்
பெருநிவர்த்திமூலமாகவும்பேசுசிலசுருதிபிறங்காநிற்கும்
ஒருவில்விதிமூலமாகவும்அத்துவிதப்பொருளையுரைக்குமாலோ''

என்றும், பிரமகீதை கேனோப நிடதார்த்தத்தில் ௯ - வது செய்யுளில்

''ஐயன்சைவாகமங்கட்குமரியாகமத்துக்குமெனது
பொய்யின்றியஆகமத்துக்கும்புத்தாகமங்கட்கும்அருகன்
செய்யுமாகமத்துக்குஞ்சித்தரியக்கர்கந்தருவர்
உய்யும்பரிசுமற்றுள்ளோருரைத்தஆகமங்கட்கும்''

என்றும், ௯௧-வது செய்யுளில்

''உவமையில் பரமாத்துவிதமாம்''

என்றும்

சொல்லியிருப்பதால் ஆகமங்களின்படியும் அநுஷ்டிக்கலாம். இவ்வித சாதனங்களில் பலவாவது சிலவாவது அவரவரது சரீர பலத்திற்கும் வாக்கு பலத்திற்கும் புத்திபலத்திற்குந் தக்கபடி செய்யலாம். எது ஏறினும் எது குறைந்தாலும் சிரவண மனனுதிகள் மாத்திரம் செய்யாமலாகாது. அதனாலேயே பிரமஞான முண்டாகவேண்டுவது. பிரமஞானமின்றி முத்தி பெறுவதில்லை. மற்றக் கைலாயாதி பதவிகள் பதவிமுத்தியேயன்றிப் பரமுத்தியன்று. கைலாயாதி பதவிகளையடைந்தவர்களும் முடிவில் கூடஸ்த பிரம ஐக்கியத்தைப் பெற்றே பரமுத்தியைப் பெறவேண்டும். இது எல்லாச் சாஸ்திரங்களின் துணிபாம். எல்லாச்சாதனங்களையும் செய்து முடிவில் சிவஞானம் அல்லது பிரமஞானம் அல்லது ஆன்மஞானத்தைப் பெற்ற அத்

வைதிகளைச் சிவனடியா ரல்லரென்றும் அசாதுக்களென்றுஞ் சிவத் துரோகிகளென்றுஞ் சொல்வதற்கு என்ன ஆதாரம்? சாஸ்திர வரம்பு மீறினதும், சாஸ்திர சம்மதமற்றதும், சாஸ்திரத்திஞல் கண்டிக்கப்பட்டதுமான பொய்த் துவிதமதத்தைக் கைக்கொண்ட குற்றம் அபாரமாய் இவர் மதஸ்தரிடத்தி லிருக்க, அதைக் கவனியாமல் சாஸ்திரத்துக்கொத்து மேற்காட்டிய சாதனங்களை யெல்லாம் பெற்று ஷை சாதனபலத்தால் அத்வைதாநுபவம் அடைந்து சிவசொரூபமாக விளங்கும் சிவஞானச் செல்வர்களைச் சிவனடியா ரல்லரென்றும் அசாதுக்களென்றும் சிவத்துரோகிகளென்றுஞ் சொல்வது நன்ருமா? சிவபத்தி முதலிய சாதனங்களெல்லாம் அத்வைதாநுபவம் பெறும்பொருட்டே விதிக்கப்பட்டனவென வேதமுதலிய கலைகள் கூறுகின்றமையால் ஷை சாதனங்களெல்லாம் அத்வைதிகளுக்கே யுரியன; மற்றவர்க் குரியனவன்ரும். மற்றவரில் இத்துவித சைவரு மொருவகுப்பின ராகலின் இவர்க்கும் ஷை சிவபத்தி முதலிய சாதனங்க ளின்ரும். சாதனங்களை யியற்றுகின்ருர்களே யென்னின் எந்தச் சாத்தியத்துக்காக இயற்றுகின்ருர்கள்? இவர்கள் பக்ஷம் துவிதமாகலின் துவிதஞானத்திற்கே ஷை சாதனங்கள் இயற்றுகின்றதாகச் சொல்லவேண்டும். துவிதஞானம் வேதசாஸ்திர சம்மதமும் யுத்தி அநுபவ சம்மதமும் அல்லவென்பதற்கு வேண்டிய நியாயமும் பிரமாணங்களும் நாமும் மற்றவருங் காட்டியிருக்கின்ருேமாகலின் ஷை சாதனங்கள்யாவும் அத்வைத சித்தாந்தத்திற்கே யுரியன வென்பதற் கியாது மையமின்றென்க. மாயாவாத துவித சைவசித்தாந்திகளும் மேலே சொல்லிய சாதனங்களைச் செய்கின்ருர்களே, அது வரையிலுள்ள பலனையேனும் அடையமாட்டார்களா என்னின் அடையமாட்டார்களென்பது திண்ணம். அவர்கள் சதா வேதநிந்தை சாஸ்திரநிந்தை வேதசம்பந்தமான கருமநிந்தை வேதாந்தநிந்தை அத்வைத நிந்தை பெரியோர் நிந்தை முதலிய பலநிந்தைகள் செய்து அதிபாதகத்தைத் தேடிக்கொள்ளுகின்ருர்களானதால், அவர்களது சாதனம் சாதனம்போல் மேலுக்குத் தோன்றினும் உண்மையில் அது சாதனமாகவேமாட்டாது; பின்னைப் பாதகமேயாம்.

இனிச் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசாகம சாஸ்திரங்கட்கு அத்துவிதமே சித்தாந்தமென்றும், அப்படிப்பட்ட அத்வைத சித்தாந்தத்துக்கே மேற்கூறியவைகள் சாதனங்களென்றும் ஷை சுருதியாதிகளைக் கொண்டே நிரூபிக்கின்ருேம்.

அதர்வணவேதம் நாரதபரிவிராஜகோபநிஷத் ஏழாவது உபதேசம்.

துரியாதீதனுக்குப் பஸ்ம (விபூதி) ஸ்நானம்...... பகூதகனுக்குத் திரிபுண்டரம், ஹம்ஸனுக்கு ஊர்த்துவ புண்டரமும் திரிபுண்டரமும். பரம ஹம்ஸனுக்குப் பஸ்மதூளனம்.

சுக்கிலயசுர்வேதம் பைங்களோபநிஷத் ச-வது அத்தியாயம்.

அநேகமானகருமம், சௌசம், ஜபம், யக்ஞம், அப்படியே தீர்த்தயாத்திரை இவைகளைத் தத்துவத்தை யறிகிறவரையி லனுஷ்டிக்கவேண்டியது.

யசுர்வேதம் வராகோபநிஷத் ரு-வது அத்தியாயத்தில் அத்வைதஞான சாதனத்துக்காக அஷ்டாங்கயோகஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நியமத்தில் ஆஸ்திக்கியமும் ஈசுவரபூசையும் தியானத்தில் ஈசுவரதியானமும் சொல்லப்பட்டன.

ஈசுரகீதை பத்திமை அத்தியாயம்.

சந்ததம் வேதமியாவையும் பரமாச்சாற்றவும் படுவதிங்கெனையே
அந்தணரெல்லாம் வேள்வியினாலும் அங்கியிற்போற்றுவதெனையே
எந்தலோகத்தும் பிதாமகன் முதலாமியாவருமிறைஞ்சுவதெனையே
சிந்தையையொருக்கியோகிகளுளத்தேதியானமுற்றிருப்பதுமெனையேச

ஏகனாகின்றயானே யெல்லா இமையவர்க்குந்
தேகம்பண்ணியவற்றுள்ளே திதனாய் நிற்றலாய்ச்செய்யும்
யாகமெல்லாம் எனைக்குறித்தே யியற்றுகின்றாரவற்றிலவிர்ப்
பாகங்கொள்வேனனவற்றின் பயனுங்கொடுக்கப்படுவேனன். (ரு)

ஷை யோக அத்தியாயம்.

கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர் கற்றவர்களாகாயத், தருக்கனிற்புனலிற் காண்பார் ஆகுதியில் அருச்சனைசெய்யும் அந்தணர்அவ், எரிக்கணேகாண்பர் எங்குமாய் நின்ற எனது லிங்கத்தினைநேரே, ஒருக்கிய பரம யோகிகள் என்றும் ஒழிவறக்காண்பர் தம்முளத்தே. (சுச)

மஹா இதிகாசமாகிய சிவரகசியம் ஆறம் அம்சத்திலுள்ள ரிபுகீதை
ருச-ம் அத்தியாயம்.

பரமான அன்புடனே பரமசிவத்தைப்பாங்காக ஆராதித்து அருள்பெற்றோர்க்கே, உரமான அகம்பிரம நிச்சயந்தான் ஊனமற உள்ளத்திலுதியாநிற்கும், திரமான அகம்பிரமநிச்சயத்தைத்தியக்கமறச்செறிந்தவரே முத்தராவார், வரமானபரமசிவப்பதந்தன்னை வகுத்ததிலோராயமிலைவாய்மைதானே.

ஷை ஷை ஷை ரு-வது அத்தியாயம். (ருஎ)

பரிவுடனேயுபநிடதபாடத்தாலும் பரமசிவ பத்தர்க்கேதானத்தாலும், புரையறவே திவ்யமாமிலிங்கத்தின்கண் பூரணமாம் பரமசிவ பூசையாலும், பரவுசிவதலங்களிலே வாசத்தாலும் பலவிதமா மற்றுமுறு நியமத்தாலும், பிரமமதாம் பரமசிவனருளுண்டாகிப் பின்னமிலாவகண்டான்ம போதமுண்டாம். (உரு)

ஷை ஷை ஷை ருரு-ம் அத்தியாயம்.

பெருவில் சிவபூசனையே முதலாம் பத்திபுரிந்ததனால் சிவகருணைபொருந்தினோர்க்கே, சருவமுமே பிரமமென்றும் அதுநானென்றும் சாறறிய இவ்வகண்டபரஞானந்தோன்றி, மருவமிக அரிதானமுத்திப்பேறும் மற்றவருக்கில்லையெனவே முன்பு கந்தன், அரியசிவபத்திமிகுஞ்சைகீசவ்யற்கு, அருளியவாறுஅகிலர்க்கும் அறைந்தான் சூதன். (ருஎ)

ஷை ஷை ஷை சரு-ம் அத்தியாயம்.

அன்றியுமேவிதியுடனே நியமமாக அமலமதாம் விபூதியினால் அங்கமெல்லாம், நன்றுறவேயணிந்து திரிபுண்டரத்தை நலமாகச் சந்ததமுந் தரிப்போ

ருக்கே, துன்றிய நற்பரமசிவகருணையுண்டாம் தோன்றிய அக்கருணையினுல் சித்தர்ஞய்தாய், என்றும் ஒரு விக்கினமுமின்றி நன்ருய் இருமையிலா அகம் பிரம ஞானந்தோன்றும். (மஉ)

பத்தியுடன் விபூதியுடைத்தாரணந்தான் பாசுபத விரதமெனப்பகர லாகும்,சத்தியமாய்விபூதியுடைத்தாரணத்தால்சடிதியினில்அகண்டபரஞான முண்டாம், உத்தம இப்பாசுபதவிரதந்தன்னை ஒருவருடம்அனுட்டித்துன் பாதம்பெற்றேன், அத்தன் நினதருளால் இன்று அகண்டஞானம் அடைந் தவனுய் ஆன்மாவில் அமர்ந்து நின்றேன். (மங)

ஷ ஷ ஷ சச-ம் அத்தியாயம்.

உலகிடையந்தணரேயாதியாக வுற்பத்தி பொருந்தியிடுஞ்சீவரெல்லாம், இலகுமறைவிதித்தபடி முன்புகன்மம் இகழாது செயவேண்டுஞ் செய்யுங்கா லத்,திலகமதாமறை முடிவில் விதிக்கப்பட்ட திவ்வியமாம்விபூதியினை நியம மோடு,சலனமறச் சந்ததமுந் தரிக்கவேண்டும் சற்றுமிதில் அநாதரவே செய்ய வொண்ணு. (௬௫)

பூதியினுல்அங்கமெலாம்நன்ருய்ப்பூசிப்பொருவில்திரிபுண்டரமும்அணிந் துகொண்டு, மாதவனே நியமமுடன் உருதிராக்க மாலைகளுஞ் சிரமுதலில் தரித்துக்கொண்டு இங்கு, ஓதியிடும் உருத்திரபஞ்சாக்ஷராதி யுத்தமமாம் மந் திரமுஞ் செபித்துக்கொண்டு, நீதியுடனிகழு மகாலிங்கத்தின்கண் நித்திய மாய் அர்ச்சனையுஞ்செய்யவேண்டும். (௬௬)

அத்தனுடைப் பூசனைபோல் அன்பர்பூசைஅநுதினமும்ஆதரவாயியற்ற வேண்டும், உத்தமமாய் ஓதிய ஓர் சிவதலத்தில் உடலுள்ளபரியந்தம் வசிக்க வேண்டும், சுத்தமதாஞ் சிவநாம கீர்த்தனத்தைச் சோர்வறவே சந்ததமுஞ் செய்யவேண்டும், மெத்தவுமே யுத்தமமாஞ் சாம்பமூர்த்தி மேனியுடைப்பா வனையும் பண்ணவேண்டும். (௬௭)

பூதியினுலணிந்ததிரிபுண்டராதி பொருந்தினரே வேதாந்த விசாரந்தன் னில்,ஏதமிலா அதிகார மிசைந்தோராவர் இதரரெலாம் அதிகாரியாகமாட் டார்,வேதமுடிவிவ்விதமே விதிப்பதாலே வேதவிதிக்கயலான விதியொன்று ண்டோ, ஆதலினுலறைந்த அதிகாரம் பெற்றே யகண்டபர விசாரணை யைச் செய்யவேண்டும். (சக)

சூதசங்கிதை சூதகீதை சர்வவேதாந்த சங்கிரகம்.

வேத வேதாங்கமாதி விரும்பத்தியயனஞ்செய்தல், போத மற்றவை செய்வி த்தல் பொலிந்த வேதார்த்தபத்தி, மேதகுமறைவிரோதமேவுநூலுபேட்சை சாந்தி, காதலார் தாந்தி மற்றுஞானுங்கமென்பகற்ருேர். (௬)

சிவமலிஞானங்கங்களெவற்றினுந் தேவர்போற்றும்
சிவலிங்க பூசையாற்றல் சிவலிங்கப்பதிட்டை செய்தல்
சிவனமர்தலங்கடோறுஞ்சென்று சென்றன்பில் போற்றல்
சிவனடியார்கள்பூசைசிறப்புறநாளுஞ்செய்தல். (எ)

புண்ணிய நீறுருத்திராக்கம் பொற்புறத்தரித்தல்
கண்ணியஞான ஆசான் கழலிணைசேவைசெய்தல்
நண்ணிய ஐந்தெழுத்து முதலாநன்மனுச் செபித்தல்
எண்ணிய இவை நன்கென்பார் இருவினையொருவினேரே. (அ)

ஷ கடவல்லியோடு சுவேதாசுவதரம்.

தானமகமுதலான புண்ணியத்தாலியோகசித்திதழையவுண்டாம்
ஆனஅதனுல் ஞானமுண்டாகும் முத்தியதனுலுண்டாகும்

ஈனமிலிப்பிரமவித்தை விபூதியக்கமணி புனையின் சார்சருக்கும்
தூநலமார் அத்தியாச்சிரமிகட்கும் பேரன்பிற் சொல்லவேண்டும். (உஉ)

ஷ டி பிரமன் தில்லையினேற்று ஞானம்பெற்றது.

சாற்றிடும் யாவருந்தருஞானத்தால்
ஏற்றமார்முத்தியை யெய்துவார் நனி
ஆற்றிடுகருமங்களனைத்து ஞானங்கொள்
போற்றிடு சாதனமாய்ப் பொருந்துமே. (அரு)

பிரமகீதை சாந்தோக்கிய உபநிஷத்.

ஓடினர்சிலவர் ஓக்கநின்றவர்கள் ஒருவரோடொருவர் தழுவினர்
கூடியொண்புடவை மேலெறிந்து சிலர்கொண்டு கொண்டுவிளையாடினர்
ஓடிவந்து பிரியத்தினேடொருவரொருவர் உச்சியை முகர்ந்தனர்
ஆடினர்கள் சிலர் அன்பினலறிவதொன்றிலாதபடியாகவே. (க0அ)

இவ்வாறு பலசெய்யுள்களில் தேவர்கள் பிரமதேவனல் அத்வைதஞான முபதேசிக்கப்பெற்று அப்போது அங்குவந்த பரமசிவனைத் தரிசித்து ஆனந்த சாகரத்தில் மூழ்கி ஆர்ப்பரித்த விஷயஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஷ டி பிரகதாரணிய உபநிஷத்.

சத்தியத்தால் மிகுஞ்சாந்திதாந்தியால்
எத்தொழிலும் மிசைவற்றிருத்தலால்
பத்தியாலிறைவனைப் பண்ணும் பூசையால்
சுத்தவேதாந்த மெய்த்துணிவு தோன்றுமால். (உ0)

திருவிளையாடற் புராணம் வேதத்திற்குப் பொருளுரைத்தது.

அருமறைநால்வேறு ஆகையால் வருணம் ஆச்சிரமங்களும் நான்காம், தருமம் யாசாதிகருமமும் மறையின் றகைமையிற்றோன்றின மறையும், கருமநூல் ஞானநூலென விரண்டாங் கரும நூலிவனருச்சனைக்கு, வரும் வினையுணர்த்து ஞானநூலிவன்றன் வடிவிலாவடிவினையுணர்த்தும். (கூசு)

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்

திருக்கழுமலம் திருத்தாளச்சத்தி பண் வியாழக்குறிஞ்சி.

பத்திப்போர்வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்
பாலேபோகாமேகாவாய்ப் பகையறுவகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்குணங்கள் வாய்
மூடாவூடா நாலந்தக்கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கேயுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதானகச் செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங்கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே. (எ)

இலிங்கபுராணம் தியானவிதி.

அருத்தியின் ஞானமின்றி முத்தி வீடடைதல் கூடா
விரிப்பரு ஞானந்தானுந் தியானத்தாலன்றி மேவாது
உரைத்திடுதியானந்தானும் ஓங்கியஞானம் வல்ல
குருத்தனியருளினல்லாற் கூடுதலரியதாமால். (உஉ)

வாயுசங்கிதை இருடிகள் பிரமலோகமடைந்தது.

அருளுநான்மறைகளுரைத்திடு தருமமாசையின்றுயறிந்தியற்றில், தெரியுமற்றதனுற் பாவபுண்ணியங்கள் ஒத்திடும் ஒத்திடிற்சிறந்த, பொருவறு சிவமாயோகம் வந்தெய்தும் எய்திடில் புகலுதற்கரிதாய், மருவொணுதாகி யுயர்வறவுயர்ந்த மாசிலா முத்தி யெய்திடுமோல். (சக)

ஷை வாயுபகவான் அடைந்தது.

யாங்கள்முற்காலேஞானமொன்றின்றியன்னவாகனன்றனையெய்தித்
திங்கறஞானமுதவெனவுரைப்பத்திங்கள்வேணியனடிமுன்னி
ஓங்கிருவேள்விபுரிமின்அக்காலையுலவைவேந்துஉம்முழையடைந்து
பாங்கினில்ஞானமுமதுளங்கொள்ளப்பாற்படப்பகர்வன்என்றுரைத்தான் (உ)

சூதசங்கிதை சமாதிவிதி.

நடந்தாலும்இருந்தாலும்நவின்றாலும்துயில்கொண்டு
கிடந்தாலும்விழித்தாலுமகிளர்முடிமன்னவர்முதலோர்
தொடர்ந்தாலுமதொழுதாலும்துதித்தாலும்அவமதித்துக்
கடந்தாலும்மெய்ஞ்ஞானிகமலவிலைப்புனல்போல்வான். (உரு)

இனையஞானிதனைப்பரனென்றெண்ணுதேவனவமதித்தான்
அனையபாவிநெடுங்காலம்அள்ளலனைத்தும்அழுந்திடுவான்
வனையுஞானியெவன்மனைச்செல்வான்அச்செல்கைமாத்திரத்தான்
நினையும்போகம்பற்பலவுந்நிரம்பவுறும்அம்மனையாளி. (உசு)

இன்னும்அவன்றன்பிதிரர்க்குழுவேற்றமாகிமுத்தியிடை
மன்னும்ஞானிஅருட்பார்வைவயங்கஎவன்மேற்படினும்அவன்
துன்னுபாவமெலாமொழிந்தோன் தூயஞானிதானுதித்த
மின்னுகுலமும்புனிதமுறும்மேவுவாள்அன்னையுமுத்தி. (உஎ)

செய்யஞானிதரிசனமேதேவதேவன்றரிசனமாம்
ஐய அவன்றங்கிடுபூமியடைந்தசிவபுண்ணியபூமி
தெய்ய அவனைவணங்கிடுதல்சிவபிரானைவணங்கிடுதல்
பொய்யில்அவனுக்குஇயற்றுபணிபூதநாதற்கியற்றுபணி. (உஅ)

மருவுகுதலைமழவுமணிவள்ளத்தருமையறியாது
பெருகஇகழும்அதுபோலப்பித்தின்முழுகும்பேருலகம்
பொருவில்ஞானியருமைதனைப்போற்றுதிகழ்ந்துபுகரடையும்
கருவன்மலத்தையிருங்கயிலைக்கடவுளருளாலறுத்துள்ளீர். (உகூ)

பிரமகீதை கேனோபநிஷத்.

பரமாத்துவிதஞானியேபரதேவதைதான்அவனேயித்
திரமாமுத்தியான்இங்குச்செப்பும்பொருள்செய்வினையாலும்
உரமாந்ததீசிகௌதமனுல்உண்டாம்சாபவுரையாலும்
கரமாமநுடர்நெஞ்சதனில்காதல்செய்யாதொருகாலும் (ருசு)

ஆரணத்தன்னியமில்லாச் சிவன்றன்பாலும் அத்துவிதவேதனத்தும் அடைதற்குள்ள, காரணமாஞ் சிவலிங்கார்ச்சனத்தும் சாலக் காய்வதுவுமேயன்றி யுருத்திராக்க, தாரணத்துந் திரிபுண்டர தாரணத்தும் சர்வாங்கோத்தூளனத்துந் தானேகாய்வர், சீரிணக்கும்சிவனென்னு முரையுர்தங்கள் செவியாலுங் கேளார் செய்வினையாற்றீயோர். (ருஎ)

தொல்லைநல்வினையால்சுருதிஙன்மிருதி சொன்னவா துணிந்தஅத் தூயோர்
ஒல்லையில்பரமாத்துவிதவேதனத்தை யுள்ளவாறுணரவேயுணர்வர்
நல்லஇப்பரமாத்துவிதஞானியை நாராயணன்நான்உருத்திரனும்
எல்லையில்லாத்தேவரும்பூசித்து ஏத்தவும்படும்இவனென்றும். (௫௮)

ஈசனும்ஞானியிருந்துளவிடத்தே யிருப்பதுமுத்திதானந்தத்
தேசிகனேவல்செய்பவன்கால்என்சென்னியிலிருப்பதுமன்னி
மாசிலாப்பரமஞானியாமுனிக்கு மகேசனுமொப்பலன்மதிக்கில்
ஆசிலாஅரியுமொப்பலன்நானுமொப்பலன்எவரொப்பாரோ. (௫௯)

சூதசங்கிதை மேசகப்பிரதனதியல்பு.

அனையநன்ஞானியே யரியதேசிகன்
அனையவன்உறையிடம் அவிர்நம்மாலயம்
அனையவன்பெரும்புகழ் அலகில்நம்புகழ்
அனையனையடுத்தவர் நமையடுத்தவர். (௨௧)

இன்னுஞ் சூதசங்கிதை முதலிய பல மகாபுராணங்களிலும் முடிவாக அத்வைத சித்தாந்தஞ்சொல்லி, த்வைத சித்தாந்தத்தை மறுத்து, ஷை அத்வைத சாதனமாகச் சிவபூசை, சத்திபூசை, அடியார் பூசை, சிவாலயதரிசனம், வருணாசிரமதருமம், தீர்த்தமான்மியம், பிராயச்சித்தம், தானம், எண்வகையோகம், ஞானிபணிவிடை, கருமயாகம், பிரணவம் காயத்திரி பஞ்சாக்ஷரம் முதலிய வாசகயாகம், மானசயாகம், ஞானயாகம், சிவப்பிரசாதம், சிவபத்தி, சிவத்தலத்தில் வசித்தல், பஸ்மருத்திராக்ஷதாரணம், சிவநாமகீர்த்தனம், சாதன சதுஷ்டயம், சிரவண மனன நிதித்தியாசன சமாதி சாக்ஷாத்கார முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் அவ்வவ் நூல்களில் காணலாம்.

இப்படிப்பட்ட பிரமாணங்களினாலேயெல்லாம் அத்வைத ஞானிகளுக்குச் சிவபூசையாதிகள் சாதனமாகவும் சாத்தியமாகவுங் கூறப்பட்டிருக்கின்றன வென்றும், அப்படிப்பட்ட அத்வைத ஞானியின் தரிசனத்தால் பாவங்கள் போமென்றும், அவனது தரிசனம் சிவதரிசனமென்றும், அவன் தங்கிய பூமி சிவபூமியென்றும், அவனை வணங்குதல் சிவனை வணங்குதலென்றும், அவனது பணி சிவபணியென்றும், அவனை யிகழ்ந்தபாவிகள் நரகடைவார்களென்றும், அவன் பரதேவதையென்றும், அவனைநாரணன்சிவன் பிரமனாகிய இவர்களும் எல்லையில்லாத் தேவர்களும் பூசித்து ஏத்துவார்களென்றும், அவனிருக்குமிடத்திலிருப்பது முத்தியென்றும், அவனுக்குச் சிவனும நாரணனும் பிரமனும் சமானமாகார்களென்றும், அவனுக்கு உடல் பொருள் ஆவியைக்கொடுப்பவர்கள்ஞானத்தைப்பெற்றுப்பிறவியறுப்பார்களென்றும் அப்படிப்பட்ட பரமாத்துவிதத்தைத் ததீசி கௌதமர் சாபத்தைப் பெற்றவர் மனம் காதல்செய்யாதென்றும் ஏற்படுகின்றமையால் அப்படிப்பட்ட பரமாத்வைத மகாத்துமாக்களைச் சிவனடியாரல்லரென்றும் அசாதுக்களென்றும் சிவத்துரோகிகளென்றும்

சொல்வது என்னபாதகப்பயனோ? இங்ஙனமாய அதிபாதகத்தொழிலை மேற்கொண்ட சிவத்துரோக அசாதுவுடன் பேசுவ தடாதாயினும் அவரது அசாஸ்திர அயோக்கியவார்த்தைகளை உத்தமரெவருங்கண்டு மயங்கிக் கெட்டுப்போகாவண்ணம் அதனுண்மையைச்சாஸ்திரப் பிரமாணங்களோடுஎடுத்துக்கூறவேண்டுவது எமது கடமையாயிற்றென்க. வேதம் முதலிய சாஸ்திரங்களில் முடிவாக அத்வைதமே சொல்லுகின்றதென்பதற்கும் துவைதத்தைத் தூஷ்ஞ் செய்கின்றதென்பதற்கும் அத்வைதஞானத்திற்குச் சிவபத்தி முதலியன சாதனமாம் என்பதற்கும் பிரமாணங்கள் இப்போது அனேகமாய்க்காட்டியிருக்கின்றமையாலும் சாத்தியமான அத்வைதஞானமும் அதற்குச் சாதனமான சிவபத்தி முதலியனவும் வேதாந்திகளுக்கே யுரியனவாமென்பதாம். நூறு ரூ ஆஸ்தியுள்ளவனிடத்தில் ஐம்பது ரூ இல்லையென்று எங்ஙனஞ்சொல்லப்படாதோ, அப்படியே வித்து, வரன், வரியான், வரிட்டனெனச் சொல்லப்படும் சதாநிஷ்டர்களாயிருக்கும் அத்வைத சகஜ ஞானிகளிடத்தில் பத்தியாதிக ளில்லையென்று சொல்லப்படாது. அத்தகைய மகான்களிற் சிலர் பாலரைப்போலவும் பித்தரைப்போலவும் பேயரைப்போலவு மிருப்பதுடன் விதிவிலக்கின்றி அவதூதர்களாய் விபூதி உருத்திராக்ஷம் முதலிய ஐடசாதனங்க ளின்றியு மிருக்கிறார்களானதால அவ்வகைப்பட்டவர்களிடத்தில் விபூதியாதி ஜடசாதனங்கள் காணாமைபற்றி அவர்கள் சிவனடியார்களல்லரென்றும் அசாதுக்களென்றுஞ் சிவத்துரோகிகளென்றுஞ் சொல்வது ஞானநூலாராய்ச்சியில்லாமையேயாம். இதனாலேதான் இவரையும் இவர்நண்பர்களையும் நாஸ்திகரென்றும் வேதசாஸ்திரமரியாதை யறியாதவரென்றும் வேதவிரோதிகளென்றும் வேதபாஹ்ய ஆகமிகளென்றும் சொல்லற்கிடனாகின்றதென்க.

இவர் பக்கத்தார் சுருதிமுதலிய நூல்களுக்கு மாறாகத் தப்புத் துவிதசித்தாந்த மொன்று கற்பித்துக்கொண்டு அதன்படி யொழுகாதவர்களையெல்லாம் தூஷிக்கின்றனர். இதற்குச் சத்ப்ரமாணங்கள் கிடையா; சற்பிரமாணங்களில் துவிதமதகண்டனைமாத்திரம் விசேஷமாயுண்டு. சிவஞானபோதமூலத்துக்கு விரோதமாக எழுதிக்கொண்ட துவிதவுரையும் அந்தத் துவிதத்திற்கு அனுகூலமான சிவஞானசித்தியார் முதலிய நூல்களுமேயன்றி மற்றப்படி சுருதியாதிப் பிரமாணங்களிவர்களுக்குக்கிடையா. ஆனாலத்வைதத்திற்குச்சாதனமாகச்சொல்லியிருக்கும் மேற்காட்டிய சாதனங்களை மாத்திரம் தங்களுக் குரியதெனக் கொள்ளுவதோடு இப்படியே தேவார திருவாசகாதிகளையுங் கொள்ளுகின்றார்கள். இவ்வாறு மேல் நோக்காகக் கொள்ளுவது மாத்திரந்தானே அவைகள் தங்களுக்கு மாத்திர முரியனபோலவும் அத்வைதிகளுக்கு உரியன வல்லபோலவும் கொண்டு, அத்வைதிகளைத்தூஷிக்கின்றார்கள். இது குடிக்கூலிக்குவந்தவன் வீட்டுச் சீட்டுப் பிறப்பித்துக்கொள்ளப்பார்ப்பது போலிருக்கின்றது. ஷை விபூதி உருத்

திராக்ஷாதிகளின் சூட்சுமார்த்தத்தைப் பார்க்குமிடத்து அவைகளும் அத்வைத பக்ஷமாகவே யிருக்கின்றமையான் அவற்றிலும் இவர்து துவைதத்திற்கு ஏதும் சாதகமில்லையென்க. சூட்சுமார்த்தம் பயன் படாமற்போயினும் ஸ்தூலார்த்தமேனும் பயன்படுதல் கூடுமேயென் னின் அந்தஸ்தூலமும் அத்வைதசாதனமாயிருப்பதாலும் அந்த அத் வைத மிவர்களுக்கு விரோதமா யிருப்பதோடு அதைச் சதாதூஷிப்ப தாலும் அதனுல் மிகுபாவத்தைத் தேடிக்கொள்வதாலும் அந்தச்சாத னத்தால் அடையவேண்டிய சாத்தியமில்லாமற் போதலாலும் ஷை ஸ்தூலபயனும் இவர்க ளடைய மாட்டார்களென்பது திண்ணம். அத் வைதிகளுக்கு அத்வைத ஞானமும், அதற்குச் சாதனமான விபூதி உருத்திராக்ஷாதி சாதனங்களு முள்ளன; இவர்களுக்கோ அத்வைத ஞானமுமில்லை; அவ்வத்வைதத்திற்குச்சாதனமான விபூதிஉருத்திரா க்ஷாதி சாதனங்களு மில்லை. ஆதலால் பூர்வபக்ஷிகள் சாதனத்தைக் கைக்கொள்வது போலியேயாமென்க.

விடை முன்னமே வந்திருக்கின்றது.

பின் ஷை 32 வது பத்திரிகையில் "ஒன்றேபொருளும், அதற் கிரண்டாவது பொருளின்றென்பதுஞ் சித்தமானல், அவ்வொன் றும் பொருளை யொன்றென்று சுட்டியவர் யாவர்?'' என்கிறார். இப் படிப்பட்ட கேள்வி சபாபதிநாவலரும் சோமசுந்தரநாயகரும் கேட்டு, அதற்கு விடைவேதாந்தசங்கை நிவாரணத்திலும் அத்வைததூஷண பரிகாரத்திலும் பெற்றிருக்கின்றார்கள். ஷை இரண்டு நூல்களையும் இவர் வாசித்துப் பார்த்து அதைப் பூர்வபக்ஷஞ்செய்து மேலே நியாயமிருந் தால் எழுதலாம்.

ஒன்றேன்பதுங் கற்பனை.

"இரண்டென்னு மெண்ணில்லாதபோது ஒன்று என்னும் எண் ணுக் கிடமேது?" என்றார். இதனுண்மை யிவர்க்கு விளங்கவில்லை. விளங்கினல் இவ்விதசங்கை செய்யமாட்டார். சிவனென்னும் பாரமார் த்திக சத்துப்பொருளில் தோற்றும் போலிப்பொருளைமெய்யெனமரு ண்டு துவைதிகள் துவைதம் சாதிக்க வருகின்றமையால் அவர்களைக் கண்டிக்கும்பொருட்டு, இரண்டல்ல, ஒன்றே யெனச் சுருதி சொல்ல வந்ததே யன்றி யுண்மையில் ஒன்றென்பது சுருதி தாத்பரியமன்று. இதனுல் சிவனென்னும் பொருளின்றென்பதன்று; அதை யொன் றெனச் சொல்வது மாத்திரமே கற்பனையாம். பிரதிபிம்ப சூரியனைக் கண்டு, அது ஒன்றும் பிம்பசூரியன் ஒன்றும் ஆகவிரண்டு சூரியர்க ளிருக்கின்றார்களென்று பேதைமைத்தனமாய் எவனேனுஞ் சொல்வா னேல் அவனை மறுக்கும் நிமித்தம் சூரிய னொருவன்தான் என்று சொல்வது குற்றமாகாதே. இதனுல் இரண்டாவது சூரியனை யொப்பு க்கொண்டதாயு மாகாதே. இன்னொரு உபமானமுங் கூறுகின் றோம். கயிற்றின்கண்தோன்றும் அரவு காரியம்; கயிறு காரணம்.

இது விவர்த்த காரண காரியம். அரவு பொய்யென்று துணிந்தபின் அரவில்லை. அரவில்லாதபோது காரியமென்பதில்லையென்றாகின்றது. காரியமே யில்லையானால் பிறகு காரணமென்பதேது? காரிய காரணங்கள் ஒன்றை விட்டொன்று பிரியாதென்பது நாம் அறிந்த விஷயம். காரியமென்று சொல்லும்போதே அந்தச் சொல் காரண மென்னுஞ் சொல்லைத் தழுவிக்கொண்டே யிருக்கின்றது. எங்கே காரிய மில்லையோ அங்கே காரணமென்பது மில்லை. இதனால் காரணத்துக் கிடமாயிருந்த கயிறென்பது இல்லையென்று கூறவந்தா மில்லை. கயிற்றுக்குக் காரணமென்கிற பேர் இல்லையென்று மாத்திரங் கூறுகின்றாமென்க. இதுபோலச் சிவன் காரணம், உலகு காரியம். காரணத்தைத் தவிரக் காரியத்துக்குப் பொருளில்லையென்கிறபடி சிவனைத்தவிர வுலகுக்குப் பொருளில்லை. பொருளில்லாதபோது காரிய மில்லையாகும்; காரியமே யில்லாதபோது காரணமென்பதும் இல்லையாம். காரணமில்லையென்பது கொண்டு சிவனே யில்லையென்பதல்ல. பின்னைச் சிவனைக் காரணமென்று சொல்லப்படாதென்பதாம். இத னிமித்தமே சிவன் காரிய காரண ரகிதப்பொருளென்று சுருதியாதிகள் கோஷிக்கின்றன. கயிறு காரணமும் அரவு காரியமுமென ஒரு அவசரத்தில் சொல்லப்படினும் மற்றொரு அவசரத்தில் கயிறு காரிய காரண ரகிதப் பொருளென்றே சொல்லற்கிடனும். இங்ஙனமே சிவன் காரணமென்றும் உலகு காரியமென்றும் ஒரு அவசரத்தில் சொல்லப் படினும் மற்றொரு அவசரத்தில் சிவன் காரிய காரண ரகிதப்பொருளென்பதே சித்தாந்தமா மென்க. இங்ஙனமே இரண்டென்னுங் கொள்கையை மறுக்கப் பிரமம் ஒன்றென்று சொல்லப்படினும் மற்றொரு அவசரத்தில் ஒன்றென்பதுங் கழிக்கப்படுதல் சித்தாந்தம். அது பற்றியே சாமவேதத்தின் மைத்திரேயோபநிஷத்தில் ௩-வது அத்தியாயத்தில் "துவைதாத்வைதமில்லாதவனாயிருக்கிறேன்" என்றும், "ஒன்றென்கிற கணக்கற்றவனா யிருக்கிறேன்" என்றும், சூதசங்கிதை சமாதி விதியுரைத்த அத்தியாயம் பதினாறுவது செய்யுளில் "சகலபூதங்களையும் தன்னுயிரிற் காண்பதுவுஞ் சகலபூதங்களிடந் தன்னுயிரைக் காண்பதுவும், இகலற எஞ்ஞான்றொருவனுளனவன் அஞ்ஞான்றே, இகன்மிகு மின்பார்தரு மொன்றிரண்டறு முத்தியை யடைந்தோன்" என்றும் கூறியிருக்கின்றன வென்க. வேதமானது இரண்டென்று மலைவாரைநோக்கி பிரமம் ஒன்றென்று கூறவந்தால் "சந்து விட்டால் வந்துவிட்டேன்" என்பது போலத் தமக்கேதோ சாதகங் கூறுவதாகப் பிரமித்துப் பேசுகின்றார். இனி வேதாந்த சாஸ்திரங்களி னுட்பங்களை ஆதியோடந்தமாய்த் தக்கார் பால் துவேஷ புத்தியை விட்டுக் கேட்டுப் பின் இது விஷயமாக ஆசங்கைசெய்ய வருவாராக.

பிரமத்துக்கு ஜீவன் போலியாய் வேறென்பது.

"பிரமம் ஒன்றும், ஜீவர்கள் பலருமாயிருப்பதால், ஜீவர்களில் வேறுபடுத்தவே பிரமம் ஒன்று என்று அப்பிரமத்தைச் சுட்டியவா றறிக. இதனுல் பிரமத்துக்கு வேருக இரண்டாவது பொருள் ஜீவ னென்பதொன்று சத்தாய் நிலேத்தது சித்தாந்தமாயிற்று" எனறு சொல்லி விருது கூறிவிட்டார். கொடி போடவேண்டியதுதான் பாக்கி. இவர் வாய்ச்சொல்லால் விருதுகூறிக் கொடிபோடப் பார்க் கின்ருர். ஏதேனுஞ் சுருதிப் பிரமாணங் கூறுகின்ருரா? யுக்தி அனு பவங்கள் காட்டுகின்ருரா? ஒன்று மில்லே. நாம் எவ்வளவோ சுருதி ப்பிரமாணமும் யுக்தி அனுபவங்களுங் காட்டி அத்வைதத்தைத் தாபித்துவர, ஒருநியாயமு மில்லாமல் வாயினுல் வீரியம் பேசிக் கொடி போடுகின்ருரே. பிரமம் பரிபூரண சத்துப்பொருளா யிருக்கும்போது ஜீவனென்கிற பொருள் சத்தாய் எப்படி யிருக் கும்? சொல்வார் சொன்னுலும் கேட்பார்க்கு மதியில்லேயா? ஜீவன் எப்படிச் சத்தாய் நிலேத்ததோ அதனுண்மையை யெடுத்துக் கூறினு ரில்லேயே.

முன்னெருகாலத்தில் தேவர்களுக்குப் பிரமதேவன் அத்துவித த்தை யுபதேசித்தாரென்றும் அப்போது அந்த அருத்தம் சரியென்று பரமசிவன் வந்து சொன்னுரென்றும் பிரமகீதை சாந்தோக்கிய வுப நிஷத்தில் கூறியிருக்கின்ற தன்ருே? ஈசுரகீதையிலும் அத்வைதமே யுண்மையெனப் பரமசிவன் சொன்னதா யிருக்கின்றதன்ருே? ஸன காதிகளுக்கும் பரமசிவன் தக்ஷிணுமூர்த்தி கோலமாயிருந்து அத்வை தத்தை அநுக்கிரகஞ் செய்ததாய்ச் சுருதி புராணுதிகளில் கேட்டிரு க்கின்ருேமன்ருே? அப்படிப்பட்ட பரமசிவன் இவர்முன் வந்து "அத் வைதந்தான் உண்மையான சித்தாந்தம்; நீர் கூறும் துவைதம் சுருதி யாதிகளுக்குச் சம்மத மன்று, அது பொய்ச்சித்தாந்தம்" என்று சொன்னுலுங் கேட்கமாட்டார். நெற்றிக்கண், சடைமுடி, கங்கை, பிறைமதி, மான், மழு, சதுர்ப்புஜம், புலித்தோலாடை, என்பு, அர வாபரணம், யானைததோல் முதலிய வற்றைக் காட்டி, "நான்தான் பரமசிவன், அன்று ஸநகாதிகளுக்குபதேசித்தவனும், ஈசுரகீதை சொ ல்லியவனும், பிரமகீதையில் சொல்லிய அருத்த முண்மையென்று சொல்லியவனும், ஆலகாலவிஷத்தை யுண்டவனும், திரிபுரசங்காரஞ் செய்தவனும், விஜயனேடு சண்டை செய்தவனும், பார்வதியை மணஞ்செய்தவனும், வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பவனும், இன்னும் புராணுதிகளில் பரமசிவனெனச் சொல்லப்பட்டவனும் நான்ருன்" என்று மெய்யில் கைதோய்த்து மும்முறை சத்தியஞ்செய்து, "வேதாகம மாதி நூல்களின்சித்தாந்தம் அத்வைதமேயாம், துவைதமன்று, நீர் வீணுக எனக்கும் என்னுல் சொல்லப்பட்ட வேதசாஸ்திரங்களுக்கும் விரோதம்பேசவேண்டாம், இம்மானிடஜன்மங் கிடைப்பதருமை, கிடை

த்தாலும் இப்பரதகண்டத்திற் பிறப்பதருமை, பிறந்தாலும்கூன்குருடு செவிடு பேடுநீக்கிப் பிறப்பதருமை, பிறந்தாலும் வேதசாஸ்திரத்தின் வழி நின்றொழுகும் மதஸ்தரது குலத்திற் பிறத்தலருமை, பிறந்தாலும் கல்விகற்று அறிவுடையராய்ப் பதி பசு பாச லக்ஷணங்களை விசாரித்தலருமை, அப்படி விசாரிக்கவந்தும் ஷை வேதசாஸ்திர விரோதமாய்த் "தான்பிடித்த முயலுக்கு கால்மூன்றே" என்பது போல் பிடித்தபிடி விடாமல் பேசி இஜ்ஜன்மத்தைப் பாழ் பண்ணிக்கொள்ள வேண்டா"மென எவ்வளவு சற்புத்தி புகன்றிடினுங் கேட்க மாட்டார். "என்ன கதி வந்தாலும் வரட்டும், தெரிந்தோ தெரியாமலோ எனக்குத் தோன்றியதைச் சொல்லிவிட்டேன், இனி அதற்கு மாறிப் பேசமாட்டேன்; இனிநெற்றிக்கண் முதலியவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒன்பது விதம் எடுத்துக்கொண்டு வந்தாலும் என் பிடிவாதத்தை விடமாட்டேன், தக்கன் றன் பிடிவாதத்தை விட்டானா? இரணியன் விட்டானா? திரியோதனன் விட்டானா? அவர்களெல்லாம் எனக்கு ஈடாவார்களா? அவர்களெல்லாம் தங்கள் பிடிவாதத்தை அந்தவொரு ஜன்மத்தில் விடாதிருந்தார்கள், நான் எத்தனைகோடி எழுவகைப் பிறப்பிலும் விடமாட்டேனே, இனி நீர் சொன்ன வேதாகம சாஸ்திரங்களை அடியோடு புரட்டித் துவைதப் படுத்தாவிடில் நான் வீரபத்திரமூர்த்தியா பாரும், அரக்கோணவாசியா பாரும், நீர் மாயையையும் உலகையும் பொய்யென்றீரே, நான் அதைமாற்றி மெய்யென்று ஸ்தாபிக்கிறேன் பாரும்" என இவ்வாறு பரமசிவனையே யெதிர்த்துக் கொள்வாரே; அம்மம்ம!! அரக்கோண வீரபத்திரமூர்த்தி லேசானவரா? அன்று பரமசிவன் நெற்றிக் கண்ணொன்றனைக் காண்பித்தபோது நெற்றிக்கண் காண்பிக்கினுங் குற்றங் குற்றமென்று நக்கீரர் சொன்னாரென நாம் கேள்விப் பட்டிருக்கின்றோமன்றோ? இவர், ஆயிரங் கண்கள் காண்பிக்கினுங் குற்றங் குற்றமே யென்று சொல்ல அஞ்சாரே!

நிற்க; இந்தப் பூர்வபக்ஷியார் கூறுகிறபடி பிரமம் ஒன்றென்பதும் உண்மைதான், ஜீவர்கள் பலவென்பது முண்மைதான், ஜீவர்களினின்றும் பிரமம் வேறுபடுவதும் உண்மைதான். இதைக் கொண்டு ஜீவனைச் சத்தெனல் மாத்திரம் அமையாது. இவர் சொல்லளவில் வேறுபடுத்தப் பார்க்கிறார். அதுவும் வெகு விரைவில் இரண்டொரு வரியில் சித்தாந்தஞ் செய்யப் பார்க்கின்றார். இது ஆகாது! ஆகாது!! சூதசங்கிதையில் சூதகீதையில் பரமவிஞ்ஞான முரைத்த அத்தியாயத்தில் நான்காவது செய்யுளில் "ஆன இம்முப்பா னைந்தற்கப்பாற்பட்டவன் பசுவே. ஈனமிலாப் பரசிவனிப்பசுவினுக்கு வேறானோன்" எனச் சொல்லிவிட்டு, அடுத்த ஆறாவது செய்யுளில் "முன்னும் அவித்தையாற் பசுபேதமும் மொய்வலிய மாயையாற் பன்னு பரதத்துவபேதமுங் கற்பிக்கப்பட்டது" என்று சொல்லியிருப்பதைத் த்யை புரிந்து சற்றுய்த்து நோக்கி ஆராய்ந்து பார்ப்பாரானால் 'ஜீவ

னென்பதொன்று சத்தாய் நிலைத்தது சித்தாந்தமாயிற்று' என விருது கூற முன் வாரார். நூற்பிரமாணங்களில் ஜீவர்களைக் கற்பனையாக வும் சிவனை யதார்த்தமாகவுஞ்சொல்லி, ஜீவர்களினின்றும் சிவனை வேறுபடுத்தினுல் இவர் இரண்டு பொருள்களையும் யதார்த்தமாக்கிக் கொண்டு வேறுபடுத்தப் பார்க்கின்றூர். இவருக்கு வேத வேதாங்கங் கள் வேண்டாம், ஆகமங்களும் வேண்டாம், புராணேதிகாசங்களும் வேண்டாம், இவரது யுக்தியே இவருக்குப் பிரமாணமாம் போலும்! அந்த யுக்திக்காவது பொருத்தமா யிருக்கிறதோவென்று பார்ப்போம். இவர் பிரமத்துக்கும் ஜீவர்களுக்கும் பேதஞ் சொல்லுகிறூரா? அபே தஞ் சொல்லுகிறூரா? பேதஞ் சொல்லுகின்றூரென்னின் பிரமம் ஒரு இடத்திலும் ஜீவர்கள் ஒரு இடத்திலும் இருப்பதாய்ச் சொல்ல வேண்டும். அப்போது பிரமம் அபரிபூரண தோஷத்தை யடையும். இது பிரமமும் பரிபூரணம், ஜீவான்மாக்களும் தனித் தனிப் பரி பூரணமென்று சொல்லும் இவரது சித்தாந்தத்திற்குப் பங்கமாமே. 'பிரமத்தை ஜீவர்கள் சுட்டியவா றறிக' என்றிவர் கூறியதால் பிரமம் சுட்டுப் பொருளும் சடமும் அசத்துமாய் முடிந்து, (பிரமம் அசத் தாய்ப் போவதால்)இவர் நாஸ்திகராகின்றூரென் "அத்வைத தூஷண பரிகார"த்தில் நாம் விரிவாயெழுதியதோடு, சபாபதி நாவலலா மறு த்தெழுதிய "வேதாந்த சங்கை நிவாரண" த்திலும் இதுவிஷயமாகப் பேசப்பட்டிருக்கின்றமையால் இவரது யுக்தியும் போலி யுக்தியாய்த் தகர்ந்து போயிற்றென்க.

பிரதிவாதியாரது துர்ப்பலம்.

"இதற்கு நேர்வழியினின்று விடைபசர்வதொழிந்து விவகாரம் பரமார்த்தம் என்று பழங்கதையிலிறங்கிக் காலப்போக்குச் செய்தல சங்கதயாம்" என்கிறூர். வியாவகாரிக பாரமார்த்திகமெனச் சத்தி யத்தை யிருவகைப்படுத்தி, சிவன் பாரமார்த்திக சத்தியமென்றும் உலகு வியாவகாரிக சத்தியமென்றுங் கூறி, அதற்குச் சுருதி யுக்தி அநுபவங்களையுங் காட்டியிருப்பதோடு, மேற்படி இரண்டையும் பார மார்த்திக சத்தியமெனக்கூறும் இவரது போலிச்சித்தாந்தத்தைப் பன் முறையிலுந் தும்சஞ் செய்திருக்கின்றே மாகவினுனும் அதற்குப் பதில்கூற இவரால் இயலாது காலப்போக்குச் செய்கின்றூராகலானும் இப்போதும் பாரமார்த்திக வியாவகாரிக சத்தியத்தைக்கொண்டே அத்வைதத்தை ஸ்தாபித்துக் கொள்ளுவோமென்று பயந்து அது குறுக்குவழியென்றும், இரண்டையும் பாரமார்த்திக சத்தாய்ச்சொல் வது நேர்வழியென்றுங் கொண்டு, இவர் சித்தாந்தப்படி அதாவது இரண்டையும் பாரமார்த்திக சத்தாய்ச்சொல்லும்படி சொல்லுகிறூர். இது என்ன விவேகம்! அவர்வழி நமக்குக் குறுக்குவழி, அவர்க்கு நேர்வழி. எமதுவழி அவர்க்குக் குறுக்குவழி, எமக்குநேர்வழி. இது தெரியாதா? அவர் வழியை அநுசரித்துப் பிரதிவாதியை விடைபகா ச்சொல்லுவது நியாயமாமோ? அவர் சொல்லுவதுபோல் அவர்

வழியை அநுசரித்து நாம் விடைபகர்கின்றோம்; நமதுவழியை அநுசரித்து அவர் விடை பகர்வாரா? பகர்ந்தால் அவர் அத்வைதியும் நாம் துவைதியு மாகின்றோம். அப்போதும் அத்வைதத் துவைதச் சண்டை யொழியாதே. ஆள்கள் மாறுகின்றார்களேயன்றி ஆள்களால் எடுத்து வாதிக்கப்பட்ட வாதம் ஒழியாதே. இரண்டையும் பாரமார்த்திக சத்தாய்ச் சொல்லுவது துவைதிகளின் சித்தாந்தம். ஒன்றைப் பாரமார்த்திகமாகவும் ஒன்றை வியாவகாரிகமாகவுஞ் சொல்வது அத்வைதிகளின் சித்தாந்தம். அவரவர் சித்தாந்தத்தை அநுசரித்து அவரவர்கள் வாதிப்பார்களேயன்றி, ஒருவர் சித்தாந்தத்தை யொருவர் அநுசரித்து வாதிக்கமாட்டார்களே. இது சிறுவரும் உணர்ந்த விஷயமாயிற்றே. இப்படியிருக்க அதைமாற்றி யெழுதும்படி சொல்லுவதும் அதைப்பழங் கதையென்று பேசுவதும் நியாயமாமா? இது தோல்வித்தானத்திற் கிலக்கன்றோ? நமது சித்தாந்தத்தை நாம் சொல்வது பழங்கதையானால் நமது சித்தாந்தத்தை மாற்றி யெழுதச் சொல்வதுஎன்னகதை? இதனால் பிரதிவாதியாரது துர்ப்பலம் வெளிப்பட்டமை காண்க. விவகாரம் பாரமார்த்திகம் என்பன அத்வைதிகளுடைய சொந்த அபிப்பிராயமன்று; நூற்பிரமாணமேயாம். அதுவும் கேவலம் அத்வைதிகளாலேயே யியற்றப்பட்ட நூற்பிரமாணமன்று; யாவரும் அங்கீகரிக்கத்தக்க பதினான்கு வித்தைக்குட்பட்ட நூற்பிரமாணமாம். அந்தப் பிரமாணம் வருமாறு:—

சூதசங்கிதை பஞ்சாட்சரமந்திரம்.

வாசகவாச்சியபாவம் இலக்கிய நல்விலக்கணபாவங்கள்முன்னாப்
பேசவருபவையாவும் விவகாரதிசையினன்றிப் பிறங்காநின்ற
மாசகன்ற பரமார்த்த நிரூபணத்திலில்லை வயங்குறு வெண்ணீறு
பூசனகற்கன்னியமாயவையெல்லாம் பொய்யாகிப்போதலாலே. (௰௨)

இல்லைஇருப்பதுபொய்மெய் விளக்கம்அஃதின்மையெனஇவைமுன்னாகச்
சொல்லும்விவகாரமெலாமாயையினாற்றானின்பசொரூபனென்றும்
வல்லசிவன்கற்பித்தமாயாகாரியப்பவஞ்சமருவுதோற்றஞ்
செல்லுறுவிவகாரதிசையினன்றிப்பரமார்த்ததிசையினில்லை. (௰௩)

ஷை வேதார்த்தம்.

சார்பாரமார்த்தமாய்ச் சத்தாயென்றுந் தயங்கலாலே
யேரதிட்டான சைதன்னியத்திற்குநாசமில்லை. (௭)

ஷை மோசகப் பிரதனதியல்பு.

சுடருஞானவானந்தசொரூபன்சுயம்பிரகாசன்வினை
யிடரில்பரதத்துவனிமலனின்பமாரும்பரமார்த்தன்
படர்கேவலனித்தியன்சத்திபதிந்தார்க்கருளும்பரனவத்தை
தொடராதவனாகியவெம்மைத்துவிசமறச்சார்ந்தவனேவன. (௰௪)

விஷ்ணுபுராணம் முதலம்சம் நான்காம் அத்தியாயம்
ஸ்ரீ வராஹாவதாரவைபவம்.

நீயொருவனேபரமார்த்தமாகின்றாய்.

இதனால்சிவனொருவனே பாரமார்த்திக சத்தியமென்றும்,சடசித்துலகம் பாரமார்த்திக அசத்தியமும், வியாவ்காரிக சத்தியமுமாமென்றும் தீர்மானமாகின்றமையான் அத்வைதிகள் வாதம் சாஸ்திரீயமும், இந்தத் துவிதவாதியின் வாதம் அசாஸ்திரீயமுமா மென்க. இவ்வொரு விஷயத்தில் மாத்திரமன்று,வேறுஎல்லா விஷயத்திலுமேஇவர் அசாஸ்திரீயமான துர்வாதஞ் செய்கின்றார். ஆரியர்போல் நடித்து வேதசாஸ்திரங்கட்குக் கட்டுப் பட்டதுபோல் காட்டி அவைகட்கு மாறாக வாதிப்பதினும் பகிரங்கமாக வேதபாஹிய அநாரியரென்றே வெளிப்பட்டு வாதிப்பது யோக்கியமும் அழகுமாம்.

மகாவாக்கியம்.

"ஒன்றே பொருளானால், இரண்டாவதுபொருள் அறவே யில்லை. அங்ஙனமாயின் தத், த்வம், அஸி சொற்பாகுபாடுகள் வேதத்திற் பெறப்பட்டவாறென்னை? இதனையேயன்றோ அஹம், பிரமம், அஸ்மி என்று மீண்டும் அவ்வேதங் கூறியது? தத் என்பது பிரமத்தையும், த்வம் என்பது அகத்தையும், அஸி என்பது அஸ்மியென்பதையும் விளக்குகின்றன. இப்படியே சுருதிகள் இன்னும் முழங்குகின்றன. இவ்வுபதேசங்களை இரண்டாவது பொருளை யங்கீகரியாத பூர்வபக்ஷியார் அவ்வொன்றாயுள்ள பிரமத்துக்கே யொப்படைத்துக் கனம் பெற்று வாழ்வாராக" என்றார்.

இதில் தத்வமசி வாக்கியத்தின் வாச்சியார்த்த லக்ஷியார்த்த பேதங்களையும் அதன் உபமான உபமேயங்களையும் எடுத்துச் சொல்லாமலும் அத்வைதிகள் இன்னவிடத்தில் பேதஞ் சொல்லுகின்றார்கள், இன்னவிடத்தில் அபேதஞ் சொல்லுகின்றார்கள் எனக் காட்டாமலும் குழப்பிவிட்டு, அதுவரையில் அத்வைதிகள் தோற்றுவிட்டதாயும், இவர் ஜெயித்துவிட்டதாயும் பேசிக்கொண்டார். 'ஒன்றே பொருளானால், இரண்டாவது பொருளறவேயில்லை' என்பதனாலும், 'தத், த்வம், அஸி யென்னுஞ் சொற்பாகுபாடுகள் வேதத்திற் பெறப்பட்டவா றென்னை?' யென்பதனானும் இரண்டாவது பொருளிருக்க வேண்டுமென்பது பூர்வபக்ஷியார் கக்ஷியாகிறது. இரண்டாவது பொருளிருக்கவேண்டுமானால் பிரமம் பூரணமாயிற்றே. எப்படி இன்னொரு பொருளிருக்கும்? இருக்குமென்று சொல்லின் பிரமம் அபரிபூரணப் பொருளாமே. இதுநிற்க; பிரமம் ஒன்றே பொருளென்றும் மற்றப்பொருள் போலியென்றும் இதுவரையில் சுருதிமுதலிய பிரமாணங்களோடும், யுக்தி அனுபவங்களோடும் காட்டியதற் கிவர் யாது பதில் விடுத்தார்? அதற்கெல்லாம் பதிலேதும் பேசாது, இப்போது தத்வமசி வாக்கியத்தைவிளக்கிக்காட்டாமல் மேல்நோக்காக இரண்டு வரியில் சொல்லிவிட்டால் வெற்றியாய்விடுமோ? அதன் பொருளை விளக்கிக்காட்டினால் அத்வைதத்திற்குச் சாதகமும், தம் மதத்திற்குப்பாதகமுமாய் விடுமென்பது பற்றி அவர் மறைத்தாலும் நாம் உள் நுழைந்து அதன் பொருளையும் உபமான உபமேயங்களையும் விரித்து

ச்சொல்லி, சுருதி யுக்தி அநுபவங்கட்கும் பொருத்தமுறக்காட்டுகின்றோம். தத், த்வம், அஸி என்கிற சொற்பாகுபாடுகளை வேதங் கூறிவிட்டது என்பதனால் இவரது துவைதம் நிலைத்துவிடாது. வேதம் பசுநூல் மோகநூல் எனக்கூறுவதனோடு, வேதம் தமக் கவசியமில்லையென்றவர் கக்ஷியிற சார்ந்த விவர்க்கு வேதப்பிரமாண மவசியமென்னே? தத், த்வம், அஸி யென்னும் சொற்பாகுபாடுகள் இருந்துவிட்டதனால் பொருள் பாகுபாடுகளும் இருக்கவேண்டுமோ? பொருள்பாகுபாடுகளிராமல் சொற்பாகுபாடுகள் இருக்கப்படாவோ? ஒரே மனிதன் தாய்க்குப் பிள்ளையும் பிள்ளைக்குத் தகப்பனும் மனைவிக்குப் புருஷனும் பாட்டனுக்குப் பேரனும் மாமனுக்கு மருகனும் அண்ணனுக்குத் தம்பியும் தம்பிக்கு அண்ணனுமாயிருக்கவில்லையா? இவ்வளவு சொல்லும் ஒருமனிதனுக்குத் தானே யுபயோகப்படுகின்றன. ஆதலால் சொற்பாகுபாடுகள் எவ்வளவோ, அவ்வளவுக்கும் பொருட் பாகுபாடுகளும் உளவெனக் கூறுதல் அமையா தென்பதாம். "பலசொற்களுக்கு ஒருபொருளும் உள்ளது; பலசொற்களுக்குப் பலபொருளும் உள்ளன. அவற்றில் தத், த்வம், அஸி என்னுஞ் சொற்கள் பலபொருள்களையே யுடையன, அதற்காகத்தான் 'அஹம், பிரமம், அஸ்மி என்று மீண்டும் அவ்வேதங் கூறியது, தத் என்பது பிரமத்தையும், த்வம் என்பது அஹத்தையும், அஸி என்பது அஸ்மியென்பதையும் விளக்குகின்றன" யெனக் கூறினுமென்னின், இதுவும் பொருந்தா தென்பதைக் காட்டுவாம். இதில் அகம் என்பதன் பொருள் நான்; பிரமம் என்பதன் பொருள் பிரமம்; அஸ்மி யென்பதன் பொருள் ஆகின்றேன். இந்த வாக்கியத்தைச் சேர்த்தால் நான் பிரம மாகின்றே னென்றாகின்றது. நான் மனிதனானேன் என்றாலும் அது கடமாயிற்று என்றாலும் இது படமாயிற்றென்றாலும் துவைதஞ் சித்திக்குமோ? நான் மனிதன் என்று சொல்லும்போது நான் என்ற சொல்லும் மனிதன் என்ற சொல்லும் இரண்டானாலும் பொருளும் இரண்டாமோ? ஆகாவன்றோ? காரியப் பொருள்கள் பலவாய்த் தோற்றினாலும் அவற்றிற் கெல்லாம் காரணப் பொருளும் பலவாமோ? ஒன்றுதானே. ஒரு மரத்தா லியற்றப்பட்ட யானை வாகனத்தில் கை தலை கால் வால் முதலிய வுறுப்புகள் பலவேனும் அவைகளெல்லாம் பொய்ப் பொருளாய்ப்போக, அவற்றில் யதார்த்தமாயிருப்பது மரமென்னும் பொருள் ஒன்றுதானே. ஏகமான ஆகாயம் கடாகாயம், கடஜலப் பிரதிபிம்ப ஆகாயம், மேகஜலப் பிரதிபிம்ப ஆகாயம், மகாகாயம் எனப் பலவகையாய்ச் சொல்லப்படினும் அவற்றினுள் யதார்த்தமாயுள்ள ஆகாயம் ஒன்றுதானே. அதுபோல நான் என்றும் அது வென்றும் அது நானேயென்றும் நான் அதுவேயென்றும் பலவகையாய்ச் சொல்லப்படினும் அவற்றினுள் யதார்த்தமாயுள்ளது ஏக சைதன்னியமேயாம். சாமவேத மகா வாக்கியமான தத்துவமசி வாக்கியத்தில் தத் என்பதின்வாச்சியார்த்தம் ஈசுவரன்;

இலட்சியார்த்தம் பிரமம். த்வம் என்பதின் வாச்சியார்த்தம் ஜீவன்; இலட்சியார்த்தம் கூடஸ்தன். அசி யென்பதன்பொருள் பிரமகூடஸ்த ஐக்கியம். அசி யென்பதன் பொருள் பிரகாரம் ஏகத்வஞ் சொல்ல வேண்டும். தத் பதமான ஈசுரனுக்கும் த்வம் பதமான ஜீவனுக்கும் ஐக்கிய முண்டாகாது. பின்னை யெப்படி யென்னின் இலட்சியப் பொருளான கூடஸ்த பிரமத்துக்கே ஐக்கியஞ் சொல்லவேண்டும். இதற்குத் திருட்டாந்தங் கூறுவாம். ஆகாயத்திலிருந்துண்டான பஞ்ச பூதங்களி லொன்றும் பிருதிவியின் காரியமான கடத்திலிருக்கும் (ஷை பூதங்களிலொன்றான) நீரின்கண் பிரதிபலித்த கடஜலப் பிரதி பிம்ப ஆகாயத்திற்கும், மேகத்தில் பிரதிபலித்த மேகசலப் பிரதிபிம்ப ஆகாயத்திற்கும் ஒருபோதும் ஐக்கியமுண்டாகாது. அதுபோல ஜீவே சுவரர்க்கு ஐக்கிய முண்டாகாது. கடாகாயத்திற்கும் மகாகாயத்திற் குமே ஐக்கிய முண்டாகும். ஏனெனில் ஷை இரண்டு ஆகாயமும் வேறுபட்டில்லை. ஓரே ஆகாயம் சடம் மேகம் இவைகள் காரண மாகப் பகுக்கப் பட்டதுபோலக் கடாகாயமென்றும் மகாகாய மென்றும் தோற்றப் படுகிறதேயன்றி உண்மையில் பகுக்கப் படவே யில்லை. ஆதலா லொன்றேயாம். அன்றிக் கடாகாயமும் மகாகா யமும் கடஜலப் பிரதிபிம்பாகாயமும் மேக ஜலப் பிரதிபிம்பாகாய மும் ஏகாகாயத்தைத் தவிர வில்லை. ஆகாயங் காரணம், மற்றப் பூதங்க ளெல்லாம் காரியம். காரணமான மண்ணையன்றிக் காரியமான கடத் துக்குப் பொருளில்லாமைபோலக் காரணமான ஆகாயத்தையன்றிக் காரியமான நான்கு பூதங்கட்கும் பொருளில்லையாகும். நான்கு பூதங் கட்கும் பொருளில்லாமையால் அப்பூதங்களி லொன்றான பிருதிவி யின் காரியகடத்துக்கும் பின்னும் ஒன்றான ஜலத்துக்கும் பொருளி ல்லை. அங்ஙனமே ஏக சைதனியத்தைத் தவிர மற்றப்படி பிரம கூடஸ்த ஈசுவர ஜீவர்க ளில்லையாம். திருட்டாந்தத்தில் கடாகாயம் மகாகாயம் என்பதின்பொருள் உண்மையல்லாது போகவில்லை. கடங் காரணமாகவும் மேகங் காரணமாகவும் வந்த பெயரே யில்லாமற் போ யிற்று. அங்ஙனமே கூடஸ்த பிரமப்பொரு ளில்லாமற் போகவில்லை; வியஷ்டிசமஷ்டி காரணமாக வந்த பெயரே யில்லாமற் போயிற்றென்க. திருட்டாந்தத்தில் கடஜலப் பிரதிபிம்பாகாயம் மேகஜலப் பிரதிபிம் பாகாயங்கள் அநிர்வசனீயமாய்ப்போகக் கடாகாயம் மகாகாயங்கள் எங்ஙன முண்மையாய் நிலைத்ததோ, அங்ஙனமே ஜீவேசுவரர்கள் அநிர் வசனீயமாய்ப் போக, கூடஸ்த பிரமப்பொரு ளுண்மையாய் நிலைத் தமை காண்க. கடாகாயம் மகாகாயமாகிய இரண்டும் இரண்ட ல்ல; ஒன்றேயாம். பேர் இரண்டாயினும் பொருளிரண்டல்ல. அங் ஙனமே கூடஸ்தன் பிரமமாகியஇரண்டும் இரண்டல்ல; ஒன்றேயாம். அதாவது இரண்டு பொருளல்ல ; ஒரு பொருளேயாமென்க.

இவர் கூடஸ்தனை ஜீவான்மாவாகவும் சிவனைப் பிரமமாகவும் சொல்லப்பார்க்கிறார். இது சுருதி யுக்தி அநுபவ விரோதம். சுருதியாதிகளில் கூடஸ்தனுக்குக் கடாகாயத்தையும, பிரமத்துக்கு மகாகாயத்தையும் கூறுகின்றமையின் இவர் கூற்றுக் கூற்றாகவே கழிந்துபோமென்க. சிவமென்னும் பிரமப்பொருள் வியஷ்டி சரீரம் வரையில் கட்டுப்பட்டிருப்பது போன்ற அவசரத்துக்கு அப்பிரமத்துக்கே கூடஸ்தனென்று சொல்லப்படுகின்றது. கூடஸ்தன் சத்துப்பொருள்; ஜீவன் சத்துப்போலி அநிர்வசனீயப்பொருள். ஆதலால் ஜீவான்மாவைக் கூடஸ்தனெனச் சொல்லப்படாது; அவ்வாறு சொல்லச் சுருதிப பிரமாணமு மில்லை. சுருதிவிரோதம் வந்தாலும் வரட்டும், கூடஸ்தனை ஜீவான்மாவாக வைத்துப் பிரமத்தை வேறுபடுத்துவோமென்னின் அங்ஙனமாயின் பிரமங் கண்டப்பொருளாய்ப்போம். இவர்மதத்துக்கு விரோதமாக இவரது ஜீவான்மாவுங் கண்டப்பொருளாய்போம்; பிரமங் கண்டப்பொருளாவது சுருதிக்கும் இவர் மதத்துக்கும் அத்வைத மதத்திற்கும் விரோதம்; ஜீவான்மா கண்டப்பொருளாவது சுருதிக்கும் அத்வைதத்திற்கும் அவிரோதமும் இவர் மதத்துக்கு விரோதமுமாம். இதுகாறும் பேசிவந்ததில் தத்துவமசிவாக்கியம் அத்வைதத்திற்கே சாதகமென்றும் இவர்மதத்திற்குச் சாதகமாகாமை மாத்திரமேயன்றிப் பாதகமாகவே அதிலும் முற்றும் பாதகமாகவே யாகின்றதென்றும் விளக்கிக்காட்டினோம்.

இனி நாம் கூறிய மகாவாக்கியார்த்தமே யுண்மையென்பதற்கு அடியில் வரும் பிரமாணங்கள் சான்று புகலும். அப்பிரமாணங்கள் வருமாறுகாண்க:—

யசுர்வேதம் சர்வசாரோபநிஷத்.

அ. பிரத்தியகாத்மா யார்?

சத்திய ஞாநாநந்த ஆனந்த மயமானது, எவ்வித சரீர உபாதியுமற்றது. கடக மகுடாதி உபாதியில்லாத சுவர்ணக்கட்டிபோலுள்ளது. ஞானக்கட்டி, சித்சுபாவம், ஆத்மசைதனியம், பிரமம் இப்படியாய் எது விளங்குகின்றதோ அது அவித்தியோபாதிக் குட்பட்டதும், துவம் பதத்தினால் சொல்லப்படுவதுமான பிரத்தியகாத்மா.

க. பரமாத்துமா யார்?

சத்தியம், ஞானம், அநந்தம், ஆநந்தம், சர்வஞ்ஞத்துவ முதலியவைகளுடன் கூடினதாயும், மாயோபாதியுள்ளதாயும், தத்பதத்தினாலே சொல்லப்படுகிறதாயு மிருக்கிறதெதுவோ, அதுதான் பரமாத்துமா.

சுக்கில யசுர்வேதம் பைங்களோபநிஷத் ௩-வது அத்தியாயம்.

பிறகு பைங்கலர் யாக்ஞவல்கியரை மகாவாக்கிய விவரணஞ் சொல்லவேண்டுமென்று கேட்டார். அதற்கு யாக்ஞவல்கியர் சொல்லுகிறார். "அது நீயாயிருக்கிறாய், நீ யதுவாயிருக்கிறாய், நீ பிரமமாயிருக்கிறாய், ஆகையால் நான் பிரமமாயிருக்கிறேன்." என்று அநுசந்தானஞ் செய்யவேண்டியது. பிரத்தி

யக்ஷமாகாமல் மறைந்திருக்கிறவனும் சர்வஞ்ஞத்வாதி லக்ஷணமுடையவனும் மாயையை யுபாதியாயுடையவனும் சச்சிதாநந்த லக்ஷணனுமாகிய ஜகத் காரணனானவன் தத்பதத்துக்கு வாச்சியனாகிறான். (தத்பதமானது ஈசுவரனைக் குறிக்கிறதென்பது தாற்பரியம்) அவனே யந்தக்கரணத்தினாலே பேதப்பட்ட அறிவையுடைய "நான்" என்கிற நம்பிக்கைக்கு ஆதாரமாயிருக்கிறவன். (அவன்றான்) துவம்பதவாச்சியனாகிறான். (துவம்பதமானது அந்தக்கரணத்தினுடைய சம்பந்தத்தால் வேறுபோல்காண்கிற ஜீவனைக்குறிக்கிறது என்பது தாற்பரியம்) பரமாத்துமா ஜீமாத்மா இவ்விருவருக்குமுள்ள உபாதியாகிய முறையே மாயை அவித்தை இவைகளைவிட்டுத் தத்துவம் பதத்திற்கு லக்ஷியமாகிய செதுவோ, அதுவே (கூடஸ்தனுக்கு) அபேதமாயிருக்கிற பிரமம்.

ஷை ஷை சு-வது அத்தியாயம்.

ஞானியானவன் எந்தெந்தவிடத்தில் எவ்விதமாய் மரணமடைந்தாலும் எங்கும் பரவிய ஆகாயம்போல் அந்தந்த விடத்திலேயே லயமடைகிறான். வாஸ்தவமாய்க் கடாகாசம்போல ஆத்மாவானவன் லயம் அடைகிறதாக அறியத்தக்கது.

பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதம் எ, அவது அத்தியாயம்.

பின்ன கடாகாயாதிகளாலாகாயமபேதம் பேதமுறாதே
யன்னவனேகாகாரணனேகாகார அகம்புக்காலுமனைத்தா
மன்னியபேதாகாரமபேதாகாரமுமாய்மாதேவனிரானேல்
இன்னதெனுமத்தானெனுமாறெனியாவையுமீசானன் பிறிதன்றே. (கக)

ஷை முண்டகோபநிஷத்.

இந்தவுடம்புறை சீவபரங்களெனப்படும் அன்னம் இரண்
டந்தவிரண்டினுமொன்று வினைப்பயன் அங்குநுகர்ந்திடுமோந்
தொந்தமறும் பரம்மொன்றுமுணாது சொலப்படுபேதமில்வான்
வந்தகடத்தில் அகப்படு பேதமெனப்படுமோயையினால். (உ௫)

உடம்புடன் புணர்ப்பார் சீவனுக்கிறையோடொப்புள்ள தென்னிலொப் பில்லை, கடந்திகழ்வானின்வானம்வேறாகக்கருதியொப்புரைப்பரோவொப்பா, யிடுந்திறங் கன்மத்தாலெனிற் கன்மமிறக்குமேல் விச்சையாலென்னில், திடம்பட முஞ்பேயுள்ளதேஞானந்திகழ்த் துவதில்லது திகழ்த்தா. (௩உ)

சூதசங்கிதை ஞானயாகவைபவம்.

மல்லலான்மாபலவாய்த்தோன்றுவதுஞ் சீவான்மாபரமான்மாவெனும்பே தந்தோன்றுமதுவுஞ், சொல்லலுறினுபாதியாலன்றி மாமுனிவீர் சுபாவத்தினின்றஃதெப்படியென்னிற் கேண்மின், வல்லகடமுதலாயவுபாதி சம்பந்தத்தால் வான்பேதமாய்த்தோன்றுமதுபோலுமுணர்வீர், செல்லலில் வேதாந்தவாக்கியங்களெல்லாம் பரமசிவனொருவனே யென்னத்தெரிவிக்கும் நாளும். (உச)

கூர்மபுராணம் சாங்கியயோகம்.

வைத்தநீர்க்குடங்கடோறும் தோன்றிடுமதியம்போல
வுய்த்திடுமுபாதி தன்னாற்பற்பலவுருவந்தோன்றும். (௰எ)

ஆரியப்புலவர் பாகவதம் கக-வது கந்தம் ச-வது ஆசிரியரையுரைத்தது.

கண்ணகன்றிடு மிடத்துளவான் கடத்துளவான்
எண்ணநின்றன போகவொன்றாயியைந்ததனால்

பண்ணுகின்றதன்மாயையிற் பற்பலபடைப்பாய்
நண்ணுகின்றவும் பிரமமொன்றுருவெனவறிந்தேன். (௮)

பகவற்கீதை கடு-வது பிரபஞ்ச அத்தியாயம்.

குடந்தொறுந் தோன்றுகின்ற ஆகாயமுங் குலேதற்கேற்பத்
தடம்புனருறுந்தோன்றுஞ் சந்திரன்ருனுமென்ன
வுடம்புகடோறும் வேருயுயிரென நின்றேயந்த
விடம்படுபுலன்களாறு மியல்பினிலியற்றுவேனுன். (௧௨)

உத்தரகீதை உ-வது அந்தியாயம்.

ஜீவனேக்கடாகாச மகாகாசத்திலே லயம்பண்ணினுற்போலப் பரமாத்மாவிலே லயம் பண்ணுவித்து எதார்த்தமாக நிராலம்ப நிச்சங்கமான ஞானங் கண்டபடியினுலே பிரமப்பிரகாசத்திலே கூடுவென். சந்தேகமில்லே. இந்த ஞானயோகத்துக்குச் சமான மொன்று மில்லேயென்று மேல் கிரந்தத்திலே சொல்லுகிருர். (௫௨)

திருமந்திரம் முப்பதம்.

தொம்பதந்தற்பதந் தோன்றும் அசிபதம்
நம்பியஜீவன் பரஞ்சிவனுய் நிற்கும். (௪)

ஷை தத்வமசிவாக்கியம்.

ஆகிய அச்சோயந்தேவதத்தன்னிடத்
தாகிய விட்டுவிடாத இலக்கணேத்
தாருபசாந்தமே தொந்தத்தசியென்ப
வாகியசீவன் பரன்சிவனுமே. (௫)

தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
நம்பியமுத்துரியத்து மேனுடவே
யும்பதமுப்பதமாகும் உயிர்பரன்
செம்பொருளான சிவமெனலாமே. (௬)

சிவரகசியம் ரிபுகீதை கூடு-வது அத்தியாயம்.

கடமடமென்றுணர்வுற்ற வுபாதி நீக்கிற்கடவிண்ணு மடவிண்ணுமொன்றேபோல, மடமைமுதற் சீவபரவுபாதி நீக்கின் மாசற்ற சீவபரமிரண்டுமொன்றென், றிடமருவு மூகத்தாற் பரசீவைக்கிய வியல்புதனே யிருமையற வறிந்தேயத்தால், அடருமகண்டாகார சொருபமாகி யசஞ்சலமாயான்மாவில் அமர்ந்து நிற்பாய். (௨௧)

சோயமெனச்சொல்லியிடும் வாக்கியத்திற் சோதித்து விருத்தாமிசம் நீக்கும்போதங், காயசகசைக்கியமே யறியுமர்த்த மவ்விதமே தத்துவமசிவாக்கியத்து, மேயமதாம் விருத்தாம்சமனேத்து நீக்கியியல்பான வைக்கியமேயறிந்தேயத்தால், ஆயமனேபேதமெலாமிழந்தெப்போதும் அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய். (௫௰)

ஷை கூஎ-வது்அத்தியாயம்.

விட்டவிலக்கணேயாலும் ஐக்கியந்தோன்ரு விடாத விலக்கணேயாலும் ஐக்கியந்தோன்ரு, திட்டமதா முபய விலக்கணேயொன்ருலே யிலங்குபரசீவைக்யமிலங்குமென்றே, திட்டமுறத்தோற்றிய வித்தோற்றமெல்லாந்திகழுருவாம்பரப்பிரமசொரூபமென்றே, சிட்டமுறுயகண்டபர நிச்சயத்தாற் சின்மயமாம்பரப்பிரமமாத்ரமாவாய். (௨௪)

௸ உஅ-வது அத்தியாயம் மகாவாக்கியார்த்தம்.

இவ்வத்தியாயத்தில் அறுபது செய்யுள்களால் நான்கு மகாவாக்கியம்கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில விங்குக் கூறுவாம்:—

மாயையெனுமுபாதியுறுமீசன்றானே மருவியதற்பதமுரைசெய்வாச்சியார்த்தம், ஆயதனதவித்தையுறுஞ்சீவன்றானே யறைகின்ற துவம்பதமோர் வாச்சியார்த்தம், எயமதாமுபாதியெலாமிழந்தபின்ன ரேகவிலக்கணமானவத்துத்தானே, தூயபதமிரண்டிக்குமிலட்சியார்த்தந் தொடர்புற்றவைக்கியமேயசிபதார்த்தம். (உச)

தற்பதலட்சியமானபிரமரூபந் துவம்பதலட்சியமானநீயேயாவாய், அற்பமுமேயிதிலை யமமைவதில்லையகண்டசிவன்றன்னுணையறைந்த துண்மை,சொற்பமிலாவகண்டபரிபூரணமானசுத்தமதாம்பரப்பிரமநீயேயென்று, செப்பிடுங்குருபரனேகுருவாகின்றோன் செப்பியவாறறிந்தவனே சீடனுவான். (உரு)

சித்திரமாமுபாதியுறுஞ்சீவன்றானே செப்புமயம்பதத்துக்கு வாச்சியார்த்தம்,வித்தரமாமுபாதியுறுமீசன்றானே விளம்பியிடுமான்மபதவாச்சியார்த்தஞ், சுத்தமதாஞ் சிவபர சொரூபந்தானே சொல்லிய வி்வுபயபதலட்சியார்த்தம், அத்திரமாமுபயபதலட்சியத்தினைக்கியமேபிரமமெனும்பதத்தினர்த்தம்.(ருய)

இன்னவிதமிருக்குமுதல்வேதாந்தத்தி லிலங்கிய விந்நான்குமகாவாக்கியத்தின், பின்னமிலாவைக்கியமாமகண்டார்த்தத்தைப் பேதமெனும்பிராந்தியெலாந்திரும்வண்ணம்,அன்னசிவனருளியவாறடைவாய்ச்சொன்னேமலறைந்தபடியழுத்தமுறவப்யாசித்தே, நின்னுருவாய்நிலைபெற்றவகண்டார்த்தத்தை நிருமலமாய்நீயென்றுமனுபவிப்பாய். (ருச)

சுயமதுவாந் தத்வமசியென்னும்வாக்யம் சொல்லுமுபதேசமகாவாக்யமாகும், இயலுமகம்பிரமாஸ்மியென்னும்வாக்யமிலகுமநுபூதிமகாவாக்யமாகும், மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரமவாக்யம் மனனத்தி னப்பியாச வாக்கியமாகும், அயமான்மா பிரமமென வறையும்வாக்கிய மதற்கெல்லாஞ் சம்மதமாம் வாக்யமாமே. (ருரு)

ஆதலினுற்றத்வமசிவாக்கியத்தா லருளியவாறகண்டார்த்த மறிந்துகொண்டு, பேதமறப்பிரஞ்ஞானம்பிரமமென்று பேசுமகாவாக்கதனுன் மனனஞ்செய்து, வாதகமிலயமான்மாபிரமமென்னும்வாக்கதனுற்சரியென வேசம்மதித்திங்,கோதுமகம்பிரமாஸ்மிவாக்கியத்தா லுரைத்தவகண்டார்த்தத்தையநுபவிப்பாய். (ருசு)

அனிசமகம்பிரமாஸ்மிவாக்கியத்தா லகண்டபரபாவனையேயப்யாசித்து, நனிமருவும்பாவனையாநாமரூப நாட்டமெலா நன்றாகநாசஞ்செய்து, துனிமருவுந் துவிதத்தின் றொடர்பேயின்றித் துகளற்றவகண்டார்த்த மநுபவித்தவ், அனியமிலாவகண்டார்த்தவடிவேயாவா யவ்வண்ணமாகுவதே யகண்டமோட்சம். (ருஎ)

பிரமம் சத்தும், ஜீவன் சத்துப் போலியு மென்பது.

இந்த வீரபத்திர மூர்த்தியார்: பிரமம் ஒரு பூரணசத்துப் பொருள், சீவன் ஒரு பூரணசத்துப்பொருள் (சீவர்கள் பல கோடியாகலின் ஒவ்வொன்றுந் தனித்தனிப் பூரணசத்துப் பொருள்கள்)

ஆக விருவகைப் பொருள்களும் சத்துப்பொருள்களென்று சுருதியினு லாவது யுக்தியினுலாவது அனுபவங்களினுலாவது சாதித்துக்கொள்ள முடியாமலும் அதுவிஷயமாக நேர்ந்த சங்கைகட்கு உத்தரஞ்சொல் லாமலும் வீண்போக்குக்காட்டுமிவர்: பிரமம் ஒன்றுதான் என்றும் ஒன்றென்று கூறிய பசு வேறு என்றும் கூற எழுந்து ''ஒன்றென்றதொ ன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்-ஒனறென்ற நீ பாசத்தோடுளைகாண்'' என வொரு செய்யுளைக் காட்டுகின்ருர். அதை யிபற்றியவர் மெய்கண் டார் என்பவர். அவர் இவர்மதத்தினர். அவர் பிரமாணத்தை யிவர் கொள்ளவேண்டுவது ஆவசியகந்தான். இவர் அதற்குக் கட்டுப்பட்டி ருக்கிருர். அத்வைதிகள் அங்கப்பாட்டைப் பிரமாணமாகக்கொள்வார் களோ? அதற்குக் கட்டுப்படுவார்களோ? இவருமமெய்கண்டாரும் அத்வைதிகளுக்குப் பிரதிவாதிகள்; அலலது வாதிகள். அத்வைதிக ளால இயற்றப்பட்ட கைவல்லியம் வேதாந்த சூடாமணி இவைகளைக் காண்பித்தால இவர்பிரமாணமாக அங்கீகரிப்பாரா? அங்கீகரியாரன்ருே? அங்ஙனமே இவர் மதத்தினராலியற்றப்பட்ட நூலை அத்வைதிகள் எங் ஙனம் அங்கீகரிப்பர்? இவ்வளவு நியாயந்தெரியாத விவரை விவேகி யென மதிப்பதெங்ஙனம? ஒருமதத்தினர் மற்ருெருமதத்தினருடன் வாதஞ்செய்ய எழின், இருவரும் பொதுப்பிரமாணத்தைக் காட்டி யன்ருே தம்மதத்தைத் தாபித்துக்கொள்ளவேண்டும்? தம்மவர் கூறி யதையே பிரமாணமாகக் காட்டியா தாபிததுக் கொள்வது? இது எவ்வூர் வழக்கம்? தம்மவர்கூறியதையே பிரமாணமாகக் காட்டுவ தால் இவர்க்கு வேதமுதலிய பொதுப்பிரமாணங்க ளில்லை யென் றேற்படுகின்றது. இல்லாதபோது இவர் வேதப் புறமதஸ்தரென் பதற் கியாது தடை? இனி, ஷை செய்யுளிலாவது இவர்க்குச் சாதக மேதேனு முண்டாவென்று பார்ப்போம. அதனுரையாவது: "வேதம் ஒன்றென்பதற்குப்பொருள் ஒன்றே; அவ்வொன்று யாதென்னின் பதிப்பொருளாகும். அவ்வாறு ஒனறென்றுசொல்லும் நீ யாரெனின் பசுவாம். நீ பாசத்தோடு சம்பந்தப்பட்டா யாகலின் பசுவெனப் பட்டாய்" என்பதாம். இதிலிவர்மதத்துக்குச் சாதகம் யாது? அத்வைத மதத்துக்குப் பாதகம் யாது? பிரமத்தைவிடப் பசுவேறு என்று சொ ன்னதினுலேயே துவைதம் நிலைத்துப்போமா? நெருப்பென்ருல் வீடு வெந்துபோமா? அம்மம்ம! இவருக்குத் துவைதத்தைத் தாபிக்க எவ் வளவு அவசரம்! இவர் சொல்லாலேயே த்வைதத்தை நிலைப்படுத்த ப்பார்க்கின்ருர். இவர்க்குத் துவைதத்தில் வெகு ஆசை இருக்கி ன்றது. அந்த ஆசையினுற்ருனுக்கும் பொருளின்றிச் சொல்மாத் திரையானே யிரட்டைக் கொடிபோடப் பார்க்கின்ருர். இவர் சொல் லளவிலேயே யிருக்கட்டும். நாம் சொல்லோடு பொருளிலும் நுழை ந்து அதனுண்மையை யாய்ந்திடுவாம்.

பிரமத்தைவிட ஜீவன்வேறு என்பதனாலேயே பிரமத்தைப் ஜீபோல வன் சத்தெனக்கூற வமைந்து பிரமம் ஒரு சத்துப்பொருளும் ஜீவ னொரு சத்துப்பொருளும் ஆய்விடமாட்டா. ஒன்றைவிட மற் றொன்று வேறு என்பதில் இரண்டும் சத்துப்பொருளா யிருப்பது முண்டு; ஒன்று சத்தும் ஒன்று சத்துப்போலியுமா யிருப்பதுமுண்டு. கடம் படம் என்கிற இரண்டைவைத்துக் கடத்தைவிடப் படம்வேறு என்னின் இரண்டும் சத்துப் பொருளாம்; மண் கடம் ஆகிய இர ண்டை வைத்துக் கடத்தைவிட மண் வேறு என்று சொல்லின் அப் போது இரண்டுஞ் சத்துப் பொருளாகா. ஒன்று சத்தும் மற்றொன்று போலியுமாம். அதாவது மண் சத்தும் கடம் போலியுமாம். (கயிற் றரவு கானனீர் சொப்பனவுலகு முதலிய திருட்டாந்தங்களும் அவச ரத்துக்குத் தக்கபடி யெடுத்துக் கொள்ளலாம்.) இவ்விரண்டில் பிரம பசுக்களுக்குக் கடபட திருட்டாந்தத்தை யெடுத்துக்கொள்ளலாமா? மண் கடமுதலிய திருட்டாந்தங்களை யெடுத்துக்கொள்ளலாமா? கட பட திருட்டாந்தத்தை யெடுத்துக் கொள்ளலாமெனின் அது பொருந் தாது. ஏனெனில் கடமும்படமும்வேறுவேறு இடத்திலிருக்கும்கண்ட ப்பொருள்கள். அவ்வாறே பிரமமும் ஜீவனும் வேறுவேறு இடத்தி லிருக்கும் கண்டப்பொருள்க ளாகவேண்டும். அன்றிக் கடமிருக்கு மிடத்திற்படமில்லை; படமிருக்கிறவிடத்தில் கடமில்லை. இதுபோலவே பிரம மிருக்குமிடத்தில் ஜீவனில்லை; ஜீவனிருக்குமிடத்தில் பிரம மில்லை. இதனால் பிரமம் அபரிபூரண தோஷத்தை யடைகின்றது. இது சுருதிவிரோதம். மண் கடமுதலிய திருட்டாந்தத்தைச் சொல் லின் ஷை தோஷ மேதுமிலலை. மண்ணுமிருக்கின்றது; கடமுமிருக் கின்றது. கட மொருகாலத்தி லில்லாமற்போகின்றதால் வேறுமாகின் றது. ஆயினும் மண்ணைப்போல் கடம் சத்துப்பொருளன்று; சத்துப் போலிப் பொருளாம். ஆதலால் மண் கட திருட்டாந்தமே ஏற்கும். இந்தத்திருட்டாந்தத்தால் பிரமத்துக்கும் பரிபூரணஞ் சித்திக்கின் றது; ஜீவனுக்கும் ஒருவிதமா யிருப்பேற்படுகின்றது; அன்றி மண் கட முதலிய திருட்டாந்தஞ்சொல்வது சுருதியாதிகளுக்குஞ் சம்மத மாயுமிருக்கின்றது; கயிற்றரவுமுதலிய விவர்த்தவாத திருட்டாந்தமும் சுருதியாதிக ளேற்கின்றன. இந்தவிஷயத்தைப் பற்றிப் பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதமானது பிரமத்தினின்றும் உயிர் உலகங்களான சேதனசேதனங்க ளுண்டாயினவென்றும் ஷை உயிர் உலகங்கட்கு அப்பிரமம் அபின்ன நிமித்தோபாதான காரணமென்றும் மண்ணைத் தவிரக் கடத்துக்கு எங்ஙனம் பொருளின்றோ, அங்ஙனமேபிரமத்தை த்தவிர வுயிர் உலகங்கட்குப் பொருளில்லையென்றும் 140 செய்யுள் கள் வரையில் கூறுகின்றது. அச்செய்யுள்களில் சிலவற்றை யிங்கெ டுத்துக் கூறுவாம்.

பிரமகீதை சாந்தோக்கிய உபநிஷத்.

மண்ணதோர்திரளைகாணவனைந்தகாரியங்களந்த
மண்ணில்வேறிலாதுளக்காலும்வருதலேயாதலால்வே
றெண்ணிநாமரூபமிசைந்திலையாகுமென்று
மண்ணிதேயுள்ளதென்றும்வானவர்க்குஅயன்முன்சொன்னன். (௪)

காரியமெல்லாமுள்ளகாரணம்வேறுமன்று
காரியமொருகால்வேறாய்வேறன்றியிருப்பதன்று
காரியங்காரணத்தின்வேறென்றுகருதிலந்தக்
காரியம்அசத்தோசத்தோசதசத்தாய்வேறோவென்றான். (௫)

சத்தாயேவேறதென்னிற்காரணமுடையதொன்றே
பொய்த்தாயகாரியத்தின்சத்தையோபுகலுங்காலே
யொத்தாகின்றதன்றேயுரைத்தனனுலகமெல்லாம்
வைத்தாயுமறைகளோதுமலர்மிசைமன்னும்வானோன். (௬)

காரணசத்தைதானேயென்றிடில்வேறுசொன்ன
காரியசத்தையில்லையாயிடுமுன்புசொன்ன
காரணசத்தையொன்றேயானபினந்தச்சத்தைக்
கோதொருபேதமுண்டாம்படியெங்ஙனுரைமினென்றான். (௭)

சத்தைதானென்றாநின்றதாயினுங்காரியங்க
ளொத்தபேர்வேறுபாட்டாலுள்ளகாரணத்தில்வேறே
யித்தகைத்தென்றவார்த்தையியம்புபேரளவேயானல்
வைத்தகாரியமுண்டென்னும்வார்த்தையும்அசத்தேயாகும். (௮)

சத்தையில்லாதபோதுகாரியமில்லையாகும்
இத்தன்மைக்காரியத்துக்கிலாமையேயிசைவதென்றும்
அத்தன்மையசத்தினுக்கேகாரியம்பிறந்ததென்றிங்
கொத்தொவ்வாதுரைத்தவார்த்தையென்றுமின்றாகுமன்றே. (௯)

காரணசத்தையேயக்காரியசத்தையின்று
வேறொருசத்தையுண்டேயென்றிடில்வேறுசொன்ன
காரியசத்தையுள்ளகாரணசத்தையோடு
கூரியசத்தாய்க்கொண்டோஅசத்தாயோநிற்பதென்றான். (௰)

சத்தாய்க்கொண்டேவேறென்னிலொன்றேசத்தையிரண்டாகா
தசத்தாய்க்கொண்டுகாரணத்தோடாகிவேறுநிற்குமெனில்
அசத்தாமிதுதானிலாமையினல்அசத்தேயாகுங்காரியத்தை
யிசைத்தேலுளதாய்ச்செயமாட்டாதென்றுமலடிமகன்போல. (௧௧)

காரியமொருகாலுண்டாமொன்றினலழிவதில்லை
காரியந்தனக்குற்பத்தியிலாமையில்லாதொன்றாங்
காரியந்தானென்றாலேநாசமென்றுரைத்தல்கூடா
பாரிதுவென்றுவானோர்க்குரைத்தனன்பதுமமேலோன் (௧௨)

இன்னதோர்படியிருக்குமெனப்படாதிலாமையேபோ
லன்னதேயாதலாலேயாவதுமிலதேயாகுஞ்
சொன்னவிவ்விலாமைகூடியிருந்துளவித்தினின்றும்
பின்னையும்வேறேயுண்டென்றுரைத்திடேல்பெயர்த்துநின்றும். (௧௩)

இதுக்குநீர்சொன்னவேறேதிரண்டுமொன்றென்கையென்ன
அதற்கொருகாரகத்தாலன்றிவேறமைவதில்லை
யொதுக்கமில்லாததொன்றையுளதொடேகூடுமென்னும்
அதுக்குவேறொன்றுமில்லையாதலாற்கூடாதென்றும். (௧௪)

காரணத்தோடுகூடல்வேறெனிலதுதன்னாலுங்
காரணந்தானேயாகுமிதினின்றுங்கருதிச்சொன்ன
காரியம்பிறக்குமென்றவிதுகொண்டுவேறுசொல்லிற்
பாருளகுற்றமுன்போற்பரிகரிப்பாருமில்லை. (௧௫)

இரண்டுக்குமொன்றேசத்தையெனுமிதுவேறேயென்னிற்
றிரண்டிடுங்குற்றமெல்லாஞ்செறிதனிச்சயமெப்போதுந்
திரண்டகாரியம்அசத்தேயாதலாற்சதசத்தென்னி
லிரண்டிற்குமுனைத்தகுற்றமிசைந்திடுமியல்பினாலே. (௧௬)

உண்மையிற்பேதமின்றியிருந்தேயும்பேதமென்னல்
வெண்மையேசெய்தரூபவியாபாரந்தோற்றங்கேடு
பண்வயினிவற்றாற்கொள்ளும்பயனுமரூபம்வேறு
முண்மையிலெல்லாம்பொய்யாலுண்டாகுமனைத்துமன்றே. (௧௭)

எல்லாவிகாரங்களும்வாக்காலென்றூழுன்டென்றுரைப்பதுவுஞ்
சொல்லாமளவேயெவ்விடத்துந்தோன்றுமென்றதுண்மையதே
யல்லாவிகாரமறிவொழியவனைத்தும்பொய்யேவிகாரத்துக்
கில்லாதாகுமுண்மைபிறிதில்லாதாகுமாதலினால். (௧௮)

காரணமதனாலன்றிக்காரியமுளவாய்த்தோன்றாக்
காரணமொழியவேறுகாரியமின்மையாலே
காரியமனைத்தினுக்குங்காரணமதுவேயுண்மை
யோர்தரவிரண்டும்வேறென்றியம்பிடலியல்பின்றாமால். (௧௯)

ஆமன்றெனநினைவீரலதன்பின்வழியறிவீர்
நாமுன்சொனமுதல்காரணமறியமுழுதறிவாஞ்
சேமம்படமிகவுந்தெளிவுறுவீரிதுவேநீ
தாமந்தருமலர்மேலுறைதலைவனுறைதருமால். (௨௦)

கூறும்பொருள்விரிவென்றிவையறியாமையின்முழுதும்
வேறும்மலவேறாடுடனாய்நின்றதுமலதான்
றேறும்படியுளகாரணமொன்றேயுளதெனலால்
வேறென்றிடுபேதம்மிலதாமெங்கணும்வினையாம். (௨௧)

அயலொன்றிடுபொருளும்மதன்பிரிவும்மறிவரிதா
மியல்பின்கணதறியும்பொழுதிவைதான்மிகவேறா
மயலொன்றிவையறியில்லறிவறியாமைதன்னியல்பான்
முயலும்பலபேதம்மெனமுடியும்வினைமுழுதும். (௨௨)

பேதந்நெறியோரில்விலதாகும்மதனாலே
பேதம்மொடபேதம்மதுபேசல்பிழையேயாம்
ஏதம்மிலதாயெங்கணுமொன்றாயொழிவில்லா
தியாதொன்றதுமுதல்காரணமெனுமாமலர்மிசையோன். (௨௩)

மண்ணும்மனைவானும்மனைபவையும்பிறிதாயே
யெண்ணும்மளவறிவின்செயலிவனைப்பெறவிசையுங்

கண்ணென்றிடவருகாரணமொன்றேயமலமதால்
எண்ணும்மறிவுருவையிசையாநிற்பதெவ்விடமும். (௨௪)

மனைகின்றவனொருகாரணம்வரசேதனம்வேறு
நினையும்படியிலதாதலினிலையாயுளதறிவி
லனகாரணமறிவாயினுமனைவாணிகரன்று
நினைமண்ணொடுநிகரானவைதனையேகொடுசெயுமால். (௨௫)

தோன்றலாலசித்துமாகித்தமத்தொடுகலந்துநின்றே
யான்றவமுனிகள்பண்ணுமனனத்தாலளப்பொணாதாய்ச்
சான்றதாயெங்குநின்றசங்கரனுடைத்தாயொன்று
யீன்றிடுமெறியவெல்லாமித்தன்மைத்தெனவொன்றுண்டு. (௨௬)

காரணமேவிமாயைபடைத்தளித்தழிப்பதாகுங்
காரணஞ்சத்தாஞ்சித்தாயிருத்தலாலென்றுகொண்டே
பூரணமாகியுள்ளபொருளினைச்சுரர்கள்கேட்ப
வாரணமுரைத்தவாதியருளினனறியும்வண்ணம். (௨௭)

உண்மைசித்தினுக்கேயுள்ளதசித்தெனும்பழுதைப்பாம்பிங்
கெண்மையினிலாதவண்ணமிசையுமுங்கட்குமேற்கக்
கண்ணெனமுழுதுநின்றகாரணமொன்றேசத்தா
யெண்ணிடிலென்றுமுண்டாயிருப்பதென்றியம்பலுற்றான். (௨௮)

அறியாதாரசத்தாய்முன்புகாரணமுளதாய்த்தென்பர்
நெறியாலிவ்வசத்துண்டாக்குங்காரணமாகாதென்றும்
பிறிதாயகாரியங்களிதினின்றும்பிறக்குமென்னில்
வறிதாயமலடிமைந்தன்காரணமக்கட்கெல்லாம். (௨௯)

அசத்துத்தன்சத்தியாலேயாவுக்குமுதலாமென்னில்
அசத்துக்குச்சத்திகூடாதாம்அசத்தாதலாலே
யசத்தலாவித்திலென்றுமங்குரந்தோன்றுமானால்
அசத்தசத்தாகுஞ்சத்தேயாவையுமாவதென்றும். (௩௰)

அசத்தின்கணுளதாஞ்சத்திசத்தாயோஅசத்தாய்க்கொண்டோ
அசத்துடன்சத்தாய்க்கொண்டோஆய்நின்றவாறதென்னை
அசத்தினையுளதாஞ்சத்திஆசரித்திடுவதென்னில்
அசத்தாயமலடிமைந்தனியாவையும்ஆக்குமன்றே. (௩௧)

அசத்தின்றன்சத்திதானும்அசத்தாலேநிற்பதென்னில்
இசைத்திடுங்காரியங்களியாவையுமியற்றாதென்றும்
அசத்தோடேமலடிமைந்தன்ஆக்குவதிலாமையேபோல்
அசத்தோடேசத்தேயென்னில்ஆயிடும்இரண்டின்குற்றம். (௩௨)

அசத்துத்தன்சத்தியாலுங்காரணமாகாதானால்
அசத்துமுன்புளதென்றோதற்குஅருத்தமுமில்லையேயாம்
அசத்தலாதாகுமொன்றேயனைத்திற்குமுதலதாகும்
அசத்துளதாகுமென்றல்அழிந்திடும்வார்த்தையன்றே. (௩௩)

பூதத்தாலுளதாயுள்ளபுவனங்களுயிர்கள்முன்போன்
றோதத்தானரியசத்தாலுதித்ததென்றுணரும்வண்ணம்
வேதத்தால்முழுதுஞ்சொன்னவடிவினைவிளங்குமாற்றால்
ஓதத்தான்றொடங்கலுற்றான்உயர்தருசுரர்கட்கெல்லாம். (௩௪)

எல்லாமுண்டாவதற்குமுன்னே தோன்றி யித்தனைக்குங் காரணமாஞ் சத்தையாகும், இல்லாதமுதல் முடிவை யுடைத்தா யொன்றுயிருக்கும் இது வெனலாகும் இயல்பித்தாகி, நில்லாதவுலகனைத்து முன்புசெய்த நெறியதனை யுடைத்தாகி நிமலமாகிச், சொல்லாலும் அளப்பரிதாம் இதன்றனுண்மைசுருதி முடிவதனுலுந் தொடரொணுதால். (௬௫)

காலமுங்கன்மந்தானும்பரிபாகமானவாறே
ஞாலமுண்டாகநல்லகுணத்தினைக்கலந்துநிற்கும்
பாலதொன்றில்லாஇந்தச்சத்திமான்படைத்தற்காக
ஏலவேயெல்லாமாவோமென்றுகொண்டிசைந்துபார்த்தான். (௬௬)

பார்த்தபின்முன்னுகாயம்வாயுவைப்படைத்துப்பின்பு
தீத்தனையப்பைச்செய்தேயனமெனச்சொல்லப்பட்ட
பூத்தனையுளதாய்ச்செய்தகாரணமாசாவீசன்
வாய்த்தநுண்பூதமைந்தால்வகுத்தவாறியம்பக்கேண்மின். (௬௭)

முதலியசெய்யுள்களாம்.

ஷ்சூதசங்கிதை பரமவிஞ்ஞானமுரைத்த அத்தியாயத்தில் ௬-வது செய்யுளில் " சிவன் இபபசுவினுக்கு வேறுனேன் " என்று சொலலிவிட்டு, ௬-வது செய்யுளில் முன்னும் அவித்தையால் பசுபேதமும்மொய்வலியமாயையாலபன்னு பாதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டது" என்று கூறியதில் பிரமத்தைப்போல் ஜீவன் சத்தாயிருந்து பேதப்படவில்லையென்றும் அசத்தாயிருந்தே பேதப்படுகின்றுனென்றும்ஏற்படுவதால் இவரதுதுவைத வாதம்தூரீகரணமாய்ப்போயிற்றென்க.இவர்பிரமாணமாகக்கொண்டசிவஞானபோதத்திலும் பசு சத்து என்று கூறியதில்லை "யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலின், சத்தேயறியாது அசத்திலது அறியாது, இருதிறனறிவுளது இரணடலா ஆன்மா" என்ற சூத்திரப்படி பசு சதசத்தெனக் கூறப் பட்டிருக்கின்றதென்க. சதசத்தென்றுகூறப்பட்டிருக்கின்றதேயன்றி அசதென்று கூறப்படவில்லையேயென்று சங்கைபண்ணலாம். அசத்தென்று கூறுவிடினும் சத்தென்றுவது கூறியிருக்கின்றதா? இல்லையே.இல்லாதபோது சத்தென்னுங்கட்சி அடிபட்டுப்போயிற்றன்று? அசத்தென்னும் கட்சியும் அடிபட்டுப் போயிற்றேயெனின், அது ஒருபோதும் அடிபடாது.சத்தென்பதும்அசத்தென்பதும பரஸ்பரம்நேர்விரோதமான தர்ம்மம். அது ஒருபோதும் ஒரு பொருளின்க ணிராது; ஒளியும் இருளும் ஒரு பொருளின்க ணிராமைபோல வென்க. இவரது சிவஞானசுவாமிகளும் சிவஞானசித்தி நான்காவது சூத்திரம் ௧௧-வது செய்யுளினுரையில் "மறுதலைப்பட்ட இரண்டு தன்மை ஒருபொருட்கின்மையானும்" என்று கூறியிருக்கின்றனர். அப்படிப்பட்ட பிரயோக மிருக்கின்றதே யென்னின் அது உண்மைதான். அதற்குரை அசத்தென்றே செய்யவேண்டும். கானற்சலம் முன்பு சததாயும் பின்பு அசத்தாயும் காணப்படினும் அதனது யதார்த்தம் அசத்தேயாம். முன்பு உள்ளதாய்க் காணப்பட்டபோது சத்தென்கிற தர்ம

மத்தையும், பின்பு இல்லாததாய்க் காணப்பட்டபோது அசத்தென்கிற தர்மத்தையும் ஏற்று, அது காரணமாகச் சதசத்தென்கிற நாமத்தைப் பெற்றாலும் உண்மையில் இல்லாமையால் கானற்சலம் அசத்தேயாமென்க. அசத்துக்கும் சதசத்துக்கும் பேத மிருக்கிறது. அசத்தென்பதற்குப் பொருள் இலது; சத சத்தென்பதற்குப் பொருள் உளதிலது. மலடி புத்திரன் என்று மிராமையால் அசத்தே (யிலதே). கானற்சலம் ஒருகாலத்திலிருந்து ஒரு காலத்தி லிராமையால் சதசத்தே (உளதிலதே) யாம். எது சதசத்தோ அது உண்மையில் அசத்தேயானாலும் மலடிமைந்தனது அசத்திற்கும் கானற்சலத்தினது அசத்திற்கும் பேதமிருக்கின்றமையால் கானற்சலத்தைச் சதசத்தென்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. கானற்சலம் மலடிமைந்தனைப்போல முற்றும் அசத்தாகாமலும் உண்மையான நீரைப்போல முற்றும் சத்தாகாமலும் இருத்தல் பற்றி, சத சத்தென்று சொல்லவேண்டுமானாலும் நேர்எதிர்மறைத்தருமம் ஒருபொருளின்கணிருக்கமாட்டா தாகையால் இன்னதன்மைத்தெனக் கணிக்கப் படாதென்று பொருள்கொள்ளும் அநிர்வசனீய மென்கிறார்கள் அத்வைதிகள். இந்த அருத்தங்கொண்டே ஷை சிவஞானபோத சூத்திரத்தில் 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' என்று கூறப்பட்டதென்க.

மகாபுராணங்களிலொன்றான இலிங்கபுராணமென்னும் சிவபுராணம் தியானவிதியுரைத்த அத்தியாயத்தில் ௬க-வது செய்யுளிலும்

"விரிந்தபூதங்களினோடுவிளம்பிந்தியங்கள்தத்துவங்கள்
திருந்தாஅகங்காரத்தினொடுசெறிமுக்குணங்கள்மாத்திரைகள்
பொருந்துமாயைசீவன்இவைபொய்யாம்யாமேபொய்யின்றி
யிருந்துளவ்விடத்தும்நிலைபெறுவோம்அதனால்தானுவெனஇசைப்பார்."

என்றுகூறியிருக்கின்றமை காண்க.

இவர் காண்பித்த 'ஒன்றென்ற தொன்றேகாண்' என்ற வெண்பாவின் மற்றப்பாதியில் "ஒன்றின்றால் அக்கரங்களின்றாம் அகரவுயிரின்றேல் இக்கிரமத்தென்னும் இருக்கு" என்றிருக்கின்றது. இதனுரையாவது "அகரவுயி ரில்லையாயின் அக்கரங்க ளில்லையென்று வேதம் ஓதும்" என்பதாம். அகரமில்லாவிடில் மற்ற எழுத்துகளில்லை. அது போலப் பிரமமில்லாவிடில் மற்றப்பொருள் அதாவது ஜீவ உலகப் பொருள் இல்லை. இதனால் பிரமத்துக்கும் ஜீவவுலகங்கட்கும் அபேதஞ் சித்தித்தது. அகரத்துக்கும் மற்ற எழுத்துகளுக்கும் எப்படி அபேதஞ் சித்தித்ததோ அப்படியே பிரமத்துக்கும் சேதனுசேதனவுலகுக்கும் அபேதஞ் சித்தித்ததென்க. "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னுந் திருக்குறளின் பொருளும் இதுவேயாமென்க. மெய்கண்டசுவாமிகள் எந்தச் சூத்திரத்துக்கு ஷை வெண்பா

கூறினுரோ, அந்தச்சூத்திரமும் "அவையேதானேயாய்" என அபேதமே சாதிக்கின்றது. மண்ணுனது கடாதிகளாயும் அல்லவாயும் எப்படி அபேதமாயிருக்கின்றதோ, அப்படியே பிரமமானது சேதனுசேதன வுலகாயும் அல்லவாயு மிருக்கின்றது. சாந்தோக்கிய வுபநிஷத்திலும் பிரமத்துக்கு மண்ணையும் உலகுக்குக் கடத்தையும் உபமானமாகக் கூறி, விவரித்துப் பேசுகின்றதென்பதை முன்னமே காட்டியுள்ளோம். மற்றவேதவேதாந்தங்களும், ஸ்மிருதி புராணுதிகளும் இங்ஙனமே மண் கடம், கயிற்றரவு, இப்பிவெள்ளி, கானனீர், மனம் சொப்பனவுலகு முத லிய திருட்டாந்தங்களைக் கூறுகின்றன. இவ்வாறுசொல்வதில் ப்ரம்மத் துக்குபூரணஞ் சித்திக்கின்றது; சுருதி யுக்தி அநுபவங்கட்கும் பொரு த்தமாகின்றது. இதற்கு மாருகப்பேசும் இவரது துவைத சித்தாந்த த்திற்குச் சுருதியுமில்லை, யுக்தியுமில்லை, அநுபவமு மில்லையென்க.

உபமானங் கூறியிருக்கின்றதேன்பது.

"இரண்டறக்கலத்தல் என்பதற்குச் சைவசித்தாந்திகள் கூறும் பொருளிழுக்கியதென விவர்மதமன்றே? இவர்மதத்தில் இவர்கூறும் முத்தி யினைத்தென்று உபமான முகத்தா லினிது விளக்கிக்காட்டுவா ராக" என்கிருர். வேதோக்தமாகவாவது வேதவிரோதமில்லாத ஆகமோக்தமாகவாவதுஇராகின்றசைவசித்தாந்திகள் கூறும்அத்வைத முத்தியினை இழுக்கென்று சொல்வா ரெவருமில்லை. வேததூஷக அவைதிக மாயாவாததுவிததாந்திரீகப்போலிச்சைவர்கள்கூறுமதுவித சைவ முத்தியினையே சுருதியுக்தி அநுபவவிரோதமான இழுக்குடைய தெனக் கூறுகின்ருர்கள் அத்வைதிகள்.

இவர்மதத்தினர் கூறிய வுபமானங்களையெல்லாம் ஒருமுறைஇரு முறையன்று, அத்வைதிகள் பன்முறை தூகள் துகளாகக் கண்டித்துத் தும்சஞ்செய்தமையும் அதன்பேரில் ஏதும் பேசவிடமின்றிப் பயந்து ஒடுங்கிப் பதுங்கியிருக்கின்றமையும் மேலே பேசவிடமில்லாமை கார ணமாகப் பிறர்க்குச் சொல்வதில்லையென நாணமின்றி யெழுதினமை யும் யாவருக்கும்தெரியுமன்ருே? இங்ஙனமாக அத்வைதிகளை மாததிரங் கேட்பதென்னவிவேகம்? இப்படிக்கேட்பதை யோசிக்கின் இதுவரை யில் அத்வைதிகள் சொல்லாம விருப்பதுபோலன்ருே விருக்கின்றது? இது முழுப்பூசணிக்காயைச் சோற்றில மறைப்பது போலாம். இது விஷயமாகத் தற்காலத்தில் த்வைதிகளைக்கண்டிக்க எழுந்த "சங்கரா சாரியார் அவதாரமகிமை" "வேதாந்தசங்கைநிவாரணம்" "அத்வைத தூஷணபரிகாரம், "பதி பசு பாசவாதம்" முதலிய நூற்கள் நன்ருய்ப் பேசப்பட்டிருக்கின்றன; அதற்குச் சுருதி முதலிய பதினுன்கு வித் தைகளும் அவைகளைச்சார்ந்த (ஞானவான்களுடைய) நூல்களும் சாக்ஷி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது சத்துப்பொருளில் அநிர்வச னீயப்பொருள் இலயமாவதுபோ லென்றறியக் கடவர்.

பந்தமுத்தி.

"எமக்குப் பந்தமுத்திகளில்லை யென்பாராயின், இப்போது அவருக்குப் பந்தமிருப்பது சத்தியமாகையால், இதனை யவரில்லையென்பது சொற்சமபிரமமாய்முடியும்" என்கிறார். ஞாதுரு ஞான ஞேயங்களற்ற துரியாதித சுத்த சிவாவஸ்தையில் பந்தமுத்தி யில்லையென்பது சுருதிசம்மதமாகலின் அதைத் தள்ள எவரானுமாகாது. மற்றப்படி ஜீவாவஸ்தையில் ஜீவனுக்குப் பந்தமுத்தி யுண்டென்பது சுருதி சம்மதமும் அத்வைதிகளின் கொள்கையுமா மென்க. சொப்பனவஸ்தை சாக்கிராவஸ்தையை நோக்கக் கற்பிதமேயானாலும் அந்தச்சொப்பனவஸ்தைவரையில் அது உண்மையேயாம். அதுபோலக் காண்பான் காட்சி காணும்பொருளென்கிற விருத்தியற்றதும், நானென்றும், நீயென்றும், அதுவென்றும், நான் அதுவென்றும், அது நானென்றும் கருதப்படும் அதிசூட்சுமசங்கற்பமும் அற்றதும், இரவு பகல் மேல் கீழ் நல்லது கெட்டது பெருமை சிறுமை முதலிய பேதங்களற்றதுமான துரியாதீதாவஸ்தையில் பந்தமுத்தியென்கிற சங்கற்பமே யில்லாமையாலும், இல்லாமையென்கிற சங்கற்பமுமில்லாமையாலும் அவ்வவஸ்தையில் பந்தமுத்தியென்பது கற்பனையேயாமென்பதாம். மற்றப்படி சாக்கிராவஸ்தையில் பந்தமும் விடுதியும் சத்தியமேயாமென்க. இந்தச் சத்தியம வியாவகாரிகமான சத்தியமேயன்றிப் பாரமார்த்திக சத்தியமன்று. பந்த மிருப்பது சத்தியமென்றும், அதை யில்லையென்று சொல்லப்படாதென்றும் கூறுகின்றார். அதை நாமும் அங்கீகரிக்கின்றோம். ஆனால் துரியசிவனைப்போலப் பாரமார்த்திக சத்தியமாய் அங்கீகரிக்கமாட்டோம். அங்கீகரித்தால் தோஷம் யாதெனின் அப்போது ஜீவனையும் பாரமார்த்திக சத்தியமாய் அங்கீகரிக்கவேண்டும். அங்கீகரிக்கின் பிரமம் அபரிபூரணதோஷத்தையடையும்; அல்லாது சுருதி விரோதமும் வரும். ஆதலால் வியாவகாரிக சத்தியமென்றே கொள்ளவேண்டும். சொப்பனத்தில் சத்த பரிச ரூப ரச கந்தங்கள் அனுபவிப்பது அப்போது சத்தியமேயானாலும் சாக்கிராவஸ்தையில் அது அசத்தியமாய்ப் போகவில்லையா? அசத்திய மென்பதற்குப் பொருள் முற்று மில்லையென்பதேயன்று; ஒருவாறு உள்ளதே. அது பற்றியே அநிர்வசனீயமென்று சொல்லப்படுகின்றதென்பதாம். பந்த மிருப்பது சத்தியமென்றும் அதை யில்லையென்று சொல்லப்படாதென்றும் சொன்னதினால் அத்வைதிகள் முற்றுமே அதாவது ஆகாய தாமரையைப்போல பந்தமில்லையென்று சொல்வதுபோ லாகின்றது. இது வேதாந்த வழக்கறியா ருரையேயாம். அத்வைதிகள் பிரமத்துக்கு அபரிபூரணதோஷம் வராதபடி சீவனுக்கு இருப்புங்கூறி பந்தமும் விடுதியும் உள்ளது உள்ளபடியேசொல்லி வேதசாஸ்திர அவிரோதிகளாகின்றார்கள். இவர் மதஸ்தரோ அதற்கு மாறாகப் பேசிப் பிரமத்துக்கு அபரிபூரணதோஷத்தைக் கற்பித்து வேத சாஸ்திர விரோதிகளாகின்றார்கள். இவர், 'எமக்குப் பந்தமுத்திக

ளில்லை யென்பாராயின்' என்றுசொல்லியதில் நான் என்ற சொல்லுக்கு ஜீவனைப் பொருளாகக்கொண்டார். இந்த ஜீவன் பிரமத்துக்குப் பேதமா? அபேதமா? பேதாபேதமா? பேதமென்னின் பிரமம் அபரிபூரணமாகும். அபேதமெனின் ஜீவன்படும் தாபத்திரயாதி துக்கமெல்லாம் பிரமமே படுகிறதாயாகும். பேதாபேதமெனின் மேற்படி இருவித தோஷத்தையு மடையும். இனி ஜீவன் சத்தா? அசத்தா? சதசத்தா? என்னுங்கேள்விக்குச் சத்தெனின் பிரமம் எங்கும் நிறைந்தபரிபூரணமாகவின்ஜீவனிருக்கவிடமிராது. அசத்தெனின் ஜீவனே யில்லாமற்போம். சதசத்தெனின் மேற்படி இருவிததோஷமும் வந்துபொருந்தும். இவைகளுக்குச் சமாதானஞ் சொல்லிவிட்டுப்பிறகு பந்தமுத்தி விவகாரங்களைப்பற்றிப் பேசினல் அழகாயிருக்கும். ஆறு வருஷகாலமாய் இதற்குப் பதில் பேசாது மறைந்து ஒளிந்திருப்பது எங்கும் பிரசித்தியாயிருக்க, அதை மறைத்துவிட்டு, இப்போது அதற்கெல்லாம் சமாதானஞ் சொல்லிவிட்டதுபோலப் பகடித்தனஞ் செய்து சொற்சம்பிரமம் காட்டுவதென்னே! அஸ்திவாரம் போட்டல்லவோ சுவரெழுப்பவேண்டும்? அதுபோல ஜீவன் பிரமத்துக்குப் பேதமா? அபேதமா? பேதாபேதமா? ஜீவன் சத்தா? அசத்தா? சதசத்தா? என்கிற கேள்விகளுக்குச் சுருதிமுதலிய பதினன்கு கலைகளுக்கும் விரோதமில்லாமலும், பிரமத்துக்கு அபரிபூரணதோஷம் வராமலும், யுக்தி அநுபவங்களுக்குப் பொருந்துமாறும உத்தரஞ்சொல்லி, ஜீவன் பாரமார்த்திக சத்தென ஸ்தாபித்துக்கொண்டு, பிறகு இது விஷயமாகப் பேச எழுவாராக. ஜீவன் பாரமார்த்திக சத்தியமாயின் பந்தமும் விடுதியும் பாரமார்த்திக சத்தியமாம்; ஜீவன் வியாவகாரிக சத்தியமாயின் பந்தமும் விடுதியும் வியாவகாரிக சத்தியமாம். அத்வைதிகளின் சித்தாந்தத்தில் ஜீவன் வியாவகாரிகசத்தியமாகலின் பந்தமும் விடுதியும் வியாவகாரிக சத்தியமாமென்க. ஜீவன் வியாவகாரிக சத்தியமென எத்தனையோமுறை சுருதி யுக்தி அநுபவங்கட்கொத்துப்பேசி யிவரையும் சோமசுந்தரநாயகரையும் மறுத்திருக்க, அதற்கெல்லாம் வாயை மூடிக்கொண்டு இப்போது பந்தமுத்தி விவகாரஞ் செய்யவந்தது ஏழைஜனங்களை யேமாற்றவேயாமென்க.

அதீதநிலையில் பந்தமுத்தி கற்பனையென்பதற்குச் சுருதிமுதலிய பிரமாணங்கள் அடியில்வருமாறு காண்க:—

நக்வேதம் ஆத்மபோதோபநிஷத்.

எனக்குப் பந்தமுமில்லை, எனக்கு முத்தியுமில்லை, எனக்குச் சாஸ்திரமுமில்லை, எனக்குக் குருவுமில்லை.

யசுர்வேதம் ஸர்வசாரோபநிஷத்.

நான் கருத்தாவல்ல (ஆகையால்) எனக்குப் பந்தமோக்ஷங்க ளேது?

ரிபுகீதை முதலத்தியாயம்.

பந்தமிலாத்தன்மையினல் ஆதியில்லை
பரவியவீடின்மையினல் பந்தமில்லை

சந்ததமுஞ்சின்மயமாமான்மாவொன்றே
சலியாதவத்துவென நிச்சயிப்பாய். (௫௬)

ஷை ௨எவது அத்தியாயம்.

பந்தமிலை மோட்சமிலை பகுப்பேயில்லை
அத்துவித பரப்பிரமம் ஒன்றேயுண்மை
அதுநானென்றறிவுற்றம்மயமேயாவாய். (௬௫)

அகந்தை நீங்குவதற்கே அத்வைதசாஸ்திரங்கள் ஏற்பட்டனவென்பது.

"பிரமம் தானென்றுகூறும் அகந்தை நீங்குமளவும் முத்திகூடா தென்பது சத்தியம்" என்கிறார். இது உண்மைதான். இந்த அகந்தை நீங்குவதற்குத்தான் அத்வைதசாஸ்திரங்கள் ஏற்பட்டன. பிரமம் நானென்றுசொல்லும் நிலையில் ஏதோ ஒரு சூட்சுமசங்கற்ப மிருக்கினறது. அதுதான் ஜீவபோதம். அதைச் சாத்விகஅகங்காரமென்றும் அத்வைதசாஸ்திரங்கள் கூறுகின்றன. அஞ்ஞான பூமி யேழையும் கடந்து ஏழாவது ஞானபூமிக்குச்சென்று ஏழாவது பூமியென்கிற சாத்வீக சங்கற்பமுமற்று, நான் என்றும், அதுவென்றும், அதுநானென்றும், நான் அதுவென்றும் கருதப்படும் சூட்சும சங்கற்பமும் அற்றுத் திரிபுடிதோஷமில்லாமல் தானேதானய், அதுவே அதுவாய், இவ்விரண்டுங் கடந்றதாய் விளங்கும் நிலைமை வரவேண்டியதின்பொருட்டு ஷை சாத்வீக அகங்காரத்தையும் நாசஞ்செய்யவேண்டுவ தத்தியாவசியகமாகலினும் அது உள்ளளவும் முத்திகூடாதாகலினும்இவர் சொல்வது சத்தியமான வாக்கியமேயாம். ஆனல் இப்படிப்பட்ட நிலைமை வருமளவும் நான் ஜீவனென்பதுவும் நான் தேகமென்பதுவு மொழிய நான் பிரமமெனச் சாதகம்செய்யவேண்டும். இது சாதகநிலையே யொழிபச் சாத்தியநிலை யன்றென்க. பிரமம் நானென்பதற்குப் பிரமாணம் முன் 14-வது 15-வது 16-வது பக்கங்களிற் காண்க.

உலகம் பொருளா? குணமா? தொழிலா?

"ஆரியன்" என்பவர் ப்ரம்மவித்தியா ௬-வது புத்தகம் ௬-வது பத்திரிகையில சபாபதி நாவலரை எட்டுக்கேள்வி கேட்டார். அவர் உத்தரஞ் சொல்லவில்லை. பிறகு நாகை நீலலோசனி ௩-வது புத்தகம் ௨௬-வதுபத்திரிகையில் "ப்ரம்மவித்தியா ஆரியன் வினவின் அழிவுபாடு" எனப் பெயரீந்து சோமசுந்தரநாயகர் உத்தரஞ்சொல்வார்போலெழுந்து ஆபாசமாய்க் குழப்பினர். இந்தக்குழப்பத்தையெல்லாம் குழப்பமெனக்காட்டி, ஷை ஆரியன் என்பவர் * "சோமசுந்தரநாயகரது ஆபாச விடை" யெனப் பெயர்தந்து, ஷை ப்ரம்மவித்தியாவிலேயே மறுப்பெழுதினர். அதற்கு ஷைசோ. நாயகர் நாளது வரையில் பதிலெழுதாமல் மற்றவிஷயங்கட்குப் பதில்பேசாமற் போனதுபோல அதற்கும் பதில் பேசாது மௌனஞ்சாதித்தார்.

---

* அது இப்போது "பதி பசு பாசவாதம்" எனப்பெயரோடு மற்றப் பாக்கியுஞ் சேர்ந்து புத்தகரூபமாய் வெளிப்பட்டிருக்கிறது.

முன் நடந்தசங்கதி யிப்படியிருக்க,இப்போது இந்த அரக்கோண வீரபத்திரமூர்த்தி ஷை ஆரியரால் மறுக்கப்பட்டதைப் பூர்வபக்ஷஞ் செய்யாமல் சோம. நாய்க்கர் முதல் சொன்னதையே அதாவது மறுக்கப்பட்ட விஷயத்தையே கௌரவமாய்ச் சொல்லுகிறார். அத்துடனே ஆரியன் மறுத்ததை மறைத்தார். இனி ஆரியன் கேள்வியும், சோமசுந்தர நாயகரது விடையும் கூறி, எமது அபிப்பிராயத்தையு மெடுத்து விளம்புவாம். ஆரியன் "மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?" என்று கேட்டார். அதற்கு விடை சொல்லாமல் பிரமத்தில் உலகம் பொருளா? குணமா? தொழிலா? என்று கேட்டதுபோல் வைத்துக்கொண்டு, அதற்குச் சோ. நாயகர் விடை கொடுத்தார். அதைத்தான் இந்த வீரபத்திர மூர்த்தி வெகு கௌரமாய் எடுத்துச் சொல்வது.

"பிரமத்தினிடத்தில் உலகம் பொருளெனின் உலகமாகிய பொருள் அழிவுபாடுடையதாகையால்,அதனை யழிவுபாடெய்தாத பிரமத்தினிடத்தி லுண்டாகியதெனல் பொருந்தாது" (இது சோ. நாய்க்கர் வரைந்தது) பிரமவித்தியாவில் இவ்விதப்பிரஸ்தாபம் நிகழவேயில்லை. அப்படியிருக்கவும் அம்மாதிரிக்கேள்வியைத் தாமே கேட்டுப் பதில் கொடுத்து, யானை, தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதுபோல் தாமே தமக்குக் கெடுதியான கேள்வியைக் கேட்டுத் தாமே ஆபாசமான வுத்தரஞ்சொல்லி அவமானப்பட்டார். அந்த அவமானம் அத்துடனே தொலைந்துபோக, இவர் மீண்டும் வெளிப்படுத்தி அவமானத்துக்குள்ளாக்குவது பரிதபிக்கத்தக்கதேயாம்! அவர் பிரமத்தினிட முலக முண்டாகின்றதென்று சொல்லும் அத்வைதிகளைக் கண்டிக்க வலிய அவ்விதகேள்வியைக் கேட்டு மறுக்கின்றார். அதிலும் கேள்வியொன்று; அதற்குக் கொடுக்கும் விடையொன்று. இவர் கேட்டுக்கொள்ளுங்கேள்வி 'பிரமத்தினிடத்தில் உலகம் பொருளெனின்'என்பது.உத்தரமோ 'பிரமத்தினிடத்திலுண்டாகியதெனல் பொருந்தாது'என்பது. இதை ஒருமுறைக்கு இருமுறை நன்றாய் வாசித்துப்பாருங்கள். அவருடையமுன்வாக்கியம் பின்வாக்கியத்தை மறுக்கின்றது. 'பொருளெனின் உண்டாகியதெனல் பொருந்தாது' என்றதினால் பொருளென்று சொல்வது குற்றமாகின்றது. இப்படிச்சொல்லும் அவரே 'உலகமாகியபொருள் அழிவுபாடுடையதாகையால்' என்றார். இதனால் உலகம் பொருள் எனக் கொள்வதாகிறது. 'உலகமாகியபொருள் அழிவுபாடுடையதாகையால், அதனை யழிவுபாடெய்தாத பிரமத்தினிடத்தி லுண்டாகியதெனல் பொருந்தாது' என்றதனால் எது அழிவுபாடுடைய பொருளோ, அது அழிவுபாடில்லாத பொருளினிடத்தி லுண்டாகியதென்று சொல்லப்படாதென்றாகிறது. பின் அழிந்துபோகும் காரியப்பொருளானகடம், அழிவுபாடெய்தாத காரணமான மண்ணின்கண் உண்டாகவில்லையா? பின் அழிந்துபோகும் விருக்ஷங்கள் அழியாத பூமியினின்று முண்டாகவில்லையா? இவ்

வாறு உலகிலெந்தப்பொருள்களும் காரணகாரிய சம்பந்தமாயும் அவற்றில் காரணம் அழிவற்றதாயும் காரியம் அழிவுள்ளதாயு மிருப்பது கண்கூடாகலின் இவரது ஆக்ஷேபமும் சமாதானமும் ஆபாசத்தின் மேல் ஆபாசமும் பிரத்தியக்ஷ விரோதமுமா மெனக. இவருடைய மதத்தில் மாயை அழியாப்பொருள்; உலகம் அழிபொருள். அழியாப் பொருளானமாயையிலிருந்து அழிபடுபொருளான வுலகுதித்ததென்பதெங்ஙன மமையும்? 'உலகம் பொருளெனின் பிரமத்தினிடத்திலுண்டாகியதெனல் பொருந்தாது' என்பதனால் எது உண்டானதோ அதைப் பொருளென்று சொல்லப்படாதென்றாகின்றது. இவர் மதப்படி மாயையாகிய வொருபொருளிலிருந்து உலகம் உண்டானதால் உலகைப் பொருளென்று சொல்லப்படாதென்க. உலகமே பொருளாகாதபோது உலகிலிருந்துண்டானவைகளெல்லாம் பொருளாகுமா? ஆகாதன்றோ? ஆகாதபோது உலகில் பொருளென்பதே கிடையாதென் றாகின்றது. இதற்கு மாறாக 'உலகமாகிய பொருள் அழிவுபாடுடையதாகையால்' எனக்கூறினாரென்று முன்னரே கூறினோம். இவ்வாறு முன்பின் மலைவாய்ப் பேசுவதோடு தமதுசித்தாந்தமு மித்தகையதெனத் தெரியாது பேசுகின்றார். இத்தகைய திரிபுணர்ச்சியுள்ள சோம. நாயக்கரைத்தான் அரக்கோண வீரபத்திரமூர்த்தி வெகு புகழ்வாய் எடுத்துப் பேசவருகின்றார்.

பின்னும் "இனி யவ்வுலகத்தைக் குணமெனின், ஜடமும் ரூபமுமுடைய அதனைச் சேதனமும் அரூபமுமாகிய பிரமத்தின் குணமென்றிடல் கூடாது" என்று சோ. நாயகர் சொன்னதா யிவரெடுத்துக் கூறினர். மாயையைச் சடமென்றும் பிரமத்தைச் சித்தென்று மிவர் ஒத்துக்கொள்வார். இத்தகைய மாயையை "விமலனுக்கோர் சத்தியாய்" என விவரது சிவஞானசித்தியார் கூறுகிறபடி, பிரமத்துக்கு மாயை குணமாகின்றது; சத்தியென்பது குணமாகலானென்க. முதற்காரணகாரியம் அபேதமாகிறபடி முதற்காரணமான மாயையும் அதன்காரியமான வுலகும் அபேதமாம். எப்படி மண்ணே கடமோ அப்படி மாயையே யுலகமாம். இவர் மதப்படி மாயை பிரமத்தினது குணமென ஏற்பட்டதாலும், மாயையும் உலகமும் அபேதமாகி மாயையே உலகமெனச் சொல்லற் கிடந்தருவதாலும் பிரமத்திற்கு உலகம் குணமா மென்க. பிரமம் சித்தும் அரூபமுமாம்; உலகு சடமும் ரூபமுமாம். சித்தும் அரூபமுமான பிரமம், சடமும் ரூபமுமான குணத்தை யெப்படிப் பொருந்தி யிருக்கின்றதோ அறியோம். விமலனுக் கோர்சத்தி யென்றதால் பிரமத்துக்கு மாயை குணமாய் அபேதமாயிற்று; உலகுக்கு மாயை முதற்காரணமாதலால் மாயைக்கு உலகு அபேதமாயிற்று. ஆனதால் பிரமமே மாயை; மாயையே யுலகாம். பஞ்சும் நூலும் அபேதம்; நூலும் வஸ்திரமும் அபேதம். அப்படியே பிரமமும் மாயையும் அபேதம்; மாயையும் உலகும் அபேதம். பிரமம் சித்து; பிரமத்துக்கு அபின்னமான வுலகு

ஜடம். சித்தினிடத்தில் ஜட மெப்படி யிருக்கிறதோ அறியேம். இவர் மதப்படி சித்தினிடத்தில் ஜடமிருப்பது உண்மையாயிருக்க, பிறரை ஆக்ஷேபிக்கப்போவது "மல்லார்ந்து உமிழ்ந்தால் மார்பின்மேல்" என்றபடியாம். ஐயோ பாவம்! இவர் வெகுபிரயாசைப்பட்டுப் பிற ர்க்குக் குழிவெட்டினுர். அது பிறர்க்குப் பயன்படாது தமக்கே பயன் பட்டுவிட்டது. இது மிகப் பரிதாபம்!

"தொழிலென்பாமெனின், பரனதுதொழிலா லுலகம் தொழிற் படுத லுண்மையின், தொழிற்படும்பொருளாகிய அதனைத் தொழி லென்றது கூடாது" என்றுர். தொழிற்படும் பொருளுக்குத் தொழில் கூடாதென்றதனுல் தொழில் செய்வதைத் தொழிலெனக் கூறலா மென்றுகின்றது. இவர் வாக்கின்படி பரனிடத்தில் தொழில் நிகழ்வ தால் பரனைத் தொழிலென்னலாம்போலும்; உலகு தொழிற்படுகின்ற மையின் அதனைத் தொழிலெனச் சொல்லப்படாதுபோலும். இவ ற்றிற் றெழிற்செய்வதொன்று; தொழிற்படுவதொன்று. முன்னையது தொழில்; பின்னையது தொழிலன்று. இப்படிச் சொல்லுவது பொ ருத்தமா யில்லை. தொழில் இயற்றுவானிடத்தும் தொழிலிருக்கின் றது; தொழிலையேற்றுக்கொள்ளும் பொருளினிடத்தும் தொழிலிருக் கின்றது. அங்ஙனமாக ஒன்றைத் தொழிலென்றும் ஒன்றைத் தொழி லற்றதென்றுஞ் சொல்வதமையுமா? குயவன் குடத்தைவனையுங்கால் வனைதற்றொழிலைச் செய்பவன் குயவன்; ஆதலால் வனைந்ததொழில் குயவனிடத் துண்டு. வனைதற் றொழிலுக்கு உடன்பட்டது குடம்; ஆதலால் வனைதலுக் குடன்பட்டதொழில் குடத்தின்க ணுண்டு. "உபாத்தியாயர் மாணுக்கனை அடித்தார்" என்றதில் அடித்த தொழில் உபாத்தியாயரிடத்திலும் ஏற்றதொழில் மாணுக்கனிடத்தி லு முள்ளனவாகலின் இருவரிடத்திலுமே தொழிலுண்டெனக் கூற வேண்டுமேயன்றி, ஒருவரிடத்தில் மாத்திர முண்டெனக் கூறுவது பொருந்தாது. இங்ஙனமாகத் 'தொழிற்படும் பொருளாகிய அதனை த்தொழிலென்றது கூடாது' என்றவாதம் பொருந்தா தென்க.

மேற்கூறிய அவரது வாக்கியத்தால் உலகைத் தொழிலென்பது கூடாதன்றே? இத்துடனே "தொழிலுக்கு உருவங் கூறுதலுங் கூடாது. உலகம் உருவமுடையதாகலின்" என்றுர். இதற்கு ஷை ஆரியன் கொடுத்தவிடையையே யிங்கெடுத்துக் காண்பிப்பாம். அது வருமாறு:—

"இவர் நம்மைக் கேட்குங் கேள்வியில் உலகம் உருவமுடைய "தென்றும் ஆதலால் தொழிலல்லவென்றுங் கூறியிருக்கின்றுர். "இதைச் சற்று ஊன்றிப் பார்ப்போம். உலகம் என்பதன் பொருள் "பஞ்சபூதத்தின் கூடுதலேயே. பஞ்சபூதத்துக்கும் தனித்தனியே "பெயரிருக்கின்றது. பஞ்சபூதத்தின் கூடுதலுக்கு உலகமென்று பேர். "பஞ்சபூதம் தனித்தனியே யிருந்தால் அதற்கு உலகம் என்னும்பேரி

"லலை. மனிதனுடைய அவயவங்களெல்லாம் தனித்தனியே வேறு
"வேறு இடத்தில் இருந்தால் அதாவது ஒன்று சிதம்பரத்திலும்
"ஒன்று சீகாழியிலும் ஒன்று கடலூரிலும் இவ்வாறு பல விடங்களி
"லிருந்தால் மனிதனென்று சொல்லப்படாது. பஞ்சபூதமு மொன்
"ருய்க் கூடினுல் அப்போது உலகமென்று சொல்லப்படுகின்றது.
"அவயவங்களெல்லாம் ஒன்ருய்க் கூடினுல் அதற்கு மனிதனென்று
"சொல்லப்படுகின்றது. கூடுதலாகிய தொழிலே பொருளாகவும்
"பெயர்ச்சொல்லாகவும் சொல்லப்படுவதனுபவம். மண்ணுயிருக்குங்
"கால் கடமுளதெனக் கூருர் எவரும் மண்ணினிடத்து வனைதலா
"தித் தொழிலேற்பட்டால் கடமுளதெனக்கூறுவர். கடமுருவமென்
"றிவரும் மற்றவரு மங்கீகரிப்பர். உருவென் றங்கீகரிக்குங் கடம்
"மண்ணினிடத்து வனைதலாதித் தொழிலேயன்றி வேறன்று. நூல்
"தனித்தனியே யிருக்கும்போது ஆடையென்னும் பேரில்லை. நூல்
"குறுக்கு நெடுக்காக மாறும்போது ஆடையென்னும் பேர் பெறுகின்
"றது. மாறுதல் தொழிலன்ரு? அந்தத்தொழில் நிகழாவிடத்து
"ஆடையென்பதேது? இவ்வா றெதை நோக்கினுலும் தொழிலுக்கே
"பொருட்பெயர் வந்திருக்கின்றது. அன்றி அத்தொழிலே யுருவ
"மாகவுங் கொள்ளப்படுகின்றது. தொழிலைத்தவிரப் பொருளும் பெ
"யரு மில்லை. இது தத்துவ சோதனையால் நிச்சயிக்கப்படுகின்றது.
"ஸ்தூலவிசாரணை புரிவோர்க் கிஃது தெரியாதாயினும் சூட்சுமவிசா
"ரணைசெய்வோர் சரியென்றே அங்கீகரிப்பர். ஸ்தூலபுத்தியுள்ள இந்
நாயகர்க் கிஃது விளங்காவிடில் யாம் யாதுசெய்வோம்!"

பின்னுல் வந்த ஆரியருடைய இவ்விடையை வெளிக்காட்டா மல் மறைத்துவிட்டு, இவ்வாரியரால் மறுத்துக் கண்டனை செய்யப் பட்ட பூர்வபக்ஷத்தையே வெகு பெருமையாய் எடுத்துச்சொல்ல வந் தார். இது வெற்றியைவிரும்புபவர்க் கழகல்ல. இவரதபின்ன தோழர் பிரமத்துக்கு உலகம் பொருளென்ருவது குணமென்ருவது தொழி லென்ருவது சொன்னுரில்லை. எதிரியை ஆபாசக் கேள்விகேட்டு மறுக்கப்பட்டாரேயன்றி,தம்மதப்படி யேதும விடையளித்தாரில்லை. விடையிருந்து அவர் சொல்லாமற் போகவில்லை. அவர் மதபலம் அவ் வளவுதான்.

சிவசீவர்கள் அநாதி நித்திய மேன்பதைப்பற்றியது.

"சிவசீவர்களது அநாதி நித்திய முறைமை யுணர்ந்தவர்க்கே சீவ னது பந்த முக்தி இலக்கணம் வெளியாமென்க" என்கிறுர். சிவன் அநாதிநித்தியமென்ப துண்மைதான்; ஜீவன் அநாதியென்பது முண் மைதான், ஆனுல் ஜீவன் அநாதியென்பது சத்தாகவா? அசத்தா கவா? சதசத்தாகவா? அநிர்வசனீயமாகவா? இந்தக்கேள்விக்குப் பன் முறையிவரும் இவர்பக்ஷத்தவரும் உத்தரஞ்சொல்லாமலிருக்கின்ருர் கள். அநாதியென்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகின்ருேம். ஆனுல்

இவரைப்போலச் சத்தாக வொப்புக்கொள்வதில்லை. அநிர்வசனீயமாக வொப்புக்கொள்ளுகின்றோம்.

சூதசங்கிதை அநித்தியவஸ்துவிசாரம்.

விளம்புதலுற்ற அநித்தியவத்துவிசாரத்தால்
உளம்பயிலச் சமுசாரவிராகமதுண்டாகும்
இளம்பிறைசூடி தனக்கயலாஞ்சடமெல்லாநூல்
வளம்புணவோர்கள் அநித்தியமென்று வகுப்பாரால். (உ)

ஷ நித்தியவஸ்து விசாரம்.

சுத்தமாய் நிரஞ்சனமாய் அவிகாரமாய் ஒளிர்சிற்சொரூபமேயாய், உத்தமமாய்ச் சருவசான்றாய் விளங்குபரமசிவ மொன்றேயென்றும், எத்தகையோரும்புகழும் நித்தியவத்து உயர்மறையும் இவ்வாறோதும், ஒத்தசடம்அநித்தியமல்லாது சித்துக்கநித்தியம் வந்துறுதலின்றே. (உ)

மிக்ககடாதிப்பிரத்தியேயத்தந்தக்கரண விருத்தியாலே, தக்கஅநித்தியவத்துவுந்தான்றோன்றுகின்றதேதவிரத் தனியாய்நின்ற, முக்கணுடையெம்பெருமாற்காளாய பெருந்தவத்துமுனிவீர் மேலாம், எக்கலைஞரும்புகல்வார் பரமார்த்தமாக விலேயென்றுமாதோ. (௩)

அப்பிரத்தியேயத்திற் சிதாகாரம் விருத்தியாகாரமென்னச் செப்பிரண்டுமுள்ளன, வொன்றாய்த்தோன்றும் பிராந்தியினாற்சிதாகாரந்தான், றப்பினலமுறுபாவபாகமென்றுஞ்சாற்று விருத்தியாகாரந்தான், றப்பினுணர்தருகரணபாகமென்றுஞ் சொலப்படுமோற்றூய்மைமீக்கீர். (௪)

கரைவிருத்தியாகாரஞ் சடமாதலானசிக்குங்கடாதிபோல, வுரைசெய் சிதாகாரந்தான் மாமுனிவீர் நாசத்தையுறாதாலந்த, வினாதருமந்தக்கரண விருத்திநாசத்தாலே விளங்குமந்தப், புரையில் பிரத்தியேயந்தான் சில்லோர்க்கு நசித்தலுறல் போலத்தோன்றும். (௫)

சிவனிடத்தில் ஜீவன் தோன்றி யொடுங்குகின்றதென்பது.

“எதில் எதுதோன்றும், அதில் அது ஒடுங்கும். சிவத்தில் சீவன் தோன்றியதின்று.” என வீரபத்திரமூர்த்தி புகன்றார். எத்தனையோ முறை யிதற்குச் சுருதி யுக்தி அநுபவங்களுடன் “சங்கராசாரியார் அவதாரமகிமை” முதலியநூலிற் பதிற்சொல்லி யிருக்கின்றோம். ஆதலால் அதுபற்றி யிங்கொன்றும் பேச்வேண்டிய ஆவசியகமில்லை. ஆனாலும் இங்குச் சில பிரமாணங்களைமாத்திரங் காட்டுவோம்.

பைங்களோபநிஷத் மூன்றாவது அத்தியாயம்.

விசுவன், தைஜசன், பிராக்ஞன் இவர்களுக்குத் தம்தம் (அவித்யா) உபாதிபோய் விட்டதினாலே பிரத்தியகாத்துமாவில் அடங்குகிறார்கள் (ஐக்கியமாகிறார்கள்.)

மைத்திராயண்ணி யுபநிஷத் ஆறாவதுபிரபாடகம்.

தனக்குள்ளேயே யிருக்கிற ஆத்மா (பிரமம்) விடத்திலிருந்து சகலபிராணன்களும் சகலலோகங்களும் சகல வேதங்களும் சகல தேவதைகளும் சகல பூதங்களும் உண்டாகின்றார்கள்.

பிரமகீதை சாந்தோக்கிய உபநிடதம்.

பூதத்தாலுளதாயுள்ள புவனங்களுயிர்கள் முன்போன்
ீறாதத்தானரியசத்தாலுதித்ததென்றுணரும்வண்ணம். (௩௪)

ஷை முண்டகோபநிஷத்.

தற்பரனுருவஞ்சித்தேதற்பரனிடையேயக்
கற்பிதஜீவன்ருனுமதானக்காலக்தச்
சிற்பொருளொன்றேவேறெனின்மற்றதுசித்தாமோ
அற்பமும்வேருகாதுசித்தாகாரத்தாலே. (சுஉ)

சூதசங்கிதை பஞ்சாக்ஷரம்.

மாயையாற்பேத நடையராகி, யியங்குறுசீவர்கள் சிவனோடபேதபாவ ஊனசெய்வதென்பர்தக்கோர். (கூ)

கூர்மபுராணம் இந்திரத்துய்ம்மன் முத்திபெற்றது.

சீவான்மாவினைப்பரமான்மாத்தன்னெடும் பிறிதறவொடுக்கி. (சுஉ)

விஷ்ணுபுராணம் முதலமிசம் பிரகலாதசரித்திரம்.

எவனிடத்தினின்றும்மூலப்பிரகிருதியும் சமஷ்டிரூபஞன க்ஷேத்திரக்கியனும் உண்டாஞர்களோ, எவனிடத்தினின்றும் சராசராத்மகமானசகலபிரபஞ்சமும் ஜனித்ததோ, அப்படிப்பட்ட சர்வகாரண பூதஞன ஸ்ரீவிஷ்ணுதேவன் நமக்குப் பிரசன்னனுகக்கடவன்.

ஷை ஆறம்அம்சம் பிராகிருதப்பிரளயம்.

வியக்தாவியக்த சொரூபமான பிரகிருதி யாதுண்டோ, அதுவும், புருஷன் என்று சொல்லப்பட்டஜீவனும்இவ்விரண்டும் அந்தப்பரமாத்துமாவிலே இலயப்படுகின்றன.

சிவரகசியம் சு-ம் அத்தியாயம் ரிபுகீதை உ-வது அத்தியாயம்.

வாரிதியிலலேகுமிழிநுரைகடோன்றும் வகையெனவே வரையற்றபரசிவத்தில், சாரமிலாச் சகலசராசரமுந்தோன்றும் சலனமுரு விசாரணையாலவையனைத்தும், பூரணமாம் பரமசிவசொரூபமென்றே புரையற்றபோதவுரம் பொருந்தினேரே, கோரமதாம் பவபாசமனைத்து நீங்கிக் குறைவற்ற பரமசிவசொரூபமாவர். (சஅ)

ஷை ஷை ஷை யிக-ம் அத்தியாயம்.

சீவபரசகத்தெனவே காண்பதெல்லாம் சின்மயமாம் பிரமத்திற்கற்பிதந்தான், ஆவதனுலாரோப சீவந்தி யதிட்டானமான பரப்பிரமமென்றுங், கேவலமா மப்பிரம்ம நானே யென்றுங் கிலேசமற வறிந்ததனுன் முத்தனுவாய், பாவனமாம் பரமசிவன் பதந்தன்னேணை பகர்ந்ததிலோரையமில்லை சத்தியந்தான். (உ௰)

பிரமகீதை ஐதரேயஉபநிடதம்.

வேதமோதியதேமெய்ப்பொருள்மற்றைப்பொருளெலாமித்தையேவேத, மோதமேவுற்றபொருளிருவகையா மதனி லொன் றென்றும் உண்மையதாய், போத ஆநந்தமாகிய சிவனும் பொருளது மற்றதப்பொருளில், ஏதமேவாமல் கற்பிதமாகும் மற்றதனியல்பையு மிசைப்பாம். (௧0)

இந்தப்பிரமாணங்களினுல் ஜீவன் சிவனிடத்தினின்றுந் தோன்றிச் சிவனிடத்திலேயே யொடுங்குகின்ருன் என்பது வெளிப்பட்டமையால் இவர் வேதாதிகலேகளையே யாக்ஷேபிக்கின்ருராகி, அவைகளுக்குப் புறம்புப்பட்டு விலகுகின்ருரென்க.

உ

சிவமயம்.

மாயாவாதசைவசண்டமாருதம்.

மூன்றும்பாகம்.

நாகை நீலலோசனி 1893வரு டிசம்பர்மீ 25உ முதல் இம் மூன்றும் பாகத்தில் விசாரிப்பாம்.

தாயுமானவரது வணக்கம்.

தாயுமானுர் மெய்கண்டார் முதலியவரை வணங்கியது ஸ்தூல மாகவேயன்றி, சூட்சுமமாக வன்றெனப் பாநுமூர்த்தி புகன்றமைக்கு இவர் சூட்சுமமாகத்தானெனச் சொல்லவெழுந்து, "தாயுமானவர் மெய்கண்டதேவரை வழிப்பட்டவிடத்தும் ஸ்தூலமாக வழிபட்ட தில்லை. 'பொய்கண்டார் காணுப் புனிதமா மத்துவித மெய்கண்டான் பொன்னடியை மேவுநாளெந்நாளோ' என்று சூக்கும நோக்கத்துடன் வழிபட்டனர்" என்றனர். உலகை மெய்யென்பவர் நாஸ்திகரும் இவ ரினத்தவரும். இவ்விருவரில் நாஸ்திகர் உலகு என்றும் அழியாதென் பவர்; இவரினத்தவர் சங்காரகாலத்தில் அழிந்துவிடு மென்பவர். சங்காரகாலத்தில் அழிந்துவிடு மென்பதனுல் அதுபற்றி யிவரினத் தினர் பொய்யென்கின்றனர். அத்வைதிகளோ இப்போதே பொய் யென்கின்றனர். என்றும் அழிவதில்லை யென்றவரினும் ஒருகாலத் தில் அழிந்துவிடுமென்பவர் மேலானதினுலும், நாஸ்திகஞானத்தினும் துவித ஆஸ்திகஞானம் மேலானதினுலும் அதுவரையில் மெய்கண் டாரைக் கனஞ்செய்து துதித்தது நியாயமேயாம். மனப்பிரவர்த்தி யற்று, ஞாதா ஞான ஞேயங்களொழிந்து, சதா சகஜ நிஷ்டாபரராய் விளங்குவதோடு "ஞானமலது கதிகூடுமோ" எனவுஞ் சொன்ன தாயு மானுர், மனப்பிரவர்த்தியும் ஞாதாதி திரிபுடிகளும் ஞானமன்மையு முள்ள தாய, "உனையொன்றிற் பாவனையேனுஞ்செய்து புல்லாயினும் ஒரு பச்சிலையாயினும் போட்டிறைஞ்சி நில்லேன்" என்னும் வாக்கி யத்தைச் சொல்லவேண்டுவதென்ன? இதனுல் அவரது சகஜ ஞான த்துக்குக் குறையொன்றுமில்லையே. இங்ஙனமே அத்துவித ஞான வான் துவிதஞானவானை வணங்குவதினுல் குறையொன்று மில்லை யென்றறிக; அதனுல் அவர் துவிதமதஸ்தராய்விடமாட்டாரென்று மறிக. வண்ணுனது போலிநீற்றைக்கண்டு, சிவனடியாரென வணங்கி னுல் அதனுல் சேரமான் பெருமாள் நாயனுர் பத்தியில்லா வண்ணு னுய்விடுவரா? அதுபோல் அபேதஞானவானுன தாயுமானுர் பேத ஞானமுள்ள மெய்கண்டாரை வணங்குவதினுல் தாமும் பேதஞானி யாய்விடுவரா?

'பொய்கண்டார்' என்ற செய்யுளைச் சொல்லிவிட்டதனாலேயே தாயுமானவர், மெய்கண்டாரைச் சூட்சுமமாய்ச்சொல்லி வணங்கிய தாய்ச் சொல்ல வருகின்றார். இது பொருந்தாது. தாயுமானார் சூட்சுமார்த்தத்தைக்கொண்டு வணங்கினதாய் அவர் வாக்கில் வரவில்லை. இவர்க்கு அது சூட்சுமமானதால் தாயுமானார்க்கும் அது சூட்சுமமெனச் சொல்ல வருகிறார்போலும். பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடிக்கும்போது தன்கண் இருளடைந்ததுபோல யாவருடைய கண்களும்இருளடைந்தனவாய்க் கருதுகின்றதன்றோ? அதுபோலஇவர்க்குச் சூட்சுமமாயிருப்பதால் தாயுமானார்க்கும் அதுசூட்சுமமாயிருக்குமெனப் பிரமிக்கிறார்போலும். தாயுமானார் சூட்சுமமென ஒருவேளை சொல்லியிருந்தாலும் அது நாஸ்திக முதலிய மதத்தை நோக்கிச் சொல்லியிருக்கலாமே அன்றி அத்வைதத்தை நோக்கிச் சொல்லியிருக்கமாட்டார். பூர்வபக்ஷமாகவேனும் அவர் சூட்சுமமெனச் சொல்லவில்லை யானதாலும், மற்றப்படி இவருடைய மதசித்தாந்தத்தை மறுத்து, "உலகும்பொய், துவிதமும் பொய், சிவமொன்றேயுண்மை" யென காட்டியிருக்கின்றாரென முதற்பாகத்திலேயே நாம் சொல்லி யிருக்கின்றமையாலும், தாயுமானவர் நூலை யிவரது மடத்தார் வாசிப்பதில்லையென்றும், தாயுமானவர் மடத்தார் வேதாந்தநூல்களை வாசிக்கின்றனரென்றும் முன் இரண்டாவது பாகத்தின்றொடக்கத்தில் காட்டியிருக்கின்றமையாலும் இவரது பக்ஷத்துச் சித்தாந்தியெனத் தாயுமானவரைக்கூறுவது சற்றும் பொருந்தாதென்க. ஞானவானொருவன், ஞானசாதனமான சரியை இயற்றுவானாயின் சரியையாளர் அவனை எம்பக்ஷத்தானெனவும், கிரியை யியற்றுவானாயின் கிரியையாளர் எம்பக்ஷத்தானெனவும், யோகம் இயற்றுவானாயின் யோகிகள் எம்பக்ஷத்தானெனவும் கூறுவர். அவ்வப்போது அவனவனைப் போன்றிருந்தாலும் உண்மையில் அம்மூவர்க்கும் ஞானி வேறன்றோ? அதுபோலத் துவிதபேதவாதிகளுக்குத் துவிதபேதவாதிபோலிருந்தாலும் உண்மையில் தாயுமானவர் மாயா சம்பந்த முள்ள ஆண்டான் அடிமை பேதமொப்பும் மெய்கண்டார் முதலிய பேதவாதிகட்கு வேறுபட்டவரேயாம்.

தாயுமானவரும், குருவும்.

இதன்மேல் இவரது குருமரபை அவர் வணங்கியதாய்ச் சொல்லுகின்றார். இதற்குக்காரணம் துவிதகுருமரபு அத்வைத குருமரபுக்குச் சாதனமா யிருப்பதுபற்றியேயாம். தாயுமானார் ஷை குருமரபை வணங்கினாலும் தாயுமானார் குருமரபு வேறுதான். சங்கராசாரியரை யேன் வணங்கவில்லையென்கிறார். இதற்குப் பதில் நீலகண்டசிவாசாரியரை யேன் வணங்கவில்லை யென யாம் கேட்கின்றோம். எந்த அத்வைதிகளையாவது வணங்கினாரா என்கிறார். ஸனகாதிகட்கு அத்வைதோபதேசஞ்செய்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, ஸனகாதிகள், சுகர், வாமதேவர், ஜனகர் முதலிய அத்வைதிகளை வணங்கியும் புகழ்ந்தும்

இருப்பது காட்சிப்பிரமாணமாம். அன்றித் தக்ஷிணாமூர்த்தியைக் குருவாகவுந் துதித்திருக்கின்றார். அல்லாமல் அத்வைத நூலான திருமந்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளிய திருமூலரது அத்வைத மரபே தாயுமானவரது குருமரபாயு மிருக்கின்றது. தாயுமானவர் அத்வைதியென்பதற்கு இவ்வளவு ஆதரவிருப்பதால் இனிப் பூர்வபக்ஷியார் இவ்விஷயத்திற் பிரவேசிப்பதை விட்டொழிவாராக.

தாயுமானவர் பாடல்கள் அத்வைதமென்பது.

எமது அத்வைத பக்ஷத்துக்குச் சுருதி ஸ்மிருதி புராணம் இதிகாசம் ஆகமங்கள் முதலிய பிரமாணங்களும் அவைகட்கொத்துத் தாயுமானவர் பாடல்களும் பன்முறை காட்டப்பட்டிருக்கின்றன. அதற்குப் பூர்வபக்ஷியார் சரியான பதில்சொல்லாமல் அதன்பொருள் வேறெனவும், அப்பொருளைத் தம் சைவாசாரியரைக்கேட்டுத் தெளியும் புண்ணியமில்லையெனவும், அதனால் அத்வைதிகள் தமது பக்ஷம் சாதிக்கப்பட்டதாக மனப்பால் குடிக்கிறார்களெனவும் கூறினர். இப்படிச் சொல்லிவிட்டால் தமது துவிதசித்தாந்தம் சாதிக்கப்பட்டுப் போமா? நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி சமுகத்தில் நடக்கும் ஓர் வழக்கில், வாதியின் நியாயவாதி, தனக்குள்ள நியாயத்தையெல்லாஞ் சொல்லி, அதற்குச் சரியாகச் சட்டத்தையும் பொருத்திக் காண்பித்தானென வைத்துக்கொள்வோம். அதன்மேல் பிரதிவாதியின் நியாயவாதி யென்னசெய்யவேண்டுவது? வாதியின் நியாயம் போலியெனச் சொல்லி, தன் யதார்த்த நியாயத்தைக்காட்டி, வாதி காட்டிய சட்டத்தின் பொருள் இன்னவகையால் வேறெனவுமன்றோ எடுத்துச் சொல்லவேண்டும்? அதைவிட்டு வாதியின் நியாயவாதிக்கு அச்சட்டத்தின் பொருளைக் கேட்டுத்தெளியும் புண்ணிய மில்லையென்றும், அப்பொருளை எமது ஆசிரியரைக்கேட்டுத் தெளிந்துகொள்ளவேண்டு வேண்டுமென்றும் அப்படித்தெரிந்துகொள்ளாமல்தமதுபக்ஷம் சாதிக்கப்பட்டதாய் வாதிகள் மனப்பால் குடிக்கிறார்களென்றும் சொல்வானேயாயின் வாதிகக்ஷி தோல்வியும் பிரதிவாதிகக்ஷி வெற்றியும் ஆய்விடுமா? வாதிக்குச் சட்டத்தின்பொருளை யறியும் புண்ணியமில்லையெனப் பிரதிவாதிசொல்வதைக் கேட்டு, நியாயாதிபதி, பிரதிவாதி பக்ஷந் தீர்ப்புக்கொடுப்பாரா? கொடாரன்றோ? அங்ஙனமே பூர்வபக்ஷியார் நாம் காட்டிய பாடலுக்குத் தம் பக்ஷமாகத் துவிதஉரை கூறாது பதுங்குகின்றமையானும், வேறு உரைகூற அது இடங்கொடாததலானும், அது அத்வைத வுரையென்பது வெளிப்படையாதலானும் தாயுமானவர் அத்வைதியென்பதற் கைய மேதுமின்றெனக. நாம் காட்டிய் பாடல்கள் துவித பக்ஷமெனச் சாதிக்க முடியாவிடினும் அவர்பாடலில் துவிதபக்ஷஞ்சாதிப்பதற்கிடமாக ஏதோ இடமிருக்கிறதெனக் கனவுகண்டு சிலபாடல்களைக் காட்ட எழுகின்றார். நாம் காட்டியபாடல்களுக்கு உரை வேறென்றும், அது தம் ஆசாரியரையடுத்துக் கேட்டுத் தெளிந்துகொள்ளவேண்டுமென்றும் சொன்ன

ரன்ரு? அங்ஙனமே இவர்காட்டும் பாடல்களுக்கு உரை வேறென்றும், அதை யெமது ஆசிரியரைக்கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படித் தெரிந்துகொள்ளும் புண்ணியம் இவருக்கில்லையென்றும் நாம் சொல்லமாட்டோமா? நியாயம் யாவருக்கும் பொதுவல்லவா? இவருக்கு ஒரு நியாயமும் எமக்கு ஒரு நியாயமுமா? நாம் காட்டிய பாடல்களுக்கு வேறு உரையிருக்கிறதென் றிவர்சொன்னால் இவர் காட்டும் பாடல்களுக்கு வேறு உரையிருக்கிறதென்று சொல்ல எமக்கு வாயில்லையா? இந்நியாயம் படிப்பற்ற சாதாரண ஜனங்கட்குந் தெரியுமே. படிப்பற்றசாதாரணஜனங்களுக்குத்தெரிந்த நியாயங்கூடத் தெரியாத இப்பூர்வ பக்ஷியாரிடம் நாம் என்ன நியாயம் பேசி வெற்றியடையப் போகின்றோம்! சொற்சோர்வு படாமல் வாதஞ்செய்யத் திறமையில்லா இந்தப் பூர்வபக்ஷியினிடத்தில் வாதஞ்செய்து வெற்றி பெறினுந் தோல்வியேயாம். ஆதலால் அவர்பொருட்டன்றி இரு வாதங்களினுடைய தாரதம்மியங்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் நடுவு நிலைமையுடையார்க்கு எமது நியாயத்தை யெடுத்துக்காட்டுகின்றோம்.

இனி அவர்காட்டிய பாடல்களும் அவை அத்வைதவிரோதமில்லாமையும் வருமாறு:—

தாயுமானவர் பாடல்.

(1) "கருமருவுகுகையனைய காயத்தினடுவுட்களிம்பு தோய்செம்பனையயான்."

(2) "காரிட்ட ஆணவக்கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டிருந்தவெமை"

'களிம்புதோய்செம்பனையயான்' என்பதும், 'கண்ணிலாக்குழவியைப் போற்கட்டுண்டிருந்தவெமை' என்பதும் ஜீவனும். இதற்கிணங்க வேதாந்த நூல்களுங் கூறுகின்றன.

கைவல்லியம்.

தானிகர்தனக்காமீசன் றனையுந்தங்களைத்தாங்கண்ட
ஞானிகடமையுமன்றி நாஸ்திகபாதியென்னும்
ஊனிடையுயிர்களுள்ளத் துணர்விழிகுருடாம்வண்ணம்
வானிலந்திசைகள் மூடுமேழைநிசியிருள்போல்மூடும். (சகூ)

வேதாந்தசூடாமணி.

அப்பரற்குபாதியாகியமோக காரணியாமாயை
பொய்ப்புறுமவித்தையெண்ணிற் போத்திருபசுவென்றோது
மொப்பருஞ் சீவர்க்கொல்லாமுபாதியாய் மோகஞ்செய்யு
மெய்ப்புறுபகுதிபாசமெனச் சமகுணமாநின்று. (சரு)

தாயுமானவர்பாடல்.

(3) "அருளுடையபரமென்றோ அன்றுதானே யானுளனென்றும் எனக்கேயாணவாதிபெருகுவினைக்கட்டென்றும்,"

(4) "என்றுளோநீயன்றுளம் யாம்."

மாயாசம்பந்தமான ஈச னென்றுண்டோ அன்றே அவித்தியாசம்பந்தமான ஜீவனுண்டு. அந்தஜீவனுக்கு அஞ்ஞானபந்தமுமுண்டு. ஆதலால்ஜீவன் அநாதியாம். இதற்குப்பிரமாணம்.

கைவல்லியம்.

அதுதானெப்படியென்றக்கால் அநாதியாஞ்சீவரெல்லாம். (உகூ)

பரமென்றபொருளைத் துரியசிவனாக வைத்தால் துரியசிவன் அநாதிசத்தும் ஜீவன் அநாதி அநிர்வசனீயமு மாம். இந்தவிஷயத்தைப்பற்றிச் சுந்தரன் என்பவர் ஆக்ஷேபித்ததற்கு "மாயாவாததிமிர பாஸ்கரன்" என்பவர் நந்தனஹு கார்த்திகைமீ" சூஉ உஙஉ ப்ரம்ம வித்தியாவில் சமாதானஞ் சொல்லியிருக்கிறார். அதைப் பூர்வபக்ஷம் பண்ணி அதன்பேரில் தமது சித்தாந்தத்தைச் சொல்லாமல் அதற்குப்பதின்மூன்று மாசம் பொறுத்து, அதாவது விஜயஹு மார்கழிமீ" உசூஉயில் அதே ஆக்ஷேபமுள்ள செய்யுளைக் காட்டுகின்றார். பதின்மூன்று மாசத்தின் முன்னர்ச் சுந்தரர்க்கு 'மாயாவாதத்திமிரபாஸ்கரன்' என்பவர் கொடுத்த சமாதானத்தை யிதனடியில் அப்படியே யெடுத்துக்காட்டுகின்றோம் பாருங்கள். அதுவருமாறு:—

"இதற்குப்பதில் அத்துவிதிகளுக்கும் பதி பசு பாசம் அநாதியென்றே இனி யறிந்துகொள்வாராக. அத்வைதிகளுக்குப் பதி சத்தாக அநாதி, பசு பாசங்கள் அநிர்வசனீயமாக அநாதியாம். பதியை யீசுவரனாக வைத்தால் அப்போது பதி பசு பாசங்களான மூன்றும் அநிர்வசனீயமாக அநாதியாம்."

பூர்வபக்ஷிகள் இவ்வாறே அடிக்கடி, வந்த சமாதானங்களை யெல்லாம் வராதததுபோல் காட்டி ஆக்ஷேபிக்கின்றார்கள். இதைவிட வேறுஆக்ஷேபம் அவர்களுக்கு அகப்படமாட்டாது.

தாயுமானவர் பாடல்.

(5) "பண்ணினிசைபோலப் பரமன் பானின்றதிற
னெண்ணியருளாகி யிருக்குநாளெந்நாளோ"

பண்ணும் இசையும் பேதமன்று, அபேதமேயாம். அவ்வாறே கூடஸ்த பிரமம் பேதமன்று, அபேதமேயாம். முத்தியில் துவிதஞ்சாதிக்கும் பூர்வபக்ஷிகளுக்கு ஷை செய்யு ளெங்ஙனமுசிதத்தாகும்? இதைத்துவிதசித்தாந்தமெனச் சொல்லவெழுவதும், அத்வைத சித்தாந்தவிரோதமென எழுதவந்ததும் அஞ்ஞானவிபரீதமாம். உபமானத்தையும் உபமேயத்தையும் பொருத்திப்பார்ப்பதோடு, தம் சித்தாந்தத்தைச் சற்று ஊன்றி யுணருவாரானால் இவ்வித ஆபத்தி லகப்பட்டுக்கொண்டு விழிக்கமாட்டார். பண்ணும் இசையும் பேதமன்றெனப்பாமரரும் அங்கீகரிக்கத்தக்கதாயிருக்க, அதைப்பேதம்போல் வைத்துத் தமக்குச்சாதகமாக எடுத்துக் காட்டவந்தது திருடன் தலையாரிவீட்டிலொளிப்பதுபோலாமென்க.

தாயுமானவர் பாடல்.

(6) "செங்கதிரின்முன் மதியந் தேசடங்கி நின்றிடல்போல்
அங்கணனார்தாளில் அடங்குநாளெந்நாளோ"

இது கைலாயாதிக்ளிலிருக்கும் சகுண பரமசிவன் திருவடியில் ஜீவன் அடங்கியிருக்கும் நிலைமை. சர்வஞ்ஞத்துவாதி குணங்களுள்ள பரமசிவ சந்நிதானத்தில் கிஞ்சிஞ்ஞத்வாதிகுணமுள்ள ஜீவன் இருத்தலுக்குச் சூரியன்முன் மதியம்போலச் சொல்லாமல் வேறு என்னசொல்லுவார்? இதனுல் இதுபதவி முத்தியென விளங்குகின்றது. தாயுமானவர் பதவி முத்தியை விரும்புவது கூடுமோவென்னின், சரியை கிரியை யோகங்களைக் கடந்த ஞானியான தாயுமானவர், "எல்லா முதவுமுனையொன்றிற் பாவனையேனுஞ் செய்து புல்லாயினும் ஒரு பச்சிலையாயினும் போட்டிறைஞ்சி நில்லேன்" எனக் கிரியையில் விருப்புற்றதுபோலப் பேசுவானேன்? இவர் ஞானவானென்பதற்கு "என்னைத் தானுக்கிக்கொண்ட சமர்த்தைப்பார்தோழி" "யான்ருனிரண்டற்றதுமாங்கே" முதலிய வாக்கியங்களே சான்றுபகரும். அங்ஙனமின்றி அதுவே யதார்த்த முத்தியென்று கொள்ளும் பக்ஷத்தில் சூரியன் ஒருகண்டப்பொருள், சந்திரன் ஒருகண்டப் பொருள். இரண்டும் அபரிபூரணப் பொருளாகின்றன. இங்ஙனமே துரிசிவனும் உயிரும் கண்டஅபரிபூரணப்பொருளாகின்றன. உயிர் கண்டப்பொருளென்பது சுருதி சம்மதமாகலின் அது குற்றமின்மையேனும் சிவமும் கண்டப்பொருளெனச் சொல்லத்துணிவதெங்ஙனம்? இது சுருதிவிரோதமுமாமே. ஆதலால் அதைப் பதவிமுத்தியில் வைத்துச் சொல்வதே சுருதி யுக்தி அநுபவ சம்மதமாம். பதவி முத்தியில் ஜீவேசபேதமொப்புவதில் அத்வைதிகட்கு யாதொரு விரோதமுமில்லையென்றறிக.

தாயுமானவர் பாடல்.

(7) "வானூடடங்கும் வளிபோல இன்புருவாங்
கோனூடடங்குங்குறிப்பறிவதெந்நாளோ."

இதுவும் அதே கருத்தாமென்க. அன்றி இந்தக் கண்ணியிற் சொல்லியவுபமானத்தினுல் அதாவது ஆகாயத்தில் வாயு அடங்கிய வுபமானத்தினுலே சிவன் சத்தும், ஜீவன் சத்துப்போலியுமாமென்க. இது விஷயம் அத்வைததூஷணபரிகாரம் 57 பக்கமுதல் 65ம் பக்கம் வரையிற் காணலாம். காண்பாராயின் வானும் வளியுமான வுவமானம் துவிதிகளுக்கு முற்றும் விரோதமும், அத்வைதிகளுக்கு முற்றும் அவிரோதமுமாமென்று புலப்படும்.

(8) "ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினேடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ."

இதில் ஆணவத்தோடத்துவிதமாதல் அஞ்ஞானமும், துரியசிவனேடத்துவிதமாதல் ஞானமு மாம். அன்றி அஃதொருகாலம், இஃதொருகாலம். அஞ்ஞானகாலத்தில் ஆன்மா அஞ்ஞானத்தோடொன்ருயும், ஞானகாலத்தில் சிவனேடொன்ருயும் இருக்கின்றது. ஒரு சத்துப்பொருள் மயங்கிய காலத்தில் அரவாயும், தெளிந்தகாலத்தில் கயிருயு மிருக்கக் காண்கிருேம். மயங்கியகாலத்தில் அந்தச்சத்துப்பொருளுக்கும் அரவுக்கும் அபேதம்; தெளிந்த காலத்தில் அந்தச் சத்துப்பொருளுக்கும் கயிற்றிற்கும் அபேதம். அங்ஙனமே அஞ்ஞானகாலத்தில் ஆன்மாவுக்கும் அஞ்ஞானத்துக்கும் அபேதம், ஞானகாலத்தில் ஆன்மாவுக்கும் சிவனுக்கும் அபேதம். கயிற்றின்கண் அரவு தோற்றமாவதுபோல ஆன்மாவின்கண் அஞ்ஞானந் தோற்றமாம். ஒருசத்துப்பொருளே கயிருகவும் அரவாகவு மாதல்போல ஒரு ஆன்மாவே அதாவது கூடஸ்தனே சிவமான பிரமமாகவும் அஞ்ஞானமாகவு மாதல் காண்க. இதற்குப் பிரமாணம் வருவாறு:—

திருவாசகம்.

வானாகிமண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டு
வானாகி நின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே.

கூறும் நாவே முதலாகக்கூறுங்கரண மெல்லாம் நீ
தேறும்வகை நீ திகைப்பும் நீ தீமைநன்மை முழுதும் நீ
வேறோர் பரிசிங்கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்கின்
தேறும்வகையென் சிவலோகா திகைத்தாற்றேற்ற வேண்டாவோ.

திருஞானசம்பந்தர் தேவாரம்.

குற்றம் நீ குணங்கணீ கூடலாலவாயிலாய்.

தாயுமானவர் பாடல்.

(9) "ஒன்றிரண்டு மில்லதுவாய் ஒன்றிரண்டுமுள்ளதுவாய்
நின்றசமத்துநிலை நேர்பெறுவதெந்நாளோ."

ஒன்றிரண்டென்பதைப்பற்றி இதற்குமுன் 97 வது 98 வது பக்கத்திற் காண்க. சிவம் சிவமாய் விளங்குவதே சமநிலை. ஜீவேசபேதநிலை சமநிலையாகாது; ஏற்றக்குறைச்சலாகும். ஏற்றக்குறைச்சலைச் சமமாகக் கூறலொண்ணாது.

தாயுமானவர் பாடல்.

(10) "பாசமகலாமல் பதியிற்கலவாமல்
மாசில் சமத்துமுத்தி வாய்க்குநாளெந்நாளோ."

அதனுரை: "பாசம் நீங்காமலும் பதியோடு கலக்காலுமிருக்கிற எனக்கு, குற்றமில்லாத சமநிலையிலுண்டாவதாகிய முத்தி கிடைக்கும் நாளெந்நாளோ" என்பது. பாசத்தைவிட்டு நீங்காமலும் பதியோடு கலக்காமலுமிருக்கிறது ஜீவன். இப்படிப்பட்ட ஜீவன், முத்தியில் சிவமாய் விளங்குகையே சமநிலை.

இது வரையில் சொல்லிக்காட்டிய வுரைகளாலும் நியாயங்களாலும் இவர் காட்டிய பாடல்களும் அத்வைதத்திலேயே அடங்கிப்போய் விட்டமையால் எந்தவகையினாலும் தாயுமானாரைத் துவித சித்தாந்தியெனக் கூறுதல் கூடாதென்பதாம். நாம் காட்டிய பாடல்களுக்குத் துவிதபக்ஷமாக அவர்உரைசெய்துகாட்டாமல் பதுங்கிவிட்டமையாலும், அவர்காட்டிய பாடல்கள் அத்வைத பக்ஷமா யிருப்பதை நாம் விளக்கிக் காட்டிவிட்டோமாகையாலும் பூர்வ பக்ஷியார் வாதம் போலியாய்ப்போயிற்றென்க.

ஒருவிதப் பிரமாணங்களுக்குட்பட்ட இருவர் வாதஞ்செய்யும் போது அப்பிரமாணங்கட்கு மீறாமல் கட்டுப்பட்டுப் பேசவேண்டும். பிரமாணங்கட்குக் கட்டுப்படாதவர்கள் யுக்தி அநுபவங்களைக்கொண்டு பேசவேண்டும். இதன்படியே வைதிகர்கள் வேதம் 4, வேதாங்கம் 6, ஸ்மிருதி 1, புராணம் 1, தருக்கம் 1, மீமாம்சம் 1 ஆக விப்

பதினுன்கு பிரமாணங்கட்கும் கட்டுப்பட்டுப் பேசுகின்றூர்கள். (ஸ்மிருதி ஒன்றென்பதில் பதினெட்டு ஸ்மிருதியும், புராணம் ஒன்று என்பதில் பதினெட்டுப் புராணமும் அடங்கியிருக்கின்றன.) இவைகளுக்கு விரோதமில்லாவிடில் உபபுராணமும், இதிகாசமும் பிரமாணமாம். இதற்குக் கட்டுப்பட்டே பூர்வாசாரியர்களான சங்கராசாரியார், நீலகண்டாசாரியார், இராமாநுஜாசாரியார், மத்துவாசாரியார், சோமநாதாசாரியார் முதலியவர்கள் பாஷியங்களும் வாதக்கிரந்தங்களுஞ் செய்திருக்கின்றூர்கள். வேதப்புறச்சமயிகளான பௌத்தர், கிறிஸ்தவர், மகம்மதியர் முதலியவர்களும் தங்கடங்கட்குரிய பிரமாணங்கட்குக் கட்டுப்பட்டே வாதஞ்செய்கிறூர்கள். இதுதான் முறைமையும் நியாயமுமாம். இப்பூர்வபக்ஷிகளோ இந்நியமத்தை அனுசரிக்கின்றன ரில்லை. அவர்கள் அவாந்தர மதத்தைக் கற்பித்துக்கொண்டனர்களாகலின் அந்நியமத்துக்குட்பட அஞ்சி, தங்கட்கு மாத்திர முரிமையுள்ளனவும், தம்மதவரியற்றியனவும், பொது வல்லாதனவுமான நூல்களையே பிரமாணமாகக் காட்டுகின்றூர்கள். இப்போதும் இப்பூர்வபக்ஷியார் தாயுமானுர் விஷயத்தில் இக்குற்றத்திற் கிரையானுர். இவர் தாயுமானுரைத் தம்பக்ஷத் துவிதசித்தாந்தியெனக் கூறுவதனோடு, அத்துவித பக்ஷத்தவ ரன்றெனவுங் கூறுகின்றூர். கூறுவதனுல் தாயுமானவர் இவர் பக்ஷத்தவ ராகின்றூர். ஆகும்போது அவர் வாக்கியத்தை யத்துவிதிகளிடத்தில் பிரமாணமாக எடுத்துக்காட்டுவது நியாயமோ? தம்பக்ஷத்து நூலை எதிர்வாதிகளிடத்தில் காட்டலாம், காட்டப்படாதென்று தெரிந்துகொள்ளாத இவரா நியாயவாதஞ் செய்யத் தகுதி யுள்ளவர்? அத்வைதிகள் சிவப்பிரகாசசுவாமிகளியற்றிய "வேதாந்த சூடாமணி" யென்னும் அத்வைத நூலைப் பிரமாணமாகக் காட்டினுல் இவர் ஒப்புவாரா? அப்படிக்காண்பிப்பது நியாயந்தானுகுமா? இவர் தாயுமானுரைத் தமது சார்பினரென்றுசொல்லி அவரது நூலைப்பிரமாணமாகக் காட்டி அத்வைதிகளை வெல்லப்பார்ப்பது, வாதிகள் அல்லது பிரதிவாதிகள், நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி முன்னிலையில் தங்களிலொருவனைச் சாட்சியாகக் கோரி, தங்கள் வழக்கை வெல்லப்பார்ப்பதுபோலா மென்க. அப்படிச் சாக்ஷியாகக்கோறுதல் சொல்லாமைபோல, தாயுமானவர் நூலைப் பிரமாணமாகக் காட்டுவது செல்லாதென்க. இவர்தான் முதல் முதல் தாயுமானவர் நூலைப் பிரமாணமாகக் காட்டினுர். அது இந்நூல் முதற்பாதத்தில் காணலாம். அதன்பேரில்தான் அவர் அத்வைதியென்றும், துவைதியல்லவென்றும் அவர் வாக்கைக்கொண்டும், அவர் மடத்தைக்கொண்டும், இவர்மடத்தைக்கொண்டும் பாநு மூர்த்தியாரும் நாமும் பிரமாணமாகக்காட்டி மறுத்து அவர் அத்வைதியென்றே தாபித்தோம். அவர் அத்வைதியேயாயினும் அவர் நூல் பொதுப்பிரமாணமல்லாமையால் அதையித்துவிதிகளிடத்தில் நாம்பிரமாணமாக எடுத்துக் காட்டியதில்லை. தாயுமானவர் இவர் சார்பினரென நியாய

மின்றிச சொல்லினும் அவரது நூல் பொதுப்பிரமாணமன்றென இவ ரும்ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றமையின்,உமாபதிசிவன் முதலானோர் நூல்கள்போலத் தாயுமானவர் நூலையுங்கொண்டு, அதை யத்துவிதிகளிடத்திற் பிரமாணமாகக் காட்டாதிருப்பதே நியா ய நூற்படி வாதஞ்செய்வோர்க்கழகாம். இவர் நியாயவழியினின்றும் பிறழ்ந்து அவரது நூலைப்பிரமாணமாகக்காட்டினமையால் இவர்நியா ய வாதத்திற் கேலாதவராயினரென்க; அன்றித்தோல்வித்தானத்தை யும் தமக்கிருப்பிடமாகவும் பெற்றன ரென்க. இவ்வாறு தோல்வி யடைதல் ஒருமுறை யிருமுறை யன்று, பன்முறையுமா மென்பது இதன் முன்னர்வந்த பலவிஷயங்களாலு மறிந்திடுக. இப்படிப்பட்ட தோல்விகளெல்லாஞ் சேர்ந்தே பூர்வபக்ஷியார்க்கு வெற்றிக் குவிய லாய்க்கிடக்கின்றன. இவர் அத்வைதிகளிடத்தில் வாதஞ்செயயவருவ திருக்கட்டும். இவர்க்கு வாதஞ்செய்யு முறைமையே தெரியாதே. இப்படிப்பட்டவர் வாதஞ்செய்ய ஏன் வருகின்றார்? இவர்க்கு வாத முறைமையுந் தெரியாது; வாதஞ்செய்யவும் ஆசையிருக்கிறது; வேத சாஸ்திரங்களையுந் தூஷிக்கவேண்டும்; துவிதமுஞ் சாதிக்கவேண்டும்; சுருதி யுக்தி அநுபவங்களென்றால் காததூரமும் ஓடவேண்டும்; வெற்றிக்கொடியும் போடவேண்டும். இவையெல்லாம் வாதசபைக்கு எப்படியேற்கும்? ஆதலால் இனி இப்படிப்பட்டகுமார்க்கக்கள்ளவழியி னுழையாது நன்னெறியினின்று, தருக்கவரம்பு மீறாது வாதஞ் செய்வாராக. இல்லையேல் மௌனமுற்றிருப்பாராக.

உலகம் பொய்யேன்பதற் றுவமானம்.

அத்வைதியான பாநுமூர்த்தி யென்பவர் "மெய்கண்டதேவரை யுள்ளிட்டார், உலகம் முயற்கொம்பென்றும் வான்மலரென்றும் யாண்டுங் கூறாமையானும், சங்கராசாரியாரை யுள்ளிட்டார் உலகம் முயற்கொம்பென்றும் வான்மலரென்றும் கூறுகின்றமையானும் தாயு மானவர் சங்கராசாரியாரைப் பின்றொடர்ந்தே யுலகம் பேய்த்தேர் என்றும், முயற்கொம்புஎன்றும், வான்மலர்என்றும் கூறினரென்க" என்றார். இதன்மேல் பூர்வபக்ஷியார் கொடுத்தபதிலாவது:—"வேத முதலிய கலைகளில் இவ்வான்மலர் முயற்கொம்புகளேயன்றி இந்திர ஜாலம், கனவு, பேய்த்தேர் முதலியனவும் பெறப்பட்டிருக்கின்றன. இவற்றுள், பேய்த்தேர் உபமானம் சிவஞானபோதத்திலும், இந்திர சாலம் கனவு பேய்த்தே ருபமானங்கள் சிவஞானசித்தியாரிலும் பெறப்பட்டிருக்கின்றன. எஞ்சிய வான்மலர் முயற்கொம்புகள் தாயு மானவரிற் பெறப்படுகின்றன" என்பதாம். இதனுண்மையை நடுநிலை யுடையார் சற்றுச் செவிகொடுத்துக் கேட்கப் பிரார்த்திக்கின்றோம். பாநுமூர்த்தியார், இவர்மதஸ்தர் உலகிற்கு முயற்கொம்பு வான்மலர் உவமானங்கள் கூறுவதில்லையென்றும், அத்வைதிகள் கூறுகின்றார்க ளென்றும், தாயுமானவர் ஷை உவமானங்களை யெடுத்தமையால் அவர் அத்வைதியேயென்றுங் கூறினர். அதற்கிவர் என்ன சமாதா

னுஞ்சொல்லித் தாயுமானவரைத் தம் பக்ஷத்தவராக்கிக்கொண்டார்? இவர்கொடுத்த வுத்தரத்தினுலேயே தாயுமானவர் இவர்பக்ஷத்தவரல்லரென்றும் அத்வைதியேயென்றும் வேதமுதலிய கலைகளைப் பிரமாணமாகக் கொண்டவரென்றும் இவர் சார்பினர் அவற்றிற்குக் கட்டுப்படாதவரென்றும் விளங்குகின்றன. இவர் வேதமுதலிய கலைகளில் வான்மலர், முயற்கொம்பு, இந்திரசாலம், கனவு, பேய்த்தேர் முதலிய வுவமானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும், இவர் பக்ஷத்து நூல்களில் இந்திரசாலம், கனவு, பேய்த்தே ருபமானங்கள் சொல்லப்பட் டிருக்கின்றனவென்றும், ஏனைய வான்மலர் முயற்கோடுபமானங்களைத் தாயுமானவர் சொல்லி யிருக்கின்றாரென்றும் கூறினமையால் வேதமுதலிய கலைகளில் வான்மலர்முதலிய ஐந்துபமானங்கள் கூறப்பட்டிருப்பனவாய்த் தெரிகின்றது.

கைவல்லியம் தத்துவவிளக்கம்.

காணனீர்கிளிஞ்சல்வெள்ளி கந்தர்ப்பநகர்கனூர்
வானமைகயிற்றிற்பாம்பு மலடிசேய்முயலின்கோடு
பீனமாந்தறிபுமானிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே: (௧௦அ)

ஷை சந்தேகந்தெளிதற் படலம்.

சத்திசத்தனைத்தவிரவேறன்றுகாண்சத்தனுமாயாவி
வித்தைகாட்டியவிந்திரஜாலம்பொய் வித்துவான்மெய்போலப் (௬அ)

அத்வைதியால் சொல்லப்பட்ட ஷை செய்யுள்களால் வேதமுதலிய கலைகளிற் கூறியிருக்கிறபடி ஷை ஐந்து உபமானங்களும் அத்வைதிகள் ஒப்புக்கொண்டவர்களானுர்கள். முதலிய என்னும்பதம் ஒன்றிருக்கிறதேயென்னின் அதற்குக் கிளிஞ்சல் வெள்ளி, கந்தர்ப்பநகர், வானமை,கயிற்றிற்பாம்பு,தறிபுமான் முதலிய உபமானங்கள் சொல்லியிருப்பதை வைத்துக்கொள்க. முதலிய என்கிற சொல்லைத்தள்ளி மற்றப்படி யிவர்காட்டிய ஐந்துபமானங்களையும் அத்வைதிகளும் கொள்ளுகிறுர்கள், தாயுமானவரும் எடுத்தாண்டிருக்கின்றுர். இவர் சார்பினரோ வான்மலர், முயற்கோடு இவ்விரண்டையுந்தள்ளி, மற்ற மூன்றையுமே யெடுத்தாண்டிருக்கிறுர்கள். அதுமாத்திரமா, முதலிய என்னும் சொல்லிலடங்கிய கிளிஞ்சல் வெள்ளி முதலிய உபமானங்களையுந்தள்ளியிருப்பதோடு அவை தமக்குடம்பாடன்றெனவுங்காட்டியிருக்கின்றுர்கள். அதற்குச் சரியாக அதே பத்திரிகையில் "கைவல்லிய பாட்டிற்போந்த "கிளிஞ்சல்வெள்ளி, கயிற்றிற்பாம்பு, தறிபுமான் என்னுமுவமைகளைத் தாயுமானவரிலெடுத்துக் காட்டவேண்டும். இவ்வுபமானங்களே மாயாவாதத்தை (அத்வைதத்தை) நாட்டுஞ் சிறப்புவமானங்களாம்" என்று கூறியிருக்கின்றுர். ஷை உபமானங்கள் வேதமுதலிய கலைகளுக்குச் சம்மதமென்பதற்கும் 'முதலிய' என்னும் பதத்தில் அவை அடங்கியிருக்கின்றன என்பதற்கும் பிரமாணங்களாவன:—

சுக்கில யசுர்வேதம் நிராலம்போபநிஷத்.

(உடு) அஞ்ஞானம் யாது?

இரண்டாவதற்றதாயும், எங்கும் தொடர்ச்சியாயுள்ளதாயும், சகல சுவரூபமாயுமிருக்கிற பிரம்மத்தினிடத்திலே தேவ, மிருக, நர, ஸ்தாவர, ஸ்திரீ, புருஷ, வருணாசிரம, பந்த மோக்ஷ உபாதி (கற்பிதமான வேஷம் அல்லது கற்பிதமானதடை) யாக விருக்கிற பல தேகபேதங்களினாலே கயிற்றிற் பாம்பென்கிற பிரமைபோல் கற்பிதமாயிருக்கிற ஞானமே அஞ்ஞானம்.

சுக்கிலயசுர்வேதம் பைங்களோபநிஷத்

முதலாவது அத்தியாயம்.

அதினிடத்தில் (பிரமத்தினிடத்தில்) மருபூமியில் (பாலைநிலத்தில்) ஜலம், கிளிஞ்சலில் வெள்ளி, கட்டையிற் புருஷன், ஸ்படிகத்தில் வர்ண முதலியவைபோல் சிவப்பு, வெளுப்பு, கறுப்பு இந்தக் குணமயமானதும் ஏற்றக் குறைவன்றி ஒவ்வொன்றும் சமமாயிருக்கிற குணசுவரூபமானதும் வாக்குக் கெட்டாததுமாகிய (என்றால், மித்தையானதுமாகிய) மூலப்பிரகிருதி யிருந்தது.

யோகசிகோபநிஷத் ச-வது அத்தியாயம்.

ஓம் சைதன்னியம் ஒரே ரூபமானதினாலே பேதமானது ஒருபோதும் யுக்தமல்ல. கயிற்றிற் பாம்பென்கிற தன்மைபோல் ஜீவத்துவத்தை யறியவேண்டியது. கயிறு என்கிற ஞானமில்லாததினாலே ஒரு க்ஷணத்திற்குள் கயிறு சர்ப்பமாய்க் காண்கிறது. அதுபோல் கேவலம் சித்தானது தானே பிரபஞ்சமாக விளங்குகிறது, பிரபஞ்சத்திற்கு உபாதானகாரணம் பிரமத்தைத்தவிர வேறில்லை. ஆகையால் இந்தச் சகலமான பிரபஞ்சமும் பிர்ம்மமாகவே யிருக்கிறது; வேறேயில்லை. சகலமும் ஆத்மாஎன்கிற விதியினாலே பிரவேசிக்கப்படுகிறதென்பதும் பிரவேசிக்கிறதென்பதும்பொய். பரத்துவமானது இப்படி அறியப்பட்டால் பேதத்திற் கிடமேது? பரமாத்மாவாகிற பிர்ம்மத்தினிடத்திலிருந்து சகல பூதங்களு முண்டாகின்றன. ஆகையினாலே இவைகளெல்லாம் பிர்ம்மமே யாகிறதென்று நினை. விளங்குகிறதுபோ லிருக்கிற சகலமான பெயர்களும் பலவிதமான ரூபங்களும் சகலமான கருமங்களும் பிர்ம்மமே யென்று பாவனை செய்: சுவர்ணத்தினாலுண்டான வஸ்துக்கள் சுவர்ணமே யென்பதெப்படி நிச்சயமோ, அப்படிப் பிரம்மத்தினாலுண்டானது பிர்ம்மமே யாகிறது. ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குள்ளே அற்பமாவது எவன் பேதத்தை நினைத்திருக்கிறானோ, அந்த மூடாத்துமாவுக்கே பயமுண்டென்று சொல்லப்படுகிறது. எதனுடைய அக்ஞானத்தினால் துவைத முண்டாகிறதோ, அப்போது ஒன்றையொன்று பார்க்கிறது. சகலமும் ஆத்மாவாகப்பார்க்கிறபோது அவ்விஷயத்தில் அணு அவ்வளவு கூட வேறில்லை. இந்த லோகமானது அனுபவிக்கப்பட்டிருந்தாலும் அது வியவகாரத்திற்கு யோக்கியமானதாக விருந்தாலும் சுவப்னமானது அடுத்த நிமிஷத்தில் நசிப்பதுபோல அசத்ரூபமானதே. சுவப்பனத்தில் ஜாக்கிராவஸ்தையில்லை; ஜாக்கிரத்தில் சுவப்பனமில்லை; சுழுத்தியிவிரண்டுமில்லை; அவ்விரண்டிற்குஞ் சுழுத்தியில்லை. இம்மூன்றும் பொய்யே யாகின்றன. (அவைகள்) முக்குணங்களினால் கற்பிக்கப்பட்டவைகள். இந்த ஞானத்தினால் இந்த ஆத்துமாவானவன் சித்தாயும், நித்தியனாயும், குணங்களுக்கு அப்புறப்பட்டவனாயும் இருக்கிறான். மண்ணினிடத்தில் குடமென்கிற பிராந்தியும், கிளிஞ்சலில் வெள்ளியென்கிற இருப்பும் எப்படியோ, அப்படி பிரம்மத்தில் ஜீவத்துவம். அதை அறிந்தால் (ஜீவ

பாவம்) நசித்துப்போகிறது. மண்ணில் குடமென்கிற பெயரும் தங்கத்தில் குண்டலமென்கிற பெயரும் கிளிஞ்சலில் வெள்ளி யென்கிற பிரசித்தமும் எப்படியோ, அப்படிப் பரப்பிரம்மத்தில் ஜீவனென்கிற சப்தமுண்டாயிருக் கிறது. ஆகாசத்தில் நீலத்தன்மையும் பாலை நிலத்தில் ஜலத்தோற்றமும் கட்டையில் புருஷன் என்கிற பிராந்தியும்போலச் சிதாத்மா விடத்தில் பிர பஞ்சம் தோற்றுகிறது.வேதாள மென்பதும் கெந்தர்வ நகரமென்பதும் ஆகா சத்தி லிரண்டுசெந்திரனும் எப்படி யில்லையோ, அப்படிச் சத்தியமான பிர் மத்தினிடத்தில் ஜகத்தினிருப்பு. ஜலமே அலையென்றும் பொங்குத லென் றும் எப்படி விளங்குகிறதோ,மண்ணனது குடமென்கிற பெயரினல் எப்படி விளங்குகிறதோ, நூல்கள் துணியென்கிற பெயரினல் எப்படியோ அப்படி ஜகத்தென்கிற பெயரினல் சித்தே விளங்குகிறது. சசலமும் பிரம்மமாத்திர மே. மலடிமைந்தன், கானல் ஜலம், ஆகாச விருக்ஷம் இவைகள் எப்படியில்லை யோ, அப்படி ஜகத்தினிருப்புமில்லை.

தேஜோபித்நூபநிஷத்
6-வது அத்தியாயம்.

மலடிமகன் சொல்லுகிற வார்த்தையினல் பயமடைந்தேனென்றல் ஜகத்திருக்கிறதாகச் சொல்லலாம். முயற்கொம்பினல் யானை கொல்லப்பட்ட தானல் ஜகத்திருக்கிறதாகச் சொல்லலாம்.கானற்சலம் குடித்துத் தாக மடங் கிற்றென்றல் ஜகத்திருக்கிறதாகச் சொல்லலாம்,

இதனல் தாயுமானவர் அத்வைத பக்ஷத்திற் சேர்ந்தவரொன்றும், இவர் வேதமுதலிய கலைகளுக்குப் பாஹியரொன்று மாகின்றன. இவர் சார்பினர் எடுத்தாளர்தனவும் வேதமுதலிய கலைகட் குட்பட்டனவு மான கிளிஞ்சல் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, தறிபுமான், வான்மலர், முயற்கோடு ஆகிய இவ்வைந்துபமானங்களும் அத்வைதிகள் மாத் திரமன்று, வைதிக பக்ஷத்தார் யாவருமே அங்கீகரிக்கத்தக்கனவே. அங்ஙனமாக அது அத்வைதிகளுக்கு மாத்திரம் சிறப்பெனக் கூறி யது பொருத்தமுடைய தாகாதென்க. முடிவாக இவர்மதஸ்தர் வான் மலர் முயற்கோடுவமானம் கூறியதாய்ப் பிரமாணமெடுத்துக்காட்டா மையினலும், இவர் காட்டிய நூல்களிலும் இந்திரசாலம், கனவு, பேய்த்தேர் இவ்வுபமானங்கள் மாத்திரம் இருக்கின்றனவேயன்றி வான்மலர் முயற்கோடுவமானங்கள்இல்லாமையினலும்,வேதமுதலிய கலைகளில் ஷை உபமானங்கள் யாவுஞ் சொல்லி யிருக்கின்றமையா லும், அத்வைதிக ளெடுத்தாளுமுபமானத்தைத் தாயுமானரும் எடுத் தாண்டிருக்கின்றமையாலும், "அம்மாயை யில்லாமையே யாம்" "முற்றுமில்லாமாயை" என மாயையை வான்மலர் முயற்கோடொத் துப் பொய்யென அவர் கூறுகின்றமையாலும், இவர் சார்பினர் மாயை பொய்யன்று, மெய்யென்றே சாதிக்கின்றமையாலும் தாயுமானரை மாயை அவித்தைகளால் ஏற்படும் ஜீவேச பேதங்கூறும் அவைதிக மாயாவாத துவிதியென வொருபோதும் மறந்துங் கூறெணது.

கிளிஞ்சல்வெள்ளி, கயிற்றிற்பாம்பு, தறிபுமான் என்னு மூவகை யுபமானங்களைத் தாயுமானவர் கூறியிருந்தா லெடுத்துக்காட்டச் சொன்னரன்றே? அவை சுருதி யுக்தமான வுபமானங்களாகலின்

வேதாவிரோதிகள் அங்கீகரிக்கற்பாலனவேயாம். இவர் அவை அத்வைதத்தை நாட்டுஞ் சிறப்புவமானங்களாம் என்றதனால் துவைதத்தை நாட்டச் சிறப்புவமானங்க ளல்ல வென்றாகின்றது. இதனாலேயே சுருதியுக்தமான அவ்வுபமானங்கள் அத்வைதத்தை நாட்டத்தக்கனவேயன்றி, துவைதத்தை நாட்டத்தக்கனவன்றா மென்க. தாயுமானார் அவ்வுபமானங்களை யேன் எடுத்தாளவில்லையென்னின், உலகு பொய்யென்பதற்கு வான்மலர், முயற்கோடு, கானனீர், இந்திரசாலம், கனவு இவ்வுபமானங்களைச் சொல்லிவிட்டார். இதைவிட வேறு ஏன் சொல்லவேண்டும்? சொல்லக்கூடாதென யாஞ் சொல்லவில்லை. சொல்லாவிடில் தோஷ மென்னவென்று மாத்திரம் கேட்கின்றோம். தாயுமானவர் கூறிய வுபமானங்களைக்காட்டிலும் கிளிஞ்சல் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, தறிபுமான் இவற்றில் என்ன விசேஷமிருக்கின்றது? வான்மலர் தோற்றல் கூட வில்லாத பொய். முயற்கோடு, கானனீர், கனவு இவை தோற்றத்தோடுங் கூடியபொய். கிளிஞ்சல் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, தறிபுமான் இவையுந்தோற்றத் தோடுங்கூடிய பொய்யாம். தோற்றத்தோடுங்கூடிய பொய்யுபமானம் பலவற்றுள்ளும் தாயுமானவர் சிலவற்றைச் சொன்னார்; சிலவற்றைச் சொன்னாரில்லை. ஒன்றுகூட விடாமல் எல்லாவற்றையுஞ்சொல்வேமெனத் தாயுமானார் பீடிகை போட்டனரில்லை. எல்லா அத்வைதிகளும் எல்லாவுபமானங்களையுஞ் சொல்லிவிட்டார்களா? எல்லாவுபமானங்களையுஞ் சொன்னவருமுண்டு, சிலவற்றைமாத்திரஞ் சொன்னவருமுண்டு. சிலவற்றைச் சொன்னவர்கள் மற்றவற்றைஅங்கீகரிக்கவில்லையென எங்ஙனஞ் சொல்லத்துணியலாம்? அத்வைதிகளிற் சிலர்தாமியற்றிய நூல்களிலேனும் செய்யும் பிரசங்கத்திலேனும் சமயத்துக்குத்தக்கவாறு சிலவுபமானங்கள் எடுத்துப்புகன்றாலும் மற்ற வுபமானங்களை அங்கீகரிப்பதில்லையென்று சொல்லப்படாது. வேதமுதலியவற்றில்சொல்லியிருந்தாற்சரி, அவையெல்லாம் பிரமாணமாகவே அத்வைதிகள் அங்கீகரிக்கின்றார்கள். அப்படி யிவர்சார்பினர் அங்கீகரிக்கின்றன ரில்லை. இதற்குத் திருட்டாந்தமாக கானனீர், இந்திரசாலம், கனவு இவைகளை யங்கீகரிக்கின்றார்களேயன்றி, சுருதியாதிகள் அங்கீகரிக்கும் கயிற்றரவு, கிளிஞ்சல் வெள்ளி, தறிபுமான், வானமலர், முயற்கோடு முதலிய வுபமானங்களை யிவர்சார்பினர் அங்கீகரித்திருக்கின்றார்களா? அங்கீகரித்திருந்தால் வான்மலர், முயற்கோடு உப்மானங்களைத் தாயுமானவர் கூறினாரெனவும், கிளிஞ்சல் வெள்ளியாதிகள் அத்வைதத்தை நாட்டுஞ் சிறப்புவமானங்களென்றும் சொல்வாரா? அவ்வுபமானங்களைத் தங்கள் சார்பினர் சொன்னார்களென்று ஏன் சொல்ல வில்லை?

முடிவாக எவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் வேத முதலிய கலைகளிற் சொல்லப்பட்ட எல்லா வுபமானங்களையும் வைதிகராயுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றமையாலும், அப்படி யொப்புக்கொள்ளாதவர்கள் அவைதிகர்களானதாலும், இவர்

சார்பினர் ஷ உபமானங்களெல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளாமை மாத்திர மன்றிக் குறைவுபடுத்திக் கூறுகின்றமையாலும், தாயுமானவர், இவர் சார்பினர் அங்கீகரியாதனவும் அத்வைதிகளால் அங்கீகரிக்கத்தக்கனவுமான வுபமானங்களை யெடுத்துக் கூறினமையாலும் ஒரு ஜாதியுபமானங்களில் சிலவற்றைத் தாயுமானவர் சொல்லாமை காரணமாகக் குறை கூறுதல் அடான்மையாலும் பூர்வபட்சியாரெடுத்த வாதம் தலையெடுக்காதென்றறிக.

"சிவசாக்ஷாத்காராநுபூதியிற் சிறந்த சிவஞானிகளுக்கு உலகந் "தோன்றுதது சத்தியம். அவர்கள் உலகத்தை நாடாது சிவத்தை "நாடினமையால், ஒன்றினை நாடியபோது நாடிய அதுவேயன்றி மற் "றொன்று தோன்றுதென்பது யாவரு மறிந்தவிஷயம். சிவத்தை "நாடியபேர்க்கு உலகந் தெரியாது. உலகத்தை நாடியபேர்க்குச் "சிவந் தெரியாது. உலகம் அஞ்ஞானவடிவமும் சிவம் ஞானவடிவமு "மாயினமையால், அஞ்ஞானத்துக்கு உலகம் விஷயமாயிடுதலும், "ஞானத்துக்குச் சிவம் விஷயமாயிடுதலும் அநுபவமாயினதறிக. "ஞானிகளிடத்தி லஞ்ஞானம் முளைத்திடாமையால், அஞ்ஞானத்து "க்கு விஷயமாகத்தக்கவுலகம் அவர்க்கில்லையென்றதாம். உலகம் "பொய்யென்று ஞானிகளிடங் கூறுவது மவரது சமாதி யவசரத்தி "லென வறிக. அவரொருகால், பகிர்முகப்படுவாராயின், அப்போது "முன்றோன்றியிராத வுலகம் தோன்றுமென்க." என்கிறார். இவர் இவ்விஷய மெழுதியது 1894ஷ பிப்ரவரிமீ 5உ. இதற்குமுன் இவரே இவ்வாக்ஷேபஞ்செய்து, அதற்கு 1893ஷ நவம்பர்மீ 8உ 23உ ப்ரம்மவித்தியாக்களில் "முன்பின்விரோதம்" என்ற தலைப்பின் கீழ் நம்மாலேயே சமாதானம் பெற்றிருக்கின்றார். அது இப்புத்தகத்தின் முதற்பாகத்தில் 54-ம் பக்கமுதல் 63-வது பக்கம்வரையில் காணலாம். இவர் உண்மையாய் வாதஞ் செய்கிறவரானால் அதைப் பூர்வபக்ஷஞ்செய்து மேல் தம் நியாயத்தைச் சொல்லுவார். அங்ஙனமின்மையால் முன் பேசினதும் எம்மால் கண்டிக்கப்பட்டு ப்ரம்மவித்யாபத்திரிகையில் வெளிவந்ததுமான விஷயத்தையே பெயர்த்து மெழுதினர். அப்போது மறுத்த மறுப்புப்போக இப்போது இன்னொருமாதிரியாக மறுத்தெழுதுவாம். இவர் எத்தனைமுறை ஆக்ஷேபஞ் செய்கின்றாரோ அத்தனைமுறையும் பற்பலவடிவங்களாகச் சமாதானமுண்டாய், பின்னும்பின்னும் இவரது துவிதமதத்தைத் தும்சஞ்செய்கின்றது. இவர் எவ்வளவு கபடவழியி னுழைகின்றனரோ, அவ்வளவுக்கும் இவருக்கும் இவர்மதத்திற்கும் தீங்கேயொழிய நன்மையில்லை. பூர்வபக்ஷியார் உலகம் சத்தியமாயுள்ளதென்றும், ஆனால் ஞானிகள் சமாதியில் சிவத்தைத் தரிசிக்கும்போது உலகந் தோற்றவில்லையென்றும், அதுபற்றி உலகமில்லையென்று சொல்லப்படாதென்றும் சொல்லுகின்றார். இதைப்பற்றி இதன் முதற்பாகத்தில் 'முன்பின்விரோதம்' என்னும் விஷயத்தை மீண்டு மொருமுறை வாசித்து,

பின் அடியில்வருவதையும் வாசித்துப் பார்ப்பார்களாக. இவர் சொல்வதுபோலானால் இவர் சார்பினர் ஒத்துக்கொண்ட கானனீர், இந்திரசாலம், கனவு இவ்வுபமானங்களே பொருந்தமாட்டா என்பதைக் காட்டுகின்றோம். ஒருபொருளைப் பார்க்கும்போது மற்றொரு பொருள் தோற்றாதேல், அப்பொருள் இருந்து தோற்றவில்லையா? இல்லாதிருந்து தோற்றவில்லையா? இருந்து தோற்றவில்லையென்னின் அப்பொருள் சத் (உள்ளது) தாகின்றது; இல்லாதிருந்து தோற்றவில்லையெனின் அது அசத் (இல்லது) தாகின்றது. கடத்தைப்பார்க்கும்போது படமில்லை; படத்தைப்பார்க்கும்போது கடமில்லை. இது இரண்டும் சத்துப்பொருள். இதைப்போல் சிவத்தையும் உலகையுஞ் சொல்லலாமென்னின் இது பொருத்த முறாது. ஏனெனின் கடம் ஒரு கண்டப்பொருள்; படம் ஒரு கண்டப்பொருள். இப்படியே சிவனும் உலகுங் கண்டப்பொருளாதல் வேண்டும். கானலினிடத்து நீரும், இந்திரசால சத்தியின்கண் பொருளும், மனத்தினிடத்துச் சொப்பனவுலகும் சொல்லின் அப்போது இரண்டும் சத்தாகா. கானலும், இந்திரசாலசத்தி அல்லது இந்திரசாலக்காரனும், மனமும் சத்தாகி; நீரும், இந்திரசாலப்பொருளும், சொப்பனவுலகும் அசத்தாகின்றன. இதன்படியே சிவம் சத்தும் உலகு அசத்துமா மென்க. இதன்பேரில் "தனக்குதவாத வொருவனை, மற்றொருவன், அவனிருந்தும் செத்தவன் என்று கூறுவதுபோல ஞானிகளுக்கு உலகு உதவாமையால் உலகு பொய்யென்று கூறுகிறார்" என்கிறார். இதன்படி பார்த்தால் உலோகாயுதர்க்குக் கடவுளுதவாமையால் கடவுள் பொய்யாக வேண்டும். முத்தனுக்குச் சாத்தன் சினேகன்; ஆதலால் சாத்தனால் முத்தனுக்கு உதவி யுண்டு. கொற்றனென்பவனோ விரோதி; விரோதியாகலின் அவனால் சாத்தனுக்கு உதவியில்லை. ஆதலால் முத்தனுக்குக் கொற்றன் செத்தவனே. இதுபோல ஞானிக்கு உலகம் உதவியில்லை; அதனால் ஞானிக்கு உலகம் பொய். அவ்வளவேயன்றி யுண்மையில் உலகு பொய்யன்று, மெய்யேயாம் என்பது பூர்வபக்ஷியார் கக்ஷி, இதுவரையில் இவர் சொல்வதுபோல் ஒத்துக்கொண்டு ஆராய்வாம். அப்படியானால் இதற்குக் கானனீர் உபமானம் பொருந்துவதெங்ஙனம்? கொற்றனிருந்து பொய்யேயன்றி யில்லாதிருந்து பொய்யன்று. கானினீரும், இந்திரசாலப் பொருளும், சொப்பனவுலகும் இருந்து பொய்யா? இல்லாதிருந்து பொய்யா? இல்லாதிருந்தே பொய்யென்று பண்டிதரும் பாமரரு மொத்துக்கொள்வார்களாகையால் ஷை கானனீர் முதலிய வுபமானத்தைக்கொண்டே உலகு இல்லாதிருந்தே பொய்யென்று சொல்லவேண்டுமென்க. உதவியற்றவனைச் செத்தவன் என்பதுபோல ஞானிகளுக்கு உதவியில்லாமை காரணமாக உலகு பொய்யென்று சொல்லப்படுகிறதேயன்றி யதார்த்தத்தில் உலகு சத்தியந்தானென வேதம் ஸ்மிருதி புராணம் இதிகாசம் சிவஞானபோதம் திருவாசகம் தேவாரம் இவற்றி

லேனும் இவற்றினுக்கு மாறில்லாத வேறு எந்தநூல்களிலேனும் ஒரு செய்யுளாவது ஒரு அடியாவது ஒரு வாக்கியமாவது பிரமாணமாகக் காண்பிப்பாரானால் எந்தவியாயத்தையும்பாராது உலகு மெய்யென்று அங்கீகரிப்பாம். அங்ஙனம் ஒரு பிரமாணமு மில்லையே. இவர் சொல்வதுபோல வுதவியற்றவனைச் செத்தவனென்று சொல்வதுபோல ஞானிகளுக்கு உதவியில்லாமை காரணமாக வுலகைப் பொய்யென்று சொல்வதில் மற்றொரு குற்றமு முண்டாகின்றது. முத்தனுக்குச் சாத்தன் சிநேகிதன்; ஆதலால் அவன் உதவிசெய்கிறவன். கொற்றன் பகைஞன்; ஆதலால் அவன் உதவியற்றவன். இவ்விஷயத்தில் முத்தன் ஸ்தானத்தில் உயிர், சாத்தன் ஸ்தானத்தில் சிவன், கொற்றன் ஸ்தானத்தில் உலகு. இவ்வுபமானத்தில் முத்தன், சாத்தன், கொற்றனாகிய மூவரும் ஏகதேச கண்ட அவ்வியாபகப்பொருள்கள். அவ்வாறே சிவன், உயிர், உலகு ஆகிய முப்பொருள்களும் ஏகதேச கண்ட அவ்வியாபகப்பொருள்க ளாகவேண்டும். முத்தன், சாத்தன், கொற்றன் ஆகிய மூவரும் ஒருவரிடத்தில் ஒருவரில்லாமற் போகின்றனர். அதுபோலச் சிவன், உயிர், உலகு ஆகிய முப்பொருளும் ஒன்றிருந்தவிடத்தில் ஒன்றில்லாமற்போகும்.

உலகு சிவனிடத்தில் காரியமன்று, மாயையினிடத்தே காரியமென்று இவர் சார்பினர் கூறுகின்றனர். இதற்குப் பன்முறை மறுப்பெழுதப்பட்டது. இங்குஞ் சில வெழுதுவாம். மாயை யென்பதோர் பொருளன்று; அஃது ஓர் சத்தி. சத்திமுதற் காரணமாகாது. பொருளே முதற்காரணமாகும். அப்பொருள் யாதெனில் சத்தியை அபின்னமாகவுடைய சிவனேயாம். இதற்குப் பிரமாணம் வருமாறு:-

சுக்கில யசுர்வேதம் நிராலம்போபநிஷத்.

(சு) பிரகிருதியாது?

பிரம்ம சந்நிதிமாத்திரத்தினாலே பல விசித்திரமானஜகந்நிர்மாண சாமர்த்தியமுடைய புத்திசுவரூபமாகிய பிரமத்தினுடைய சக்தியே பிரகிருதி.

சூதசங்கிதை விசேடசிருட்டி.

நிர்மலசிவன் றன்மாயையாற் கனுப்போ னிருமிருக்கப்பட்டன வெல்லாம், மருவு காரியங் காரணத்திற்கு வேறாகாமையின் மாயைரூபந்தான், பெருகுமாயையு மற்ற திட்டானமாகும் பிரமத்தின் வேறானதன்று. (கஉ)

ஸ்காந்தபுராணம் சம்பவகாண்டம்

உ-வது அத்தியாயம் தமிழ்மொழி பெயர்ப்பு வசனம்.

சகலப் பிரஜைகளுக்கும் நேரிட்ட ஓர் புத்தி மயக்கத்தினால் கேளீர்கள் பிராமணோத்தமர்களே! வேதமுதலிய எல்லா வித்தைகளும் அவைகளினருத்தங்களும் சரியான விதத்தில் தோன்றவில்லை. (சு)

புத்திமயக்கத்தினால் சிலர் ஜகத்துக்கு அன்னந்தான் முக்கிய காரணமென்றார்கள். சிலர் பிராணன்றான் காரணமென்றார்கள். சிலர் மனசு என்றார்கள் சிலர் விஞ்ஞானம், ஆநந்தம், (ரு)

சூரியன், வாயு, அக்கினி, பிரமா, இலட்சுமீபதியாகிய விஷ்ணு, மாயை, விராட்புருஷன் இங்ஙனமாகப் பலரைப் பலர் காரணமாகச் சொல்லினர்கள். சிலர் ஆத்துமாவினுடைய கருமமே யென்றார்கள். (சு)

பௌத்த சார்வாக லாகுள முதலாகிய பலமதஸ்ர்களில் ஒவ்வொரு மதஸ்தரும் ஒவ்வொருவரை அல்லது வொவ்வொன்றைச் சொல்லுகின்றார்கள். முனிவர்களே! வளர்த்தலை நிறுத்திச் சொல்லக்கூடியதில் இவ்வாறாய்ச் சத்தியப் பொருளாகிய மகேச்சுரன் நீங்கலாக மற்றெல்லாவற்றினு மொவ்வொன்றையும் ஒவ்வொருவர் ஜகத்துக்குக் காரணமாகக் கொண்டாடினார்கள். (எ)

அவர்கள் மதிமயக்கத்தினால் தங்களைத் (பரமசிவனை) தவிர மற்றவர்களை ஜகத்துக்குக் காரணமாகச் சொல்லுகின்றார்கள். (கஅ)

தமிழ்க்கந்தபுராணச் செய்யுளில் மாயை முதற்காரணங்கூறுவது குற்றமென்று கூறப்படவில்லை. ஆதலால் சமஸ்கிருத புராணத்தைப் பார்த்தாற்றான் உண்மை விளங்கும். இவ்விஷயமாக ப்ரம்மவித்தியாவிலிருந்து அச்சிடப்பட்ட "துவிதசைவரோ மாயாவாதிகள்" என்னும் புத்தகத்தில் 1-வது பக்கமுதல் 8-வது பக்கம் வரையில் பேசியிருக்கின்றோம். அதைப்பற்றி இதுகாறும் எவரும் வாய்திறந்தனரில்லை. உலகுக்குச் சிவன் அபின்னநிமித்தோபாநகாரணர் என்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு:—

சூதசங்கிதை சாந்தோக்கிய உபநீடதம்.

கற்பகமாலைதயறடம்புயத்துக்கடவுளீர்மந்தணமான
பொற்புறோராதேசத்தையானுமக்குப்புகலுவல்கேண்மினென்றான
வற்புறுமண்ணாதிகளினலாக்கப்பட்டமண்பாண்டமுன்யாவும்
எற்பெறம்மண்ணாதிகளின்வேறன்றியெப்படியிருக்குமப்படியே. (உ)

காரியமெல்லாங்காரணத்தோடுகொதருஅபேதமாயிருக்குங்
காரியசத்தைகாரணசத்தைதனக்குவேறாகாமையாலே
காரியஞ்சத்தாய்ப்பேதமுற்றிடுவதில்லையால்கருத்துறவுணர்மின்
காரியல்கண்டன்றிருவடித்துணையேகண்ணியபுண்ணியவமரீர். (ங)

நரசிருங்காதிபோலச்சூனியமல்லாமையானவிலசத்துவத்திற்
பரவுறுவிசேடமிலாமையாலெடுத்துப்பகரக்காரியமசத்தாயும்
விரவுறுபேதப்படுவெதின்றமரீர்விரித்தவித்தோடங்களிரண்டு
முரவினுண்டாமாதலிற்சதசத்தாயும்பேதப்படுதெலின்றுணர்வீர். (ச)

செப்புபேதாபேதமெம்மாத்திரமும்வரமாட்டாதுணர்வீர்
தப்பிலாதவிப்படியேசாற்றுமெல்லாக்காரியமு
மொப்பிலாதகாரணத்தோடபேதமாயுற்றிருந்தாலும்
எய்ப்பின்மாயையாற்பேதமாகித்தோன்றுமிமையீரோ. (ரு)

பேசுவிகாரமெலாம்பெயராற்பின்னமாகியிருந்தாலும்
மாசிலாதபரமார்த்தமாகவவிரும்பிரமத்தோ
டேசிலபேதமாகியேயிருக்கின்றனவண்டுழுதழக்கி
வாசநறுந்தேனுண்டுவக்குமாலைத்தடந்தோளமரீரே. (சு)

சகத்துக்கொருகாரணமாகித்தயங்குமக்தப்பிரமங்கற்
பகத்தண்டொடையன்முடிவேய்ந்துபாரோர்புகழப்படும்போகஞ்
சுகத்தின்மருவும்விண்ணவர்காள்சொல்லாநிற்கும்பின்னமுமன்
றுகத்தல்செய்யும்பின்னுபின்னமுமன்றென்றாயேயிருக்கும். (எ)

மருவுபசேனமாயமண்ணாதிகட்குக்குலால
னொருவிலபேட்சையெவ்வாறுவேண்டியிருக்குமுரைத்த
திருகில்குலாலற்கசித்தருபமட்சேருமபேட்கை
யிருநிலத்தெவ்வாறு வேண்டியிருக்கு மவ்வாறே யிமையீர். (அ)

நிகரிலா ஏகமாய்ச் சுத்தசைதன்னியமாய் நெடுநாளுநிலவியிருக்கின்றபடி யாலும், பகர்நிமித்த வுபாதான காரணத்துவங்கள் பயில்வேதப் பிரசித்தமா யிருத்தலாலும், மிகுபிரமத்திற்கு வேறொருவத்துவபேட்சைவேண்டியதின் றப்பிரமம் பிரதீதிசித்தத், தகுகுணத்திரய மூளதன்மாயை யோடொன் றாயே சார்ந்து சிருட்டித் தொழிலாதிகள் பலவுஞ்செய்யும். (கூ)

போய்ப்பிரதிபிம்பங்கள் ஒன்றை யொன்று தண்டித்தல்.

ஜீவன் அவித்தியாப் பிரதிபிம்பன் என்று வேதாதிகள் கூறு வதைச் சோ. நா. என்பவர் மறுத்துக்கூறிச் சமாதானம் பெற்று மௌனவிரதங் கொண்டன ரன்றோ? அவர்க் கபின்னதோழரான இப் பூர்வபக்ஷியார் அதற்குச் சமாதானம் ஏதுங்கூறாவிடினும், அதனோடு ஈசனும் மாயாப்பிரதிபிம்பன் என வேதாதி கூறுவதையும் மறுக்கஎழு ந்து, "மாயாப்பிரதிபிம்பனை அவித்தியாப் பிரதிபிம்பர், தான் என்ப தற்கும் அவகாசமே கிடையாது. குடத்திற் பிரதிபிம்பித்த சந்திரன் குளத்திற் பிரதிபிம்பித்த சந்திரனைத் தானென்பதும், அவைகளி லொன்றைத் தண்டிப்பதும்உண்டாயிடினன்றோ இவரது அஞ்ஞானப் பிரசங்கம் பிரயோசனம் பெறும்" என்றார். இவர் எந்த விஷயத்தைத் தெளிந்தனரோ அந்த விஷயத்தைப்பற்றி மாத்திரம் பேசுதல் அழ காம். தெளியாத விஷயத்தைத் தெளிந்ததாகக் கொண்டு ஆக்ஷே பிக்க வருவது நன்றன்று. இவர் அவித்தியாப்பிரதிபிம்பனான ஜீவன் மாயாப்பிரதிபிம்பனான ஈசனைத் தானென்று சொல்வதாய்ச் சொல்லு கின்றார். இதனால் இவர் வேதாந்தநூல்கள் அறிந்திலரென் றேற்படு கின்றது. இவர் சொல்லுகிறபடி ஜீவன் ஈசனைத் தானெனச் சொல் வது கிடையாது. அப்படிச் சொல்பவருமில்லை; அப்படிச் சொல் லும் வேதாந்தநூல்களுங் கிடையா.

கைவல்லியம் தத்துவவிளக்கம்.

"அந்தமாஞ்சிவனீசன் அவர்களேவாச்சியார்த்தம்
சந்தம்பேதமாவார் தமக்கைக்கியங்கூடாதே. (கூஎ)

ஷை சந்தேகந் தெளிதல்.

திகழ்ந்த ஈசனுர் சிருட்டியும் சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே, சகந்தனிற் பொது ஈசனுர் சிருட்டிகள் சராசரப்பொருளெல்லாம், அகந்தையாம் அபிமானங்கள் கோபங்கள் ஆசைகளிவையெல்லாம், இகழ்ந்த சீவனுர் சிருட்டிகளாகுங்காண் ஈசனுர் செயலன்றே. (ருரு)

இந்தச் சீவனுல் வரும் அறுபகை யெலாம் இவன் செயலல்லாமல், அந்தத்தேவனுல் வருமென்ற மூடர்கள் அதோகதியடைவார்கள், இந்தச் சீவனுல் வரும் அறுபகையெலாம் இவன் செயலல்லாமல், அந்தத்தேவனுலன்றெனும் விவேகிகள் அமல வீடடைவாரே. (ருசு)

இந்த வேதாந்த நூற்பிரமாணத்தினுல் ஜீவனே யீசனென்று சொல்வது கூடாதென்றும், ஜீவனும் ஈசனும் வேறென்றும் விளங்குகின்றமை காண்க.

பிரதிபிம்பங்களில் ஒன்றை யொன்று தண்டிப்பதைப்பற்றியுஞ் சிந்திப்போம். பிம்பப்பிரதிபிம்பவாதம் பூர்வபக்ஷமெனவும், விவர்த்தவாதமே சித்தாந்தமெனவும், ஜீவேசுவரர் துரிய சிவனைப்போல் பொருளல்ல வென்பதற்கு ஒருவாறு பிம்பப் பிரதிபிம்பவாதஞ் சொல்லியிருக்கிறதெனவும் ஆறுவருஷமாக எத்தனையோமுறை கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோலச் சொல்லியும், பலமுறைசொல்லியிருப்பனவற்றை யெல்லாந் தொகுத்து அத்வைத தூஷண பரிகாரத்தில் காட்டியுமிருக்க, பின்னும் தும்பைவிட்டு வாலைப்பிடிப்பதுபோலவும், நெய்யரிரசத்தைவிட்டுத் திப்பியைக்கொள்வதுபோலவும் பேசினதையே பேசுவதில் யாதுபயன்! இதிலேனும் இவர் தப்பிப்பிழைக்கின்றனரா பார்ப்போம். ஒரு பிரதிபிம்பம் மற்றொரு பிரதிபிம்பத்தைத் தண்டிக்குமென்று அத்வைதிகள் சொல்வது கூடாதுதான்; ஏனென்னில் இரண்டும் பொய்யானதினு லென்க. பரமசிவனுல் திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதசாஸ்திரங்கள் கூறுகின்றனவே யென்னின், வேதசாஸ்திரங்கள் கூறினுலுஞ்சரி, பரமசிவனே மானிட வடிவங்கொண்டு வந்து கூறினுலுஞ்சரி, முக்கண் சடைமுடி மான் மழு சதுர்ப்புஜம் நீலகண்டம் முதலியவைகளோடு வந்து கூறினுலுஞ்சரி, அப்படியு மொத்துக்கொள்ளாத பக்ஷத்தில் முக்கண் முதலியன வொவ்வொன்றுக்கும் ஒன்பதுவீத மெடுத்துக் கொண்டுவந்து கூறினுலுஞ்சரி, இன்னும் எவ்வித வடிவத்தோடு வந்து கூறினுலுஞ்சரி ஒத்துக்கொள்ள மாட்டார். ஏனென்னில் பிரதிபிம்பங்கள் பொய்யானபோது ஒன்றையொன்று எப்படித் தண்டிக்கும்? இது சுத்த ஆக்ஷேபமாயிருப்பதால் இந்த ஆக்ஷேபகரமான கரட்டோணன் பூர்வபக்ஷியாருடைய உள்ளத்திற் புகுந்து வாட்டித் தொந்தரவு செய்கின்றது. இரண்டையும் பிரதிபிம்பமெனச் சொல்வதினும் ஒன்றைப் பிம்பமாகவும் மற்றொன்றைப் பிரதிபிம்பமாகவும் அதாவது ஈசனைப் பிம்பமாகவும், ஜீவனைப் பிரதிபிம்பமாகவும் வேதாதிகள் சொல்லியிருந்தால் ஷை ஆக்ஷேபமென்னுங் கரட்டோணன் அவருடைய வுள்

ளத்திற்புகுந்து வாட்டாது போலும்! அப்படியே ஈசனைப் பிம்பமாக வும், ஜீவனைப் பிரதிபிம்பமாகவும் வைத்துப் பார்க்கினும் இதுவும் ஆக்ஷேபமாகத்தான் றோன்றுகின்றது. ஏனென்னில் எப்படி யொரு பொய் மற்றொரு பொய்யைத் தண்டியாதோ, அப்படியே ஒரு மெய் ஒருபொய்யையுந் தண்டியாது. இவர் சொல்லிய திருட்டாந்தப்படி குளத்திற் றோன்றிய ஒரு பொய்ச்சந்திரன் குடத்திற் றோன்றிய மற் றொரு பொய்ச்சந்திரனை யெப்படித் தண்டியாதோ, அப்படியே மெய்யான ஒரு பிம்பமனிதன், குடத்திற் றோன்றிய பொய்யான தனது பிரதிபிம்ப மனிதனைத் தண்டிக்கமாட்டான். இங்ஙனமா யின் மெய்யாகியும் பிம்பமாயுமுள்ள கைலாய பரமசிவன்: பொய்யா யும் பிரதிபிம்பமாயுமுள்ள (கண்ணாடியிற் பிரதிபிம்பித்த) சுந்தர மூர்த்திசுவாமிகளுக்கும், பார்வதியின் பிரதிபிம்பங்களான கமலினி அநிந்திதைகளுக்கும் பூமியிற்பிறக்கும்வண்ணம் சாபமானதண்டனை செய்த தெங்ஙனமோ! பரமசிவன் சாபங்கொடுத்த திருக்கட்டும்; பரமசிவன் சத்தியப்பொருளா யிருத்தலால் சாபங்கொடுக்கக்கூடும். சுந்தரமூர்த்திசுவாமிகளும் கமலினி அநிந்திதைகளும் பூர்வபக்ஷியின் கொள்கைப்படி பொய்யர்களாயிற்றே. அவர்களெப்படிச் சாபமான தண்டனையைப் பெற்றார்கள்? பெற்றாலும் பெறட்டும். பொய்யான அவர்கள், மெய்யான வுலகிலுள்ள மெய்யான தாய்மார்வயிற்றில் மெய்யாகப்பிறந்து, மெய்யான சரீர இந்திரிய அந்தக்கரண ஜீவர்க ளோடு வளர்ந்து, மெய்யானசுவாமியால் ஆட்கொள்ளப்பட்டு, மெய் யான சிற்றின்பபோகத்தை அனுபவித்து, மெய்யான கோவில்களுக் குப்போய், மெய்யான தேவாரப்பதிகங்கள்பாடி, மெய்யான அற்புதங் கள்செய்து, மெய்யான வெள்ளையானையின்மீது ஆரோகணித்துக் கொண்டு, மெய்யான கைலைமலைக்குச்சென்று, மெய்யான பரமசிவ னைக்கண்டுசேவித்து, மெய்யான பேரின்பத்தை யிப்போதும் அநுப வித்திருத்தல் கூடுமோ? கண்ணாடியிற் பிரதிபிம்பித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய வொரு ஆண்பொய்: கண்ணாடியிற் பிரதிபிம்பித்த கமலினி அநிந்திதைகளாகிய இரண்டு பெண் பொய்களை யெப்படி மோகித்தது? அந்த இரண்டு பெண் பொய்களும் அந்தவொரு ஆண் பொய்யை யெப்படி மோகித்தன? இந்த ஆண் பெண் பொய்களுக்கு எப்படிக்கலியாணம் நடந்தது? எப்படி அவை ஒன்றோடொன்று புண ர்ந்தன? எப்படி இரண்டு சமைத்துப்போட வொன்று சாப்பிட்டது? இந்தப் பூர்வபக்ஷியாரின் ஆக்ஷேபப்படி சுந்தரமூர்த்திசுவாமிகள், கம லினி, அநிந்திதை இவர்களுடைய சரித்திரங்கள் யாவும் பொய்யினும் பொய், சுத்தபொய்யல்லவா? இந்தப்பொய்கள் செய்த காரியங்களை யெல்லாம் மெய்யெனக்கொண்ட இந்த மெய்யர், அந்த ஜீவேசபொய் களைமாத்திர முண்மையென்று ஏன் கொள்ளப்படாது? சுந்தரமூர்த்தி முதலியவர்கள்மாத்திரம் என்ன புண்ணியம் செய்தார்கள்? ஜீவேசர் கள்மாத்திரம் என்ன புண்ணியஞ் செய்யவில்லை?

இதுநிற்க; ஸ்ரீகைலாயத்தில் சுப்பிரமணியக்கடவுள் அவதாரகாலத்தில் பரமசிவன் திருக்கண்களிலிருந்து ஆறு அக்கினிப்பொறிகள் வெளிப்பட்டனவாகவும், அவற்றைக்கண்டு பார்வதிதேவியார் பயந்து அந்தப்புறம் ஓடியதாகவும், அப்போது கால்களிலணிந்திருந்த பாதஸரங்களி லிழைத்திருந்த நவரத்தினங்கள் உதிர்ந்தனவாகவும், உதிர்ந்த நவரத்தினங்களில் அம்மனுடையதிருவுருவம் பிரதிபிம்பித்ததாகவும், பரமேசுவரன் அப்பிரதிபிம்பங்களை வருக வென்றழைத்ததாகவும், அப்பிரதிபிம்பங்கள் வெளிப்பட்டுப் பெண்களாய் வந்து பரமசிவனைக்கண்டுமோகித்துக் கருப்பமாய் வீரபாகு முதலிய நவவீரர்களைப் பெற்றனவாகவும், அப்பெண்களுடைய வியர்வையிலிருந்து இலக்ஷம் படைவீரர்களுண்டானதாகவும், ஷை நவவீரர்களுக்குள் இலக்ஷம் வீரர்கள் அடங்கி இருந்ததாகவும், இவர்கள் யாவரும் சுப்பிரமணியக் கடவுளுக்குத் துணையாய் நின்று சூரபத்மன் முதலிய அசுரகோடிகளுடன் போர்செய்து அவர்களை வென்றதாகவும் ஸ்காந்தபுராணம் சங்கர சங்கிதையின் சிவரகசிய கண்டம் கூறுகின்றதன்றோ? அதில் பொய்யான பிரதி பிம்பங்கள் மெய்யான பிம்பங்கள் செய்வதுபோல உண்மையான காரியங்கள் செய்தமைக்கு இவர் யாது சமாதானம் தேடி வைத்திருக்கின்றார்? இவர்க்கு மாத்திரம் பொய் மெய்யாவதும், பிறர்க்கு மாத்திரம் பொய் பொய்யாவது மென்னே! ஜீவன் பிரதிபிம்பம் என்னும் சுருதி வாக்கியத்தை இகழ்ந்து ஆக்ஷேபித்து அத்வைத்தூஷண பரிகாரத்தில் சோமசுந்தரநாயகர் சமாதானம் பெற்று அதுவனாயில் அடங்கினானன்றோ? அதுவே ஈசப்பிரதிபிம்பத்துக்கும் சமாதானமாம். அங்ஙன மிருக்கவும் இவர் ஜீவேசர்கள் இரண்டையுஞ் சேர்த்து ஆக்ஷேபித்து இப்போது சமாதானம் பெற்றார். இது ஒரு கன்னத்தைக் காண்பித்து அடிபட்டுக்கொண்டவன் அதோடு நில்லாது பின்னொரு கன்னத்தையுங் காண்பித்து அடிபட்டுக்கொண்டதற் கொப்பா மென்க.

இவர் ஒரு பொய் மற்றொரு பொய்யைத் தண்டியாதென் றல்லவா ஆக்ஷேபிக்க வந்தார்? அப்படித் தண்டிக்கு மென்பதற்கு ஒரு திருட்டாந்தங் கூறுகின்றோம். அது சொப்பன வுலகில் பொய்யான ஒரு ராஜன் பொய்யான ஒரு குற்றவாளியைத் தண்டிப்பது போலாம் என்றறிக. சொப்பனம் பொய்யா யிருந்தும் சாக்கிரத்தில் நடக்கும் விவகாரங்களைப்போல அவ்விடத்தில் நடக்கவில்லையா? ஆதலால் ஒரு பொய் மற்றொரு பொய்யைத் தண்டிக்கு மென்பது யாவர்க்கும் அனுபவமேயாம். பொய்யென்பதனாலேயே மலடிமகன் ஆகாச தாமரையைப்போல முற்றும் பொய்யென நினைக்கின்றார். இதுதான் தெரியாமை! இதைக் குறித்துப் பன்முறையும் நன்கு விளக்கி இருக்கின்றோ மாகலின் இவ்விடத்தில் அதிகமாய்ப் பேசாது சுருக்கி விட்டோ மென்க.

சுக்கிலயசுர்வேதம் பைங்களோபநிஷத்.

அதில் (மூலப்பிரகிருதி) பிரதிபலித்ததெதுவோ, அது ஈசுவர சைதன்னியமா யிருக்கின்றது.

அப்பயதீக்ஷிதரியற்றிய சிவதத்துவ விவேகம்.

(சிவஞான சுவாமிகள் மொழிபெயர்ப்புச் செய்யுள்)

குணங்களைக் கடந்தோ யெனினும் மாயையினைத் தோய்தலால் குணமுடையவன்போ, லணங்கொருபாலுங் கறைமிடற்றழகு மம்பகமூன்றுமாமுருக்கொண், டிணங்குரு நாமஞ் சிவன் பவன் முதலாவியைந் தயனரியரன் முன்னு, முணங்கிடா வுலகை நடாத்துவோனுகி யோங்கினை நீங்கரும் பொருளே. (கக)

மற்றப்பிரமாணங்களை அத்வைததூஷண பரிகாரம் 26-வது 27-வது பக்கங்களிற் காண்க.

பிரமம் பரிபூரண மேன்பதற்குத் தோல்வியடைந்த வுபமானமும், ஆபாசவுபமானமும்.

பிரமம் பரிபூரண மென்பதற்கு இவரும் இவர் நண்பரும் கூறும் உபமானங்களைச் சிறிது ஆராய்வாம்.

பானுமூர்த்தி இவரைக்கேட்ட கேள்விகள்.

(1) உலகமானது சத்துப்பொருளா யிருந்தால் சத்துப்பொருளாயும், பரிபூரணமுமாயுள்ள பிரமத்துக்கு எப்பக்கத்திலிருக்கிறது?

(2) ஒருபக்கத்திற்று னிருக்கவேண்டுமென்று கூறினல், பக்கமுடைய பிரமம் கண்டப்பட்டன்றோ போகும்?.

(3) கண்டப்பட்டுப்போகுங் கடவுளைப் பூரணரென்று சொல்லப்படுமோ?

(4) உலகத்தைச் சத்துப் பொருளென்று கூறிக் கடவுளைக் கண்டப் பொருளாக்குவதுதான் அழகோ?

இதற்குப்பூர்வ பக்ஷியாரான அரக்கோண வீரபத்திரமூர்த்தி கொடுக்கும் விடைகள்.

(1) சத்துப் பொருளாயும், பரிபூரணமாயுமுள்ள ஆகாயத்துக்கு எந்தப் பக்கத்தில் சத்துப்பொருளாகிய காற்று இருக்கிறது. இதனை யுய்த்துணர்ந்தடங்குவாராக.

(2) ஆகாயத்தினிடத்திற் காற்று ஒரு பக்கத்திலிருக்கிறதென்று எந்த நிர்மூடனும் புலம்பாதுகையால், ஆகாயம் கண்டப் பொருளாயினதில்லை. இவ்வுபமானத்தாற் சாதிக்கப்படும் (உபமேய ஸ்தானத்தினின்ற) பிரமமும் யாண்டுங் கண்டப்பொருளாயினதில்லை யறிக.

(3) மேல் 1, 2 இலக்கங்களிட் டெழுதிய நியாயங்களால் பிரமங் கண்டப்பொருளாயினதில்லை யாகையால், அக்கடவுளைப் பரிபூரணரென்று சொல்ல யாதொரு தடையுமின்றென்க.

(4) காற்றுச்சத்துப் பொருளாயினது கொண்டு ஆகாயம்கண்டப் பொருளாகாததுபோல், உலகம் சத்துப்பொரு ளாயினது கொண்டு பிரமங்கண்டப் பொருளாயினதில்லை யறிக.

இதிலுள்ள மோசத்தையும் அயோக்கியதையும் அற்பதனத் தையும் மாறுபாட்டையும் சற்று ஊகித்துப் பாருங்கள். இவ்விடை வெளிப்பட்டது 1894-ஞு ஜூன்-மீ 18-உ 25-களில். இதற்கு மறு ப்பு இவரெழுதுவதற்கு நெடுநாள் முன்னரே வந்திருக்கின்றது. அதைப் பூர்வபக்ஷம் பண்ணி மேலே யெழுதாமல் மறுக்கப்பட்டதை யே எழுதினர். 1892-ஞு செப்டம்பர்-மீ 10-உ ப்ரம்ம வித்தியா வில் எழுதிய "சித்தாந்திகளும் ஏகாத்துமவாதிகளே" என்னும் விஷயத்திலும், 1892-ஞு செப்டம்பர்-மீ 18-உ ப்ரம்ம வித்தியா வில் எழுதிய "சங்கராசாரியார் அவதாரமகிமை" என்னும் விஷயத் திலும், 1894-ஞு பிப்ரவரி-மீ 5-உ ப்ரம்மவித்தியாவில் எழுதிய "அத்வைததூஷண பரிகாரம்" என்னும் விஷயத்திலும் முறையே ஒன்று 21-மாசங்கட்கு முன்னும், ஒன்று 18-மாசங்கட்கு முன்னும், ஒன்று 4 மாசங்கட்கு முன்னும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஆகாயத்தில் வாயு இருப்பதுபோலெனச் சொல்வது அத்வைதிகளுக் குச் சாதகமும், துவிதிகளுக்குப் பாதகமுமா மெனவும், ஆகாயம் காரணமும் சத்துமாமெனவும், வாயு காரியமும் சத்துப்போலியுமா மெனவும் சுருதியுக்தி அநுபவங்கட் கொத்துப் பலபிரகாரமாகப் பேசப்பட்டிருக்கின்றன. அவற்றில் அத்வைததூஷண பரிகாரமொன் றில்மாத்திரம்வந்த சமாதானத்தில் சிலவற்றை இங்கெடுத்துக்காட்டு வாம்:

"இனி ஆகாயத்திலிருந்து வாயுவாதிக ளுற்பத்தியாம்வகையை ஆராய்ந்து பார்த்து, அதுவும் இவருக்குச் சாதகமா? பாதகமா? என்பதை விசாரிப்பாம். ஆகாயத்தின்கண் வாயுவாதிக ளுற்பத்தியாதல், தாய் குழவியைபோல் பின்னவாதமாகவா? பால்தயிரைப்போல் பரிணமவாதமாகவா? வித்து மரம் போல் மற்றொருபரிணம வாதமாகவா? சூரியன் பிரதிபிம்பசூரியனைப்போல் பிம்பப் பிரதிபிம்பவாதமாகவா? நீர் அலையாதிபோல் அம்சாம்சிக வாத மாகவா? மண் கடம்போல் காரணகாரியவாதமாகவா? கயிறு அரவுபோல் விவர்த்தவாதமாகவா? இவைக ளல்லாவிடில் வேறு எவைபோல்? தாய் மகனைப்போலென்னின் தாய் ஒரு இடமும் மகன் ஒரு இடமுமாகிக் கண்டப் படுகின்றமையின் அகண்டமாகிய ஆகாயத்திற்குஇவ்வுபமானம்பொருந்தாது. அன்றித் தாயில்லாவிடத்தில் குழவி இருப்பதுபோல் ஆகாயமில்லாவிடத் தில் வாயுவாதிக ளிருக்கவேண்டும். இது பிரத்தியக்ஷ விரோதமாமென்க. இனிப் பால் தயிராவதுபோ லென்னின் பால் தயிர்போலென்பதில் பால் கெட்டுத் தயிராவதுபோல ஆகாயங் கெட்டு வாயுவாதிகளாகவேண்டும். தயி ராகும்போது பாலில்லாமற்போவதுபோல் வாயுவாதிகளிருக்கும் இப்போது ஆகாய மின்றெனக் கூறவேண்டிவரும். ஆதலா லிஃதும் பொருத்தமன்று; இப்போது ஆகாயமிருத்தலினுலென்க. வித்து மரம்போலென்னின் வித்துக் கெட்டு மரமாவதுபோல் ஆகாயங்கெட்டு வாயுவாதிகளாகவேண்டும். மரமா யிருக்கும்போது வித்தில்லாமற் போதல்போல வாயுவாதிகளா யிருக்கும்

போது ஆகாய மில்லாமற் போகவேண்டும். வாயுவாதிகளாயிருக்கு மிப்போது ஆகாயமில்லையா? இது நிற்க, வித்துத் தானில்லாவிடத்தில் மரமாகின்றது. அதுபோல் ஆகாய மில்லாவிடத்தில் வாயுவாதிக ளிருக்கவேண்டும். அன்றி வித்துடனே ஜலமுதலிய வஸ்துகள் சேர்ந்து விருக்ஷமாகின்றது. அதுபோல் ஆகாயத்துடனே இதர பொருள்கள் சேர்ந்து வாயுவாதிகளாக வேண்டும். ஆதலா லிவ்வுபமானமும் பயனற்றவுபமானமாம்.

சூரியன் பிரதிபிம்ப சூரியனாவதுபோல வென்னின் சூரியன் தானில்லாவிடத்திலுள்ள நீரிற் பிரதி பலித்துப் பிரதிபலன சூரியனாதல் போல ஆகாயமும் தானில்லாவிடத்திலுள்ள ஏதோ வொருபொருளிற் பிரதிபலிக்கவேண்டும். இங்ஙனங் கூறுவதனால் ஆகாயங் கண்டப் பொருளாய் விடும். அத்துடனே பிரதிபலிக்க மற்றொரு பொருளும் வேண்டும். ஆகாயத்தைவிட வேறு பொருளின்மையின் அது பொருந்தாது. நீர் அலையாதிபோலென்னின் இதுவுங் குற்றமாம். நீர், தானில்லாவிடத்தில் அலையாதிகளாய் எழக் காண்கின்றோம். அங்ஙனமே ஆகாய மில்லாவிடத்தில் வாயுவாதிகள் எழவேண்டும். பூரணமாய் ஆகாய மிருப்பதால் அது இல்லாவிடத்தில் வாயுவாதிகள் எழுகின்றனவென்பது வெறுஞ்சொல்லாம். அன்றி நீரை யலையாக்குதற்கு வாயுவாதிகள் இன்றியமையாமைபோல ஆகாயத்தை வாயுவாதிகளாக்க வேறுபொருள் அத்தியாவசியம். உபமேயத்தில் ஆகாயத்தையன்றி வேறுபொரு ளின்றென்பது திண்ணம். அன்றி நீர் விகாரமுற்றே அலையாதிகளா யாகின்றது. அங்ஙனம் ஆகாயம் விகாரத்தைப்பெற்றே வாயுவாதிகளாதல்வேண்டும். இவ்வாறு தத்துவநூலோர்ந்த எந்த மதிவல்லனாயினும் விளம்புவானா? இது இப்படி யிருக்கட்டும். நீரைத்தவிர அலையாதிகளுக்குப் பொருளுண்டா? அலையாதிகள் தோற்றமேயன்றிப் பொருளின்றா. அங்ஙனமே ஆகாயத்தையன்றி வாயுவாதிகளுக்குப் பொருள் அபாவமாம். இனி மண் கடம்போலென்னின் மண்ணின்கண் விகார முண்டாகாது கடமாதலின்று. மண், தானில்லாவிடத்திலேயே வனைதலாதித் தொழிலைப் பெறுகின்றது. அதுபோல் ஆகாயம் விகாரப்பட்டே கடமாதல்வேண்டும். அன்றி ஆகாய மில்லாவிடத்திலேயே வாயுவாதிக ளுண்டாதல்வேண்டும். அதுதவிர மண்ணையன்றிக் கடத்துக்குப் பொருளில்லை; கடம் வெறுந்தோற்றமேயாம். அங்ஙனமே ஆகாயத்தையன்றி வாயுவாதிகளுக்குப் பொருளில்லாதிருக்க வேண்டும்; அத்துடனே வாயுவாதிகள் வெறுந்தோற்றமாயு மிருக்கவேண்டும். இத்துணைத் தோஷ மிருக்கின்றமையின் இவ்வாதமும் சோம. நாயக்கருக்குப் பயன்படாமற்போமென்க. இனிக் கயிற்றரவுபோல் விவர்த்தவாதமாகக் கூறின் யாதொரு ஆட்சேபமு மில்லாமற் பொருந்தும். கயிற்றின்கண் அரவு தோற்றமே யன்றிப் பொருளில்லை. கயிற்றுக்கு நஷ்டமில்லாமலும் கயிறு விகாரப்படாமலும் அரவு தோற்றுகின்றது. அன்றிக்கயிற்றுக்கு மிஞ்சாமல் கயிறு ஸ்தானத்திலேயே தோற்றுகின்றது. இவ்வாறு ஆகாயம் நஷ்டப்படாமலும் விகாரப்படாமலும் வாயுவாதிக டோற்றுவதோடு, ஆகாயத்துக்கு மிஞ்சாமல் ஆகாயஸ்தானத்திலேயே தோற்றுகின்றன. கயிற்றைத் தவிர வரவில்லையெனத் தெளிந்தபின்னர் அரவு தோற்றவில்லை. அவ்வாறு ஆகாயத்தையன்றி வாயுவாதிக ளில்லை யெனத் தெளிந்தபின்னரும் தோற்றுகின்றதே யென்பதற்கும் வாயுவாதிகள் அநுபவப்படுகின்றனவே வென்பதற்கும் கானனீர் சொப்பன ஜகங்களைத் திருட்டாந்தமாகக் காட்டி முன்னரே கூறினாம். ஆங்குக் கண்டுகொள்க. இந்த விவர்த்தவாதமே யுண்மையானது. இதனால் ஆகாயத்தில் மற்ற வாயுவாதிக ளிருப்பது விவர்த்தமாகவன்றி யுண்மையாயல்லவெனவும், இங்ஙனமே பிரமத்தின்கண் உலகிருப்பது விவர்த்த

மாகவன்றி யுண்மையாய் அல்லவெனவும் ஏற்படுகின்றன. இதுபற்றியே ஆகாய வுவமானங் கூறப்படுகின்றதென்க. இதனை யோராது ஆகாய வுவமானந் தமக்குச் சாதகமாகவும் அத்வைதிகளுக்குப் பாதகமாகவும் இருப்பதுபோலெண்ணிக் கூறி யேமாந்து மோசம்போனார்! எந்தவகையி னுழையப் பார்த்தாலும் சோம. நாய்க்கர் தப்பியோட வழியில்லை. ஒவ்வொரு வழியும் அடைக்கப்பட்டிருக்கின்றன; அதுவும் வச்சிரமலையினால் அடைக்கப்பட்டிருக்கின்றன.”

இன்னும் இதன்விரிவை யுணரவேண்டுவோர் ஷை அத்வைத தூஷணபரிகாரம் 57-ம் பக்கமுதல் 65-ம்பக்கம்வரையில் பார்க்கவும். இதனால் ஆகாயம் சத்தெனவும் வாயு சத்துப்போலியெனவும் சித்தாந்தமாயினமைகாண்க. இவ்வித சமாதானம் முன்னமே வந்திருக்க அதைக்கவனியாமல் தோல்வியையே வெற்றியாகக்காட்டி எழுத வந்தது நீதியன்றென்க. இது கல்விச்சாலையில் உபாத்தியாயர் “உயிரெழுத்தெத்தனை?”என்று கேட்டதற்கு முதல்மாணாக்கன் 12 என்று சொல்லியுட்கார, கடைமாணாக்கன் 13 என்று சொல்லி, “முதல் மாணாக்கன் ஸ்தானம் எனக்குக் கிடைக்கவேண்டு”மென்று வாதாடுவதுபோ லிருக்கின்றது. இதனால் பூர்வபக்ஷியாரது கக்ஷி முழுப்பலவீனமென நிதர்சனமாயிற்றென்றுணர்க; அன்றி யிப்படிப்பட்ட மோசவழியன்றி நியாயமான வழியிற்சென்று தம் சித்தாந்தத்தை நிறுத்திக் கொள்வதற்கு ஏலாதவரென்று முணர்க.

இவர் சிவத்துக்குச்சொல்லும் பரிபூரணவிலக்கணந்தான் வெட்டவெளியாயிற்றே. இதன்பேரில் இவரதுநண்பர் மகாதத்துவசாஸ்திரியொருவர் வெகு வீரியத்துடன் பரிபூரணவாதஞ்செய்ய வருகின்றார். அவரது வாதத்தையும் சற்றுப் பரீக்ஷித்துப் பார்ப்போம். அவர் “திருப்பேரூர் இராமசுவாமி சிவாசாரியன்” எனக் கையொப்பமிட்டிருக்கின்றார். அவர் 1894௵ ஜனவரி௴ 29௳ பிப்ரவரி௴ 5௳ நாகை நீலலோசனிப் பத்திரிகைகளில் “நம் உடலில் உயிர், நகசிகை பரியந்தம் வியாபித்துநின்று நடத்துகின்றது. உடலோ என்பு நரம்பு முதலிய சத்த தாதுக்களாயிருப்பதோடு, அனேக உட்பிரிவுப் பொருள்களை யுடையதா யிருக்கின்றது. அங்ஙன மிருந்தும் அதில் நிறைந்துள்ள உயிரின்வியாபகம் தடைபட்டதில்லை” என்றெழுதி, இதைச்சிவன் உலகில் வியாபித்தமைக்கு உபமானமாக எடுத்துக் கூறுகின்றார். இதில் துவிதிகள் சிவனுக்குச்சொல்லும் பரிபூரணம் இன்னும் ஸ்பஷ்டமாய் வெளிப்பட்டுவிட்டது. இனி இதிலுள்ள ஆக்ஷேபப்பெருக்கை விவரித்தெடுத்துக் காட்டுவோம். உபமானஞ்சொல்லுவர் பிரத்தியக்ஷப்பொருளில் காட்டவேண்டுமேயன்றி, அப்பிரத்தியக்ஷப்பொருளில் காட்டப்படாது. அப்பிரத்தியக்ஷப் பொருளை விளக்கத்தான் பிரத்தியக்ஷப்பொருளை யுபமானமாகச்சொல்வது. உயிரொன்றுண்டெனவும், அது உடலுக்குவேறு எனவும், அது சித்தெனவும் கொள்வது ஒருபாலார் கொள்கை. அதற்குமாறாகக் கொள்வது பிறிதொரு பாலார் கொள்கை. உயிர் வியாபகமென்பது ஒரு சாரார் சம்மதம்; அதை மறுத்து அவ்வியாபகம் என்பது இன்னொரு சரார்சம்மதம். இன்னுமிவ்வாறு பல வாதிகள் பலவிதமாய்ச் சித்தாந்தஞ் செய்கின்றனர். அதை ஸ்தாபிப்பதற்கு உலகிலுள்ள பல பிரத்தியக்ஷப்பொருள்களைத் திருட்டாந்தங் கூறுகின்றனர். உயிரினது இலக்கணம் பிரத்தியக்ஷமானால் அதில் பலர் பலவிதமாய் மாறு

பாடு கொள்வதற் கிடனிராது. பிரத்தியக்ஷ மல்லாமையினுல் மாறுபாடு கொள்வதற் கிடனுகின்றது. பலவித மாறுபாடு கொள்வதற் கிடனுகின்ற தும், அப்பிரத்தியக்ஷமான தமான வுயிர்ப்பொருளை யுபமானமாகக்கொண்டு, சிவனுக்குப் பரிபூரணஞ்சாதிக்க எழுவது வீணேயாகும்; அன்றி யுபமான வுப மேய இலக்கணந் தெரியாமையுமாகும். அவர் உண்மையாய் உபமேயத்துக்கு உபமானஞ் சொல்லவந்தவ ரன்று. சொல்லவந்தவராயின் உயிர் உபமானஞ் சொல்லமாட்டார். உபமேயம் எவ்வளவு குழப்பமோ, அவ்வளவு குழப்பம் உபமானத்திலும் இருக்கின்றமையால் அவரது உபமானம் உபமானமன்று; உபமேயமாம். அதுபற்றியே அவர்காட்டிய வுபமானத்தை விளக்க வேறு உபமானங்களைக் காட்டவேண்டியதாகின்றது.

அவர் 'உடலில் உயிர், நகசிகை பரியந்தம் வியாபித்து நின்று நடத்து கின்றது' என்பதில் உயிர் உடல்முற்றும் வியாபிக்கின்றதாயாகின்றது. அவ ருடைய மதசித்தாந்தப்பிரகாரம் பந்தத்தில் உயிர் அணுவாகின்றமையின் அவ்வணு உடலில் வியாபித்ததென்பதும் அதிலும் நகசிகை பரியந்தம் வியா பித்ததென்பதும் தோஷமாம். பந்தத்தில் உயிர் அணுவென்பதற்குப் பிரமா ணம் சிவஞானபோதம் நாலாவது சூத்திரம்இரண்டாவது அதிகரணம் "மாயா தனு" என்னும் வெண்பாவின் உரையில் "வியாபகவுயிர் அணுத்தன்மைப் படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்" என்று கூறப்பட்டிருக் கின்றது. பந்தத்தில் அணுவானவுயிர் முத்திபெறும்வரையில்அணுவாகவிருக்க வேண்டுமேயன்றி வியாபக மாகப்படாது. அங்ஙனமாக அது வியாபித் தல் எங்ஙனங் கூடும்? அவர் மதவிரோதமாக அது வியாபித்ததென்றே கொள்வாம். அங்ஙனம் வியாபிக்கின் அணுத்தன்மை கெட்டு வியாபித்ததா? கெடாமல் வியாபித்ததா? கெட்டு வியாபித்ததெனின் அணுவே யில்லாமல் போவதோடு பந்தமுள்ளவரையில் அணுவாயிருக்குமென்று கூறும் அவர் மதக்கூற்றுக்குப் பங்கமுண்டாகின்றது. கெடாமல்வியாபித்ததெனின் அணு அணுவாகவே யிருக்குமாயின் வியாபித்தல் எங்ஙனங்கூடும்?ஒருபடிநீர், நீராவி யாகுமானுல் 1700 படி நீராவி யாகும். ஒருபடிநீர் 1700 படி நீராவியாய் வியாபித்தல்போல அணுவானவுயிர் உடலில் நகசிகைபரியந்தம் வியாபிக்கு மெனின் இது ஞானவிலக்கணமன்று.ஞானப்பொருள் விரிதலென்பதும் குவி தலென்பதுங் கூடாது. கூடாதேனுஞ் சொல்வாமென்னின் அப்போது அது பூரணமாகாது. இடைஇடையில் உயிர் இல்லாது வெறு வெளியுள்ளதாயேற் படும். ஒருபடிநீர் 1700 படி நீராவியா யாகிறபோது ஒருபடியில் சற்றேறக் குறைய நீர் எப்படி நிறைந்திருந்ததோ,அப்படியே 1700 படிநீராவியில் முன் போல் இடைவெளியின்றி நிறைந்திருக்குமா?இராதன்றே?அங்ஙனமே உயிர் உடலில் வியாபிக்குமாயின் முற்றும்வியாபியாது.ஆங்காங்கு உயிரில்லாவிடம் விசேஷமா யிருக்கும். இருக்கும்போது உயிர் உடல்முற்றும் அதாவது நக சிகைபரியந்தம் வியாபித்ததாய்ச்சொல்வது கூடாது. நீர் நீராவியாய் வியா பித்தவரையிலாவது எப்படி வியாபிக்கிறதென்று பார்க்கின் அது இடையி லுள்ள பொருள்களை விட்டே வியாபிக்கின்றது. பாத்திரத்திலுள்ள நீர் உஷ் ணம் ஏறஏற நீராவியாய் மேலே எழும்போது ஆங்காங்குள்ள பொருள்களை விட்டே வியாபித்துக்கொண்டு போகின்றது. அங்ஙனமே உயிர்நீராவிபோல் உடல்முற்றும் வியாபிக்கும்போது இடைஇடையிலுள்ள என்பு, நரம்பு, சீ, ரத்தம், புழு, பூச்சிமுதலிய பல சடசித்துப்பொருள்களைவிட்டே வியாபிக்க வேண்டும். அப்படி வியாபிக்குங்கால் முற்றும் பூரணமாய் வியாபகஞ்சொல்ல ப்படாது. இதுபோலச் சிவம் சடசித்து உலகில் வியாபிக்கும்போது முற் றும் வியாபித்ததாய்ச் சொல்லப்படாது. சடசித்து உலகத்தைத் தள்ளிய

வியாபித்ததாய்ச் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லுங்கால் சிவம் பரிபூரணமென்று சொல்லும் சுருதி ஸ்மிருதி புராண இதிகாச ஆகமங்கட்கு விரோதமாம்.

இனி விளக்கு ஒரு இடத்திருக்கினும் அதன் பிரகாசம் விளக்கில்லா விடத்தினும் வியாபிப்பதுபோன்று, உயிர் ஒரு இடத்திருக்கினும் அதன்வியாபகம் உடல் முற்று மிருக்குமென்றாலோ, இவ்வுபமானமும் தோஷமாகவே முடிகின்றது. ஏனெனின் விளக்கிலிருந்து பிரகாசம் வெளிப்படுவதால் வெளிப்பட்ட அளவு விளக்குவடிவு குறைகின்றது. குறையக் குறைய அக்குறைவை யெண்ணெயானது சரிப்படுத்தி நிறைவுபடுத்துகின்றது. அதுபோல வுயிரினது சிலபாகங்குறைந்து உடல் முற்றும் வியாபிக்கவேண்டும். அக்குறைவை யெண்ணெயைப்போன்ற தொன்றுவந்து உயிரினது குறைந்த பாகத்தை யப்போதப்போது நிறைவுபடுத்திவரவேண்டும். அக்குறைவை நிறைவுபடுத்துவ தின்னதென விளங்கவில்லை. விளக்கை யப்போதப்போது நிறைவுபடுத்துகின்ற எண்ணெயானது ஆய்விடுமோனால் விளக்கேயில்லாமற் போம். அங்ஙனமே உயிருக்கு முதற்பொருளான எண்ணெயைப்போன்ற ஏதோ வொன்று ஆய்விடுமானால் உயிரே யில்லாமற்போம். இந்தவுபமானப் படி யுபமேயத்தை யாராயின் சிவம் ஒருஇடத்திலும் அதன்வியாபகம் மற்ற இடத்திலுமிருப்பதாய் ஏற்பட்டு, உயிர் உபமானத்தில் நேர்ந்த தோஷங்களெல்லாம் சிவ வுபமேயத்திலுண்டாகி,எண்ணெயைப்போன்றதொன்று சிவத்திற்கு அத்தியாவசியகமாய் வேண்டப்பட்டு, அது ஆய்விடுங்கால் சிவமே யில்லாமற்போய்விடுமென்க. சிவமே யில்லாமற்போகுங்கால் பூர்வபக்ஷியார் நாஸ்திகராய்ப்போகத் தடையேது மிராது.

விளக்கு, அதன் வியாபகம் ஆக விரண்டையுஞ் சொல்வதிலும் அபரிபூரணதோஷ முண்டாகின்றது. விளக்குவடிவானது அவ்வடிவம்வரையில் சற்றேறக்குறைய எவ்வளவு பூரணமாகின்றதோ அவ்வளவு பூரணம் அதன் வியாபகத்தி லில்லை. நீரும் நீராவியும் எப்படியோ அப்படியே விளக்கும் அதன் வியாபகமுமாம். ஆதலால் இதைப்பற்றித் தனியே விசேஷமாய்ச் சொல்லவேண்டிய தில்லை. நீரும் நீராவியிலுமுள்ள தோஷங்களெல்லாம் இதிலு மிருக்கின்ற தென்றுணர்க. இன்னும் சூரியன் ஒரு இடத்திலிருக்க, அவனது பிரகாசம் எங்கும் வியாபித்திருப்பதுபோலெனச்சொல்லும் பாஞ்சராத்திரிகளுடைய சித்தாந்தத்தைத் துவிதசிவாகமியான சோமசுந்தர நாயகரென்பவர் "சித்தாந்த ரத்நாகரம்" என்னும் சஞ்சிகையில் மறுக்கின்றார். அதுவும் ஓர் மறுப்பாகும். அது வருமாறு:—

சோமசுந்தரநாயகர்மறுத்தமறுப்பு.

"இன்னும் விஷ்ணுவுக்குப் பஞ்சராத்திரிகள் கூறும் பூரணத்தைப் பரியாலோசிக்கில, அவர் சாகார பூரணரென்பர் என்பது. பரமபதமென்கிற வீட்டில் நீளாதேவி பூதேவி சமேதராய், திருமாமணி மண்டபத்தில் சங்க சக்கிரதாரியாய், நீலமேனியராய், நித்திய சூரிகளால் சேவ்யமானராய் எழுந்தருளி யிருப்பவரெனவும், அப்படி அவரங்கெழுந்தருளி யிருக்குங்கால், அவருடைய பிரகாசமாத்திரத்தானே சர்வவியாபகத்வம் பெறப்படுமெனவும், அது சூரிய னொரிடத்திலிருக்கவும், அவன் பிரகாசத்தால் சர்வ வியாபியாதல் போல்வதொன்றெனவுங் கூறுவதேயாம். இது பூரண விலக்கென்பதை நிரு

பிப்பாம். சூரியனேரிடத்திலிருந்து அவன் பிரகாசத்தால் வியாபிக்கையில், எங்கும் சமநிறைவு கூறுதல் கூடாது. அவனிருக்குமிடத்திலிருந்து பூமியை நோக்குங்கால் சிறுகச்சிறுகப் பிரகாசவுஷ்ணங்கள் குறைந்திருப்பது பிரத்தியக்ஷமாதலால். இன்ன தன்மையே விஷ்ணுவுக்கும் சொல்ல வருமாகையால், அவர் பூரணராதல் அமையாதென்க. வியாபகப் பொருளாயுள்ளது எங்கும் ஒரு படித்தாதலமையும்."

இன்னுமுள்ள தோஷத்தை யாராய்வாம். 'உயிர், உடலில் நகசிகை பரியந்தம் வியாபிக்கிறது' என்று வரையறுப்பதால் அதன்மேல் வியாபியாதெனப் பொருள்படுகின்றது. அதற்குமேல் வியாபிக்கிறதென்றால் பக்கங்களிலிருக்கும் மனிதர்களுடைய வுடல்களிலும் வியாபித்து, அவ்வுடல்களையுந் தனதாகக்கொண்டு, அவைகளுக்குண்டாகுஞ் சுகதுக்கங்கட்கும் தான் ஆட்படவேண்டும். இது அநுபவ விரோதம்; ஆகலின் தன்னுடலுக்கு மிஞ்சி வியாபியாதென்க. இனி யுடல்வாயில் வியாபிப்பதைப் பார்ப்போம். பிள்ளை பிறக்குங்கால் ஒன்றரைசாண் நீளமிருக்கின்றது. இருபது வயது ஆய்விட்டால் எண்சாண் மனிதனாகின்றான். இவ்விரண்டு உடல்களில் எந்த உடலில், உயிர் நகசிகை பரியந்தம் வியாபிக்கிறது? ஒன்றரை சாண் உடலில் வியாபிக்கிறதானால் எண்சாணாகிறபோது அதிக விடத்தில் எப்படி வியாபிக்கும்? உயிரினது வியாபகம் உடல்வளர்ச்சிக்கும் குறைவுக்குந் தக்கபடியா? என்றும் ஒருபடித்தா? செடி வளர்வதுபோல வளருமென்னின் உடல் வளர்ச்சியை யெதிர்பார்த்து அது எவ்வளவு வளருகிறதோ, அவ்வளவே யுயிர்வளருமா? அதை யெதிர்பாராது தனது கணக்குப்பிரகாரம் வளருமா? உடலை யெதிர்பார்த்து வளருமெனின் உயிர் நாமானதினால் உடல் இவ்வளவு வளருகின்றதென்றெதிர்பார்த்து, வளருஞ் சமயமறிந்து, கூடவளருகிற அனுபவம் நமக்கிருக்கவேண்டும். அவ்வாறில்லை யென்பதை நாமே அறிவோம். உடலை யெதிர்பாராது தனது கணக்குப்பிரகாரமே வளருமெனின் அங்ஙனமேல் அவ்வளர்ச்சி உடலுக்குக் குறைந்தாவதிருக்கும்; அதிகப் பட்டாவதிருக்கும். குறைச்சலாகவாவது அதிகமாகவாவதிருக்கும் பக்ஷத்தில் உயிர் உடலில் நகசிகை பரியந்தமென வரையறுத்துக் கூறுவதுகூடாது. அன்றி எது வளர்தல் குறைதலுடையதோ அது அழிவு பாடெய்துமென்பதற்கு உலகிலுள்ள எப்பொருளும் சாக்ஷிபகரும். உயிரினது வியாபகம் என்றும் ஒரு படித்தென்னும் பக்ஷத்தில் ஒன்றரைசாணு யிருந்தாலுஞ்சரி, எண்சாணு யிருந்தாலுஞ் சரி, எல்லா வுடல்களையுஞ் சேர்த்து, உடலில் நகசிகை பரியந்தம் என மொத்தமாய்ச்சேர்த்து வியாபகஞ்சொல்லி விடப்படாது. அப்படி ஒருபடித்தாயிருக்கும் வியாபகம் எறும்பளவோ, ஈஅளவோ, நாயளவோ, மனித அளவோ, மாடளவோ, யானையளவோ, இன்னும் எவ்வளவோ தெரியவில்லை. இந்தப் பிராணியின் உடலெனக் குறிக்காமல் "எல்ல சட்டிலக்க ஏகலக்க" என்றபடி மொத்தமாய்ச்சேர்த்து, 'நகசிகை பரியந்த'மெனக் கூறுவது பொருந்தாது. ஒருபடித்தாயிருக்கும் வியாபகம் ஒன்றரை சாணானால் எண்சாணாய் வளரும்போது அந்த அளவுக்கு குறைகின்றமையின் எண்சாணுடலைவைத்து, அதில் நகசிகை பரியந்தம் உயிர் வியாபித்திருக்கிறதெனச் சொல்லப்படாது. ஒரு படித்தாயிருக்கும் வியாபகம் எண்சாணானால் அந்த எண்சாண் வியாபகம் ஒன்றரை சாண் உடலில் எப்படி அடங்கும்? சிறியது பெரியதில் அடங்குமேயன்றி பெரியது சிறியதில் அடங்குமா? அடங்காதே. எறும்பு உடல் யானையுடல்களில் இந்தஆக்ஷேபம் இன்னும் அதிகப்படுமென்பதிலையமின்றென்க.

பின்னும் அவர் வாக்கியமொன்றை யூன்றிப் பார்ப்போம். "அவ்வுடலினுள்ள ஒவ்வொரு தாதுக்களிலும் எத்தனையோ புழுப்பூச்சிகளாகிய ஜீவராசிகள் கணந்தோறும் பிறந்திருந்து இறந்து காரியப்படுகின்றன. நம் வயிற்றுள் அவை யங்ஙனம் படும் அவத்தைகள் நமக்கு (ஆன்மாவுக்கு) சம்பந்தமில்லை" என்கிறார். இது சடசித்துலகில் சிவன் பரிபூரணன் என்பதற்கு நெடுநாளாய் வருந்தித் தவம்புரித்து தேடிக்கொணர்ந்த வுபமானம். இந்த வுபமானத்தை வெகு ஆதரவாய் நம்பி "இதுபோலவே உலகுயிர்களை உடைமையாகவும் அடிமையாகவும் கொண்டு ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று நடத்தும் இறைவன் நின்மல சூக்கும சித்தாதலின் அவத்தையிற் றொடக்குண்ணாது நிர்விகாரியாய் விளங்குகின்றான்." என வுபமேயத்தையுஞ் சொல்லிவிட்டார். விசாரணையற்றுச் சொன்னதெல்லாஞ் சரியென்றங்கீகரிக்கும் (மூக்கையரிந்து கொண்டால் சுவாமியை நேரே காணலாம் என்கிற நம்பிக்கைகொண்டு மூக்கை யரிந்து கொள்ளுபவரைப்போன்ற) புத்திமான்கட்கு இப்படிபட்ட யுக்தி வெகு அற்புதமாயிருந்தாலும் சுருதிக்கிணங்க யுக்தி யனுபவங்கட்கொத்து விசாரணைசெய்யும் அதிமேதாவிகளான முமூட்சுகளுச்கு அது அருவருப்புடன் வெறுக்கத் தக்கதாமென்க. அவர் உயிருக்கு வியாபகத்தைத் தாபித்த பிறகன்றா, உயிர் உடலில் வியாபித்த வுபமானத்தைச் சொல்லவேண்டும்? இதுகாறும் அவர் சொல்லிய வியாபகம் மறுக்கப்பட்டுப்போனமையின் அவரது உபமானமும் மறுக்கப்பட்டுப் போயிற்றென்க.

அவர்சொல்லுகிறபடி உயிர் உடல் முற்றும் வியாபித்ததாய்ச் சொல்லின் மற்றொரு சங்கை யுண்டாகின்றது. உயிர் உடல் முற்றும் வியாபகமா? ஏதேனுங் குறைவாய் வியாபகமா? முற்றும் வியாபகமென்னின் உடலுக்குள் பல்லாயிரம் புழுப்பூச்சிகள் உயிருடன் இருக்கின்றமையின் அப்பல்லாயிரம் புழுப்பூச்சிகளுடைய பல்லாயிரம் உயிர்களும் அவ்வவ்வுடல்களில் வியாபித்திருப்பதால் அப்பல்லாயிரம் வியாபகத்துள் இவ்வொரு மனித உயிர் வியாபகமெங்ஙனே தலைகாட்டும்? புழுவுக்கானாலுஞ்சரி, மனிதனுக்கானாலுஞ்சரி, யானைக்கானாலுஞ் சரி, இன்னும் எந்தப் பிராணிகளுக்கானாலுஞ் சரி, உயிரினது இலக்கணம் ஒன்றேயாகலினானும், மனிதவுயிர் எவ்வளவு வியாபகமோ அவ்வளவு வியாபகம் புழுப்பூச்சிகளுக்கு முண்டாகலினானும், ஒருமனிதவுயிர் வியாபகத்தினும் பல்லாயிரம் புழுப்பூச்சிகளுடைய வியாபகம் எத்தனையோ பங்கு அதிகமாகலினானும், பல்லாயிரம் புழுப்பூச்சிகளதுபல்லாயிரம் உயிர் வியாபகங்களின்முன் ஒருமனித வுயிர் வியாபகம் வெகு அற்பமாகலினானும், பல்லாயிரம் உயிர்வியாபகங்களிருக்குமிடத்தில் ஒருமனிதவுயிர் இருக்கவே யிடமில்லாதபோது ஒரு மனிதவுயிர் வியாபகத்தில் பல்லாயிரம் புழுப்பூச்சிகளுடைய வுயிர் வியாபகங்கள் அடங்கியிருக்குமென் றுரைப்பது வெற்றுரையாகலினானும், இவ்வா றின்னும் பற்பல தோஷங்கள் நிகழ்கின்றமையானும் நகசிகை பரியந்தம் வியாபித்திருக்குமென்கை அவசித்தாந்தமாமென்க.

இது எவ்வளவு அவசித்தாந்தமோ சிவன் உலகில் வியாபித்ததென்பதும் அவ்வளவு அவசித்தாந்தமாயினமை காண்க. இவ்வுபமானத்தை யத்வைதிகள் கண்டித்துவிடுவார்களென்று பூர்வபக்ஷியார்க்குத் தெரியும். தெரிந்துதான் "இதை நன்குவிளக்கச் சரியான வுவமையில்லையாயினும் ஏகதேசவுவமையில் வைத்து ஒருவாறு விளக்கிக்காட்டுதும்" என்றார். சிவத்தையுஞ் சத்தாகவைத்து, அதனோடு வேதாகமசாஸ்திரவிரோதமாகச் சேதனாசேதனவுலகையும் சத்தாகவைத்து, உவமானஞ்சொல்லப் புறப்பட்டால் சரியானவுவ

மான மெங்கிருந்துவரும்? சுருதியாதிகளை அவமானப்படுத்தி அவற்றை நிந்தித்து, அவைதமக்கு விரோதமாகக் கற்பனு துவித சித்தாந்தத்தைச் சிருட்டித்துக்கொண்டு, அதற்குவமானந் தேடப் புறப்பட்டால் அகப்படுமோ? நூல்களில் சாதாரண சனங்களுக்கு ஸ்தூலமாகவும் மிகமேதாவிகட்குச் சூட்சுமமாகவும் வியாபகவுவமானஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. நுட்ப ஆராய்ச்சி செய்யும் அதிமேதாவிகட்கு ஸ்தூலவுபமானம் பொருந்தாது. திருட்டாந்தமாக எள்ளில் நெய், பாலில் நெய், கட்டையில் நெருப்பு முதலிய வுவமானங்கள் ஸ்தூலம்; கயிற்றரவு, கானனீர், தறிபுமான், இந்திரசாலப்பொருள், மனம் சொப்பனவுலகு முதலிய வுபமானங்கள் சூட்சுமம். ஸ்தூல வுவமானத்தோடு திருத்தியடைபவர்க்கு ஸ்தூலவுவமானமேசொல்லித் திருத்திசெய்ய வேண்டும்; ஸ்தூலவுவமானத்திற் றோஷங்கூறிச் சங்கைசெய்பவர்க்குச் சூட்சும வுவமானங் கூறியே திருத்தி செய்யவேண்டும். அதைவிட்டுச் சூட்சும வுவமானஞ்சொல்லி வாதிப்பவரோடு, ஸ்தூலவாதிகள் எதிர்த்து வாதப்போர் செய்வது தகுதியன்று. துவிதமதம் ஸ்தூலமதமானதால் துவிதிகள் ஏகதேசமான ஸ்தூல வுவமானத்தையே மெய்யெனக் கொள்ளுகின்றார்கள். அத்துவிதம் சூட்சும மதமானதால் அத்துவிதிகள் ஸ்தூல உவமானத்தை ஏகதேச வுபமானமென்றும், அது அநதிகாரிகளுக்கு உபகாரமென்றுங் கழித்து, சூட்சும உவமானமே தங்களுக் குரியதெனக் கொள்ளுகின்றார்கள். இந்த ரகசியத்தை ஸ்தூலபுத்தியுள்ள துவிதிகள் உணராது ஏகதேச வுவமானமே யுண்மையென மயங்கிக் கெடுவதுமன்றி, சம்பூரணமான சூட்சும உவமானத்தைக்கொண்டு வாதஞ்செய்யும் அத்வைதிகளிடத்தில் விதண்டா வாதம்பேசி, வேதாகமசாஸ்திர பாஹியராயும், நாஸ்திகராயும் நின்று, அடிக்கடித் தோல்வியடைந்து அவமானப்படுகின்றார்கள். இனியேனும் ஸ்தூலவாதிகளாகிய துவிதிகள், அத்துவிதிகளிடத்தில் வாதஞ்செய்யப் போகாமல் தங்கள் வரையிலும் தங்கள் அநுஷ்டானத்தைச் சரியாய் அனுஷ்டித்து, காலக்கிரமத்தில் சூட்சுமமும் சுருதிசம்மதமும் யுக்தி அநுபவப்பொருத்தமுமுள்ள அத்துவித சித்தாந்தத்தை அனுசரித்து உய்தி பெறுவார்களாக. துவிதிகள் தங்கள் மதபல மிவ்வளவென்றும் அத்துவித மதபல மிவ்வளவென்றும் அறிந்திலராகலின் வீண் வாதம்பேசி விழலராகின்றார்கள்.

“நம் வயிற்றுள் அவையங்ஙனம் படுமவத்தைகள் நமக்கு (ஆன்மாவுக்கு) சம்பந்தமில்லை” என்கிறார். அவர் மதப்பிரகாரமும் யுக்தி அனுபவங்கட்குப் பொருந்துமாறும் அவருடைய ஆன்மாவும் புழுப்பூச்சிகளது ஆன்மாக்களும் தனித்தனி அணுக்களா யிருக்கின்றமையின் ஒரு ஆன்மா படும் சுகதுக்கங்கட்கு இன்னொரு ஆன்மா எங்ஙனம் சம்பந்தமுள்ளதாகும்? இதனுல் அவருடைய வுவமானப்படி மனித ஆன்மாவும், புழுப்பூச்சிகளுடைய ஆன்மாக்களும் மனித வுடலில் வேறு வேறாயிருக்கின்றன வெனவும் இந்த வுவமானப் பிரகாரமே சிவமும் சேதனு சேதன வுலகும் வேறுவேறா யிருக்கின்றனவெனவுந் தீர்மானிக்கப் படுகின்றமையான் அவரது நியாயப்பிரகாரம் அவரது கடவுள் அவ்வியாபக ஏகதேச கண்டப்பொருளாகின்றார். “இதுபோலவே உலகுயிர்களை யுடைமையாகவும் அடிமையாகவும் கொண்டு ஒன்றாய் வேறாய் உடனுய் நின்று நடத்தும் இறைவன்” என்பதிலுள்ள ஆபாசத்தையுமெடுத்து விகசிதப்படுத்துவாம். அவரது கடவுள் அபரிபூரணராயும், கண்டராயும், அவ்வியாபகராயுமிருப்பதால் அவருக்குப் பின்னமாக வுயிரணுக்களை உடைமையாகவும், அடிமையாகவுங் கொள்வது முறைமையே. இத்துடனே யொன்றாய் என்று சொல்வது பொருத்தமுறாது. சிவமும் உயிரும் வேறு வேறெனச் சொல்வது அவரது சித்தாந்தமாகலின் அதற்கு மாறுபட்டு ஒன்றா யென்பது

பொருந்தாது. ஒன்றுயென்று சொன்னதோடு வேருயென்றுஞ் சொல்வது பெரும் பிழையாம். ஒன்றும் வேறும் உடம்பா டெதிர்மறைகள். ஒன்றுக்கு மற்ருென்று உடம்பாடாகவேனும் எதிர்மறையாக வேனும் இருக்க வேண்டு மேயன்றி இரண்டுமோயிராது. இது உலகாநுபவ விரோதம். படமும் கடமும் வேறு; படமும் அதன் வெண்மையும ஒன்று. படமுங் கடமும் ஒன்ருகா; படமும் அதன் வெண்மையும் வேருகா. இந்த நியாயப்பிரகாரம் சிவமும உயிரும் ஒன்ரு? வேரு? ஒன்ருயின் வேறென்று சொல்லப்படாது. வேருயின் ஒன்றென்று சொல்லப்படாது. இங்ஙனமாக ஒன்றும் வேறு மென்று சொல்வது இருளும் ஒளியுமுள்ள சூரியன் என்று சொல்வதற்கொப்பாகும்.

'இறைவன் சூக்குமசித்தாகலின் அவத்தையிற் ருடக்குண்ணுது நிர்விகாரியாய் விளங்குகின்ருன்' என்பதும் ஆபாசமேயாம். இறைவனுக்கு உயிரைவேருகவைத்து அவத்தையிற்ருடக்குண்ணுது என்கின்ருரா? ஒன்ருய்வைத்து அவத்தையிற் ருடக்குண்ணுதென்கின்ருரா? வேருய்வைத்து என்னின் அப்போது இறைவன் அபரிபூரணராகின்ருர். ஒன்ருய்வைத்து என்னின் பரமான்மாவும் ஜீவான்மாவும் ஒன்ருகும்போது ஜீவனுக்குவரும் துன்பங்களெல்லாம் இறைவனுக்கும் வருமாகலின் அப்போது இறைவன் தொடக்குண்ணுனென்பது வெற்றுரையாகமுடியும்.

சுக்கிரன் அத்துவிதஞானத்தையும் சிவபத்தியையும் உபதேசித்தது.

இனி அரக்கோணவீரபத்திர மூர்த்தியைப்பற்றிப் பேசுவாம்.

"ஆயின் மாயை அவித்தைகளின் பிரதிபிம்பஞானப் பிரசங்கம் சூதசங்கிதையிற் கேட்கப்பட்டவாறு என்னையெனின், கீழிட்ட அதிகாரிகளுக்குப் பிரயோசனப்படவேண்டி யென்றறிக. இதற்கு நிதர்சனம் சூரபதுமன் முதலினோர்க்குச் சுக்கிரபகவான் இந்த ஞானத்தையே தேவர்களைக் கொல்லுவித்தற்பொருட் டுபதேசித்ததாய் ஸ்காந்தங் கூறுவது கொண்ட றியலாமென்க" என்கிருர். இது இவர் வாய்ச்சொல்லா? இதற்கேதேனும் பிரமாணமுண்டா? சாக்ஷாத் துரிய பரசிவப்பிரமம் மாயை அவித்தைகளில் பிரதிபிம்பிக்கிறதென்பது கீழிட்ட அதிகாரிகளுக்கென்பதற்கும், கொலைசெய்வதற்கேதுவென்பதற்கும் வேதமுதலிய பதினுன்குவித்தைகளிற் பிரமாணம்வேண்டும். வாதிப்பிரதிவாதிகள் பிரமாணங்கட்குக் கட்டுப்படவேண்டியவர்கள். பிரமாணத்துக்கு மீறித் தமதிஷ்டம்போல்பேசுவதுகூடாது. அப்படிப் பேசுவார்களேயானுல் அவர்கள் வேதபாஹியராவார்கள். சங்கராசாரியார், நீலகண்டசிவாசாரியார், இராமாநுஜாசாரியார், மத்துவாசாரியார் முதலியவர்கள் பதினுன்கு வித்தைக்குங் கட்டுப்பட்டுப்பேசினுர்களேயன்றித்தான்ருேன்றித் தம்பிராணுய்ப் பேசினுர்களில்லை. மாயை அவித்தைகளில் பிரதிபிம்பிப்பது கீழிட்ட அதிகாரிகளுக்கானுல் அப்படிப் பிரதிபிம்பிக்காதது மேலிட்ட அதிகாரிகளுக்காகவேண்டும். வேத முதலிய எந்த நூல்களிலும் இந்தப்பேதங் கூறவேயில்லை. உலக சிருட்டி கூறும்நூல்களில் மாயையில் ஈசன் பிரதி பிம்பமென்றும் அவித்தையில் ஜீவன் பிரதி பிம்பமென்றும் கூறுகின்றனவேயன்றி, பூர்வ பக்ஷியார் கூறுகிறபடி அதை யிருவகைப்படுத்திக் கூறவில்லை. இந்த

விஷயத்தில் அதிகாரிதாரதம்மியமிருக்கவேண்டியஆவசியகமுமில்லை. இது வீண் பொய்ம்மொழியேயன்றி இதில் விஷயமொன்றுமில்லை. மாயை அவித்தைகளைவிட்டு ஜீவேசர்க ளில்லையென்பதே வேதசாஸ்திர நிச்சயம். உலகசிருட்டி அத்துவிதிகளுக்கு ஒரு மாதிரியும், துவிதிகளுக்கு ஒரு மாதிரியுமா? இது எந்தவுலக சாஸ்திரமோ அறியோம். இவர், தம்மை வேதசாஸ்திர பாகியரென்பதற்குப் பதிலாக, அப்படிச் சொல்பவரைக்கீழிட்ட அதிகாரியென்கிறார். இதுதான்இவருடைய வாக்கியத்தின் பொருள். வேதாதிகட்குக் கட்டுப்பட்டு ஈசன் மாயாப் பிரதிபிம்பரென்றும் ஜீவன் அவித்தியாப் பிரதிபிம்பனென்றும் சொல்பவர் கீழிட்ட அதிகாரிகளானால், கட்டுப்படாது தான்றோன்றித் தம்பிரானாய் வாயில்வந்தபடி பேசுகிறவர் எவ்வித அதிகாரியாவர்? மாயை அவித்தைகளின் பிரதிபிம்பஞானப் பிரசங்கத்தைச் சூரபதுமன் முதலினோர்க்குச் சுக்கிரன் உபதேசித்துத் தேவர்களைக் கொல்வித்ததாய் ஸ்காந்தங் கூறுகின்றதென்கிறா ரன்றோ? இதில் இவருடைய அறியாமை மிகுதி விளங்குகின்றதேயன்றி மற்றப்படி அந்நூலில் ஏதுந் தோஷங் காணப்படவில்லை.

மகாஸ்காந்தம் சங்கிரசங்கிதை ஆசுரகாண்டம் 3-வது அத்தியாயத்தில் சுக்கிரன் சூரபத்துமனை யழைத்துச் சொல்வதாவது:—

சம்ஸ்கிருதமொழிபெயர்ப்பு.

கேளீர் ராஜனே! ஸ்ரீபரமேசுவரனேவென்றால் கேவலம் மாயையைக்கொண்டே வானமுதலியவற்றைப் படைத்தனர்.

அதேவிதமாகக் கேவலம் லீலையைமட்டில் பிரயோசனமாகக்கொண்டவராகித் தமது பரமாத்துமாவினுடைய அமிசத்தைப் பிரிவினைசெய்து சரீரத்தோடும் இந்திரியங்களோடுங் கூடியவராக அவரே ஜீவாத்துமாக்களாக விளங்கிவருகிறார். (36)

குடத்துக்குள்ளிருக்கும் ஆகாயமானது அக்குடமுடைந்தவுடனே ஒரே பேராகாயத்தோடு சேர்ந்துவிடுவதுபோல் ஒருவருடைய தேகத்துக்கு லயம் நேரிட்டவுடன் அத்தேகத்தைப் பற்றியிருந்த ஜீவாத்துமாவானது ஒரே பரமாத்துமாவாகிய ஸ்ரீமகேச்சுரனோடு சேர்ந்துவிடுவதாகும். (37)

ஆகையால் புண்ணியமென்பதும் பாவமென்பதும் வெறும்பொய்யே. மோக்ஷமென்பதும் இவ்வாறுதான். ஆகையால் நீர் செய்யத்தக்கது யாதென்றால் உம்முடைய ஆத்துமாவைச் சாக்ஷாத் பரப்ரம்ம சொருபமாகவே (38)

நினைத்து மனச்சோகத்தைவிட்டு அதன்மேல் விஷ்ணு பிரமன் முதலிய தேவர்களை முற்றும் விலக்கித் தகராகாச மத்தியில் விளங்கிய ஸ்ரீபரமசிவனை மனதில் தியானித்து, (39)

இந்திரன்முதலிய தேவர்களை மிகுந்த பயத்தினால் கதிகலங்க நடுங்க அடித்து அவர்களுடைய பதவியில் மகா பராக்கிரம சாலிகளான அசுரர்களை ஸ்தாபிக்கலாவீர். (40)

மேலும் சத்துருக்களிடத்துக் கொலை, காதல், புரட்டு, திருட்டு, பகை இவை முதலியவற்றைச் செய்யலாவீர். (41)

இவை நேரே சமஸ்கிருத மொழிபெயர்ப்பு. தமிழ்க் கந்தபுராணச் செய்யுளில் சமஸ்கிருதத்திலில்லாத அனேக பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை மூலத்தில் இல்லாத அப்பிரமாணமாதலால் சமஸ்கிருதத்தி லுள்ளதைக்கொண்டே பேசுவாம். ஷை வாக்கியங்கள் மற்றச்சுருதியாதிகளுக்கு விரோதமில்லாமையால் பிரமாணமேயாம். அவ்வாறு விரோதமிலலாமையைக் காட்டுகின்றோம்.

35 - வது சுலோகத்தில் கூறியதுபோல இதரப்பிரமாணமுங் கூறுகின்றது.

சூதசங்கிதை விசேடசிருட்டி.

கருத்தாவாய பரசிவன்றன்மாயையொடுவேறறக்கலப்புற்
றிருப்பானெனினும்பூருவகற்பத்தினியையவாசனையானுங்
கருச்சாய்த்துயர்ந்தீர்செறிகாலகருமவனுகுணமதாயுந்
தருக்காநின்றமாயைக்குந்தனக்கும்பேதங்கற்பிப்பான். (உ)

அறையாநிற்குங்கற்பிதமான துவாத்துவமல்லாமையாற்
குறைதீர்ந்தீர்கற்பிதபேதங்கூறபேதம்பாதியாதியா
திறைபின்பூருவேட்சணவாசனையாலீட்சிதாவுமாய்
மறைதன்மாயையொடுகூடிமாயாகுணபேதங்களால். (ரு)

திரிமூர்த்திகளைப்படைத்தவர்க்குந்திகழந்தரியாமியாயிருப்பான்
றுரிசிலவரும்பரதத்துவவபேதத்தான்முத்தொழில்செய்லார்
உரியவிசேடரூபத்தொவ்வொருவரொவ்வோர்காரியத்தைப்
பிரியமருவச்செய்வார்கள் பேணியுணர்மின்மாதவத்தீர். (சு)

சுக்கிலயசுர்வேதம் நிராலம்போபநிஷத்.

2. ஈசுவரன்யார்? அவருடைய இலக்ஷணம்யாது? பிரமமேதன்னுடைய சக்தியாகிற பிரகிருதியினாலே (ஈசுவரன்என்கிற) பெயரைவகித்து உலகங்களைச் சிருஷ்டித்து (அதிலே) அந்தர்யாமியாய்ப் பிரவேசித்துப் பிரம்மா முதலானவர்களுடைய புத்தி இந்திரியங்களுக்கு நியாமகனா யிருப்பதினாலே ஈசுவரனாகிறான்.

மாயையின்றி யுலகைப் படைக்கமுடியாதலாலும் மாயையைக் கொண்டே யுலகைச்சிருட்டித்ததாய்ச் சுருதியாதிகள் கூறுவதாலும் அதிற் குற்ற மேதுமில்லை. இது பூர்வபக்ஷிக்கு முடம்பாடேயாம். உடம்பாடாயினும் அத்வைதிகளுக்கு மாயை அநிர்வசனீயமும், பூர்வ பக்ஷிகளான துவிதிகளுக்குச் சத்தியமுமாம். அநிர்வசனீயமென்று பலமுறை சுருதி யுக்தி அநுபவங்களைக்கொண்டு முன்னர்த் தாபித்தமையால் இப்போது இவ்விடத்தில் அதுவிஷயமாய்ப் பேசவேண்டிய ஆவசியகமின்றென்க.

36-வது சுலோகப்படி லீலையைமட்டில் பிரயோசனமாகக் கொண்ட துண்மையே. லீலையென்பதன்பொருள் தனக்குப் பற்றில்லையென்பதே. பரமசிவன் மதுரையில் அறுபத்துநான்கு திருவிளையாடல்செய்ததும் அங்ஙனமேயாம். பரமசிவன் லீலைசெய்வதற்கு இதரப் பிரமாணங்கள்.

பிரமகீதைகைவல்லியோபநிஷத்.

ஆதலால் அறிவாநந்தமாயுள்ள அமலனே அவைபுசிக்கின்றான்
ஈதெலாம்விளையாட்டேவிளையாடுமிடங்களேயிப்புரமூன்றும். (கச)

ஈசுரகீதை.

எந்தப்பிராணிகளும்பசுக்களென்னப்படுமிங்கதிபதியான்
பந்தப்படுக்குமென் மாயாபாசமதனாற்பசுபதியாய்த்
தொந்திப்பதுவாமித்தொழிலென்விளையாட்டெனையன்றி
யிந்தப்பசுக்கள் கட்டினர்களில்லையவிழ்ப்பார்களுமிலதால். (கஉ)

தனது அமிசமே ஜீவாத்துமாவென்பதற்கு அடியில்வரும் இதர பிரமாணங்களும் சாக்ஷிகூறும்.

இலிங்கபுராணம் பதிபசுபாசம்.

பதியாகியுறைபவனே மாயையெனும் பாசத்தாற் பசுக்களாகி. (ரு)

சூதசங்கிதை பிரபஞ்ச ஆரோபம்.

பரமான்மாவின்றனகண்ட சொரூபத்தினதன்சத்தியாலே
சுத்தசேதனஅசேதனவிபாகங்தொகுமாறுகற்பிக்கப் பட்டதாலோ. (ரு)

அமிசமென்பது பொருளாகவன்று, தோற்றமாக, அதாவது அநிர்வசனீயமாக.

37-வது சுலோகத்தில் விதேகமுத்தியில் பிராரத்துவதேகம் நீங்கினவுடனே ஏகமாய் விளங்குகின்ற விஷயத்தைப்பற்றிக் கூறுகின்றது. இதைப்பற்றி இப்புத்தகம் 2-வது பாகத்தில் 103-வது பக்கத்தில் "மகாவாக்கியம்" என்னும் விஷயத்தில் பேசப்பட்டிருக்கின்றமையான் ஆண்டுக் கண்டுகொள்க.

38-வது சுலோகப்படியே துவிதபேதமின்றி அத்துவிதமாய் விளங்குஞ்ஜீவன் முத்தர்க்குப் பாவ புண்ணிய மில்லையென்ப துண்மையே. பாவபுண்ணியங்கள் இருப்புவிலங்கு பொன்விலங் கானதாலும் அவையுள்ளவரையில் பிரமஞானமுண்டாகாதாதலாலும் பிரமஞானிகளான ஜீவன்முத்தர்களுக்குப் பாவபுண்ணியங்கள் பொய்யும் பயனின்மையு மாம். இந்நிலைமையை அநுசரித்தே சீவான்மாவைச் சிவசொரூபமாக வுபதேசித்தனரென்க. ஜீவான்மா பரமான்மாவாய் விளங்கும் அத்வைத முத்தியில் திரிபுடியே யில்லாமையால் அவ்விடத்தில் பாவபுண்ணியங்க ளில்லை. எங்கே திரிபுடியுண்டோ அங்கே சங்கற்பவிகற்ப முள்ளன. எங்கே சங்கற்பவிகற்பங்க ளுளவோ அங்கே பாவ புண்ணியங்க ளுள்ளன. எங்கேபாவபுண்ணியங்க ளுளவோ அங்கே பந்த முண்டு. எங்கே பந்தமுண்டோ அங்கே பாவபுண்ணியங்க ளுள்ளனவால், பந்த மற்றும் சங்கற்ப விகற்ப மற்றும் திரிபுடி யற்றும் விளங்கும் துரியாதீத அத்வைதஞான நிலையில் பாவந்தானேது? புண்ணியந்தா னேது? இனி மோக்ஷவிஷயத்தைப்பற்றி இப்புத்தகம் 2-வது பாகம் 118-வது 119-வது 120-வது பக்கங்களிலுள்ள பந்தமுத்தியென்னும் விஷயத்தில் காணலாம்.

39-வது சுலோகத்தில் பரமசிவனைத் தகராகாசமாகிய இருதய புண்டரீகத்தில் தியானிக்கச் சொல்லுகின்றார். முன் சுலோகத்தையும் இச்சுலோகத்தையும் அநுசரித்தால் ஜீவான்மா பரமான்மாவைத் தியானித்துப் பரமான்மாவாக விளங்கும் நிலையைச் சொல்லுகிறதாயாகிறது.

பிரமகீதை சாந்தோக்கியம் ஏழாவது.

புகலநின்றிடுபிரமபுரமெனும்பதியதனில்
தகரபுண்டரிகமெனுமகமிலங்கியதகர
ககனமுண்டதுமறைகள்கருதநின்றுளபிரம
மிகவிரும்புவர்பிறவிவிடவிரைந்துளவிமலர். (௨)

விதம்படுமுளந்தொறும்விசேடவறிவாயுந்
றிதம்படுதலாவிதயமென்பரிறைதன்னைத்
திதம்படவிவன்றிறமறிந்தவர்கள்சேரும்
பதம்பிரமமல்லதுபகர்ந்திடுதலுண்டோ. (௧௦)

சுழுத்தியதனிற்றுயர்துவக்குமுடறன்னின்
றெழுப்பியுளதன்வடிவினுலிறையையெய்துற்
றழுத்தமுறயாவனதுவாகுமவனெங்கும்
முழுத்தியுளதற்பரமமாகிமுடிவுற்றான். (௧௧)

இதற்குப்பின் 40-வது சுலோகங்களில் தேவர்களை யடிக்கவும், அவர்களது பதவியில் அசுரர்களை ஸ்தாபிக்கவும், சத்துருக்களிடத்தில் கொலை, காதல், புரட்டு, திருட்டு, பகை இவைதம்மைச் செய்யவுஞ் சொல்லுகின்றார். பகைவரிடத்தில் கொலை முதலியன செய்யவேண்டுவது ஆவசியகமே. ஞானவான்களாயிருந்த விதுரர், வீஷ்மர், அசுவத்தாமா முதலிய அனேக ராஜாக்களும் அந்தணர்களும் பகைவர்களோடு யுத்தஞ் செய்ததாய்ப் புராணேதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. யுத்தத்தில் கொலை முதலியன வின்றியமையாமையெனல் கற்றபுலவர் அங்கீகரித்ததே. யுத்தத்தில் முதுகு காட்டாமலும், முன்வைத்தகாலைப் பின்வாங்காமலும் யுத்தஞ்செய்து பகைவரைக் கொல்லுதல் குற்றமல்லவென்பது நூற்பிரமாணமேயாம். சுக்கிரன் வேதவேதாந்த சம்மதமான ஜீவான்ம பரமான்ம நிலையைப்பற்றிக்கூறும் தத்துவஞானத்தையும், அதற்குச் சாதகமாகப் பரசிவத் தியானத்தையும் போதித்து, பகைவர்களைக் கொலையாதி செய்யச் சொல்வதால், உலகபந்தத்தை யொழித்து, சிவசொரூபமாய் நின்று, பகைவரிடத்தில் கொலையாதி செய்யச்சொலவதாய் ஏற்படுகின்றது. தத்துவஞானத்தையும் சிவத்தியானத்தையும் கைக்கொண்டு, பகைவரிடத்தில் யுத்தம்புரிந்து கொலையாதிகள்செய்தால் பாவமணுகாது. தத்துவஞானிகளும் பத்திமான்களும் செய்யுங் கொலையாதிகள் அவர்களைச்சாராவென்பதற்குத் திருத்தொண்டர் புராணமுதலியவைகளே சான்றாம். தத்துவஞானமும சிவபத்தியுமிலலாமல் பகைவரைக்கொல்லவிருக்கும் சூரபத்மனைத் தத்துவஞானியாகவும், பத்த

ளுகவுஞ்செய்து கொலையாதிகள் செய்யச்சொல்வது நன்றேயாம். சுக்கிரனுக்கு நடந்ததும், நடக்கப்போகிறதும், சூரபத்மனுக்குப் பரமசிவன் வரங்கொடுத்ததும், வரத்தினுல் அனேக காரியங்கள்நடக்கப்போகிறதும், சுப்பிரமணியக்கடவுளால் சூரபத்மன் ஜயிக்கப்பட்டு வலியிழந்து அக்கடவுளுக்கு மயில்வாகனமாகவும் கோழிக்கொடியாகவும் ஆகும் பாக்கியத்தைப்பெறப்போகிறதும், பிறகு தேவர்கள் சுகமாய் வாழப்போகிறதும், நந்திதேவர்கொடுத்த சாபப்பிரகாரம் சூரபத்துமனுல் தேவர்கள் துன்பப்படப்போகிறதும் நன்ருய்த்தெரியுமானதினுல் எதுஎது எப்படி எப்படி நடக்கவேண்டுமோ அது அதை அப்படி அப்படியே யுபதேசித்தார்.

சுக்கிரன் சுருதியுக்தமான தத்துவஞானமும், சிவத்தியானமும் உபதேசித்தமை காரணமாகச் சூரபத்மன் பகைவர்களைக் கொலை செய்தானென்றுல் தத்துவஞானமும், சிவபத்தியும் கொலைக்கேதுவென்று சொல்லவேண்டும். அன்றிப் பூர்வபக்ஷியார் வாக்குப்படி அவை கீழிட்டஅதிகாரிகளுக் குரிமையாகும். உரிமையாகும்போது அவை மேலிட்டஅதிகாரிகளுக் குரிமையன்ரும்.

கொலையின்பொருட்டே தத்துவஞானமும் சிவபத்தியும் உபதேசிக்கப் பட்டனவென்று சொல்லின் அது பின்னும் பொருந்தாது; ஜீவகாருண்ணியம், பாசவைராக்கியம், ஈசுரபத்தி, பிரமஞானம் இவை முறையே யொன்றற்கொன்று மேலாகலினுனும், எவர் கொலையினரோ அவர்க்கு ஜீவகாருண்ணியமே இராதாதலினுனும், பிரமஞானத்துக்குச் சாதனமான விரதங்களில் கொல்லாமை சிறந்தகுணமாதலினுனும், விரதங்களில் அருளுடைமை முதற்குணமாதலினுனுமென்க. இவர் கூறுவதுபோலத் தத்துவஞானமும் சிவத்தியானமும் கொலைநூலாயினு மாகுக. கொலைநூல் கீழிட்ட அதிகாரிக்கு எங்ஙனமுரியதாகும்? மனத் தூய்மையாம்பொருட்டு ஏற்பட்ட விரதங்களுளொன்ருன கொல்லாமைமுதலிய பேரறத்தைப்பெற்ற புருஷன்,முத்தியடைதற்கேற்ற சாதகமில்லையி விருப்பானேயன்றி, கொலை செய்யும் புருஷன் கீழிட்ட அதிகாரியாவனே? இதில் முன்பின் முரணும்,சாஸ்திர ஆராய்ச்சிக் குறைவு மிருப்பதால் பூர்வபக்ஷியாரின்வாக்கியம் அபண்டித வாக்கியமேயா மென்க.

தத்வஞானமும் சிவத்தியானமும் கீழிட்ட அதிகாரிகளுக் குரியன வென்பதற்குப் பிரமாணமென்னை? முத்திக்குச்சாதனம் தத்துவஞானமும் சிவத்தியானமுமா மெனவும், அவைதம்முள் தத்துவஞானம் நேர்சாதனமும் சிவத்தியானம் அதையடுத்த சாதனமுமா மெனவும்வேதாகமசாஸ்திரங்களெல்லாம் கோஷிக்கின்றனவேயன்றி, அவை கொலையெனவும், கீழிட்ட அதிகாரிகளுக் குரியனவெனவும் சொல்ல வில்லையே. முத்தியில் துவிதமாய் விளங்குவது சாத்தியமெனவும், ஏகத்துவமாய் விளங்குவது சாதகமெனவுங்கொண்டு, சுக்

கிரன் ஏகமானகிலேமையை யுபதேசித்தமையால் அதனைக் கீழிட்ட அதிகாரிகளுக்கெனச் சொல்லுகின்ருமெனின் இதுவும் பொருந்தாது. ஏனெனில் சுக்கிரன் அவ்வாறு சொல்லவில்லை; அன்றிச் சுருதியாதிகளும் அங்ஙனங் கூறவில்லை. இவர் மாயை அவித்தைகளின் பிரதிபிம்பஞானப்பிரசங்கங் கீழிட்ட அதிகாரிகளுக்கெனச் சூதசங்கிதை கூறினதாய்க் கூறினதும் மற்ருெருவிதமாக வுண்மைதான். எங்கே மாயை அவித்தை பேதஞ் சொல்லுகிறதோ அங்கே ஈசஜீவ பேதமுண்டு. எங்கே ஈசஜீவபேதமுண்டோ அங்கே துவிதமுண்டு.

சூதசங்கிதை பரமவிஞ்ஞானம்.

முன்னுமவித்தையாற்பசுபேதமும்மொய்வலியமாயையால்
பன்னுபரதத்துவபேதமுங்கற்பிக்கப்பட்டது. (சு)

இந்தச்செய்யுளினுல் ஈசஜீவபேதம் மாயை அவித்தையால் கற்பிக்கப்பட்டமை காண்க. இந்தத்துவிதம் பூர்வபக்ஷமெனவும் அத்துவிதமே சித்தாந்தமெனவும் சுருதிமுடிவெனவும் ஷை சூதசங்கிதை வேதாவிரோத அத்தியாயத்தில் அடியில்வருஞ் செய்யுள்கள் விளக்கமாய்ச் சொல்லுகின்றன.

சூதசங்கிதை வேதாவிரோதம்.

அறையாரணஞ்சத்தியமான அத்துவிதநற்பரமென்றும்
பறையாநின்றகற்பிக்கப்பட்ட துவிதபரமென்றுந்
துறையாரிரண்டாந்துவிதபிரபஞ்சங்காணப்படலானுங்
குறையாப்பரத்தாரோபிதமாய்க்குலவலானுங்கற்பிதமே. (உ)

அத்துவிதக்குவேருரதிட்டானமானவத்துவித
வத்துவில்லாமையினுலுமயக்கின்வருகற்பிதுவித
வத்துவிடத்தத்துவிதத்திற்காரோபிதம்வந்துளதாமென்
ருெத்துமொழியக்கூடாமையாலுமுண்மையத்துவிதம். (ங)

அத்துவிதந்தான்சூனியத்திலாரோபிதமாயினதென்னி
லொத்தவச்சூனியந்தானிவ்விதசொரூபமுள்ளதென்று
சித்தமுறச்செப்பிடக்கூடாமையினுற்செப்புசூனியந்தான்
வைத்தவதிட்டானமதாகாததனுற்றகாதவ்வாறுரைத்தல். (சு)

ஆதலினுற்சத்தியவத்துவிதபரமாகியவாரணத்தினுக்குங்
காதலிற்கற்பிததுவிதபரமானமறையினுக்குங்காணுங்காலே
யோதுபிரதீதியினுல்விரோதமேயுளதாகத்தோன்றினுலு
மேதகுநற்பரமார்த்தத்தவிரோதமென்றுணர்வீர்மேன்மைமிக்கீர். (ரு)

அத்துவிதக்காட்சிமுனைம்பிரமாணக்கோசரமாதலினுனுமந்த
வத்துவிதஞானமுக்கியப்பிரயோசனமாதலானுமந்த
வத்துவிதவத்துவிடம்பிரமாணம்பலவுளமுத்தமமாம்வேத
மத்துவிதப்பெரியீர்முக்கியப்பிரமாணமதாகியமருமாலோ. (சு)

துவிதமறையள்வையிச்சியாதுதொகுகாட்சிமுதலளவைகட்குத்
தவிர்தலில்கோசரமாய்முக்கியப்பயனிலாததாய்த்தங்கலாலே

யவிர்மறைமுக்கியவளவையன் றுதுவிதத்திற்காயினுமவ்வேதந்
துவிதத்தையனுவாதமுன்புசெய்தத்துவிதமேசொல்லுமீற்றில். (எ)

மிருதிபுராணஞ்சைவாகமந்தருக்கம்பாரதமுன்விளம்புநூல்கள்
கருதுறுமத்துவிதபரமேயுரைக்கும்சிலசுருதிகடியஞ்ஞானப்
பெருநிவிர்த்திமூலமாகவும்பேசுசிலசுருதிபிறங்காநிற்கு
மொருவில்விதிமூலமாகவுமத்துவிதப்பொருளையுரைக்குமாலோ. (அ)

ஷை செய்யுள்களினால் துவிதங் கற்பிதமென்றும், அது கீழிட்ட அதிகாரிகளுக்கென்றும், அத்துவிதம் உண்மையென்றும், அது மேலிட்ட அதிகாரிகளுக்கென்றும் இருகக்ஷியாரும் பொதுவாய் அங்கீகரிக்கக் கடமைப்பட்டிருக்கும் வேதமுதலிய பதினான்கு வித்தைகளிலொன்றான மகா புராணங்களுக்குட்பட்ட மகாஸ்காந்தத்திலொரு கூறென்று சொல்லப்படும் சூதசங்கிதை தெளிவாய்க் கூறுகின்றது. இதையனுசரித்தே மற்றொருசங்கிதையான சங்கர சங்கிதையிலும் சுக்கிரன் சூரபத்துமனுக்கு உபதேசித்தார். இங்ஙனமாக அதைக் கொலைநூலென விகழ்வதென்கொண்டோ!

சங்கரசங்கிதை கொலைநூலானால் திருத்தொண்டர்புராணமும் மற்ற மகாபுராண இதிகாசங்களும் கொலைநூல்களாகத் தடையென்ன? இயற்பகைநாயனார் சுற்றத்தாரை வெட்டிக்கொன்றார்; எறிபத்தநாயனார் யானையின் துதிக்கையை அறுத்து ஐந்து பாகராதியரைக்கொன்றார்; சண்டேசர் பிதாவின் காலைவெட்டினார்; புகழ்ச்சோழனார் திறைகொணராத அதிகனது சேனையைக்கொன்றார்; செருத்துணைநாயனார் கழற்சிங்கரது மனைவியின் மூக்கையரிந்தார்; கோட்புலிநாயனார் பகைவரைக்கொன்றதுமல்லாமல் தாய்தந்தையுடன்பிறந்தார் மனைவி பணிவிடைக்காரர் குழந்தை இவர்களைக்கொன்றார்; சிறுத்தொண்டர் தம் பிள்ளையைக்கொன்றார்; அதிபத்தர் தினந்தோறும் அனேகமீன்களைக் கொன்றார்; கண்ணப்பர் மிருகங்களைக்கொன்றார்.

பூர்வபக்ஷியார் கொள்கைப்படி திருத்தொண்டர் புராணம் கொலைப்புராணமும், ஜீவகாருணியத்தைத் தவிர்க்கும் புராணமுமாக வேண்டும். இதுமாத்திரமா? பரமசிவன் பிரமதேவனது சிரத்தைக் கொய்ததும், காமனையெரித்ததும், கூற்றுவனைக்கொன்றதும், திரிபுரரை யெரித்ததும், யானையைக்கொன்று அதன்றோலைப் போர்த்ததும், புலியைக்கொன்று அதன்றோலைத் தரித்ததும், கைலைமலையில் இராவணனை அழுத்தியதும், சூரியன்பல்லையுடைத்ததும், சுப்பிரமணியர் சூரபத்துமனது அசுரகோடிகளைக் கொன்றதும், இன்னும் விநாயகர், பார்வதி, விஷ்ணு, பலரிஷிகள், பத்தர்கள் முதலாயினோர் அப்போதப்போது பலரைக்கொன்றதும், சாபங்கொடுத்ததும் கொலையும் இம்சையு மல்லவா? அவைகளைப்பற்றிச் சொல்லும் புராணம் இதிகாச முதலியவைகளெல்லாம் கொலைநூல்க ளல்லவா? அவ்வாறு கொலை செய்த பரமசிவன் முதலியவர்களைக் கொலையாளிகளென்றும் ஜீவ

காருணிய மில்லாதவர்களென்றுந்தானே சொல்லவேண்டும். இது மிக ஆக்ஷேபமாயிருப்பதால் இதற்குச் சமாதானஞ் சொல்லும்படி யெவரோ இவரைக் கேட்டிருக்கவேண்டும். அதற்குச் சமாதானஞ் சொல்லத் தெரியாமல் குரங்கெறிவிளாங்காய்க் கதையாய் அத்வைதிகளைக் கேட்கிறார். அதை நேரேகேட்டால் திருத்தொண்டர் புராணத்தையும் மற்றப் புராணேதிகாசங்களையும் இயற்பகைநாயனார் முதலிய பத்தர்களையும், மகாரிஷிகளையும், பரமசிவன், பார்வதி, சுப்பிரமணியர், விநாயகர், விஷ்ணு, பிரமன் முதலானவர்களையும் தூஷித்ததாய் முடியுமெனத்தந்திரமாய்ச் சுக்கிரன் சூரபத்துமனுக் குபதேசித்த கதையின் மேல்வைத்துக் குற்றங்கூறி ஆக்ஷேபிக்கின்றார். இதனால் வேதபுராணாதிகளின் பேரிலும் பரமசிவனாதியோர் பேரிலும் ரிஷிகள் பத்தர்கள் பேரிலும் வைத்திருக்கும் நம்பிக்கையும் பத்தியும் சிரத்தையும் நன்கு வெளியாயின.

சூர்பத்மன் தேவர்களைத் துன்பஞ் செய்தமைக்குக் காரணம் சூரபத்ம னன்று. சூரபத்மன் துணைக்காரணமா யிருந்தவனேயாம். ஏனெனின் பிரமதேவனது யாகத்தில் நந்திதேவர் அவ்வாறு சாபங் கொடுத்திருக்கிறார்.

சங்கரசங்கிதை சிவரகசியகண்டம் தக்ஷகாண்டம் 9-ம் அத்தியாயம்.

உன்றனருகில் எந்தத்துராத்மாக்கள் (தேவர்கள்) இருக்கின்றார்களோ (௬௨)

அவர்களது தலைகளெல்லாம்உன்றன்யாகத்தில் வெட்டுப்படலாகிஅத்துஷ்டர்களெல்லாம்சூரபத்துமனால்எப்போதுந்துன்பமளிக்கப்படக்கடவார்கள். (௬௩)

இந்தச்சாபத்தைச் சூரபத்மன் நிறைவேற்ற வந்தவனேயன்றி மற்றப்படி யல்ல. சூரபத்துமன் கொலைக்கேதுவாகத் தத்துவஞானமும் சிவத்தியானமும் உபதேசிக்கப்பெற்ற துண்மையாயின், அவன் கொலையாளியே யாகவேண்டும். அப்படிப்பட்ட கொலையாளிக்குத் தானா மயில்வாகனமும் கோழிக்கொடியுமான பெரும்பாக்கியத்தைச் சுப்பிரமணியக்கடவுள் கடாக்ஷித்தது? அப்படிப்பட்ட கொலையாளியைத்தானா சுப்பிரமணியசுவாமியின் சந்நிதானத்துக்கெதிரில் மயிலாக வைத்திருக்கின்றார்கள்? அப்படிப்பட்ட கொலையாளியைத்தானா சுப்பிரமணியக்கடவுளுக்கு மயில்வாகனமாக ரூபா ஐயாயிரம் பதினாயிரஞ் செலவழித்துச் செய்துவைப்பது? அப்படிப்பட்ட கொலையாளியைத்தானா மயில்விருத்தமென அருணகிரிநாதர் பாடித் துதி செய்தது? அப்படிப்பட்ட கொலையாளியைத்தானா புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மிகுபத்தியோடு மயில் உருவமாகப் பதிப்பிப்பது? அப்படிப்பட்டகொலையாளியைத்தானா சுப்பிரமணியக்கடவுள் வாகனமாகக் கொள்ளவேண்டும்? கொலைசெய்யாத வுத்தமபுருஷர் யாரும் சுப்பிரமணியக்கடவுளுக்கு அகப்படவில்லையா? அப்படிப்பட்டகொலையாளியான மயில்தானா பத்தர்களுடைய தொழுதலுக்கும் துதித்தலு

க்கும்செய்யுட்களுக்கும் இரங்கி அருள்செய்வது? இதனாலேயெல்லாம் பூர்வபக்ஷியாரது கல்வியும் கேள்வியும் விவேகமும் நன்கு விளங்கின வன்றோ? இனியேனும் இப்படிப்பட்ட துராக்ஷேபஞ்செய்தலையொழித்து, சுக்கிரனுபதேசித்த தத்துவஞானம் சிவபத்திஇவற்றின்காரணமாகவே சூரபத்மன், சுப்பிரமணியக்கடவுளுக்கு மயிலவாகனமாகவும் கோழிக் கொடியாகவு மிருக்கத்தக்க பேற்றைப் பெற்றானென்றும் அதனோடு தன்னைவணங்கும் பத்தர்களுக்கு அநுக்கிரகம் செய்யும் வல்லமை யையும் பெற்றானென்றும் அறிந்து, இதுவரையில் சாஸ்திரவிரோத மாய்க் கூறியகுற்றங்களையெல்லாம் பொறுத்து ரக்ஷிக்கும்படி, சுப்பிர மணியக்கடவுளையும் சூரபத்மனை மயிலையும் வேண்டிக்கொண்டு நன் னெறியி லொழுகுவாராக.

கீதைகளெல்லாம் உபநிஷத்தின்பொருள்.

இதன்பேரில் "இந்தத் தாமஸ ஞானத்தினாலேயே அர்ஜுனன் தனது பந்துக்களையெல்லாம்கொன்று இறந்தானென்க" என்றனர். இவ்விடத்தில் பகவத்கீதையைக் குற்றங்கூறி அதைத் தாமஸஞான மென்றும் கொலைநூலென்றுங் கூறினவரானார். இதனுண்மை பூர்வ பக்ஷியார்க்குப் புலப்படவில்லை. அதுபற்றியே அவருக்கு விபரீதபுத்தி யுண்டாயிற்றென்க. தன் பந்துக்களைப்பந்துவென்றுபாராமல் கொன்ற தினாலேயே அர்ச்சுனன் பாசவைராக்கியம் பெற்றவனானான். பாச வைராக்கியம் முமுட்சுகளுக் குண்டாகும் அரியகுணமாதலாலும், அது சத்துவகுணமாதலாலும இவருடைய வாக்கியம் அசாஸ்திரீய மாய்க் கழிக்கப்பட்டதென்க. பந்துக்களைக் கொல்வதினாலேயே அது தாமசகுண மாகாது. அதனுட்பத்தை யுணர்ந்தால் அவ்வாறு பேச விடந்தராது. இயற்பகைநாயனார் கோட்புலிநாயனார் இவர்கள் சுற்றத்தாரைக் கொன்றதும், சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொன் றதும் தாமஸகுணமாமா? அன்றிக் கொலையுமாமா? கொலைசெய்யப் பட்டவர்கள் பிறகு உயிர் பெற்றெழுந்தார்களென் னின்ஷி.தொண்டர் சுற்றத்தாரையும் பிள்ளையையுங் கொல்லும்போது பின் உயிர்பெற் றெழுவார்களென்று கொன்றார்கள்? அப்படியாவது கண்ணப்பரும் அதிபத்தரும் கொன்ற மிருகங்களும் மச்சங்களு முயிர் பெற்றெழுந் தனவா? இல்லையே. யுத்தத்திற் செய்யுங் கொலை, கொலையல்லவென்பது நூற்பிரமாணம். இயற்பகையார் முதலானோர் சுற்றத்தாரைக் கொன் றதோ யுத்தத்தி லன்று. கொல்லப்பட்டவர்கள் யுத்தசன்னத்தராய் இயற்பகையார் முதலானோர் முன்னர் வந்து நின்றார்களில்லை. இங் ஙனமாகவும் அவர்களைக் கொன்றார்கள். பகைவராய்நின்று ஆயு தங்களைக் கையிற் கொண்டு எதிர்க்காத சுற்றத்தாரையும் பால் மணம் மாறாக்குழந்தையையும் கொன்ற கொலையே கொலையாகாமற் போனபோது, யுத்தத்திற்கே யாயத்தமாய்க் கைகளில் பற்பல ஆயு தங்களைக்கொண்டு யுத்தகளத்தில் வந்துநின்ற பகைவரை அவர்

கள் சம்மதத்தின்பேரில் யுத்தஞ்செய்து கொல்வதா கொலையாகப் போகிறது? யுத்தத்தில் பகைவரைக் கொல்லுவது அதருமமல்ல வென்றும், தருமந்தானெனவும், வீரசொர்க்கமெனவும், பகைவரைக் கொல்லாது முதுகுகாட்டியோடுவது அதருமமெனவும், நரகமெனவும் நூல்கள்பேசுகின்றமையால் யுத்தத்தில்பகைவரைக்கொல்வது நியாய மும் தருமமும் நூலுடன்பாடும் வீரசொர்க்கமுமாமென்க. திரியோத னதியர் பாண்டவர்க்குச் செய்த அக்கிரமங்கள் இவ்வளவென்று சொல்ல ஆகாதென்பது யாவரும் அறிந்த விஷயமே. அப்படிப்பட்ட பாபிகளோடு யுத்தஞ்செய்வதும் யுத்தத்தில் அவர்களைக்கொல்வதும் குற்றமாகா. மேலும் அச்சமயத்தில் பூ பாரங் கழிய வேண்டியது அத்தியாவசியகம். அதனிமித்தமே கிருஷ்ணனும் அர்ச்சுனனும் அவதரித்தார்களென மகாபாரதமே கூறுகின்றது. பாரத யுத்தத்தின் முன்பின் தெரியாமலும் அந்த யுத்தத்தினுனேர்ந்த பயனை யறியாம லும் வாயில் வந்தபடி பேசுவது குணமாகாது. கொலையெல்லாங் குற்ற மன்று. கொலையில் குணமு முண்டு; குற்றமுமுண்டு. இராசன் குற்றவாளியைக் கொல்வது குற்றமாகாது; குணமேயாம். மற்றவ ரில் ஒருவனைப் பிறிதொருவன் கொல்வது குணமாகாது; குற்றமே யாம்.

பகைவரோடு போர்புரிந்து அவர்களைக் கொல்வதற்கே தநுர் வேதமுதலிய யுத்தநூல்க ளேற்பட்டிருக்கின்றன. அதன்படி அர சர்கள் செய்வதில் குற்றமில்லை. பகைமேற் செல்லும் அரசர்க்குக் கொலை, காதல், புரட்டு, தந்திரம், சூது முதலியவைகள் அத்தியாவசி யகமென்பதற்குப் பிரமாணம்.

மனுதர்மசாத்திரம் 7-ம்அத்தியாயம் அரசன்செய்கை.

அவர்களுக்குள்ளே உயர்ந்தவனுயும் பண்டிதனுயு மிருக்கிற பிராமண மந்திரியோடு சத்துருவைச் சமாதானப்படுத்துவது, எதிர்ப்பது, சண்டைக் குப்போவது, சமயம்பார்ப்பது, எதிரியின் சேனையைக்கலைப்பது, ஒருவனைத் தான் சரணமாக அடைவது இவ்வாறையும் யோசிக்கவேண்டியது. (௫அ)

அந்தத்தூதன் சத்துருவினிடத்திற்குத் தான் மறைந்துகொண்டுபோய், அவனபிப்பிராயம், செய்கை, அவன் சேனையினபிப்பிராயம், பலம், இச்சை இவைகளையறியவேண்டியது. (௬எ)

ஷை ஷை யுத்ததருமம்.

யுத்தத்தில் ஒருவரை யொருவர் கொல்லவேண்டுமென்று நினைத்துப் போர்செய்யும்போது புறங்கொடுக்காமல் சண்டைசெய்து இறக்கிறஅரசர்கள் சுவர்க்கத்தை யடைகிறார்கள். (அகூ)

சத்துரு வதைசெய்கிற அரசனுக்குப் பாபம்நேரிடாது. (கூஅ)

தன் வேவுகாரர்களால் சத்துரு சூதுமார்க்கங்களை யறியவேண்டியது. (க0௪)

சத்துரு, தன்சூதையறியக்கூடாது. அவன் சூதைத் தான் அறியவேண் டியது. ஆமையானது சமயத்துக்குத் தக்கபடி தன் அவயவங்களை யடக்கிக்

கொள்வதுபோல் அரசன் சதுரங்கசேனைகளையும் தனக்குள் அடக்கிக்கொண்டு தன்னபிப்பிராயத்தை வெளிவிடாம லிருக்கவேண்டியது. (௧௦௫)

ஓட்டத்தைச் சுபாவமாகவுடைய தண்ணீரிலிருக்கிற மீன்களைக் கொக்குகளானவை அதுவே ஞாபகமாயிருந்து பிடிக்கிறதுபோல, சத்துருஜய முதலானகாரியங்களை யோசிக்கவேண்டியது. சிங்கமானது தன்வீரியத்தினால் பெரிதான தேகபலமுள்ள யானைகளைக் கொல்வதுபோல், பலமுள்ள சத்துருக்களையும் ஜயிக்கவேண்டும். இடையர்களால் காக்கப்பட்ட பசுக்களைச் செந்நாய் சமயம்பார்த்துப் பிடிக்கிறதுபோல், கோட்டைக்குளிருக்கிற சத்துருக்களையுங் கொல்லவேண்டும். காட்டில் வேடர்களினாற் சூழப்பட்ட முயலானது எழும்பியோடுகிறதுபோல் சத்துருக்களாற் சூழப்பட்டதேசத்தினின்று அவர்களுக்குத் தெரியாமல் தான் வேறிடத்திற்குப் போய்விடவேண்டியது. (௧௦௬)

ஷ ஷ உபாயவிதி.

இந்தப்படி சத்துருஜயம் செய்கிறவனுக்கு யார் விரோதஞ் செய்வார்களோ, அவர்களைச் சாம தான பேத தண்ட வுபாயங்களினால் தனக்குச் சுவாதீனப் படுத்தவேண்டியது. (௧௦௭)

ஷ ஷ சந்திமுதலியவைகள்.

சண்டைக்குப்போதல் சத்துருவின் விசனகாலத்திற் றான் தனியாகச் சென்று எதிர்ப்பதென்றும், அவனுக்குப் பலமுள்ளபோது தன்றோழனோடு சேர்ந்தெதிர்ப்பதென்றும் இரண்டுவிதமாம். (௧௬௫)

சண்டைக்குவந்த சத்துருவை மறுபடி யோடவொட்டாமல் தகையவேண்டியது. அவன்றேசத்து ஜனங்களைப் பீடிக்கவேண்டியது. புல், விறகு, தண்ணீர், சோறுமுதலியவற்றையும் அவர்களுக்குதவாமற் கெடுக்கவேண்டியது. (௧௬௫)

குறள், காலமறிதல்.

பகல்வெல்லுங்கூகையைக்காக்கையிகல்வெல்லும்
வேந்தர்க்குவேண்டும்பொழுது. (௧)

பொள்ளெனஆங்கேபுறம்வேரார்காலம்பார்த்
துள்வேர்ப்பர்ஒள்ளியவர். (௭)

செறுநரைக்காணின்சுமக்கஇறுவரைக்
காணின்கிழக்காந்தலை. (௮)

கொக்கொக்ககூம்பும்பருவத்துமற்றதன்
குத்தொக்கசீர்த்தவிடத்து. (௧௦)

ஷ ஒற்றாடல்.

துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ்சோர்விலதொற்று. (௬)

ஷ அமைச்சு.

பிரித்தலும்பேணிக்கொளலும்பிரிந்தார்ப்
பொருத்தலும்வல்லதமைச்சு. (௩)

ஷ பகைத்திறந்தேரிதல்.

தன்றுணையின்றால்பகையிரண்டாற்றானொருவ
னின்றுணையாக்கொள்கவற்றினொன்று. (௫)

ஷ படைச்செருக்கு.

பேராண்மையென்பதறுகணொன்றுற்றக்கால்
ஊராண்மைமற்றதனெஃகு. (௬)

விழுப்புண்படாதநாளெல்லாம்வழுக்கினுள்
வைக்குந்தன்னாளையெடுத்து. (௪)

இழைத்ததிகவாமைசாவாரையாரே
பிழைத்ததொறுக்கிற்பவர். (௯)

அரசர்கள் இப்படிப்பட்ட கொலையாதிகளைத் தங்களிடத்தில் அமைத்துக் கொள்ளாவிடில் தேசத்தில் கொலை, களவு, விபசாரம், பிறர்பொருள்வெளவல், உட்கலகம், அந்நிய அரசர்களது போராட்டம், கொள்ளை முதலிய தீமைகள் விருத்தியாகும். அப்போது துஷ்டர்கள் அபிவிருத்தியாய்ப் போவார்கள். துஷ்டர்களால் சிஷ்டர்களுக்குத் தீமையுண்டாம். அதனால் இலவுகிகவிருத்தியும், வைதிக விருத்தியும் குன்றிப்போம். அதனால் இகபரசுக மில்லாமற்போம்.

பகவத்கீதையானது உபநிஷத் சம்பந்தமான ஞானபாகமே யன்றிப் பிறிதன்று. அதன் பிரபாவம் பலரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. சாக்ஷாத் பரமசிவனே பார்வதிக்கு ஷ பகவத்கீதையின் மான்மியத்தைச் சொல்லியிருக்கின்றார். அதனுண்மை பத்ம புராணம் பகவற்கீதா மான்மியத்தில் பதினெட்டு அத்தியாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிரப் பரசிவன் றிருவாய்மலர்ந்த ஈசுரகீதையையே கிருஷ்ணன் அர்ச்சுனனுக் குபதேசித்தாரென்று,

ஈசுரகீதை யோக அத்தியாயம்.

நந்தகோபனன்மனையினில்மதலையாய் நடித்த நாரணன்குந்தி
மைந்தனாகியபார்த்தனுக்கருளினான்வழங்கினன்மான்றேர்மேல். (௮0)

இவ்விதமாய்க் கூறியிருக்கிறது. சிவபுராணமான வராக புராணத்தில் பகவத்கீதாமான்மியம் தொண்ணூறு சுலோகங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. புராணங்களிலும இதிகாசங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான கீதைகளெல்லாம அத்வைதத்தையே சொல்லுகின்றன. பிரமதேவன் தேவர்களுக்கு அத்வைதோபதேசஞ்செய்யும் போது பரமசிவன் எழுந்தருளிவந்து, இதுவே வேதார்த்தமெனச் சொன்னாரென்ற சங்கதி பிரமகீதை சாந்தோக்கிய உபநிஷத்தில் 124 வது செய்யுளில்,

நானேமுழுதுமெனையொழியநாடிற்சிறிதும்வேறில்லை
யானபொருளையருமறைதானறையும்படியானதனாலும்
யானுமிசைத்தபடியாலுமிதுவேதிடமாயுளபொருடான்
ஊனமின்றிநான்முகத்தோனுரைத்ததுங்கட்குண்மையிதே. (௪௨௯)

22

என்று காணலாம். இவ்வளவு பெருமையுள்ள கீதையை அவ்வாறிகழ்ந்துபேசுவதற்குக் காரண மின்னதென யாம் கூறுமலே யறிஞர் அறிந்துகொள்வார்கள்.

"இவ்விவ்வரிய ஞானத்தைக் கொண்டாடியகீதைகளெல்லா மிதனைப் பிரதிபாதிக்கிறதென்று மெச்சினர். அஞ்சாமல் கொலைசெய்ய வுறுதியுபதேசஞ் செய்யு ஞானமு மொருஞானமா? இந்த ஞானங் கொலையாளிகளுக்கே கொண்டாட்டத்தைப் பயந்து சாதுக்களுக்குக் குலைநடுங்சப்பண்ணு ஞானமாயின தறிக. இதனைத் தெளிந்த விவேகிகள் இந்த அவலக்ஷண ஞானம் சூதசங்கிதையிற் பெறப்பட்டது கொண்டே இதனை மதித்துத் துதியாரென்க" என்றனர். இவரே இதற்குமுன் "தாயுமானவரோ சூதசங்கிதையைத்தூஷிக்கமாட்டார். அவர் திருவடியை யாசிரயிக்கும யாமும் சூதசங்கிதையைத் தூஷிக்கமாட்டோம்" என்று கூறினரென இதன் முதற்பாகத்தில் 42-வது 43-வது பக்கங்களில் காட்டியிருக்கின்றோம். அப்படி அவ்விடத்தில் சொல்லி, இவ்விடத்தில் கிறிஸ்தவரைப்போ லிகழ்கின்றார். அவ்விடத்தில் வேதசாஸ்திர பாஹியரென்றிகழ்ந்து தள்ளிவிடப்போகின்றார்களெனப் பயந்து அவ்வாறுபேசினர். இவ்விடத்தில் வேதசாஸ்திரபாஹிபராய்விடுவதே தமதுவினையெனத்துணிந்து தூஷித்துவிட்டார். இப்படிப்பட்ட பாஹியரிடத்தில் நாம் என்ன பேசப்போகின்றோம்!

மகாஸ்காந்தம் சங்கரசங்கிதை சிவரகசியகண்டம் சம்பவகாண்டம் 2-வது அத்தியாயம் மொழிபெயர்ப்பு.

அப்போது மகாப்பிரபுவாகிய பரமசிவன், கெம்பீரவாக்கினல் சொன்னதாவது:—"வாரீர் விஷ்ணுப்பிரமர்களே! நீங்களிருவரும் உலகில் துவாபரயுகந்தோறும்வியாசராகவும் மனுவாகவும் அவதரித்து வேதசாஸ்திரங்களிரண்டையும் கலியுகத்தின்கண் அறிவீனர்களாயுள்ள மானிடர்கள் எளிதாய்க் கற்றறியும்படி. பலவாருயிருக்கிற அவைகளைச் சுருக்கமாய்ச் செய்துவிடுவீர்கள். (வியாசர்செய்தது புராணங்களும், வேதாந்த சூத்திரமும்; மநுசெய்தது மநுஸ்மிருதியாம்.) (கஅ,கக)

பிராமணர்களுக்குத் தகுதியுள்ளவை சைவபுராணங்களேயாகும். ஆகினும் ஸ்காந்தபுராணம் கேளீர் முனிவர்களே! சுகத்தைக்கொடுப்பதும் மேன்மையுள்ளதுமா யிருக்கிறது. சகல வேதாந்த ஸாரங்களையும் நன்கு விளக்கியது. (ருஈ,ருஉ)

சூதசங்கிதை புராணவரலாறு.

ஆரணமுழுதுணர்ந்தவேதியனேயாயினும்சிவபுராணத்தின்
சரணிபொருளையுணர்ந்திலானுயினிலங்குமவ்வேதமற்றவனைத்
தாரணியிடத்துநம்மைவஞ்சிப்போன்ருனிவனெனநனியஞ்சும்
பூரணமுறவாதலின்மறைப்பொருளைப்புராணத்தாற்றெரிதரல்வேண்டும்.

அறையுமெந்நூற்கும்மறைபிரதானமாகியபெரும்பிரமாணம்
பொறைதருமிருதிபுராணங்களுபபுராணமற்றுள்ளசாத்திரங்க

ணிறைதருமறைக்குவிரோதமாகாதுகிகழ்த்திமெனுகுணமாகி
யுறைதருமறைக்குவிரோதமாநூல்களொருவர்க்கும் பயன்படாதனவே.

கூர்மபுராணம் திருக்கலியாணம்.

வேதநூல்களவற்றின்வழிவிராட்டாஞ்சுவாயம்பூமனுமன்
னோதுநூல்கள்வியாதமுனியுரைத்தநூல்களவற்றின்வழி
நீதிலருமாமறைக்கிழவர்செப்புநூல்களனைத்துமே
நீதிநூல்களிவற்றின்வழிநின்றோர்நெறிநின்றோரே. (சஉ)

இவ்வாறு எத்தனையோ சத்பிரமாணங்கள் முறையிடுகின்றன. ஆன்மாக்க ளுஜ்ஜீவிக்கும்பொருட்டுப் பரமசிவனு லருளப்பட்டபடி வியாசராலியற்றப்பட்டதும், சிவபுராணமாயுள்ளதும், பரமசிவனது மகிமையைச்சொல்லப்பட்டதும், வேதாந்தசாரமாயுள்ளதும், வேதப் பொருளை யுணர்த்தற்குக் கருவியாயுள்ளதும், வாதிப்பிரதிவாதிகள் கட்டுப்பட்டு அத்தியாவசியகமாய் ஒத்துக்கொள்ள வேண்டியதும், பதினான்குவித்தைகளு ளொன்றென்று சொல்லப்பட்டதுமான புரா ணத்தை யிகழ்ந்தபிறகு இவராரியராதலெங்ஙனமோ? அத்வைதத்தை யுபதேசிப்பது சூதசங்கிதையொன்றுதானோ? சகல வேதங்களும், சகல புராணங்களும், சகல கீதைகளும், சகல சாஸ்திரங்களுந்தான உப தேசிக்கின்றன. கீதையில்லாத புராண மொன்றுளதோ? கீதையை நிந்திக்கிறபோது சகல புராணங்களையும் நிந்தித்தவராகார? கீதைக ளெல்லாம் வேதசாரப்பொருளை விளக்குவதாகையால் வேதத்தையே நிந்தித்தவரென்பதற் கியாது மைய மின்றெங்க. வேதம் பசுநூல, மயக்கநூல், விபசாரநூல், உலகநூலெனப் பகிரங்கமாய் எழுதியும் பேசியும் பிரசங்கித்தும் வருவது இவர் சார்பினருக்கு இயற்கைக் குணமாதலாலும், அது ஜகத்பிரசித்தி யாதலாலும் இப்படிப்பட்ட வேததூஷகரான வேதபாஹியரை அநாரியரென்று சொல்வது நியாய மேயாம்.

பாஞ்சராத்திரிகள் விஷ்ணுவுக்கு உத்கிருஷ்டஞ் சொல்லாமை காரணமாகச் சிவபுராணங்களைத் தாமஸபுராணங்களென இகழ்கின் றூர்கள். துவித சிவாகமிகளோ துவிதத்திற்கு அநுகூலமில்லையென வும் அத்வைதசாரமா யிருக்கின்றனவெனவுங்கொண்டு அவைகளை யிகழ்கின்றூர்கள். சிவபுராணங்களை யிகழ்வதில பாஞ்சராத்திரிகளும் துவிதசிவாகமிகளும் ஒருதன்மையரா யிருக்க, துவிதசிவாகமிகள், தாங்களென்னமோ முறை கடவாதவர்கள்போலெண்ணி, பாஞ்சராத் திரிகளைப்போய் இகழப்போகின்றூர்கள். இதுமாத்திரமா, இச்சிவா கமிகள்,பாஞ்சராத்திரிகளோடு பரதத்துவவாதஞ்செய்யப்போமபோது இவர்கள் வேதத்தை வெகுகவுரவஞ்செய்வதுபோலவும் சிறந்த பிரமா ணமாகக் கொள்ளுவதுபோலவுங்காட்டி, வேதத்தில சிவன்தான் பர த்துவமெனப் பேசுகின்றூர்கள். அத்வைதிகளிடத்தில் வாதஞ் செய்யவரும்போதோ வேதம் பசுநூல், மயக்கநூல், உலகநூல, விப

சரிக்கும்நூல், பலதெய்வங்களைப் பரத்துவமாய்ச் சொல்லும்நூல் என இகழ்கின்றார்கள். ஆதலால் இத்துவிதசிவாகமிகள் விலாங்கு மீனுக்கு ஒப்பாயிருப்பதோடு வேதபுராண பாகியர்களென்பதிலும் யாதும் ஐயமின்று. வேதபுராண பாகியர் அவற்றினை இகழ்வது சகஜமாதலின் அவ்விகழ்ச்சியை நாம் ஒரு பொருளாகக் கொள்ளா திருப்பதே யுக்தமாமென்க.

சேதனு சேதனங்கள் சிவனுக்கு எப்படித் தநுவாதும்?

அரக்கோண வீரபத்திரமூர்த்தியார் "சேதனு சேதனங்கள் யாவும் சிவனாரது தநுவாதனோக்கிய வேதம் யாவும் பிரஹமமென்று கூறியதுணர்ந்தவர்கள் அவ்வேதம் அஹம்ப்ரஹமாஸ்மியென்று கூறியதைமதித்து எங்ஙனே மாயாவாதத்தைச் சாதிக்க முந்துவார்கள்" என்கிறார். இதிலுமிவரது தெரியாமையைக் காட்டுகின்றார். சிவனுக்குச் சேதனுசேதனம் தநுவானால், தநு பிரமமென்று சொல்லவேண்டுங்கொல்லோ? உயிராகிய நமக்கு அசேதன தநு இருக்கிறது. அதனால் தநுவை யுயிரென்று சொல்லவேண்டுமோ? இப்படிச் சொல்வதினால் இவர் உலோகாயுத நாஸ்திகராகின்றார். எங்ஙனெனின் கூறுதும். உலோகாயுதநாஸ்திகர் உடலையே ஆத்துமாவென்கிறார்கள். இவரும் உடலை யுயிரென்று சொல்வதாய் ஏற்படுகின்றமையின் இவரும் உடலையே ஆத்துமாவென்று சொல்லுகின்றவராகின்றார். நம்மாலியற்றப்பட்ட யானையின் உடலில் ஒருமனிதன் புகுந்துகொள்வானேயாயின் அவ்யானையை மனிதனெனச் சொல்லலாமோ? மனிதனும் யானையுடலும் வேறுவேறு பின்னப்பொருள்கள். அங்ஙனமே யுயிரும் உடலும் வேறுவேறு பின்னப்பொருள்கள். உடலைவிட்டு உயிர் வேறுபிரிந்து போவதோடு பிறிதோருடலினுள்ளுஞ் செல்லுகின்றது. செல்லுவதனால் உடல் உயிராகாது. சிவனுக்குச் சேதனு சேதனங்கள் தநுவென்று சொல்லும் உபமேயத்துக்கு உயிரும் உடலும் உபமானம். உபமானத்தில் உயிருடலாவதில்லை; உடலுயிராவதில்லை. இந்தவுபமானப்படி சேதனுசேதனங்களான தநு, சிவனுவதில்லை; சிவன், சேதனுசேதன வுடலாவதில்லை. அங்ஙனமாகச் சேதனுசேதனவுலகைப் பிரமமென் றெங்ஙனம் சொல்லலாம்? திருட்டாந்தத்தில் உயிர் ஒரு சத்துப்பொருள்; உடல் ஒரு சத்துப்பொருள். இரண்டும் சத்தாயிருப்பதால் ஒன்றிருந்தவிடத்தில் மற்றொன்றிரா. இவ்வாறே யானையுடலும் அதனுட்புகுந்த மனிதனுமாம். இந்தத் திருட்டாந்தங்களின்படி நோக்கினால் சிவனும் சேதனுசேதனவுடலும் சத்துப்பொருள்களாய்ச் சிவன் அபரிபூரணப் பொருளாகின்றனர். சேதனுசேதனவுலகு சத்தென்பதும், சிவன் அபரிபூரணரென்பதும் வேதசாஸ்திர விரோதமெனப் பன்முறை பிரமாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இதுதவிரச் சேதனுசேதனவுலகு சிவனிடத்தினின்றும் தோன்றி இருந்து இலயமாகின்றதெனவும் இப்புத்தகம்

125-வது 126-வது பக்கங்களில் சுருதியாதிப் பிரமாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அதனோடு அநேகமுறை யுக்தி அநுபவங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் சிவன் காரணமும், சேதனு சேதனவுலகு காரியமுமாமென்பது துணிபு. காரணத்தையன்றிக் காரியத்துக்குப் பொருளில்லையென்றபடி சிவனையன்றி யுலகிற்குப் பொருளில்லை. இதுவிஷயமாக முன் 109 முதல் 115-வது பக்கம் வரையில் பிரமாணங்களோடு எழுதப்பட்டிருக்கின்றமையின் ஆண்டுத் தெளிந்திடுக. இதன்படியே உயிரையன்றி யுடலுக்குப் பொருளில்லையென்று சொல்லவேண்டும். ஆதலால் இவர் கூறியவாறு உபமானம் பொருந்தாது. சேதனுசேதன வுலகைச் சிவனுக்குத் தநுவாகச்சொல்லியிருக்கிறதேயெனின், இது ஏகதேச திருட்டாந்தம். உலகைச் சத்துப்போலியாக வைத்துச்சொன்னால் யாதொரு ஆக்ஷேபமு மில்லை. இப்படிச் சொல்வதால் சிவனுக்குப் பூரணத்துவமுஞ் சித்திக்கிறது; உலகுக்கு ஒருவிதமாய் அதாவது அநிர்வசனீயமா யிருப்பும் ஏற்படுகின்றது. யாவும் பிரமமென்று சொல்வதற்கும் பொருத்தமாயிருக்கிறது. எங்ஙனெனில் மண்ணிலிருந்துண்டான கடம் சத்தன்று; சத்துப்போலி அநிர்வசனீயம். மண்ணிலிருந்துண்டான கடமுதலியவற்றை நோக்கி, யிவையாவும் மண்ணேயென்று சொல்லின் குற்றமென்னை? அதுபோல் சிவனிடத்தினின்று முண்டான சேதனுசேதனவுலகப் பொருள்களை நோக்கி, இவையாவும் பிரமமேயென்று சொன்னால் குற்றமென்னை? சுருதி யுக்தி அநுபவமுள்ள இவ்விரகசியத்தை யுணராமல் வாயில் வந்தபடியெல்லாஞ் சொல்லிவிட்டுக் கற்றவர் அவையில் அவமானப்பட்டு வேதபாஹியராகின்றார். இவர் சிவனுக்குச் சேதனுசேதனம் தநு எனச் சொல்லும் ஒரு பக்கத்தைப் பார்த்தாரேயன்றி, சிவன் பரிபூரணரென்றும், சேதனுசேதனவுலகு அசத்து அல்லது சத்துப்போலியென்றும் சொல்லும் பல பக்கங்களைப் பார்த்தாரில்லை. இவருக்கு முழுநேத்திரமில்லை, வீசம் அரைக்கால் நேத்திரந்தானிருக்கிறது. அதுபற்றியே உள்ளநேத்திரத்துக்குத் தக்கபடி புலப்படுகின்றதுபோலும். நிற்க; இவர்க்கபின்ன தோழரான சோமசுந்தர நாயகரும் சித்தாந்தரத்நாகரம் 5 வது பக்கத்தில் "உலகுயிர்களைச் சிவனுக்குத் திருமேனியென்றது ஔபசாரிகமேயாம்" என்றனர். ஆதலால் இவரது வாதம் உண்மையல்லாது போகின்றதென்பதறிக.

துவிதசைவமே புன்சுருட்டு வேதாந்தம்.

இதன்பேரில் "இவரது புன்சுருட்டுவேதாந்தமதத்தைப்பிரசந்நபௌத்தமென்று பழித்தநூல் பாத்மோத்ரமென் றறிந்தடங்குவாராக" என்றார். உண்மையாய்ப் பாத்மோத்ரம் அவ்வாறு சொல்லின் அது இவர்மதத்தையே சொல்லியிருத்தல்வேண்டும். எங்ஙனெனில் விளக்குவாம். புன்சுருட்டு வேதாந்தமென்பதனால் சரியான வேதா

ந்தமல்லவென் றுகின்றது. இப்பிரமவித்தையில் வந்து வாதிக்கும் அத்வைதிகள் சரியான வேதாந்தத்தை வாதிக்கின்றமையானும், ஒவ்வொன்றுக்கும் சுருதிப்பிரமாணங்கள் காட்டுகின்றமையானும் சுருதிப்படியே புராண இதிகாச ஆகமங்களும் வேதப்பொருள்களை விளக்கும் தேவார திருவாசகாதிகளும் காட்டுகின்றமையானும் எமது வேதாந்தம் ஒருபோதும் புன்சுருட்டு வேதாந்தமாகாது. பின்னைப் புன்சுருட்டுவேதாந்தம் யாருக்குச் சொந்தமெனின் இவருக்கேயாம். எவ்வாறெனின் இப்பூர்வபக்ஷியார் வேதம் பசுநூல்,மோகநூல், உலகநூல், மோக்ஷத்தைத் தராதநூல், விபசரிக்குநூல் எனப் பலவாறு சதாதூஷிப்பதாலும், வேதம் தமக்கு வேண்டாமென வெறுத்துக் கூறியிருப்பதாலும இன்னும் இப்படிப்பட்ட பல காரணங்களால் வேதப் புறமதஸ்தராயினும் கிறிஸ்தவர் துலுக்கர் முதலானோரைப் போல் தம்மை யொதுக்கிவிடப் போகிறார்களென்றஞ்சி, ஆகமத்தோடு வேதத்தையுஞ் சேர்த்து வேதாகமம் வேதாகமமென்று வேண்டாவெறுப்பாய்ச் சொல்லுவதாலும், வைணவரிடத்திற் பேசும்போது வேதத்தை வெகு பிரமாணத்தோடு அங்கீகரிப்பதுபோல் புன்சுருட்டுத்தனமாய்ப் பேசுவதாலும் இவரது வேதாந்தமே புன்புருட்டு வேதாந்தமென்பதற்கு யாது மையமின்றென்க.

துவிதசைவமே பிரசந்ந பௌத்தம்.

பிரசங்கபௌத்தமும் இவரது மதமேயாம். 'பிரசங்கபௌத்தம்' என்பதற்குப்பொருள் மறைவான பௌத்தமாம். இவரதுமதம் எப்படி மறைவான பௌத்தமெனின் பௌத்தர்க்குக் கடவுளில்லாமையால் அம்மதம் நாஸ்திகமதமாம். இவரதுமதமும் அங்ஙனமிருந்தும் ஆஸ்திகமதஸ்தர்போல் வேடம்பூண்டு பகடித்தனஞ் செய்வதால், இவரதுமதம் மறைவான நாஸ்திகமாம். அதனால் இவரதுமதம் பிரசங்கபௌத்த மென்பதற்கு யாது மையமின் றென்க. இவரது மதம் எங்ஙனம் நாஸ்திகமெனின் விளக்குதும்.

(1) "சங்கராசாரியர் அவதாரமகிமை"யில் 7-வது 8-வது பக்கங்களில் பேசிய காரணகாரியவாதத்தில் இவரது கடவுள் சடமாயும், அசத்தாயு முடிவதால் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(2) "அத்வைததூஷண பரிகார"த்தில் 20-வது பக்கத்தில் மறுத்த மறுப்பின்படி நீர்ஸ்தானத்தில் உயிரையும், நிழல்ஸ்தானத்தில் சிவனையும் இவரது சிவஞானசுவாமியார் சொல்வதால் சிவன் பொய்யாய் அதுகாரணமாக இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(3) ஷை புத்தகம் 24-வது பக்கத்தில் மறுத்தபடி இவரது மதத்தில் உயிர்பரிபூரணமாகலின் சிவனிருக்க விடமில்லாமற்போய், அதுகாரணமாகக் கடவு ளில்லையென்று சொல்வதற்கிடமாய் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(4) ஷைபுத்தகம் 50, 51, 52-வது பக்கம்வரையில் மறுத்தபடி,ஒன்று பலவானால் ஒன்று கேட்டே பலவாக வேண்டுமெனச் சோமசுந்தரநாயகர் சொன்னபோது அங்ஙனமாயின் திருவிளையாடற்புராணத்திற் கூறியவாறு,

சிவன் பன்றியாங்கால் சிவன் கெட்டேத்தானே பன்றியாகவேண்டுமெனவும், பன்றி காரியமானதாலும் காரியம் அழிதல்மாலையதாதலாலும் பன்றிஅன்றே யில்லாமற்போயிற்ருதலாலும் காரியமானபன்றி யில்லாமற் போயிற்றென வும்சொல்லி, அது காரணமாகக் கடவுளில்லையென்று தீர்மானித்திருப்பதால் அதுகாரணமாகவும் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(5) ஷை புத்தகம் 82வது முதல் 86வது வரையில் கண்டித்தவண்ணம் நீர்ஸ்தானத்தில் உயிரையும் கடல்ஸ்தானத்தில் சிவனையுஞ் சொல்வதால் நீரையின்றிக் கடலென்னுஞ்சொற்குப் பொருளில்லாமைபோல வுயிரையின் றிக் கடலென்னும் சொற்குப் பொருள் இல்லாமற்போகின்றது. அதுகாரண மாகவும் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(6) பதிபசுபாசவாதத்தில் 34ம் பக்கத்தில் பழத்திற் சுவை வியாபித்த வுபமானப்படியும் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(7) ஷை புத்தகம் 37ம் 38ம் பக்கத்தில் பாலில் நெய்வியாபித்த வுப மானத்தில் மறுத்தவாறும் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(8) ஷை புத்தகம் 44, 45, 46ம் பக்கங்களில் சூரியன், ஒளியில் வியா பித்த வுபமானத்தில் கண்டித்தபடியும் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(9) சபாபதிநாவலர் சிவம் அளவைகளான் அறியப்படல் வேண்டு மெனக் கூறியதை வேதாந்தசங்கை நிவாரணம் 42 முதல் 50வது பக்கவரை யில்கண்டித்தபடி எது அளவைகளான் அறியப்படுமோ, அது சடமாயும் அசத் தாயும் போமாகலின், அதுபற்றியும் அவரதுமதம் நாஸ்திகமதமாய் அவரைச் சார்ந்த இவரும் நாஸ்திகராய் அது காரணமாக இவரது மதமும் நாஸ்திகமத மாம்.

(10) இவர் பதி பசு பாசங்கள் தனித்தனிச் சத்துப்பொருள் எனக் கூறுகின்றமையின் அதுபற்றி யிவரதுபதி, மூன்றிலொருபங்கு இடத்தைப் பெற்று அதுகாரணமாக இவரதுமதம் மூன்றிலொருபங்கு ஆஸ்திகமும், இர ண்டுபங்கு நாஸ்திகமுமாய் முடிகின்றமையின் அது பற்றியும் இவரது மதம் நாஸ்திகமதமா மென்க. (இவ்விஷயம் வேதாந்தசங்கை நிவாரணத்தின் கடைசியில் "ஆஸ்திகநாஸ்திகம்" என்னும் விஷயத்தில் தெளிவாய் விளக்கப் பட்டிருக்கின்றது.)

இவ்வாறு இன்னும் அனேக வகைகளில் இவரது மதம் நாஸ்திக மாகின்றதாயினும், தாம் நாஸ்திகரென வுண்மையைச் சொல்லாமல் மறைந்துநின்று, ஆஸ்திகர்போல வெளிகாட்டிக்கொண்டு வருகின்ற மையின் இவரதுமதம் பிரசங்க பௌத்தமும் அதை யனுசரிப்பதால் இவர் பிரசங்க பௌத்தருமாம். இப்படிப்பட்ட நாஸ்திகம் அணுவளவு கூடவில்லாமையால் அத்வைதிகள் பகிரங்கஆஸ்திகராம்.

நிற்க; நமக்குப் பிரதிவாதியாய் நிற்கும் அரக்கோணவாசியாகிய வீரபத்திரமூர்த்தி, யாரென்றுபார்க்கின் விஜயஹ கார்த்திகை 18உ யிற் பிரசுரமான காரைக்கால் திராவிடமந்திரி பத்திரிகை 187வது இலக்கத்தின் முதற்காலத்தில் கோயமுத்தூர்ப் புளியோரைகண்டர் கூறியவாறு சூனா. சோமசுந்தரநாயகரெனத் தெரிகின்றது. இந்தச் சோமசுந்தரநாயகர், ஷை பாத்மோத்ரம் பொய்யென்றும், வைணவர்க

ளால் கற்பித்தெழுதப்பட்டதென்றும் 1881 ௵ மார்ச்சு ௴ 31 ௳ அச்சிடப்பட்ட "சித்தாந்தரத்நாகரம், சிவபாரம்யப்பிரதரிசினி"யின் 72 வது 73-வது பக்கங்களில் எழுதியிருக்கின்றார். அதில் சமஸ்கிருத பாத்மோத்தரமும், தமிழ்ப் பாத்மோத்தரமும் பொய்யென்று சொன்னதோடு, அதற்கு மறுப்பாகப் "பாத்மோத்தரரசாபாச தர்ப்பணம்" என்னும் நூலொன்றும் அப்போதேவெளிப்பட்டதாகவுங்கூறுகின்றார். அதை யிதனடியில் எடுத்துக்காண்பிக்கின்றோம். ஆனால் அதில் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த இராமாநுஜநாவலரை யேகவசனமாக விகழ்ந்து தூஷிக்கின்றார். அதை யவ்வாறே யெடுத்துப் பிரசுரிப்பதில் அந்தத்தூஷணையு மப்படியே யிருக்கும். அதற்காக எவரும் எமதுபேரில் மனஸ்தாபப்படாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சித்தாந்தரத்நாகரம், சிவபாரம்யப்பிரதரிசினி.

"எப்படிப் பாகவதம் அப்பிரமாணமென வேர்ப்பட்டதோ, அப்படியே விஷ்ணு பாத்மோத்தரமும் அப்பிரமாணமென்றதைக் காட்டுவோம். சில தினங்களுக்குமுன்னர்ப் புதுச்சேரியானொருத்தன் பாத்மோத்தரபுராணம் என்றொரு சுவடியைத் தமிழில் பத்தியரூபமாக வெளியிட்டனன். அவன் புத்தகத்துக்குப் பேரிட்டபுதுமையே அவன் புத்திவிசாலத்தைக் காட்டும். அவ்வவலட்சணத்திரட்டு மூலகிரந்தத்தின் மொழிபெயர்ப்பென வவன்கூறிய பிரமையால் சிலர் மயங்கினு மவன் கொட்டிய வவ்வளவு ஆபாசங்க ளெம்மூலவழுத்திரட்டினும் பெறப்பட்டதில்லை. அவ்வபண்டித சிரோமணிக்கு அப்போதே பிராயச்சித்தமாகப் (பாத்மோத்தரரசாபாச தர்ப்பணம்) என்னு நூலொன்று வெளிப்படுத்திச் சில முதியோர் சபேடிகை செய்ததேபோதும். அவனுக்கு மூலமாயிருந்த கீர்வாண பாத்மோத்தரமுங் கல்பனுமாத்திரமென்பதைக் காட்டுவோம். பாத்மபுராணம் பூர்வம், உத்தரம் என்னு மிரண்டு பகுதியில் பாத்மபூர்வத்தில் முழுதும் சிவோத்கர்ஷ மஹிமாவர்நனமன்றி வேறில்லை. முக்கியாம்சங்கள் இராமனுக்கு விரஜாதீக்ஷை செய்வித்தலும், கீதாவுபதேசஞ் செய்தலுமாகியவைகளேயாம். இவைகளுக்கு நேர்விரோதமாய் உத்தரபாகத்தில் சிவநிந்தையே விஷயமாக வெப்படிப் பிரதிபாதிக்கும்? அனேகருக்கு அவ்விஷயத்தில் மயக்கமுண்டாகி, ஒருபாகம் சிவோத்கர்ஷமும், மற்றொருபாகம் சிவாபகர்ஷமுங் கூறுதல் யாண்டமையுமென்னும் பரியாலோசனையி லிருக்கையிலேதானே, அஷ்டாதசபுராணங்களையு மிப்போதிச் சென்னையிலச்சிட்டுவரும் பண்டிதர் சிலர்க்கு மிதில் சமிசயம்நேரிட்டுப் பாத்மோத்ரம்யாம் அச்சிடுவதற்கு வெளிதேசத்திலுள்ள பலருந் தங்கள்தங்கள் வசத்திலுள்ள பிரதிகளை யெமக்குபகரிக்க வேண்டுமென்று அறிக்கைசெய்தனர். அப்படியே பல விவேகிகள் அனுப்பிய பிரதிகளைப்பார்த்துழிச் சில விஷ்ணு சம்பந்தமுடையனவாகிப் புளியோரை மாந்மியம், சூட்டுக்கோல் மாந்மிய முதலியவைகளைப் பிரதிபாதிப்பனவும், சில பிரதிகள் பூர்வ பாகத்துக்கு விரோதமில்லாமல் பரசிவமகிமைகளையே பிரதிபாதிப்பனவுமாகக் காணப்பட்டன. இதனால், பாத்மபுராணம் அடங்கலும் சிவபாரம்யமுடைய நூலெனவே துணியப்பட்டுப் பிரகிருதத்தில் பாஞ்சராத்திரிகள் கையாண்டுவரும் விஷ்ணுபாத்மோத்தரம் அவாந்தரமாய்க் கற்பிக்கப்பட்டதொன்றுமென்பது நிச்சயிக்கப்படுகையால், அவ்வசங்கதாலங்கார பிரக்ஷிப்தமாகிய

பாத்மோத்தரத்தால் சிவன் விஷ்ணுபதியைத் தரித்தாரென்று கூறியது அநாதரணீயமென்றே தவிர்க்கப்பட்டது."

கற்பிதபாத்மோத்ரம் அத்வைதிகளுக்கும் விரோதம்; இவருக்கும் விரோதம். இவர்வைணவரோடு வாதஞ்செய்யும்போது கற்பிதத்தைக் கற்பிதமென்று சொல்லுகிறார். அத்வைதிகளுடன் வாதஞ்செய்யும்போது அவர்களுக்கு விரோதமான பாகத்தைப் பிரமாணமெனக் காட்டி அதை மெய்யென்று சொல்லுகின்றார்.

இவரோடுசேர்ந்த ம-ா-ா-ஸ்ரீ ஸத்யோஜாத சிவாசாரியார் என்பவர் 1894ஹூ ஆகஸ்டுமீ 5வ விவேகதிவாகரன் என்னும் பத்திரிகையில்

"பாத்மபுராணத்தில் பார்வதீமகாதேவ ஸம்வாதத்தில்"மாயாவாத மஸ்ச்சாஸ்திரம், ப்ரசன்னம் பௌத்தமேவச, மயைவகதிதந்தேவீ, லௌப்ராம்ஹணரூபிணா, அபார்த்தம் சுருதிவாக்யானும், தர்வ்யயம்லோக கர்ஹிதம், கர்மஸ்யரூபத்யாஜ்யத்வம், திரச்சபிரதிபாத்தியதே, ஸர்வகர்மபரிபிர்ம, சான்னைஷ்கர்மம்தரச்சோச்யதே, பராத்ம ஜீவயோரைக்கியம், மயாத்திர பிரதிபாத்தியதே, பிர்மஹணோஸ்யபரம்ரூபம், நிற்குணக்த்ர் சிதம்மயா, ஸர்வஸ்யஜகதோப்யஸ்ய, நாசநார்த்தங்கலௌயுகே, வேதாந்தவன் மகாசாஸ்திரம், மாயாவாதமவைதிகம், மயைவகதிதந்தேவீ, ஜகதான்னுசகாரணாத்" என்கிற வாக்கியத்தால் எது மறைவாய்ப் பௌத்தமதமே யாகின்றதோ அந்த மாயாவாத பிரச்சின்னபௌத்தமென்னுஞ் சாஸ்திரத்தை ஹேதேவீ! கலியுகத்தில் பிராமணரூபத்தால் நானே சொன்னேன். சுருதிவாக்கியங்களுடைய லோகநிந்தைக்குரிய பொய்யான அருத்தங்களை இந்த சாஸ்திரங்களில் காண்பித்துக் கருமங்களை விடும்படி இதில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எல்லாக் கர்மங்களின் நழுவுதலால் நைஷ்கர்மம் சோம்பல் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாத்மாஜீவாத்மாக்களின் ஏகிபாவத்தை நான் இதிற் சொல்லியிருக்கின்றேன். மேலும் இந்தப் பிரமத்தின் சிறந்தரூபத்தை நான் நிற்குணமாகக் காட்டியிருக்கிறேன். கலியுகத்தில் எல்லாவுலகங்களும் நாசத்தின்பொருட்டு உண்மையில் அவைதீகமான மாயாவாதமென்கிற பெரிய சாஸ்திரத்தை வேதார்த்தம் போலஹே? தேவி ஜகத்தின் நாசத்தின்பொருட்டு நானேசெய்தேன் என்பதாய்க் காணப்படுவதால்" என்று கூறுகின்றார். மேலெழுதிய சுலோகங்களும் வாக்கியங்களும் ஷை பத்திரிகையிலுள்ளவாறே பிரசுரித்தோம்.

பாத்மோத்தரமென்று சொன்னால் பாத்மோத்தரம் பொய்யென்று சித்தாந்தரத்நாகரத்திலசொல்லிய சங்கதி வெளிப்பட்டுப்போமெனக் கருதி,இப்போது வாளா 'பாத்மபுராணத்தில்' என்றார். உண்மையில் ஷை சுலோகமிருப்பது சோமசுந்தரநாயகர் சொல்லியபடி கற்பித பாத்மோத்தரத்திற்றான். அதுதமிழ்மொழிபெயர்ப்பிலு மிருக்கிறது.

தமிழ்ப்பாத்மோத்தரம்

17-வது முக்குணவிவரணபடலம்.

மன்னுதாமதமதியினல்வியாதரூத்திரக்குப்
பன்னுமாயைவாதமெனும்பாடியமதனை

உன்னுதீக்கலியுகமறையவனெனப்பட்ட
என்னுளாக்கினன்யாவருமறைப்பொருளென்ன. (சு)

அன்னநூலினுளகண்டநாரணபரத்துவமும்
சின்னமாகியசீவனுமொன்றெனச்செப்பிப்
பின்னுநிர்க்குணம்பெற்றதென்றறிவழிந்தன்னே
என்னகன்மமோவன்னதும்பிழையெனவிசைத்தேன். (எ)

ஷை சமஸ்கிருத பாத்மோத்தரமும் தமிழ்ப் பாத்மோத்தரமும் பொய்யெனப் பூர்வபக்ஷியே சொல்லுகின்றமையாலும், அதைமறுத்துப் "பாத்மோத்தர ரசாபாசதர்ப்பணம்" என முன்னரே வெளிப்பட்டிருப்பதாய் இப்பூர்வபக்ஷியே கூறுகின்றமையாலும் அதன்பேரில் நாம் பேசவேண்டியது அநாவசியகமாம். நாம் மீண்டும் அது விஷயமாகப் பேசுவது செத்தபாம்பைத் தடிகொண்டடிப்பதற்குச் சமானமாம். ஷை பாத்மோத்தரத்தை மெய்ப்புராணமெனவே கொள்வோம். அப்படிக் கொள்ளுங்கால் அத்வைத விரோதமாயிருக்கும் பாகமாத்திரம் பிராமணமா? முற்றும் பிரமாணமா? முற்றும் பிரமாணமென்றே அங்கீகரிக்கவேண்டும். அப்படி யங்கீகரிக்குங்கால்,

ஷை பாத்மோத்தரம் 16-வது பாஷாண்ட படலம்.

(பரமசிவன் பார்வதிக்குபதேசித்தது.)

வேதியரென்றேயுதித்தும்விண்டுவடிவேண்டாது
பூதியக்கமென்பொடுபூணுகின்றபுல்லர்களும்
காதியத்தீக்கண்ணில்வைக்கும்காலனைக்கண்ணாலளித்த
சோதியத்தனைப்பணியச்சொல்லாதசூதர்களும். (கூ)

என்னைநான்முகத்தோனையீன்றதனிமுதலவன்றன்
இன்னருளாலுரைத்ததுமீரிருமறையாற்புகழ்ந்ததுமோர்
பின்னமறுமுனிவரராற்பேணுவதுமாயநலம்
துன்னுபஞ்சராத்திரநூற்றூநெறிசெல்லாதவரும். (௰)

பாடாண்டரென்றுசொல்லப்பட்டார்களென்றுபசுங்
காடாண்டநன்கயிலைக்கண்ணுதலுங்கட்டுரைக்கப்
பீடாண்டவறுமுகனைப்பெற்றமலைப்பெண்கேட்டுத்
தோடாண்டகாதுடையதோன்றலைவினவுகின்றாள். (கக)

பன்னகத்தைப்பொற்பூணுப்பகட்டதளைப்பூண்டோய்நீ
சொன்னவக்கம்பூதியென்புதொட்டவரேபாடாண்டர்
என்னவெற்குரைத்தியிமிவ்வேதமுளவென்றிகழும்
அன்னவைகணின்மேனியண்ணியவாசொற்றியென்றாள். (கஉ)

வேகமுறுதானவருநாமிறையெனுவுறுதிமேவியதனுன்
மாகமுறுவோரிலவர்மாளவரிதாயவயமல்கினரரோ
மோகமுறநீபரனென்றே்றுதிமறநூல்கடமைமுன்னிமுதலில்
ஆகமுரைத்தணிதியத்தியதள்பூதிசிரமக்கமுடனே. (உஉ)

என்னையுறவத்துவலன்வத்துவலனென்றுசிலவிட்டிமுனிகள்
பன்னிவரவுன்னிவரபாடம்வரவேபுரிதிபாசமிலனுய்

கின்னேனிஜறயாகவுளாதாமதபுராணவகைகின் றுகிலவப்
பன்னுதிபாடண்டபலவேடமுடனேயினிதுபக்கமுடனே. (உரு)

இப்படிப்பட்ட செய்யுள்களெல்லாம் இவர்க்குப் பிரமாணந் தானு? அத்வைதிகளை வெல்லும்பொருட்டு அத்வைத விரோதமான செய்யுள்களை இவர் பக்ஷத்தார் காண்பித்தால், இவர் பக்ஷத்தார்க்கு விரோதமான செய்யுள்களை மற்றவர் இவர்க்கெடுத்துக் காண்பிக்க மாட்டார்களா? வைணவர்கள் அத்வைதிகளுக்கும் மாயாவாத இத்து விதிகளுக்கும் குழிவெட்டி வைத்திருக்கிறார்கள். அங்ஙனமாக இத்து விதிகள் தங்களுக்கு வெட்டிவைத்திருக்கும் குழியை மறைத்து, அத்துவிதிகளுக்கு வைத்திருக்கும் குழியைமாத்திரம் காட்டி அவர் களை அதில் தள்ளப்பார்க்கிறார்கள். இதனால் நியாயமான நேர்வழி யிற்சென்று உண்மையான சுருதி ஸ்மிருதி புராணுதிகளைப் பிரமாண மாகக் கொண்டு வாதஞ்செய்ய இவர்களா லாகாதென்றும், திருட்டு வழியிற் புகுந்து (முன்பு தம்மால் கண்டிக்கப்பட்ட) பொய்ப் பிரமா ணங்களைக்கொண்டு வாதஞ்செய்வதிவிவர்கள் வெகுசூரர்களென்றும் ஏற்படுகின்றன. அத்வைத விரோதமாகப் பத்மபுராணங் கூறுதென்ப தற்குச் சாக்ஷி: அதே பத்மபுராணததில் பரமசிவன் இராமபிரானுக் குபதேசித்த அத்வைத சிவகீதையேயாம். ஷை சிவ்கீதை (1) பத்தி யோகம் (சூதரிஷிசம்வாதம்,) (2) சாங்கியயோகம், (3) விரஜாதீக்ஷை யோகம், (4) சிவப்பிராதுர்பாவம், (5) இராமசாஸ்திரப் பிராப்தி, (6) விபூதிவிஸ்தரயோகம், (7) விசுவரூப சந்தர்சனயோகம், (8) வைரா க்கிய யோகம், (9) தேகசொரூப தகனம், (10) ஜீவசொரூபதகனம், (11) உபாசனு மகாத்மியம், (12) உபாசனுவிதி, (13) மோக்ஷயோகம், (14) பஞ்சகோசவுபாசனே, (15) பத்தியோகம் (சிவராகவசம்வாதம்) (16) மோக்ஷயோகம் (சிவராகவசம்வாதம்) ஆகிய பதினுறு அத்தி யாயங்களையுடையது. இது சுத்த அத்வைதமென யாவருமறிவார்கள். கீதைகள்யாவும் அத்வைதமென இவரே கூறியிருப்பதாய் முன்னர்க் காட்டியுள்ளோம். பத்மபுராணத்துள்ள சிவகீதை அத்வைதம் என்ப தற்குச் சில சுலோகங்கள் காட்டுகின்றோம்.

சிவகீதை 13-வது மோக்ஷயோகம்.

எவன் சாந்திமுதலியவைகளோடு கூடினவனுய், என்னை (பரமசிவனை) ஆத்துமத்தினுலே பார்க்கிருனே, அவன், பரஞ்சோதியாயும் அத்வைதமாயு மிருக்கிற ப்ரம்மந்தான். (அ)

ஷை 10-வது ஜீவசோரூப நிரூபணம்.

சொப்பனத்தில் மூவுலகமும் எப்படிக் காணப்படுகின்றனவோ, அப்ப டியே யென்னிடத்தில் (பரமசிவனிடத்தில்) எல்லாவுலகமும் காணப்படுகின் றன; இலயமடைகின்றன. (14)

நானுவித அவித்தையோடு கூடி ஜீவபாவத்தில் வசிக்கிறேன். (15)

ஞானமயமாயிராநின்ற சைதன்னியப் பிரதிபிம்பனே வியாவகாரிக ஜீவனும் க்ஷேத்திரக்கிய புருஷனுமாம். (17)

இந்தச் சுலோகங்களினால் அத்வைதசித்தாந்தம் நிலைத்துப் பூர்வ பக்ஷியார்காட்டிய பொய்ச் சுலோகங்கள் பொய்த்துப்போயின. பாத்ம புராணத்தில் சிவகீதைவாயிலாக இராமபிரானுக்குப் பரமசிவன் அத்வைதோபதேசஞ் செய்திருக்கவும், இதுவனாயில் யாமும் மற்றவரும் பிரமாணமாகக் காட்டியபடி சுருதி ஸ்மிருதி புராண இதிகாச ஆகம முதலிய யாவும் அத்வைதமே சொல்லவும், அதனோடு யுக்திஅநுபவங்களு மொத்துப்போகவும் இவ்வளவுக்கும் விரோதமாக நான்குதப்புச்சுலோகங்களை யெடுத்துக் காண்பித்தால் செல்லுமா? அத்வைதம் நிரம்பியுள்ள பத்மபுராணத்திலும் அத்வைத விரோதமாகச் சுலோகமிருக்குமா? பத்மபுராணத்தில் அத்வைத விரோதமாகச் சுலோகமுள்ளதெனச் சொல்வது தேவார திருவாசகங்களில் ஏசுக்கிறிஸ்து கடவுளெனச் சொல்லுவதுபோலாம். பரமசிவன் அத்வைதம் பொய்யெனவும், துவைதமே மெய்யெனவும் நானே அதைக் கலியுகத்திற் சொன்னேனெனவும் சொல்வது நிஜமானால் கலியுகத்திற்குமுன் அத்வைத மில்லையென்று சொல்லவேண்டும். அங்ஙனமாயின் துவாபரயுகத்தில் வியாசரால் சொல்லப்பட்ட பத்மபுராணத்தில் திரேதா யுகத்தில் இராமருக்குப் பரமசிவனுபதேசித்த அத்வைத சிவகீதை யெப்படியிருக்கக்கூடும்? மற்றப் புராணங்களிலும் நூற்றுக்கணக்கான அத்வைத கீதைகள் இருப்பதற்குக் காரணமென்ன? அநாதியான வேதவேதாங்களெல்லாம் அத்வைதமயமாயும் துவிதநாசமாயு மிருப்பானேன்?

புராணங்கள் வேதார்த்தங்களை விளக்கியிருந்தாலும், வேதப் பொருளைப் புராணங்களா லுணரவேண்டுமெனப் பிரமாணமிருந்தாலும் வேத விரோதிகளாயுள்ளார், தமக்குச் சாதகமாகப் புராணங்களையும் சுலோகங்களையும் கள்ளத்தனமாய்ச் சிருட்டித்து நுழைக்கக் கூடுமென்று கருதியே, வேதவிரோதங் காணுமிடத்து, புராணம் பிரமாணமல்லவென ஆன்றோர் கூறியிருக்கின்றனர். அங்ஙனமே வேத விரோதத்தோடு ஸ்மிருதி, மற்றப் புராணங்கள்முதலிய சத்பிரமாணங்களான பதினான்கு வித்தைகட்கும் விரோதமாயிருப்பதால் ஷை. பாத்மோத்தரம் அப்பிரமாணமேயாமென்க.

காரியவுருத்திரமூர்த்தி.

அரக்கோண விரபத்திரமூர்த்தியார் நாகை நீலலோசனியை விட்டு, விவேகதிவாகரன் என்னும் நவீன பத்திரிகையொன்றிற் புகுந்து பேசத்தொடங்கி, "ஈசாநஸ்ஸர்வவித்யானாம்" என்கிற சுருதி சர்வ வித்தைகளாலும் வேத்யராயுள்ளவர் ஈசானர் என்று தெரிவிக்கின்றது. இவ்வீசானநாமம், காரியப்பிரமத்துக் குரியதென்பவர் இவர் முன்னோர். காரியப்பிரமமோ இவரது மதத்தில் கற்பிதமாம். கற்பிதப்பிரமத்தை வேதம் பிரதிபாதித்தல் கூடாதாகையாலும், அவ்வீசான நாமம் சிவபரஞ்சுடருக் குரியதென்பதும், அது எந்த

வுபாதியையு மாசிரயியாத பரதத்வ வாசகமென்பதும், அதுவே 'த்யாயீதேசாநம்' என்கிற சுருதியால் முமூட்சுக்கள் சேவிக்கத்தக்க அமிர்தஸ்வரூபமா யுள்ளதென்பதுமாகிய வுணர்ச்சியுடையராய்ச் சைவசித்தாந்திகளே பிரவர்த்திக்கின்றமையாலும், நமது பூர்வபட்சியார் இனித் தம்முடையவெனக் கையாளவந்த பதினாலுவித்தைகளையு மொதுக்கிவாழ்வதே மரபாம்." என்று வரைகிறார்.

வெகு பிரயாசைப்பட்டுச் சுருதிவாக்கியத்தைக் காண்பித்தும், அதில் காரியஞ் சத்தெனச் சொல்லியிருப்பதாய்க் காட்டவில்லையே. இதுவரையில பதினான்கு வித்தைகளுளவென்றும், அவைகட்குக் கட்டுப்பட்டுப் பேசவேண்டுமென்றும் கூறினரில்லை. அப்படிக் கூறுவிடில் வேதபாஹிய அநாரியத்தன்மை யுண்டாமெனப் பயந்து அங்ஙனம் கூறினார்போலும். நாம் காரியஞ்சத்தன்று, சத்துப்போலியெனச் சங்கராசாரியார் அவதாரமகிமை தத்துவவாதம் முதலிய நூல்களில சுருதி யுக்தி அநுபவங்களுடன்காட்ட, அதற்கேதும் பதில் கூறாது, காரியஞ் சத்தெனக் கூறாத வாக்கியமொன்றைக் கூறுவதில் பயன் யாது? ஈசானநாமத்தைக் காரியப்பிரமமென அத்வைதிகள் கொள்வதாய்க் கூறுகின்றனர். அஃதுண்மைதான். ஆனால் அவர்கள் தாங்களாகக் கூறவில்லை. சுருதிமுதலிய பிரமாணங்களிருந்தே கூறுகின்றனர். அதுமாத்திரமா? சத்தல்லவென்றுங் கூறுகின்றனர். இதற்குப் பிரமாணங்களாவன:—

நாரதபரிவிராஜகோபநிஷத்.

சத்துவகுணத்தினால் விஷ்ணுவாயும், ரஜோகுணத்தினால் பிரமாவாயும், தமோகுணத்தினால் உருத்திரராயும் உபாதிகளுடன் கூடியவர்களாயிருக்கிற அவர்கள், அவஸ்தாபேதத்தை யடைந்து பரமாத்தும காரியமாகிய சிருட்டி முதலியவை செய்தாலும் சத்துவமுதலிய வுபாதியற்றபூரணாநந்த அத்துவதீய பிர்ம்ம சுவரூபமா யறியப் படுகிறதில்லை.

மைத்திராயண்ணியுபநிஷத்.

இந்த ஆத்துமா (பிரமம்)வினுடைய தாமசாமிசம் ருத்திரன்.

மகாநாராயணோபநிஷத்.

காரியகாரண (மாயைஅவித்தை)உபாதியினாலே ஜீவேசுவரபேதம் காணப்படுகிறது. காரணோபாதியுடையவன் ஈசுவரன்; காரியோபாதியுடையவன் ஜீவன்.

அத்துவயதாரகோபநிஷத்.

ஜீவேசுரர்கள் மாயா சொரூபிக ளென்றறிந்து சகல விசேஷத்தையும் ஈதல்ல ஈதல்ல வென விலக்கி, எது மிஞ்சுகிறதோ அது அத்துவயப்பிரமம்.

ருத்திரஇருதயஉபநிஷத்.

ஆகாசத்திலே கடாகாசம் மடாகாசம் என எப்படிப் பேதங்கள் கற்பிக்கப் பட்டிருக்கிறனவோ அப்படியே பரப்பிரமத்தினிடத்தில் ஜீவேசுரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சூதசங்கிதை பரசிவசோருப விசாரம்.

மறைமுதல் தனக்கு நாமரூபங்கள் மருவுதலில்லையே யெனினும், கறை யறவிளங்கு மாயையினாலே கற்பிக்கப்பட்டனவாகும், முறைநயச் சிவன் மாதேவன் முற்பெயர்களுருத்திரனுமங்களாகு, மறைபரம்பிரம முதற்பெயர் பரதத்துவஅவிர்வாசகமாமால். (கசு)

ஷை பரமவிஞ்ஞானம்.

முன்னுமவித்தையால் பசுபேதமு மொய்வலிய மாயையால், பன்னுபர தத்துவபேதமுங் கற்பிக்கப்பட்டது. (சு)

கற்பிதத்தை வேதம் பிரதிபாதிப்பது கூடாதென்கிறார். கற்பி தத்தைக் கற்பிதமென வேதம்கூறுவிடில் பின்னை யெது கூறுமோ? கற்பிதத்தைக் கற்பிதமெனக் கூறுவிடில் யதார்த்தம் விளங்குவதெங் ஙனம்? மற்றமதஸ்தர்களுடைய மதப்புத்தகம் கற்பிதத்தை யதார் த்தமெனக் கூறுவது. வேதமோ தயை தாக்ஷணியமின்றி எது கற் பிதமோ அதைக்கற்பிதமென்றும், எது யதார்த்தமோ அதை யதார் த்தமென்றுங் கூறுவது. அதுபற்றியே வேதத்துக்கு மகிமை அதிக மாமென்க.

மீண்டும் இவரே "உருத்திரமூர்த்தியே பரமாத்மா என்று போதித்தசுருதி மீண்டும் பரமாத்மாவாகான் என்று போதிக்கின்றது. முதற்போந்த வுருத்திரர் துரியமூர்த்தியும், பின்னர்ப்போந்த வுருத் திரர் குணமூர்த்தியுமாக அறியும் வைதிகசீலர்களோடு பழகாதவரா கையால், இவ்வாபாசகர் வீணுசங்கையை யெழுப்பினாரென்க" என் கிறார். இதனாலேயே நாம் கூறிய வுண்மை யினிது விளங்குகின்ற தென்க. உருத்திரமூர்த்தி ஒருபோதும் துரியசிவனாவதில்லை. உருத் திரமூர்த்தி மூன்றாவதுமூர்த்தியும் காரியப்பிரமமுமாம்; துரியசிவமூர் த்தி நாலாவது மூர்த்தியும் காரணப் பிரமமுமாம். சிலவிடங்களில் காரியப்பிரம உருத்திரமூர்த்தியை அதிஷ்டான துரியமூர்த்தியோடு ஒற்றுமைப்படுத்திச்சொல்லும். அதனுளவு தெரியாமல்மருள்கின்றார். காரியப்பிரமமும், மூன்றாவதுமான வுருத்திரமூர்த்தியைக் குணமூர் த்தியென்று சொல்வதால நாலாவதான துரியசிவத்தை நிர்க்குண மூர்த்தியென வொப்புக்கொள்கின்றவ ராகின்றார். இவ்விரண்டில் இரண்டு முண்மையா? ஒன்று உண்மையும் ஒன்றுபொய்யுமா? இது விஷயமாகப் 'பதி பசு பாச வாத' த்தில் 55 முதல் 63-வது பக்கம் வரையில் "சகுணநிர்க்குணவாதம்," "அரூபநிர்க்குணம் சரூபசகு ணம்" என்னும மகுடங்களில் விரிவாய்ப்பேசி இவரது பொய்ச்சித் தாந்தத்தை மறுத்திருக்கின்றமையால் இவ்விடத்தில் வீணுகப்பேச வேண்டிய ஆவசியகமின்றென்க.

தாயுமானவர் அத்வைதியேயெனப் பின்னும் ஸ்தாபித்தல்.

தாயுமானார் இவரது மாயாவாத துவிதசித்தாந்தியெனப் பின் னும் சிறிது பேசலுற்றார். அதுவு பாபாசமென விளக்குவாம்.

"தாயுமானவர் மடத்தில் வேதாந்தசாஸ்திரம் படிக்கிறார்களென்றும், திருவாவடுதுறைமடத்தில் தாயுமானவர்நூலைப்படிக்கிறதில்லையென்றும், அதனால் தாயுமானவர் வேதாந்தியேயன்றிச் சைவராயினதில்லையென்றும் ஒருமுடிவுகண்டு கூறினார். இவரினி நமது தேசத்தார் அலலா பண்டிகைகளையக் கொண்டாடுகிறார்களென்றும், சைவர்கள் தேவாரபாராயணஞ் செய்வதில்லையென்றுஞ் சாட்சிகாட்டிவெளிவருவார்போலும். காலகதியால் இப்போது சற்சமய வளங்குறைந்து மடங்கள் தடுமாறியிருப்பதை யறியாதார் யாவர்? திருவாவடுதுறை மடத்தில் கைவல்யம்படித்த தம்பிரான் சுவாமிகளிருந்ததிவரறியார். ஷை மடாலயத்துக்கு ஸ்ரீபண்டாரச் சந்நிதிகள் ஓதுவார் மூர்த்திகள் தாளந்தட்டிக்கொண்டு திருவாய்மொழி, பின்னே யோதிக்கொண்டு வரப் பெருமாள்கோவில்களுக்குப்போய்ச் சிரசில் சடகோபந்தாங்கி வரும் சம்பிரதாயமு மிவருக்குத் தெரியாது. இவ்வசம்பிரதாயங்களையெல்லாம் ஓராதரவாகக்கொண்டு திருவாவடுதுறை மடாலயத்தை வேதாந்தமடம் வைஷ்ணவமடம் என்று யாவரோ சாதிக்கவல்லார்கள்?" என்றார். இதனால் தாயுமானவர் மடத்தில் வேதாந்தநூல் வாசிக்கின்றார்களென்பதையும், திருவாவடுதுறைமடத்தார் தாயுமானவர் நூலை வாசிக்கின்றதில்லை யென்பதையும் இவரே யொத்துக்கொள்ளுகின்றவராகிறார். ஆனால் இதற்குக் காரணம் 'காலகதியால் இப்போது சற்சமயவளங்குறைந்து மடங்கள் தடுமாறி யிருக்கின்ற'தென்கிறார். இவர் சொல்வதுபோல் வைத்துக்கொண்டு காலகதியால் சற்சமய வளங்குன்றினால் இல்லாதசங்கதியைச் சொல்லவேண்டுமோ? இக்காலத்தில் சற்சமய வளங்குன்றினால் முற்காலத்திலு மிக்காலத்திலும் தாயுமானவர் மடத்தில் வேதாந்தநூல் வாசித்துக்கொண்டிருப்பதைமாற்றி, முற்காலத்தில் வாசிப்பதில்லை, இக்காலத்தில்மாத்திரம் வாசிக்கிறார்களென்றும், திருவாவடுதுறை மடத்தார் தாயுமானவர் நூலை எப்போதும் வாசியாதிருக்க அதைமாற்றி முற்காலத்தில் மாத்திரம் வாசித்தார்கள், இக்காலத்தில் வாசிப்பதில்லையென்றுஞ் சொல்லவேண்டுமோ? அப்படியானால் தாயுமானவர் மடத்தார் இப்போது சித்தாந்தநூல்கள் வாசிக்கிறார்களென்று சொல்லும்பக்ஷத்தில் முற்காலத்தில் வாசிக்கவில்லையென்று சொல்ல நேரிடுமே. அப்படிச் சொல்லும்பக்ஷத்திலும் தாயுமானவர் துவிதசித்தாந்தி யல்லாமற்போவாரே. திருவாவடுதுறை மடத்தில் இப்போது கிறிஸ்தவரது பைபில் படிப்பதில்லை. இதனால் முற்காலத்தில் படித்தார்களென்று சொல்லவேண்டுமே. இக்காலத்தில் சற்சமய வளங்குன்றி யிருப்பதால் மனதுக்குத்தோன்றியபடியும் தம் சித்தாந்தத்தை ஸ்தாபிக்க வேண்டியும் இல்லதை யுள்ளதாகவும் உள்ளதை யில்லதாகவும்மாற்றிச் சொல்லவேண்டுமோ? உலகில் ஒருவிதத்தில் மாறுத லுண்டானால் அதைக்கொண்டு நமக்குச் சாதகமாக, வேண்டியவற்றை மாற்றிக்கொள்ளலாமோ? இதனால் தாயுமானவர் மடத்தில் முற்காலத்தி

லும் இக்காலத்திலும் வேதாந்தநூல்கள் வாசிக்கின்றார்களென்றும், திருவாவடுதுறை மடத்தார் முன்னும் இப்போதும் தாயுமானவர் நூலை வாசிக்கின்றதில்லையென்றும் தீர்மானமாகின்றன.

கைவல்லியத் தம்பிரான் மடத்துக்குள் பிரவேசியாதபோது கைவல்லியத்தை யுருப்போட்டிருக்கின்றார். அதுகாரணமாக அவனைப் பரிகாசமாக அப்பெயரால் கூப்பிடுவார்கள். அவர், மடத்திற் சென்று மடத்தின் விதிப்படி கைவல்லியம் வாசித்ததில்லை. மடத்தாரும் அவருக்கு அப்பெயர் கொடுக்கவில்லை. அந்தத்தம்பிரான் கைவல்லியத்தை யிப்போது இகழ்கின்றாரேயன்றிப் புகழ்வதில்லை. அந்தத் தம்பிரான் முற்காலத்திலிருந்தவரன்று. இப்போதிருபபவரேயாம். இப்போது சற்சமய வளங்குன்றியதால் நன்மையெல்லாம் தீமையாகவேண்டும். அப்படியானால் கைவல்லியத்தை முன்பு படித்து இப்போது அதை அவர் வெறுப்பதால் கைவல்லியம் நல்லதென்றும், அதை வெறுப்பது தீமையென்றும் சொல்லவேண்டும். இது போலவே ஓதுவாமூர்த்திகள் தாளந்தட்டிக்கொண்டு விஷ்ணுவே பரத்துவமென்றும், வைகுந்தமே மோக்ஷஸ்தானமென்றும், விஷ்ணு புராண பாஞ்சராத்திரங்களே மோக்ஷநூல்களென்றும், வேதத்தின் படி விஷ்ணுவே கடவுளென்றும் சொலவதோடு, விஷ்ணுவையும் அவரடியாரையும் வணங்கினுற்றான் மோக்ஷங் கிடைக்குமென்றும், சிவன் பசுவேயன்றிக் கடவுளலலவென்றும், கைலாயம் மோக்ஷஸ்தானமல்லவென்றும, அஷ்டாக்ஷர மந்திரமே ஜபிக்கவேண்டுமெனறும் இன்னும் இவைபோலப் பலசொல்லும் திருவாய்மொழியைப் பின்னே யோதிக்கொண்டுவர, பண்டாரசந்நிதிகள், விஷ்ணுகோவிலில்சென்று, ஷை திருவாய்மொழியின் கருத்துப்படி விஷ்ணுவே பரத்துவம், சிவன் அபரத்துவமெனக்கொண்டு விஷ்ணுவை வணங்கியது நன்மையும், அதைவிட்டு அதற்குமாறான சித்தாந்தத்தை இப்போதநுசரித்துச் சிவன் கோவிலுக்குப்போய் விஷ்ணு அபரத்துவம், சிவனே பரத்துவமெனச் சொல்லும் தேவார திருவாசகங்களைப் பினனே யோதிவரச் சிவனை வணங்குவது தீமையுமாம். சற்சமயம் வளம்பெற்ற காலத்தில் திருவாவடுதுறை மடத்தார் வைணவராயிருந்து, வளங்குன்றிய காலத்தில் சைவரானார்கள்போலும். இவ்வளவு பேசியும் தருமபுர மடத்தாரும் திருவண்ணாமலை மடத்தாரும் தாயுமானவர் நூல்வாசிக்கின்றார்களென்று சொன்னாரில்லை.

இதன்பேரில் இன்னொருவிசேஷங் கொண்டுவந்திருக்கிறார். அது "அவரது (தாயுமானவரது) மாணாக்கர் (அருளையர்) செய்த அருள் வாக்கிய அகவலில் (1) சைவஞ் சிவனுடன் சம்பந்தமென்பது மெய்வளர்ஞானம் விளக்குமென்றிசைத்தோன், (2) கதிர்விழியொளி யுறக் கலத்தல் சித்தாந்த, விதிமுறையாமென விளக்கிய மேலோன், (3) முடிவினி லாகம முறைமையி னுண்மையை, யடியரைக்குறித்துரைத்தருளியவண்ணல்" என்று கூறியிருக்குஞ் சைவசித்தாந்த நுட்ப

முணர்ந்தவர்கள், இப்பாநுமூர்த்தியினது புலம்பலை யெள்ளளவே னும் மதிப்பார்களா?" என்பதாம். அருளையரது வாக்கியத்தை மூன்று இலக்கமிட்டுக் காட்டினோம். அதை அனுசரித்தே அதற்குப் பதிலுங் கூறுவாம். ஷை வாக்கியங்களில் (2) இவரது கொள்கை யொன்றனை வாளா கூறியிருப்பதனாலேயே தாயுமானவரைத் துவிதசித் தாந்தியாக்கப் பார்க்கின்றார், (1) இந்த வாக்கியத்தில் பொதுவாய்ச் சொல்லியிருக்கிறார். (2) இந்தவாக்கியத்தில் (மற்றொருஇடத்தில் "அது நானெனவே அரற்றிடு மனுபவஞ் சதுர்வேதாந்தத்தன்மை யென்றுரைத்தோன்" என அத்வைத சித்தாந்தஞ்சொன்னதுபோல) இவருடைய கொள்கையையுஞ் சொல்லியிருக்கின்றார். அவ்வளவே யன்றி அதுதான் தமது சித்தாந்தமெனச் சொன்னாரில்லை. (3) இந்த வாக்கியத்தினால் ஆகமத்தி னுண்மை வேறிருக்கிறதாய் ஏற்படுகின்றது. இரண்டாவது வாக்கியம் தமதுகொள்கை யல்லாது போயினும் அது உண்மையா யிருக்கும்பக்ஷத்தில் மூன்றாவது வாக்கி யத்தில் முடிவினில் ஆகம வுண்மை அடியவரைக்குறித்து அருளிய தாகச் சொல்லவேண்டுவதில்லை. இதனால் இரண்டாவது வாக்கியம் பூர்வபக்ஷமெனத் துலங்குகின்றது. ஆகமமுடிவான சிவஞானபோத த்தின் உண்மையானவுரை அத்வைதமாய் நேரேவிளங்க, அதற்குத் துவிதபக்ஷமாகப் பொய்யுரைசெய்து துவிதிகள் பேசுவதால் அதை மறுக்கும்பொருட்டே இரண்டாவது வாக்கியத்தை முன்னரெடு துக்கூறி, மூன்றாவது வாக்கியத்தால் உண்மையை விளக்கினார். [illegible] னல் முதல்வாக்கியமும் மூன்றாவதுவாக்கியமும் உபக்கிரம உபசங் காரமாய் இடைநின்ற வாக்கியம் பூர்வபக்ஷமாய்க் கழிகின்றதென்க. கதிர்விழியொளியுறக் கலத்தலாகிய துவிதசித்தாந்தமே தமது சித் தாந்தமாகச் சொல்லாவிடினும் இடையில் அப்படிப்பட்ட வாக்கியம் ஒன்று சொல்லிவிட்டதினாலேயே அவரைத் துவிதியெனச் சொல் லும்பக்ஷத்தில் 'அது நானெனவே யரற்றிடுமனுபவஞ் சதுர்வேதாந்த த்தன்மையென் றுரைத்தோன்' என வேதாந்தமான அத்வைதத் தைச் சொல்லவேண்டிய ஆவசியகமில்லையே. அப்படி அத்வைதத் தைச் சொல்லி யிருப்பதனாலும், கதிர்விழியொளியென்னும் வாக்கி யத்திற்குப் பின் ஆகம முடிவுரையென வேறே கூறியிருப்பதனாலும் அருளையர் இவரது சித்தாந்தமாகச் சொன்னாரென்பது கனவேயாம். பின்னை இவரது துவிதத்தை மறுப்பதற்கே அவ்வாறு கூறினாரென்க. கூறினமையின் இவரது சித்தாந்தம் பூர்வபக்ஷமாய்க் கழிய அடியவரை க்குறித்துக் கூறிய ஆகம முடிவுரையி னுண்மையே சித்தாந்தமா யிற்று. இந்தச் சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றேயாய் ஒருபொருள் கொண்டு அதாவது அத்வைதப்பொருள்கொண்டு முடிவதாமென்க.

நனைத்தவஸ்திர திருஷ்டாந்தம்.

இதுவரையில் பிரம பரிபூரணத்துக்காகச் சொல்லிய திருட்டா ந்தங்கள் யாவும் பயனற்றுப்போயினவன்றா? அதற்குமேல் வெகு பிர

யாசைப்பட்டு ஒரு திருட்டாந்தங் கண்டுபிடித்தார். அது வெகு அருமையான திருட்டாந்தம். இதுவரையில் உலகந் தோன்றியதுமுதல் எவருங் கண்டு பிடிக்காதது. அஃது யாதெனின் "ஒரு வஸ்திரத்தை நீரில் நனைத்து வஸ்திரமிருந்த விடத்தில் நீரும், நீரிருந்தவிடத்தில் வஸ்திரமு மிருக்கிறதாவென்று இவர் யோசிக்கட்டும்." என்பதே. இதை யெழுதியவுடனே இதுவரையில் இவரது பூர்வீகரும் கண்டு பிடிக்காத திருட்டாந்தத்தைக் கண்டுபிடித்தோமெனப் பூர்வபக்ஷியார் வெகு குதூகலகப்பட்டு ஒருபுஜம் இருபுஜங்கொண்டிருப்பார். ஆனால் இவ்வளவு சந்தோஷமும் இவ்வளவு துக்கமாய் முடியுமே, இயற்கையாயுள்ள ஒரு புஜமும் அரைபுஜமாய்விடுமே என வருந்துகின்றோம். இவரெடுத்துக்காட்டிய திருட்டாந்தத்தால் இவர் சுத்த நாட்டுப்புரத்தாரெனத் தெரிகிறது. கல்விச்சாலையிற் படிக்கும் சிறுவர்க்கிருக்கும் பதார்த்த சோதனைகூட இவர்க் கில்லையென்று தெரிகிறது. வஸ்திரம் ஒருபொருள், நீர் ஒருபொருள். வஸ்திரம் பல அணுக்கூட்டப்பொருள்; நீரும் அங்ஙனமேயாம். இவ்விருவித அணுக்கூட்டங்களும் ஒன்றாய்க் கூடுங்கால் பின்னமாகக் கூடுமேயன்றி அபின்னமாகக் கூடா. அணு, முன்பின்இடைமுதலிய வுறுப்புகளை யுடையது. அப்படிப்பட்ட பல அணுக்கள் ஒன்றோடொன்று கூடுங்கால் ஒரு பக்கங்கூடி மற்றப் பக்கங்கூடா. இரண்டு அணு ஒன்றுகூடுமாயின் [illegible]று மற்றொன்றுக்கு மேல்கீழாகவாயினும் பக்கமாகவாயினும் கூடு[illegible]ன்றி ஒரு அணுஇருக்கிறவிடத்தில் மற்றொருஅணு இரா. வஸ்திர அணுககூட்டத்தில் நீர் அணுக்கூட்டம் வந்து சேருமாயின் இரண்டும் வேறுவேறுஇடத்தி லிருக்குமேயன்றி ஒரு இடத்தி லிரா. அளத்தல் கருவியானவொருபடியில் வஸ்திரத்தைச் சந்தின்றி நிறைய அடைத்துவிட்டு அதில் ஒருபடி நீரைவார்த்தால் கொள்ளுமா? இவர் சொல்லுகிறபடியானால் கொள்ளவேண்டுமே. அப்படிக் கொள்ளாமைக்குக் காரணமென்ன? ஒருஇடத்தி லிருபொரு ளிராவென்னும் நியாயப்பிரமாணமல்லவா? ஷை.படியில் பாதிநீரும், பாதிவஸ்திரமுமானால் சரிப்பட்டுப் போகின்றதே. இதற்குக் காரணம் என்ன? இரு இடத்தில் இருபொரு ளிருக்கலாமென்னும் நியாயப் பிரமாணமன்றோ? இவர் சொல்லிய திருட்டாந்தத்தில் வஸ்திரத்தில் நீர் அடங்கியிருப்பதற்கு யாது காரணமெனின் வஸ்திரத்தின் நூலானது சந்தான இடத்தை அதிகமாய்க் கொண்டிருப்பதால் அந்தவிடத்தில் நீர் பின்னமாய்ப் போய்த் தங்குகின்றது. பொன்குண்டை நீரில் தோய்த்தால் அவ்வாறு நீர் போய்த் தங்காது. இதற்குக் காரணம் நூல்போல் பொன்குண்டு சந்தைக் கொண்டிருக்கவில்லை. ஒருபொருளில் இடமிருந்தால் அதில் மற்றொரு பொருள் போய்த் தங்கலாம். ஒருபொருளிவிடமிருந்து அதில மற்றொரு பொருள் சென்று தங்கினால் அல்லது கூடினால் அப்போது ஒரு இடத்தில் இருபொருள் இருப்பதாய்க் கூறவொண்ணாது. இதன்படியே ஸ்திரத்தில் நீர் இருத்தல் ஒருஇடத்தி

விருபொருளிருத்தலன்று; இரு இடத்தி விருபொருளிருத்தலேயாம். பிச்சாங்குழலில் நீர் நிறையவார்த்து, அதன் தள்ளுதல் கருவியால் பாதிவரையில் நீர் வெளியில் போகும்படி தள்ளி, பின்பு அடியிலுள்ள சிறுதுவாரத்தை யடைத்துவிட்டு, பிறகு தள்ளுதல் கருவியால் எவ்வளவு தள்ளினாலும் (அக்கருவி வலிவுள்ள இரும்பாயினும்) ஒரு மயிரிழைகூடப் பாதிக்குமேல் தள்ளமுடியாது. நீருள்ள இடத்தில் காற்றிருக்குமானால் பின்னுங் காற்பங்கு அதிகமாய்த் தள்ளக்கூடும், அப்போது வாயு காற்பங்கும், தள்ளுதல் கருவி முக்காற்பங்குமாகும். காற்று அரைப்பங்கில் விரிந்திருக்கும்; கால்பங்கில் நெருங்கியிருக்கும். நீரும் காற்றும் எவ்வளவு லேசாயிருந்தாலும் இரும்பு எவ்வளவு கடினமாயிருந்தாலும் ஒருபொருளினிடத்தை மற்றொரு பொருள் அபகரிக்கமாட்டாது. ஒருபொருளில் இருக்கும் சந்தில் மற்றொருபொருள் இருத்தலையே யுவமானமாகக்கொண்டு, பிரமத்தையும் உலகையும் உவமேயப்படுத்தினால் பிரமத்தில் பல சந்துகளிருப்பனவாயும் அவற்றில் சேதனமசேதனவுலகு இருப்பதாயுமுடிந்து, பிரமம் பலசந்துகளையுடைய அபரிபூரணப்பொருளென்று சொல்லவரும்.

இரும்புத்துண்டும் நெருப்புமான திருஷ்டாந்தம்.

மற்றொரு உவமானந் தொடுக்கின்றார். அது "ஒரு இரும்புத் துண்டை நெருப்பிற் பழுக்கக் காய்ச்சி இரும்பு இருந்தவிடத்தில் நெருப்பும், நெருப்பு இருந்தவிடத்தில் இரும்பு மிருக்கிறதாவென்று இவர் கூர்ந்துபார்க்கட்டும்" என்பது. இதன் மறுப்புப் 'பதி பசு பாச வாத' த்தின் 36-வது பக்கத்தில் "கட்டையில் நெருப்பு வியாபித்த வுபமான" த்தை வாசித்துப்பார்த்துச் சமாதானப்படுவாராக. தற்கால ஜடசாஸ்திரப் (Science) பிரகாரமாயின் "நெருப்போ ஒருபொருளே யன்று; அது பொருள் மாறுபடுகையில் பெறுகின்ற ஒருவகை நிலையாம்" என்ற சித்தாந்தத்தை யுணர்ந்து, இரும்புத்துண்டிலுள்ள நெருப்புப் பொருளன்று, அஃதோர் குணமாமென் றறியக்கடவர். குணமாமேல் இவரெடுத்த வுவமானம் அவலமாய்ப் போமென்க.

பிரமம் உருவம் அருவமாதல்.

இவர் தூத்துக்குடி சைவப் பிரகாச சமாஜத்தார்க் கெழுதிக் கொடுத்த சிறுபத்திரத்தில் உருவமற்ற பிரமம் பிரதிபலித்தல் எங்ஙனங் கூடுமெனக் கேட்டதற்குச் சமாதானஞ் சொன்னதோடு, உருவமற்ற பிரமம் பன்றியாய் வந்ததும் தக்ஷிணாமூர்த்தி முதலிய வுருங்களைப் பெற்றதும் யாங்ஙனமெனக் கேட்டிருக்கின்றோம். இம்மாதிரிக் கேள்வி பாநுமூர்த்தியாருங் கேட்டாராம். அதற்காக இவர் கொடுக்கும் விடையிது:—"பிரமம் உருவமாக வருதல் கூடாதோவெனின், எம்முடைய சைவ சித்தாந்தத்தில் பிரமத்துக்கு 'குறித்தது தொன்றாக மாட்டாக்குறைவிலனாதலானும்' என்று லட்சணங் கூறப்பட்டிருத்தலால், எம்ம சித்தாந்தப்படிக் கூடும். யாம் பிரமம் அருவ

மேயென்றுங் கூறுகிறோம். அல்லது உருவமே யென்றுங் கூறுகிறோம். அருவமாயும், உருவமாயும், உபயமாயும் அடியார்களை ரட்சித்தற்பொருட்டுத் தனது சத்தியிற்றிருமேனி கொள்வது சிவம் என்று வேதாகமங்கள் கூறும். இவ்வாறன்றிப் பாநுமூர்த்திகூறும் அருபவாதம் பயன் செய்யாதென்க.'' என்பது. அருவ முருவமாவது மாத்திரங் கூடும்போது அருவம் பிரதிபலித்தல் மாத்திர மேன்கூடாது? பிரதிபலித்தலுக்குச் சுருதிபுராண இதிகாசங்களை ஷை அத்வைத தூஷண பரிகாரத்தில் காட்டி யிருக்கின்றோம். அப்படியும் பிரதி பிம்பத்தைச் சித்தாந்தமாக வொப்புக்கொள்வதில்லை யென்றும் அது ஒரு அவசர பேதமென்றும் விவர்த்தவாதமே சித்தாந்தமென்றுங் காட்டி யிருக்கின்றோம். அதைக் கவனியாமல் பூர்வபக்ஷத்தைச் சித்தாந்தமெனக் கொண்டு பின்னும் பின்னும் வீண்வழக்காடுகின்றார். இது விஷயத்தைப்பற்றி 'அத்வைத தூஷணபரிகாரம்' 26-வது பக்கம் 27-வது பக்கங்களில் பார்த்தால் இவரது கவனியாமையும் மாறுபாடும் விளங்கும். இவர் பிரமம் அருவமேயென்றுங் கூறுகின்றாராம்; உருவமேயென்றுங் கூறுகின்றாராம். அப்படி மாறிடினும் பிரமத்துக்குக் குறைவு மில்லையாம். இவ்வாறு உபமானமாகப் பொருளில் வைத்துக் காண்பிப்பாரானால் இவரது துவித மாயா சித்தாந்தம் பறந்து, அத்வைத சித்தாந்தம் ஸ்தாபனையாய்விடும். எங்ஙனமெனின் காட்டுதும். அருவத்துக்கு உருவம் எதிர் மறைக்குணம். அங்ஙனமாக அருவம் உருவமாதலும் உருவம் அருவமாதலுங் கூடுமா? அருவம் பிரமம்; உருவம் அதிலிருந்து தோன்றியது. அருவத்தினின்றும் உருவக் தோன்றுகிறதானால் அருவங்கெட்டு உருவந் தோன்றுகிறதா? அருவங்கெடாது தோன்றுகிறதா? ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுவது தாயினிடத்துக் குழவிபோலா? பாலினிடத்துத் தயிர் போலா? மண்ணினிடத்துக் குடம்போலா? வித்தினிடத்து மரம்போலா? சூரியனிலிருந்து பிரதிபிம்ப சூரியன்போலா? நீரினின்றும் அலைபோலா? கயிற்றிலிருந்து அரவுபோலா? கானலிலிருந்து நீர்போலா? அறிவினின்றுஞ் சொப்பன வுலகுபோலா? என இப்படிப்பட்ட ஆக்ஷேபங்கள் பல செய்து சங்கராசாரியார் அவதார மகிமை, அத்வைததூஷண பரிகாரம் முதலிய நூல்களில் பேசி, காரணங்கெடாமல் காரியந் தோன்றுவது விவர்த்தவாதத்திலன்றி இவரது சற்காரிய வாதத்தி லாகாதென இவரது துவிதமதத்தைச் சுருதி முதலிய சற்பிரமாணங்களைக் கொண்டும், யுக்தி அநுபவங்களைக்கொண்டும் மறுத்து அத்வைத மதத்தைத் தாபித்திருக்க, இவ்விடத்தில் ஒரு நியாயமுங் காட்டாமல் அத்வைதத்திலிருந்து களவாடி அவர்கள் சொல்லுகிறதுபோல் பிரமங்கெடாது அருவாயும் உருவாயும் அருவுருவாயு மாகுமெனச் சொல்லித் துவிதக்கொடி போடப்பார்ப்பது செல்லுமா? 'அடியார்களை ரட்சித்தற்பொருட்டுத் தனது சத்தியிற் றிருமேனி கொள்வது சிவம்' என்கிறார். தனது

சத்தியென்றால் தாதான்மிய சிற்சத்தியா? பரிக்கிரக சடசத்தியா? இவர் "சிவ பாரம்யப்பிரதரிசினி" 60-வது பக்கத்தில் "சத்தியென்பது சூரியனில் வேறாகாத ஒளியைப்போல் பரமசிவனில் வேறாகாத தாதான்மிய சம்பந்தமுடைய தொன்றாம். மாயையென்பது சிற்சொரூபனாகிய சிவனில் வேறுபட்ட அசித்தாயிருப்ப தொருபொருளாம். ஆகவே, அசித்தாகிய மாயையில் சிவனுக்குத் திருமேனி கூறுதல் அடாது" என்றும், ஷ 15-வது பக்கத்தில் "சிவபெருமான் தமது சிற்சத்தியிற் றிருமேனிகொள்ளுந் தன்மை யுண்மையால்" என்றுங் கூறியிருப்பதால் தாதான்மிய சத்தியான சிற்சத்தியே பிரமத்துக்கு உருவமெனக் கூறுகின்றவரானார். சிவன் மாணிக்கவாசகர்க்கு மானிடவுருவங்கொண்டு வந்து ஞானோபதேசஞ் செய்தார்; பன்றிக்குட்டிகட்குப்பால்கொடுக்கப் பன்றியுருவெடுத்தார். ஷ இரண்டு உருவமும் மாமிசாதிவிகாரங்கொண்ட மாயா ஜடவுருக்களாகும்; சிவனது தாதான்மிய சத்தியோ ஜடமன்று, சித்தாகும். சித்து, ஜடவுருவங்கொண்டு வரும்போது பால்கெட்டுத் தயிராவதுபோல் ஞானங்கெட்டு அஞ்ஞானமாகத்தானேவேண்டும். ஷ மனிதவுருவமும், பன்றியுருவமும்காரியமாதலின் (காரியம் அழிவுபாடுடைய தென்றபடி) அன்றே அழிந்து போயிற்று. சித்து, சடமாகிறபோது சித்துக்கபின்னமான சிவனும் சடமாய்ப்போவார். சடம் அசத்தாவதால் சிவனும் அசத்தாய்ப்போவார். அசத்தென்பது இல்லையெனப் பொருள் படுதலால் சிவனே யில்லாமற்போய் அதுகாரணமாக இவர் நாஸ்திகராய்ப் போவார். பிரமமே தடித்து அதாவது பிரமத்தின் சிற்சத்தியே தடித்துவருமென்பதில் இவ்வளவு சங்கை யிருக்கிறபடியாலும் இது சுருதிமுதலிய பிரமாணங்களுக்கு விரோதப்படுகின்றமையாலும் தாதான்மிய சிற்சத்தி சொல்வதைவிட்டு, பின்ன சடசத்தியான சுத்த சத்துவ மாயாசரீரத்தோடுங்கூடிய ஈசுவரனாக அல்லது ஈசுவரபேதமாக வருவாரென்றே சொல்லவேண்டும். இப்படிச் சொல்வதால் நிர்ச்சல நிர்விகார நிஷ்கள நிர்க்குண நிஷ்கிரிய பரிபூரண துரியசிவப்பிரமம் இருந்தபடியே யிருக்கவுங் கூடும்; ஷ ஈசுவரன் சுத்தசத்துவ மாயாசடஉருவுடன் தோன்றிப் பத்தர்க் கருள்செய்தல்முதலிய காரியங்கள் செய்யவுங்கூடும். இவர் சொல்வதுபோல் சொன்னால் மேற்சொல்லியவாறு சகல தோஷங்களும் உண்டாய்ப் பிரமத்துக்கே தாம்பூலம் பிடிக்கிறதாயாகும்.

மாயை யுருவமாதல் யாங்ஙனம்?

அருவமான பிரமம் பிரதிபலித்தல் கூடாதென்றதற்கு அருவமான மாயையிலிருந்து உருவமான வுலகு உண்டாதல் யாங்ஙனமெனப் பாநுமூர்த்தி கேட்டதாகச்சொல்லி, அதற்கு விடையாக மாயை அருவமென்பதின் பொருள் தேய்ந்த வுருவமேயன்றி உருவமற்ற அருவ மன்றெனக் கூறுகின்றார்; அதோடு அதிசூக்கும வுருவமென்றும் அதிரிசிய வுருவமென்றுங் கூறுகின்றார். அருவமான மாயையிலிருந்து உருவமான பிரபஞ்சமெப்படியுண்டாமென்னுங் கேள்விக்கு

விடையிறுக்கப் பயந்து இப்படிச் சொல்வதாய்த் தெரிகிறது. கார
ணத்தின்றன்மை காரியத்தி லிருக்கவேண்டுமென்கிற நியாயத்தை
வைத்துக்கொண்டு, இதன்படி "காரணமான மாயை அருவமானால்
காரியமான வுலகும் அருவமாகவேண்டுமே, உலகு உருவமாயிருக்
கிறதே" என யோசித்து, மாயையை யுருவமென்று சாதிக்கின்றார்.
இப்படிச் சொன்னால் இன்னொரு இக்கட்டில் அகப்பட்டுக் கொள்ளு
வாரே. உருவமான மாயையிலிருந்து அருவமான ஆகாயம் எப்படி
யுண்டாயிற்று? இவரே அதே பத்திரிகையில் "ஆகாசமும் வாயு
வும் அரூபம்" என் றெழுதியிருக்கின்றார். அவ்வரூப ஆகாயத்திலிரு
ந்து உருவமான பிருதிவியாதிகள் எங்ஙனமுண்டாயின? உருவமான
மாயையிலிருந்து அருவமான ஆகாயமும், அருவமான ஆகாயத்திலி
ருந்து உருவமான பிருவியாதிகளு முண்டான விஷயத்தில் காரணத்
தின்றன்மையைக் காரியத்திற் காட்டுவாரா? மாயை யுருவமாயிருந்
தால் அவயவமும், கண்டமும், ஏகதேசமும், அளவும், பலவும்,
பொருளுமா யிருத்தல்வேணடும். அங்ஙன மின்றென்ப தியாவர்க்கும்
அநுபவம். அன்றி இதற்குமாறாக இவரது சிவஞான சித்தியாரே
"நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய் எங்கும் வியாபியாய் விமலனுக்
கோர் சத்தியாய்" என்று கூறுகின்றது. 'விமலனுக்கோர் சத்தியாய்'
என்றபோது சத்தி உருவாயும் பொருளாயு மிருத்தல் யாங்ஙனம்?
மாயையி னிலக்கணத்தைத் "துவிதசைவரே மாயாவாதிகள்" என்
னும் நூலில் "சோமசுந்தரநாயகரும் மாயாவாதமும்" என்னும் விஷ
யத்தில் மிகவிரிவாய் இரண்டுவருஷத்திற்கு முன்பே இவருக்காகவே
யெழுதியிருக்கின்றோம். அதைக் கவனித்துப் பார்த்தால் இப்படிப்
பட்ட விபரீதபுத்தி இவருக்குண்டாகாது. இதற்குமேல் பேயானது
உருவமும் அருவமுடையதென்று கூறி, அதை மாயைக்குபமானமா
கக் கூறுகின்றார். இவ்வுபமானப்படி மாயை உருவம் அருவம் ஆக
இரண்டு குணங்களையும் பெற்றதாகிறது. உபமேயத்தில் மாயைக்கு
அருவ மொப்பாமல் உருவங் கூறுகின்றார். உபமானத்திலோ பேய்
க்கு உருவம் அருவம் இரண்டையு மொப்புகிறார். இதனா லிவ்வுபமா
னம் இவருக்கே விரோதமாகிறது; இதனோடு நில்லாமல் அத்வைதி
களுக்கு முற்றுஞ் சாதகமு மாகிறது. அருவமுள்ள பேய்க்கு ஒவ்
வொரு சமயம் உருவத்தோற்றம் உண்டாகின்றது. அது உருவெ
ளித் தோற்றம் போன்றது. அதுபோல் அருவமுள்ள மாயையிலிரு
ந்து உலகமாகிய வுருவெளித்தோற்ற முண்டாகின்றது. அது பற்றி
யே பட்டினத்தடிகளும் "மையாடுகண்ணியும் மைந்தரும் வாழ்வும்
மனையும் செந்தீ, யையா நின்மாயை யுருவெளித்தோற்றம் அகிலத்
துள்ளே, மெய்யாயிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்,
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போனதுவே"
என்று கூறியிருக்கின்றார். இதனால் பேயின் அருவம் உண்மையும், உரு
வம் பொய்யுமாகின்றன. இதன்படி மாயையின் அருவம் உண்மை

யும் அதன் காரியமான வுலகினது உருவம் பொய்ம்மையுமாகின்றன. இவ்வாறு எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும் எவ்வித வுபமானத்தைக் காட்டினாலும் இவரது துவிதத்திற்குத் தோல்வியும் அத்துவிதத்திற்கு வெற்றியுமாய் முடிந்து, இவர்க்கு அவமானத்தையே யுண்டாக்குகின்றது. இன்னும் இவ்வாறு எவ்வளவு ஆக்ஷேபம் வேண்டுமானாலுஞ் செய்யட்டும். அதனால் அத்வைதத்தின்மேல் பிறர் தூற்றும் தூசுகளெல்லாம் ஒழிந்து சுத்தப்படுமேயன்றி மற்றப்படி ஒரு தோஷமுமுண்டாகமாட்டாது. இதற்குச் சாக்ஷி இதுவரையில் வந்த ஆக்ஷேபங்களெல்லாம் ஒழிந்தமையேயாம்.

இதுவரையில் மகாவிகடதூதனிலும், நாகைநீலலோசனியிலும், விவேகதிவாகரனிலும் பூர்வபக்ஷியார் செய்துவந்த ஆக்ஷேபங்கட்கெல்லாம் சமாதானமுண்டாய் அதனோடு பூர்வபக்ஷியாரது துவித மத தோஷங்களும் வெளிப்பட்டன. அன்றி இவருடையவாதம் சுருதி யுக்தி அனுபவ சம்மதமில்லாத் துர்வாதமெனவும் வெளியாயிற்று. இதன்காரணமாக அத்வைதத்தின் மேன்மையும், அதற்குள்ள சுருதி பலமும், யுக்தி அனுபவ பலமும் கண்ணாடிபோலத் துலங்கின. பூர்வபக்ஷியார் இவ்வளவு ஆக்ஷேபஞ் செய்யாவிடில் அத்வைதத்தின் சமாதானம் வெளிப்படாமல் மறைந்தே நிற்கும். இச்சமாதானம் வெளிப்படுவதற்குச் சோமசுந்தரநாயகரே காரணமாயிருந்தமையால் அவர் செய்த நன்றியை மறவாமல் அவரை என்றும் வாழ்த்துதல் செய்வோமாக.

பூர்வபக்ஷியாரான அரக்கோணவாசியாகிய வீரபத்திரமூர்த்தியாரைவிடச் சோமசுந்தரநாயகர் வேறுபோல் பலவிடங்களில் ஆரம்பத்தில் பேசியிருந்தாலும் அவருக்குச் சார்பாய் நின்று பேசித்தோல்வியடைந்துபோன கோயமுத்தூர்ப் புளியோரைக்கண்டர் என்பவர், அவரே யிவரென்று சொல்லுகிறபடியால் நாமும் அப்படியே முடிவில் கொள்ளவேண்டியதாயிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	28	ஒளிதல்ல	ஒளிதலல்ல
5	7	விமமூன்று	விம்மூன்று
,,	13	பயந்து	பரிந்து
6	1	நிவர்த்திகக	நிவர்த்திக்க
7	35	வேறுயென்றும்	வேறு என்றும்
11	2	வருப்பாரை	வகுப்பாரை
13	2	அதுவதை	அது அதை
16	16	ஏற்பட்டன	ஏற்பட்டது
19	2	கொண்டு	கொண்டுஇவ்வினத்தார்
21	29	சொன்னரா?'	சொன்னரா?
,,	30	சொன்னரா?	சொன்னரா?'
22	25	பொய்யுறவும்பொய்யுலகும்	பொய்யுறவும் பொய்யுடலும்
,,	27	பலவிதவாய்	பலவிதமாய்
,,	38	சோமான்	சேரமான்
25	29	இம்மாதிப்	இம்மாதிரிப்
30	6	வாத்தித்துடன்	வாத்தியத்துடன்
32	39	கிரூாகள்	கிரூர்கள்
33	21	சித்தாந்திற்கு	சித்தாந்தத்திற்கு
37	17	நில்லென்	நில்லேன்
,,	20	பான்மையரும	பான்மையரும்
38	32	உருத்திராதிகளை	உருத்திராதியர்களை
39	23	வேதாதிகளாவது	வேதாதிகளிலாவது
,,	34	புராணதில	புராணத்தில்
40	14	சொல்விவிடுவார்	சொல்லிவிடுவார்
,,	29	எதேனு	ஏதேனு
,,	34	செயவ	செய்வ
41	27	சூதசங்தை	சூதசங்கிதை
,,	40	ந்தத்திக்கு	ந்தத்திற்கு
44	30	ஏற்படுன்றது	ஏற்படுகின்றது
47	36	யரசனென்	யரசனென்பது
49	17	பிரமான்	பிரமாண
,,	18	எந்த	எந்தவைதிக
54	2	செயது	செய்து
56	12	ருக்குபோது	ருக்கும்போது
57	4	முலிய	முதலிய
,,	5	இப்டி	இப்படி
60	38	கோடி	கொடி
62	15	சாக்கிரத்தைப்	சாக்கிரத்தை
,,	17	அனுபவிப்பர்	அனுபவிப்பவர்
63	29	மவரை	மவனே
69	25	தகைத்துத்	தகைத்து

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
72	3	தாயுமானர்	தாயுமானவர்
,,	4	ஆநாதரவு	அநாதரவு
72	22	அவ்வவ்	அவ்வம்
74	24	அநா	அநாத
75	27	தாயுமானவரையும்	தாயுமானவர்கொள்கையையும்
77	8	கொண்டர்கள்	கொண்டார்கள்
78	35	கண்டிருக்கும்	கண்டிக்கும்
82	24, 25	அவர்களுக்கு	அவர்கள்
83	6	அறிந்திருந்திருந்தால்	அறிந்திருந்தால்
84	14	மூர்த்தியாா	மூர்த்தியார்
85	36	சக்கிரவாத்தி	சக்கிரவர்த்தி
88	33	செல்தல்	செய்தல்
90	35	கோபதிஷத்	கோபநிஷத்
92	17	ஓதியிடும்	ஓதியிடும்
95	1	நல்விஊன	நல்விஊன
,,	9	மேசக	மோசக
96	37	தக்களுக்கு	தங்களுக்குபின்
,,	,,	மாத்திரந்தானே	மரத்தானேமுன்
103	10	மக்ாவாக்கியம்	மகாவாக்கியம்
104	5	கக்ஷியிற	கக்ஷியிற்
105	2	பொருள்	பொருள்வாச்சியார்த்தம்பிரமகூடஸ்தர்; இலட்சியார்த்தம்
110	38	யாய்ந்திடிவாம்	ஆய்ந்திடுவாம்
111	2	ஜீபோலவன்	போலஜீவன்
115	17	சு-வது	சூ-வது
117	34	நூற்கள்	நூற்களில்
118	27	சாக்கிரவஸ்தை	சாக்கிராவஸ்தை
123	1	ஐடம்	ஜடம்
125	20	மீக்கீர்	மிக்கீர்
129	26	வேண்டுமென்றும்	மென்றும்
,,	29	புணணிய	புண்ணிய
131	23	வராததது	வராதது
133	22	கலக்காலு	கலக்காமலு
,,	12	அவர்கள்	இவர்கள்
,,	14	தம்மதவ	தம்மதத்தவ
134	31	சொல்லாமை	செல்லாமை
,,	34	பாதத்தில்	பாகத்தில்
135	12	செயய	செய்ய
,,	32	சிவஞான்	சிவஞான
136	21	உபமானங்தளும்	உபமானங்களும்
138	1	பே்ாகிறது	போகிறது

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
139	31	வானமலர்	வான்மலர்
141	1	பார்ப்பார்களாக	பார்ப்பாராக
143	4	மதஸ்ர்களில்	மதஸ்தர்களில்
134	5	வொவவொன்றை	ஒவ்வொன்றை
,,	17	தோபான	தோபாதான
145	1	சீருட்டியும்	சிருட்டியும்
,,	36	செயகின்	செய்கின்
146	5	பொய்யையு	பொய்யையுங்
147	21	அத்வைத்	அத்வைத
149	4	அற்பதனத்	அற்பத்தனத்
,,	25	குழவியை	குழவியைப்
150	8	பவித்து	பலித்து
151	40	சரார்	சாரார்
154	3	பிகாச	பிரகாச
155	6	புரித்து	புரிந்து
,,	43	காடடுதும்	காட்டுதும்
158	21	படைத்தனர்.	படைத்தனர். (35)
159	28	முடியாதலா	முடியாதாதலா
161	27	அங்கீகரித்ததே	அங்கீகரிக்கத்தக்கதே
166	6	னெனறும்	னென்றும்
168	3	இதையனுசரித்தே	இதோடுசேர்ந்த
186	8	குதூகலக	குதூகல
187	33	வுருங்	வுருவங்
188	8	பரிகாரத்தில்	பரிகாரத்தில்பிரமாண
190	12	பிருவீ	பிருதிவி மாகக்
,,	15	வேணடும்	வேண்டும்

ஓம்.

பரப்ரம்மணே நமஃ

திருவள்ளுவர் முதற்குறள்.

"அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு."

பரிமேலழகர்உரை.

"எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை யுடையன. அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பால் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்று முணர்தலானுங் கொள்க. தமிழ் எழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றார். ஆதிபகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கள்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றே யென உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க."

இந்தக்குறளால் அகரத்திற்கும் மற்ற எழுத்துக்களுக்கும் முதற்காரண காரிய சம்பந்தம் ஏற்படுகின்றது. யாங்ஙனெனின் அகரமானது வாயின் அங்காத்தலினாலே பிறந்து அவ்வங்காத்தலின் விகாரத்தாலே மற்ற இகர முதலிய வுயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் பிறக்கின்றன வாதலா னென்க. பூர்வபக்ஷியா ரொருவர் உயிரெழுத்துக்களேயன்றி மெய்யெழுத்துக்கள் அதிற் சேரா வென்றனர். இது பொருந்தாது. நாயனார் கருத்து அங்ஙனமாயின் எழுத்தெல்லாமெனக் கூறார். அதன்மேல் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் வேறு வேறு சாதியாகலின் ஒன்றிலிருந்து மற்றொன்று உற்பத்தியாகா வென்று சங்கை செய்கின்றார். வேறு வேறு சாதியாயின் ஒன்றிலிருந்து மற்றொன்று உற்பத்தியாகா வென்பதற்கு நியாயமென்னை? அதனோடு "உயிர் ஏறிநடத்துகிற சாதியும் மெய்கள் தாங்கிச் சுமக்கிற சாதியுமாகி விளங்கலால் சுமக்கிற சாதி யெப்படி யேறுகிற சாதியாகும்? பாகனுங் குதிரையும் ஒருசாதியாகக்கண்ட அநுபவிகளுக்கு உயிரும் மெய்யும் ஒன்றாகுமேயல்லது பாகன் வேறு, குதிரை வேறு என்று தெளிந்தவர்க்கு உயிர் வேறும் மெய் வேறுமாக இரண்டு தனித்த சாதிகளுண்டென்றே கொள்ளப்படும்" என்கின்றார். இது பொருந்தாது. ஒரு மலையிலிருந்து கொண்டுவந்த கற்களினாற் கட்டப்பட்ட மண்டபத்தில் ஒன்று தாங்குகிறதாயும், ஒன்று தாங்கப்பட்டதாயும் இருக்கவில்லையா? அம்மலையிலிருந்தே கொண்டுவந்த கற்களில் ஒன்று நாம் வணங்கும் தேவதாபிம்பமாகவும், ஒன்று நமது காலின் கீழ்த் தரையாகவு மிருக்கவில்லையா? ஒரு வித்திலிருந்துண்டான விருக்ஷத்தில் பழம் இனிமையாகவும், பிஞ்சு, காய் இனிமை யல்லாதனவாகவு மிருக்க வில்லையா? ஒரு இரும்பிலிருந்துண்டான வாள் அரம் ஆகிய இரண்டனுள் வாளை அரம் அறுக்கவில்லையா? ஒரே ஓசையானது குயிலின் வாயிலாக இனிமை

யாகவும், காகத்தின் வாயிலாக வெடிப்பாகவும் வரவில்லையா? ஒரு சாதி எழுத்திலிருந் துண்டான சொற்றொடர் வாக்கியங்களில் ஒன்று மரியாதையாகவும், ஒன்று அவமரியாதையாகவும் இருக்கவில்லையா? ஒரு செடியிலிருந் துண்டான மூங்கில்களி லொன்றுஅரசன் தலைமேலும் ஒன்று கழைக்கூத்தன் காலின்கீழுமிருக்கவில்லையா? ஒருமனிதவுடலிலிருக்கு மவயவங்களில்ஒன்று அதாவது இடுப்பு சுமப்பதாகவும் தலைமார்புமுதலியன சுமக்கப்படுவனவாகவுமிருக்கவில்லையா? அதேயுடலிலிருந்துண்டான அவயவங்களில் கைவந்தனம் பெருமையாகவும் கால்வந்தனம் சிறுமையாகவும் மதிக்கப்படவில்லையா? இவ்வாறு ஒன்றிலிருந்துண்டாய் மேலும் கீழுமான பேதத்தைப் பெற்றிருப்பவை யெத்தனையோ உளவே. அங்ஙனமாக வுயிரும் மெய்யும் ஒன்றிலிருந்துண்டாகாவென வெங்ஙனங் கூறத் துணியலாம்? இவர் காட்டியதைப் பார்க்கிலும் அதிக பேத வுவமானங்களைக்காட்டி அவை ஒரு பொருளிலிருந்தே யுண்டாயினவாக விளக்கிவிட்டமையால் பூர்வபக்ஷியார்வாதம் நிஷ்பலமாயிற்றென்க.

பின்னும் ஆக்ஷேபம் வருமாறு:—"மெய்கள் அகரவுயிரினின்றும் வந்தனவாகக் கொள்ளுமிடத்துப் பொன்னினின்றும்வந்த பூஷணங்கள் மாற்றுரைகளில் தாழாது நிற்றல்போல அகரத்தைப்போலவே எழுத்துக்களிலேறி யியங்கப்பண்ணும் ஆற்றலுடையனவாயிருத்தல் வேண்டும்" என்று கூறுகின்றார். பொன்னின்றன்மை பூஷணத்தி லிருப்பதுபோல அகரத்தின் றன்மை மெய்யின்கண் இருக்கவேண்டுமாம். அப்படி யிருந்தாற்றான் ஒப்புக்கொள்வாராம். மரத்தாற்செய்த யானைவாகன மொன்றனைப் பார்த்து வந்தானொருவன். அவனை நோக்கி: "நீ பார்த்துவந்த வாகனம் என்ன மரத்தாற் செய்யப்பட்டது?" எனக்கேட்கின், "இன்னமரமென யான்பார்க்கவில்லையே" என்கிறான். யானைவாகனத்தில் மரம் காரணம்; யானை காரியம். இதில் காரணத்தின்றன்மை காரியத்தில் வெளிப்பட்டதா? வெளிப்பட்டதாயின் இன்னமரமென் றேன்சொல்லவில்லை? பாலைமரத்தினாலியற்றப்பட்ட சிங்கமொன்றனைக்கண்டு ஒருவன் பயந்தானென வைத்துக்கொள்வோம். இதில் காரணத்தின்றன்மை காரியத்தில் வெளிப்பட்டதா? வெளிப்பட்டதாயின் காரணமான பாலைமரத்தைக் கண்டபோதும் பயப்படவேண்டும். இதுநிற்க, பூஷணத்திலுள்ள விசித்திரம் பொன்னின்கணுளதா? வித்திலிருந்துண்டான விருக்ஷத்திலும் இந்திரசால சத்தியிலிருந்துண்டான இந்திரசாலப் பொருளிலும் காரணத்தின்றன்மையைக் காரியத்திற் காட்டுவாரா? இவரபிமதப்படி சிவஞானந் தடித்துண்டான (பன்றிக்குட்டிகட்காக எடுத்த) பன்றியுருவத்திலும், பரமசிவன் திருக்கண்களிலிருந்துண்டான அக்கினியாலாகிய சுப்பிரமணியரிடத்திலும் காரணத்தின் தன்மையைக் காட்டுவாரா? இவ்வாறு அகரத்தின்றன்மை மெய்யெழுத்தில் இல்லாமலும் போகவில்லை. யாங்ஙனெனின் அகரத்தைப்போலவே மெய்யெழுத்தும் அங்காப்புக்கொண்டே யுச்சரிக்கப்படுகின்றமையா னென்க. இகரமுதலிய வுயிர்கள் எங்ஙனம் அங்காப்பின் காரியமாக இருக்கின்றனவோ, அங்ஙனமே மெய்யெழுத்துக்களும் அங்காப்பின் காரியமாகவே யிருக்கின்றன வென்க.

பூர்வபக்ஷியார் சொல்லும் மற்றொரு விஷயத்தையும் பார்ப்போம். அது "மெய்கள் தாமே யியங்கும் ஆற்றலைப்பெறாது உயிர்களைத் துணைக்கொண்டு அங்காத்தலைப்பெற்று வரு முண்மையை யறியாமல், மெய்கள் தாமே அங்காந்து வருமென்பது அறியாமையேயாம். (இக்) என்றபோதினும் (க) என்றபோதினும் உயிர்த்துணையை முன்னும் பின்னுமாகக்கொண்டு தன்னொலியைக் காட்டிநின்றமெய்யை, அதனையொலிப்பித்த வுயிர்பேதமே யென்பது

காலத்திரயத்தும் மேலோ ரங்கீகரியாரென்க" என்பதாம். அங்ஙனமாயின் இந்தத்தோஷம் இகரமுதலிய எழுத்துகட்கு முண்டு. உயிர்த்துணையின்றி எங்ஙனம் மெய் யொலியாதோ, அங்ஙனமே அகரத்தின் றுணையின்றி அதாவது அகரத்தின்அங்காப்பின்றி இகரமாதி யுயிர்களும் ஒலித்தல் செய்யா. மெய்கள் உயிர்த்துணையைக் கொண்டுவரும் என்றதின்மேல் ஒரு கேள்வி கேட்கின்றோம். அஃது யாதெனின், "உயிரையின்றி அதிலும் அகரத்தின் அங்காப்பின்றி, மெய்யென்பதொன்றிருந்து, அது உயிர்த்துணையைப்பெற்று ஒலிக்கின்றதா? அல்லது, தான், உயிரிலிருந்தே அதாவது அகரத்தின் அங்காப்பிலிருந்தே யுண்டாய், அவ்வுயிர்த்துணையைக்கொண்டே யொலிக்கின்றதா?" என்பது. கையானது இறகினது துணையைக்கொண்டு எழுதுகின்றது. இப்படியே மெய்யானது உயிரினது துணையைக்கொண்டு ஒலிக்கின்றதென்னின், கையிருக்கினும் இல்லாதுபோயினும் கைக்குப்பின்னமாய் இறகு இருப்பதுபோல, உயிரிருக்கினும் இல்லாதுபோயினும் அதாவது அகரத்தின் அங்காப்பு இருக்கினும் இலலாதுபோயினும் மெய்யெழுத்துக்கள் இருத்தல் வேண்டும். இருந்து உயிர்த்துணையைக் கொண்டு ஒலித்தல்வேண்டும். அங்ஙனம் உயிரின்றி யிருப்ப துண்மையாயின் அகரத்தின் அங்காப்பின்றி அதாவது வாயை மூடிக்கொண்டு மெய்யெழுத்துக்கள் உச்சரிக்கப்படவேண்டும். மெய்யெழுத்துக்களான ககார, ஙகாராதிகள் நாக்கினடி மேல்வாயடி முதலியவைகளால் பிறக்குமெனத் தொல்காப்பியங் கூறுகின்றது. இதுபோலவே இகரமாதியுயிர்களும்அண்பல்லைநாக்கடியினதுஓரமாய்ப்பொருந்தப்பிறக்குமென்று கூறுகின்றது.இகரமாதிகள் எப்படி அகரத்தின் அங்காப்போடுதித்து அங்காப்புள்ள அவ்வகரத்தின் றுணையைப்பற்றியொலிக்கின்றனவோ,அப்படியே மெய்யும்அகரத்தின் அங்காப்பினின்றே யுதித்துஅதன் றுணையைக்கொண்டே ஒலிக்கின்றதென்க. இதை யிவருமொத்துக்கொண்டே 'மெய்கள் தாமேயியங்கும் ஆற்றலைப்பெறாது உயிர்களைத் துணைக்கொண்டு அங்காத்தலைப்பெற்று வருமுண்மையை யறியாமல்' என்றார்.

தொல்காப்பியமுதலிய இலக்கண நூற்களில் அகரத்தின் அங்காப்புடனே மெய்களுச்சரிக்கப்படுமெனச் சொல்லவில்லையே என்னின் அங்காப்பின்றி அதாவது வாயை மூடிக்கொண்டேனும் உச்சரிக்கப்படுமெனக் கூறியிருக்கின்றதா ? இன்றே. அந்நூலாசிரியர்கள் நாக்கினடி மேல்வாயடி பொருந்தப்பிறக்குமென்று சொன்னதேபோதியதாம்; வாயைத்திறத்தலின்றி நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்த உச்சரித்த லாகாமையானென்க.

"ஒற்றொலியைக் கண்ணொளியென்றும், உயிரொலியைக் கதிரொளியென்றும் கொண்டுணர்க" என மற்றொரு உவமானங் கூறுகின்றார். சூரியனொளியை யின்றிக் கண்ணுக் கொளியிராமையானும், சூரியனொளியே கண்ணொளியாயிருக்கின்றமையானும் இவ்வுவமானம் நமக்குச்சாதகமும், பூர்வபக்ஷியாருக்குப் பாதகமுமாமென்க. கண்ணுக்குச் சுயமா யொளியுண்டெனக் கூறுவாராயின், அகரத்தின் அங்காப்பின்றி மெய்யெழுத்துக்கள் இருக்க வேண்டும். அங்ஙன மின்றென்பதற்கு இலக்கணமும், நமது அநுபவமும் சாக்ஷியாம். கண்ணொளி கதிரொளி விஷயம் எவ்வகையினும் இவருக்குப் பொருத்தமுறாது.

"இதுகாறும் காட்டிவந்த நியாயங்களால் அகரமும் மற்றையுயிர்களும் ஒன்றென்றும், உயிர்களும் மெய்களும் வேறென்றும், சிவமும் மற்றை மூர்த்தங்களும் ஒன்றென்றும், சிவமூர்த்தங்களும் ஆன்மாக்களும் வேறென்றும் நன்கு விளங்குகிறதாகையால், ஆன்மாக்கள் சிவத்தினின்றும் வந்தன வென்னும் விரோதஞானம் விலகிப்போயிற்றென்க" எனப் பின்னு மொருவாதந்

தொடக்கின்றார். இதனால் அகரமும், மற்றவுயிர்களும் ஒன்றெனவும், உயிர்களும் மெய்களும் வேறெனவும், இதன்படி யுவமேயத்தில் பிரமமும் பிரமமூர்த்தங்களும் ஒன்றெனவும், பிரமமூர்த்தங்களும் உயிர்களும் வேறெனவும் ஆகின்றன. நாயனார் அகரஸ்தானத்தில் பிரமத்தையும் மற்ற எழுத்துக்கள் ஸ்தானத்தில் உலகையும் வைத்தார். இவர் அகரஸ்தானத்தில் பிரமத்தை வைத்தாலும் மற்ற எழுத்துக்கள் ஸ்தானத்தில் பிரமமூர்த்தங்களை வைக்கின்றார். நாயனார் பிரமத்தை யுலகுக்கு முதலென்ன, இவர் பிரமமூர்த்தங்கட்குப் பிரமம் முதலென்கிறார். 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என நாயனார் பிரத்தியக்ஷமாய்க் கூறுகின்றமையின் இவர் கூற்று அவர் கூற்றினும் வேறாமென்றறிக. 'உலகென்றது ஈண்டு உயிர்கள்மேல் நின்றது' எனப் பரிமேலழகரும் கூறுகின்றமையின் பரிமேலழகர் கூற்றினுக்கும் இவர்கூற்றுவேறாமென்றறிக.

பரிமேலழகர் 'காணப்பட்டவுலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின்' எனக் கூறிட, இவர், காணப்படாத பிரமமூர்த்தத்தால் காணப்படாத பிரமத்துக்கு இருப்புக் கூறவருகின்றார். நாயனார் கருத்தும், பரிமேலழகர் அபிப்பிராயமும் பிரத்தியக்ஷத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷத்தை யறியவேண்டுமென்பது. இவர்கூற்றோ, அப்பிரத்தியக்ஷத்தைக் கொண்டு அப்பிரத்தியக்ஷத்தை யறியவேண்டுமென்பது. அவர் அநுமான அளவையாலே கடவுளைச் சாதிக்கின்றார். இவர் எந்த அளவையால் சாதிக்கின்றனரோ அறியேம்.

"எழுத்துக்கடோறும் அகரஞ் சென்றிருப்பதுபோல ஆன்மாக்கடோறும் இறைவன் வியாபித்துடையது" எனப் பேசுகின்றார். எழுத்துக்கள் என்பதை இகரமுதல உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் எனவும், ஆன்மாக்கள் என்பதைச் சேதனாசேதனவுலகு எனவும் வைத்துக்கொள்ளின் சரியானதுதான். இதற்கு மாறாக முன்னர்ப் பேசியது குறளின் பொருளன்று.

"உயிரும் மெய்யும் கலந்திருத்தல்போல் ஆன்மாவும் பரமான்மாவும் விரவிநிற்கு முண்மையையறியாமல் விசாரஹீனத்தினால் உயிரும் மெய்யும் ஒன்றேயென்றும், இரண்டாயின் சமானப்பொருளாமே யென்றும் சொல்லித்திரிவாரை நம்மில் வேறு பேரிட்டழைப்பதே யுத்தமம்" என்கிறார். க் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிரெழுத்தும் ஒன்று கூடினால் க என்றாகின்றது. இந்தச் சம்பந்தத்தைத்தான் 'விரவிநிற்கு முண்மை' என்கிறார். க என்பது ஒரு எழுத்தாகவும், அதைப்பிரித்தால் க், அ என இரண்டெழுத்தாகவும் இருக்கின்றன. 'ஆன்மாவும்பரமான்மாவும்விரவி நிற்குமுண்மை' க்குக் க என்னும்எழுத் துவமானமாகும். இவர், உயிர்ஸ்தானத்தில் க் என்னும் மெய்யெழுத்தையும், அ என்னும் உயிர்ஸ்தானத்தில் பரமான்மாவையும் வைத்து ஒன்றுபடுத்துகின்றார். க என்னும் எழுத்தைப் பார்த்தால் ஒன்றாயும் அதனைப்பிரித்தால் இரண்டாயுமிருக்கின்றன. இதுதான் இவரது முத்திநிலைமை. நாம் உவமானத்தை யெடுக்கின் இயற்கைப்பொருளை யெடுக்கவேண்டுமேயன்றிக் கற்பிதப்பொருளை யெடுக்கப்படாது. உவமானங் கற்பிதமானால் உவமேயமுங் கற்பிதமாம். திருட்டாந்தமாக மனிதனை யுயர்திணையென இலக்கணங் கூறுகின்றது. மனிதப்பொருளை ஆராயின் அது உடல் உயிராகும். அவ்வுடலும் உயிரும் அஃறிணையென அவ்விலக்கணமே கூறுகின்றது. இரண்டு அஃறிணைப்பொருள் சேரின் ஒரு உயர்திணையாமா? அவ்வாறு என்விலக்கணத்திலேனும் விதியுளதா? இன்றே. "மண்ணாற்செய்த குடம்" என்புழி மண் காரணம், குடங் காரியம். மண்ணி னிடத்து வளைதலாதித் தொழி னிகழுங்கால் குடமென்று சொல்லப்படுகின்றது. தொழில் பொருளன்று, அங்ஙனமிருந்தும் குடத்தைப் பொருட்பெயரென இலக்கணங் கூறு

கின்றது. இவ்வாறு ஒவ்வொன்றும் இயற்கைக்கும் அநுபவத்துக்கும் மாறாக இலக்கணங் கற்பிக்கக் காண்கின்றோம். இலக்கணம் அப்படித்தான் கூறும்; அதுதான் அதற்குநியாயம். இலக்கணத்தை எதுமட்டும் கையாளவேண்டுமோ, அதுமட்டுந்தான் கையாளவேண்டும். பதந் தப்பினால் அமிர்தமும் விஷமாம். அங்ஙனமாக இப்படிப்பட்ட இலக்கண விதியை ஓர் ஆதாரவாகக்கொண்டு தயைதாக்ஷணிய மேதுமின்றி,

"பொருளல்லவற்றைப்பொருளென்றுணரும்
மருளானா மாணாப்பிறப்பு"

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்றவாறு பொருளைப்பொருளாகவும் பொருளல்லவற்றைப் பொருளல்லவாகவும்நடுவுநிலைகோடாது விசாரிக்கும்வைதிகநூலுக்கு மாறாகப்பேசுவது கூடுமா? கூடாதென்பதற்கு இவர்காட்டிய உயிர்மெய்யெழுத்துவமானத்தைக் கொண்டே விளக்குவாம். எழுத்துகட்கு வடிவமிரண்டு; ஒன்று ஒலிவடிவம், ஒன்று வரிவடிவமாம். க் என்னும் மெய்யெழுத்துக்கு மாத்திரை அரை, அ என்னும் உயிரெழுத்துக்கு மாத்திரை யொன்று, ஆக வொன்றரைமாத்திரையாம். நாம் எவ்வளவு சாமர்த்தியமாக வுச்சரிக்கினும் இயற்கைப்பிரமாணந் தவறி ஒன்றரைமாத்திரை யொருமாத்திரை ஆகா. எழுத்துக்கு முதற்காரணம் அணுத்திரளொலி. பல அணுத்திரளொலி சேர்ந்தே ஒரு எழுத்தாகின்றது. அரைமாத்திரையானாலுஞ் சரி, ஒரு மாத்திரை யானாலுஞ் சரி, அதது தன்தன் மாத்திரை அளவில் அணுவுங் குறையாது. குறையாமையால் குறைவாக வொலித்தல் செய்தல் எவராலும் ஆகாதகாரியம். அங்ஙனமாகவும் இலக்கணமானது ஒன்றரை மாத்திரையை யொரு மாத்திரையாகச் சொல்லும்படி கற்பிக்கின்றது. இது நமது கற்பிதமேயன்றிப் பொருளின் உண்மைநிலைமையன்று. க் என்னுஞ் சத்தத்தோடு அ என்னுஞ் சத்தஞ்சேர்ந்தால் (எவ்வளவு நெருக்கினாலும்) ஒன்றன்பின் ஒன்றாய் அவைகளி னியற்கைப்படி ஒன்றரைமாத்திரை சத்திக்குமேயன்றி ஒருமாத்திரை சத்திக்காது; ஒன்றிலொன்று அடங்கவும் அடங்காது. இதற்குக் காரணம் ஒரு சத்தத்தில் மற்றொரு சத்தமிருக்க நியாயப்பிரமாண மில்லாமையே; ஒருபொருளில் மற்றொரு பொருளிருக்க நியாயப்பிரமாணமில்லாமைபோல. அணுத்திரள் ஒலியில் ஒருஅணு இருக்கிற விடத்தில் பிறிதொருஅணு இராதெனின், அரைமாத்திரை யொலியில் ஒருமாத்திரை கூடிக் கணிதநூற்படி யொன்றரை மாத்திரையாக, அதற்கு விரோதமாய் எப்படி யொன்றாகப்போகிறது?

இனி வரி வடிவத்தைப்பற்றியும் சிந்திப்பாம். க் என்னும் மெய்யெழுத்தை மையினாலெழுதி, அதன்பேரில் அ என்னும் உயிரெழுத்தை யெழுதினால் ஒன்றின்பேரி லொன்று; அதாவது கீழே க் கும், மேலே அ வ்வுமிருக்குமேயன்றி, இரண்டும் ஒன்றாதல் யாங்ஙனம்? இயற்கைப்பிரமாணம் இங்ஙனமாகவும் க் என்னும் எழுத்து, அ என்னும் எழுத்து ஆக இவ்விரண்டெழுத்திற்குப் பதிலாகக் க எனஎழுதும்படி இலக்கணங் கற்பிக்கின்றது. இலக்கணங் கூறுவதின்படி நாம் எழுதினாலும் இயற்கைப் பிரமாணத்திற்கு ஒவ்வுகின்றதா? இல்லையே.

இவ்வாறு இயற்கைப் பிரமாணத்திற்கு மாறாகக் கற்பிக்கும் இலக்கண விதியை யுவமானமாகக்கொண்டுதான் துவிதாத்வித நிலைமையினைச் சொல்லுகின்றார். இவ்வுவமானம் எவ்வளவு கற்பனையோ, அவ்வளவு கற்பனை யுவமேயத்திலு மிருக்குமாதலால், இங்ஙனமாய கற்பனா வுவமானத்தை யாதார

மாய்க்கொண்ட கொள்கையும் கற்பனையேயாமென்க. உவமானத்தில் அரை, ஒன்று ஆகவொன்றரைக்கு அரைகெட்டு ஒன்ருயிற்று. இங்ஙனமே யுவமேயத்திலும் அரைப்பங்கு உயிர், ஒருபங்கு பிரமம் ஆக வொன்றரைப் பங்குக்கு அரைப்பங்கு கெட்டு ஒன்ருகவேண்டும். உவமானத்தில் அரைப்பங்கு கெட்டதுமெய்யிலா?உயிரிலா? அல்லது இரண்டிலுமா? இதைக்குறித்து எந்த இலக்கணநூலுங் கூறிற்றில. உவமானம் எப்படியாஞலு மாகட்டும். உவமேயத்தில்அரைப்பங்கு கெட்டது உயிரிலா? பிரமத்திலா? அல்லது இரண்டிலுமா? அரை,ஒன்று ஆகஒன்றரை யொன்ருகுமென்பதிலேயே இவ்வளவு ஆக்ஷேபமிருக்கும்போது பல கோடிசங்கியையுள்ள ஜீவர்களும், ஒருபிரமமும் ஆகப் பலகோடி ஒன்றில், பலகோடிகெட்டு ஒன்ருகுமென்பது எவ்வளவு ஆக்ஷேபத்திற்கிடம்? பலகோடியும் அழியா, ஒன்றும்அழியாது என்ற இப்பூர்வபக்ஷியார்க்கு ஷை மெய், உயிர் உவமான மெங்ஙனம் பொருத்தமாகும்? அரை, ஒன்று ஆகவொன்றரை யொன்ருதலும்; பலகோடி, ஒன்று ஆகப் பலகோடியொன்று ஒன்ருதலும் கணிதசாஸ்திரவிரோதம்; பதார்த்த விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் விரோதம். கணித சாஸ்திரத்திற்கும் விரோதமாய், பதார்த்த விஞ்ஞான நூலுக்கும் மாருய் ஒரு சாஸ்திரமுண்டென வொப்பினுலும் வைதிக தத்துவசாஸ்திர மொப்பவில்லையே. இனிக் க என்னும் உயிர்மெய்யெழுத்தில் பாதி மெய்யும் பாதி யுயிருமாக வைத்து ஒரு கணக்கெடுத்துப் பார்ப்போம். இப்படியே பாதியுயிரும் பாதிபிரமமுஞ் சேர்ந்தே யொருபொருளாக வேண்டும். அப்போது பிரமம் அரைப்பூரணமேயொழிய முழுப்பூரணமல்ல. ஒலிவடிவிலும் வரிவடிவிலும் க் அரையும், அ அரையு மிருக்க வேறுவேறு இடமுண்டு; ஏனெனின் அவை கண்டமா யிருத்தலினு னென்க.

இது பாதி யெலுமிச்சங்கனியோடு பாதி கொய்யாக்கனியை யொன்று சேர்த்தமைபோ லாம். இவ்வாறு உயிரையும் பிரமத்தையுஞ் சேர்க்கமுடியாது. ஏனெனின் பிரமம் நீக்கமற எங்கும் நிறைந்த பரிபூரணப்பொருள். ஆதலால் அதை யிரண்டு படுத்தி அதி லொருபாகத்தை யெடுத்துப் பிறிது பொருளோடு சேர்த்து ஒன்று படுத்தல் ஆகாதகாரியம். கொய்யாக்கனி கண்டப் பொருளாதலாலும், அக்கனி யில்லா வேறு இடம் இருக்கின்றதாதலாலும் அதில் பாதியை யெடுத்து அஃதில்லா வேறு இடத்தில் வைக்கலாம். பிரமம் அவ்வாறு கண்டப்பொருளன்று. கண்டப்பொருளாயின் அதில் பாதியை யெடுத்துப் பிரமமில்லா விடத்தில் வைத்து, மற்றப்பாதியை யுயிருடனே சேர்த்து ஒன்று படுத்தலாம். திருட்டாந்தமாக ஆகாயத்தை யிரண்டு பகுத்தவும் அதிலொருபாகத்தை ஆகாயமில்லா விடத்தைத் தேடிவைக்கவும் ஆகுமா? பூர்வபக்ஷியார் உவமானங் கூறுங்கால் 'உயிர்கள் ஏறி நடத்துகிற சாதியும், மெய்கள் தாங்கிச் சுமக்கிற சாதியுமாகி விளங்கலால் சுமக்கிறசாதி யெப்படி ஏறுகிற சாதியாகும்? பாகனுங் குதிரையும் ஒரு சாதியாகக்கண்ட அனுபவிகளுக்கு உயிருமெய்யு மொன்ருகுமேயல்லது பாகன் வேறு குதிரை வேறு என்று தெளிவார்க்கு உயிர் வேறும் மெய்வேறுமாக இரண்டு தனித்த சாதிகளுண்டென்றே கொள்ளப்படும்' என்ருரன்ருே? இதில் பாகனுங் குதிரையும் ஏகதேசகண்ட அவ்வியாபகப்பொருள்கள். உயிரை அவ்வாறு கூறுவது சுருதி சம்மதமாகலின் குற்ற மில்லையேனும் பிரமத்தையு மவ்வாறு கூறுவது சுருதி சம்மத மன்றே.

"பிரமம் எங்கும் பரிபூரணமன்று, இடை யிடையிலுள்ள வுயிர்களைவிட்டு வியாபகமாயிருக்கின்றது, எங்ஙனமென்னின் எள்ளிலுள்ள திப்பிப்பாகம் போக மற்றப்பாகத்தில் நெய் நிறைந்திருப்பது" போல என இவர் பக்கத்தினர் பிரமத்துக்குப் பூரண வியாபகங் கூருமல் ஔபசிலேஷிக வியாபகங்

கூறுகின்றனர். ஒருபடி யெள்ளை யெடுத்துப்பிழிந்தால்பாதி நெய்யும் பாதி திப்பியுமாகின்றன வென வைத்துக்கொள்வோம். இதனால் எள்முற்றும் நெய்யில்லையென்றும் இடை யிடையேயுள்ள திப்பிப் பாகம்போக மற்றப்பாகத்திற்றானிருக்கின்றதென்றும் ஏற்படுகின்றன. நெய் முற்றும் இல்லாமையால் திப்பி யிருந்தவிடத்தில் நெய்யும், நெய்யிருந்தவிடத்தில் திப்பியுமில்லை. இவ்வுவமானத்தின் பிரகாரம் உயிரிருக்கிற விடத்தில் பிரமமும், பிரமமிருக்கிற விடத்தில் உயிருமில்லையாதல்வேண்டும். இல்லாதபோது பிரமமும் உயிரும் அசையப்படாத கொடுஞ்சிறைச்சாலையிலிருத்தல்வேண்டும். பூரணமென்பது உயிரும் பிரமமுஞ் சேர்ந்தேயன்றித் தனித்தனியன்று, இரண்டுஞ் சேர்ந்து பூரணமாகுமேல் அதது இருக்கிறவிடத்தைவிட்டு வேறு இடத்திற்குப்பெயர்ந்து போகக்கூடாது. ஒருபடி நிறைய எள்ளும் கடுகும் போட்டு நிரப்பினால் அவை இரண்டும் இருந்த விடத்தைவிட்டு நிலைபெயர்தலும் போக்குவரவு புரிதலுங் கூடா. எள், கடுகு தவிர மற்ற எவ்வளவு பரமாணுப் பொருளாயினும் அவை யிருந்த விடத்தைவிட்டு நிலைபெயரா. எள்ளும், கடுகும், அணுக்களும் சடப்பொருள்க ளாகலின் அவை சிறைச்சாலையில் அடைந்திருந்தாலுந் துன்பமில்லை. உயிர்பிரமங்கள் சித்துப்பொருள்களா யிருப்பதால், கிட்டியில் அகப்பட்டுத் துன்புற்று வருந்துதல்போல் வருந்தவேண்டும். உயிர் நாமானதினால் அப்படி அசையக்கூடாத நிலைமையிலிருந்து துன்புறும் அநுபவம் நமக்கில்லையென நாமே சாக்ஷிகூறுவோம். பிரமம் திருமேனிகொண்டு பலவிடங்களில் போக்கு வரத்துச்செய்ததாக இவரே பல விடங்களிற் கூறியிருக்கின்றார். இடை யிடைகளில் உயிர்களிருப்பதால் அவைகளை விட்டுப் போதலும் வருதலும் கூடாமற்போவதோடுகூடப் பிரமம் கிட்டியில் அகப்படுவதுபோல் அகப்பட்டுத் துன்புறல்வேண்டும். ஔபசிலேஷிக வியாபகம் நித்தியமாகலின் பிரமமும் உயிர்களும் முத்தியிலும் துன்புற்றிருக்க வேண்டுவனவேயாம். உயிருக்கு அணுத்தன்மை யிலக்கணமாகக்கொண்டு இவ்வளவு பேசினோம். இவர் பக்கத்தில் பிரமத்துக்குப்போல வுயிருக்கும் விபுத்துவங் கூறுகின்றமையின் ஷை ஔபசிலேஷிக வியாபகம் இவருக்குப் பொருந்தாது. எள்ளில் ஆங்காங்குத் திப்பியும் நெய்யும் இடைஇடையில் இருத்தலினால் ஔபசிலேஷிக வியாபகம் பொருந்தும். அங்ஙனமின்றிப் பிரமமும் உயிரும் தனித்தனி விபுத்துவமாகலின் பொருந்தாது. எது எப்படி யிருந்தாலும் பூர்வபக்ஷிகள் கற்பித்துக்கொண்ட ஔபசிலேஷிக வியாபகம் சுருதிவிரோதமாகலின் வைதிகர் ஒப்பாரென்றறிக.

பிரமத்தினின்றும் சேதனாசேதன உலகுண்டாகின்றதென்பதற்கும், அவ்வுலகுக்குப் பிரமம் அபின்ன நிமித்தோபாதானகாரணமென்பதற்கும் சுருதி முதலிய சற்பிரமாணங்கள் வருமாறு:—

பைங்களோபநிஷத் 3-வது அத்தியாயம்.

விசுவன், தைஜசன், பிராஞ்ஞன் இவர்களுக்குத் தம்தம் (அவித்தியா உபாதி போய் விட்டதினாலே பிரயத்தியக்காத்துமாவில் அடங்குகிறார்கள்.

மைத்திராயண்ணியுபநிஷத் 6-வது பிரபாடம்.

தனக்குள்ளேயே யிருக்கிற ஆத்மா (பிரமம்) வினிடத்திலிருந்து சகல பிராணன்களும், சகல லோகங்களும், சகல வேதங்களும், சகல தேவதைகளும், சகல பூதங்களும் உண்டாகின்றார்கள்.

பிரமகீதை ஐதரேய உபநிடதம்.

வேத மோதியதே மெய்ப்பொருள் மற்றைப்பொருளெலா மித்தையே
வேத, மோதமேவுற்ற பொருளிருவகையாமதனிலொன்றென்று முண்மைய

தாய்ப்,போத ஆநந்தமாகிய சிவனும் பொருளது மற்றப்பொருளி, வேதமே வாமல் கற்பிதமாகு மற்றதனியல்பையு மிசைப்பாம். (௧௦)

முண்டகோபநிஷத். உ-௧-௧.

ஓ சௌமியா! அது சத்தியமானது. எரிந்துகொண்டிருக்கிறஅக்கினியிலிருந்து அதே ரூபமாய் அனேகபொரிகள் எப்படி யுண்டாகின்றனவோ, அப்படி அக்ஷரத்திலிருந்து பலவித தேகத்தை யுபாதியாயுடைய ஜீவர்களுண்டாகின்றார்கள். அதினிடத்திலேயே இலயமடைகின்றார்கள்.

பிரகதாரண்ணிய உபநிஷத்

மூன்றாவது அத்தியாயம் ௪-ம் பிராம்மணம்.

பிரமத்திலிருந்து இந்தப் பிரபஞ்ச முண்டாயிற்று.

ஷை ௪-ம் அத்தியாயம் ௧-வது பிராம்மணம்.

அக்கினியிலிருந்து அற்பமான பொரிகள் எப்படிக் கிளம்புகின்றனவோ அப்படியே ஆன்மா (பிரமம்) வினிடத்திலிருந்து சகல பிரபஞ்சங்களும் சகலவுலகங்களும் எல்லாத் தேவதைகளும் சகல பூதங்களு முண்டாகின்றார்கள்.

யோகசிகோபநிஷத் ௪-வது அத்தியாயம்.

கயிற்றிற் பாம்பென்கிற தன்மைபோல் ஜீவத்துவத்தை யறியவேண்டியது. கயிறு என்கிற ஞானமில்லாததினாலே ஒருக்ஷணத்திற்குள் கயிறு சர்ப்பமாய்க் காண்கிறது. அதுபோல் கேவல சித்தானது தானே பிரபஞ்சமாக விளங்குகிறது. பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம். பிரமத்தைத்தவிர வேறில்லை. ஆகையால் இந்தச் சகலமான பிரபஞ்சமும் பிரமமாகவே யிருக்கின்றன; வேறேயில்லை.

சிவரகசியம் 6-ம்அமிசம் ரிபுகீதை

2-அத்தியாயம்.

வாரிதியிலலைகுமிழிநுரைகடோன்றும் வகையெனவே வரையற்ற பரசிவத்தில், சாரமிலாச்சகலசராசரமுந் தோன்றும். (௪௮)

விஷ்ணுபுராணம் 6-ம் அமிசம்

பிராகிருதப் பிரளயம்.

வியக்தா வியக்த சொரூபமான பிரகிருதி யாதுண்டோ, அதுவும், புருஷன் என்று சொல்லப்பட்ட ஜீவனும் இவ்விரண்டும் அந்தப் பரமாத்துமாவிலே இலயப்படுகின்றன.

இஃது

சித்தாந்த சேகரத்தின்பேரில் மறுப்பாக

“ஆரியன்” என்பவரால் எழுதப்பட்டு,

மதராஸ் ரிப்பன் பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டது.

1895 வரு மார்ச்சுமீ.

இதன்விலை அணா அரை; தபால்கூலி அணா அரை.